T. 746.

THOLCÁPYAM

PORULATHIKÁRAM

NACHINÁRKINIER'S COMMENTARIES

(*KALAVYAL, KARPPYAL & PORULYAL*)

EDITED BY

Rao Bahadur S. BAVÁNANDAM PILLAI

F. R. H. S. (Lond.) & M. R. A. S. (Lond.)

MEMBER OF THE TAMIL BOARD OF STUDIES AND OF THE TAMIL COMPOSITION COMMITTEE, MADRAS UNIVERSITY. MEMBER OF THE TEXT BOOK COMMITTEE OF THE MADRAS EDUCATIONAL DEPARTMENT AND OF THE TAMIL COMMITTEE OF THE MADRAS SCHOOL BOOK & LITERATURE SOCIETY.

MADRAS

1916

All rights reserved.

"Grammar, though a difficult study, is absolutely necessary in the search after philosophical truth..................and is no less necessary in the most important questions concerning religion and Civil Society"—Horne Tooke.

தொல்காப்பியம்

பொருளதிகாரம்

நச்சினார்க்கினியம்

(களவியல், கற்பியல், பொருளியல்.)

ராவ் பஹதூர்-ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்
எப். ஆர். எச். எஸ்.(லண்டன்.) எம். ஆர். ஏ. எஸ்.(லண்டன்.)
பதிப்பித்தது.

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு."—திருக்குறள்.

சென்னை :
1916
[ரிஜிஸ்தர் செய்தது.]

தாம்ஸன் கம்பெனியாரால் தமது 'மினெர்வா' அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

மூன்றாவது

களவியல்.

92. இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் லெட்டனுட்
டுறையமை நல்லியாழ்த் துணைமையோ ரியல்பே.

இவ் வோத்துக் களவு கற்பென்னுங் கைகோள் இரண்டனுட் களவு உணர்த்தினமையிற் களவியலென்னும் பெயர்த்தாயிற்று: பிறர்க்குரித்தென்று இருமுதுகுரவராற் கொடையெதிர்ந்த தலைவியை அவர் கொடுப்பக் கொள்ளாது இருவருங் கரந்த உள்ளத்தோடு எதிர்ப்பட்டுப் புணர்ந்த களவாதலின் இது பிறர்க்குரிய பொருளை மறையிற்கொள்ளுங் களவன்றாயிற்று. இது வேதத்தை மறைநூலென்றாற் போலக் கொள்க.

"களவெனப் படுவ தியாதென வினவின்
வளைகெழு முன்கை வளங்கெழு கூந்தன்
முளையெயிற் றமர்நகை மடநல் லோளொடு
தளையவிழ் தண்டார்க் காம னன்னோன்
விளையாட் டிடமென வேறுமலைச் சாரன்
மானினங் குருவியொடு கடிந்து விளையாடு
மாயமுந் தோழியு மருவிநன் கறியா
மாயப் புணர்ச்சி யென்மனார் புலவர்."

இக்களவைக் 'காமப்புணர்ச்சியும்' (தொல்-பொ-செய்-187.) என்னுஞ் செய்யுளியற் சூத்திரத்திற் கூறிய நான்கு வகையானும் மேற்கூறுமாறு உணர்க.

இன்பத்திற்குப் பொதுவிலக்கணம் அகத்திணையியலுட் கூறி அதற்கினமாகிய பொருளும் அறனுங்கூறும் புறத்திணையை, அதன்புறத்து நிகழ்தலிற், புறத்திணையியலுட்கூறி மீண்டு அவ்வின்பத்தினை விரித்துச் சிறப்பிலக்கணங் கூறுதலின் இஃது அகத்திணையியலோடு இயைபுடைத்தாயிற்று. *'வழக்கு......நாடி' என்றலின் இஃது உலகிய லெனப்படும், உலகத்து மன்றலாவது குரவர் கொடுப்பதற்கு முன்னர் ஒருவற்கும் ஒருத்திக்குங் கண்ணும் மனமுந் தம்முள் இயைவதேயென வேதமுங் கூறிற்றாதலின்.

இச்சூத்திரங் களவெனப்பட்ட ஒழுக்கம் உலகத்துப் பொருள் பலவற்றுள்ளும் இன்பம்பற்றித் தோன்றுமெனவும் அஃது இன்னதாமெனவுங் கூறுகின்றது.

இதன்பொருள்: இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு—இன்பமும் பொருளும் அறனுமென்று முற்கூறிய மூவகைப்பொருள்களுள்; அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்—ஒருவனோடு ஒருத்தியிடைத் தோன்றிய அன்போடு கூடிய இன்பத்தின் பகுதியாகிய புணர்தல் முதலிய ஐவகை ஒழுக்கத்தினுள்; காமக் கூட்டங் காணுங்காலை—புணர்தலும் புணர்தனிமித்தமுமெனப்பட்ட காமப்புணர்ச்சியை ஆராயுங்காலத்து; மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்—வேதம் ஓரிடத்துக்கூறிய மணமெட்டனுள்; துறை அமை நல் யாழ்த் துணைமையோர் இயல்பு—துறை அமைந்த

* 'வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்-எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி'——தொல்—பாயிரம்.

நல்யாழினியுடைய பிரிவின்மையோராது தன்மை என்ற வாறு.

அன்பாவது,

“அடுமரந் துஞ்சுதோ ளாடவரு மாய்ந்த
படுமணிப் பைம்பூ ணவருந்—தடுமாறிக்
கண்ணெதிர் நோக்கொத்த காரிகையிற் கைகலந்
துண்ணெகிழச் சேர்வதா மன்பு.”

மன்றல் எட்டாவன: பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன.

அவற்றுட் பிரமமாவது: ஒத்த கோத்திரத்தானாய் நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங் காத்தவனுக்குப் பன்னீராட்டைப் பருவத்தாளாய்ப் பூப்பு எய்தியவளைப் பெயர்த்து இரண்டாம் பூப்பு எய்தாமை அணிகலன் அணிந்து தானமாகக் கொடுப்பது.

“கயலே ரமருண்கட் கன்னிபூப் பெய்தி
யயல்பே ரணிகலன்கள் சேர்த்தி—யியலி
னிரலொத்த வந்தணற்கு நீரிற் கொடுத்தல்
பிரமமண மென்னும் பெயர்த்து.”

பிரசாபத்தியமாவது: மகட்கோடற்கு உரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசத்து இரட்டி தம்மகட்கு ஈந்து கொடுப்பது.

“அரிமத ருண்க ணாயிழை யெய்துதற்
குரியவன் கொடுத்த வொண்பொரு ளிரட்டி
திருவின் றந்தை திண்ணிதிற் சேர்த்தி
யரியதன் கிளையோ டமைவரக் கொடுத்தல்
பிரித லில்லாப் பிரசா பத்தியம்.”

ஆரிடமாவது: தக்கான் ஒருவற்கு ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நிறீஇப் பொன் அணிந்து நீரும் இவைபோற் பொலிந்து வாழ்வீரென நீரிற்கொடுப்பது.

“ தனக்கொத்த வொண்பொரு டன்மகளைச் சேர்த்தி
மனைக்கொத்த மாண்புடையாற் பேணி—யினக்கொத்த
வீரிடத் தாவை நிறீஇயிணரி தீவதே
யாரிடத்தார் கண்டமண மாம்.”

தெய்வமாவது: பெருவேள்வி வேட்பிக்கின்றார் பலருள் ஒருவற்கு அவ்வேள்வித்தீமுன்னர்த் தக்கணையாகக் கொடுப்பது.

“ நீளி நெடுநகர் நெய்பெய்து பாரித்த
வேள்வி விளங்கழன் முன்னிறீஇக்—கேள்வியாற்
கைவைத்தாம் பூணேக் காமுற்றுற் கீவதே
தெய்வ மணத்தார் திறம்.”

அசுரமாவது: கொல்லேறுகோடல் திரிபன்றியெய்தல் வில்லேற்றுதல் முதலியன செய்து கோடல்.

“ முகையவிழ் கோதையை முள்ளெயிற் றரிவையைத்
தகைநலங் கருதுந் தருக்கினி ருளரெனி
னிவையிவை செய்தாற் கெளியண்மற் றிவளெனத்
தொகைநிலை யுரைத்த பின்றைப் பகைவலித்
தன்னவை யாற்றிய வளவையிற்
றுன்னிலை யசுரந் துணிந்த வாறே.”

இராக்கதமாவது: தலைமக டன்னினுந் தமரினும் பெறாது வலிதிற் கொள்வது.

"மலிபொற்பைம் பூணுளே மாலுற்ற மைந்தர்
வலிதிற்கொண் டாள்வதே யென்ப—வலிதிற்
பராக்கதஞ் செய்துழலும் பாழி யிமிர்தோ
ளிராக்கதத்தார் மன்ற லியல்பு."

பைசாசமாவது: மூத்தோர் களித்தோர் துயின்றோர் புணர்ச்சியும் இழிந்தோளை மணஞ்செய்தலும் ஆடைமாறு தலும் பிறவுமாம்.

"எச்சார்க் கெளிய ரியைந்த காவலர்
பொச்சாப் பெய்திய பொழுதுகொ ளமைத்து
மெய்ச்சார் பெய்திய மிகுபுகழ் நண்பி
னுசாவார்க் குதவாக் கேண்மைப்
பிசாசர் பேணிய பெருமைசா லியல்பே."

"இடைமயக்கஞ் செய்யா வியல்பினி னீங்கி
யுடைமயக்கி யுட்கறுத்த லென்ப—வுடைய
துசாவார்க் குதவாத வூனிலா யாக்கைப்
பிசாசத்தார் கண்டமணப் பேறு."

இனிக் கந்தருவமாவது: கந்தருவ குமாரருங் கன்னியருந் தம்முள் எதிர்ப்பட்டுக் கண்டு இயைந்ததுபோலத் தலைவனுந் தலைவியும் எதிர்ப்பட்டுப் புணர்வது.

"அதிர்ப்பில்பைம் பூணுரு மாடவருந் தம்மு
ளெதிர்ப்பட்டுக் கண்டியைத லென்ப—கதிர்ப்பொன்யாழ்
முந்திருவர் கண்ட முனிவறு தண்காட்சிக்
கந்தருவர் கண்ட கலப்பு."

என இவற்றானுணர்க.

களவொழுக்கம் பொதுவாகலின் நான்கு வருணத்தார்க்கும் ஆயர்முதலியோர்க்கும் உரித்து. மாலைசூட்டுதலும் இதன்பாற்படும். வில்லேற்றுதன் முதலியன பெரும்பான்மை அரசர்க்குரித்து. அவற்றுள் ஏறுதழுவுதல் ஆயர்க்கே சிறந்

தது. இராக்கதம் அந்தணரொழிந்தோர்க்கு உரித்து; வலிதிற் பற்றிப் புணர்தலின் அரசர்க்கு இது பெருவரவிற் றன்று. பேய் இழிந்தோர்க்கே உரித்து. கந்தருவரின் மக்கள் சிறிது திரிபுடைமையிற் சேட்படை முதலியன உளவா மென்றுணர்க.

அறத்தினாற் பொருளாக்கி அப்பொருளான் இன்ப நுகர்தற் சிறப்பானும் அதனான் இல்லறங் கூறலானும் இன்பம் முற்கூறினார். அறனும் இன்பமும் பொருளாற் பெறப்படுதலின் அதனை இடைவைத்தார். போகமும் வீடு மென இரண்டுஞ் சிறத்தலிற் போகம் ஈண்டுக்கூறி வீடுபெறு தற்குக் காரணம் முற்கூறினார். ஒழிந்த மணங் கைக்கிளை யும் பெருந்திணையுமாய் அடங்குதலின் இதனை 'அன்பொடு' என்றார். பொருளாற் கொள்ளும் மணமும் இருவர் சுற்ற மும் இயைந்துழித் தாமும் இயைதலிற் கந்தருவப்பாற்படும். ஐந்திணைப் புறத்தவாகிய வெட்சி முதலியவற்றிற்கும் அன் பொடு புணர்தலுங் கொள்ளப்படும்,

> "அறத்திற்கே யன்புசா ரென்ப வறியார்
> மறத்திற்கு மஃதே துணை." (குறள்-அன்பு-6.)

என்றலின்.

கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும். ஈண் டுக் கற்பின்றிக் களவே அமையாதென்றற்குத் 'துறையமை' என்றார். (க)

93. ஒன்றே வேறே யென்றிரு பால்வயி
னொன்றி யுயர்ந்த பால தாணையி
னொத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை யின்றே.

இது முற்கூறிய காமக்கூட்டத்திற்கு உரிய கிழவனுங் கிழத்தியும் எதிர்ப்படும் நிலனும் அவ்வெதிர்ப்பாட்டிற்குக் காரணமும் அங்ஙனம் எதிர்ப்படுதற்கு உரியோர் பெற்றியுங் கூறுகின்றது.

இதன்பொருள்: ஒன்றே வேறே என்று இரு பால் வயின்—இருவர்க்கும் ஓரிடமும் வேற்றிடமும் என்று கூறப்பட்ட இருவகை நிலத்தின் கண்ணும்; ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்—உம்மைக் காலத்து எல்லாப்பிறப்பினும் இன்றியமையாது உயிரொன்றி ஒருகாலைக் கொருகால் அன்புமுதலியன சிறத்தற்கு ஏதுவாகிய பால்வரை தெய்வத்தின் ஆணையாலே; ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப—பிறப்பு முதலியன பத்தும் ஒத்த தலைவனுந் தலைவியும் எதிர்ப்படுப; மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே—அங்ஙனம் எவ்வாற்றானும் ஒவ்வாது தலைவன் உயர்ந்தோனாயினுங் கடியப்படா என்றவாறு.

'என்றிருபால்வயிற்காண்ப' எனப் பால் வன்பால் மென்பால்போல நின்றது. உயர்ந்தபாலை நோய்தீர்ந்த மருந்துபோற் கொள்க. ஒரு நிலம் ஆதலை முற்கூறினார், இவ்வொழுக்கத்திற்கு ஓதியது குறிஞ்சி நிலமொன்றுமே ஆதற் சிறப்பு நோக்கி. வேறுநிலம் ஆதலைப் பிற்கூறினார், குறிஞ்சி தன்னுள்ளும் இருவர்க்கும் மலையும் ஊரும் வேறாதலுமன்றித் திணைமயக்கத்தான் மருதம் நெய்தலென்னும் நிலப் பகுதியுள் ஒருத்தி அரிதின் நீங்கிவந்து எதிர்ப்படுதல் உளவாதலுமென வேறு பட்ட பகுதி பலவும் உடன்கோடற்கு. ஒருநிலத்துக் காமப்புணர்ச்சிப் பருவத்தாளாயினளை ஆயத்தின் நீங்கித் தனித்து ஓரிடத்து எளிதிற் காண்டல் அரிதென்றற்குப் 'பாலதாணையிற்காண்ப' என்றார். எனவே,

வேற்றுநிலத்திற்காயின் வேட்டை மேலிட்டுத் திரிவான் அங்ஙனந் தனித்துக் காணுங் காட்சி அருமையாற் பாலதாணை வேண்டுமாயிற்று.

உதாரணம்:

"இவனிவ ளைம்பால் பற்றவு மிவளிவன்
புன்றலை யோரி வாங்குநள் பரியவுங்
காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிரா
தேதில் சிறுசெரு வுறுப மன்னோ
நல்லைமன் றம்ம பாலே மெல்லியற்
றுணைமலர்ப் பிணைய லன்னவிவர்
மணமகி ழியற்கை காட்டி யோயே." (குறுந்-229.)

இஃது ஒரூர் என்றதாம்.

"காமஞ் செப்பாது கண்டது மொழிமோ" (குறுந்-2.)

என்றது என் நிலத்து வண்டாதலின் எனக்காகக் கூறாதே சொல் என்றலிற் குறிஞ்சிநிலம் ஒன்றாயிற்று.

"இலங்கு மருவித் திலங்கு மருவித்தே
வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை." (கலி-41.)

என்புழிப் பொய்த்தவன் மலையும் இலங்கும் அருவித்தென வியந்துகூறித் தமது மலைக்கு நன்றி இயல்பென்றலிற் குறிஞ்சியுள்ளும் மலை வேறாயிற்று.

"செவ்விரல் சிவப்பூரச் சேட்சென்றா யென்றவன்
பௌவநீர்ச் சாய்க்கொழுதிப் பாவைதந் தனைத்தற்கோ
கௌவைநோ யுற்றவர் காணாது கடுத்தசொல்
லொவ்வாவென் றுணராய்நீ யொருநிலையே யுரைத்ததை."*
—கலி-76.

---

* "'ஒன்றே வேறே' என்பதனால் வேற்றுநிலமாயிற்று, மருதத்துத் தலைவி நெய்தலில் நேர்பட்டமையின்."—கலித்தொகை, நச்சினார்க்கினியருரை.

இது மருதத்துத் தலைவி களவொழுக்கங் கூறுவாள் பௌவநீர்ச் சாய்ப்பாவை தந்தான் ஒருவனென நெய்தனிலத்து எதிர்ப்பட்டமை கூறியது. ஆணைவிதி கைகோளின் முதற்கட் கூறுதலிற் கற்பின்காறும் ஒன்றும் வேறுஞ் செல்லும்பாலது. ஆணையும் அவ்வாறும்.

மிகுதலாவது: குலங்கல்வி பிராயம் முதலியவற்றான் மிகுதல். எனவே, அந்தணர், அரசர் முதலிய வருணத்துப் பெண்கோடற்கண் உயர்தலும், அரசர் முதலியோரும் அம்முறை உயர்தலுங் கொள்க. இதனானே அந்தணர் முதலியோர் அங்ஙனம் பெண்கோடற்கட் பிறந்தோர்க்கும் இவ்வொழுக்கம் உரித்தென்று கொள்க. கடி, மிகுதி. அவர் அங்ஙனங் கோடற்கண் ஒத்தமகளிர் பெற்ற புதல்வரோடு ஒழிந்த மகளிர் பெற்ற புதல்வர் ஒவ்வாரென்பது உணர்த்தற்குப் பெரிதும் வரையப்படாதென்றார். பதினாறு தொடங்கி இருபத்து நான்கு ஈறாகக்கிடந்த யாண்டொன்பதும் ஒரு பெண்கோடற்கு மூன்றியாண்டாக அந்தணன் உயருங் கந்தருவமணத்து; ஒழிந்தோராயின் அத்துணை உயரார். இருபத்து நான்கிரட்டி நாற்பத்தெட்டாதல் பிரமமுதலியவற்றான் உணர்க. வல்லெழுத்து மிகுதல் என்றாற்போல மிகுதலைக் கொள்ளவே பிராயம் இரட்டியாயிற்று. கிழத்தி மிகுதல் அறக்கழிவாம். 'கிழவன் கிழத்தி' எனவே பலபிறப்பினும் ஒருவர்க்கு ஒருவர் உரிமை எய்திற்று. இங்ஙனம் ஒருமை கூறிற்றேனும் 'ஒருபாற்கிளவி' (தொல்-பொ-பொ-28) என்னுஞ் சூத்திரத்தான் நால்வகை நிலத்து நான்கு வருணத்தோர் கண்ணும் ஆயர் வேட்டுவர் முதலியோர் கண்ணுங்கொள்க. இச்சூத்திரம் 'முன்னைய நான்கும்' (தொல்-பொ-அக-52) எனக்கூறிய காட்சிக்கு இலக்கணங் கூறிற்றென்றுணர்க.

உதாரணம்:

> "கருந்தடங்கண் வண்டாகச் செவ்வாய் தளிரா
> வரும்பிவர் மென்முலை தொத்தாப்—பெரும்பணைத்தோட்
> பெண்டகைப் பொலிந்த பூங்கொடி
> கண்டேங் காண்டலுங் களித்தவெங் கண்ணே."
>
> —புற-வெ-மாலை-கைக்-1.

இக்காட்சிக்கண் தலைவனைப்போல் தலைவி வியந்து கூறுதல் புலனெறிவழக்கன்மை உணர்க. (உ)

94. சிறந்துழி யையஞ் சிறந்த தென்ப
இழிந்துழி யிழிபே சுட்ட லான.

இஃது எய்தாத தெய்துவித்து எய்தியது விலக்கிற்று, 'முன்னைய நான்கும்' (தொல்-பொ-அக-52.) என்றதனாற் கூறிய ஐயந் தலைவன்கண்ணதே எனவுந் தலைவிக்கு நிகழுமோ என்னும் ஐயத்தை விலக்குதலுங் கூறலின்.

இதன்பொருள்: சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப—அங்ஙனம் எதிர்ப்பாட்டின் இருவருள்ளுஞ் சிறந்த தலைவன் கண்ணே ஐயம் நிகழ்தல் சிறந்ததென்று கூறுவார் ஆசிரியர்; இழிந்துழி இழிபே சுட்டலான—அத்தலைவனின் இழிந்த தலைவிக்கண் ஐயம் நிகழுமாயின் இன்பத்திற்கு இழிவே அவள்கருதும் ஆதலான் என்றவாறு.

தலைவற்குத் தெய்வமோ அல்லளோவென நிகழ்ந்த ஐயம், நூன் முதலியவற்றல் நீக்கித் தெய்வமன்மை உணர்தற்கு அறிவுடையனாதலுந், தலைவிக்கு முருகனோ இயக்கனோ மகனோவென ஐயம் நிகழின் அதனை நீக்கி உணர்தற்குக் கருவியிலள் ஆகலானும் இங்ஙனங் கூறினார். தலைவிக்கு

ஐயம் நிகழின் அச்சமேயன்றிக் காமக்குறிப்பு நிகழாதாம். மகடூஉவின் ஆடூஉச் சிறத்தல்பற்றிச் 'சிறந்துழி' என்றார்.

உதாரணம்:

" அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு." (குறள்-தகையணங்-1.)

என வரும். (௯)

95. வண்டே யிழையே வள்ளி பூவே
கண்ணே யலமர லிமைப்பே யச்சமென்
றன்னவை பிறவு மாங்கவ ணிகழ
நின்றவை களையுங் கருவி யென்ப.

இஃது ஐயுற்றுத் தெளியுங்கால் இடையது ஆராய்ச்சியாதலின் ஆராயுங் கருவி கூறுகின்றது. வண்டு முதலியன வானகத்தனவன்றி மண்ணகத்தனவாதல் நூற்கேள்வியானும் உய்த்துணர்ச்சியானும் தலைமக்கள் உணர்ப.

இதன்பொருள்: வண்டே—பயின்றதன்மே லல்லது செல்லாத தாது ஊதும் வண்டு; இழையே—ஒருவரால் இழைக்கப்பட்ட அணிகலன்கள்; வள்ளி—முலையினுந் தோளினும் எழுதுந் தொய்யிற்கொடி; பூவே—கைக்கொண்டு மோந்து உயிர்க்கும் கழுநீர்ப்பூ; கண்ணே—வான் கண்ணல்லாத ஊன்கண்; அலமரல்—கண்டறியாத வடிவுகண்ட அச்சத்தாற் பிறந்த தடுமாற்றம்; இமைப்பே—அக்கண்ணின் இதழ் இமைத்தல்; அச்சம்—ஆண்மகனைக் கண்டுழி மனத்திற் பிறக்கும் அச்சம்; என்று அன்னவை பிறவும்—என்று அவ்வெண்வகைப் பொருளும் அவைபோல்வன பிறவும்; அவண் நிகழ நின்றவை—அவ்வெதிர்ப்பாட்

டின்கண் தான் முன்பு கண்ட வரையர மகள் முதலிய பிழம்புகளாய் ஈண்டுத் தன்மனத்து நிகழ நின்ற அப்பிழம்பு களை ; ஆங்குக் களையும் கருவி என்ப—முந்துநூற் கண்ணே அவ்வையம் நீக்குங் கருவியாமென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

எனவே, எனக்கும் அது கருத்தென்றார். இவையெல் லாம் மக்கட்குரியனவாய் நிகழவே தெய்வப்பகுதிமேற் சென்ற ஐயம் நீங்கித் துணியும் உள்ளம் பிறத்தலின் துணி வும் உடன் கூறிற்றேயாயிற்று.

இனி 'அன்னபிற' ஆவன கால் நிலந்தோய்தலும் நிழ லீடும் வியர்த்தலும் முதலியன.

" திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடும்
மிருநிலஞ் சேவடியுந் தோயு—மரிபரந்த
போகித மூண்கணு மிமைக்கு
மாகு மற்றிவ ளகலிடத் தணங்கே." (புற-வெ-மாலை-கைக்-3.)

என வரும்.

இக் காட்சி முதலிய நான்கும் அகனைந்திணைக்குச் சிறப் புடைமையும் இவை கைக்கிளை யாமாறும் 'முன்னையநான் கும்' (தொல்-பொ-அக-52.) என்புழிக் கூறினும். இங்ஙனம் ஐயந்தீர்ந்துழித் தலைவியை வியந்துகூறுதலுங் கொள்க. (ச)

96. நாட்ட மிரண்டு மறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்குங் குறிப்புரை யாகும்.

இஃது அங்ஙனம் மக்களுள்ளாளெனத் துணிந்து நின்ற தலைவன் பின்னர்ப் புணர்ச்சி வேட்கை நிகழ்ந்துழித் தலைவியைக் கூடற்குக் கருதி உரை நிகழ்த்துங்காற் கூற்று

மொழியான் அன்றிக் கண்ணான் உரைநிகழ்த்து மென்பதூஉம் அது கண்டு தலைவியும் அக்கண்ணானே தனது வேட்கைபுலப்படுத்திக் கூறுமென்பதூஉங் கூறுகின்றது; எனவே இது புணர்ச்சி நிமித்தமாகிய வழிநிலைக்காட்சி கூறுகின்றதாயிற்று.

இதன்பொருள்: அறிவு—தலைவன் அங்ஙனம் மக்களுள்ளாளென்று அறிந்த அறிவானே; உடம்படுத்தற்கு—தலைவியைக் கூட்டத்திற்கு உடம்படுத்தற்கு; நாட்டம் இரண்டும் கூட்டி உரைக்கும்—தன்னுடைய நோக்கம் இரண்டானுங் கூட்டி வார்த்தைசொல்லும்; குறிப்புரை நாட்டம் இரண்டும் ஆகும்—அவ்வேட்கை கண்டு தலைவி தனது வேட்கை புலப்படுத்திக் கூறுங் கூற்றுந் தன்னுடைய நோக்கம் இரண்டானுமாம் என்றவாறு.

நாட்டம் இரண்டிடத்துங் கூட்டுக. உம்மை விரிக்க. இங்ஙனம் இதற்குப் பொருள்கூறல் ஆசிரியர்க்குக் கருத்தாதல் 'புகுமுகம் புரிதல்' (தொ-பொ-மெய்ப்-13.) என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்தானுணர்க; அதற்குப் பேராசிரியர் கூறிய உரையானுமுணர்க. ஒன்று ஒன்றை ஊன்றி நோக்குதலின் நாட்டமென்றார். நாட்டுதலும் நாட்டமும் ஒக்கும்.

உதாரணம்:

"நோக்கினா ணோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து." (குறள்-தகைய-2.)

என வரும்.

இது புகுமுகம் புரிதல் என்னும் மெய்ப்பாடு கூறியது.

(ரு)

குறிப்பே குறித்தது கொள்ளுமாயி
னாங்கவை நிகழு மென்மனார் புலவர்.

இது புணர்ச்சியமைதி கூறுகின்றது.

இதன்பொருள்: குறித்தது—தலைவன் குறித்த புணர்ச்சிவேட்கையையே; குறிப்புக் கொள்ளுமாயின்—தலைவி கருத்துத் திரிவு படாமற் கொள்ளவற்றாயின்; ஆங்கு—அக் குறிப்பைக் கொண்டகாலத்து; அவை நிகழும் என்மனார் புலவர்—புகுமுகம் புரிதன் முதலாய் இருகையுமெடுத்தல் ஈறுகக்கிடந்த மெய்ப்பாடு பன்னிரண்டனுட்* பொறிநுதல் வியர்த்தல் முதலிய பதினொன்றும் முறையே நிகழுமென்று கூறுவர் புலவர் என்றவாறு.

'அங்கவை'யும் பாடம். பன்னிரண்டாம் மெய்ப்பாடாகிய இருகையுமெடுத்தல் கூறலே முயக்கமும் உய்த்துணரக் கூறியவாறு காண்க. அம்மெய்ப்பாட்டியலுட் கூறிய மூன்று சூத்திரத்தையும் *ஈண்டுக் கூறியுணர்க.

---

* " 1புகுமுகம் புரிதல் 2பொறிநுதல் வியர்த்தல்
3நகுநய மறைத்தல் 4சிதைவுபிறர்க் கின்மையொடு
தகுமுறை நான்கே யொன்றென மொழிப"

" 5கூழைவிரித்தல் 6காதொன்று களைத
7லூழணி தைவர 8லுடைபெயர்த் துடுத்தலோ
டூழி நான்கே யிரண்டெனமொழிப."

" 9அல்குறை வர 10லணிந்தவைதிருத்த
11லில்வலி யுறுத்த 12லிருகையு மெடுத்தலொடு
சொல்லிய நான்கே மூன்றென மொழிப."

—தொல்-பொ-மெய்ப்-13, 14, 15.

உதாரணம்:

" கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் *வாய்ச்சொற்கொண்
டென்ன பயனு மில." (குறள்-குறிப்-10.)

" கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது." (குறள்-குறிப்-2.)

என வரும்.

இதனை நான்கு வருணம் ஒழிந்தோர்க்குங் கொள்க.

உதாரணம்:

" பானலந் தண்கழிப் பாடறிந்து தன்னைமார்
நூனல நுண்வலையா னொண்டெடுத்த—கானற்
படுபுலால் காப்பாள் படைநெடுங்கண் ணோக்கங்
கடிபொல்லா வென்னையே காப்பு." (திணை, 150-32.)

என வரும்.

இனி முயங்கி மகிழ்ந்து கூறுவன:

" கோட லெதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையோ டிடைப்பட விரைஇ
யைதுதொடை மாண்ட கோதை போல
நறிய னல்லோண் மேனி
முறியினும் வாயது முயங்கற்கு மினிதே." (குறுந்-62.)

" தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றா
லம்மா வரிவை முயக்கு." (குறள்-புணர்ச்-7.)

என வரும்.

உரையிற் கோடலான் மொழிகேட்க விரும்புதலுங் கூட்டிய தெய்வத்தை வியந்து கூறுதலும் வந்துழிக் காண்க.

* 'வாய்ச்சொற்கள்' என்பதும் பாடம்.

98. பெருமையு முரனு மாடூஉ மேன.

இத்துணை மெய்யுறுபுணர்ச்சிக்கு உரியனவே கூறி இ
உள்ளப்புணர்ச்சியே நிகழ்ந்து விடும் பக்கமும் உண்டெ
பதூஉம் இவ்விருவகைப் புணர்ச்சிப்பின்னர்க் களவின்
வரைந்துகோடல் கடிதில் நிகழ்தலுண்டென்பதூஉம் உணர்
துகின்றது.

இதன்பொருள்: பெருமையும்—அறிவும் ஆற்றலு
புகழுங் கொடையும் ஆராய்தலும் பண்பும் நண்பும் பழிபா
மஞ்சுதலும் முதலியனவாய் மேற்படும் பெருமைப்பகுதியு
உரனும்—கடைப்பிடியும் நிறையுங் கலங்காது துணிதலு
முதலிய வலியின்பகுதியும்; ஆடூஉ மேன—தலைவன் க
ணது என்றவாறு.

இதனானே உள்ளப்புணர்ச்சியே நிகழ்ந்து வரைந்
கொள்ளும் உலகவழக்கும் மெய்யுறுபுணர்ச்சி நிகழ்ந்துழியு
களவு நீட்டியாது வரைந்துகோடலும் உள்ளஞ் சென்றுழி
யெல்லாம் நெகிழ்ந்தோடாது ஆராய்ந்து ஒன்றுசெய்தலு
மெலிந்த உள்ளத்தானையுந் தோன்றுமன் மறைத்தலு
தீவினையாற்றிய பகுதியிற்சென்ற உள்ளம் மீட்டலுந் த
வற்கு உரியவென்று கொள்க.

உதாரணம்:

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு." (குறள்-அறிவு-2.)

என வரும்.

பெருமை நிமித்தமாக உரன் பிறக்கும், அவ்வுரனை
மெய்யுறுபுணர்ச்சி இலனாதலும் உரியனென இதுவும் ஒ

தி கூறிற்று. தலைவிக்கு மெய்யுறுபுணர்ச்சி நடக்கும் வேட்கை நிகழாமைக்கும் காரணம் மேற்கூறுப. இனி இயற்கைப்புணர்ச்சி இடையீடு பட்டுழி இடந்தலைப்பாட்டின் கண் வேட்கை தணியாது நின்று கூறுபவென்றும் ஆண்டு இடையீடு பட்டுழிப் பாங்கனாற் கூடுபவென்றும் உரைப் பாரும் உளர்; அவர் அறியாராயினர்; என்னை? அவ் விரண்டிடத்தும் இயற்கைப்புணர்ச்சிக்கு உரிய மெய்ப்பாடு கள் நிகழ்ந்தே கூடவேண்டுதலின் அவற்றையும் இயற்கைப் புணர்ச்சியெனப் பெயர்கூறலன்றிக் காமப்புணர்ச்சியும் இடந் தலைப்பாடும் பாங்கொடுதழாஅலும் என ஆசிரியர் வேறு வேறு பெயர் கூறுமென்றுணர்க. (எ)

9. அச்சமு நாணு மடனுமுந் துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப.

இது மேலதே போல்வதோர் விதியை உள்ளப்புணர்ச்சி பற்றித் தலைவிக்குக் கூறுகின்றது.

இதன்பொருள்: அச்சமும்—அன்பு காரணத்திற் றோன்றிய உட்கும்; நாணும்—காமக்குறிப்பு நிகழ்ந்தவழிப் பிறந்ததோர் உள்ளவொடுக்கமும்; மடனும்—செவிலியர் கொளுத்தக்கொண்டு கொண்டதுவிடாமையும்; முந்துறுத்த —இம்மூன்றும் முதலியன; நிச்சமும் பெண்பாற்கு உரிய வென்ப—எஞ்ஞான்றும் பெண்பாலார்க்கு உரியவென்று கூறு வர் ஆசிரியர் என்றவாறு.

'முந்துறுத்த' என்றதனாற் கண்டறியாதன கண்டுழி மனங் கொள்ளாத பயிர்ப்பும், செயத்தகுவது அறியாத பேதைமையும், நிறுப்பதற்கு நெஞ்சுண்டாம் நிறையுங் கொள்க. மடன் குடிப்பிறந்தோர் செய்கையாதலின் அச்

சமும் நாணும்போல மெய்யுறுபுணர்ச்சியை விலக்குவதாம். தலைவி உடையளெனவே தலைவன் பெருமையும் உரனும் உடையனாய் வேட்கைமீதூரவும் பெறுமாயிற்று. இவை இவட்கு என்றும் உரியவாயின் இயற்கைப்புணர்ச்சிக்கு உரியளல்லளாமாயினும் இவ்விலக்கணத்தில் திரியாது நின்றேயும் புணர்ச்சிக்கு உரியளாமென்றற்குப் பன்னிரண்டு மெய்ப்பாடுங் கூறினார். இவற்றானே, புணர்ச்சிப் பின்னர்ப் பெறுதுமெனத் தலைவனைப்போல ஆற்றுவாளாயிற்று. இருவர் கண்ணுற்றுக் காதல்கூர்ந்தவழியெல்லாங் கந்தருவமென்பது வேதமுடிபாதலின் இவ்வுள்ளப்புணர்ச்சியுங் கந்தருவமாம். ஆதலான் அதற்கு ஏதுவாகிய பெருமையும் உரனும் அச்சமும் நாணும் போல்வன கூறினார். இச்சூத்திரம் இரண்டும் நாடகவழக்கன்றிப் பெரும்பான்மை உலகியல் வழக்கே கூறலின் இக்கந்தருவம் இக்களவியற்குச் சிறப்பின்று, இனிக் கூறுவன மெய்யுறுபுணர்ச்சிபற்றிய களவொழுக்கமாதலின். (அ)

100. வேட்கை யொருதலை யுள்ளுதன் மெலித
லாக்கஞ் செப்ப னாணுவரை யிறத்த
னோக்குவ வெல்லா மவையே போறன்
மறத்தன் மயக்கஞ் சாக்கா டென்றச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப.

இது முதலாகக் களவிலக்கணங் கூறுவார் இதனான் இயற்கைப்புணர்ச்சிமுதற் களவு வெளிப்படுந்துணையும் இருவர்க்கும் உளவாம் இலக்கணம் இவ்வொன்பதுமெனப் பொதுவிலக்கணங் கூறுகின்றார்.

இதன்பொருள் : ஒருதலைவேட்கை—புணராதமுன்னும் புணர்ந்தபின்னும் இருவர்க்கும் இடைவிட்டு நிகழாது ஒருதன்மைத்தாகி நிலைபெறும் வேட்கை; ஒருதலை உள்ளுதல்—இடைவிடாது ஒருவர் ஒருவரைச் சிந்தியாநிற்றல்; மெலிதல்—அங்ஙனம் உள்ளுதல் காரணத்தான் உடம்பு வாடுதல்; ஆக்கஞ் செப்பல்—யாதானும் ஓர் இடையூறு கேட்டவழி அதனை ஆக்கமாக நெஞ்சிற்குக் கூறிக் கோடல்; நாணுவரையிறத்தல்—ஆற்றுந் துணையும் நாணி அல்லாதவழி அதன்வரையிறத்தல்; நோக்குவ எல்லாம் அவையே போறல்—பிறர் தம்மை நோக்கிய நோக்கெல்லாந் தம் மனத்துக் கரந்து ஒழுகுகின்றவற்றை அறிந்து நோக்குகின்றாரெனத் திரியக்கோடல்; மறத்தல்—விளையாட்டு முதலியவற்றை மறத்தல்; மயக்கம்—செய்திறன் அறியாது கையற்றுப் புள்ளும் மாவும் முதலியவற்றோடு கூறல்; சாக்காடு—மடலேறுதலும் வரைபாய்தலும்போல்வன கூறல்; என்று அச்சிறப்பு உடை மரபினவை களவு என மொழிப—என்று சொல்லப்பட்ட அந்தச் சிறைப்புடைத்தான முறைமையினையுடைய ஒன்பதுங் களவொழுக்கமென்று கூறுப என்றவாறு.

இயற்கைப்புணர்ச்சிக்கு இயைபுடைமையின் வேட்கை முற்கூறினார்.

சேட்படுத்தவழித் தலைவன் அதனை அன்பென்று கோடலும் இயற்கைப்புணர்ச்சி புணர்ந்து நீங்கியவழித் தலைவி அதனை அன்பென்று கோடலும் போல்வன ஆக்கஞ் செப்பல். தலைவன் பாங்கற்குந் தோழிக்கும் உரைத்தலுந் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றலும் போல்வன நாணுவரையிறத்தல். களவதிகாரமாதலின் அவையென்னுஞ் சுட்டுக் களவை உணர்த்தும். கையுறைபுனைதலும் வேட்டை

மேலிட்டுக் காட்டுத்திரிதலுந் தலைவற்கு மறத்தல்; கிளியும் பந்தும் முதலியனகொண்டு விளையாடுதலைத் தவிர்ந்தது தலைவிக்கு மறத்தல். சாக்காடாவன:

"அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப
விம்மை மாறி மறுமை யாயினு
நீயா கியரெங் கணவனை
யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே." (குறுந்-49.)

"நிறைந்தோர்த் தேரு நெஞ்சமொடு குறைந்தோர்ப்
பயனின் மையிற் பற்றுவிட் டொரூஉ
நயனின் மாக்கள் போல வண்டினஞ்
சுனைப்பூ நீத்துச் சினைப்பூப் படர
மையன் மானின மருளப் பையென
வெந்தாறு பொன்னி னந்தி பூப்ப
வையறி வகற்றுங் கையறு படரோ
டகலிரு வான மம்ம மஞ்சினம்
பகலாற்றுப் படுத்த பழங்கண் மாலைக்
காதலற் பிரிந்த புலம்பி னோதக
வாரஞ ருறுந ரருநிறஞ் சுட்டிக்
கூரெஃ கெறிஞரி னலைத்த லானா
தெள்ளற வியற்றிய நிழல்காண் மண்டிலத்
துள்ளூதா வியிற் பைப்பய நுணங்கி
மதுகை மாய்தல் வேண்டும் பெரிதழிந்
திதுகொல் வாழி தோழி யென்னுயிர்
விலங்குவெங் கடுவளி யெடுப்பத்
துலங்குமாப் புள்ளிற் றுறக்கும் பொழுதே." (அகம்-71.)

இவை தலைவி சாக்காடாயின. மடலேறுவலெனக் கூறுதன் மாத்திரையே தலைவற்குச் சாக்காடு. இவை சிறப்புடையவெனவே களவு சிறப்புடைத்தாம். இவை கற்பிற்கு

ஆகா. இருவர்க்கும் இவை தடுமாறி வருதலின் மரபினவை யெனப் பன்மைகூறினர். (கூ)

101. முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுத்த
னன்னய முரைத்த னகைநனி யுறூஉ
தந்நிலை யறிதன் மெலிவுவிளக் குறுத்த
றந்நிலை யுரைத்த றெளிவகப் படுத்தலென்
றின்னவை நிகழு மென்மனார் புலவர்.

இஃது இன்பமும் இன்பமிலையின்மையுமாகிய புணர்தல் பிரிதல் கூறிய முறையானே இயற்கைப்புணர்ச்சி முற்கூறி அதன் பின்னர்ப் பிரிதலும் பிரிதனிமித்தமுமாய் அத்துறைப் படுவன வெல்லாந் தொகுத்துத் தலைவற்கு உரியவென் கின்றது.

இதன்பொருள்: முன்னிலையாக்கல் — முன்னிலையா காத வண்டு நெஞ்சு முதலியவற்றை முன்னிலையாக்கிக் கோடல்; சொல்வழிப்படுத்தல்—அச்சொல்லாதவற்றைச் சொல் லுவனபோலக் கூறுதல்; நன்னயம் உரைத்தல்—அவை சொல்லுவனவாக அவற்றிற்குத் தன் கழிபெருங்காதல் கூறு வானாய்த் தன்னயப்புணர்த்துதல்; நகைநனி உறூஉ அதுஅந் நிலை அறிதல்—தலைவி மகிழ்ச்சி மிகவும் எய்தாமற் புணர்ச்சிக் கினமாகிய பிரிவுநிலைகூறி அவள் ஆற்றுந்தன்மை அறிதல்; மெலிவு விளக்குறுத்தல்—இப்பிரிவால் தனக்குள்ள வருத் தத்தைத் தலைவி மனங்கொள்ளக் கூறுதலுந் தலைவி வருத் தங் குறிப்பான் உணர்ந்து அது தீரக் கூறுதலும்; தம் நிலை உரைத்தல்—நின்னொடு பட்ட தொடர்ச்சி எழுமையும் வரு கின்றதெனத் தமது நிலை உரைத்தல்; தெளிவு அகப்படுத்தல் —நின்னிற்பிரியேன், பிரியின் ஆற்றேன், பிரியின் அறனல்லது

செய்கேனவலெனத் தலைவி மனத்துத் தேற்றம்படக் கூறு தல்; என்று இன்னவை நிகழும் என்மனார்புலவர்—என்று இக்கூறிய ஏழும் பயின்றுவரும் இயற்கைப்புணர்ச்சிப்பின் தலைவற்கு என்றவாறு.

முற்கூறிய மூன்றும் நயப்பின்கூறு. இஃது அறி வழிந்து கூறாது தலைவி கேட்பது காரியமாக வண்டு முதலிய வற்றிற்கு உவகைபற்றிக் கூறுவது. 'நன்னயம்' எனவே எவரினுந் தான் காதலனாக உணர்த்தும். இதன்பயன் புணர்ச்சியெய்தி நின்றாட்கு இவன் எவ்விடத்தான்கொல்லோ இன்னும் இது கூடுங்கொல்லோ இவன் அன்புடையன் கொல்லோ எனநிகழும் ஐயநீங்குதல். இது பிரிதனிமித்தம். இவன் பிரியாவிடின் இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புல னாம்; ஆண்டு யாம் இறந்துபடுதலின் இவனும் இறந்துபடுவ னெனக்கருதப், பிரிவென்பதும் ஒன்று உண்டெனத் தலை வன் கூறுதல் அவட்கு மகிழ்ச்சியின்றென்பது தோன்ற 'நகை நனியுறாஅ'தென்றார். 'புணர்தல் பிரிதல்' (தொல்-பொ-அக-14.) எனக் கூறிய சூத்திரத்திற் புணர்தலை முற் கூறி ஏனைப் பிரிவை அந்நிலையென்று ஈண்டுச் சுட்டிக் கூறி னார். இதனால் தலைவிக்குப் பிரிவச்சங்கூறினார். தண்ணீர் வேட்டு அதனை உண்டு உயிர்பெற்றான் இதனான் உயிர் பெற்றேமெனக் கருதி அதன்மாட்டு வேட்கை நீங்காதவாறு போலத், தலைவிமாட்டு வேட்கையெய்தி அவளை அரிதிற்கூடி உயிர்பெற்றானாதலின், இவளான் உயிர் பெற்றேமென் றுணர்ந்து, அவண்மேல் நிகழ்கின்ற அன்புடனே பிரியுமாத லின் தலைவற்கும் பிரிவச்சம் உளதாயிற்று. இங்ஙனம் அன்பு நிகழவும் பிறர் அறியாமற் பிரிகின்றேனென்பதனைத் தலை விக்கு மனங்கொள்ளக் கூறுமென்றற்கு 'விளக்குறுத்த' லென்றார். இதனானே வற்புறுத்தல் பெற்றாம். அஃது

அணிந்து எம்மிடமென்றும் பிறவாற்றானும் வற்புறுத்தலாம். மேலனவும் பிரிதனிமித்தம்.

உதாரணம்:

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே." (குறுந்-2.)

இதனுள் 'தும்பி' என்றது முன்னிலையாக்கல்; 'கண்டதுமொழிமோ' என்றது சொல்வழிப்படுத்தல்; 'கூந்தலின் நறியவும் உளவோ' என்றது நன்னயமுரைத்தல்; 'காமஞ் செப்பாது' என்றது என்னிலத்து வண்டாதலின் எனக்காகக் கூறாது மெய்கூறெனத் தன் இடம் அதுவாகக் கூறலின் இடமணித்தென்றது; 'பயிலியது நட்பு' என்றது தந்நிலையுரைத்தல்.

"பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமோ
டுடனுயிர் போகுக தில்ல கடனறிந்
திருவே மாகிய வுலகத்
தொருவே மாகிய புன்மைநா முயற்கே." (குறுந்-57.)

முற்பிறப்பில் இருவேமாய்க் கூடிப் போந்தனம், இவ்வுலகிலே இப்புணர்ச்சிக்கு முன்னர் யாம் வெவ்வேறாயுற்ற துன்பத்து இன்று நாமே நீங்குதற்கெய்திய பிரிவரிதாகிய காமத்துடனே இருவர்க்கும் உயிர்போவதாக, இஃதெனக்கு விருப்பமென்றான்; என்பதனால் தந்நிலையுரைத்தலும் பிரிவச்சமுங் கூறிற்று.

" குவளை நாறுங் குவையிருங் கூந்த
லாம்ப னாறுந் தேம்பொதி துவர்வாய்க்
குண்டுநீர்த் தாமரைக் கொங்கி னன்ன
நுண்பஃ *றுத்தி மாஅ யோயே
நீயே, அஞ்ச லென்றவென் சொல்லஞ் சலையே
யானே, குறுங்கா லன்னங் குவவுமணற் சேக்குங்
கடல்சூழ் மண்டிலம் பெறினும்
விடல்சூ ழிலன்யா னின்னுடை நட்பே." (குறுங்-300.)

இது நயப்பும் பிரிவச்சமும் வன்புறையுங் கூறிற்று.

" யாயும் யாயும் யாரா கியரோ
வெந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதுஞ்
†செம்புலப் பெய்ந்நீர் போல
வன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே." (குறுங்-40.)

இது பிரிவரெனக் கருதிய தலைவி குறிப்புணர்ந்து தலைவன் கூறியது.

" மெல்லிய லரிவைநின் னல்லகம் புலம்ப
னிற்றுறந் தமைகுவெ னாயி னெற்றுறந்
திரவலர் வாரா வைகல்
பலவா குகயான் செலவுறு தகவே." (குறுங்-137.)

" அறத்தா, றன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
யன்ன வாக வென்னுநள் போல" (அகம்-5.)

இவை தெளிவகப்படுத்தல்.

" அம்மெல் லோதி விம்முற் றழுங்க
லெம்மலை வாழ்ந ரிரும்புனம் படுக்கிய

* 'தித்தி' என்றும் பாடமுண்டு. ஆயினும் தேமல் என்னும் பொருளில் 'துத்தி' என்னுஞ் சொல்லே பெருவரவிற்று.

† 'செம்புலப் பெயனீர்' என்பதும் பாடம்.

வரந்தி னவியறுத் துறுத்த சாந்தநும்
பரந்தேந் தல்குற் றிருந்துதழை யுதவும்
பண்பிற் றென்ப வண்மை யதனாற்
பல்கால் வந்துநம் பருவர றீர
வல்கலும் பொருந்துவ மாகலி
னொல்கா வாழ்க்கைத் தாகுமென் னுயிரே."

இதுவும் அணித்து எம்மிடமென ஆற்றுவித்தது. பயின்றெனவே, பயிலாதுவரும் ஆயத்துய்த்தலும், யான் போவலெனக் கூறுதலும், மறைந்து அவட்காண்டலுங், கண்டு நின்று அவணிலை கூறுவனவும், அவளருமை யறிந்து கூறுவனவும் போல்வன பிறவுங்கொள்க. "யான்றற் காண்டொறும்" என்னுஞ் செய்யுளுள்,

"நீயறிந் திலையா னெஞ்சே
யானறிந் தேனது வாயா குதலே."

என மறைந்து அவட்கண்டுநின்று தலைவன் அவளொடு நிகழ்ந்தது நினைஇ நெஞ்சிற்குக் கூறியது.

"காணு மரபிற் றுயிரென மொழிவோர்
நாணிலர் மன்ற பொய்ம்மொழிந் தனரே
யாஅங் காண்டுமே யரும்பெற லுயிரே
சொல்லு மாடு மென்மெல வியலுங்
கணைக்கா னுணுகிய நுசுப்பின்
மழைக்கண் மாதர் பணைப்பெருந் தோட்டே."

ஆயத்தொடு போகின்றாளைக் கண்டு கூறியது. இதன் கண் ஆயத்துய்த்தமையும் பெற்றாம்.

இனி 'வேட்கை யொருதலை' (தொல்-பொ-கள-9) என்னுஞ் சூத்திரத்திற் கூறியவற்றை மெய்யுறுபுணர்ச்சி மேல் நிகழ்த்துதற்கு அவத்தை கூறினாரென்றும் இச்சூத்திரத்தைத் தலைவியை நோக்கி முன்னிலையாக்கன் முதலியன

கூறிப் பின்னர் இயற்கைப்புணர்ச்சி புணருமென்றுங் கூறு வாரும் உளர். அவர் அறியார்; என்னை? ஈண்டு அவத்தை கூறிப் பின்னர்ப் புணர்ச்சி நிகழுமெனின் ஆண்டுக் கூறிய மெய்ப்பாடு பன்னிரண்டும் வேண்டாவாம். அன்றியும், ஆறும் அவதி கடந்து வருவன அகமன்மை மெய்ப்பாட்டிய லிற் கூறலிற் பத்தாம் அவத்தையாகிய சாக்காடெய்தி மெய்யுறுபுணர்ச்சி நடத்தல் பொருந்தாமையுணர்க. இனித் தலைவியை முன்னிலையாக்கல் முதலியன கூறிப் பின்னர்ப் புணருமெனின் முன்னர்க் 'கூட்டியுரைக்குங் குறிப்புரையா கும்' (தொல்-பொ-கள-15.) எனக் கண்ணுற் கூறிக் கூடுமென் றலும் 'இருகையு மெடுத்தல்' (தொல்-பொ-மெய்ப்-15) எனப் பின்பு கூறுதலும் பொருந்தாதாம். அன்றியும் நயப்பும் பிரிவச்சமும் வன்புறையும் கூறிப் பிரியவேண்டுத லானும் அது பொருந்தாதாம்.

102\. மெய்தொட்டுப் பயிறல் பொய்பா ராட்ட
லிடம்பெற்றுத் தழாஅ லிடையூறு கிளத்த
னீடுநினைந் திரங்கல் கூடுத லுறுதல்
சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்
தீராத் தேற்ற முளப்படத் தொகைஇப்
பேராச் சிறப்பி னிருநான்கு கிளவியும்
பெற்றவழி மகிழ்ச்சியும் பிரிந்தவழிக் கலங்கலு
நிற்பவை நினைஇ நிகழ்பவை யுரைப்பினுங்
குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்
பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுப்பினு
மூரும் பேருங் கெடுதியும் பிறவு
நீரிற் குறிப்பி னிரம்பக் கூறித்

தோழியைக் குறையுறும் பகுதியுந் தோழி
குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலுந்
தண்டா திரப்பினு மற்றைய வழியுஞ்
சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகையினு
மறிந்தோ ளயர்ப்பி னவ்வழி மருங்கிற்
கேடும் பீடுங் கூறலுந் தோழி
நீக்கலி னாகிய நிலைமையு நோக்கி
மடன்மா கூறு மிடனுமா ருண்டே.

இது மேல் இயற்கைப்புணர்ச்சிப் பகுதியெல்லாங் கூறி அதன்வழித் தோன்றும் இடந்தலைப்பாடும் அதன்வழித் தோன்றும் பாங்கற்கூட்டமும் அவற்றுவழித் தோன்றுந் தோழியிற்கூட்டமும் நிகழுமிடத்துத் தலைவன் கூற்று நிகழ்த் துமாறும் ஆற்றுமை கையிகந்து கலங்கியவழி அவன் மடன்மா கூறுமாறுங் கூறுகின்றது. இதனுள் 'இருநான்கு கிளவியும்' என்னுந் துணையும் இடந்தலைப்பாடும் 'வாயில் பெட்பினும்' என்னுந் துணையும் பாங்கற்கூட்டமும் ஒழிந் தன தோழியிற்கூட்டமுமாம்.

இதன்பொருள்: மெய்தொட்டுப்பயிறல்—தலைவன் தலை வியை மெய்யைத்தீண்டிப் பயிலாநிற்குநிலைமை:

என்றால் இயற்கைப்புணர்ச்சிப்பின்னர்ப் பெருநாணின ளாகிய தலைமகள் எதிர்நிற்குமோவெனின் தான் பிறந்த குடிக்குச் சிறந்த வொழுக்கத்திற்குத் தகாதது செய்தாளாத லின், மறையிற்றப்பா மறையோனொருவனை மறையிற் றப்பிய மறையோன் போலவும் வேட்கைமிகுதியான் வெய்துண்டு புன்கூர்ந்தார் போலவும் நெஞ்சும் நிறையுந் தடுமாறி இனிச் செயற்பாலதியாதென்றும், ஆயத்துள்ளே வருவான்கொல்

என்னும் அச்சங்கூரவும் வாரான்கொல் என்னுங் காதல்கூர வும், புலையன் நீம்பால்போன் மனங்கொள்ளா அனந்தருள் ளம் உடையளாய், நாணு மறந்து காதலீர்ப்பச் செல்லும்; சென்றுநின்றுளைத் தலைவன் இவ்வொழுக்கம் புறத்தார் இக ழப் புலனாய் வேறுபட்டாள் கொல்லோ எனவும், அங்ஙனம் மறைபுலப்படுதலின் இதனினாங்கு வரைந்துகொள்ளினன்றி இம்மறைக்கு உடம்படாளோவெனவுங் கருதுமாறு முன்பு போல் நின்ற தலைவியை மெய்யுறத் தீண்டி நின்று குறிப் பறியுமென்றற்குத் தொடுமென்னாது பயிறலென்றார்.

பொய் பாராட்டல்—அங்ஙனந் தீண்டிநின்றுழித் தலைவி குறிப்பறிந்து அவளை ஓதியும் நுதலும் நீவிப் பொய்செய்யா நின்று புனைந்துரைத்தல்:

சிதைவின்றேனுஞ் சிதைந்தனபோல் திருத்தலிற் பொய்யென்றார்.

இடம்பெற்றுத் தழாஅல்—அவ்விரண்டானுந் தலை வியை முகம்பெற்றவன் அவணோக்கிய நோக்கினைத் தன் னிடத்திலே சேர்த்திக்கொண்டு கூறல்:

இடையூறு கிளத்தல்—அவள் பெருநாணினளாதலின் இங்ஙனங் கூறக் கேட்டுக் கூட்டத்திற்கு இடையூறாகச் சில நிகழ்த்தியவற்றைத் தலைவன் கூறல்:

அவை கண்புதைத்தலுங் கொம்பானுங் கொடியானுஞ் சார்தலுமாம்:

நீடுநினைந்திரங்கல்—புணர்ச்சி நிகழாது பொழுது நீண்ட தற்கு இரங்கி இரக்கந்தோன்றக் கூறல்:

கூடுதல் உறுதல்—நீடித்ததென்று இரங்கினனென்பது அறிந்தோள் இவன் ஆற்றானாகி இறந்துபடுவனெனப் பெரு நாணுக் கடிதுநீங்குதல்:

சொல்லிய நுகர்ச்சி வல்லேபெற்றுழி—தலைவன் தான் முற்கூறிய நுகர்ச்சியை விரையப் பெற்றவழி:

பெற்றவழி என்பதனைப் பெறுதலெனப் பெயர்ப்படுத்தல் அக்கருத்தாற் பெறுதும்.

தீராத் தேற்றம் உளப்படத் தொகைஇ—எஞ்ஞான்றும் பிரியாமைக்குக் காரணமாகிய சூளுறுதல் அகப்படத் தொகுத்து:

புணர்ச்சிநிகழ்ந்துழியல்லது தேற்றங்கூறல் ஆகாதென்றற்கு 'வல்லே பெற்றுழித் தீராத் தேற்ற'மென்றார். முன் றெளிவகப்படுத்தபின் நிகழ்ந்த ஆற்றாமை தீர்தற்குத் தெய்வத்தொடுசார்த்திச் சூளுறுதலின் இத்தேற்றமும் வேண்டிற்று.

பேராச் சிறப்பின் இருநான்கு கிளவியும்—குறையாச் சிறப்பினவாகிய இவ்வெட்டும்:

தாமேகூடும் இடந்தலைப்பாடும் பாங்கனாற் குறிதலைப்பெய்யும் இடந்தலைப்பாடும் ஒத்த சிறப்பின வாதற்குப் 'பேராச்சிறப்பி'னென்றார்.

எனவே இடந்தலைப்பாடு இரண்டாயிற்று. தோழியிற் கூட்டம்போலப் பாங்கன் உரையாடி இடைநின்று கூட்டாமையிற் பாங்கற்கூட்டம் என்றதனைத் தலைமகன் பாங்கனைக் கூடுங் கூட்டமென்று கொள்க.

உதாரணம்:

"உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்." (குறள்-புணர்-6.)

இஃது என் கைசென்றுறுந்தோறும் இன்னுயிர் தளிர்க்கும்படி யான் தீண்டப்படுதலினெனப் பொருள்கூறவே மெய்தீண்டலாயிற்று.

“ தீண்டலு மியைவது கொல்லோ மாண்ட
வில்லுடை யிளையர் கல்லிடு பெடுத்த
நனந்தலைக் கானத் தினந்தலைப் பிரிந்த
புன்கண் மடமா *னேர்படத் தன்னையர்
சிலைமாண் கடுவிசை கலைநிறத் தழுத்திக்
குருதியொடு பறித்த செங்கோல் வாளி
மாறுகொண் டன்ன வுண்க
ணறிருங் கூந்தற் கொடிச்சி தோளே.” (குறுந்-272.)

கழறிய பாங்கற்குக் கூறுந் தலைவன் இவனுன் இக்குறை முடியாது, நெருநல் இடந்தலைப்பாட்டிற் கூடியாங்குக் கூடுவல், அது கூடுங்கொலென்று கூறுவான் அற்றைஞான்று மெய்தொட்டுப்பயின்றதே கூறினன்.

“ சொல்லிற் சொல்லெதிர் கொள்ளா யாழநின்
திருமுக மிறைஞ்சி நாணுதி கதுமெனக்
காமங் கைம்மிகிற் றாங்குத லெளிதோ
கொடுங்கே ழிரும்புற நடுங்கக் குத்திப்
புலிவிளை யாடிய புலவுநாறு வேழத்தின்
றலைமருப் பேய்ப்பக் கடைமணி சிவந்தநின்
கண்ணே கதவ வல்ல நண்ணா
ரரண்டலை மதில ராகவு முரசுகொண்
டோம்பரண் கடந்த வடுபோர்ச் செழியன்
பெரும்பெயர்க் கூட லன்னநின்
கரும்புடைத்தோளு முடையவா லணங்கே.” (நற்றிணை-39.)

இஃது அங்ஙனம் மெய்தீண்டி நின்றவன் யான் தழீஇக் கொண்டு கூறில் அதனை ஏற்றுக்கொள்ளாயாய் இறைஞ்சி

* ‘ நேர்பட நசைஇ’ என்பதும் பாடம்.

நின்று நாணத்தாற் கண்ணைப் புதைத்தியென 'இடையூறு கிளத்தல்' கூறிக் காமங் கைம்மிகிற் றுங்குத லெளிதோவென 'நீடுநினைந்திரங்கல்' கூறிப் புலியிடைத் தோய்ந்து சிவந்த கோடு போல என்னிடைத் தோய்ந்து காமக்குறிப்பினாற் சிவந்த கண்ணெனக் கூடுதலுங் கூறிற்று.

இனித் தனியே வந்தன:

"கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்நின் னைய
ருடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் னீயு
மிடல்புக் கடங்காத வெம்முலையோ பார
*மிடர்புக் கிடுகு மிடையிழிவல் கண்டாய்."
—சிலப்-கானல்வரி-17.

இது பொய்பாராட்டல்.

"கொல்யானை வெண்மருப்புங் கொல்வல் புலியதளு
நல்யாணர் நின்னையர் கூட்டுண்டு—செல்வார்தா
மோரம்பி னானெய்து போக்குவர்யான் போகாமை
யீரம்பி னாலெய்தா யின்று." (திணை, 150-22.)

இஃது இடம்பெற்றுத் தழாஅல்.

"இலங்குவளை தெளிர்ப்ப வலவ னூட்டி
முகம் புதை கதுப்பின ளிறைஞ்சிநின் றோளே
புலம்புகொண் மாலை மறைய
நலங்கே ழாக நல்குவ ளெனக்கே." (ஐங்குறு-197.)

இது கூடுதலுறுதல்.

"வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள்." (குறள்-புணர்ச்-1.)

இது நுகர்ச்சிபெற்றது.

---

* 'இடர்புக்குகு மின்னிடை' என்பதும் பாடம்.

"எம்மணங் கினவே மகிழ்ந முன்றி
னனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறியயர் களந்தொறுஞ்
செந்நெல் வான்பொரி சிதறி யன்ன
வெக்கர் நண்ணிய வெம்மூர் வியன்றுறை
நேரிறை முன்கை பற்றிச்
சூரர மகளிரொ டுற்ற சூளே." (குறுந்-53.)

இதனுள் தீராத்தேற்றத்தைப் பின்னொருகால் தலைவி தேர்ந்து தெளிவொழித்துக் கூறியவாறு காண்க.

இயற்கைப்புணர்ச்சிக்கண் தலைவிகருத்தெல்லாம் உணர்ந்தானாயினுங் காவன்மிகுதியானுங் கரவுள்ளத்தானும் இரண்டாங்கூட்டத்தினும் அவள்நிலை தெளியாது ஐயுறுதலுங் கூறி, மூன்றாவதாய் மேல்நிகழும் பாங்கற்கூட்டத்தின் பின் நிகழும் இடந்தலைப்பாட்டினும் ஐயுறவு உரித்தென்று மெய்தொட்டுப்பயிறன் முதலியன அதற்குங் கூறினார். அன்றியும் மக்களெல்லாம் முதல் இடை கடையென மூவகைப்படலின் அவர்க்கெல்லாம் இது பொதுவிதியாகலானும் அமையும்.

"எண்ணிய நியையா தாங்கொல் கண்ணி
யவ்வுறு மரபி னுகர்ச்சி பெறுகென
வரிவண் டார்க்கும் வாய்புகு கடாஅத்த
வண்ணல் யானை யெண்ணருஞ் சோலை
விண்ணுயர் வெற்பினெம் மருளி னின்னி
னகலி னகலுமெ னுயிரெனத் தவலி
வருந்துய ரவலமொ டணித்தெம் மிடமெனப்
பிரிந்துறை வமைந்தவெம் புலம்புநனி நோக்கிக்
கவர்வுறு நெஞ்சமொடு கவலுங் கொல்லோ
வாய நாப்பண் வருகுவன் கொல்லென
வுயவுமென் னுள்ளத் தயர்வுமிக லானே."

இது வருவான்கொ லென்னும் அச்சமும் வாரான்கொ லென்னுங் காதலுங் கூர்ந்து தலைவி கூறியது.

இனிச் 'சொல்லிய' வென்றதனானே இன்னும் இப்புணர்ச்சி கூடுங்கொலெனக் கூறுவனவும், இன்னுந் தெய்வந் தருமெனக் கூறுவனவுந், தலைவியை எதிர்ப்பட்ட இடங்கண்டுழி அவளாகக் கூறுவனவுங், காட்சிக்கு நிமித்தமாகிய கிள்ளையை வாழ்த்துவனவுந், தலைவி தனித்த நிலைமை கண்டு வியப்பனவும், முன்னர்த் தான் நீங்கிய வழிப் பிறந்த வருத்தங் கூறுவனவும், அணியணிந்து விடுத்தலும், இவைபோல்வன பிறவும் இடந்தலைப்பாட்டிற்குக் கொள்க.

உதாரணம்:

" வெள்ள வரம்பி *னூழி போகியுங்
கிள்ளை வாழிய பலவே யொள்ளிழை
யிரும்பல் கூந்தற் கொடிச்சி
பெருந்தோட் காவல் காட்டி யவ்வே." (ஐங்குறு-281.)

இது கிள்ளை வாழ்த்து.

" நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றா ளிவள்." (குறள்-புணர்ச்-4.)

இது நீங்கியவழிப் பிறந்த வருத்தங்கூறியது.

" அல்குபட ருழந்த வரிமதர் மழைக்கட்
பல்பூம் பகைத்தழை நுடங்கு மல்குற்
றிருமணி புரையு மேனி மடவோள்
யார்மகள் கொல்லிவ டந்தை வாழியர்
துயர முறீஇயின ளெம்மே யகல்வய
லரிவன ரரிந்துந் தருவனர் பெற்றுந்

* 'ஊழி போலும்' என்பதும் பாடம்.

தண்சேறு தாஅய் மதனுடை நோன்றாட்
கண்போ னெய்தல் போர்விற் பூக்குந்
திண்டேர்ப் பொறையன் றொண்டி
தன்றிறம் பெருகவிவ ளீன்ற தாயே." (நற்றிணை-8.)

என்பதும் அது. ஏனையவற்றிற்குச் சான்றோர் செய்யுட்கள் வருவன உளவேற் காண்க.

பெற்றவழி மகிழ்ச்சியும்—சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழி அவன் மனம் மகிழும் மகிழ்ச்சியும்: பேராச் சிறப்பினென்றதனாற் பாங்கனால் நிகழும் இடந்தலைப்பாட்டிற்கும் இது கொள்க.

உதாரணம்:

"ஒடுங்கீ ரோதி யொண்ணுதற் குறுமக
ணறுந்த ணீர ளாரணங் கினளே
யினைய ளென்றவட் புனையள வறியேன்
சிலமெல் லியவே கிளவி
யணைமெல் லியள்யான் முயங்குங் காலே." (குறுந்-70.)

என வரும்.

பிரிந்தவழிக் கலங்கலும்—அங்ஙனம் புணர்ந்து பிரிந்துழி அன்புமிகுதியால் தான் மறைந்து அவட் காணுங்கால் ஆயத்திடையுஞ் சீறாரிடையுங் கண்டு இனிக் கூடுதல் அரிதென இரங்கலும்.

உதாரணம்:

"குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் றொண்டி முன்றுறை
யயிலை யாரிரைக் கணவங் தாஅங்குச்

'சேய ளரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே." (குறுந்-128.)

"இல்லோ னின்பங் காஅமுற் றாஅங்
கரிதுவேட் டனையா னெஞ்சே காதலி
நல்ல ளாகுத லறிந்தாங்
கரிய ளாகுத லறியா தோயே." (குறுந்-120.)

என வரும்.

'வழி' யென்றதனாற் பிரியலுறுவான் கூறுவனவுங் கொள்க.

"வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து." (குறள்-காதற்-4.)

இது மூன்றுங் கூட்டத்தினையுங் கருதலின் ஈண்டு வைத்தார். இது முதலாகப் பாங்கற்கூட்டமாம். கலங்கலு மெனவே அக்கலக்கத்தான் நிகழ்வனவெல்லாங் கொள்க. அவை தலைவன் பாங்கனை நினைத்தலும் அக்கலக்கங் கண்டு பாங்கன் வினவுவனவும் அதுவே பற்றுக்கோடாக உற்ற துரைத்தலும் பிறவுமாம்.

உதாரணம்:

"பண்டையை யல்லைநீ யின்று பரிவொன்று
கொண்ட மனத்தை யெனவுணர்வல்—கண்டாயா
னின்னுற்ற தெல்லா மறிய வுரைத்தியாற்
பின்னுற்ற நண்பினாய் பேர்த்து."

எனவும்,

"வஞ்சமே யென்னும் வகைத்தாலோர் மாவினாய்த்
தஞ்சந் தமியனாய்ச் *சென்றேனென்—னெஞ்சை

* 'சென்றவென்' என்பதும் பாடம்.

நலங்கொண்டார் பூங்குழலா *ணன்றாயத் தன்றென்
வலங்கொண்டாள் கொண்டா ளிடம்.'' (திணை, 150-9.)

எனவும்,

"எலுவ சிறாஅ ரேமமுறு நண்ப
புலவர் தோழ கேளா யத்தை
மாக்கட னடுவ ணெண்ணாட் பக்கத்துப்
பசுவெண் டிங்க டோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற்றா லெம்மே.''(குறுந்-129.)

எனவும் வரும்.

நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்—நிற்பவை நினைஇ உரைப்பினும் நிகழ்பவை உரைப்பினும் என உரைப்பினென்பதனை முன்னுங் கூட்டுக;

அது கேட்ட பாங்கன் உலகத்து நிலைநிற்கின்ற நற்குணங்களை அவனை நினைப்பித்துக் கழறிக் கூறினும், அக்கழறியவற்றை மறுத்துத் தன் நெஞ்சின் நிகழும் வருத்தங்களை அவற்குக் கூறினும்:

உதாரணம்:

"குன்ற முருளிற் கொடித்தேரோய் குன்றியு
ளொன்று மொழிவ துளதாமோ—நன்றறிந்து
தாமுறையே செய்வார் தகவிலவே செய்தக்கால்
யார்முறை செய்பவோ மற்று.''

எனவும்,

"தேரோன் றெறுகதிர் மழுங்கினுந் திங்க
ளுரா வெம்மையொடு திசைநடுக் குறுப்பினும்

* 'நல்லாயத் தன்றி' என்பதும் பாடம்.

பெயராப் பெற்றியிற் றிரியாச் சீர்சால்
குலத்திற் றிரியாக் கொள்கையுங் கொள்கையொடு
நலத்திற் றிரியா நாட்டமு முடையோய்
கண்டத னளவையிற் கலங்குதி யெனினிம்
மண்டிணி கிடக்கை மாநில
முண்டெனக் கருதி புணரலன் யானே."

என்வும் இவை நிற்பவை நினைஇக் கழிறின.

"காமங் காம மென்ப காம
மணங்கும் பிணியு மன்றே நினைப்பின்
முதைச்சுவற் கலித்த முற்றா விளம்புன
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே." (குறுந்-204.)

இதுவும் அது.

"நயனும் நண்பும் நாணுநன் குடைமையும்
பயனும் பண்பும் பாடறிந் தொழுகலு
நும்மினு முடையேன் மன்னே கம்மென
வெதிர்த்த தித்தி யேரிள வனமுலை
விதிர்த்துவிட் டன்ன வந்நுண் சுணங்கி
னைம்பால் வகுத்த கூந்தற் செம்பொற்
றிருநுதற் பொலிந்த தேம்பா யோதி
முதுநீ ரிலஞ்சி பூத்த குவளை
யெதிர்மலர்ப் பிணைய லன்னவிவ
ளரிமதர் மழைக்கண் காணா வூங்கே." (நற்றிணை-160.)

"இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி லூமன் கண்ணிற் காக்கும்

வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே." (குறுந்-58.)

இவை நிகழ்பவை உரைத்தன.

இப்பன்மையான் வேறுபட வருவனவெல்லாங்கொள்க.

குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்—அங்ஙனந் தலைவற்கு நிகழுங் குற்றங்களை வெளிப்படக் காட்டிய பாங்கன் அவன் ஆற்றுமை மிகுதி கண்டு அதனை நீக்குதற்கு விரும்பினும்:

அது நின்னாற் காணப்பட்ட உரு எவ்விடத்து எத்தன்மைத்து என வினவும்.

உதாரணம்:

" பங்கயமோ துங்கப் பனிதங்கு மால்வரையோ
வங்கண் விசும்போ வலைகடலோ—வெங்கோவிச்
செவ்வண்ண மால்வரையே போலுந் திருமேனி
யிவ்வண்ணஞ் செய்தார்க் கிடம்."

என வரும்.

அதுகேட்டுத் தலைவன் கழியுவகை மீதூர்ந்து இன்னவிடத்து இத்தன்மைத்து என்னும்.

உதாரணம்:

" கழைபா டிரங்கப் பல்லியங் கறங்க
வாடுமக ணடந்த கொடும்புரி நோன்கயிற்
றதவத் தீங்கனி யன்ன செம்முகத்
துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்கக்
கழைக்க ணிரும்பொறை யேறி விசைத்தெழுந்து
குறக்குறு மாக்க டாளங் கொட்டுமக்

குன்றகத் ததுவே குழுமிளைச் சீறூர்
சீறூ ரோளே நாறுமயிர்க் கொடிச்சி
கொடிச்சி கையகத் ததுவேபிறர்
விடுத்தற் காகாது பிணித்தவென் னெஞ்சே." (நற்றிணை-95.)

இஃது இடங்கூறிற்று.

"கேளிர் வாழியோ கேளிர் நாளுமென்
னெஞ்சு பிணிக்கொண்ட வஞ்சி லோதி
* பெருநா ணணிந்த சிறுமெல் லாக
மொருநாள் புணரப் புணரி
னரைநாள் வாழ்க்கையும் வேண்டலன் யானே." (குறுந்-280.)

இது தன்மை கூறிற்று.

மீட்டுங் 'குற்றங் காட்டிய' என்றதனானே இக்கூட்டத்திற்குரிய கூற்றாகிச் சான்றோர் செய்யுட்கண் வேறுபடவருவனவெல்லாங் கொள்க.

"காயா வீன்ற கணவீ நாற்ற
மாயா முன்றில் வருவளி துரக்கு
மாகோள் வாழ்நர் சிறுகுடி யாட்டி
வேயோர் மென்றோள் விலக்குநர்
யாரோ வாழிநீ யவ்வயிற் செலினே."

இது பாங்கனை நீ யாண்டுச் செல்லவேண்டுமென்றது.

"என்னுறுநோய் தீர்த்தற் கிருபிறப்பி னன்மறையோன்
றன்னுறுநோய் போலத் தளர்கின்றா—னின்னினிய
சுற்றத்திற் றீர்ந்த சுடரிழையைச் செவ்வியாற்
றெற்றெனக் கண்ணுறுங்கொ லென்று."

---

* 'பெருந்தோட் குறுமகள்' என்பதும் பாடம்.

இது குறிவழிச்சென்ற பாங்கன் அவ்விடத்துக் காணுங் கொலென்று ஐயுற்றது.

" அளிதோ தானே யருண்மிக வுடைத்தே
களிவாய் வண்டினங் கவர்ந்துண் டாடு
மொளிதார் மார்பி னேங்கெழிற் குரிசிலைப்
பிரியாத் துயரமொடு பேதுயிர்த் தகன்ற
கிளியோர் மழலைக் கேழ்கிளர் மாத
ரார்ந்த சுற்றமொடு தமரி னீக்கத்
தானே தமியள் காட்டிய
வானோர் தெய்வம் வணங்குவல் யானே."

இது குறிவழிச் சென்ற பாங்கன் தலைவியை எளிதிற் காட்டிய தெய்வத்தை வணங்கியது.

" கண்ணென மலருங் குவளையு மடியெனத்
தண்ணெனுந் தடமலர் தயங்கு தாமரையு
முலையென முரணிய கோங்கமும் வகையெழின்
மின்னென நுடங்கு மருங்குலு மணியென
வயின்வயி னிமைக்கும் பாங்குபல் லுருவிற்
காண்டகு கமழ்கொடி போலுமென்
ஞண்டகை யண்ணலை யறிவுதொலைத் ததுவே."

இஃது இவள்போலும் இறைவனை வருத்தினாளெனப் பாங்கன் ஐயுற்றது.

" கண்ணே, கண்ணயற் பிறந்த கவுளழி கடாஅத்த
வண்ணல் யானை யாரியர்ப் பணித்த
விறற்போர் வானவன் கொல்லி மீமிசை
யறைக்கான் மாச்சுனை யவிழ்ந்த நீலம்
பல்லே, பல்லரண் கடந்த பசும்பூட் பாண்டியன்
மல்குநீர் வரைப்பிற் கொற்கை முன்றுறை

யூதை யீட்டிய வுயர்மண லடைகரை
யோத வெண்டிரை யுதைத்த முத்த
விறனே, திறல்விளங் கவுணர் தூங்கெயி லெறிந்த
விறன்மிகு முரசின் வெல்போர்ச் சோழ
னலணணி யரங்கிற் போகிய மாவி
னுருவ நீள்சினை யொழுகிய தளிரே
யென்றவை பயந்தமை யறியார் நன்று
மடவர் மன்றவிக் குறவர் மக்க
டேம்பொழி கிளவி யிவளை
யாம்பயந் தேமெம் மகளென் போரே."

இது தலைவியை வியந்தது.

" பண்ணுது *பண்மேற்றேன் பாடுங் கழிக்கான
லெண்ணுது கண்டாருக் கேரணங்கா—மெண்ணுது
சாவார்சான் றுண்மை †திரிந்திலார் மற்றிவளைக்
காவார் ‡கயிறுரீஇ விட்டார்." (திணைமாலை, 150-47.)

பாங்கன் தலைவனை வியந்தது.

" பூந்த ணிரும்புனத்துப் பூசல் புரியாது பூழி யாடிக்
காந்தட் கமழ்குலையாற் காதன் மடப்பிடிதன் கவுள்வண் [டோச்ச
வேந்தன்போ னின்ற விறற்களிற்றை வில்லினுற் கடிவார் [தங்கை
யேந்தெழி லாகமியையா தியைந்தநோ யியையும் போலும்"

இது தலைவற்கு வருத்தந் தருமெனை அவனை வியந்தது. "வெம்முறு துயரமொடு" என்னுஞ் செய்யுளுங் கொள்க.

---

* 'பண்மேற்றே' என்பதும் பாடம்.
† 'சலித்திலா' என்பதும் பாடம்.
‡ 'கயிறுரீஇ விட்டு' என்பதும் பாடம்.

இனிப் பாங்கன் தலைவிதன்மை தலைவற்குக் கூறுவனவும் இடங்காட்டுவனவுஞ் சான்றோர்செய்யுளுள் வரும்வழிக் காண்க. ஆண்டுச் சென்ற தலைவன் இடந்தலைப்பாட்டிற் கூறியவாற்றானே கூடுதல்கொள்க. அங்ஙனங் கூடி நின்று அவன் மகிழ்ந்துகூறுவனவும் பிறவுங் கொள்க.

"வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள்." (குறள்-புணர்ச்-5.)

"எமக்குநயந் தருளினை யாயிற் பணைத்தோ
* ளொண்ணுத லரிவையொடு மென்மெல வியலி
வந்திசின் வாழியோ மடந்தை
தொண்டி யன்னநின் பண்புபல கொண்டே." (ஐங்குறு-175.)

இது பாங்கற்கூட்டங்கூடி நீங்குந் தலைவன் நீ வருமிடத்து நின் தோழியோடும் வரல்வேண்டுமெனத் தலைவிக்குக் கூறியது.

"நெய்வளை ரைம்பா னேரிழை மாதரை
மெய்ந்நிலை திரியா மேதகு சுற்றமொ
டெய்துத லரிதென் றின்னண மிரங்கிக்
கையறு நெஞ்சமொடு கவன்றுநனி பெயர்ந்தவென்
பைத லுள்ளம் பரிவு நீக்கித்
தெய்வத் தன்ன தெரியிழை மென்றோ
ளெய்தத் தந்த வேந்தலொ டென்னிடை
நற்பாற் கேண்மை நாடொறு மெய்த
வப்பாற் பிறப்பினும் பெறுகமற் றெமக்கே."

அங்ஙனங் கூடிநின்று தலைவன் பாங்கனை உண்மகிழ்ந்து உரைத்தது.

---

* 'நன்னுத'லென்பதும் பாடம்.

இவன் பெரும்பான்மை பார்ப்பானும்.

இத்துணையும் பாங்கற்கூட்டம்.

பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுப்பினும்—அங்ஙனம் அவனைப் புணைபெற்றுநின்ற தலைவன் தலைவிக்கு வாயிலாதற்கு உரியாரை யாராய்ந்து பலருள்ளுந் தலைவியாற் பேணப்பட்டாள் தனக்கு வாயிலாந் தன்மையையுடைய தோழியை அவள் குறிப்பினான் வாயிலாகப் பெற்று இவளை இரந்துபின் னிற்பலென வலிப்பினும்:

மறைந்து தலைவியைக் கண்டு நின்றான் அவட்கு அவள் இன்றியமையாமை கண்டு அவளை வாயிலெனத் துணியும்.

உதாரணம்:

"தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளுங்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்
புணைகை விட்டுப் புனலோ டொழுகி
னாண்டும் வருகுவள் போலு மாண்ட
மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வெரி நுறழுங் கொழுங்கடை மழைக்கட்
டுளிதலைத் தலைஇய தளிரன் னோளே." (குறுந்-222.)

இது தலைவி அவட்கு இனையளென்று கருதி அவளை வாயிலாகத் துணிந்தது. *அன்றித் தோழி கூற்றெனில் தலைவியை அருமைகூறினன்றி இக்குறை முடிப்பலென ஏற்றுக் கொள்ளாள் தனக்கு ஏதமாமென்று அஞ்சி; அன்றியுந் தானே குறையுறுகின்றாற்கு இதுகூறிப் பயந்ததூஉமின்று.

* இங்ஙனங் கூறுவர் ஆசிரியர் நக்கீரனார்; களவியல் கூ-ஆம் சூத்திர வுரையைப் பார்க்க.

"மருந்திற் றீரா மண்ணி ஞகா—தருந்தவம்" என்னுஞ்செய் யுள் இரவு வலியுற்றது.

ஊரும் பெயரும் கெடுதியும் பிறவும் நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித் தோழியைக் குறையுறும் பகுதியும்—தோழியை இரந்துபின்னிற்றலை வலித்த தலைவன், தலைவியுந் தோழியும் ஒருங்கு தலைப்பெய்த செவ்வி பார்த்தாயினுந், தோழி தனித்துழியாயினும், நும்பதியும் பெயரும் யாவை யெனவும் ஈண்டு யான் கெடுத்தவை காட்டுமினெனவும், அனை யன பிறவற்றையும் அகத்தெழுந்ததோர் இன்னீர்மை தோன்றும் இக்கூற்று வேறோர் கருத்து உடைத்தென அவள் கருதுமாற்றானும் அமையச் சொல்லித், தோழியைத் தன் குறையறிவிக்குங் கூறுபாடும்:

வினவுவான் ஏதிலர்போல ஊரினை முன் வினய்ச் சிறிது உறவு தோன்றப் பெயரினைப் பின்வினய் அவ்விரண்டினும் மாற்றம் பெருதான் ஒன்று கெடுத்தானுகவும் அதனை அவர் கண்டார் போலவும் கூறினன். இவன் என்னினையதோர் குறையுடையனென்று அவள் கருதக் கூறுமென்பார் 'நிரம்ப' வென்றார். கெடுதியாவன, யானை புலி முதலியனவும் நெஞ் சும் உணர்வும் இழந்தேன், அவை கண்டீரோவெனவும் வினவுவன பலவுமாம்.

'பிறவு' மென்றதனல் வழிவினுதலுந் தன்னெடு அவ ரிடை உறவு தோன்றற்பாலனவுங் கூறுதலுங் கொள்க.

உதாரணம்:

" அருவி யார்க்கும் பெருவரை நண்ணிக்
கன்றுகால் யாத்த மன்றப் பலவின்
வேர்க்கொண்டு தூங்குங் கொழுஞ்சுளைப் பெரும்பழங்
குழவிச் சேதா மாந்தி யயலது

வேய்பயி லிறும்பி னுழுறல் பருகும்
பெருங்கல் வேலிச் சிறுகுடி யாதெனச்
சொல்லவுஞ் சொல்லீ ராயிற் கல்லெனக்
கருவி மாமழை வீழ்ந்தென வெழுந்த
செங்கே ழாடிய செழுங்குரற் சிறுதினைக்
கொய்புனங் காவலு நுமதோ
கோடேந் தல்கு னீட்டோ ளீரே."

இஃது ஊரும் பிறவும் வினயது.

" கல்லுற்ற நோய்வருத்தக் காலு நடையற்றே
*னெல்லுற் றியானும் வருந்தினேன்—வில்லுற்ற
பூங்க ணிமைக்கும் புருவ மதிமுகத்தீ
ரீங்கிதுவோ நும்முடைய வூர்."

இஃது ஊர் வினயது.

" செறிகுர லேனற் சிறுகிளி காப்பீ
ரறிகுவே னும்மை வினஅ—யறிபறவை
யன்ன கிகர்க்குஞ்சீ ராடமை மென்றோளி
ரென்ன பெயரிரோ நீர்."

இது பெயர்வினயது.

†" நறைபரந்த சாந்த மறவெறிந்து நாளா
லுறையெதிர்ந்து வித்தியவூ ழேனற்—பிறையெதிர்ந்த
தாமரைபோல் வாண்முகத்துத் தாழ்குழலீர் காணீரோ
வேமரை போந்தன வீண்டு." (திணை, 150-1.)

" தங்குறிப்பி னேருந் தலைச்சென்று கண்டக்கா
லெங்குறிப்பி னேமென் றிகழ்ந்திரார்—நுங்குறிப்பின்
வென்றி படர்நெடுங்கண் வேய்த்தோளீர் கூறீரோ
வன்றி படர்ந்த வழி."

---

* 'எல்லிற்று' என்னும் முன் அச்சுப்பிரதியிற் கண்ட பாடம் பொருட் பேறின்று. † 'நறைபடர்' என்பதும் பாடம்.

வன்றி, பன்றி.

> " தண்டு புரைகதிர்த் தாழ்குரற் செந்தினை
> * மண்டுபு கவரு மாண்டகிளி மாற்று
> மொண்டொடிப் பணைத்தோ ளொண்ணுத லிளையீர்
> கண்டனி ராயிற் கரவா துரைமின்
> கொண்டன குழுவி னீங்கி மண்டிய
> வுள்ளழி பகழியோ டியங்கியோர்
> புள்ளி மான்கலை போகிய நெறியே."

இவை கெடுதிவினாயின.

> " மெல்லிலைப் பரப்பின் விருந்துண் டியானுமிக்
> கல்லென் சிறுகுடித் தங்கின்மற் றெவனோ "

எனவும்,

> " இல்லுடைக் கிழமை யெம்மொடு புணரிற்
> றீது முண்டோ மாத ரீரே."

எனவும் வருவன, 'பிறவு'மென்றதனாற் கொள்க.

குறையுறாஉம்பகுதி, குறையுறுபகுதி எனவுமாம்; எனவே, குறையுறுவார் சொல்லுமாற்றானே கண்ணி முதலிய கையுறையோடு சேறலுங் கொள்க. பகுதியென வரையாது கூறலில் தனித்துழிப் பகுதி முதலியனவும் இருவருமுள்வழி இவன் தலைப்பெய்தியுடையன் எனத் தோழி உணருமாறும் வினவுதல் கொள்க. இவை குறையுறவுணர்தலும் இருவருமுள்வழி அவன் வரவுணர்தலுமாம். முன்னுறவுணர்தல் 'நாற்றமுந் தோற்றமும்' (தொல்-பொ-கள-23) என்புழிக் கூறுப. மதியுடம்பாடு மூவகையவென மேற் கூறுப.

---

* 'மண்டுபு' என்பது செய்பு என்னும் வாய்பாட் டெச்சம்.

தோழி குறை அவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்--தோழி இவன் கூறுகின்ற குறை தலைவியிடத்தேயாய் இருந்ததென்று அவன்மேலே சேர்த்தி அதனை உண்மையென்று உணரத் தலைவன் கூறுதலும்:

உதாரணம்:

"கருங்கட லுட்கலங்க நுண்வலை வீசி
யொருங்குடன் றன்னைமார் தந்த கொழுமீ
னுணங்கல்புள் ளோப்பு மொளியிழை மாத
ரணங்காகு மாற்ற வெமக்கு."

"* பண்பும் பாயலுங் கொண்டன டொண்டித்
தண்கமழ் புதுமலர் நாறு மொண்டொடி
யைதமர்ந் தகன்ற வல்குற்
கொய்தளிர் மேனி கூறுமதி தவறே." (ஐங்குறு-176.)

இவை வெளிப்பட்டன. இவற்றின் வேறுபாடு உணர்க.

"குன்ற நாடன் குன்றத்துக் கவாஅற்
பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையு
மஞ்சி லோதி † யசையியற் கொடிச்சி
கண்போன் மலர்தலு மரிதிவ
டன்போற் சாயன் மஞ்ஞைக்கு மரிதே." (ஐங்குறு-299.)

இஃது இருவரும் உள்வழிவந்த தலைவன் தலைவிதன்மை கூறவே இவள் கண்ணது இவன் வேட்கையென்று தோழி குறிப்பான் உணரக் கூறியது.

குன்றநாடன், முருகன்; அவள் தந்தையுமாம்.

---

* 'பண்பும் பாலும்' என்பதும் பாடம்.

† 'அசைநடைக் கொடிச்சி' என்பதும் பாடம்.

"உள்ளிக் காண்பென் போல்வன் முள்ளெயிற்
றமிழ்த மூறுஞ் செவ்வாய்க் கமழகி
லார நாறு மறல்போற் கூந்தற்
பேரமர் மழைக்கண் மடந்தை
மூரன் முறுவலொடு மதைஇய நோக்கே." (குறுந்-286.)

இதுவும் அது.

இது முதலியவற்றைத் தலைவன் கூற்றாகவே கூறாது தோழி கூறினாளாகக் கூறி அவ்விடத்துத் தலைவன் மடன்மா கூறுமென்று பொருள்கூறின் 'நாற்றமுந் தோற்றமும்' (தொல்-பொ-கள-23.) என்னுஞ் சூத்திரத்துத் தோழி இறைவற்கு றையே கூறினாளென்றல் வேண்டாவாம், அது கூறியது கூறலாமாகலின்.

தண்டாது இரப்பினும்—இடந்தலைப்பாடு முதலிய கூட்டங்களான் அமையாது பின்னும் பகற்குறியையும் இரவுக்குறியையும் வேண்டினும்:

உதாரணம்:

"கொண்டன் மாமழை *குடக்கேர்பு குழைத்த
சிறுகோ லிணர பெருந்தண் சாந்தம்
வகைசே ரைம்பாற் றகைபெற வாரிப்
புலர்விடத் துதிர்த்த துகள்படு கூழைப்
பெருங்கண் ணாய முவப்பத் தந்தை
நெடுந்தேர் வழங்கு நிலவுமணன் முற்றத்துப்
பந்தொடு பெயரும் பரிவி லாட்டி
யருளினு மருளா ளாயினும் பெரிதழிந்து
பின்னிலை முனியன்மா நெஞ்சே யென்னதூஉ
மருந்துய ரவலந் தீர்க்கு
மருந்துபிறி தில்லை யானுற்ற நோய்க்கே." (நற்றிணை-140.)

* 'கொட்குபு' என்பதும் பாடம்.

இதில் பரிவிலாட்டியையென இரண்டாவது விரிக்க.

“கடுந்தே ரேறியுங் காலிற் சென்றுங்
கொடுங்கழி மருங்கி னடும்புமலர் கொய்துங்
கைதை தூக்கியு நெய்தல் குற்றும்
புணர்ந்தாம் போல வுணர்ந்த நெஞ்சமொடு
வைகலு மினைய மாகவுஞ் செய்தார்ப்
பசும்பூண் வேந்த ரழிந்த பாசறை
யொளிறுவே லழுவத்துக் களிறுபடப் பொருத
பெரும்புண் ணுறுநர்க்குப் பேஎய் போலப்
பின்னிலை முனியா நம்வயி
னென்னென நினையுங்கொல் பரதவர் மகளே.” (நற்றிணை-349.)

தோழி நம்வயிற் பரதவர்மகளே யென்னென நினையுங் கொலென்க.

“பாலொத்த வெள்ளருவி பாய்ந்தாடிப் பல்பூப்பெய்
தாலொத்த வைவனங் காப்பாள்கண்—வேலொத்தென்
னெஞ்சம்வாய்ப் புக்கொழிவு *காண்பா ளெவன்கொலோ
வஞ்சாயற் கேநோவல் யான்.” (திணை, 150-19.)

இவை பகற்குறி இரந்தன.

“எல்லு மெல்லின் றசைவுபெரி துடையன்
மெல்லிலைப் பரப்பின் விருந்துண வொருவன்”

எனத் தலைவன் இரவுக்குறி வேண்டியதனைத் தோழி கூறியவாறு காண்க. இன்னும் ‘இரட்டுறமொழிதல்’ என்பதனால் ‘தண்டாது’ என்பதற்குத் தவிராது இரப்பினுமெனப் பொருள்கூறிக் கையுறை கொண்டுவந்து கூறுவனவும் நீரேவுவன யான் செய்வேனெனக் கூறுவனவுந் தோழி நின்னாற் கருதப்படுவாளை அறியேனென்றுழி அவன் அறி

* ‘காண்பானே காண்கொடா’ என்பதும் பாடம்.

யக் கூறுவனவும் பிறவும் வேறுபட வருவனவெல்லாம் இதன் கண் அடக்குக.

உதாரணம்:

"கவளக் களியியன்மால் யானைசிற் றுளி
தவழத்தா னில்லா ததுபோற்—பவளக்
கடிகை யிடைமுத்தங் காண்டொறு நில்லா
தொடிகை யிடைமுத்தந் தொக்கு." (திணை, 150-42.)

நின் வாயிதழையும் எயிற்றையுங் காணுந்தோறும் நில்லா என் கையிடத்தில் இருக்கின்ற பவளக்கொடியும் முத்தும் என்க.

"நறவுக்கம ழலரி நாற வாய்விரிந்து
நிறந்திகழ் கமழு மிணைவாய் நெய்தற்
கண்ணித் தலையர் கருங்கைப் பரதவர்
நின்னைய ரல்லரோ நெறிதா ழோதி
யொண்சுணங் கிளமுலை யொருஞான்று புணரி
னுண்கயிற் றுவலை நும்மரொடு வாங்கிக்
கைதை வேலி யிவ்வூர்ச்
செய்துாட் டேனே செறிதொடி யானே."

"அறிகவளை யைய விடைமடவா யாயச்
சிறிதவள்செல் லாளிறுமென் றஞ்சிச்—சிறிதவ
ணல்கும்வாய் காணாது நைந்துருகி யென்னெஞ்ச
மொல்கும்வா யொல்க லுறும்." (திணை, 150-17.)

என வரும்.

மற்றைய வழியும்—குறியெதிர்ப்பட்டுங் கையுறை மறுக்கப்பட்டுங் கொடுக்கப்பெற்றும் இரந்து பின்னின்றான் அங்ஙனங் குறியெதிர்ப்பாடின்றி ஆற்றானாய் இரந்து பின்னிற்றலை மாறுமவ்விடத்தும்:

உதாரணம்:

"* வின்செயல் செத்து நீபல வுள்ளிப்
பெரும்புன் பைதலை வருந்த லன்றியு
மலைமிசைத் தொடுத்த மலிந்துசெ னீத்தந்
தலைநாண் மாமலர் தண்டுறை பரப்பிக்
கடல்கரை மெலிக்குங் காவிரிப் பேரியாற்
† றறல்வார் நெடுங்கயத் தருநிலை கலங்க
மாவிரு ணடுநாட் போகித் தன்னையர்
காலைத் தந்த கணைக்கோட்டு வாளை
கதறுவ வாங்குந் தீஞ்சொற் பாண்மக
ணெடுங்கொடி நுடங்கு நறவுமலி மறுகிற்
பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்
கழங்குறழ் முத்தமொடு நல்கலம் பெறாஉம்
பயங்கெழு வைப்பிற் பல்வே லெவ்வி
நயம்புரி நன்மொழி யடக்கவு மடங்கா
னீண்பொன் னிணர்நறு மலர்ப்புன்னை வெஃகித்
திதியனொடு பொருத வன்னி போல
விளிகுவை கொல்லோ நீயே கிளியெனச்
சிறிய மிழற்றுஞ் செவ்வாய்ப் பெரிய
கயலென வமர்த்த வுண்கட் புயலெனப்
புறந்தாழ் பிருளிய பிறங்குகுர லைம்பான்
மின்னேர் மருங்குற் குறுமகள்
பின்னிலை விடாஅ மடங்கெழு நெஞ்சே." (அகம்-125.)

எனவும்,

"மாய்கதில் வாழிய நெஞ்சே நாளு
மெல்லியற் குறுமக ணல்லக நசைஇ
யரவிரை தேரு மஞ்சுவரு சிறுநெறி
யிரவென நீயும் பெறூஅ யருள்வரப்

---

* 'வின்வாய்' என்பதும் பாடம்.
† 'அகல்வார்' என்பதும் பாடம்.

புல்லென் கண்ணே புலம்புகொண் டுலகத்
துள்ளவர்க் கெல்லாம் பெருநகை யாகக்
காமங் கைம்மிக வுறுதர
வானு வரும்படர் தலைத்தந் தோயே.''

எனவும் வருவன, தன்னெஞ்சினை இரவு விலக்கியன.

சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகையினும்—தான் வருந்திக் கூறுகின்ற கூற்றினைத் தலைவியைச் சார்த்தித் தலைவன் கூறலின் இவ்வாறு ஆற்றுனுய் இங்ஙனங் கூறினுனென்று அஞ்சித் தோழி உணராமல் தலைவிதானே கூடிய பகுதியினும்:

'களஞ்சுட்டுக் கிளவி கிழவிய தாகும்' (தொல்-பொ-கள-29.)

என்பதனுல் தலைவியாற் குறிபெற்றுந் தோழியை இரக்கும்.

உதாரணம்:

" அயத்துவளர் பைஞ்சாய் முருந்தி னன்ன
நகைப்பொலிந் திலங்கு மெயிறுகெழு துவர்வா
யாகத் தரும்பிய முலையள் பணைத்தோண்
மாத்தாட் குவளை மலர்பிணைத் தன்ன
மாயிதழ் மழைக்கண் மாஅ யோளொடு
பேயு மறியா மறையமை புணர்ச்சி
பூசற் றுடியிற் புணர்வுபிரிந் திசைப்பக்
காய்ந்த காப்பொடு நாஞ்செலற் கருமையிற்
கடும்புனன் மலிந்த காவிரிப் பேர்யாற்று
நெடுஞ்சுழி நீத்த மண்ணுநள் போல
நடுக்கஞர் யெதிர முயங்கி நெருந
லாக மடைதந் தோளே வென்வேற்

களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி
யொளிறுநீ ரடுக்கத்து வியலகம் பொற்பக்
கடவு ளெழுதிய பாவையின்
மடவது மாண்ட மாஅ யோளே." (அகம்-62.)

" அணங்குடைப் பனித்துறைத் தொண்டி யன்ன
மணங்கமழ் பொழிற்குறி நல்கின ணுணங்கிழைப்
பொங்கரி பரந்த வுண்க
ணங்கலிழ் மேனி *யசைஇய வெமக்கே." (ஐங்குறு-174.)

என வரும்.

'வகை'யென்றதனானே இதனின் வேறுபட வருவனவுங் கொள்க.

" தளிர்சேர் தண்டழை தைஇ நுந்தை
குளிர்வாய் வியன்புனத் தெற்பட வருகோ
குறுஞ்சுனைக் குவளை யடைச்சிநாம் புணரிய
நறுந்தண் சார லாடுகம் வருகோ
வின்சொன் மேவலைப் பட்டவெ னெஞ்சுணக்
கூறினி மடந்தைநின் கூரெயி றுண்கென
யான்றன் மொழிதலின் மொழியெதிர் வந்து
தான்செய் † குறிநிலை யினிய கூறி
யேறுபிரி மடப்பிணை ‡ கடுப்ப வேறுபட்
டுறுகழை நிவப்பிற் சிறுகுடிப் பெயருங்
கொடிச்சி செல்புற நோக்கி
விடுத்த நெஞ்சம் விடலொல் லாதே." (நற்றிணை-204.)

---

* 'அசையியல்' என்பதும் பாடம்.

† 'குறியிலினிய' என்பதும் பாடம்.

‡ 'போல' என்பதும் பாடம்.

" இரண்டறி களவினங் காத லோளே
முரண்கொ டுப்பிற் செவ்வேன் மலையன்
முள்ளூர்க் கான நாற வந்து
நள்ளென் கங்கு னம்மோ ரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமல ருதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப் பெண்ணெய் நீவி
யமரா முகத்த ளாகித்
தமரோ ரன்னள் வைகறை யானே." (குறுந்-312.)

என வரும்.

அறிந்தோள் அயர்ப்பின் அவ்வழி மருங்கிற் கேடும் பீடுங் கூறலும்—மதியுடம்பட்ட தோழி நீர் கூறிய குறையை யான் மறந்தேனெனக் கூறுமாயின் அவ்விடத்துத் தன்னொடு கூடாமையால் தலைவிமருங்கிற் பிறந்த கேட்டையும் அவள் அதனை ஆற்றியிருந்த பெருமையையுங் கூறுதலும்:

உதாரணம்:

" ஒள்ளிழை மகளிரோ டோரையு மாடாய்
வள்ளிதழ் நெய்தற் றொடலையும் புனையாய்
விரிபூங் கான லொருசிறை நின்றோய்
யாரை யோநிற் றொழுதனம் வினவுதுங்
கண்டோர் தண்டா நலத்தை தெண்டிரைப்
பெருங்கடற் பரப்பி னமர்ந்துறை யணங்கோ
விருங்கழி மருங்கு நிலைபெற் றனையோ
சொல்லினி மடந்தை யென்றனெ னதனெதிர்
முள்ளெயிற்று முறுவலுந் திறந்தன
பல்லித ழுண்கணும் பரந்தவாற் பனியே." (நற்றிணை-155.)

" தண்டழை செரீஇயுந் தண்ணென வுயிர்த்துங்
கண்கலுழ் முத்தங் கதிர்முலை யுறைத்து
மாற்றின ளென்பது கேட்டன மாற்று

வென்னினு மவ்ளினு மிகந்த
வின்ஞ மாக்கட்டிந் நன்ன ரூரே."

"தோளுங் கூந்தலும் பலபா ராட்டி
வாழ்த லொல்லுமோ மற்றே செங்கோற்
குட்டுவன் றெண்டி யன்னவெற்
கண்டு நயந்துநீ நல்காக் காலே." (ஐங்குறு-178.)

என வரும். அயர்த்தது அவள் அருமைதோன்றுதற்கு. தோழி நீக்கலினுகிய நிலைமையும் நோக்கி—தோழி இவ்விடத்துக் காவலர் கடியரெனக் கூறிச் சேட்பட நிறுத் தலிற் றனக்கு உண்டாகிய வருத்தத்தையும் பார்த்து:

உம்மை, சிறப்பு. இதுவே மடன்மா கூறுதற்கு ஏதுவா யிற்று.

"நல்லுரை யிகந்து புல்லுரைத் தாஅய்ப்
பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல
வுள்ளந் தாங்கா வெள்ள நீந்தி
* யரிதயர் வுற்றனை நெஞ்சே யென்றும்
பெரிதா லம்மவின் பூச லுயர்கோட்டு
மகவுடை மந்தி போல
வகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே." (குறுந்-29.)

"பணைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்
பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்து மற்றிவ
ளுருத்தெழு வனமுலை யொளிபெற வெழுதிய
தொய்யில் காப்போ ரறிதலு மறியார்
முறையுடை யரசன் செங்கோல் வையத்
தியான்றற் கடவின் யாங்கா வதுகொல்
பெரிதும் பேதை மன்ற
வளிதோ தானேயிவ் வழுங்க லூரே." (குறுந்-276.)

* 'அரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்' என்பதும் பாடம்.

"உரைத்திசிற் றோழியது புரைத்தோ வன்றே
துருக்கங் கமழு மென்றோ
டறப்ப வென்றி யிறீஇயரென் னுயிரே."

என வரும்.

மடன்மாகூறும் இடனுமாருண்டே—அச்சேட்படையான் மடலேறுவலெனக் கூறும் இடனும் உண்டு என்றவாறு.

நோக்கி மடன்மா கூறுமென்க. உம்மையான் வரைபாய்வலெனக் கூறும் இடனும் உண்டென்றவாறு.

உதாரணம்:

"விழுத்தலைப் பெண்ணை விளையன் மாமடன்
மணியணி பெருந்தார் மார்பிற் பூட்டி
வெள்ளென் பணிந்துபிற ரெள்ளத் தோன்றி
யொருநாண் மருங்கிற் பெருநா ணீக்கித்
தெருவி னியலவுந் தருவது கொல்லோ
கலிங்கவி ரசைநடைப் பேதை
மெலிந்தில ளும்விடற் கமைந்த தூதே" (குறுந்-182.)

இது நெஞ்சொடு கிளத்தல்.

"நாணுக நாறு நனைகுழலா ணல்கித்தன்
பூணுக நேர்வளவும் போகாது—பூணுக
மென்றே னிரண்டாவ துண்டோ மடன்மாமே
னின்றேன் மறுகிடையே நேர்ந்து." (திணை, 150-16.)

இது தோழிக்குக் கூறியது.

இவை சாக்காடு குறித்தன.

"மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே." (குறுந்-17.)

இதனுட் 'பிறிதுமாகுப' என்றது வரைபாய்தலை.

'இட' னென்றதனால் தோழி பெரியோர்க்குத் தகா தென்றவழித் தலைவன் மறுத்துக் கூறுவனவும் பிறவும் வேறுபட வருவனவுங் கொள்க.

"நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்றா ரேறு மடல்" (குறள்-நாணுத்-3.)

என வரும்.

இனி 'இடனும்' என்ற உம்மையைப் பிரித்து நிறீஇ இருநான்கு கிளவியும் மகிழ்ச்சியுங் கலங்கலுங் கூறும் இடனும் உண்டு, உரைப்பினும் பெட்பினு முவப்பினு மிரப்பினும் வகையினுங் கூறும் இடனும் உண்டு, பகுதிக்கண்ணும் மற்றையவழிக்கண்ணுங் கூறும் இடனும் உண்டு, மெய்யுறக் கூறலும் பீடுங்கூறலும் உண்டென முடிக்க. (கக)

103. பண்பிற் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினு
மன்புற்று நகினு மவட்பெற்று மலியினு
மாற்றிடை யுறுதலு மவ்வினைக் கியல்பே.

இதுவும் இரந்து பின்னிற்புழித் தலைவன் கூற்று நிகழுமாறு கூறுகின்றது.

இதன் பொருள்: பண்பிற் பெயர்ப்பினும்—தோழி தலைவியது இளமை முதலிய பண்புகூறி அவ்வேட்கையை மீட்பினும்:

உதாரணம்:

“குன்றக் குறவன் காதன் மடமகள்
வண்டுபடு கூந்தற் றண்டழைக் கொடிச்சி
வளையண் *முளைவா ளெயிற்ற
ளிளைய ளாயினு †மாரணங் கினளே.” (ஐங்குறு-256.)

இஃது இளையளெனப் பெயர்த்துழித் தலைவன் கூறியது.

பரிவுற்று மெலியினும்—இருவகைக் குறியிடத்துந் தலைவியை எதிர்ப்படும் ஞான்றும் எதிர்ப்பட்ட ஞான்றும் எதிர்ப்படாநின்ற ஞான்றும் பலவாயவழி அவன் பரிந்த உள்ளத்தனாய் மெலியினும்:

உதாரணம்:

“ஆனா நோயோ டழிபடர் கலங்கிக்
காமம் கைம்மிகக் கையறு துயரங்
காணவு நல்கா யாயிற் பாணர்
பரிசில் பெற்ற விரியுளை நன்மான்
கவிகுளம்பு பொருத கன்மிசைச் சிறுநெறி
யிரவலர் மெலியா தேறும் பொறைய
னுரைசா லுயர்வரைக் கொல்லிக் குடவயி
னகலிலைக் காந்த ளலங்குகுலைப் பாய்ந்து
பறவை யிழைத்த பல்கண் ணிறாஅற்
றேனுடை நெடுவரைத் தெய்வ மெழுதிய
வினைமாண் பாவை யன்னோள்
கொலைசூழ்ந் தனளா னோகோ யானே.” (நற்றிணை, 185.)

இது பகற்குறியிற் பரிவுற்றது.

---

* ‘முளைவாய் வாளெயிற், றிளையள்’ என்பதும் பாடம். ‘முளைவா ளெயிற்றள்’ என்பதும் பாடம்.

† ‘மன்னணங் கினளே’ என்பதும் பாடம்.

" ஓதமு மொலியோ வின்றே யூதையுந்
தாதுளர் கானற் றெளவென் றன்றே
மணன்மலி மூதூ ரகனெடுந் தெருவிற்
கூகைச் சேவல் குராலோ டேறி
யாரிருஞ் சதுக்கத் தஞ்சுவரக் குழறு
மணங்குகால் கிளரு மயங்கிரு ணடுநாட்
பாவை யன்ன பலராய் வனப்பிற்
றடமென் பணைத்தோண் மடமிகு குறுமகள்
சுணங்கணி வனமுலை முயங்க லுள்ளி
மீன்கண் டுஞ்சும் பொழுதும்
யான்கண்*டுஞ்சேன் யாதுகொ னிலையே." (நற்றிணை-319.)

இஃது இரவுக்குறியிற் பரிவுற்றது.

" †மழைவர வறியா மஞ்ஞை யாலு
மடுக்க னல்லூ ரசைநடைக் கொடிச்சி
தானெம் மருளா ளாயினும்
‡யாந்த னுள்ளுபு மறந்தறி ¶யேமே." (ஐங்குறு-298.)

எனவும்,

" களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது.' (குறள்-அலர-5.)

எனவும் வரும்.

---

* ' துஞ்சிலன் ' என்பதும் பாடம்.

† ' மழைவர லறியா ' என்பதும் பாடம்.

‡ ' யான்ற னுள்ளுபு ' என்பதும் பாடம்.

¶ ' யேனே ' என்பதும் பாடம்.

இன்னும் 'பரிவுற்று மெலியினும்' என்றதனானே புணர்ந்து நீங்குந் தலைவன் ஆற்றாது கூறுவனவும், வறும் புனங்கண்டு கூறுவனவும், இற்செறிப்பறிவுறுப்ப ஆற்றானாய்க் கூறுவனவுந், தோழி இற்புணர்ச்சிக்கண் தன்னிலைக் கொளீஇக் கூறுவனவும், இரவுக்குறிக்கண் வருகின்றான் தலைவியை ஐயுற்றுப் பாங்கற்குக் கூறுவனவும், பிறவும் வேறுபட வருவனவெல்லாம் இதன்கண் அமைக்க.

"என்று மினிய ளாயினும் பிரித
லொன்று மின்னா ளன்றே நெஞ்சம்
பனிமருந்து விளைக்கும் பரூஉக்க ணிளமுலைப்
படுசாந்து சிதைய முயங்குஞ்
சிறுகுடிக் கானவன் பெருமட மகளே."

"கோடாப் புகழ்மாறன் கூட லனையாளை
யாடா வடகினுங் காணேன்போர்—வாடாக்
கருங்கொல்வேன் மன்னர் கலம்புக்க கொல்லோ
மருங்குல்கொம் பன்னாண் மயிர்." (திணை, 150-4.)

"பெறுவ தியையா தாயினு முறுவதொன்
றுண்டுமன் வாழிய நெஞ்சே திண்டேர்க்
கைவள ரோரி கானந் தீண்டி
யெறிவளி கமழு நெறிபடு கூந்தன்
மையீ ரோதி மாஅ யோள்வயி
னின்றை யன்ன நட்பி னிந்நோ
யிறுமுறை யெனவொன் றின்றி
மறுமை யுலகத்து மன்னுதல் பெறினே." (குறுந்-199.)

"நோயு நெகிழ்ச்சியும் வீடச் சிறந்த
வேய்வனப் புற்ற தோளை நீயே
யென்னுள் வருதியோ *வெழினடைக் கொடிச்சி

* 'நன்னடைக் கொடிச்சி' என்பதும் பாடம்.

முருகுபுணர்ந் தியன்ற வள்ளி போலநின்
னுருவுகண் ணெறிப்ப நோக்கலாற் றலனே
போகிய நாகப் போக்கருங் கவலைச்
சிறுகட் பன்றிப் பெருஞ்சின வொருத்தல்
சேறா டிரும்புற நீறொடு சிவண
வெள்வசிப் படீஇயர் மொய்த்த வள்பழீஇக்
கோளுய் கொண்ட கொள்ளைக்
கானவர் பெயர்க்குஞ் சிறுகுடி யானே." (நற்றிணை-82.)

"மயில்கொல் மடவாள்கொல் மாநீர்த் திரையுட்
பயில்வதோர் தெய்வங்கொல் கேளீர்—குயில்பயிலுங்
கன்னி யிளஞாழற் பூம்பொழி னோக்கிய
கண்ணின் வருந்துமென் னெஞ்சு."

என வரும்.

அன்பு உற்று நகினும்—தோழி குறைமறுப்புழி அன்பு தோன்ற நகினும்.

உதாரணம்:

"நயனின் மையிற் பயனிது வென்னாது
பூம்பொறிப் பொலிந்த வழலுமி ழகன்பைப்
பாம்புயி ரணங்கி யாங்கு மீங்கிது
தகாஅது வாழியோ குறுமக ணகாஅ
துரைமதி யுடையுமென் னுள்ளஞ் சாரற்
கொடுவிற் கானவன் கோட்டுமா தொலைச்சிப்
பச்சூன் பெய்த பகழி போலச்
சேயரி பரந்த *வாயிமை மழைக்க
ணுறாஅ நோக்க முற்றவென்
பைத னெஞ்ச முய்யு மாறே." (நற்றிணை-75.)

இஃது அன்புற்று நக்குழித் தலைவன் கூறியது.

* 'மாயிதழ்' என்பதும் பாடம்.

அவட் பெற்று மலியினும்—தோழி உடம்பாடுபெற்று மனம் மகிழினும்.

உதாரணம்:—

"*எமக்குநயந் தருளினை யாயிற் பணைத்தோ
†ளொண்ணுத லரிவையொடு மென்மெல வியலி
வந்திசின் வாழியோர் மடந்தை
தொண்டி யன்னநின் பண்புபல கொண்டே." (ஐங்குறு-175.)

இஃது அவட்பெற்று மலிந்து தலைவன் கூறியது.

இன்னும் 'அவட் பெற்று மலியினும்' என்றதற்கு இரட்டுறமொழிதலென்றதனாற் றலைவியைப் பகற்குறியினும் இரவுக்குறியினும் பெற்று மகிழினும் என்று பொருளுரைக்க.

"நன்றே செய்த வுதவி ‡நன்றுதெரிந்
தியாமெவன் செய்குவ நெஞ்சே காமர்
மெல்லியற் கொடிச்சி காப்பப்
பல்குர லேனற் பாத்தருங் கிளியே." (ஐங்குறு-288.)

இது பகற்குறிக்கட் கிளி புனத்தின்கட் படிகின்றதென்று தலைவியைக்காக்க ஏவியதனை அறிந்த தலைவன் அவளைப் பெற்றேமென மகிழ்ந்து கூறியது.

"காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கு
மாணிழை கண்ணொவ்வேமென்று." (குறள்-நலம்-4.)

¶ இஃது இரவுக்குறிக்கண் அவட்பெற்று மலிந்தது.

---

* 'தமக்கு நயந்தருளினை' என்பதும் பாடம். † 'நன்னுதலரிவையொடு' என்பதும் பாடம். ‡ 'நன்றிதிரிந்து' என்பதும் பாடம். ¶ 'இது பகற்குறிக்கண்' என்னும் முன் அச்சுப்பிரதியிற் கண்ட பாடம் ஈண்டைக்கு ஒவ்வாது.

" கூறுவங் கொல்லோ கூறலங் கொல்லெனக்
கரந்த காமங் கைவிடுக் கல்லாது
நயந்து நாம்விட்ட நன்மொழி நம்பி
யரைநாள் யாமத்து விழுமிழை கரந்து
கார்விரை கமழுங் கூந்த றூவினை
நுண்ணூ லாகம் பொருந்தினள் வெற்பி
னினமழை சூழ்ந்த மடமயில் போல
வண்டு வழிப்படரத் தண்மலர் வேய்ந்து
வில்வகுப் புற்ற நல்வாங்கு குடச்சு
வஞ்சிலம் பொடுக்கி யஞ்சினள் வந்து
துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோ
ளான்ற கற்பிற் சான்ற பேரிய
லம்மா வரிவையோ வல்ல டௌஅ
*தாய்ந்த நன்னாட் டணங்குடைச் சிலம்பிற்
கவிரம் பெயரிய வுருகெழு கவாஅ
னேர்மலர் நிறைச்சுனை யுறையுஞ்
சூர்மகண் மாதோ வென்னுமென் னெஞ்சே." (அகம்-197.)

என வரும்.

" விண்ணகம் விளக்கல் வேண்டி நம்மிற்
பிரியினும் பிரியுமோ பெருந்தோட் கொடிச்சி
வானஞ் சூடிய திலகம் போல
வோங்கிரு விசும்பினுங் காண்டு
மீங்குங் காண்டு மிவள்சிறு நுதலே."

இதுவும் அது.

---

* 'ஆயதன்னாட்டு' என்பதும் பாடம்.

ஆற்றிடை உறுதலும்—தலைவன் செல்லும் நெறிக்கண் இடையூறு தோன்றின இடத்தும்:

என்றது, தலைவியுந் தோழியும் வருவழியருமை கூறிய வழித் தலைவன்கூற்று நிகழுமென்றவாறு.

உதாரணம்:

"குருதி வேட்கை யுருகெழு வயமான்
வலமிகு முன்பின் மழகளிறு பார்க்கு
மரம்பயில் சோலை மலியப் பூழிய
ருருவத் துருவி னண்மேய லாரு
மாரி யெண்கின் *மலைச்சுர நீளிடை
நீநயந்து வருத லெவனெனப் பலபுலந்
தழுதனை யுறைய மம்மா வரிவை
பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை
விரிகதி ரிளவெயிற் றோன்றி யன்னநின்
னாய்நல முள்ளி வரினெமக்
கேம மாகு மலைமுத லாறே." (நற்றிணை-192.)

எனத் தலைவி ஆற்றினதருமை கூறியதற்குத் தலைவன் கூறியது.

இரட்டுறமொழித லென்பதனான் 'ஆற்றிடையுறுதற்'கு வரைவிடைவைத்துப் பிரிந்தான் ஆற்றிடை வருத்தமுற்றுக் கூறுவனவுங் கொள்க. அது போகின்றான் கூறுவனவும் மீண்டவன் பாங்கற்குக் கூறுவனவுமாம்.

* 'மலிதரு நீளிடை' என்பதும் பாடம்.

" ஓம்புமதி வாழியோ வாடை பாம்பின்
றூங்குதோல் கடுக்குந் தூவெள் ளருவிக்
கல்லுயர் நண்ணி யதுவே நெல்லி
மரையின மாரு முன்றிற்
புல்வேய் குரம்பை நல்லோ ளூரே." (குறுந்-235.)

" கவலை கெண்டிய கல்வாய்ச் சிறுகுழி
கொன்றை *பொன்வீ தாஅய்ச் செல்வர்
† பொன்செய் பேழை மூய்திறந் தன்ன
காரெதிர் புறவி னதுவே யுயர்ந்தோர்க்கு
நீரொடு சொரிந்த மிச்சில் யாவர்க்கும்
வரைகோ ளறியாச் சொன்றி
நிரைகோற் குறுந்தொடி தந்தை யூரே." (குறுந்-233.)

அவ்வினைக்கு இயல்பே—அத்தோழியிற் கூட்டத்திடத்துத் தலைவன்கூற்று நிகழ்வதாகிய இலக்கணமாம் என்றவாறு. (கஉ)

104. பாங்க னிமித்தம் பன்னிரண் டென்ப.

இது மேற் பாங்கிநிமித்தங் கூறிய அதிகாரத்தானே பாங்கனிமித்தங் கூறுகின்றார். 'வாயில்பெட்பினும்' (தொல்-பொ-கள-11) என்ற பாங்கனிமித்தம் போலாது இது வேறுபடக்கூறலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது; என்னை? பாங்கன் தலைவியை எதிர்ப்பட்டு வந்து தலைவற்கு உரைத்தலன்றிக் காளையரொடு கன்னியரை உலகியலாற் புணர்க்குமாறு புணர்க்குந் துணையேயாகலின்.

இதன்பொருள்: அகனைந்திணையும் அல்லாதவழிப் பாங்கன் கண்ணவாகிய நிமித்தம் பன்னிருபகுதியவாம் என்றவாறு.

---

* 'ஒள்வீ' என்பதும் பாடம்.

† 'பொன்பெய்' என்பதும் பாடம்.

எண்வகை மணத்தினும் இடைநின்று புணர்க்கும் பார்ப்பான் இருவகைக் கோத்திரம் முதலியனவுந் தானறிந்து இடைநின்று புணர்த்தல் வன்மை அவர்புணர்தற்கு நிமித்தமாதலின் அவை அவன்கண்ணவெனப்படும். இவனைப் பிரசாபதியென்ப. நிமித்தமுங் காரணமும் ஒன்று. காரணம் பன்னிரண்டெனவே காரியமும் பன்னிரண்டாம்: அவை எண்வகை மணனுமாதலின் அவற்றைக் கைக்கிளை முதலிய எழுதிணைக்கும் இன்னவாறு உரியவென வருகின்ற சூத்திரங்களாற் பன்னிருபகுதியும் அடங்கக் கூறுப. அவ்வாற்றானே பிரமம் பிரசாபத்தியம் ஆரிடந் தெய்வம் எனவும், முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் எனவும், அசுரம் இராக்கதம் பேய் எனவும் பன்னிரண்டாம். பிரமம் முதலிய நான்கற்கும் பாங்கன் ஏதுவாகலின் இவ்வாறு பிரமசரியங் காத்தானெனவும், இவன் இன்ன கோத்திரத்தான் ஆகலின் இவட்கு உரியனெனவும், இவளை இன்னவாற்றாற் கொடுக்கத் தகுமெனவும், இன்னானை ஆசாரியனாகக் கொண்டு வேள்விசெய்து மற்றிக் கன்னியைக் கொடுக்கத் தகுமெனவுஞ் சொல்லிப் புணர்க்குமென்பது. இனி, யாழோர் கூட்டத்துள் ஐந்திணையுமாயிற் பாடலுட் பயின்ற வகையானே முதல் கரு உரிப்பொருள் வரையறைபற்றி முறை சிறந்து வருதலும் பெயர்கொளப் பெறாமையும் உடையவன்றே, அவ்வாறன்றி ஈண்டுக் கொள்கின்ற யாழோர்கூட்டத்து ஐந்திணையுமாயின் அவ்வந்நிலத்தியல்பானும் பிறபாடையொழுக்கத்தானும் வேறுபட்ட வேறுபாடு பற்றியுஞ் சுட்டியொருவர்ப் பெயர்கொடுத்தும் வழங்குகின்ற உலகியலான் எல்லாரையும் இடைநின்று புணர்ப்பாருள்வழி அவ்வந்நிமித்தங்களும் வேறுவேறாகி வரும் பாங்கன் நிமித்தங்களையுடைய எனப்பட்டன.

இங்ஙனம் ஐந்திணைப்பகுதியும் பாங்கனிமித்தமாங்கால் வேறுபடுமெனவே புலனெறிவழக்கிற்பட்ட இருவகைக் கைகோளும் போலா இவை யென்பதூஉம், அவ்வந்நிலத்தின் மக்கட்குத் தக்க மன்றலும் வேறுகலின் அவர்க்கும் பாங்கர் உளரென்பதூஉம், இவ்வாற்றான் எண்வகைமணனும் உடனோதவே இவையும் ஒழிந்த எழுவகைமணனும்போல அகப்புறமெனப்படுமென்பதூஉங் கொள்க.

இனி, அசுரத்தன்மையாளைக் குரவர் இன்னவாறு கொடுப்பர் நீயுஞ் சேறியென்று ஒருவன்பாங்குபடக்கூறலும், இவனை அவட்குக் காட்டி இவன் இன்னனென்று ஒருவன் இடைநின்று கூறலும் உண்மையின், அதுவும் பாங்கனிமித்தமுடைத்து. இராக்கதத்திற்கும் இத்தன்மையாள் இன்னுழி இருந்தாளென்று பாங்காயினர் கூறக்கேட்டு ஒருவன் வலிதிற்பற்றிக் கோடலின் இதுவும் பாங்கனிமித்தமுடைத்து. பேய்க்கும் பொருந்துவது அறியாதான் இடைநின்று புணர்ப்பின் அதற்கும் அது நிமித்தமாம். இப்பன்னிரண்டுந் தொன்மையுந் தோலுமென்ற வனப்பினுள் வருவன. (கஙு)

105. முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே
பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே.

மேற் பன்னிரண்டெனப்பட்ட எண்வகை மணத்தினுள் ஏழனை எழுதிணையுள் இன்னதிணைப்பாற்படும் என்கின்றது.

இதன்பொருள்: முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே—இதற்கு முன் நின்ற அசுரமும் இராக்கதமும் பைசாசமுங் கைக்கிளையென்றற்குச் சிறந்திலவேனுங் கைக்கிளையெ

னச் சுட்டப்படும்: பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே-பின்னர் நின்ற பிரமம் பிரசாபத்தியம் ஆரிடந் தெய்வமென்னும் நான்கினையும் பெருந்திணை தனக்கு இயல்பாகவே பெறு மெனவுங் கூறப்படும் என்றவாறு.

மன்றல் எட்டு என்ற வரலாற்று முறையானே வாளாது பன்னிரண்டென்றார் என்பதேபற்றி ஈண்டும் அம்முறையானே இடவகையான் 'முன்னைய மூன்றும்' 'பின்னர் நான்கு' மென்றார்; எனவே, இனிக் கூறும் 'யாமோர்மேன' (தொ-பொ-களா-15) ஐந்தும் ஒன்றாக அவ்விரண்டற்கும் இடையதெனப் படுவதாயிற்று. வில்லேற்றியாயினுங் கொல்லேறுதழீஇயாயினுங் கொள்வலென்னும் உள்ளத்தனுவான் தலைவனேயாதலின் அதனை முற்படப்பிறந்த அன்புமுறைபற்றி ஒருதலைக் காமமாகிய கைக்கிளையென்றார். இராக்கதம் வலிதின் மணஞ் செய்தலாதலின் அதுவும் அப்பாற்படும்; பேயும் அப்பாற்படும். இவை முன்னைய மூன்றுங் கைக்கிளையாயவாறு. 'காமஞ்சாலா இளமையோள்வயிற்' (தொல்-பொ-அக-50) கைக்கிளை சிறப்புடைத்தென்றற்குப் 'புல்லித்தோன்றும்' (தொல்-பொ-அக-50) எனக் கூறி இதனை வாளாது குறிப்பென்றார்; ஆண்டுப் பிற்காலத்தன்றிக் காட்சிக்கண் மணம் அதற்கின்மையின் ஈண்டு மணங் கூறும்வழிக்கூறாது அகத்திணையியலுட் கூறினார். 'ஏறிய மடன்மா' முதலியவற்றைப் 'பெருந்திணைக்குறிப்பே' (தொல்-பொ-அக-51) எனக் கூறி ஈண்டுப் 'பெருந்திணை பெறுமே' யென்றார், அவை சிறப்பில இவை சிறப்புடைய வென்றற்கு.

இந்நான்கும் ஒருதலைக்காமம்பற்றி நிகழாமையானும் ஒருவனோடொருத்தியை எதிர்நிறீஇ அவருடம்பாட்டோடு

புணர்க்குங் கந்தருவமன்மையானும் அவற்றின் வேறாகிய பெருந்திணையாம். (கச)

106. முதலொடு புணர்ந்த யாழோர் மேன
தவலருஞ் சிறப்பி னைந்நிலம் பெறுமே.

இஃது அப்பன்னிரண்டனுள் இடையதாய் ஒழிந்த ஐந்துங் கூறுகின்றது.

இதன்பொருள்: முதலொடு புணர்ந்த யாழோர் மேன—மேற்கூறிய நடுவணைந்திணையுந் தமக்குமுதலாக அவற்றோடு பொருந்திவருங் கந்தருவமார்க்கம் ஐந்தும்; தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே—கெடலருஞ் சிறப்பொடு பொருந்திய ஐவகை நிலனும் பெறுதலின் அவை ஐந்தெனப்படும் என்றவாறு.

எனவே, முதற்கந்தருவம் ஐந்துமேயன்றி அவற்றோடு பொருத்தமுடைய கந்தருவம் இவ்வைந்துமென வேறுபடுத்தினர். இவை, அப்பன்னிரண்டனுட் கூறுநின்ற ஐந்தும், முதலொடு புணர்ந்தவென்றே ஒழியாது பின்னும் 'யாழோர் மேன' வென்றார் இவையுங் கந்தருவமே என்றற்கு. இவையும் ஒருவன் ஒருத்தியெதிர்நின்று உடம்படுத்தலொப்புமையுடைய. 'கெடலருஞ் சிறப்'பெனவே முதல் கரு உரிப்பொருளானுங் களவென்னுங் கைகோளானும் பாங்கி புணர்த்தலின்மையானும் இலக்கணங் குறைப்பட்டதேனுஞ் சுட்டியொருவர்ப் பெயர்கொள்ளப்பட்டுக் கற்பியலாகிய இல்வாழ்க்கையும் பெற்றுவருதற் சிறப்புடைய இவையும், ஐந்நிலம் பெறுதலேயன்றி, யென்றுணும். இது புலனெறியன்றி உலகியலாகலின் உலகியலாற் பாலைநிலனும் ஆண்டுவாழ்

வார்க்கு மன்றலும் உளதாகலிற் பாலையுங் கூறினர். எனவே, ஐம்புலத்து வாழ்வார் மணமுஞ் செய்யுளுட் பாடியக்கால் இழுக்கின்றென்றார். (கரு)

107. இருவகைக் குறிபிழைப் பாகிய விடத்துங்
காணா வகையிற் பொழுதுநனி யிகப்பினுந்
தானகம் புகாஅன் பெயர்த லின்மையிற்
காட்சி யாசையிற் களம்புக்குக் கலங்கி
வேட்கையின்மயங்கிய கையறுபொழுதினும்
புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்
வேளா ணெதிரும் விருந்தின் கண்ணும்
வாளா ணெதிரும் பிரிவி னானு
நாணுநெஞ் சலைப்ப விடுத்தற் கண்ணும்
வரைதல் வேண்டித் தோழி செப்பிய
புரைதீர் கிளவி புல்லிய வெதிரும்
வரைவுடன் படுதலு மாங்கதன் புறத்துப்
புரைபட வந்த மறுத்தலொடு தொகைஇக்
கிழவோண் மேன வென்மனார் புலவர்.

இது மேற் றலைவற்குரிய கிளவிகூறிப் பாங்கனிமித்தம் அவன்கண் நிகழும் பகுதியுங் கூறி அம்முறையானே தலைவிக்குரிய கிளவி கூறுகின்றது.

இதன்பொருள்: இருவகைக்குறி பிழைப்புஆகிய இடத்தும்—இரவுக்குறியும் பகற்குறியும் பிழைத்தவிடத்தும்;

உதாரணம்:

“முழவுமுத லரைய தடவுநிலைப் பெண்ணைக்
கொழுமட லிழைத்த சிறுகோற் குடம்பைக்
கருங்கா லன்றிற் காமர் கடுஞ்சூல்
வயவுப்பெடை யகவும் பானாட் கங்குன்
மன்றம் போழு மினமணி நெடுந்தேர்
வாரா தாயினும் வருவது போலச்
செவிமுத லிசைக்கு மரவமொடு
*துயிறுறந் தனவாற் றோழியென் கண்ணே.” (குறுந்-301.)

“கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே
யெம்மி லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குர னொச்சி
யணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே.” (குறுந்-138.)

“ஏறிரங் கிருளிடை யிரவினிற் பதம்பெறா அன்
மாறினெ னெனக்கூறி மனங்கொள்ளுந் தானென்ப
கூடுதல் வேட்கையாற் குறிபார்த்துக் குரனொச்சிப்
பாடோர்க்குஞ் செவியோடு பைதலேன் யானாக.” (கலி-46.)

என வரும்.

“இருள்வீ நெய்த லிதழகம் பொருந்திக்
கழுதுகண் படுக்கும் பானாட் கங்கு
லெம்மினு முயவுதி செந்தலை யன்றில்
கானலஞ் சேர்ப்பன் போல நின்பூ
நெற்றிச் சேவலும் பொய்த்தன்றோ குறியே.”

இது தன்னுட் கையாறெய்திடு கிளவி.

“புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோற்
றுன்ப முழவாய் துயிலப் பெறுதியா
லின்கள்வாய் நெய்தானீ யெய்துங் கனவினுள்
வன்கணார் கானல் வரக்கண் டறிதியோ.” (சிலப்-கானல்வரி,33)

---

* ‘துயின்மறந் தனவால்’ என்பதும் பாடம்.

எனவும் இவை குறிபிழைத்துழித் தன்வயி னுரிமையும் அவன்வயிற் பரத்தைமையும்படக் கூறியனவாம். குறி பிழைத்தலாவது புனலொலிப்படுத்தலும் புள்ளெடுப்புதலும் முதலியன குறியெனக் குறித்தவழி, அவனுனன்றி அவை வேறோர் காரணத்தான் நிகழ்ந்துழி அதனைக் குறியென நினைந்துசென்று அவை அவன்குறி யன்மையின் அகன்று மாறுதலாம். பகற்குறிக்கு உதாரணம் வந்துழிக் காண்க.

காணு வகையிற் பொழுது நனி இகப்பினும்—குறி வழிச்செல்லுந் தலைவனை இற்றைஞான்றிற் காண்டல் அரி தென்று கையறுவதோராற்றாற் பொழுது சேட்கழியினும்:

என்றது, தாய் துஞ்சாமை ஊர்துஞ்சாமை காவலர் கடுகுதல் நிலவுவெளிப்படுதல் நாய்துஞ்சாமை போல்வனவற் றால் தலைவன் குறியின்கண் தலைவி வரப்பெறாமல் நீட்டித்த லாம்.

உதாரணம்:

"இரும்பிழி மகாஅரிவ் வழுங்கன் மூதூர்
விழவின் றாயினுந் துஞ்சா தாகு
மல்ல லாவண மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொ லன்னை துஞ்சாள்
பிணிகொ ளருஞ்சிறை யன்னை துஞ்சிற்
றுஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவ
ரிலங்குவே லிளையர் துஞ்சின் வைஎயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மகுரு
மரவவாய் ஞமலி குரையாது மடியிற்
பகலுரு வுறழ நிலவுகான்று விசும்பி
னகல்வாய் மண்டில நின்றுவிரி யும்மே
திங்கள் கல்சேர்பு கனையிருண் மடியி

ணில்லெலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும்
வளைக்கட் சேவல் வாளாது மடியின்
மனைச்செறி கோழி மாண்குர லியம்பு
மெல்லா மடிந்த காலத் தொருநா
ணில்லா நெஞ்சத் தவர்வா ரலரே
யதனால், அரிபெய் புட்டி லார்ப்பப் பரிசிறந்
தாதி போகிய பாய்பரி நன்மா
நொச்சி வேலித் தித்த னுறந்தைக்
கன்முதிர் புறங்காட் டன்ன
பன்முட் டின்றாற் றோழிநங் களவே." (அகம்-121.)

"கருங்கால் வேங்கை வீயுகு துறுக
லிரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
யெல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே." (குறுந்-47.)

"வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தி லெழால்வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போழ்தி லெழாதாய்க் குறுஅலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்"

இதுவும் அது.

தானகம் புகாஅன் பெயர்தலின்மையிற் காட்சி ஆசை யிற் களம்புக்குக் கலங்கி வேட்கையின் மயங்கிய கையறு பொழுதினும்—அங்ஙனங் காணுவகையிற் பொழுது நனி யிகந்து தலைவி குறிதப்பியக்காலுந் தலைவன் குறியிடம் புகுந் தல்லது பெயரானென்பது தான் அறியுமாதலின் ஆண்டுப் புகுந்தவன் தான் வந்து நீங்கினமை அறிதற்கு ஓர் குறி செய் தன்றி வாளாது பெயரானன்றே? அக்குறிகாணுங் காட்சி விருப்பினாற் றலைவி பிற்றைஞான்று விடியலிற்சென்று

ஆண்டைக் குறிகண்டு கலங்கி அவனை எதிர்ப்படுதல் வேட்கையளாகிச் செய்வதறியாது மயக்கத்தோடு கையறவு எய்தும்பொழுதின் கண்ணும்:

'தான்' என்றது தலைவனை. இரவுக்குறியினை 'அக'மென்றார், இரவுக்குறி எயிலகத்தது என்பதனால். குறியிற்சென்று நீங்குவனெனவே காட்சி அவன்மேற்றன்றிக் குறிமேற்றாம். குறி மோதிரம் மாலை முத்தம் முதலியன கோட்டினுங் கொடியினும் இட்டுவைத்தனவாம்; இவை வருத்தத்திற்கு ஏதுவாம். இது விடியல் நிகழுமென்றற்குப் பொழுதென்றான்; எனவே காண்பன விடியலிற் காணுமென்றார். 'மயங்கும்' என்றதனால் தோழியும் உடன்மயங்கும். அது,

> "இக்காந்தண் மென்முகைமேல் வண்டன்றஃ திம்முகையிற்
> கைக்காந்தண் மெல்விரலாய் காணிதோ—புக்குச்
> செறிந்ததுபோற் றோன்றுந் தொடுபொறி யாம்பண்
> டறிந்ததொன் றன்ன துடைத்து."

புகாஅக் காலைப் புக்கு எதிர்ப்பட்டுழிப் பகாஅ விருந்தின் பகுதிக்கண்ணும்—உண்டிக்காலத்துத் தலைவியில்லத்துத் தலைவன் புக்கெதிர்ப்பட்டவழி நீக்கி நிறுத்தாத விருந்து ஏற்றுக்கொள்ளும் பகுதிக்கண்ணும்:

எனவே, மனையகம் புகுதற்கு ஒவ்வாத மிக்க தலைவன் புகுந்தால் இஃதொன்றுடைத்தெனத் தேராது தாய் அவனை விருந்தேற்று நீக்கிநிறுத்தற் பகுதியுந் தழீஇயினவாறாயிற்று.

புகாக்காலமாதலிற் பகாவிருந்தென்றான்; விடியற்காலமாயிற் றலைவன் புகானெனவும், புகாக்காலத்துப் புக்கானாயின் அவர் விருந்தேற்றுக்கோடல் ஒருதலையென்று புகும்

என்றுங் கொள்க. தலைவி காட்சியாசையிற் கலங்கிய அதற்கேற்பத் தலைவற்குங் காட்சியாசை கூறிற்று; அது,

"சுடர்த்தொடீஇ கேளாய் தெருவினு மாடு
மணற்சிற்றில் காலிற் சிதையா வடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி *மேலோர்நா
ளன்னையும் யானு மிருந்தேமா †வில்லிரே
யுண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
யடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழா
யுண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
வன்னை யலறிப் படர்தரத் தன்னையா
னுண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்." (கலி-51.)

இது புகாக்காலத்துப் புக்கானை விருந்தேற்றுக் கொண்டமை இன்னொருகாலத்துத் தலைவி தோழிக்குக் கூறியவாறு காண்க.

"அன்னை வாழ்க பலவே தெண்ணீ
ரிருங்கடல் வேட்ட மெந்தை புக்கெனத்
தார்மணி நெடுந்தேர் நீவி யானுமோ
ரெல்லமை விருந்தினெ னென்ற
மெல்லம் புலம்பனைத் தங்கென் றோளே."

இது தோழிகூற்றுமாம்.

---

* 'மேலைநாள்' என்பதும் பாடம். † 'இல்லிலே' என்பதும் பாடம்.

ஒன்றிய தோழி யென்றதனால் தோழிகூற்று வந்துழிக் காண்க.

" மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் * றப்பிற்
கொன்பதிற் றொன்பது களிற்றோ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரயத்துச் † செலீஇயரோ வன்னை
யொருநா, ணகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே." (குறுந்-292.)

இது புகாக்காலத்துத் தலைமைமிக்க தலைவன் புக்கதற்கு விருந்தேலாது செவிலி இரவுந் துயிலாதாளைத் தலைவி முனிந்து கூறியது.

வேளாண் எதிரும் விருந்தின்கண்ணும்—அங்ஙனம் விருந்தாதலேயன்றித் தலைவி வேளாண்மைசெய்ய எதிர் கொள்ளக் கருதுதல் காரணத்தால் தோழி அவனை விருந் தேற்றுக் கோடற்கண்ணும்:

என்றது, தலைவி அவற்கு உபகாரஞ்செய்யக் கருதி அதனைக் குறிப்பாற் கூறத் தோழி அவனை விருந்தாய்த் தங் கென்னும்.

உதாரணம்:

" நாள்வலை முகந்த கோள்வல் பரதவர்
நுணங்குமண லாங்க ணுணங்கப் பெய்ம்மார்
பறிகொள் கொள்ளையர் மறுக வுக்க

* 'தப்பற்கு' என்பதும் பாடம்.
† 'செலியரோ' என்பதும் பாடம்.

மீனார் குருகின் கானலம் பெருந்துறை
யெல்லை தண்பொழிற் சென்றெனச் செலீஇயர்
யாதோ பூட்டயர வேஎய் வார்கோற்
செறிதொடி திருத்திப் பாறுமயிர் நீவிச்
செல்லினி மடந்தைநின் றோழியொடு மனையெனச்
சொல்லிய வளவைத் தான்பெரிது கலிழ்ந்து
தீங்கா யினளிவ ளாவயிற் றங்காது
நொதுமலர் போலப் பிரியிற் கதுமெனப்
பிறிதொன் றாகலு மஞ்சுவ லதனாற்
சேணின் வருநர் போலப் பேணாப்
பெருங்கலி யாணரெஞ் சிறுகுடித் தோன்றின்
வல்லெதிர் கொண்டு மெல்லிதின் விளைஇத்
துறையுமான் றின்று பொழுதே சுறவு
மோதமலி கடலின் மாறா யினவே
யெல்லின்று தோன்றல் செல்லா தீமென
வெமர்குறை கூறத் தங்கி யேமுற
*விளையரும் புரவியு மின்புற நீயு
மில்லுறை நல்விருந் தாகுத
லொல்லுதும் பெருமநீ நல்குதல் பெறினே." (அகம்-299.)

இதனுள் 'தான்பெரிது கலிழ்ந்து தீங்காயின' எனவே அக்குறிப்புத் தலைவன் போகாமற் றடுப்பக் கூறியதென்று உணர்ந்து தோழி கூறினாள்.

வாளாண் எதிரும் பிரிவினானும்—வாளாண்மை செய்தற்கு ஒத்த பிரிவு தோன்றியவழியும்:

ஆண்டுத் தலைவிமேற்றுக் கிளவி மூவகைப்பிரிவினும் பகைவயிற்பிரிவை விதந்தோதி அதிகாரப்பட்டு வருகின்ற களவினுள் அவை நிகழப்பெறா; இதுவாயின் வரைவிடை

* 'இளையரும்' என்பதும் பாடம்.

வைத்துப் பிரியவும்பெறும் அரசர்க்கு இன்றியமையாத பிரிவாகலின் என்பது கருத்து. ஓதலுந் தூதும் வரைவிடை வைத்துப் பிரிவிற்குச் சிறந்திலவென்றுணும். இப்பிரிவு அரசர்க்கு உரித்தென்பது 'தானே சேறலும்' (தொல்-பொ-அக-27) என்னும் சூத்திரத்தாற் பெறுதும். வாளாண்மைக்கு ஏற்ற பிரிவெனவே முடியுடை வேந்தரேவலிற் பிரியும் அரசர் கண்ணது இப்பிரிவென்க. சிறுபான்மை அவ்வேந்தற்கு உரித்து, 'வெளிப்படை தானே' (தொல்-பொ-கள-50) என்பதனுள் இப்பிரிவில்லை என்பராதலின். அது,

> "பகைவென்று திறைகொண்ட பாய்திண்டேர் மிசையவர்
> வகைகொண்ட செம்மனும் வனப்பார விடுவதோ
> புகையெனப் புதல்சூழ்ந்து பூவங்கட் பொதிசெய்யா
> முகைவெண்ப னுதிபொரா முற்றிய கடும்பனி." (கலி-31.)

இதனுட் பனியெதிர் பருவங் குறிஞ்சியாகலிற் களவிற் பிரிந்தான் வாளாணெதிரும் வென்றி தோழிக்குத் தலைவி கூறியவாறு. இஃது அவன்வயிற் பரத்தைமை கருதாதது.

நாணு நெஞ்சு அலைப்ப விடுத்தற்கண்ணும்—தலைவிக்கு இன்றியமையாத நாணுத்தான் அவள் நெஞ்சினை அலைத்தலின் அவள் அந்நாணினைக் கைவிடுதற்கண்ணும்: அஃது உடன்போக்கினும் வரைவுகடாவும் வழியும் வேட்கை மீதூர்ந்து நாண்துறந்துரைத்தல் போல்வன.

> "அளிதோ தானே நாணே நம்மொடு
> நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
> வான்பூங் கரும்பி னோங்குமணற் சிறுசிறைத்
> தீம்புன னெரிதர வீந்துக் காஅங்குத்
> தாங்கு மளவைத் தாங்கிக்
> காம நெரிதரக் கைந்நில் லாதே." (குறுந்-149.)

இஃது உடன்போக்கு வலித்தமையின் நாண்துறந்து கூறியது.

வரைதல் வேண்டித் தோழி செப்பிய புரைதீர் கிளவி புல்லிய எதிரும்—வரைதல்விருப்பினால் தோழி தலைவற்கு வரைவு கடாய்க் கூறிய புரைதீர் கிளவியைத் தலைவி பொருந்தினன்றே இயற்பழித்தற்கு மறுத்தாள்போல் நிற்கும் எதிர் மறையையும்:

புரைதீர்கிளவி தலைவனுயர்பிற்கு ஏலாது இயற்பழித்து உரைக்குங் கிளவி. அது, "பாடுகம் வாவாழி தோழி" என்னுங் குறிஞ்சிக்கலியுள்,

> " இலங்கு மருவித் திலங்கு மருவித்து
> வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
> சூள்பேணான் பொய்த்தான் மலை." (கலி-41.)

எனத் தோழி இயற்பழித்த வாய்பாட்டான் வரைவு கடாவு அதனை உடம்பட்டுப் பழித்தற்கு உடம்படாதாள்,

> " பொய்த்தற் குரியனோ பொய்த்தற் குரியனோ
> வஞ்சலோம் பென்றுரைப் பொய்த்தற் குரியனோ
> குன்றக னன்னுடன் வாய்மையிற் பொய்தோன்றிற்
> றிங்களுட் டீத்தோன்றி யற்று." (கலி-41.)

எனத் தலைவி இயற்பட மொழிந்து எதிர் மறுத்தவாறு காண்க.

> " அருவி வேங்கைப் *பெருவரை நாடற்
> கியானெவன் செய்கோ வென்றி யானது
> நகையென வுணரே னாயி
> னென்னா குவைகொ னன்னுத னீயே." (குறுந்-96.)

* 'பெருமலை' என்பதும் பாடம்.

இதுவும் இயற்பழித்த தோழிக்குத் தலைவி இயற்பட மொழிந்தது.

வரைவு உடன்படுதலும் — தலைவற்குத் தலைவி தமர் வரை வுடம்பட்டதனைத் தலைவி விரும்புதலையும்:

உதாரணம்:

“இலையமர் தண்குளவி *வேய்ந்த பொதும்பிற்
குலையுடைக் காந்த ளினவண் டிமிரு
†மலையக நாடனும் வந்தான்மற் றன்னை
யலையு மலைபோயிற் றின்று.” (ஐந்திணை, 70-3.)

“ஒறுப்ப வோவலர் மறுப்பத் தேறலர்
தமிய ருறங்குங் கௌவை யின்றா
யினியது கேட்டின் புறுகவிவ் வூரே
முனாஅ தியானையுண் குருகின் கானலம்
பெருந்தோட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉங்
குட்டுவன் மாந்தை யன்னவெங்
குழைவிளங் காய்நுதற் கிழவனு மவனே.” (குறுந்-34.)

தமரான் ஒறுக்கப்பட்டு ஓவாராய்த் துயருழத்தல் ஆகாதென ஆற்றுவிக்குஞ் சொற்களான் மறுத்துரைப்பவுந் தேறாராய்த் தனித்து இருப்பார் உறக்கங் காரணமாக எழுந்த கௌவை கேளாது வரைந்தெய்திய மாற்றங் கேட்டு இவ் வூரும் இன்புறுக என்பதாம்.

ஆங்கதன் புறத்துப் புரைபடவந்த மறுத்தலொடு தொகைஇ—அவன் வரைவுவேண்டினவிடத்து அவ்வரைவு

* ‘ஏய்ந்த’ என்பதும் பாடம்.
† ‘வரையக’ என்பதும் பாடம்.

புறத்ததாகியவழித் தலைவி தன்னுயர்பு உண்டாகத் தோன்றியதுமறுத்தலோடே முற்கூறியவற்றைத் தொகுத்து:

'அதன்புறம்' எனவே அதற்கு அயலாகிய நொதுமலர் வரைவாயிற்று. தலைவி தன் குடிப்பிறப்புங் கற்பும் முதலிய உயர்ச்சிக்கு ஏற்ப அதனை மறுத்துத் தலைவன் வரையுமாறு நீகூறெனத் தோழிக்குக் கூறுமென்றற்குப் 'புரைபட வந்த மறுத்தல்' என்றார்.

"வாரி நெறிப்பட் டிரும்புறந் தாஅழ்ந்த
வோரிப் புதல்வ னழுதன னென்பவோ வோரும்
புதுவ மலர்தைஇ யெமரென் பெயரால்
வதுவை யயர்வாரைக் கண்டு விலக்கி மதியறியா
வேழையை யென்றகல நக்குவந் தீயாய்நீ
தோழி யவனுழைச் சென்று;
சென்றியா னறிவேன் கூறுக மாற்றினிச்
சொல்லறியாப் பேதை மடவைமற் றெல்லா
நினக்கொரூஉ மற்றென் றகலகல நீடின்று
நினக்கு வருவதாக் காண்பா யனைத்தாகச்
சொல்லிய சொல்லும் வியங்கொளக் கூறு;
தருமணற் ஞழைப்பெய் தில்பூவ லூட்டி
யெருமைப் பெடையோ டெமரீங் கயரும்
பெருமண மெல்லாந் தனித்தே யொழிய
வரிமணன் முன்றுறைச் சிற்றில் புனைந்த
திருநுத லாயத்தார் தம்முட் புணர்ந்த
வொருமணந் தானறியு மாயி னெனைத்துந்
தெருமரல் கைவிட் டிருக்கோ வலர்ந்த
விரிநீ ருடுக்கை யுலகம் பெறினு
மருநெறி யாயர் மகளிர்க்
கிருமணங் கூடுத லில்லியல் பன்றே." (கலி-114.)

என வரும்.

6

"மள்ளர் குழீஇய விழவி னானும்" (குறுந்-31.)

என்பதுமாம்.

இச்சூத்திரத்து உருபும் எச்சமுமாயவற்றைக் 'கிழவோண்மேன' என்பதனோடு முடித்து முற்றிற்குக் கிளவியென ஒரு பெயர் வெளிப்படுத்து முடிக்க. புல்லிய எதிரையும் உடன்படுதலையும் மறுத்தலுடன் தொகுத்தது.

கிழவோள் மேன என்மனார் புலவர்—தலைவியிடத்தன கிளவியென்று கூறுவர் புலவர் என்றவாறு. (கசு)

108. காமத் திணையிற் கண்ணின்று வருஉ
நாணு மடனும் பெண்மைய வாதலிற்
குறிப்பினு மிடத்தினு மல்லது வேட்கை
நெறிப்பட வாரா வவள்வயி னான.

இஃது உள்ளப்புணர்ச்சிக்கு உரியவாறு மெய்யுறு புணர்ச்சிக்கண்ணும் நிகழுமென்ற நாணும் மடனுங் குறிப்பினும் இடத்தினும் வருமெனக் கூறுதலின் 'அச்சமு நாணும்' (தொல்-பொ-கள-8) என்பதற்குப் புறநடையாயிற்று. இதனை ஈண்டுக் கூறினான், இடத்தின்கண் வரும் நாணும் மடனுந் தந்தன்மை திரிந்துவருமென்பதூஉம் அது கூற்றின்கண் வருமென்பதூஉங் கூற்று நிகழ்கின்ற இவ்விடத்தே கூறவேண்டுதலின். எனவே, இதுமுதலிய சூத்திரம் மூன்றும் முன்னர்த் தலைவிக்குக் கூற்றுநிகழுமென்றற்குக் கூற்றுநிகழுங்கால் நாணும் மடனும் நீங்கக் கூறும் என்று அக்கூற்றிற்கு இலக்கணங் கூறினவேயாயிற்று.

இதன்பொருள்: அவள்வயின் ஆன நாணும் மடனும் பெண்மைய ஆதலின்—தலைவியிடத்து உளவாகிய நாணும்

மடனும் பெண்மைப்பருவத்தே தோன்றுதலையுடையவாதலின்; காமத்திணையிற் கண்ணின்று குறிப்பினும் வரூஉம்—அப்பருவத்தே தோன்றிய காமவொழுக்கங் காரணமாக அவை கண்ணின்கணின்று குறிப்பினும் வரும்; வேட்கை நெறிப்பட' இடத்தினும் வரூஉம்—அன்றி வேட்கை தன்றன்மை திரியாது வழிப்படுதலாலே கருமநிகழ்ச்சிக்கண்ணும் வரும்; அல்லது வாரா—அவ்விரிடத்துமல்லது அவை வாரா என்றவாறு.

இயற்கைப்புணர்ச்சிக்கண் உரியவாகக் கூறும் பன்னிரண்டு மெய்ப்பாட்டானுங் குறிப்பின்கண் நாணும் மடனும் நிகழ்ந்தவாறுணர்க.

"ஒருநெறிப் பட்டாங் கோரியன் முடியுங்
கரும நிகழ்ச்சி யிடமென மொழிப." (தொல்-பொ-செய்-199.)

என்னுஞ் செய்யுளியற் சூத்திரத்தான் இடமென்றதனைக் கருமநிகழ்ச்சி என்றுணர்க.

அஃதாவது இடந்தலைப்பாடும் பாங்கொடுதழாஅலுந் தோழியிற்புணர்வுமாம். இவற்றின் கண்ணும் நாணும் மடனும் நிகழுமென்றான். இனித் தோழியிற்புணர்வின்கண்வரும் நாணும் மடனுந் தந்தன்மை திரிந்துவருமென மேலிற் சூத்திரத்தாற் கூறுகின்றான். (கஎ)

109. காமஞ் சொல்லா நாட்ட மின்மையி
னேமுற விரண்டு முளவென மொழிப.

இது கருமநிகழ்ச்சிக்கண் வரும் நாணும் மடனுந் தந்தன்மை திரிந்துவருமென்கின்றது.

இதன்பொருள்: சொல்லாக் காமம் இன்மையின்—கருமநிகழ்ச்சியிடத்துக் கூற்று நிகழாத காமம் புலனெறி வழக்கின்கணின்மையின்; இரண்டும் ஏமுற நாட்டம் உள வெனமொழிப—முற்கூறிய நாணும் மடனுந் தந்தன்மை திரிந்தவாநாட்டுதல் உளவென்று கூறுவர் புலவர் என்றவாறு.

என்றது, தோழியிற் கூட்டத்துத் தலைவி கூற்று நிகழ்ந்துவளென்பதூஉம் நிகழுங்கால் நாணும் மடனும் பெரும்பான்மை கெட்டு அக்கூற்று நிகழுமென்பதூஉம், அங்ஙனங் கெடுதலையும் முந்துநூற்கண் ஆசிரியர் நாட்டுதல் உளவென்பதூஉங் கூறியவாறாயிற்று.

"தேரே முற் றன்று நின்னினும் பெரிதே*"
"பேரேமுற் றாய்போல முன்னின்று விலக்குவாய்"

என்றாற்போல மயக்கம் உணர்த்திற்று.

இனி நாணும் மடனுங் கெட்டகூற்றுத் தோழியை நோக்கிக் கூறுமென மேற்கூறுகின்றான். (கஅ)

110. சொல்லெதிர் மொழித லருமைத் தாகலி
னல்ல கூற்றுமொழி யவள்வயி னான.

இது நாணும் மடனும் பெரும்பான்மை நிகழாத கூற்றுத் தோழிக்குத் தலைவி கூறுமென்கின்றது.

இதன்பொருள்: எதிர் சொல்—அங்ஙனம் நாணும் மடனும் நீங்கிய சொல்லை; அவள் வயின் மொழிதல் அருமைத்து அல்ல ஆகலின்—தோழியிடத்துக்கூறுதல் அருமை

* கலித்தொகை 74-வது பாட்டின் கடையடி.

யுடைத்தல்லவாகையினலே; கூற்றுமொழி ஆன—குறிப்யானன்றிக் கூற்ருற் கூறும் மொழி தலைவிக்குப் பொருந்தின என்றவாறு.

எதிர்தல் தன்றன்மை மாறுபடுதல். 'ஒன்றிய தோழியொடு' (தொல்-பொ-அக-41) என அகத்திணையிற் கூறுதலானுந் 'தாயத்தினடையா' (தொல்-பொ-பொ-27) எனப் பொருளியலிற் கூறுதலானும் அவள் வயின் நாணும் மடனும் நீங்கிய சொல்லைக் கூறுதலும் பொருந்துமென்ருன்: அவை முற்காட்டிய உதாரணங்களுட் *"கூடுதல் வேட்கையாற் குறிபார்த்து" எனவும், "†வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு" எனவுங், "‡காமநெரிதரக் கைந்நில்லாதே" எனவுங் கூறிய வாற்ருனும் மேற்கூறுகின்ற உதாரணங்களானும் நாணும் மடனும் நீங்கிக் கூற்றுநிகழ்ந்தவாறுணர்க.

'சூத்திரத்துப்பொருளின்றியும் *** படுமே' (தொல்-பொ-மர-103) என்பதனுன் இவ்விலக்கணம் பெறுதற்கு இம்மூன்று சூத்திரத்திற்கும் மாட்டுறுப்புப்படப் பொருள் கூறினும்.

இனிக் கூற்று நிகழுங்கால் நாணும் மடனும் பெண்மையவாதலிற் குறிப்பினும் இடத்தினுமன்றி வேட்கை நெறிப்பட வாராவென்று பொருள்கூறிற் காட்டிய உதாரணங்கட்கு மாறுபாடாகலானுஞ் சான்ருேர்செய்யுட்களெல்லாங் குறிப்பும் இடனுமன்றிப் பெரும்பான்மை கூற்ருய்

---

* இசசெய்யுளை 419-ஆம் பக்கத்திற் காண்க.

† இச்செய்யுளை 423-ஆம் பக்கத்திற் காண்க.

‡ இச்செய்யுளை 426-ஆம் பக்கத்திற் காண்க.

வருதலானும் ஆசிரியர் தலைவன்கூற்றுந் தலைவிகூற்றுந் தோழிகூற்றுஞ் செவிலிகூற்றுமெனக் கூற்றுஞ் சேர்த்து நூல்செய்தலானும் அது பொருளன்மையுணர்க. (கக)

111. மறைந்தவற் காண்ட றற்காட் டுறுத
னிறைந்த காதலிற் சொல்லெதிர் மழுங்கல்
வழிபாடு மறுத்தன் மறுத்தெதிர் கோடல்
பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்
கைப்பட்டுக் கலங்கினு நாணுமிக வரினு
மிட்டுப்பிரிவிரங்கினு மருமைசெய்தயர்ப்பினும்
வந்தவழியெள்ளினும் விட்டுயிர்த்தழுங்கினு
நொந்துதெளி வொழிப்பினு மச்ச நீடினும்
பிரிந்தவழிக்கலங்கினும் பெற்றவழிமலியினும்
வருந்தொழிற் கருமை வாயில் கூறினுங்
கூறிய வாயில் கொள்ளாக் காலையு
மனைப்பட்டுக்கலங்கிச்சிதைந்தவழித்தோழிக்கு
நினைத்தல் சான்ற வருமறை யுயிர்த்தலு
முயிராக் காலத் துயிர்த்தலு முயிர்செல
வேற்றுவரைவு வரினது மாற்றுதற் கண்ணு
நெறிபடுநாட்டத்து நிகழ்ந்தவைமறைப்பினும்
பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கி
யொருமைக்கேண்மையினுறுகுறைதெளிந்தோ
ளருமை சான்ற நாலிரண்டு வகையிற்
பெருமை சான்ற வியல்பின் கண்ணும்
பொய்தலை யடுத்த மடலின் கண்ணுங்
கையறு தோழி கண்ணீர் துடைப்பினும்

வெறியாட் டிடத்து வெருவின் கண்ணுங்
குறியி னொப்புமை மருடற் கண்ணும்
வரைவுதலை வரினுங் களவறி வுறினுந்
தமர்தற் காத்த காரண மருங்கினுந்
தன்குறி தள்ளிய தெருளாக் காலை
வந்தனன் பெயர்ந்த வறுங்கள நோக்கித்
தன்பிழைப் பாகத் தழீஇத் தேறலும்
வழுவின்று நிலைஇய வியற்படுபொருளினும்
பொழுது மாறும் புரைவ தன்மையி
னழிவுதலை வந்த சிந்தைக் கண்ணுங்
காமஞ் சிறப்பினு மவனளி சிறப்பினு
மேமஞ் சான்ற வுவகைக் கண்ணுந்
தன்வயி னுரிமையு மவன்வயிற் பரத்தையு*
மன்னவு முளவே யோரிடத் தான.

இதனுள் தலைவிகூற்று நிகழ்த்துமாறு கூறுகின்றான் சில கூற்றுக்களுள் தன்வயின் உரிமையும் அவன்வயிற் *பரத்தையும்பட நிகழ்த்தவும் பெறுமென்கின்றான். 'அவன்வயின்' எனவே 'தன்'னென்றது தலைவியையாம்; உரிமை களவிலே கற்புக்கடம்பூண்டொழுகல்; எனவே, புலவியுள்ளத்தாளாகவும் பெறுங் களவினென்பது கருதிப் *பரத்தையுமுள என்றான்; ஊடலும் உணர்த்தலும் வெளிப்பட நிகழாமையின் இவை புலவிப்போலி. *பரத்தை, அயன்மை. அவன்கட் பரத்தைமையின்றேனுங் காதன்மிகுதியான் அங்ஙனங் கருதுதல் பெண்தன்மை. உம்மை எதிர்மறையாகலின் இவ்விரண்டும் இலவாதலே பெரும்பான்மை.

---

* 'பரத்தைமை' என்பது செய்யுள்நோக்கிப் 'பரத்தை' எனநின்றது.

இதன்பொருள்: மறைந்து அவற் காண்டல்—தலைவன் புணர்ந்து நீங்குங்கால் தன் காதன்மிகுதியால் அவன் மறையுந்துணையும் நோக்கிநின்று அங்ஙனம் மறைந்தவனைக் காண்டற்கண்ணுந் தோழிக்குக் கூற்றூற் கூறுதலுள:

உதாரணம்:

"கழிப்பூக் குற்றுங் கான லல்கியும்
வண்டற் பரவை வரிமண லயர்ந்து
மின்புறப் புணர்ந்து மிளிவரப் பணிந்துந்
தன்றுயர் வெளிப்பட லுறீஇ நந்துய
ரறியா மையி னயர்ந்த நெஞ்சமொடு
செல்லு மன்னோ மெல்லம் புலம்பன்
செல்வோன் பெயர்புறத் திரங்கி முன்னின்று
தகைஇய சென்றவெ னிறையி னெஞ்ச
மெய்தின்று கொல்லோ தானே யெய்தியுங்
காமஞ் செப்ப நாணின்று கொல்லோ
வுதுவ காண *வூர்ந்த தேரே
குப்பை வெண்மணற் குவவுமிசை யானு
மெக்கர்த் தாழை மடல்வயி னானு
மாய்கொடிப் பாசடும்பு பரியவூர் பிழிபு
சிறுகுடிப் பரதவர் பெருங்கடன் மடுத்த
கடுஞ்செலற் கொடுந்திமில் போல
நிவந்துபடு தோற்றமொ டிகந்துமா யும்மே." (அகம்-330.)

'அறியாமையின் அயர்ந்தநெஞ்சமொடு' என்பது தன்வயினுரிமை; 'இகந்துமாயும்' என்பது அவன்வயிற் பரத்தைமை.

---

* 'வருகுவ' என்பதும் பாடம்.

தற்காட்டுறுதல்—தன்னை அவன் காணுவகை நாணுன் மறைந்து ஒழுகினுந் தன்பொலிவழிவினை அவற்குக் காட்டல் வேண்டுதற்கண்ணும்: அது,

“இன்ன ளாயின ளன்னுத லென்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத் தலர்சில கொண்டே.” (குறுந்-98.)

‘இன்னளாயின’ளென்றது தற்காட்டுறுதல். ‘செப்புநர்ப் பெறினே’யென்பதனாற் களவாயிற்று, கற்பிற்கு வாயில்கள் செப்புவார் உளராதலின். இதற்கு இரண்டும் உள.

நிறைந்த காதலிற் சொல் எதிர் மழுங்கல்—தலைவி காதன் மிகுதியால் தலைவன் பரத்தைமையை எதிர்கூற நினைந்து கூற் றெய்தாது குறைபடுதற்கண்ணும்:

உதாரணம்:

“பிறைவனப் பிழந்த நுதலும் யாழநி
னிறைவரை நில்லா வளையு மறையா
தூரலர் தூற்றுங் கௌவையு நாணிட்
டுரையவற் குரையா மாயினு மிரைவேட்டுக்
கடுஞ்சூல் வயவொடு கானலெய் தாது
கழனி யொழிந்த கொடுவாய்ப் பேடைக்கு
முடமுதிர் நாரை கடன்மீ னெய்யு
மெல்லம் புலம்பற் கண்டுநிலை செல்லாக்
கரப்பவுங் காப்பவுங் கைம்மிக்
குரைத்த தோழி யுண்கணீரே.” (நற்றிணை-263.)

இஃது யாம் உரையாமாயினுங் கண் உரைத்தன என்றலின் இரண்டுங் கூறினாள்.

வழிபாடு மறுத்தல்—வருத்தமிகுதியால் தலைவனை வழிபடுதலை மறுத்துக் கூறுமிடத்தும்:

உதாரணம்:

"என்ன ராயினு மினிநினைவொழிக
வன்ன வாக *வுரையற் றோழியா
மின்ன மாசநத் துறந்தோர் நட்பெவன்
மரனா ருடுக்கை மலையுறை குறவ
ரறியா தறுத்த சிறியிலைச் சாந்தம்
வறனுற் றூர முருக்கிப் பையென
மரம்வறி தாகச் சோர்ந்துக் காங்கெ
னறிவு முள்ளமு மவர்வயிற் சென்றென
வறிதா விகுளையென் யாக்கை யினியவர்
வரினு நோய்மருந் தல்லர் வாரா
தவணா ராகுக காதல ரிவணங்
காமம் படரட வருந்திய
நோய்மலி வருத்தங் காணன்மா ரெமரே." (நற்றிணை-64.)

"உள்ளி னுள்ளம் வேமே யுள்ளா
திருப்பினெம் மளவைத் தன்றே வருத்தி
வான்றோய் வற்றே காமஞ்
சான்றோ ரல்லர்யா மரீஇ யோரே." (குறுந்-102.)

என வரும்.

"நீயுடம் படுதலின் யான்றர வந்து
குறிநின் றனனே குன்ற நாட
னின்றை யளவை சென்றைக் கென்றி
கையுங் காலு மோய்வன †வொழுகத்
தீயுறு தளிரி னடுங்கி
யாவது மில்லையான் செயற்குரி யதுவே." (குறுந்-383.)

* 'இனையல்' என்பதும் பாடம். † 'ஒடுங்கி' என்பதும் பாடம்.

இத்தோழிகூற்றே 'சென்றைக்க'வென்றதனால் தலைவி மறுத்தமை பெற்றாம்.

மறுத்து எதிர்கோடல்—அங்ஙனம் வழிபாடு மறுத்த தலைவியே அவனை ஏற்றுக்கோடலை விரும்பியக்கண்ணும்: அது,

"கௌவை யஞ்சிற் காம மெய்க்கு
மெள்ளற விடினே யுள்ளது நாணே
பெருங்களிறு வாங்க முறிந்து *நிலம்படர்
நாளுடை யொசிய லற்றே
கண்டிசிற் றோழியவ ருண்டவென் னலனே." (குறுந்-112.)

இது நாணேயுள்ளது கற்புப்போம் என்றலின் மறுத்தெதிர்கோடலாம்.

பழி தீர் முறுவல் சிறிதே தோற்றல்—தன்கற்பிற்கு வரும் பழி தீர்ந்ததன்மையால் தன்கண் தோன்றிய மகிழ்ச்சியைச் சிறிதே தோழிக்குத் தோற்றுவித்தற் கண்ணும்:

தலைவனால் தோன்றிய நோயும் பசலையும் முருகனால் தீர்ந்ததென்று அவன் கேட்பிற் கற்பிற்குப் பழியாமாதலிற் 'பழி'யென்றார்.

உதாரணம்:

" அணங்குடை நெடுவரை யுச்சியி னிழிதருங்
கணங்கொ ளருவிக் கான்கெழு நாடன்
மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்ல
லிதுவென வறியாண் மறுவரற் பொழுதிற்
படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை

* 'நிலம்படாஅ' என்பதும் பாடம்.

நெடுவேட் பேணத் தணிகுவ ளிவளென
முதுவாய்ப் பெண்டி ரதுவாய்க் கூறக்
களனன் கிழைத்துக் கண்ணி சூடி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்
துருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த வுருகெழு நடுநா
ளார நாற வருவிடர்த் ததைந்த
சாரற் பல்பூ வண்டுபடச் சூடிக்
களிற்றிரை தெரீஇய பார்வ லொதுக்கி
னொளித்தியங்கு மரபின் வயப்புலி போல
நன்மனை நெடுநகர்க் காவல ரறியாமைத்
தன்னசை யுள்ளத்து நன்னசை வாய்ப்ப
வின்னுயிர் குழைப்ப முயங்குதொறு மெய்ம்மலிந்து
நக்கனெ னல்லனோ யானே யெய்த்த
நோய்தணி காதலர் வரவீண்
டேதில் வேலற் குவந்தமை கண்டே." (அகம்-22.)

இதனுட் பழிதீர அவன் வந்து உயிர்தளிர்ப்ப முயங்கி நக்கநிலையைத் தோழிக்குத் தலைவி கூறியவாறு காண்க.

கைப்பட்டுக் கலங்கினும்—தலைவிகுறிப்பினன்றி எதிர்ப்பட்ட தலைவன் ஒருவழி அவளை அகப்படுத்தவழிக் காட்சி விருப்பினளாயினும் அப்பொழுது அவள்கலங்கினும்:

எனவே, காட்சி விருப்பினை மீதூர்ந்து கலக்கம் புலப்பட்டது தலைவன்வயிற் பரத்தைமைகருதி.

"கொடியவுங் கோட்டவு நீரின்றி நிறம்பெறப்
பொடியழற் புறந்தந்த பூவாப்பூம் பொலங்கோதைத்
தொடிசெறி யாப்பமை யரி" (கலி-54.)

என்னுங் குறிஞ்சிக்கலியுள் "அதனை லல்லல் களைந்தனன் றோழி" எனக் கைப்பட்டுக் கலங்கிய வருத்தத்தைக் களைந்

தனனெனத் தலைவியுரையெனத் தோழிக்கு உரைத்தற்கட் கூறியவாறு காண்க. இவ்வுதாரணம் ஆண்டுக்காட்டுதும்.

"உறுகழி மருங்கி னோதமொடு மலர்ந்த" (அகம்-230.)

என்னும் பாட்டுத் தலைவன் இதனைக் கூறியது.

நாணு மிக வரினும்—தலைவனை எதிர்ப்பட்ட தலைவி தன் பெருநாணுடைமை கூறித் தலைவனை ஏற்றுக்கொள்ளாது நிற்பினும்:

உதாரணம்:

"விளையா டாயமொடு வெண்மணை லழுத்தி
மறந்தனந் துறந்த காழ்முளை யகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப*
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்
றன்னை கூறினள் புன்னையது சிறப்பே
யம்ம நாணுது நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலு மிலங்குநீர்த்
துறைகெழு கொண்கநீ நல்கி
னிறைபடு நீழல் பிறவுமா ருளவே." (நற்றிணை-172.)

இதனுள் 'அம்ம நாணுதும்' எனப் புதிதுவந்ததோர் நாணுமிகுதி தோன்ற மறுத்துரைத்தலின் தன்வயி னுரிமையும் அவன்வயிற் பரத்தைமையுங் கூறினாள்.

இட்டுப் பிரிவு இரங்கினும்—சேணிடையின்றி இட்டிதாகப் பிரிந்துழித் தலைவி இரங்கினும்:

கற்பினுட் சொல்லாத பிரிதலையும் இட்டுப்பிரிவென்ப, களவுபோல நிகழ்பொருள் உணர்த்திப் பிரிதலருமையின்.

---

* 'வளர்த்தது' என்பதும் பாடம்.

உதாரணம்:

"யானே யீண்டை யேனே யென்னலனே
யானு நோயொடு கான லஃதே
துறைவன் றம்மூ ரானே
மறையல ராகி மன்றத் தஃதே." (குறுந்-97.)

'தம்மூரான்' என்றலின் ஓதன்முதலிய பிரிவின்றி அணித்தாயவழிப் பிரிந்தானென அவ்விரண்டும் பயப்பக் கூறியவாறு காண்க.

"சிறுவெண் காக்கைச் செவ்வாய்ப் பைந்தோ
டெறிதிரைத் திவலை யீர்ம்புற நனைப்பப்
பனிபுலந் துறையும் பல்பூங் கானல்
*விரிநீர்ச் சேர்ப்ப னீப்பி னொருநம்
மின்னுயி ரல்லது பிறிதொன்
றெவனோ தோழி நாமிழப் பதுவே." (குறுந்-334.)

இதுவும் அது.

இவை களவினுட் புலவிப்பொலியாம்.

அருமை செய்து அயர்ப்பினும்—முற்கூறிய இட்டுப் பிரிவேயன்றித் தலைவன் தன்னை அரியனாகச் செய்துகொண்டு தம்மை மறப்பினும்:

அது தண்டாதிரத்தலை (தொல்-பொ-கள-11) முனிந்த மற்றையவழித் தலைவன் தானும் அரியனாய் மறந்தான் போன்று காட்டினும் அவ்விரண்டுங் கூறுதலாம்.

உதாரணம்:

"தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்
தாமறிந் துணர்க வென்ப மாதோ

* 'பெருநீர்' என்பதும் பாடம்.

வழுவப் பிண்ட நாப்ப ணேமுற்
றிருவெதி ரீன்ற வேற்றலைக் கொழுமுளை
சூன்முதிர் மடப்பிடி நாண்மேய லாரு
மலைகெழு நாடன் கேண்மை பலவின்
மாச்சினை துறந்த கோண்முதிர் பெரும்பழம்
விடரளை வீழ்ந்துக் காங்குத் தொடர்பறச்
சேணுஞ் சென்றுக் கன்றே யறியா
*தேக லடுக்கத் திருண்முகை யிருந்த
குறிஞ்சி நல்லூர்ப் பெண்டி
ரின்னு மோவா ரென்றிறத் தலரே." (நற்றிணை-116.)

தீங்குசெய்தாரையும் பொறுக்கிற்பார் நம்மைத் துறத்தலின் நாம் அரியேமாகியது பற்றித் தாமும் அரியராயினர் போலுமென அவ்விரண்டுங் கூறினாள்.

"நெய்தற் படுவி னிறைகழித் தண்சேர்ப்பன்
கைதைசூழ் கானலிற் கண்டநாட் போலானாற்
செய்த குறியும்பொய் யாயினவாற் சேயிழா
யையகொ லான்றார் தொடர்பு."

இதுவும் அது.

வந்தவழி எள்ளினும்—பெரிதாகிய இடையீட்டினுள் அரிதாகத் தலைவன் வந்தஞான்றும் பெறாதஞான்றைத் துன்பமிகுதியாற் பெற்றதனையுங் கனவுபோன்றுகொண்டு இகழ்ந்திருப்பினும்:

உதாரணம்:

"மானடி யன்ன கவட்டிலை யடம்பின்
றார்மணி யன்ன வொண்பூக் கொழுதி
யொண்டொடி மகளிர் வண்ட லயரும்

* 'ஏன லடுக்கத்து' என்பதும் பாடம்.

புள்ளிமிழ் பெருங்கடற் சேர்ப்பனை
யுள்ளேன் றோழி படீஇயரென் கண்ணே." (குறுந்-243.)

"வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்." (குறள்-கண்விதுப்-9.)

"இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு." (குறள்-பிரிவாற்-2.)

'வரிற்றுஞ்சா' வெனவும் 'புன்கணுடைத்து' எனவும் வரவும் பிரிவும் அஞ்சி இரண்டும் நிகழக்கூறினாள். இது முன்னிலைப் புறமொழி.

"கண்டிரண் முத்தம் பயக்கு மிருமுந்நீர்ப்
பண்டங்கொ ணவாய் வழங்குந் துறைவனை
முண்டகக் கானலுட் கண்டே னெனத்தெளிந்தே
னின்ற வுணர்விலா தேன்."

இது முன்பு இன்பந் தருவனென உணர்ந்துநின்ற உணர்வு ஈண்டில்லாத யான் புணர்ச்சி வருத்தந்தருமென்று தெளிந்தே னென்றாளென்க.

விட்டு உயிர்த்து அழுங்கினும்—கரந்த மறையினைத் தலைவி தமர்க்கு உரைத்தற்குத் தோழிக்கு வாய்விட்டுக்கூறி அக்கூறியதனையே தமர்கேட்பக் கூறாது தவிரினும்:

உயிர்த்தல், கூறுதல்.

உதாரணம்:

"வலந்த வள்ளி மாணாங்கு சாரற்
கிளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப்
பொன்னேர் புதுமலர் வேண்டி மகளி
ரின்னா விசைய பூசல் பயிற்றலி
னேக லடுக்கத் திருளளைச் சிலம்பி

ஞெகொள் வயப்புலி யாகுமஃ தெனத்த
*மலைகெழு சீறூர் சிலம்பக் கல்லெனச்
சிலையுடை யிடத்தர் பெயர்தரு நாட
னெஞ்சா வியன்மார் புடைத்தென வன்னைக்
கறிவிப் பேங்கொ லறிவியேங் கொல்லென
விருபாற் பட்ட சூழ்ச்சி யொருபாற்
சேர்ந்தன்று வாழி தோழி யாக்கை
யின்னுயிர் கழிவ தாயினு நின்மக
ளாய்மல ருண்கட் பசலை
காம நோயெனச் செப்பா தீமே." (அகம்-52.)

இது சிறைப்புறம்.

நொந்து தெளிவு ஒழிப்பினும்—வரைவு நீட்டித்துத் தலைவன் சூளுற்றவழி அதற்கு நொந்து தெளிவிடை விலங்கினும்:

உதாரணம்:

"மன்றத் துறுகற் கருங்கண் முசுவுகளுங்
குன்றக நாடன் றெளித்த தெளிவினை
நன்றென்று தேறித் தெளிந்தேன் றலையளி
*யொன்றுமற் றென்று மனைத்து." (ஐந்திணை, 70-9.)

என வரும்.

"எம்மணங்கினவே" (குறுந்தொகை-53) என்பது தலைவிகூறக் கேட்டுத் தோழி கூறியது. அதுவும் இதனாற் கொள்க.

அச்சம் நீடினும்—தெய்வம் அச்சூளுறவிற்கு அவனை வருத்துமென்றுந் தந்தை தன்னையர் அறிகின்றாரோ வென்

---

* 'என்று மற்றென்று மனைத்து' என்பதும் பாடம்.

றுங் கூட்டமுண்மை உணர்ந்த தோழிக்கும் உண்மை கூறு தற்கும் அஞ்சிய அச்சம் நீட்டிப்பினும்:

உதாரணம்:

"மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉ மென்ப யாவதுங்
கொடிய ரல்லரெங் குன்றுகெழு நாடர்
பசைஇப் பசந்தன்று நுதலே
*ஞெகிழி ஞெகிழ்ந்தன்று தடமென் றோளே." (குறுந்-87.)

"மென்றினை மேய்ந்த †சிறுகட் பன்றி
வன்க லடுக்கத்துத் துஞ்சு நாட
னெந்தை யறித லஞ்சிக்கொ
‡ லதுவே தெய்ய வாரா மையே." (ஐங்குறு-261.)

"புனையிழை நோக்கியும் புனலாடப் புறஞ்சூழ்ந்து
மணிவரி தைஇயுநம் மில்வந்து வணங்கியு
நினையுபு வருந்துமிந் நெடுந்தகை திறத்திவ்வூ
ரினையளென் றெடுத்தோதற் கனையையோ நீயென
வினவுதி யாயின் விளங்கிழாய் கேளினி;
செவ்விரல் சிவப்பூரச் சேட்சென்ற யென்றவன்
பௌவநீர்ச் சாய்க்கொழுதிப் பாவைதந் தினைத்தற்கோ
கௌவைநோ யுற்றவர் காணாது கடுத்தசொல்
லொவ்வாவென் றுணராய்நீ யொருநிலையே யுரைத்ததை;
ஒடுங்கியாம் புகலொல்லேம் பெயர்தர வவன்கண்டு
நெடுங்கய மலர்வாங்கி நெறித்துத்தந் தினைத்தற்கோ
விடுத்தவர் விரகின்றி யெடுத்தசொற் பொய்யாகக்
கடிந்தது மிலையாய்நீ கழறிய வந்ததை;

---

* 'ஞெகிழ' என்பதும் பாடம்.

† 'தறுகட்பன்றி' என்பதும் பாடம்.

‡ 'அதுவேமன்ற' என்பதும் பாடம்.

வரிதேற்ருய் நீயென வணங்கிறை யவன்பற்றித்
தெரிவேய்த்தோட் கரும்பெழுதித் தொய்யில்செய் தனைத் [தற்கோ
புரியுநம் மாயத்தார் பொய்யாக வெடுத்தசொ
லுரி*தென வுணராய்நீ யுலமந்தாய் போன்றதை;
எனவாங்கு, அரிதினி யாயிழா யதுதேற்றல் புரிபொருங்
கன்றுநம் வதுவையு ணமர்செய்வ தின்றீங்கே
தானயந் திருந்ததிவ் வூராயி னெவன்கொலோ
நாஞ்செயற் பால தினி.''† (கலி-76.)

என வரும்.

பிரிந்தவழிக் கலங்கினும்—களவு அலராகாமல் யான் பிரிந்துழித் தலைவி கலங்குவளென்று அஞ்சித் தலைவன் பிரியாது உறைதலிற் பிரிவைக் கருதப்பெருத தலைவி அவ்வாறன்றிப் பிரிந்துழிக் கலங்கினும்:

உதாரணம்:

"மின்னுச்செய் கருவிய பெயன்மழை தூங்க
விசும்பா டன்னம் பறைநிவந் தாங்குப்
பொலம்படைப் பொலிந்த வெண்டே ரேறிக்
கலங்குகடற் றிவலை யாழி நனைப்ப
வினிச்சென் றனனே யிடுமணற் சேர்ப்பன்
யாங்கறிந் தன்றுகொ ரேழியென்
றேங்கமழ் திருநுத லூர்தரும் பசப்பே.'' (குறுந்-205.)

---

* 'இச்செய்யுளுரையில் நச்சினர்க்கினியர்'உரித்து-விகாரம்' என்றெழுதி யிருத்தலால், எதுகையின்பம் நோக்கி 'உரிது' என்பதே பழைய பாடமென்று கொள்ளல்வேண்டும்.

† ''இஃது 'அச்சநீடினும்' என்றதனுற் கூட்டமுண்மை உணர்ந்த தோழிக்கு உண்மை கூறுதற்கு அஞ்சிய அச்சம் நீட்டித்துத் தலைவி கூறியது.''—கலித்தொகை நச்சினர்க்கினியர் உரை.

"குறுகிலைக் குரவின் சிறுநனை நறுவீ
வண்டுதரு நாற்றம் வளிகலந் தீயக்
கண்களி பெறூஉங் கவின்பெறு காலை
யெல்வளை ஞெகிழ்த்தோர்க் கல்ல லுறீஇயர்
சென்ற நெஞ்சஞ் செய்வினைக் குசாவா
யொருங்குவர னசையொடு வருந்துங் கொல்லோ
வருளா னாதலி னழிந்திவண் வந்து
தொன்னல னிழந்தவென் பொன்னிற நோக்கி
யேதி லாட்டி யிவளெனப்
போயின்றுகொல்லோநோய்தலை மணந்தே." (நற்றிணை-56.)

"வருவது கொல்லோ தானே வாரா
தவணுறை மேவலி னமைவது கொல்லோ
புனவர் கொள்ளியிற் *கலவ மஞ்ஞை
யிருவி யிருந்த †குருவி வெருவுறப்
பந்தாடு மகளிரிற் படர்தருங்
குன்றுகெழு நாடனொடு சென்றவென் னெஞ்சே."
(ஐங்குறு-295.)

"பொரிப்புறப் பல்லிச் சினையீன்ற புன்னை
வரிப்புற வார்மணன்மே லேறித்—தெரிப்புறத்
தாழ்கடற் றண்சேர்ப்பன் றூரகல நல்குமே
லாழியாற் காணுமோ யாம்." (ஐந்திணை, 50-43.)

என வரும்.

பெற்றவழி மலியினும்—தலைவி இடையீடின்றித் தலைவனை எதிர்ப்படப் பெற்றஞான்று புதுவது மலியினும்:

வரைவு நீட்டித்த காலத்துப் பெற்றவழிமலிவை வெளிப்படக் கூறுதலும், வரைவு நீட்டியாதவழிப் பெற்றவழிமலிவை வெளிப்படுத்தாமையும் உணர்க.

---

* 'புகல்வரு மஞ்ஞை' என்பதும் பாடம்.

† 'குருவி வருந்துற' 'குருவி வருத்துற' என்பவும் பாடம்.

உதாரணம்:

" இன்னிசை யுருமொடு கனைதுளி தலைஇ
மன்னுயிர் மடிந்த பானாட் கங்குற்
* காடுதொடு வட்டத்து விளிவிடம் பெறாஅது
வரியதட் படுத்த சேக்கைத் தெரியிழைத்
தேனாறு கதுப்பிற் கொடிச்சியர் தந்தை
கூதிரிற் செறியுங் குன்ற நாட
வனைந்துவா விளமுலை ஞெமுங்கப் † புல்லூஉ
விளங்குதொடி முன்கை வளைந்துபுறஞ் சுற்ற
நின்மார் படைதலி னினிதா கின்றே
நும்மில் ‡புலம்பா னுள்ளுதொறு நலியுந்
தண்வர லசைஇய பண்பில் வாடை
பதம்பெறு கல்லா திடம்பார்த்து நீடிய
மலைமர மொசிய வொற்றிப்
பலர்மடி கங்கு னெடும்புற நிலையே." (அகம்-58.)

முயக்கம் இனிதெனை மகிழ்ந்து கூறுவாள் நும்மில் புலம்பால் வாடைக்கு வருந்தினே மென்றலின் இரண்டுங் கூறினாள்.

" அம்ம வாழி தோழி நலமிக
நல்ல வாயின வளியமென் §றோள்கண்
மல்ல விருங்கழி $ மலரும்
மெல்லம் புலம்பன் வந்த மாறே." (ஐங்குறு-120.)

---

* 'காடுதேர் வேட்டத்து' என்பதும் பாடம்.
† 'பல்லூழ்' என்பதும் பாடம்.
‡ 'புலம்பினு முள்ளுதொறு' என்பதும் பாடம்.
§ 'தோளே' என்பதும் பாடம்.
$ 'நீரறல் விரியும்' எனவும் 'மல்கும்' எனவும் பாடமுண்டு.

"அம்ம வாழி தோழி பன்மா
ஞுண்மண லடைகரை நம்மோ டாடிய
தண்ணந் துறைவன் *மரீஇ
யன்னை யருங்கடி வந்துநின் றோனே." (ஐங்குறு-115.)

என வரும்.

இவை தோழிக்குக் கூறியன. 'பெற்றவழி மலியினும்' எனப் பெறுபொருள் இன்னதெனவும் இன்னார்க்குக் கூறுவதெனவும் வரையாது கூறவே பிறர் பெற்று மலிந்து பிறர்க்குக் கூறுவனவுங் கொள்க.

"†அம்ம வாழி தோழி யன்னைக்
குயர்நிலை யுலகமுஞ் சிறிதா லவர்மலை
மாலைப் பெய்த மணங்கம ழுந்தி
யோர்குலை நிவந்த முழுமுதற் காந்தண்
மெல்லிலை குழைய முயங்கலு
மில்லுய்த்து நடுதலுங் கடியா தோட்கே." (குறுந்-361.)

இது பெற்றவழி மகிழ்ந்து தோழிக்கு உரைத்தது. இதற்கும் இரண்டுங் கூறினாள்.

வரும் தொழிற்கு அருமை வாயில் கூறினும்—தலைவன் இடைவிடாது வருதற்கு ஆண்டு நிகழும் ஏதம் பலவாற்றானும் உளதாம் அருமையை வாயிலாகிய தோழி கூறினுந் தலைவிக்குக் கூற்று நிகழ்தலுள :

---

* 'மறைஇ' என்பதும் பாடம்.

† இச்செய்யுளில் 'உந்தியொடு' எனவும் 'காலை வந்த முழுமுதற் காந்தள்' எனவும், 'இல்லுய்த்து நடுங்கலும்' எனவும் வேறுபாடங்கள் உண்டு.

அது,

"நள்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்
தினிதடங் கினரே மாக்கண் முனிவின்று
நனந்தலை யுலகமுந் துஞ்சு
*மோர்யான் மன்ற துஞ்சா தேனே." (குறுந்-6.)

இதனுட் பொழுது சென்றதில்லையென்றும் மாக்கள் இன்னுந் துயின்றிலரென்றும் அருமையை வாயில் கூறிய வழித் தலைவி யாமமும் நள்ளென்றும் மாக்களுந் துயின்றும் வந்திலரென வருந்திக் கூறியவாறு காண்க.

நாம் ஏவிய தொழில் ஏற்றுக்கொண்டு வருகின்றவன் ஓர் காரணத்தானன்றி வாராதொழியுமோ வென்று தலைவி கொள்ளுமாறு கூறுமென்றற்குத் தொழிலென்றார்.

கூறிய வாயில் கொள்ளாக் காலையும்—தலைவற்குக் குறை நேர்ந்து வாயிலாகிக் குறைநயப்பக் கூறியவழியும் பிறவழி யுந் தோழிகூற்றினைத் தலைவி ஏற்றுக் கொள்ளாத காலத்துக் கண்ணும். வாயில், தோழி.

உதாரணம்:

"தெருவின்கட், காரண மின்றிக் கலங்குவார்க் கண்டுநீ
வாரண வாசிப் பதம்பெயர்த லேதில
நீநின்மேற் கொள்வ தெவன்."† (கலி-60.)

---

* 'ஓஒயான்' என்பதும் பாடம்.

† "பிறர் வருத்தம் தம்வருத்தமாகக்கொண்டு ஒழுகுவதனை வாரணவாசி யென்னும் ஊரிலுள்ளார் பதமென்றாள். இது 'கூறியவாயில் கொள்ளாக்காலைத்' தலைவி கூறியது"—கலித்தொகை, நச்சினார்க்கினியர் உரை.

எனத் தோழிகூற்றினை மறுத்தது.

“ *தோளே தொடிநெகிழ்ந் தனவே கண்ணே
வாளீர் வடியின் வடிவிழந் தனவே
நுதலும் பசலை பாயின்று திதலைச்
சில்பொறி யணிந்த பல்கா ழல்குன்
மணியே ரைம்பான் மாயோட் கென்று
வெவ்வாய்ப் பெண்டிர் சவ்வை தூற்ற
நாமுறு துயரஞ் செய்யல ரென்னுங்
காமுறு தோழி காதலங் கிளவி
யிரும்புசெய் கொல்லன் வெவ்வுலைத் தெளிந்த
தோய்மடற் சின்னீர் போல
நோய்மலி நெஞ்சிற் கேமமாஞ் சிறிதே.” (நற்றிணை, 133.)

இது தோழிகூற்றினை நன்குமதியாது கூறினள்.

மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும்—காப்பு மிகுதிக் கண் மனையகப்பட்டுக் கலங்கி உணர்வு அழிந்தவழித் தலைவி ஆராய்ச்சியுடைத்தாகிய அருமறையினைத் தோழிக்குக் கூறுதலும் உள.

உதாரணம்:

“ கேளா யெல்ல தோழி யல்கல்
வேணவா நலிய வெய்ய வுயிரா
வேமான் பிணையின் வருந்தினெ னாகத்
துயர்மருங் கறிந்தனள் போல வன்னை
துஞ்சா யோவென் குறுமக ளென்றலிற்
சொல்வெளிப் படாமை மெல்லவெ னெஞ்சிற்
படுமழை பொழிந்த பாறை மருங்கிற்

* ‘தோளே தொடிகொட் பான’ என்பதும் பாடம்.

சிரல்வா யுற்ற தளவிற் பரலவற்
கான்கெழு நாடற் படர்ந்தோர்க்குக்
கண்ணும் படுமோ வென்றிசின் யானே." (நற்றிணை-61.)

இதனுள் துஞ்சாயோவெனத் தாய் கூறியவழி மனைப் பட்டுக் கலங்கியவாறும் படர்ந்தோர்க்கென மறையுயிர்த்த வாறுங் கண்படாக் கொடுமை செய்தானெனப் பரத்தைமை கூறியவாறுங் காண்க.

"பொழுது மெல்லின்று பெயலு மோவாது
கழுதுகண் பனிப்ப வீசு மதன்றலைப்
புலிப்பற் றாலிப் புதல்வர்ப் புல்லி
யன்ன யென்னு மன்னையு மன்னோ
வென்மலைந் தனன்கொ றானே தன்மலை
யார நாறு மார்பினன்
மாரி யானையின் வந்துநின் றனனே." (குறுந்-161.)

"பலவின் பழம்பெற்ற பைங்கட் கடுவ
னிலவென் றினையயிரு மெக்கல்சூழ் வெற்பன்
புலவுங்கொ றோழி புணர்வறிந் தன்னை
செலவுங் கடிந்தாள் புனத்து."

இவையும் அது. இன்னும் 'மனைப்பட்டுக் கலங்கி'யென் றதனாற் காப்புச்சிறைமிக்க கையறுகிளவிகளுங் கொள்க.

"சிறுவெள்ளாங் குருகே சிறுவெள்ளாங் குருகே
துறைபோ கறுவைத் தூமடி யன்ன
நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே
யெம்மூர் வந்தெ மொண்டுறைத் துழைஇச்
சினைக்கெளிற் றார்கையை யவரூர்ப் பெயர்தி
யனையவன் பினையோ பெருமற வியையோ
வாங்கட் டீம்புன லீங்கட் பரக்குங்

கழனி நல்லூர் மகிழ்நர்க்கென்
னிழைநெகிழ் பருவரல் செப்பா தோயே." (நற்றிணை-70.

" கூர்வாய்ச் சிறுகுருகே குண்டுநீ ருட்கிடந்த
வார லிரைகருதி வித்தலு விற்றியா
னேரிணர்ப் புன்னைக்கீழ்க் கொண்கன் வருமெனப்
பேருண்க ணீர்மல்க வின்றுண்மற் றென்னையோ."

" ஒண்டுவி நாராய்வின் சேவலு நீயுமாய்
வண்டுது பூங்கானல் வைகலுஞ் சேறிராற்
பெண்டுது வந்தே மெனவுரைத்துக் காதலரைக்
கண்டீர் கழறியக்காற் கானல் கடிபவோ."

இவை காப்புச்சிறைமிக்க கையறுகிளவி.

உயிராக் காலத்து உயிர்த்தலும்—தலைவனோடு தன்றிறத்து ஒருவரும் ஒன்று உரையாதவழித் தனதாற்றாமையால் தன்னோடும் அவனோடும் பட்டன சிலமாற்றந் தலைவி தானே கூறுதலும் உள:

தோழி மறைவெளிப்படுத்துக் கோடற்கு வாளாது இருந்துழித் தலைவன் தன்மேல் தவறிழைத்தவழி இரண்டும்படக் கேட்போரின்றியுங் கூறுதலாம்.

உதாரணம்:

" உறைபதி யன்றித் துறைகெழு சிறுகுடிக்
கானலஞ் சேர்ப்பன் கொடுமை யேற்றி
யானுத் துயரமொடு வருந்திப் பானாட்
டுஞ்சா துறைநரொ டுசாவாத்
துயிற்கண் மாக்களொடு நெட்டிரா வுடைத்தே."

(குறுந்-145.)

"தழையணி யாடை தாங்கல் செல்லா
நுழைசிறு நுசுப்பிற் கெவ்வ மாக
வம்மெல் லாக நிறைய வீங்கிக்
கொம்மை வரிமுலை செப்புட னெதிரின
யாங்கா குவள்கொல் பூங்குழை யென்னு
மவல நெஞ்சமோ டுசாவாக்
கவலை மாக்கட்டிப் பேதை யூரே." (குறுந்-159.)

என வரும்.

உயிராதாள் தோழியாயினுள்; அவள் தலைவிகூறுவன கேட்டற்குப் பொய்த்துயில்கொள்ளும்.

உயிர்த்தலுமெனப் பொதுப்படக் கூறியவதனுல் தோழிக்குக் கூறுவனவுங் கொள்க.

"பேணுப பேணுர் பெரியோ ரென்பது
நாணுத்தக் கன்றது காணுங் காலை
யுயிரோ ரன்ன செயிர்தீர் நட்பி
னினக்கியான் மறைத்தல் யாவது மிகப்பெரி
தழிதக் கன்றாற் றானே கொண்கன்
யான்யா யஞ்சுவ லெனினுந் தானே
பிரிதல் சூழான் மன்னே யினியே
கான லாய மறியினு மானு
தலர்வ தன்றுகொ லென்னு மதனுற்
புலர்வது கொல்லவன் நட்பெனு
வஞ்சுவ ரேழியென் னெஞ்சத் தானே." (நற்றிணை-72.)

என வரும்.

உயிர்செல வேற்று வரைவு வரின் அது மாற்றுதற்கண்ணும்—இறந்துபாடு பயக்குமாற்றுல் தன்றிறத்து நொதுமலர் வரையக் கருதியஞான்று அதனை மாற்றுதற்கண்ணும்:

உதாரணம்:

“ அன்னை வாழிவேண் டன்னை புன்னைப்
பொன்னிறம் விரியும் பூக்கெழு துறைவனை
யென்னை யென்றும் யாமே யிவ்வூர்
பிறிதொன் றாகக் கூறு
மாங்கு மாக்குமோ வாழிய பாலே.” (ஐங்குறு-110.)

“ பலவிற் சேர்ந்த பழமா ரினக்கலை
சிலவிற் கானவன் செந்தொடை வெரீஇச்
செருவுறு குதிரையிற் பொங்கிச் சார
லிருவெதிர் நீடமை தயங்கப் பாயும்
பெருவரை யடுக்கத்துக் கிழவோ னென்று
மன்றை யன்ன நட்பினன்
புதுவோர்த் தம்மவிவ் *வழுங்க லூரே.” (குறுந்-385.)

என வரும்.

நெறிபடு நாட்டத்து நிகழ்ந்தவை மறைப்பினும்—தோழி கூட்டமுண்மை வழக்கியலால் நாடுகின்ற காலத்துக் கண் சிவப்பும் நுதல்வேறுபாடும் முதலிய மெய்வேறுபாடு நிகழ்ந்துழி அவற்றைத் தோழி அறியாமலுஞ் செவிலி அறியாமலுந் தலைவி தான் மறைப்பினும்:

உதாரணம்:

“ கண்ணுந் தோளுந் தண்ணறுங் கதுப்பு
மொண்டொடி மகளிர் தண்டழை யல்குலுங்
காண்டொறுங் கவினை யென்றி யதுமற்
றீண்டு மறந்தனையாற் பெரிதே வேண்டாய்
நீயெவன் மயங்கினை தோழி
யாயினுஞ் சிறந்தன்று நோய்பெரி துழந்தே.”

* ‘பழங்கேளூரே’ என்பதும் பாடம்.

காதன் மிகுதியாற் கவினையெனற் பாலாய் வேறுபட்டனையென்று எற்றுக்கு மயங்கினையெனத் தலைவி தன்வருத்தம் மறைத்தாள்.

"துறைவன் றுறந்தெனத் துறையிருந் தழுதவென்
மம்மர் வாண்முக நோக்கி யன்னைநி
னவல முரையென் றனளே கடலென்
பஞ்சாய்ப் பாவை கொண்டு
வண்டலஞ் சிறுமனை சிதைத்ததென் றேனே."

இது செவிலிக்கு மறைத்தது.

ஒருமைக் கேண்மையின் உறுகுறை தெளிந்தோள்—தான் அவளென்னும் வேற்றுமை யில்லாத நட்பினாலே தோழி தனக்கு வந்துகூறிய குறையை; பொறியின்யாத்த புணர்ச்சி நோக்கித் தெளிந்தோள்—முன்னர்த் தெய்வப் புணர்ச்சி நிகழ்ந்தமை நோக்கி அதுகாரணத்தான் முடிப்பதாகத் தெளிந்த தலைவி; அருமை சான்ற நால் இரண்டுவகையில்—தான் முன் அருமை அமைந்துநின்ற நிலையால் தலைவன் தன்கண்நிகழ்த்திய *மெய்தொட்டுப்பயிறன் முதலிய எட்டினாலே; பெருமைசான்ற இயல்பின்கண்ணும்—தனக்கு உளதாம் பெருமை கூறுதற்கு அமைந்ததோர் இயல்பின் கண்ணும் ;†

---

* 'மெய்தொட்டுப் பயிறன்' முதலிய எட்டினை இவ்வியல் 11-ஆம் சூத்திரத்திற் காண்க.

† சூத்திரத்தின் இப்பகுதியை 'மின்னொளி ரவிரறல்' என்னும் குறிஞ்சிக்கலியின் உரையில் எடுத்துக்காட்டி இவ்வாறே பொருளும் கூறுகின்றார் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

என்றது, தலைவன் இத்துணை இளிவந்தன செய்யவும் யான் நாணும் மடனும் நீங்கிற்றிலேனென்று தன்பெருமை தோழிக்குக் கூறுதலாம்.

உதாரணம்:

"மின்னொளி ரவிரற லிடைபோழும் பெயலேபோற்
பொன்னகைத் தைவகிர் வகைநெறி வயங்கிட்டுப்
பொழிலிடை யிட்ட கமழ்நறும் பூங்கோதை
யின்னகை யிலங்கெயிற்றுத் தேமொழித் துவர்ச்செவ்வாய்
நன்னுதா னினக்கொன்று *நவிலுவாங் கேளினி;
நில்லென நிறுத்தா னிறுத்தே வந்து
நுதலு முகனுந் தோளுங் கண்ணு
மியலுஞ் சொல்லு நோக்குபு நினைஇ
யைதேய்ந் தன்று பிறையு மன்று
மைதீர்ந் தன்று மதியு மன்று
வேயமன் றன்று மலையு மன்று
பூவமன் றன்று சுனையு மன்று
மெல்ல வியலு மயிலு மன்று
சொல்லத் தளருங் கிளியு மன்று;
எனவாங்,
கனையன பலபா ராட்டிப் பையென
வலையர் போலச் சோர்பத னொற்றியென்
னெஞ்சு நெகிழ்ந்த செவ்வி காணூஉப்
புலையர் போலப் புன்க ணோக்கித்
தொழலுந் தொழுதான் றொடலுந் தொட்டான்
காழ்வரை நில்லாக் கடுங்களி றன்னோன்
றொழூஉந் தொடூஉமவன் றன்மை
யேழைத் தன்மையோ வில்லை தோழி." (கலி-55.)

---

* 'கூறுவாம்' என்பதும் பாடம்.

இதனுட்'பாராட்டி'யெனப்பொய்பாராட்டலுஞ்,'சோர்பதனொற்றி'யென நெஞ்சு நெகிழ்ந்த செவ்வி கூறுதலிற் கூடுதலுறுதலும், 'புலையர்போல நோக்கி'யென நீடு நினைந்திரங்கலும், 'தொழலுந் தொழுதா'னென இடம்பெற்றுத் தழாஅலுந், 'தொடலுந் தொட்டா'னென மெய்தொட்டுப் பயிறலும், அவனிகழ்த்தியவாறுங் கூறி, மதத்தாற் பரிக்கோலெல்லையில் நில்லாத களிறுபோல வேட்கை மிகுதியான் அறிவினெல்லையில் நில்லாதவனெனத் தீராத்தேற்றமும் ஒருவாற்றாற் கூறித், தனக்குப் பெருமைசான்ற இயல்பைப் பின்னொருகால் தோழிக்குக் கூறியவாறு காண்க.

இனித் தலைவற்குப் பெருமை அமைந்தன எட்டுக்குணமென்று கூறி, அவற்றை

"இளமையும் வனப்பு மில்லொடு வரவும்
வளமையுந் தறுகணும் வரம்பில் கல்வியுந்
தேசத் தமைதியும் மாசில் சூழ்ச்சியும்"

எனப் பொருள் கூறின், 'அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்' (தொல்-பொ-புறத்-20) என்னுஞ் சூத்திரத்திற் கூறியஎண்கள் அவைகூறிய வடநூல்களில் வேறே எண்ணுதற்கு உரியன சில இல்லாமல் எண்ணினாற்போல ஈண்டும் இளமைமுதலிய எட்டும் ஒழிய வேறெண்ணுதற்கு உரியன எட்டுத் தலைவற்கின்றாகக் கூறல்வேண்டும்; ஈண்டு அவ்வாறின்றித் தலைவற்கு உரியனவாகப் பலவகைகளான் எவ்வெட்டுளவாகக் கூறக் கிடந்தமையின் அங்ஙனம் ஆசிரியர் இலக்கணங்கூறாரென மறுக்க. அன்றியும் எட்டும் எடுத்து ஓதுபவென்றும் உதாரணமின்றென்றும் மறுக்க.

இனி *முட்டுவயிற்கழறன், முனிவு மெய்ந்நிறுத்தல், அச்சத்தினகறல், அவன் புணர்வுமறுத்தல், தூது முனிவின்மை, துஞ்சிச்சேர்தல், காதல்கைம்மிகல், கட்டுரையின்மை என்பன எட்டுமென்று அவற்றை ஈண்டுக்கொணர்ந்து பொருள் கூறிற் கூற்றுக் கூறுகின்றவிடத்து மெய்ப்பாடு கூறின் ஏனைமெய்ப்பாடுகளுங் கூற்றுக் கூறுகின்றவிடத்தே கொணர்ந்து கூற்றினுள் அடங்கக் கூறல்வேண்டுமென்று மறுக்க.

பொய்தலை அடுத்த மடலின்கண்ணும்—பொய்யினைத் தலைக்கீடாகவுடைய மடலின்கண்ணும்:

அது மடன்மா கூறியவழி அம்மடலினை மெய்யெனக் கொண்டாள் அதனைப் பொய்யெனக் கோடலாம்.

உதாரணம்:

"வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே
யவையினும் பலவே சிறுகருங் காக்கை
யவையினு மவையினும் பலவே குவிமட
லோங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த
தூங்கணங் குரீஇக் கூட்டுள சினையே.†

---

* "1 முட்டுவயிற் கழறன் 2முனிவுமெய்ந் நிறுத்த
3லச்சத்தி னகற 4லவன்புணர்வு மறுத்தல்
5தூ துமுனி வின்மை 6துஞ்சிச் சேர்தல்
7காதல் கைம்மிகல் 8கட்டுரை யின்மையென்
றாயிரு நான்கே யழிவில் கூட்டம்."—தொல்-பொ-மெய்ப்-23.

† இச்செய்யுளை அருளாலரிதென விலக்கலுக் குதாரணமாகக் காட்டினர் ஆசிரியர்-நக்கீரனர்; இறையனரகப்பொருள் 9-வது சூத்திரவுரையிற் காண்க.

"பெடையொடொண் சேவலு முட்டையும் கட்டழித்து-மடனும் புனைதரின் யார்கண்ண தோமன்ன வின்னருளே" என்றார் திருக்கோவையாரினும்.

இது மடன்மா கொள்ளக் குறித்தோனைப் பறவைக் குழாந் தம்மை மடலூர விடாவென விளையாட்டுவகையாற் பொய்யென்று இகழ்ந்தது.

கையறு தோழி கண்ணீர் துடைப்பினும்—தலைவியை ஆற்றுவித்துக் கையற்ற தோழி தலைவிகண்ணீரைத் துடைப் பினும்:

உதாரணம்:

"யாமெங் காமந் தாங்கவுந் தாந்தங்
கெழுதகை மையி னழுதன தோழி
கன்றாற்றுப் படுத்த புன்றலைச் சிறாஅர்
மன்ற வேங்கை மலர்பத நோக்கி
யேறா திட்ட வேமப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்புங்
குன்ற நாடற் கண்டவெங் கண்ணே." (குறுந்-241.)

இது தன் ஆற்றாமைக்கு ஆற்றாத தோழியை ஆற்றுவிக் கின்றாள் அவ்விரண்டுங் கூறியது.

வெறியாட்டிடத்து வெருவின் கண்ணும்—தலைவி வேறு பாடு எற்றினானாயிற்றென்று வேலனை வினாய் வெறியாட்டு எடுத்துழித் தலைவி அஞ்சும் அச்சத்தின்கண்ணும்: அது பண்டேயுந் தன்பரத்தைமையான் நெகிழ்ந்தொழுகுவான் இன்று நம் ஆற்றாமைக்கு மருந்து பிறிதுமுண்டென்றறி யின் வரைவு நீடுமென்று அஞ்சுதல்.

உதாரணம்:

"பனிவரை நிவந்த பயங்கெழு கவாஅற்
றுனியில் கொள்கையொ டவர்நமக் குவந்த
வினிய வுள்ள மின்னா வாக்கி

*முனிதக விறுத்த நல்க லெவ்வஞ்
சூருறை வெற்பன் மார்புறத் தணித
லறிந்தன ளல்ல ளன்னை வார்கோற்
செறிந்திலங் கெல்வளை ஞெகிழ்பத நோக்கிக்
கையறு நெஞ்சினள் வினவலின் முதுவாய்ப்
பொய்வல் பெண்டிர் பிரப்புணர் பிரீஇ
முருக னாரணங் கென்றலி னதுசெத்
தோவத் தன்ன வினைபுனை நல்லிற்
பாவை யன்ன பலராய் மாண்கவின்
பண்டையிற் சிறக்கவென் மகட்கெனப் பறைஇக்
கூடுகொ ளின்னியங் கறங்கக் களனிழைத்
தாடணி யயர்ந்த வான்பெரும் பந்தர்
வெண்போழ் கடம்பொடு சூடி யின்சீ
ரைதமை பாணி யிரீஇக் கைபெயராச்
செல்வன் பெரும்பெய ரேத்தி வேலன்
வெறியயர் †வெங்களம் பொற்ப வல்லோன்
பொறியமை பாவையிற் றூங்கல் வேண்டி
னென்னுங் கொல்லோ தோழி மயங்கிய
மையற் பெண்டிர்க்கு நொவ்வ லாக
வாடிய பின்னும் வாடிய மேனி
பண்டையிற் சிறவா தாயி னிம்மறை
யலரா காமையோ வரிதே யதாஅன்
றன்றிவ ணுறுவிய வல்லல்கண் டருளி
வெறிகமழ் நடுவே ணல்குவ னெனினே
செறிதொடி யுற்ற செல்லல் பிறிதெனக்
கான்கெழு நாடன் கேட்பின்
யானுயிர் வாழ்த லதனினு மரிதே." (அகம்-98.)

---

* 'மூளித்த' என்பதும் பாடம்.

† 'வியன்களம்' என்பதும் பாடம்.

'இன்னுவாக்கி நிறுத்த எவ்வ' மென்பது அவன்வயிற் பரத்தைமை. 'உயிர்வாழ்தல் அரிது' என்பது தன்வயி னுரிமை. அவை வெறியஞ்சியவழி நிகழ்ந்தன.

குறியின் ஒப்புமை மருடற் கண்ணும்—இரவுக்குறி வருந்தலைவன் செய்யுங்குறி பிறிதொன்றனான் நிகழ்ந்து தலைவன் குறியை ஒத்தவழி அதனை மெய்யாக உணர்ந்து தலைவி மயங்கியவழியும்; புனலொலிப்படுத்தன் முதலிய அவன் செயற்கையானன்றி இயற்கையான் நிகழ்ந்துழிக் குறியி னொப்புமையாம்.

உதாரணம்:

"மெய்யோர் வாழி தோழி சாரன்
மைப்பட் டன்ன மாமுக முசுக்கலை
யாற்றப் பாயாத் தப்ப லேற்ற
கோட்டொடு போகி யாங்கு நாடன்
றன்குறி *வாயாத் தப்பற்குத்
தாம்பசந் தனவென் றடமென் றோளே." (குறுந்-121.)

கோடு ஆற்றப் பாயாது வேண்டியவாறு பாய்ந்து அதனை முறித்த முசுப்போல நாங் குறிபெறுங் காலத்து வாராது புட்டாமே வெறித்து இயம்புந்துணையும் நீட்டித்துப் பின்பு வருதலிற் குறிவாயாத்தப்பு அவன்மேல் ஏற்றி அதற்குத் தோள் பசந்தனவென்று பின்னொருநாள் அவன் வந்துழித் தோழியை நோக்கி இவ்வரவு மெய்யோவெனவே அவ்விரண்டும் பெற்றும்.

"அணிகடற் றண்சேர்ப்பன் றேர்ப்பரிமா பூண்ட
மணியரவ மென்றெழுந்து போந்தேன்—கணிவிரும்பு

* 'வாரா' என்பதும் பாடம்.

புள்ளரவங் கேட்டும் பெயர்ந்தே ஞெளியிழா
யுள்ளுருகு நெஞ்சினேன் யான்."

இதுவும் அது.

வரைவு தலைவரினும்—களவு வெளிப்பட்ட பின்னராயினும் முன்னராயினும் வரைந்தெய்துதற் செய்கை தலைவன்கண் நிகழினும்: ஆண்டு முற்காலத்து நிகழ்ந்த ஆற்றாமை பற்றி அவ்விரண்டுங் கூறும்.

உதாரணம்:

"நன்னு டலைவரு மெல்லை நமர்மலைத்
தந்நாண்டாந் தாங்குவா ரென்னோற் றனர்கொல்;
புனவேங்கைத் தாதுறைக்கும் பொன்னறை முன்றி
னனவிற் புணர்ச்சி நடக்குமா மன்றோ
நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமா மன்றோ." (கலி-39.)

என நாண்தாங்கி ஆற்றுவாரும் உளரோவெனவுங் கனவிற் புணர்ச்சி கடிதுமெனவும் இரண்டுங் கூறினாள்.

"கொல்லைப் புனத்த வகில்சுமந்து கற்பாய்ந்து
வானி னருவி ததும்பக் கவினிய
நாட னயனுடைய னென்பதனா னீப்பினும்
வாடன் மறந்தன தோள்." (ஐந்திணை, 70-2.)

'நயனுடையன்' என்பதனால் வரைவு தலைவந்தமையும், 'நீப்பினு' மென்பதனால் அவன்வயிற் பரத்தைமையுங் கூறினாள்.

களவு அறிவுறினும்—தம் ஒழுகலாறு புறத்தார்க்குப் புலனாகத் தலைவன் ஒழுகினும்; ஆண்டும் அவ்விரண்டுங் கூறும்.

உதாரணம்:

"நாண்மழை தலைஇய நன்னெடுங் குன்றத்து
மால்கடற் றிரையி னிழிதரு மருவி
யகலிருங் கானத் தல்கணி நோக்கித்
தாங்கவுந் தகைவரை நில்லா நீர்சுழல்
*போதெழின் மழைக்கண் கலுழ்தலி னன்னை
யெவன்செய் தனையோநின் னிலங்கெயி றுண்கென
மெல்லிய வினிய கூறலின் வல்விரைந்
துயிரினுஞ் சிறந்த நாணு நனிமறந்
துரைக்கலுய்ந் தனனே தோழி சாரற்
காந்த ளூதிய மணிநிறத் தும்பி
தீந்தொடை நரம்பி †னிமிரும்
வான்றோய் வெற்பன் மார்பணங் கெனவே." (நற்றிணை-17.)

யான் அவனை எதிர்ப்பட்ட இடங்கண்டு அழுதேனாக அதனைக்கண்டு நீ எவன் செய்தனையென வினைய அன்னைக்கு இம்மறையினைக் கூறலுற்றுத் தவிர்ந்தேனெனத் தாய் களவறிவுற்றவாறு கூறக் கருதி அவன்வயிற் பரத்தைமை கூறிற்று.

தமர் தற் காத்த காரண மருங்கினும்—அங்ஙனங் களவறிவுற்ற அதன்றலைச் செவிலிமுதலிய சுற்றத்தார் தலைவியைக் காத்தற்கு ஏதுவாகிய காரணப்பகுதிக்கண்ணும்:

ஆண்டுந் தமரை நொந்துரையாது அவன்வயிற் பரத்தைமைகூறும்.

காரணமாவன தலைவி தோற்றப்பொலிவும் வருத்தமும் அயலார் கூறும் அலருமாம்.

* 'பேதெழின்' என்பதும் பாடம்.

† 'முரலும்' என்பதும் பாடம்.

உதாரணம்:

“அடம்பி னய்மலர் விரைஇ நெய்த
னெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்த
லோரை மகளி ரஞ்சியீர் ஞெண்டு
கடலிற் பரிக்குந் துறைவனொ டொருநா
ணக்குவிளை யாடலுங் கடிதன்
றைதெமக் கம்ம மெய்தோய் நட்பே.” (குறுந்-401.)

இது வேறுபாடு கண்டு இற்செறித்தமை தன்னுள்ளே கூறியது.

“பெருநீ ரழுவத் தெந்தை தந்த
கொழுமீ னுணங்கற் படுபுள் ளோப்பி
யெக்கர்ப் புன்னை யின்னிழ லசைஇச்
செக்கர் ஞெண்டின் குண்டளை கெண்டி
ஞாழ லோங்குசினைத் தொடுத்த கொடுங்கழித்
தாழை வீழ்கயிற் றூச றூங்கிக்
கொண்ட விடுமணற் குரவை முனையின்
வெண்டலைப் புணரி யாயமொ டாடி
மணிப்பூம் பைந்தழை தைஇ யணித்தகைப்
பல்பூங் கான லல்கினம் வருதல்
கௌவை நல்லணங் குற்ற விவ்வூர்க்
*கொடிதறீஇப் பெண்டிர் சொற்கொண் டன்னை
கடிகொண் டனளே தோழி பெருந்துறை
யெல்லையு மிரவு மென்னாது கல்லென
வலவ னாய்ந்த வண்பரி
நிலவுமணற் கொட்குமோர் தேருண் டெனவே” (அகம்-20.)

“பெருங்கடற் றிரையது சிறுவெண் காக்கை
களிற்றுச் செவியன்ன பாசடை மயக்கிப்

* ‘கொடிதறி பெண்டிர்’ என்பதும் பாடம்.

பனிக்கழி துழவும் பானாட் டனித்தோர்
தேர்வந்து *பெயருமென்ப வதற்கொண்
டோரு மலைக்கு மன்னை பிறரும்
பின்னுவிடு கதுப்பின் மின்னிழை மகளி
ரிளையரு முதியரு முளரே
யலையாத் தாயரொடு நற்பா லோரே." (குறுந்-246.)

இவை பிறர்கூற்றால் தமர்காத்தன.

" †முலை முகஞ்செய்தன முள்ளெயி றிலங்கின—தலைமுடிசான்ற"

---

*'பெயர்ந்ததென்ப' என்பதும் பாடம்.

" †முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின
தலைமுடி சான்ற தண்டழை யுடைய
யலமர லாயமொ டியாங்கணும் படாஅன்
மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய
காப்பும் பூண்டிசிற் கடையும் போகலை
பேதை யல்லை மேதையங் குறுமகள்
பெதும்பைப் பருவத் தொதுங்கினை புறத்தென
வொண்சுடர் நல்லி லருங்கடி நீவித்
தன்சிதை வறித லஞ்சி யின்சிலை
யேறுடை யினத்த நாறுயிர் நவ்வி
வலைகாண் பிணையிற் போகி யீங்கோர்
தொலைவிலா வெள்வேல் விடலையொ டென்மக
ளிச்சுரம் படர்தந் தோளே யாயிடை
யத்தக் கள்வ ராதொழு வறுத்தெனப்
பிற்படு பூசலின் வழிவழி யோடி
மெய்த்தலைப் படுதல் செய்யே னித்தலை
நின்னொடு வினவுவல் கேளாய் பொன்னொடு
புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி
யொலிக்குழைச் செயலை யுடைமா ணல்கு
லாய்சுளைப் பலவின் மேய்கலை யுதிர்த்த
துய்த்தலை வெண்காழ் பெறூஉங்
கற்கெழு சிறுகுடிக் கானவன் மகளே." (அகம்-7.)

என்றன தோற்றப் பொலிவாற் காத்தன. இதற்கும் அவ் விரண்டும் உள.

தன்குறி தள்ளிய தெருளாக் காலை வந்தனன் பெயர்ந்த வறுங்களம் நோக்கித் தன் பிழைப்பாகத் தழீஇத் தேறலும் —தலைவி தன்னாற் செய்யப்பட்ட குறியிடங்கள் இற்செறிப்பு முதலிய காரணங்களான் இழக்கப்பட்டனவற்றை இவை இழக்குமென முந்துறவே உணராத காலத்து முற்கூறிய குறியிடமே இடமாக வந்து தலைவன் கூடாது பெயர்தலால் தமக்குப் பயம்படாத வறுங்களத்தை நினைந்து அதனைத் தலைவற்கு முந்துறவே குறிபெயர்த்திடப்பெறாத தவறு தன்மேல் ஏற்றிக்கொண்டு தோழியையும் அதுகூறிற்றிலளெனத் தன்னொடு தழீஇக்கொண்டு தலைவி தெளிதற்கண்ணும்: ஆகவே அவன்தவற்றைத் தன்தவறு ஆக்கினளாம். தழீஇ, தோழியைத் தழீஇ. அத்தவறு அவன்கட் செல்லாமல் தனதாகத் தேறினாள்.

உதாரணம்:

"விரியிணர் வேங்கை வண்டுபடு கண்ணியன்
றெரியிதழ்க் குவளைத் தேம்பாய் தார
னஞ்சிலை யிடவ தாக வெஞ்செலற்
கணைவலந் தெரிந்து துணைபடர்ந் துள்ளி
வருதல் வாய்வது வான்றோய் வெற்பன்
வந்தன னாயி னந்தளிர்ச் செயலைக்
*காவி லோங்குசினைத் தொடுத்த வீழ்கயிற்
றூசன் மாறிய மருங்கும் †பாய்புடை
நாடா மையிற் கலுழ்பில தேறி

* 'தாழ்வில்' என்பதும் பாடம்.
† 'பாய்புடன்' என்பதும் பாடம்.

நீடிதழ்த் தலைய கவின்பெறு நீலங்
கண்ணென மலர்ந்த சுனையும் வண்பறை
மடக்கிளி யெடுத்தல் செல்லாத் தடக்குரற்
குவவுப்பொறை யிறுத்த கோற்றலை யிருவிக்
கொய்தொழி புனமு நோக்கி நெடிதுநினைந்து
பைதலன் பெயர்குவன் கொல்லோ வைதே
கயவெள் ளருவி சூடிய வுயர்வரைக்
கூஉங் கண்ணதெம் மூரென
வாங்கதை யறிவுறன் மறந்திசின் யானே." (அகம்-38.)

இதனுள் ஊசன்மாறுதலும் புனமுந் தன்குறி தள்ளிய இடன்; மறந்திசின் என்றது தெருளாக்காலை, கூஉங் கண்ணது ஊரென உணர்த்தாமையின்; இடையீடு படுவதன்றி அவன்கண் தவறுண்டோவெனத் தன் பிழைப்பாகத் தழீஇயினாள். இது சிறைப்புறமாக வரைவுகடாயது.

வழுவின்று நிலைஇய இயற்படு பொருளினும்—வழுப் படுத்தலின்றி நின்ற இயற்பட மொழிதற் பொருண்மைக் கண்ணும்:

வழுவின்றி நிலைஇய என்றதனால் தோழி இயற்பழித் துழியே இயற்பட மொழிவதென்க. தலைவன் வழுவைத் தோழி கூறியதற்குப் பொறாது தான் இயற்பட மொழிந்த தல்லது தன் மனத்து அவன் பரத்தைமை கருதுதலுடைமையிற் பொருள் வேறுகுறித்தாளாம்.

உதாரணம்:

" அடம்பமர் நெடுங்கொடி யுள்புதைந் தொளிப்ப
வெண்மணல் விரிக்குந் தண்ணந் துறைவன்
கொடிய னாயினு மாக
வவனே தோழியென் னுயிர்கா வலனே."

"தொடிநடந் திழியச் சாஅய்த் தோளவர்
கொடுமை கூறின வாயினுங் கொடுமை
நல்வரை நாடற் கில்லை தோழியென்
னெஞ்சிற் பிரிந்ததூஉ மிலரே தங்குறை
நோக்கங் கடிந்ததூஉ மிலரே
நிலத்தினும் பெரிதே நேர்ந்தவர் நட்பே."

என வரும்.

இஃது அகன்று உயர்ந்து தாழ்ந்தவற்றுட் பெரிதாகிய நட்புடையவன் எனக் கூறியது. ஒருகாலைக்கு ஒருகாற் பெருகுமென்றுங் கூறினாளாயினும் நமது நட்புப்போல் ஒரு காலே பெருத்ததில்லையென இரண்டுங் கூறினாள்.

பொழுதும் ஆறும் புரைவது அன்மையின் அழிவு தலை வந்த சிந்தைக்கண்ணும்—தலைவியுந் தோழியுந் தலைவன் இரவுக்குறி வருங்காற் பொழுதாயினும் நெறியாயினும் இடையூறாகிப் பொருந்துதலின்மையின் அழிவு தலைத்தலை சிறப்ப வந்த ஆராய்ச்சிக்கண்ணும்:

ஆண்டும் அவ்விரண்டும் நிகழும்.

உதாரணம்:

"மன்றுபா டவிந்து மனைமடிந் தன்றே
கொன்றோ ரன்ன கொடுமையோ டின்றே
யாமங் கொள்வரிற் கனைஇக் காமங்
கடலினு முரைஇக் கரைபொழி யும்மே
யெவன்கொல் வாழி தோழி மயங்கி
யின்ன மாசவு நன்னர் நெஞ்ச
மென்னொடு நின்னொடுஞ் சூழாது கைமிக்
கிறும்புபட் டிருளிய விட்டருஞ் சிலம்பிற்

குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்
கான நாடன் வரூஉம் யானைக்
கயிற்றுப் புறத்தன்ன கன்மிசைச் சிறுநெறி
மாரி வானந் தலைஇ நீர்வார்
பிட்டருங் கண்ண படுகுழி யியவி
னிருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற தின்றே." (அகம்-127.)

காமங் கரைபொழியா நிற்கவுமென்ன நன்றிகருதி இருவரொடுஞ் சூழாது சென்றது நெஞ்செசன இரண்டுங் கூறினாள். மனைமடிந்தன்றென்பது பொழுது, சிறுநெறியென்பது ஆற்றின்னாமை; இதனைப் பொருளியலுட் கூறுது தன்வயினுரிமையும் அவன்வயிற் பரத்தமையும்பற்றி ஈண்டுக் கூறினான்.

" குறையொன் *றுடையேன்மற் றோழி நிறையில்லா
மன்னுயிர்க் கேமஞ் செயல்வேண்டு மின்னே
யரவழங்கு நீள்சோலை நாடனை †வெற்பி
லிரவரா லென்ப துரை." (ஐந்திணை, 70-14.)

" வளைவாய்ச் சிறுகிளி " என்னுங் (141) குறுந்தொகையும் அது.

காமஞ் சிறப்பினும்—தலைவி காமஞ்சிறந்து தோன்றினும்;

உதாரணம்:

" ஒலியவிந் தடங்கி யாம நள்ளெனக்
கலிகெழு பாக்கந் துயின்மடிந் தன்றே

* 'உடையேமால்' என்பதும் பாடம்.
† 'நம்மில்' என்பதும் பாடம்.

தொன்றுறை கடவுள் சேர்ந்த பராரை
மன்றப் பெண்ணை வாங்குமடற் குடம்பைத்
துணைபுண ரன்றி லுயவுக்குரல் கேட்டொறுந்
துஞ்சாக் கண்ண டுயரடச் சாஅய்
நம்வயின் வருந்து நன்னுத லென்ப
துண்டுகொல் வாழி தோழி தெண்கடல்
வண்கைப் பரதவ ரிட்ட செங்கோற்
கொடுமுடி யவ்வலை பரியப் போகிக்
கடுமுர ணெறிசுறு வழங்கு
நெடுநீர்ச் சேர்ப்பன்ற னெஞ்சத் தானே." (நற்றிணை-303.)

"ஞாயிறு பட்ட வகல்வாய் வானத்
தளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
யிறையுற வோங்கிய நெறியயன் மராஅத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
*விரைகொண் டவையும் விரையுமாற் செலவே."(குறுந்-92.)

"கொடுந்தா ளலவ குறையா மிரப்பே
மொடுங்கா வொலிகடற் சேர்ப்ப—னெடுந்தேர்
கடந்த வழியையெங் கண்ணுரக் காண
நடந்து சிதையாதி நீ." (ஐந்திணை, 50-42.)

"முடமுதிர் புன்னைப் படுகோட் டிருந்த
மடமுடை நாரைக் குரைத்தேன்—கடனறிந்து
பாய்திரைச் சேர்ப்பன் பரித்தேர் வரக்கண்டு
நீதகா தென்றே சிறுத்து."

என வரும்.

அவன் அளி சிறப்பினும்—தலைவிக்குக் காமமிக்க கழி படர் சிறந்தாற் போல்வது தலைவன்கட் சிறந்துழி அது கா

* 'இரைகொண் டமையின்' என்பதும் பாடம்.

ரணத்தால் அவன் அளி சிறந்து தோன்றினும்; இவ்வாறு அரிதின்வருகின்றான் வரைகின்றலனென அவ்விரண்டுந் தோன்றும்.

உதாரணம்:

" இருள்கிழிப் பதுபோன் மின்னி வானந்
துளிதலைக் கொண்ட நளிபெய னடுநாண்
மின்மினி மொய்த்த முரிவுவாய்ப் புற்றம்
பொன்னெறி பிதிரிற் சுடர வாங்கிக்
குரும்பி கெண்டு பெருங்கை யேற்றை
யிரும்புசெய் கொல்லரிற் றோன்று மாங்க
ணாறே யருமர பினவே யாறே
சுட்டுநர்ப் பனிக்குஞ் சூருடை முதலை
கழைமாய் நீத்தங் கல்பொரு திரங்க
லஞ்சுவந் தமிய மென்னாது மஞ்சுசுமந்
தாடுகழை நரலு மணங்குடைக் கவாஅ
னீருயிர்ப் பிணவின் வயவுப்பசி களைஇய
விருங்களி றட்ட பெருஞ்சின வுழுவை
நாம நல்லரா கதிர்பட வுமிழ்ந்த
மெய்மணி விளக்கிற் புலாஅ லீர்க்கும்
வாணடந் தன்ன வழக்கருங் கவலை
யுள்ளுந ருட்கும் கல்லடர் சிறுநெறி
யருள்புரி நெஞ்சமோ டெஃகுதுணை யாக
வந்தோன் கொடியனு மல்லன் றந்த
நீதவ றுடையையு மல்லை நின்வயி
னானா வரும்படர் செய்த
யானே தோழி தவறுடை யேனே." (அகம்-72.)

'வந்தோ'னென்பது அவனளி சிறத்தல், 'தவறுடையே' னென்பது தன்வயினுரிமை, 'கொடியனுமல்ல' னென்பது அவன்வயிற் பரத்தைமை.

"சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி
*வாஅன் மீனின் வயின்வயி னிமைக்கு
மோங்குமலை நாடன் சாந்துபுல ரகல
முள்ளி னுண்ணோய் மல்கும்
புல்லின் மாய்வ தெவன்கொ லன்னாய்." (குறுந்-150.)

இதுவும் அது.

ஏமஞ் சான்ற உவகைக் கண்ணும்—நால்வகைப் புணர்ச்சியால் நிகழுங் களவின்கண் எஞ்ஞான்றும் இடையீடுபடாமற் றலைவன் வந்து கூடுதல் இன்பத்திற்குப் பாதுகாவல் அமைந்த உவகையினைத் தலைவி எய்தியக்கண்ணும்:

அது எஞ்ஞான்றுங் கூட்டம் பெற்றமையான் மகிழ்ந்து கூறுதலாம்.

உதாரணம்:

"நோயலைக் கலங்கிய மதனழி பொழிதிற்
காமஞ் செப்ப லாண்மகற் கமையும்
யானென், பெண்மை தட்ப நுண்ணிதிற் றாங்கிக்
கைவல் கம்மியன் கவின்பெறக் கழாஅ
மண்ணாப் பசுமுத் தேய்ப்பக் குவியிணர்ப்
புன்னை யரும்பிய புலவுநீர்ச் சேர்ப்ப
னென்ன மகன்கொ றோழி தன்வயி
னார்வ முடைய ராகி
மார்பணங் குறுநரை யறியா தோனே." (நற்றிணை-94.)

'மண்ணாப் பசுமுத்தேய்ப்ப நுண்ணிதிற் றாங்கிப் பெண்மை தட்ப' வென மாறிக் கழுவாத பசியமுத்தந் தனது மிக்க ஒளியை மறைத்துக் காட்டினாற்போல் யாமும் புணர்ச்

---

* 'வான மீனின்' என்பதும் பாடம்.

சியால் நிகழ்ந்த மிக்க நலனைப் புலப்படாமல் அரிதாகத் தாங்கிப் பெண்மையாற் றகைத்துக் கொள்ளும்படியாகத் தன்மார்பால் வருத்தமுற்றாரைக் கண்டு அறியாதோனாகிய சேர்ப்பனை என்னமகனென்று சொல்லப்படுமென மகிழ்ந்து கூறினாள். ஆர்வமுடையராக வேண்டி மார்பணங்குறுநரை அறியாதோனென்க. அலராமற் குவிந்த கொத்தையுடைய புன்னைக்கண்ணே புலாலுற்றைத்தையுடைய நீர் தெறித்தரும்பிய சேர்ப்பனென்றதனால் புன்னையிடத்துத் தோன்றிய புலாலுற்றத்தைப் பூவிரிந்து கெடுக்குமாறுபோல வரைந்து கொண்டு களவின்கண் வந்தகுற்றம் வழிகெட ஒழுகுவனென்பது உள்ளுறை. *"இரண்டறி களவின்" (குறுந்தொகை-312) என்னும் பாட்டினுள் தோற்றப் பொலிவை மறைப்பளெனத் தலைவன் கூறியவாறும் உணர்க.

மறைந்தவற்காண்டன் முதலிய ஆறற்கும் உம்மையும் உருபும் விரித்து ஏனையவற்றிற்கு உம்மைவிரிக்க; உம்மை விரிக்கவேண்டுவனவற்றிற்கு உம்மையும், இரண்டும் விரிக்க வேண்டுவனவற்றிற்கு இரண்டும் விரித்து, அவற்றிற்கும் ஏனை வினையெச்சங்கட்கும் கூற்று நிகழ்தலுளவென முடிக்க. கூற்று அதிகாரத்தான்வரும். உயிராக்காலத்து உயிர்த்தலுமுளவென முடிக்க.

ஒரிடத்தான தன்வயின் உரிமையும் அவன் வயிற் பரத்தையும் உள—இக்கூற்று முப்பத்தாறனுள் ஒரோவிடங்களிலே தன்னிடத்து அன்பிற்கு உரிமையுண்டாகவும் அவனிடத்து அயன்மை உண்டாகவுங் கூற்று நிகழ்தலுள: ஆன், ஆனவென ஈறு திரிந்தது.

---

* இச்செய்யுளை 402-ஆம் பக்கத்திற் காண்க.

அன்னவும் உள—அவைபோல்வன பிறவும் உள என்றவாறு.

'அன்னபிற' வென்றதனான் இன்னுந் தலைவிகூற்றாய் இவற்றின் வேறுபட வருவனவெல்லாம் இதனான் அமைக்க.

"பிணிவிடந் தீர்ந்து பெரும்பணைத்தோள் வீங்க
வணிமலை நாடன் வருவான்கொ றோழி
கணிவிற வேங்கை கமழ்ந்துவண் டார்க்கு
மணிவிற மாலைப் பொழுது."

இது தலைவி இரவுக்குறி நயந்து கூறியது.

"பெயல்கான் மறைத்தலின் விசும்புகா ணலரே
நீர்பரந் தொழுகலி னிலங்கா ணலரே
யெல்லை சேறலி னிருள்பெரிது பட்டன்று
பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்
யாங்குவந் தனையோ வோங்கல் வெற்ப
வேங்கை கமழுமெஞ் சிறுகுடி
யாங்கறிந் தனையோ நோகோ யானே." (குறுந்-355.)

இஃது இரவுக்குறி வந்த தலைவனை நோக்கிக் கூறியது.

"கொடுங்குரல் குறைத்த செவ்வாய்ப் பைங்கிளி
யஞ்ச லோம்பி யார்பதங் கொண்டு
நின்குறை முடித்த பின்றை யென்குறை
*சொல்லல் வேண்டுமோர் கைதொழு திரப்பல்
பல்கோட் பலவின் சார லவர்நாட்டு
நின்கிளை மருங்கிற் சேறியாயி
னம்மலை கிழவோற் குரைமதி யிம்மலைக்
கானக் குறவர் மடமக
ளேனல் காவ லாயின ளெனவே." (நற்றிணை-102.)

* 'செய்தல் வேண்டுமால்' என்பதும் பாடம்.

எனவும்,

"ஓங்கற் றுறுவரைமேற் காந்தள் கடிகவினப்
பாம்பென வோடி யுருமிடித்துக் கண்டிரங்கும்
பூங்குன்ற நாடன் புணர்ந்தவந் நாட்போல
நீங்கி நெகிழ்ந்த வளை."

எனவும்,

"மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழ
முண்டுவந்து மந்தி முலைவருடக் கன்றமர்ந்
தாமா சுரக்கு மணிமலை நாடனை
யாமாப் பிரித லிலம்." (ஐந்திணை, 70-4.)

எனவும் வரும்.

"அவருடை நாட்ட வாயினு மவர்போற்
பிரித றேற்றாப் பேரன் பினவே
யுவக்கா ணென்று முள்ளுவ போலச்
செந்தார்ச் சிறுபெடை தழீஇப்
பைங்குர லேனற் படர்தருங் கிளியே."

இது பகற்குறிக்கண் தலைவனீட ஆற்றாது தோழிக்குக் கூறியது. (௨௦)

121. வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்
வரைய நாளிடை வந்தோன் முட்டினு
முரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணுந்
தானே கூறுங் காலமு முளவே.

இதுவும் அதிகாரத்தால் தலைவிகூற்று இன்னவாறுமாம் என்கின்றது.

இதன்பொருள்: வரைவிடைவைத்த காலத்து வருந்தினும்—வரைவுமாட்சிமைப்படா நிற்கவும் பொருள்காரணத்

தான் அதற்கு இடையீடாகத் தலைவன் நீக்கிவைத்துப் பிரிந்த காலத்துத் தலைவி வருத்தமெய்தினும்:

ஆண்டுத் தோழி வினவாமலும் தானே கூறுமென்றான், ஆற்றுவித்துப் பிரிதல் களவிற்குப் பெரும்பான்மை இன்மையின். வைத்தவென்றது நீக்கப்பொருட்டு. வருந்துதல் ஆற்றுவிப்பாரின்மையின் வருத்த மிகுதலாம்.

வரையா நாளிடை வந்தோன் முட்டினும்—வரையா தொழுகுந் தலைவன் ஒருஞான்று தோழியையானும் ஆயத்தையானுஞ் செவிலியையானுங் கதுமென எதிர்ப்பினும்:

உரையெனத் தோழிக்கு உரைத்தற்கண்ணும்—நொது மலர் வரைவிற்கு மணமுரசியம்பியவழியானும் பிறாண்டானுந் தோழிக்கு இன்னவாறு கூட்டம் நிகழ்ந்ததெனக் கூறி அதனை நமரறியக் கூறல்வேண்டுமென்றுந் தலைவற்கு நம் வருத்தமறியக் கூறல் வேண்டுமென்றுங் கூறுதற் கண்ணும்; தானே கூறும் காலமும் உளவே—இம்மூன்று பகுதியினுந் தோழி வினவாமல் தலைவி தானே கூறுங் காலமும் உள, என்றவாறு.

உம்மையால் தோழி வினவிய இடத்துக் கூறலே வலியுடைத்து.

உதாரணம்:

“அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்
றகாஅன் போலத் தான்தீது மொழியினுந்
தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே

*முந்துவிரை யொத்த முள்ளெயிற்றுத் துவர்வாய்
வரையாடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனு மறியுமக் கொடியோ னையே." (குறுந்-26.)

"யாரு மில்லைத் தானே கள்வன்
†ருனது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் காஅல
வொழுகுநீ ராரல் பார்க்குங்
குருகு முண்டுதா மணந்த ஞான்றே." (குறுந்-25.)

இவற்றுள் துறந்தான்போலவும் மறந்தான்போலவுங் கருதித் தான் தீதுமொழியினுமெனவும் யானெவன் செய்கோவெனவுந் தோழி வினவாக்காலத்து அவன்தவற்றை வரைவிடை வைத்தலின் ஆற்றாமைக்கு அறிவித்தாள்.

"பகலெரி சுடரின் மேனி சாயவும்
பாம்பூர் மதியி னுதலொளி கரப்பவு
மெனக்குநீ யுரையா யாயினை நினக்கியா
னுயிர்பகுத் தன்ன மாண்பினெ னாகலி
னதுகண் டிசினால் யானே யென்றுநனி
யழுத லான்றிசி னாயிழை யொலிகுர
லேனல் காவலி னிடையுற் றொருவன்
கண்ணியன் கழலன் றாரன் றண்ணெனச்
சிறுபுறங் கவையின னாக வதற்கொண்
டஃதே நினைந்த நெஞ்சமொ
டிஃதா கின்றியா னுற்ற நோயே." (நற்றிணை-128.)

இது தோழி வினவியவழித் தலைவி கூறியது.

'வரைவிடைவைத்தகாலத்து வருந்தினும்' என்பதனைத் 'தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்' (தொல்-பொ-

* 'தேக்கொக் கருந்தும்' என்பதும் பாடம்.
† 'தானவன்' என்பதும் பாடம்.

மர-132.) என்னுந் தந்திரவுத்தியாகக்கொண்டு அதன்கண் வேறுபட வருவனவெல்லாங்கொள்க.

"உரைத்திசிற் றோழியது புரைத்தோ வன்றே
யருந்துய ருழத்தலு மாற்று மதன்றலைப்
பெரும்பிறி தாக லதனினு மஞ்சுது
மன்றோ வின்னு நன்மலை நாடன்
பிரியா *வன்பின ரிருவரு மென்னு
மலரதற் கஞ்சினன் கொல்லோ பலருடன்
றுஞ்சூர் யாமத் தானுமென்
னெஞ்சத் தல்லது வரவறி யானே." (குறுந்-302.)

இது வரைவிடைக் கவன்று தோழிக்குக் கூறியது.

"அதுகொ றோழி காம நோயே
வதிகுரு குறங்கு மின்னிலைப் புன்னை
யுடைதிரைத் திவலை யரும்புந் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லித ழுண்கண் பாடொல் லாவே." (குறுந்-5.)

என்னும் பாட்டும் அது.

"தோழி வாழி மேனாட் சாரற்
கொடியோர் குன்றம் பனிப்ப நெடிதுநின்று
புயறொடங் கின்றே பொய்யா வானத்
தனைவர லழிதுளி தலைஇ
வெம்முலை யாக நனைக்குமெங் கண்ணே."

இது வரைவிடைப் பருவங்கண்டு ஆற்றாது தோழிக்குக் கூறியது.

"பனிப்புத லிவர்ந்த பைங்கொடி யவரைக்
கிளிவா யொப்பி னொளிவிடு பன்மலர்

* 'நண்பினர்' எனபதும் பாடம்.

வெருக்குப்பல் லுருவின் முல்லையொடு கஞலி
வாடை வந்ததன் றலையு நோய்பொரக்
கண்டிசின் வாழி தோழி தெண்டிரைக்
கடலாழ் கலத்திற் றோன்றி
மாலை மறையுமவர் மணிநெடுங் குன்றே." (குறுந்-240.)

இது பருவங்கண்டு ஆற்றாது தோழிக்குக் கூறியது.

"நோயுங் கைம்மிகப் பெரிதே மெய்யுந்
தீயுமிழ் தெறலின் வெய்தா கின்றே
*பொய்யெனச் சிறிதாங் குயிரிய பையென
முன்றிற் கொளினே நந்துவள் பெரிதென
விரைய நெஞ்சத் தன்னைக் குய்த்தாண்
டுரையினி வாழி தோழி புரையி
னுண்ணே ரெல்வளை ஞெகிழ்த்தோன் குன்றத்
தண்ண னெடுவரை யாடித் தண்ணென
வியலறை மூழ்கிய வளியென்
பசலை யாகந் தீண்டிய சிறிதே." (நற்றிணை-236.)

இது வரைவிடை ஆற்றாமை மிக்குழி அவன்வரையின் மூழ்கிய காற்று என்மெய்க்கட் படினும் ஆற்றலாமென்றது.

"அம்ம வாழி தோழி யவர்போ
னம்முடை வாழ்க்கை மறந்தன்று கொல்லோ
மனையெறி யுலக்கையிற் றினைகிளி கடியுங்
கான நாடன் பிரிந்தெனத்
தானும் பிரிந்தன் றென் மாமைக் கவினே."

இது வன்புறையெதிரழிந்தது.

"சிறுபுன் மாலை சிறுபுன் மாலை
தீப்பனிப் பன்ன தண்வளி யசைஇச்

* 'ஒய்யெனச் சிறிதாங் குயரிய' என்பதும் பாடம்.

செக்கர் கொண்ட சிறுபுன் மாலை
வைகலும் வருதியா லெமக்கே
யொன்றுஞ் சொல்லாயவர் குன்றுகெழு நாட்டே."

இது மாலைப்பொழுது கண்டு வருந்திக் கூறியது.

இன்னும் வேறுபட வருவனவெல்லாம் இதன்கண் அடக்குக.

"கேட்டிசின் வாழி தோழி யல்கற்
பொய்வ லாளன் மெய்யுற மரீஇ
வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட வேற்றெழுந்
தமளி தைவந் தனனே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற வளியேன் யானே." (குறுந்-30.)

இது வரைதற்குப் பிரிய வருந்துகின்றது என்னென்றாட்குக் கனவு நலிவுரைத்தது.

"ஆடமைக் குயின்ற வவிர்துளை மருங்கிற்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் னருவிப் பனிநீ ரின்னிசை
தோடமை முழவின் றுதைகுர லாகக்
கணக்கலை யிகுக்குங் கடுங்குரற் றூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக
வின்ப லிமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில்
விழவுக்கள விறலியிற் றோன்று நாட
னுருவ வல்விற் பற்றியம்பு தெரிந்து
செருச்செய் யானை சென்னெறி வினைஇப்
புலர்குர லேனற் புழையுடை யொருசிறை
மலர்தார் மார்ப னின்றோற் கண்டோர்

பலர்சிலர் வாழி தோழி யவரு
ளாரிருட் கங்கு லணையொடு பொருந்தி
யோர்யா ஞகுவ தெவன்கொ
னீர்வார் கண்ணொடு ஞெகிழ்தோ ளேனே." (அகம்-82.)

அவனை ஆயத்தார் பலருங் கண்டாரென வந்தோன் மூட்டியவாறும் அவருள் நெகிழ்தோளென் யானேயெனத் தானே கூறியவாறுங் காண்க.

" தாழை குருகீனுந் தண்ணந் துறைவனை
மாழைமா னேக்கின் மடமொழி-நூழை
நுழையு மடமகன் யார்கொலென் றன்னை
புழையு மடைத்தாள் கதவு."

" நகைநீ கேளாய் தோழி யல்கல்
வயநா யெறிந்து வன்பறழ் தழீஇ
யிளைய ரெய்துதன் மடக்கிக் கிளையொடு
நான்முலைப் பிணவல் செலிய காஞெழிந்
தரும்புழை முடுக்க ராட்குறித்து நின்ற
தறுகட் பன்றி நோக்கிக் கானவன்
குறுகினன் றொடுத்த கூர்வாய்ப் பகழி
மடைசெலன் முன்பிற்றன் படைசெலச் செல்லா
தருவழி யிலங்குமென் பெருவிறல் போன்மென
வெய்யாது பெயருங் குன்ற நாடன்
*செறிவுய றொடக்கலிற் பரீஇப்புரி யவிழ்ந்தேந்து
குவவு மொய்ம்பிற் பூச்சோர் மாலை
†யெற்றியிற் கயிற்றி னெழில்வந்து துயல்வர
வில்வந்து நின்றோற் கண்டன ளன்னை
வல்லே யென்முக நோக்கி
நல்லை மன்னென நகூஉப்பெயர்ந் தோளே." (அகம்-247.)

* 'செறியரி' என்பதும் பாடம்.
† 'எற்றிமில்' என்பதும் பாடம்.

இவை வந்தோன் செவிலியை எதிர்த்துழிக் கூறியன.

" கொடியவுங் கோட்டவு நீரின்றி நிறம்பெறப்
பொடியழற் புறந்தந்த பூவாப்பூம் பொலங்கோதைத்
தொடிசெறி யாப்பமை யரிமுன்கை யணைத்தோளோ
யடியுறை யருளாமை யொத்ததோ நினக்கென்ன
நரந்தநா றிருங்கூந்த லெஞ்சாது நனிபற்றிப்
பொலம்புனை மகரவாய் நுங்கிய சிகழிகை
நலம்பெறச் சுற்றிய குரலமை யொருகாழ்
விரன்முறை சுற்றி மோத்தலு மோந்தன
னறுஅவவிழ்ந் தனவென்மெல் விரற்போது கொண்டு
செறுஅச் செங்கண் புதைய வைத்துப்
பறுஅக் குருகி னுயிர்த்தலு முயிர்த்தனன்
றொய்யி லிளமுலை யினிய தைவந்து
தொய்யலந் தடக்கையின் வீழ்பிடி யளிக்கு
மையல் யானையின் மருட்டலு மருட்டினன் ;
அதனால்,
லல்லல் களைந்தனன் றோழி நன்னக
ரருங்கடி நீவாமைக் கூறி னன்றென
நின்னொடு சூழ்வ றோழி நயம்புரிந்
தின்னது செய்தா ளிவளென
மன்னா வுலகத்து மன்னுவது புரைமே." (கலி-54.)

எனக் கைப்பட்டுக் கலங்கிப் புணர்ச்சி நிகழ்ந்தமை கூறி 'அருங்கடி நீவாமைக் கூறின் நன்' றெனத் தமர்க்குக் கூறுமாறு தோழிக்குத் தலைவி கூறினாள். சுரிதகத்து இருகாற் றோழியென்றாள் நாணுத் தலையாக மறைகரந்தவாறு *நீரத் தோழிக்கு முகமனாக.

*'காத்த தோழிக்கு' என்றார் கலித்தொகை உரையில்.

"எரியகைந் தன்ன செந்தலை யன்றில்
பிரியின் வாழா தென்போற் றெய்ய
துறைமெல் வலம்புரி துணைசெத் தோடிக்
கருங்கால் வெண்குருகு பயிறரும்
பெருங்கடற் படப்பையெஞ் சிறுநல் லூரே."

இஃது அன்றில் பிரியின் வாழாதெனக் கூறென்றது.

"ஐயோ வெனயாம் பையெனக் கூறிற்
கேட்குவர் கொல்லோ தாமே மாக்கடற்
பருஉத்திரை தொகுத்த நுண்கண் வெண்மணை
லின்னுந் தூரா சாணவர்
பொன்னி னெடுந்தேர் போகிய நெறியே."

இஃது அவர் இன்னும் போவதற்குமுன்னே நம்வருத்தத்தை வெளிப்படக் கூறென்றது.

"என்னைகொ ஞேழி யவர்கண்ணு நன்கில்லை
யன்னை முகனு மதுவாகும்—பொன்னலர்
புன்னையம் பூங்கானற் சேர்ப்பனைத் தக்கதோ
நின்னல்ல நில்லென் றுரை."

இவை தலைவற்குக் கூறென்றன.

இவை தலைவி அறத்தொடு நிற்றற்பகுதி. தோழிக்கே உரைத்தற்குத் தோழிக்கென்றார். (உக)

113. உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
காமக் கிழவ னுள்வழிப் படினுந்
தாவி னன்மொழி கிழவி கிளப்பினு
மாவகை பிறவுந் தோன்றுமன் பொருளே.

இது தலைவிகூற்றிற்குச் சிறப்பில்லன கூறி, அவையும் அகப்பொருளாம் என்கின்றது.

இதன் பொருள்: உயிரினும் நாண் சிறந்தன்று—எல்லாவற்றினுஞ் சிறந்த உயிரினும் மகளிர்க்கு நாண் சிறந்தது; நாணினுஞ் செயிர்தீர் கற்புக் காட்சி சிறந்தன்று—அந் நாணினுங் குற்றந் தீர்ந்த கற்பினை நன்றென்று மனத்தாற் காணுதல் சிறந்தது; எனத் தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு—என்று முன்னுள்ளோர் கூறிய கூற்றினைப் பொருந்திய நெஞ்சுடனே; காமக் கிழவன் உள்வழிப் படினும்—தலைவன் இருந்தவிடத்தே தலைவி தானே செல்லினும்; தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்—மனவலியின்றிச் செல்வாமெனக் கூறும் நன்மொழியினைத் தலைவிதானே கூறினும்; பொருள் தோன்றுப—அவை அகப்பொருளாய்த் தோன்றும்; ஆவகை பிறவும மன் பொருள் தோன்றும்—அக்கூற்றின் கூறுபாட்டிலே பிற கூற்றுக்களும் மிகவும் அகப்பொருளாய்த் தோன்றும், என்றவாறு.

என்றது, தலைவிகூற்று. சிறுபான்மை வேறுபட்டு வருவனவற்றைக் கற்புச்சிறப்ப நாண் துறந்தாலுங் குற்றம் இன்றென்றற்குச் 'செயிர்தீ' ரென்றார்; 'நன்மொழி'யென்றார் கற்பிற் றிரியாமையின்; அவை இன்னோரன்னவழி நெஞ்சொடுகிளத்தல்போல்வன. இவள்கூற்றுத் தோழிக்குந் தலைவற்குமே தோன்றுவதெனக. மன் ஆக்கம், இழிந்த பொருளும் உயரத் தோன்றலின்.

"மள்ளர் குழீஇய விழவி னானு
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை

யானுமோ ராடுகள மகளே யென்கைக்
கோடீ ரிலங்குவளை ஞெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோ ராடுகள மகனே." (குறுந்-31.)

யாண்டுங் காணேனென அவனுள் வழிபட்டுக் கூறினமையிற் கற்பின்பாலதாய்த் தோழியுந் தலைவனும் பெண்டன்மையிற் றிரியக் கருதாது நன்குமதித்தவாறு காண்க.

"அருங்கடி யன்னை காவ னீவிப்
பெருங்கடை யிறந்து மன்றம் போகிப்
பகலே பலருங் காண *வாய்விட்
டகல்வயற் படப்பை யவனூர் வினவிச்
சென்மோ வாழி தோழி பன்னாட்
கருவி வானம் பெய்யா தாயினு
மருவி யார்க்கு மயந்திகழ் சிலம்பின்
வான்றோய் மாமலை நாடனைச்
சான்றோ யல்லை யென்றனம் வரற்கே." (நற்றிணை-365.)

"கோடீ ரிலங்குவளை ஞெகிழ நாடொறும்
பாடில கலுழுங் கண்ணொடு புலம்பி
யீங்கிவ ணுறைதலு முயங்குவ மாங்கே
யெழுவினி வாழி நெஞ்சே முனாஅது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
வல்வேற் காட்டி னன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்
வழிவிடல் சூழ்ந்திசி னவருடை நாட்டே." (குறுந்-11.)

இவை தோழிக்கும் நெஞ்சிற்குங் கூறியன.

"ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த
குரும்பி வல்சிப் பெருங்கை யேற்றை

* 'நாண்விட்டு' என்பதும் பாடம்.

தூங்குதோற் பதிய வள்ளுகிர் கதுவலிற்
பாம்புமத னழியும் பானாட் கங்குலு
மரிய வல்லம னிகுளை பெரிய
கேழ லட்ட பேழ்வா யேற்றை
பலவம லடுக்கம் புலர வீர்க்குங்
கழைநரல் சிலம்பி ஞங்கண் வழையொடு
வாழை யோங்கிய தாழ்கண் ணசும்பிற்
படுகடுங் களிற்றின் வருத்தஞ் சொலியப்
பிடிபட முறுக்கிய பெருமரப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்பு மவர்நாட்
டெண்ணரும் பிறங்கன் மானதர் மயங்காது
மின்னுவிடச் சிறிய வொதுங்கி மென்மெலத்
துளிதலைத் தலைஇய மணியே ரைம்பால்
சிறுபுறம் புதைய வாரிக் குரல்பிழியூஉ
நெறிகெட விலங்கிய நீர்ச்சுர
மறிதலு மறிதிரோ வென்னுநர்ப் பெறினே." (அகம்-8.)

என்னும் அகப்பாட்டும் அது.

இங்ஙனம் வந்துழியுங் கற்புச் சிறந்ததாம்.

இனிப் பிறவாற் கொள்வன வருமாறு :

"பொன்னிணர் வேங்கை கவினிய பூம்பொழிலு
ணன்மலை நாட னலம்புனைய—மென்முலையாய்
போயின சின்னாள் புனத்து மறையினு
லேயினு ரின்றி யினிது." (ஐந்திணை, 50-11.)

"கானலஞ் சிறுகுடிக் கடன்மேம் பரதவர்
நீனிறப் புன்னைக் கொழுநிழ லசைஇத்
தண்பெரும் பரப்பி னொண்பத நோக்கி
யங்க ணரில்வலை யுணக்குந் துறைவனொ
டலரே, யன்னை யறியி னிவணுறை வாழ்க்கை
யரிய வாகு நமக்கெனக் கூறிற்

கொண்டுஞ் செல்வர்கொ ஞேழி யுமணர்
வெண்க லுப்பின் கொள்ளை சாற்றிக்
கணங்கிரை *கிளர்க்கு நெடுநெறிச் சகட
மணன்மடுத் துரறு மோசைக் கழனிக்
கருங்கால் வெண்குருகு வெரூஉ
மிருங்கழிச்சேர்ப்பிற்றம் †முறைவி னூர்க்கே." (நற்றிணை-4.)

என வரும்.

"‡விழுந்தண் மாரிப் பெருந்தண் சாரற்
o கூதிர்க் கூதளத் தலரி நாறு
மாதர் $வண்டின நயவருந் தீங்குரன்
மணநாறு சிலம்பி னசுண மோர்க்கு
¶முயர்வரை நாடற் குரைத்த லொன்றோ
துயர்மருங் கறியா வன்னைக் கிந்நோய்
தணியுமா றிதுவென வுரைத்த லொன்றோ
செய்யா யாகலிற் கொடியை தோழி
மணிகெழு நெடுவரை யணிபெற நிவந்த
செயலை யந்தளி ரன்னவென்
மதனின் ||மாமைப் பசலையுங் கண்டே." (நற்றிணை-244.)

இஃது அறத்தொடு நிற்குமாறு தோழிக்குத் தலைவி கூறியது. இன்னும் அதனானே தோழியைத் தலைவி ஆற்றுவித்தலுங் கொள்க.

---

* 'கிழிக்கும்' என்பதும் பாடம்.

† 'இறைவ னூர்க்கே' என்பதும் பாடம்.

‡ 'விழுந்தமாரி' என்பதும் o 'கூதிர்க் கூவிரம்' என்பதும் பாடம்.

$ 'வண்டின்' என்பதும் பாடம்.

¶ 'உயர்மலை' என்பதும், 'நாடற் றுறத்த லொன்றோ' என்பதும் பாடம்.

|| 'மாமெய்' என்பதும் பாடம்.

"*ஞெகிழ்ந்த தோளும் வாடிய வரியுந்
தளிர்வனப் †பிழந்த கிறனு நோக்கி
‡யாஞ்செய்வ தன்றிவ டுயரென $வன்பிறு
னழாஅல் வாழி தோழி வாழைக்
கொழுமட லகலிலைத் தளிதலைக் கலாவும்
பெருமலை நாடன் கேண்மை நமக்கே
விழும மாக வறியுந ரின்றெனக்
கூறுவை மன்னோ நீயே
தேறுவென் மன்யா னவருடை நட்பே." (நற்றிணை-309.)

என வரும்.

" துறுக லயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளி றிவரும் குன்ற நாட
னெஞ்சுகள னாக ¶கினையலேன் யானென
நற்றோண் மணந்த ஞான்றை மற்றவன்
‖றவாஅ வஞ்சின முரைத்தது
நோயோ தோழி நின்வயி னானே." (குறுந்-36.)

இதுவும் அது. (உஉ)

114. நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்
செய்வினைமறைப்பினுஞ்செலவினும்பயில்வினும்
புணர்ச்சி யெதிர்ப்பா டுள்ளுறுத்து வருஉ
முணர்ச்சி யேழினு முணர்ந்த பின்றை

---

* 'நெகிழ்ந்த' என்பதும் பாடம்.
† 'இழந்தவென்' என்பதும் பாடம்.
‡ 'யான்செய் தன்றிவள்' என்பதும் பாடம்.
$ 'அன்பின் - ஆழல்' என்பதும் பாடம்.
¶ 'நீயலேன் என்பதும் பாடம்.
‖ 'தாவா' என்பதும் பாடம்.

மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொரு ணாட்டத் தானுங்
குறையுறற் கெதிரிய கிழவனை மறையுறப்
பெருமையிற்பெயர்ப்பினுமுலகுரைத்தொழிப்பினு
மருமையி னகற்சியு மவளறி வுறுத்துப்
பின்வர வென்றலும் பேதைமை யூட்டலு
முன்னுறு புணர்ச்சி முறைநிறுத் துரைத்தலு
மஞ்சியச் சுறுத்தலு முரைத்துழிக் கூட்டமோ
டெஞ்சாது கிளந்த விருநான்கு கிளவியும்
வந்த கிழவனை மாயஞ் செப்பிப்
பொறுத்த காரணங் குறித்த காலையும்
புணர்ந்தபி னவன்வயின் வணங்கற் கண்ணுங்
குறைந்தவட் படரினு மறைந்தவ ளருகத்
தன்னொடு மவளொடு முதன்மூன் றளைஇப்
பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கினு
நன்னயம் பெற்றுழி நயம்புரி யிடத்தினு
மெண்ணரும் பன்னகை கண்ணிய வகையினும்
புணர்ச்சி வேண்டினும் வேண்டாப் பிரிவினும்
வேளாண் பெருநெறி வேண்டிய விடத்தும்
புணர்ந்துழி யுணர்ந்த வறிமடச் சிறப்பினு
மோம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணுஞ்
செங்கடு மொழியாற் சிதைவுடைத் தாயினு
மென்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ
யன்பு தலையடுத்த வன்புறைக் கண்ணு
மாற்றது தீமை யறிவுறு கலக்கமுங்

காப்பின் கடுமை கையற வரினுங்
களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக்
காதன் மிகுதி யுளப்படப் பிறவு
நாடு மூரு மில்லுங் குடியும்
பிறப்புஞ் சிறப்பு மிறப்ப நோக்கி
யவன்வயிற் றோன்றிய கிளவியொடு தொகைஇ
யனைநிலை வகையான் வரைதல் வேண்டினு
மையச் செய்கை தாய்க்கெதிர் மறுத்துப்
பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினு
மவன்விலங் குறினுங் களம்பெறக் காட்டினும்
பிறன்வரை வாயினு மவன்வரைவு மறுப்பினு
முன்னிலை யறனெனப் படுதலென் றிருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்
வரைவுடன் பட்டோற் கடாவல் வேண்டினு
மாங்கதன் றன்மையின் வன்புறை யுளப்படப்
பாங்குற வந்த நாலெட்டு வகையுந்
தாங்கருஞ் சிறப்பிற் றோழி மேன.

இது முறையானே தோழி கூற்று நிகழும் இடம்பலவுந் தொகுத்துக் கூறுகின்றது.

இதன் பொருள்: நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும் செய்வினைமறைப்பும் செலவும் பயில்வும்—தலைவன் பெட்டவாயில் பெற்று இரவுவலியுற்று முன்னுறு புணர்ச்சியை உரைப்பின் இன்னது நிகழு மென்று அறியாது அஞ்சிக் கரந்து மதியுடம்படுப்பத் தோழி மதியுடம்படுங் கால் அவள் ஆராயும் ஆராய்ச்சி யெல்லாம் நாட்டமாம்;

அஃது எட்டாம். அவற்றுண் முன்னுறு புணர்ச்சியை உணர்தற்குக் காரணம் எழுவகைய. அவை நாற்ற முதலிய எழும். [1]நாற்றமாவது, ஓதியும் நுதலும் பேதைப் பருவத்துத் தக நாறுது தலைவன் கூட்டத்தான் மான்மதச்சாந்து முதலியனவும் பல பூக்களும் விரவிநாறுதல்; [2] தோற்றமாவது, நீண்டும் பிறழ்ந்தும் பிள்ளைப் பருவத்து வெள்ளை நோக்கின்றி உள்ளொன்று கொள்ள நோக்குங் கண்ணுந், தந்நிலை திரிந்து துணைத்து மெல்கிப் பணைத்துக் காட்டுந் தோளும் முலையுமென்று இன்னோரன்ன; [3] ஒழுக்கமாவது, பண்ணையாயத்தோடு முற்றிலான் மணற்கொழித்துச் சோறமைத்தன் முதலியன முனிந்த குறிப்பினளாய்ப் பெண்டன்மைக்கு ஏற்ப ஒழுகுதல்; [4] உண்டியாவது, பண்டு பான் முதலிய கொண்டு ஒறுத்து ஊட்ட உண்டு வருகின்றாள், இப்பொழுது ஆசாரமும் நாணுங் காதலும் மீதூர அதன் மேல் உவப்பு ஆண்டு இன்றி மிக ஒறுத்த உள்ளத்தளாதல்; [5] செயல்வினை மறைத்தலாவது, முனைபு போலாது இக்காலத்து நினைவுஞ் செயலுந் தலைவனோடு பட்டனவே யாகலான் அவை பிறர்க்குப் புலனாகாமை மறைத்தல்; அஃது ஆயத்தோடு கூடாது இடந்தலைப்பாட்டிற்கு ஏதுவாக நீங்கி நிற்றலாம்; [6]சேலவாவது, பண்டுபோல் வேண்டியவாறு நடவாது சீர்பெற நடந்து ஓரிடத்துச் சேறல்; [7]பயில்வாவது, செவிலி முலையிடத்துத் துயில் வேண்டாது பெயர்த்து வேறோரிடத்துப் பயிறல். இன், சாரியை.

புணர்ச்சி எதிர்ப்பாடு—எதிர்ப்பாட்டுப் புணர்ச்சியெனமாறுக. அது கொடுப்பாரும் அடுப்பாருமின்றி இருவருந் தமியராய் எதிர்ப்பட்டுப் புணரும் புணர்ச்சி. இவ்வொழுக்கம் பாங்கற் கூட்டத்திற்கு ஏதுவாகா:

உள்ளுறுத்து வரூஉம் உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை — அப்புணர்ச்சி யெதிர்ப்பாடு நிகழ்ந்ததனைத் தோழி தன்னுள்ளத்துள்ளே வினவி வருகின்ற ஐயவுணர்வினை அவ்வேழனுனுந் தெளிந்து புணர்ச்சி உண்டென்பதனை உணர்ந்த பின்றை :

இன்னதும் இன்னதுமாகிய ஏழென்க. அங்ஙனந் துணிந்த பின்னல்லது தலைவிமாட்டுத் தோழி சொன்னிகழ்த் தாளென்றற்குப் 'பின்றை' யென்றார்.

உதாரணம் :

"காம்பிவர் தோளுங் கருமதர் மழைக்கணும்
வீங்கிள முலையும் வேறுபட் டனவே
தாங்கரு நாற்றந் தலைத்தலை சிறந்து
பூங்கொடிக் கிவர்ந்த புகற்சியென வாங்கிற்
பகலுங் கங்குலு மகலா தொழுகுமே
னன்றி யளவைத் தன்றி
தெவன்கொன் மற்றிவட் கெய்திய வாறே."

இதனுள் நாற்றமுந் தோற்றமுஞ் செலவும் வந்தன.

"கண்ணுஞ் சேயரி பரந்தன்று நுதலு
நுண்வியர் பொறித்து வண்டார்க் கும்மே
வாங்கமை மென்றோண் மடந்தை
யாங்கா யினள்கொ லென்னுமென் னெஞ்சே."

"தெய்வத்தி னுயதுகொ றெண்ணீர் புடையுடுத்த
வையத்து மக்களி னுயதுகொ—னைவுற்று
வண்டார்பூங் கோதை வரிவளைக்கை வாணுதலாள்
பண்டைய ளல்லள் படி."

இவையும் அவை.

"ஏனல் காவ லிவளு மல்லண்
மான்வழி வருகுவ னிவனு மல்ல
னரந்தங் கண்ணி யிவனோ டிவளிடைக்
கரந்த வுள்ளமொடு கருதியது பிறிதே
நம்மு ஞணுகர் போலத் தம்முண்
மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
வுள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லு மாடுப கண்ணி னனே."

இது புணர்ச்சி உணர்ந்தது.

"இவள்வயிற் செலினே யிவற்குடம்பு வறிதே
யிவன்வயிற் செலினே யிவட்கு மற்றே
காக்கை யிருகணி னொருமணி போலக்
குன்றுகெழு நாடற்குங் கொடிச்சிக்கு
மொன்றுபோன் மன்னிய சென்றுவா ழுயிரே."

இதுவும் அது.

மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது பல் வேறு கவர்பொருள் நாட்டத்தானும்—அங்ஙனம் உணர்ந்த பின் தோழி தலைவியுடன் ஆராயுங்காற் றன்மனத்து நிகழ்ந் தனவற்றை மறைத்துக் கூறவேண்டுதலில் உண்மைப் பொரு ளானும் பொய்ப் பொருளானும் விராவிவரினும் அவட்குக் குற்றேவல் செய்யுந் தன்மையில் தப்பாதவாற்றான் வேறுபல் கவர்பொருள்படக்கூறி ஆராயும் ஆராய்ச்சிக் கண்ணும்:

நாணுல் இறந்து படாமற் கூறுதற்கு 'வழிநிலை பிழை யாது' என்றார்.

பிறைதொழுவா மெனவும், கணைகுளித்த புண் கூர் யானை கண்டனெனெனவும், தன் பெருமைக்கு ஏலாத

நெறுசொற்கூறிக் குறைவுற்று நிற்கின்றான் ஒருவனுளன் அவனை நீயுங் காண்டல் வேண்டுமெனவும், அவன் என்னைத் தழுவிக்கொண்டு குறைகூறவும் நான் மறுத்து நின்றேனென்றாற் போலவும் மெய்யும் பொய்யும் விராயும் பிறவாறாகவுங் கூறுவன பல்வேறு கவர்பொருளாம்.

உதாரணம்:

"முன்னுந் தொழத்தோன்றி முள்ளெயிற்றா யத்திசையே
யின்னுந் தொழத்தோன்றிற் றீதேகாண் —மன்னும்
பொருகளிமால் யானைப் புகழ்க்கிள்ளி பூண்போற்
பெருகொளியான் மிக்க பிறை."

இது பண்டு கூறியவாறு கூறலின் மெய்யும், பிறைதொழாமை அறிந்து கூறலிற் பொய்யுமாய் வழிநிலை பிழையாத கவர்பொருளாயிற்று.

"பண்டிப் புனத்துப் பகலிடத் தேனலுட்
கண்டிக் களிற்றை யறிவன்மற்—றிண்டிக்
கதிரன் பழையனூர்க் கார்நீலக் கண்ணா
யுதிர முடைத்திதன் கோடு."

இது நடுங்க நாட்டம்; இஃது இறந்துபாடு பயத்தலிற் கந்தருவத்திற்கு அமையாது.

"தொய்யில் வனமுலையுந் தோளுங் கவினெய்தித்
தெய்வங் கமழுமா லைம்பாலு—மையுறுவல்
பொன்னங் கொடிமருங்குற் பூங்கயற் கண்ணினாய்க்
கென்னை யிதுவந்த வாறு."

என வழிநிலை பிழையாமற் கவர்பொருளாக நெறிபடு நாட்டம் நிகழ்ந்தவழித் தலைவி சுனையாடினேற்கு இங்ஙனம் ஆயிற்றென்னும். அதுகேட்டுத் தோழியும் யானும் ஆடிக் காண்பல் என்னும்.

உதாரணம்:

"பையுண் மாலைப் பழுமரம் படரிய
நொவ்வுப்பறை வாவ லேன்சிற கேய்க்கு
மடிசெவிக் குழவி தழீஇப் பையாந்
திடுகுகவுண் மடப்பிடி யெவ்வங் கூர
வெந்திற லாளி வெரீஇச் சந்தின்
பொரியரை மிளிரக் குத்தி வான்கே
ழுருவ வெண்கோ டுயக்கொண்டு கழியுங்
கடுங்கண் யானை காலுற வொற்றலிற்
கோவா வாரம் வீழ்ந்தெனக் குளிர்கொண்டு
பேஎ நாறுந் தாழ்நீர்ப் பனிச்சுனை
கோனே ரெல்வளை தெளிர்ப்ப வின்போல்
யானு மாடிக் காண்கோ தோழி
வரைவயிறு கிழித்த விழறிகழ் நெடுவேற்
றிகழ்பூண் முருகன் றீம்புன லலைவாய்க்
கமழ்பூம் புறவிற் கார்பெற்றுக் களித்த
வொண்பொறி மஞ்ஞை போல்வதோர்
கண்கவர் காரிகை பெறுதலுண் டெனினே."

என வரும்.

"நெருந லெல்லை யேனற் றோன்றித்
திருமணி யொளிர்வரும் பூணன் வந்து
புரவலன் போலுந் தோற்ற முறழ்கொள
விரவன் மாக்சளிற் பணிமொழி பயிற்றிச்
சிறுதினைப் படுகிளி கடீஇயர் பன்மாண்
குளிர்கொ டட்டை மதனில புடையாச்
சூரர மகளிரி னின்ற நீமற்
றியாரை யோவெம் மணங்கியோ யுண்கெனச்
சிறுபுறங் கவையின னாக வதற்கொண்
டிகுபெயன் மண்ணின் ஞெகிழ்பஞ ருற்றவென்

ஹுள்ளவ னறித லஞ்சி யுள்ளில்
கடிய கூறிக் கைபிணி விடாஅ
வெரூஉமான் பிணையி னொரீஇ நின்ற
வென்னுரத் தகைமையிற் பெயர்த்துப்பிறி தென்வயிற்
சொல்ல வல்லிற்று மிலனே யல்லாந்
தினந்தீர் களிற்றிற் பெயர்ந்தோ னின்றுந்
தோலா வாறில்லை தோழிநாஞ் சென்மோ
சாயிறைப் பணைத்தோட் கிழமை தனக்கே
மாசின் றுதலு மறியா னேசற்
றென்குறைப் புறனிலை முயலு
மண்க ணாளனை நகுகம் யாமே'' (அகம்-32.)

என்னும் அகப்பாட்டுங் கொள்க.

"எழாஅ யாகலி னெழினலந் தொலைய
வழாஅ தீமோ நொதுமலர் தலையே
யேனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த
பகழி யன்ன சேயரி மழைக்க
ணல்ல பெருந்தோ ளோயே கொல்ல
னெறிபொற் பிதிரிற் சிறுபல் காய
வேங்கை வீயுகு மோங்குமலைக் கட்சி
மயிலறி பறியா மன்னோ
பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே.'' (நற்றிணை-13.)

இது தலைவி வேறுபாடு கண்டு ஆராயுந் தோழி தனது ஆராய்ச்சியை மறைத்துக் கூறியது. 'நாட்டத்தானும்' என்னும் உம்மை முற்று, நாட்டமெல்லாந் தழீஇயினமையின். ஆனுருபு இடப்பொருட்டாம். அஃது இடமாக வருகின்ற எட்டனையும் இடத்தியல் பொருளாக உரைக்கவே அவளை நாடுகின்ற காலமும் மேல்வருகின்ற எட்டனையுந் தலைவற்கு உரைக்குங் காலமும் ஒருங்கு நிகழுமென்பதாம். இங்ஙனம்

நாடி மதியுடம்படுக்குந் துணையுந் தலைவற்கு இக்குறை முடிப்பல் என்னாது ஒழுகும்.

குறையுறற்கு எதிரிய கிழவனை மறையுறப் பெருமையிற் பெயர்ப்பினும்—இரவுவலியுற்றுக் குறைகூறத் தொடங்கிய தலைவனைத் தோழி தான் இவ்வொழுகலாறு அறிந்தும் அறிந்திலள் போலத் தலைவன் பெருமை கூறி அவன் குறிப்பினை மாற்றினும்:

தான் அறிந்ததனை மறைத்துக் கூறுதலன்றி அன்பின்மை ஒரு தலையாக உடையளல்லள்.

உதாரணம்:

"கல்லோங்கு சாரற் கடிபுனங் காத்தோம்பு
நல்கூர்ந்தார் மாட்டு நயந்தொழுகித்—தொல்வந்த
வான்றோய் குடிக்கு வடுச்செய்த றக்கதோ
தேன்றோய்பூங் கண்ணியீர் நீர்."

"மறுவொடு பட்டன மாமலை நாட
சிறுகுடியோர் செய்வன பேணார்—சிறுகுடிக்கு
மூதான் புறத்திட்ட சூடேபோ னில்லாதே
தாதாடு மார்ப பழி.

"தகைமாண் சிறப்பிற் சான்றோர்க் கொத்த
வகையமை வனப்பினை யாகலி னுலகமொடு
பாற்படற் பாலை மன்னோ காப்புடைத்
தோங்குய ரடுக்கத் துச் சாந்துவளர் நனந்தலை
நெடுவரை மருங்கிற் குடிமை சான்றோ
ரின்ன ரென்னு தின்பம் வெஃகிப்
பின்னிலை முயற்சியின் வருந்தினு
நும்மோ ரன்னோர்க்குத் தகுவதோ வன்றே."

என வரும்.

" இவளே, கான னண்ணிய காமர் சிறுகுடி
நீனிறப் பெருங்கடல் கலங்கவுள் புக்கு
மீனெறி பரதவர் மகளே
நீயே, நெடுங்கொடி நுடங்கு நியம மூதூர்க்
கடுந்தேர்ச் செல்வன் காதன் மகனே
நிணச்சுறா வறுத்த வுணக்கல் வேண்டி
யினப்பு ளோப்பு மெமக்குநல னெவனோ
புலவு நாறுதுஞ் செலநின் றீமோ
பெருநீர் விளையுளெஞ் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ வன்றே
யெம்ம னோரிற் செம்மலு முடைத்தே."

(நற்றிணை-45.)

இதுவும் அது.

உலகு உரைத்து ஒழிப்பினும்—அவ்வொழுக்கம் அறியாள்போற் கரந்த தோழி உலகத்தாரைப்போல் வரைந்து கொள்ளெனக் கூறித் தலைவனை நீக்கினும்:

உதாரணம்:

" கோடீ ரெல்வளைக் *கொழுமணிக் கூந்த
லாய்தொடி மடவரல் வேண்டுதி யாயிற்
றெண்கழிச் சேயிறாப் படூஉந்
தண்கடற் சேர்ப்ப வரைந்தனை கொண்மோ."

(ஐங்குறு-196.)

அருமையின் அகற்சியும்—அவை கேட்டுப் பிற்றை ஞான்றும் வந்தவன்மாட்டுச் சிறிது நெஞ்சுநெகிழ்ந்த தோழி அங்ஙனங் கூறாது இவள் அரியளெனக் கூறுதலும்:

---

* 'கொழும்பல் கூந்தல்' என்பதும் பாடம்.

இருவருமுள்வழி யவன்வர வுணர்தலின் இருவருள்ள மும் உணர்ந்து அங்ஙனங் கூறினாள்.

"நெருநலு முன்னு ளெல்லையு மொருசிறைப்
புதுவை யாகலிற் கிளத்த லாணி
நேரிறை வளைத்தோ ணின்றோழி செய்த
வாரஞர் வருத்தங் களையா யோவென
வெற்குறை யுறுதி ராயிற் சொற்குறை
யெம்பதத் தெளிய ளல்ல ளெமக்கோர்
கட்காண் கடவு ளல்லளோ பெரும
வாய்கோன் மிளகின் மலையங் கொழுங்கொடி
துஞ்சுபுலி வரிப்புறந் தைவரு
மஞ்சுசூழ் மணிவரை மன்னவன் மகளே."

"தழையொடு தண்கண்ணி தன்மையாற் கட்டி
விழையவுங் கூடுமோ வெற்ப— விழையார்ந்
திலங்கருவி பொன்கொழிக்கு மீர்ங்குன்ற நாட
குலங்கருதி வாழ்வார் மகள்."

அவள் அறிவுறுத்துப் பின் வர என்றலும்—தலைவனை நோக்கி நீ காதலித்தவட்கு நீயேசென்று அறிவித்துப் பின்னர் என்மாட்டு வருகவென்றலும்:

'அவன் அறிவுறுத்து' என்று பாடமோதுவாரும் உளர்.

உதாரணம்:

"தன்னையுந் தானாணுஞ் சாயலாட் கிஃதுரைப்பி
னென்னையு நாணப் படுங்கண்டா—யென்னையே
வேயேர்மென் றோளிக்கு வேறா யினியொருநா
ணீயே யுரைத்து விடு."

இது நீயே யுரையென்றது.

"நாள்வேங்கை *பொன்சொரியு நன்மலை நன்னாட [கை
கோள்வேங்கை போற்கொடிய ரென்னைமார்—கோள்வேங்
யன்னையா னீயு மருந்தழையா மேலாமைக்
கென்னையோ நாளை யெளிது." (திணை, 150-20.)

இது கையுறைமறுத்துப் பின் வருக என்றது.

இவை ஒரு கூற்றாக வருவன வுளவேற் காண்க.

பேதைமை ஊட்டலும்—அங்ஙனம் பின் வருகவென்றுழி முன்வந்தானை அறியாமை ஏற்றிக் கூறலுந், தலைவியையும் அங்ஙனம் அறியாமை யேற்றிக் கூறலும்:

உதாரணம்:

"நெடுந்தேர் கடைஇத் தமியராய் நின்று
கடுங்களிறு காணிரோ வென்றீர்—கொடுங்குழையார்
யானை யதருள்ளு நிற்பரோ தம்புனத்
தேனற் கிளிகடிகு வார்."

"வேங்கை கமழும் வெறிகமழ் தண்சிலம்பின்
வாங்கமை மென்றோட் குறவர் மகளிரேஞ்
சோர்ந்த குருதி யொழுகமற் றிப்புறம்
போந்த திலையக் களிறு."

இவை தலைவனைப் பேதைமை ஊட்டின.

"நறுந்தண் டகரம் வகுள மிவற்றை
வெறும்புதல்போல் வேண்டாது வேண்டி—யெறிந்துழுது
செந்தினை வித்துவார் தங்கை பிறர்நோய்க்கு
நொந்தினைய வல்லளோ நோக்கு." (திணை, 150-24.)

இது தலைவியைப் பேதைமை யூட்டியது.

---

* 'பொன்விளையும்' என்பதும் பாடம்.

"இளையள் விளைவிலள்" என்பதூஉம் இதன்கண் அடங்கும்.

"புன்றலை மந்திக் கல்லா வன்பறழ்
குன்றுழை நண்ணிய முன்றிற் போகா
தெரியகைந் தன்ன வீ ததை யிணர
வேங்கையம் படுசினைப் பொருந்திக் கைய
தேம்பெய் தீம்பால் வெளவலிற் கொடிச்சி
யெழுதெழில் சிதைய வழுத கண்ணே
தேர்வண் சோழர் குடந்தை வாயின்
மாரியங் கிடங்கி னீரிய மலர்ந்த
பெயலுறு நீலம் போன்றன விரலே
பாஅ யவ்வயி றலைத்தலி னானா
தாடுமழை தவழுங் கோடுயர் பொதியி
னோங்கிருஞ் சிலம்பிற் பூத்த
காந்தளங் கொழுமுகை போன்றன சிவந்தே."
(நற்றிணை-379.)

என வரும்.

முன்னுறு புணர்ச்சி முறைநிறுத்து உரைத்தலும்—அங்ஙனம் பேதைமை யூட்டியவழி இவள் இக்குறை முடிப்பளென்று இரந்து ஒழுகினேற்கு இவள் புணர்ச்சி யறிந்திலள் போற் கூறினளென ஆற்றானையவனை யான் அப்புணர்ச்சி நிகழ்ந்தமை அறிவலென்றுகூறி வருத்தந் தீர்த்தலும்:

உதாரணம்:

"நறுந்தண் கூந்தற் குறுந்தொடி மடந்தை
சிறுமுதுக் குறைவி யாயினள் பெரிதென
நின்னெதிர் கிளத்தலு மஞ்சுவ லெனக்கே
நின்னுயி ரன்ன ளாயினுந்
தன்னுறு விழுமங் காத்த லானே."

நின்னெதிர் கிளத்தல் அஞ்சுவல் நீ அவட்கு உரைத்தி யெனக் கருதியென்றலிற் புணர்ச்சி யுணர்ந்தமை கூறினாள்.

அஞ்சி அச்சு உறுத்தலும்—அங்ஙனம் ஆற்றுவித்துங் கடிது குறைமுடியாமையைக் கருதுந் தோழி குரவரைத் தான் அஞ்சித் தலைவியும் அவரை அஞ்சுவளெனக் கூறலும்:

அஞ்சுதல் அச்சென்றாயிற்று. இவ்வச்சங் கூறவே அவன் ஆற்றும்.

உதாரணம்:

"யாஅங் கொன்ற மரஞ்சுட் டியவிற்
கரும்பு மருண்முதல பைந்தாட் செந்தினை
மடப்பிடித் தடக்கை யன்ன பால்வார்பு
கரிக்குறட் டிறைஞ்சிய செறிதாட் பெருங்குரற்
படுகிளி கடிகஞ் சேறு மடுபோ
ரெஃகுவிளங்கு தடக்கை மலயன் கானத்
தார நாறு மார்பினை
வாரன்மற் றைய வருகுவள் யாயே."

இஃது யாயை அஞ்சியது.

"யானை யுழலு மணிகிளர் நீள்வரைக்
கானக வாழ்க்கைக் குறவர் மகளிரே
மேனலு ளைய வருதன்மற் றென்னைகொல்
காணினுங் காய்வ ரெமர்."

இது தமரை அஞ்சிக் கூறியது.

உரைத்துழிக் கூட்டமோடு எஞ்சாது கிளந்த இருநான்கு கிளவியும்—ஆயத்தினீங்கித் தன்னோடு நின்ற தலைவியை அவனோடு கூட்டவேண்டி அவளினீங்கித் தலைவர்க்கு

இன்னுழி எதிர்ப்படுதியென உரைத்தவிடத்துக் கூடுங்கூட்டத்தோடே ஒழியாமற் கிளந்த எண்வகைக்கிளவியும்:

உதாரணம்:

"நெய்தற் பரப்பிற் பாவை *கிடப்பி
யின்குறி வந்தனெ னியறேர்க் கொண்க
செல்கஞ் செலவியங் கொண்மோ வல்கலு
மார லருந்தும் வயிற்ற
நாரை †மதிக்கு மென்மக ளுதலே" (குறுந்-114.)

'வந்தனென்' என்றும 'என்மகள்' என்றும் ஒருமை கூறிச்'செல்கம்' என்ற உளப்பாட்டுப்பன்மையால் தலைவிவரவுங்கூறி இடத்துய்த்தவாறு முணர்த்தினள். 'செலவியங் கொண்மோ' என்றது நீயே அவளைப் போகவிடுவாய் என்றதாம். நாட்டந் தன்மனத்து நிகழாநிற்றலும் அவன்மனத்துக் குறையுணர்த்துதல் நிகழாநிற்றலுமென்னும் இரண்டினையும் எஞ்சாமற் றழீஇநிற்கும் இவ்வெட்டுமென்றற்கு 'எஞ்சாது' என்றார்.

வந்த கிழவனை மாயஞ் செப்பிப் பொறுத்த காரணங் குறித்த காலையும்—தன்முன்னர் வந்து நின்ற தலைவனைத் தோழி எதிர்ப்பட்டுநின்றேயும் வாராதான்போல மாயமேற்றி அதனைப் பொறுத்த காரணங் குறிப்பினாற் கொள்ளக் கூறுங்காலைக்கண்ணும்:

காரணமாவது நீ அரியையாதலின் இவள் ஆற்றாளாமென்று எதிர்கொள்கின்றேமென்றல்; கூட்டம் நிகழ்ந்தபின் தோழி இவ்வாறு கூறுதற்கு உரியளென்று அதன் பின்

---

* 'கிடப்பினென்' என்பதும் பாடம்.

† 'மிதிக்கும்' என்பதும் பாடம்.

வைத்தார். இஃது அவன்வரவை விரும்பியது, வரைவுகடாயதன்று.

உதாரணம்:

“ நெடுங்கயிறு வலந்த குறுங்க ணவ்வலைக்
கடல்பா டழிய வினமீன் முகந்து
துணைபுண ருவகையர் பரத மாக்க
ளிளையரு முதியருங் கிளையுடன் றுவன்றி
யுப்போ யுமண ரருந்துறை போக்கு
மொழுகை நோன்பக டொப்பக் குழீஇ
யயிர்திணி யடைகரை யொலிப்ப வாங்கிப்
பெருங்களந் தொகுத்த வுழவர் போல
விரந்தோர் வறுங்கல மல்க வீசிப்
பாடுபல வைத்துக் கொளளை சாற்றிக்
கோடுயர் திணிமணற் றுஞ்சுந் துறைவ
பெருமை யென்பது கெடுமோ வொருநாண்
மண்ணுறு முத்த மரும்பிய புன்னைத்
தண்ணறுங் கானல் வந்துநும்
வண்ண மெவனோ வென்றனிர் *சொலினே” (அகம்-30.)

இதனால் தம்மான் இடையூறெய்தி வருந்துகின்றானை ஒருநாள் வந்திலிரென மாயஞ்செப்பியவாறும், நீர்வாராமையின் வண்ணம் வேறுபடுமென ஏற்றுக்கோடுமெனக் காரணங் கூறியவாறுங் காண்க. தம்மேல் தவறின்றாகக் கூறுங் காலத்து இது கூறுவரென்றற்குக் ‘குறித்தகாலை’ யென்றார்.

புணர்ந்தபின் அவன்வயின் வணங்கற்கண்ணும்—அக்கூட்டத்தின்பின் முற்காலத்துப் பணிந்து பின்னின்றானைத் தோழிதானே பணிந்தொழுகுமிடத்தும்:

* ‘செலினே’ என்பதும் பாடம்.

உதாரணம்:

"இவளே, நின்சொற் கொண்ட வென்சொற் றேறிப்
பசுநனை ஞாழற் *பல்கிளை யொருசிறைப்
புதுநல னிழந்த புலம்புமா ருடைய
ளுதுக்காண் டெய்ய வுள்ளல் வேண்டு
நிலவு மிருளும் போலப் புலவுத்திரைக்
கடலுங் கானலுந் தோன்று
†மடல்சூழ் பெண்ணையெஞ் சிறுநல் லூரே." (குறுந்-81.)

"வாங்குகோனெல்" என்னுங் குறிஞ்சிக்கலியுள்,

"அரவின் பொறியு மணங்கும் புணர்ந்த
வுரவுவின் மேலசைத்த கையை யொராங்கு
நிரைவளை முன்கையென் றோழியை நோக்கிப்
‡படுகிளி பாயும் பசுங்குர லேனல்
கடிதன் மறப்பித்தா யாயி னினிநீ
நெடிதுள்ள லோம்புதல் வேண்டும்..." (கலி—50.)

எனவும்,

"கடுமா கடவுறூஉங் கோல்போ லெனைத்துங்
கொடுமை யிலையாவ தறிந்து மடுப்பல்
வழைவளர் சாரல் $வருடை நன்மான்
குழவி வளர்ப்பவர் போலப் பாராட்டி
யுழையிற் பிரியிற் பிரியு
மிழையணி யல்குலென் றோழியது கவினே." (கலி—50.)

---

* 'பல்சினை' என்பதும் பாடம்.

† 'மடறூழ்' என்பதும் பாடம்.

‡ 'படிகிளி'...'பைங்குரல்' என்பனவும் பாடம்.

$ 'வரிவளை தன்மான்' என்பது கலித்தொகை அச்சுப்பிரதியிற் காணப்படும் பாடம்.

'வருடை சரபம் வரையா டாகும்'—என்பது பிங்கலந்தை.

எனவும் வரும்.

இத்துணையும் ஓர்கூட்டங் கூறினர்.

குறைந்து அவட் படரினும—தலைவன் இரந்து பின்னின்றமைகண்டு தோழி மனம் நெகிழ்ந்து தான்குறைந்து தலைவியிடத்தே சென்று குறைகூறினும்:

உதாரணம்:

"*வளையணி முன்கை வாலெயிற் †றின்னகை
யிளையா ராடுந் தளையவிழ் கானல்
‡விருந்தென வினவி னின்ற
§நெடுந்தோ ளண்ணற் கண்டிகும் யாமே." (ஐங்குறு-198.)

என வரும்.

மறைந்தவள் அருக—நாண்மிகுதியால் தனது வேட்கை மறைந்த தலைவி அக்கூற்றிற்கு உடம்படாது நிற்றலால்; தன்னொடும் அவளொடும் முதன்மூன்று அளைஇ—தலைவனோடுந் தலைவியோடும் நிகழ்ந்த இயற்கைப்புணர்ச்சி முதலிய மூன்றனையுந் தான் அறிந்தமை குறிப்பான் உணர்த்தி; பின்னிலை பலவேறு நிகழும் மருங்கினும்—இரந்து பின்னிற்றல் பலவாய் வேறுபட்டு நடக்குமிடத்தும்:

அவை பெருந்தன்மையானொருவன் யானைமுதலியன வினையுந் தழையுங் கண்ணியுங் கொண்டும் இப்புனத்து வாரா

* 'வளையறை' என்பதும் பாடம்.
† 'அமர்நகை' என்பதும் பாடம்.
‡ 'குறுந்துறை' என்பதும் பாடம்.
§ 'நெடுந்தே ரண்ணலை' என்பதும் பாடம்.

நின்றானெனவும், அவன் என்மாட்டுப் பெரிதுங் குறையுடையனெனவும், அவன் குறைமுடியாமையின் வருந்தாநின்றானெனவும், அத்தழை நீ ஏற்றல்வேண்டுமெனவும், அக்குறை முடித்தற்கு இஃதிடமெனவும், யான்கூறியது கொள்ளாயாயின் நினக்குச் செறிந்தாருடன் உசாவிக் குறைமுடிப்பாயெனவும், மறுப்பின் மடலேறுவனெனவும் வரைபாய்வனெனவும், பிறவாற்றானுங் கூறிக் குறைநயப்பித்தலாம்.

உதாரணம்:

"புனைபூந் தழையல்குற் பொன்னன்னாய் சாரற்
றினைகாத் திருந்தேம்யா மாக—வினைவாய்த்து
மாவினவு வார்போல வந்தவர் நம்மாட்டுத்
தாம்வினவ லுற்றதொன் றுண்டு." (ஐந்திணை, 50-14.)

"கைதையந் தண்கானற் காலையு மாலையு
மெய்த வரினு மிதுவெங் குறையென்னான்
செய்தழையுங் கண்ணியுஞ் சேர்ந்துழி வைத்திறந்தா
னுய்யலன் கொல்லோ வுணரலனே யென்றியால்"

"ஒருநாள் வாரல னிருநாள் வாரலன்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியெ
னன்னர் நெஞ்ச நெகிழ்ந்த பின்றை
வரைமுதிர் தேனிற் போகி யோனே
யாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
வேறுபுல னன்னாட்டுப் பெய்த
வேறுடை மழையிற் கலுழுமென் னெஞ்சே." (குறுந்-176.)

"புணர்துணையோ டாடும் பொறியலவ னோக்கி
யிணர்ததை பூங்கான லென்னையு நோக்கி
யுணர்வொழியப் போன வொலிதிரைநீர்ச் சேர்ப்பன்
வணர்சுரியைம் பாலோய் வண்ணமுணா ரேனால்"

(சிலப்-கானல்-31.)

"ஒரை யாய மறிய வூர
னல்கினன் றந்த நறும்பூந் தண்டழை
யாறுபடி னெவனோ தோழி வீறுசிறந்து
நெடுமொழி விளக்குந் தொல்குடி
வடுநாம் படுத்த லஞ்சுது மெனவே."

இது கையுறை ஏற்பத் தலைவிக்குக் கூறியது.

"சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா
வலங்குகுலைக் காந்த டூண்டித் தாதுகக்
கன்றுதாய் மருளுங் குன்ற நாட
னுடுக்குந் தழைதந் தனனே யவையா
முடுப்பின் யாயஞ் சிதுமே கொடுப்பிற்
*கேளிடைக் கேடஞ் சுதுமே யாயிடை
வாடல கொல்லோ தாமே யவன்மலைப்
போருடை வருடையும் பாயாச்
சூருடை யடுக்கத்த கொயற்கருந்தழையே." (நற்றிணை-359.)

இதுவும் அது.

"இலைசூழ்செங் காந்த ளெரிவாய் முகையவிழ்த்த வீர்ந்தண் [வாடை
கொலைவே னெடுங்கட் கொடிச்சி கதுப்புளருங் குன்ற நாட
னுலைபடு வெந்நோ யுழக்குமா லந்தோ
முலையிடை நேர்பவர் நேரு மிடமிது மொய்குழலே."

"அவ்வளை வெரிந னரக்கீர்த் தன்ன
செவ்வரி யிதழ சேணுறு நறவி
னறுந்தா தாடிய தும்பி பசுங்கேழ்ப்
பொன்னுரை கல்லி னன்னிறம் பெறூஉம்
வளமலை நாட னெருந னம்மொடு
கிளைமலி சிறுதினைக் கிளிகடிந் தசைஇச்
சொல்லிடம் பெறாஅன் பெயர்ந்தனன் பெயர்ந்த
தல்ல லன்றது காதலந் தோழி

* 'கேளுடை' என்பதும் பாடம்.

தாதுண் வேட்கையிற் போதுதெரிந் தூதா
வண்டோ ரன்னவவன் தண்டாக் காட்சி
கண்டுங் கழறொடி வலித்தவென்
பண்பில் செய்தி நினைப்பா கின்றே." (நற்றிணை-25.)

"மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்
வாலியோ னன்ன வயங்குவெள் ளருவி
யம்மலைக் கிழவோ னந்நயந் தென்றும்
வருந்தின னென்பதோர் வாய்ச்சொற் றேறாய்
நீயுங் கண்டு நுமரொடு மெண்ணி
யறிவறிந் தளவல் வேண்டு மறுதரற்
கரிய வாழி தோழி பெரியோர்
நாடி நட்பி னல்லது
நட்டு நாடார்தம் மொட்டியோர் திறத்தே." (நற்றிணை-32.)

"மறவல் வாழி தோழி துறைவர்
கடல்புரை பெருங்கிளை நாப்பண்
மடல்புனைந் தேறினிற் பாடும் பொழுதே."

என வரும்.

இன்னும் வேறுபட வருவனவெல்லாம் ஈண்டு அடக்கிக்கொள்க.

நன்னயம் பெற்றுழி நயம்புரியிடத்தினும்—அங்ஙனந் தோழி கூறிய குறையினை அவள் அருளப் பெற்றவழி அதனைத் தலைவற்குக் கூறுதற்கு விரும்புமிடத்தும்:

அவை தலைவனாற்றாமை கண்டு தோழி கையுறையெதிர்தலும், இரவுக்குறியும் பகற்குறியும் நேர்தலுங், குறியிடங்காட்டலும், பிறவுமாம்.

உதாரணம்:

"பொன்மெலியு மேனியாள் பூஞ்சுணங்கின் மென்முலைசு
ளென்மெலிய வீங்கினவே பாவமென்—றென்மெலிவிற்
கண்கண்ணி வாடாமை யானல்ல *வென்றுரைத்தா
லுண்கண்ணி வாடா ளுடன்று." (திணை, 150-21.)

இதனுட் கண்கண்ணி, குறுங்கண்ணி.

"நிலாவி னிலங்கு மணன்மலி மறுகிற்
புலாலஞ் சேரிப் புல்வேய் குரம்பை
யூரென வுணராச் சிறுமையொடு நீருடுத்
†தின்னு வுறையுட் டாயினு மின்ப
மொருநா ளுறைந்திசி னோர்க்கும் வழிநாட்
டம்பதி மறக்கும் பண்பி னெம்பதி
வந்தனை சென்மோ ‡வளைமேய் பரப்ப
பொம்மற் படுதிரை கம்மென வுடைதரு
மானேங் கொருசிறைப் பலபா ராட்டி
யெல்லை யெம்மொடு கழிப்பி யெல்லுற
§நற்றேர் பூட்டலு முரியி ரற்றன்று
சேர்ந்தனிர் செல்குவி ராயின் யாமு
மெம்வரை யளவையிற் பெட்குவ
நும்மொப் பதுவோ விரித்திசி னெமக்கே." (அகம்-199.)

"கடும்புலால் புன்னை கடியுந் துறைவ
படும்புலாற் புட்கடிவான் புக்க—¶வடும்புலாந்
தாழைமா னாழற் றதைந்துயர்ந்த தாழ்பொழி
லேழைமா னேக்கி யிடம்." (திணை, 150-44.)

---

* 'என்றுற்றுன்' என்பதும் பாடம்.

† 'இன்னு வுறையீ டாயினும்' என்பதும் பாடம்.

‡ 'வளைமேய் பரப்ப' என்பது விளி.

§ 'நற்றேர் கூட்டலும்' என்பதும் பாடம்.

¶ 'தடம்புலாம்' என்பதும் பாடம்.

என வரும். இன்னும் 'நயம்புரியிடத்தும்' என்றதனால் அவன்வரவினைத் தலைவிக்குக் கூறுதலுங் கொள்க.

" இவர்பரி நெடுந்தேர் மணியு மிசைக்கும்
பெயர்பட வியங்கிய விளையரு மொலிப்பர்
கடலாடு வியலணிப் பொலிந்த நறுந்தழைத்
திதலை யல்கு னலம்பா ராட்டிய
வருமே தோழி வார்மணற் சேர்ப்ப
னிறைபட வோங்கிய முழவுமுதற் புன்னை
மரவரை மறைகம் வம்மதி பானாட்
பூவிரி கானற் புணர்குறி வருந்துணை
மெல்லிணர் நறும்பொழிற் சாரு
வல்ல லரும்படர் காண்சநாஞ் சிறிதே."

இது தோழி தலைவிக்குப் பகற்குறிக்கண் தலைவன் வருகின்றமை காட்டி அவன் வருந்தங் காண யாம் மறைந்து நிற்பாம் வம்மோவெனக் கூறியது.

எண்ணரும் பன்னகை கண்ணிய வகையினும்—தலைவன் இளிவந்தொழுகுதற்குப் பொறாத தோழி அவன் இளிவரவு உணர்த்துங் கருத்தினளாய்ச் செயற்கையாக ஆராய்தற்கு அரியவாய் வரும் ஒன்றல்லாப் பலநகைகுறித்த பகுதிக்கண்ணும்:

அவை *'என்னை மறைத்தலெவனாகிபர்' என்றலும், அறியாள் போறலுங், குறியாள் கூறலும், படைத்துமொழி கிளவியுங், குறிப்புவேறுகொளலும், பிறவுமாம்.

உதாரணம்:

" நிறைத்திங்கள் சேர்ந்தோடு நீண்மலை நாட
மறைக்கப் படாதேனை மன்னு—மறைத்துக்கொண்

* இறையனாரகப் பொருள், 12-ஆம் சூத்திரம்.

டோடிஞு யாதலா லொண்டொடியா டன்பக்கங்
கூடக் கிடந்ததொன் றில்."

" மன்னேர்மன் சாய லவருண் மருடீர
வின்ஞர்க ணென்ப தறியேஞன்—மின்னூருங்
கார்கெழு தோன்றற் கணமலை நன்ஞட
யார்கண்ண தாகுங் குறை."

" தன்னெவ்வங் கூறிஞ நீசெய்த வருளின்மை
யென்னையு மறைத்தாளென் ருேழி யதுகேட்டு
வின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூற ருஞணி."(கலி-44.)

இது பழிகூறுவேனென்று தலைவி குறியாததொன்றைத் தோழிகூறினது.

" விருந்தின ராதலின் வினவுதி ரதனெதிர்
திருந்துமொழி மாற்றந் தருதலு மியல்பெனக்
கூறுவ தம்மயா ஞறுபல வருமென
வஞ்சுவன் வாழி யறைய வெஞ்சா
தெண்ணில ரெண்ணியது முடிப்பர்
கண்ணிலர் கொடியரிவ டன்னை மாரே."

இது நிகழாது நிகழ்வதாகப் படைத்துமொழிந்தது.

" நெறிநீ ரிருங்கழி நீலமுஞ் சூடாள்
பொறிமாண் வரியலவ *ஞடலு மாடாள்
சிறுநுதல் வேரரும்பச் சிந்தியா ணின்ருட்
கெறிநீர்த்தண் சேர்ப்பயா னென்சொல்லிச் செல்கோ."

இது குறிப்பு வேறு கொண்டாளென்றது.

புணர்ச்சி வேண்டினும் — தலைவன் பகற்குறியையும் இரவுக் குறியையும் விரும்பிக் கூறுமிடத்தும்: தோழிமேன கிளவி. அவை பலவகைய.

* 'ஆட்டலு மாட்டாள்' என்பதும் பாடம்.

உதாரணம்:

“நன்னலஞ் சிதைய நாடொறும் புலம்பப்
பொன்னிணர் வேங்கை துறுகற் றூஅ
யிரும்பிடி வெரூஉ நாடற்கோர்
பெருங்க ணோட்டஞ் செய்தன்றோ விலமே.”

இது தோழி தலைவியைப் பகற்குறி நயப்பித்தது.

“மாயவனுந் தம்முனும் போலே மறிகடலுங்
கானலுஞ்சேர் வெண்மணலுங் காணாயோ—கான
விடையெலா ஞாழலுந் தாழையு மார்ந்த
புடையெலாம் புன்னை புகன்று.” (திணை, 150-58.)

“ஊர்க்கு மணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்து மன்றே சிறுகான் யாறே
யிரைதேர் வெண்குரு கல்ல தியாவதுந்
துன்னல் போகின்றாற் பொழிலே யாமெங்
*கூழைக் கேர்மணங் குறுகஞ் சேறு
மாண்டும் வருகுவள் பெரும்பே தையே.” (குறுந்-113.)

இவை பகற்குறிநேர்ந்து இடங்காட்டியன.

“செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேய குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.” (குறுந்-1.)

இது தோழி தலைவியை இடத்துய்த்து நீங்கியது.

“ஆர்கலி வெற்பன் மார்புபுணை யாகக்
கோடுயர் நெடுவரைக் கவாஅற் பகலே
பாடின் னருவி யாடுத லினிதே

* ‘கூழைக் கேர்மணங் கொணர்கஞ் சேறும்’ என்பதும் பாடம்.

நிரையிதழ் பொருந்தாக் கண்ணோ டிரவிற்
பஞ்சி வெண்டிரிச் செஞ்சுடர் நல்லிற்
பின்னுவீழ் சிறுபுறந் தழீஇ
யன்னை முயங்கத் துயிலின் னாதே." (குறுந்-353.)

இஃது இரவுக்குறிநயந்த தலைவன் சிறைப்புறமாகப் பகற்குறிநேர்வாள்போல் இரவுக்காப்புமிகுதி கூறியது.

'பாடின்னருவி ஆட' என்றாள் அதன்கண் உதவினா னென்பதுபற்றி; அல்லது களவிற்கு உடன் ஆடுதலின்று.

"சிறுவர்க் குறுகை யாகத் தெறுவர
வீங்கும் வருபவோ தேம்பாய் துறைவ
சிறுநா வெண்மணி விளரி யார்ப்பக்
கடுமா நெடுந்தேர் நேமி போகிய
விருங்கழி நெய்தல் போல
வருந்தின ளளியணீ யருந்திசி னோளே."

இது தலைவன் இரவுக்குறிநயந்தவனைத் தோழி மறுத்தது.

"நாகுபிடி நயந்த *முளைக்கோட் டிளங்களிறு
குன்ற நண்ணிக் குறவ ரார்ப்ப
மன்றம் போழு நாடன் றோழி
சுனைப்பூங் குவளைத் தொடலை தந்துந்
தினைப்புன மருங்கிற் படுகிளி யோப்பியுங்
காலை வந்து மாலைப் பொழுதி
னல்லக நயந்துதான் †மயங்கிச்
சொல்லவு மாகா தஃகி யோனே." (குறுந்-346.)

---

* 'முனைக்கோடு' என்பதும் பாடம்.
† 'உயங்கி' என்பதும் பாடம்.

இது தோழி கிழத்தியை இரவுக்குறி நயப்பித்தது.

"தண்ணந் துறைவன் கடும்பரி மான்றேர்
காலை வந்து மாலை பெயரினும்
பெரிது புலம்பின்றே கானல்
சிறிது புலம்பினமாற் றோழி நாமே."

இது தலைவியது ஆற்றாமைகண்டு நம்வருத்தந் தீர்தற்கு இரவுக்குறியும் வேண்டுமென்றது.

"ஏன மிடந்திட்ட வீர்மணிகொண் டெல்லிடைக்
கானவர் மக்கள் கனலெனக் கைகாய்த்தும்
வானுயர் வெற்பன் வருவான்கொ றோழிநம்
மேனி பசப்புக் கெட."

இது தலைவனை வருவனென்றது.

"சுறவுப்பிற ழிருங்கழி நீந்தி வைகலு
மிரவுக்குறிக் கொண்கன் வந்தனன்
விரவுமணிக் கொடும்பூண் விளங்கிழை யோயே."

இஃது இரவுக்குறி. தலைவன் வந்தமை தலைவிக்குக் கூறியது.

"அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தன்னயத் தமன்ற கூதளங் குழைய
வின்னிசை யருவி *யோடு மென்னதூஉங்
கேட்டியோ வாழிவேண் டன்னைநம் படப்பை
யூட்டி யன்ன வொண்டளிர்ச் செயலை
யோங்குசினைத் தொடுத்த வூசல் பாம்பென
முழுமுத றுமிய வுருமெறிந் தன்றே
யின்னுங் கேட்டியோ வெனவுமஃ தறியா

* 'பாடும்' என்பதும் பாடம்.

என்னையுங் கனைதுயின் மடிந்தன ளதன்றலை
மன்னுயிர் மடிந்தன்றாற் பொழுதே காதலர்
வருவ ராயிற் பருவ மிஃதெனச்
சுடர்ந்திலங் கெல்வளை நெகிழ்ந்த நம்வயிற்
படர்ந்த வுள்ளம் பழுதின் றாக
வந்தனர் வாழி தோழி யந்தரத்
திமிழ்பெய றலைஇய வினப்பல் கொண்மூத்
தவிர்வில் வெள்ளந் தலைத்தலை சிறப்பக்
கன்று காலோயுங் கடுஞ்சுழி நீத்தம்
புன்றலை மடப்பிடிப் பூசல் பலவுடன்
வெண்கோட் டியானை விளிபடத் துழவு
மகல்வாய்ப் பாந்தட் படாஅப்
பகலு மஞ்சும் பனிக்கடுஞ் சுரனே." (அகம்-68.)

இது தாயது துயிலுணர்ந்து தலைவன் வந்தமை தோழி தலைவிக்குக் கூறிக் குறிவயிற்சென்றது.

"சேய்விசும் பிவர்ந்த *செழுங்கதிர் மண்டில
மால்வரை மறையத் துறைபுலம் பின்றே
யிறவருந்தி யெழுந்த கருங்கால் வெண்குருகு
வெண்குவட் டருஞ்சிறைத் தாஅய்க் கரைய
கருங்கோட்டுப் புன்னை யிறைகொண் டனவே
கணைக்கால் மாமலர் கரப்ப மல்குகழித்
துணைச்சுறா வழங்கலும் வழங்கு மாயிடை
யெல்லிமிழ் பனிக்கடன் மல்குசுடர்க் கொளீஇ
யெமரும் வேட்டம் புக்கன ரதனாற்
றங்கி னெவனோ தெய்ய பொங்குபிசிர்
முழவிசைப் புணரி யெழுதரு
முடைகடற் படப்பையெம் முறைவி னூர்க்கே
(நற்றிணை-67.)

*'செங்கதிர்' என்பதும் பாடம்.

இஃது இரவுக்குறி வேண்டிய தலைவற்குத் தோழி உடன்பட்டுக் கூறியது.

"ஆம்ப னுடங்கு மணித்தழையு மாரமுந்
தீம்புன லூரன் மகளிவ—ளாய்ந்தநறுந்
தேமலர் நீலம் பிணையல் செறிமலர்த்
தாமரை தன்னையர் பூ."

இஃது இரவுக்குறி நேர்ந்த தோழி இந்நிலத்தின்கண் நீ வருங்கால் இன்னபெற்றியான் வருவாயாகவென்றது.

"கடற்கானற் சேர்ப்ப கழியுலாஅய் நீண்ட
வடற்கானற் புன்னைதாழ்ந் தாற்ற—மடற்கான
லன்றி லகவு மணிநெடும் பெண்ணைத்தே
மூன்றி லிளமணன்மேன் மொய்த்து." (திணை, 150-56.

இஃது இரவுக்குறியிடங் காட்டித் தோழி கூறியது.

"எம்மூர் வாயி லொண்டுறைத் தடைஇய
கடவுண் முதுமரத் துடனுறை பழகிய
தேயா வளைவாய்த் தெண்கட் கூருகிர்
வாய்ப்பறை யசாஅம் வலிமுந்து கூகை
மையூன்றெரிந்த *நெய்வெண் புழுக்க
லெலிவான் சூட்டொடு மலியப் பேணுது
மெஞ்சாக் கொள்கையெங் காதலர் வரனசைஇத்
துஞ்சா தலமரு பொழுதி
னஞ்சுவரக் கடுங்குரல் பயிற்று தீமே." (நற்றிணை-83.)

இஃது இரவுக்குறிவந்த தலைவன் சிறைப்புறமாக கூகைக்கு உரைப்பாளாய்த் தோழி கூறியது.

"நிலவு மறைந்தன் றிருளும் பட்டன்
றோவத் தன்ன விடனுடை வரைப்பிற்

* 'நெய்யுண்' என்பதும் பாடம்.

*பாவை யன்ன பிற்புறங் காக்குஞ்
சிறந்த செல்வத் தன்னையுந் துஞ்சினள்
கெடுத்துப்படு நன்கல மெடுத்துக்கொண் டாங்கு
நன்மார் படைய முயங்கி மென்மெலக்
கண்டனம் வருகஞ் சென்மோ தோழி
கீழு மேலுங் காப்போர் நீத்த
வறுந்தலைப் பெருங்களிறு போலத்
தமியன் வந்தோன் பனியலை நிலையே." (நற்றிணை-182.)

இது தலைவனைக்கண்டு முயங்குகம் வம்மோ என்றது.

வேண்டாப் பிரிவினும்—தலைவன்றான் புணர்ச்சியை விரும்பாது பிரிவை விரும்பிய இடத்தும்:

அப்பிரிவு †கண்டாதிரத்தலை முனிந்த மற்றையவழி 'இட்டுப்பிரிவும் அருமைசெய் தயர்த்தலு'மாம்; ஆண்டுத் தலைவற்குந் தலைவிக்குங் கூறுவனகொள்க.

உதாரணம்:

"முத்த மரும்பு முடத்தாண் முதிர்புன்னை
தத்துந் திரையலைக்குந் தண்ணங் கடற்சேர்ப்ப
சித்திரப் பூங்கொடியே யன்னாட் கருளியாய்
வித்தகப் பைம்பூணின் மார்பு."

"இறவுப்புறத் தன்ன பிணர்படு தடவுமுதற்
சுறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை
பெருங்களிற்று மருப்பி னன்ன வரும்புமுதிர்பு
நன்மா ணுழையின் வேறுபடத் தோன்றி
விழவுக்களங் கமழு முரவுநீர்ச் சேர்ப்ப
வினமணி நெடுந்தேர் பாக னியக்கச்
செலீஇய சேறி யாயி னிவளே

* 'பாவை யன்ன நப்புறங் காக்கும்' என்பதும் பாடம்.

† 'மறைந்தவற் காண்டல்' (தொல்- களவு-20) என்னும் சூத்திரத்திற் காண்க.

வருவை யாகிய சின்னுள்
வாழ்வா ளாத *லறிந்தனை சென்மே." (நற்றிணை-19.)

இது பிரிவுவேண்டியவழிக் கூறியது.

"சாரற் பலவின் கொழுந்துணர் நறும்பழ
மிருங்கல் விடரளை †வீழ்ந்தன வெற்பிற்
பெருந்தே ‡னிருலொடு கீறு நாடன்
பேரமர் மழைக்கண் கலுழத்தன்
சீருடை நன்னாட்டுச் செல்லு மன்னாய்." (ஐங்குறு-214.)

எனவும் வரும்.

வேளாண் பெருநெறி வேண்டிய இடத்தும்—தலைவற்குத் தாஞ் சிலகொடுத்தலைத் தலைவி வேண்டியவிடத்தும்:

அது தலைவி §'வேளாணெதிரும் விருந்தின்கண்' தோழி கூறுவதாம்.

உதாரணம்:

"பன்னா ளெவ்வந் தீரப் பகல்வந்து
புன்னையம் பொதும்ப ரின்னிழற் கழிப்பி
மாலை மால்கொள நோக்கிப் பண்ணாய்ந்து
வலவன் வண்டே ரியக்க நீயுஞ்
செலவுவிருப் புறுத லொழிகதி லம்ம
செல்லா நல்லிசைப் பொலம்பூட் டிரையன்
பல்பூங் கானற் பவத்திரி யன்னவிவ
ணல்லெழி லிளநலந் தொலைய வொல்லெனக்
கழியே யோத மல்கின்று வழியே

* 'நற்கறிந்தனை' என்பதும் பாடம்.
† 'வீழ்ந்தென' என்பதும் பாடம்.
‡ 'இருஅல்' என்பதும் பாடம்.
§ 'இருவகைக்குறி பிழைப்பாகிய விடத்தும்' (தொல்-கள-16) என்னும் சூத்திரத்திற் காண்க.

வள்ளெயிற் றிறவொடு வயமீன் கொட்குஞ்
சென்றோன் மன்ற மான்றன்று பொழுதென
வின்றிறத் தவலம் வீட வின்றிவட்
செப்பி னெவனோ பூக்கேழ் புலம்பப்
*பசுமீ னொடுத்த வெண்ணென்மாத் தயிர்மிதி
மிதவை மாவார் குநவே வினக்கே
வடவர் தந்த வான்கேழ்ச் சாந்தங்
குடபுல வுறுப்பிற் கூட்டுபு விகழ்த்தி
வண்டிமிர் நறுஞ்சாந் தயர்குவந் திண்டிமி
லெல்லுத்தொழின் மடுத்த வல்வினைப் பரதவர்
கூருளிக் கடுவிசை மண்டலிற் பாய்ந்துடன்
கோட்சுறாக் கிழித்த கொடுமுடி நெடுவலை
தண்கட லசைவளி யெறிதொறும் வினைவிட்டு
முன்றிற் றாழைத் தூங்குந்
தெண்டிரைப் பரப்பினெம் முறைவி னூர்க்கே.''

(அகம்-340.)

இதனுள் தனக்கும் புரவிக்குங் கொடுப்பன கூறித் தடுத்தவாறு காண்க.

†'' நாள்வலை முகந்த'' (அகம்-299) என்பதும் அது.

புணர்ந்துழி உணர்ந்த அறிமடச் சிறப்பினும்—இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்தகாலத்து அவன் தீங்கு உணராதவனை நன்றாக உணர்ந்த அறிவினது மடப்பங் கூறித் தங் காதற்சிறப்பு உரைத்த இடத்தும்:

உதாரணம்:

'' சுரஞ்செல் லியானைக் கல்லுறு கோட்டிற்
றெற்றென விறீஇயரோ வைய மற்றியா

* 'பசுமீ னெடுத்த' என்பதும் பாடம்.

† இச்செய்யுளை 424-ஆம் பக்கத்திற் காண்க.

நம்மொடு நக்க வால்வெள் ளெயிறே
பாணர் பசுமீன் சொரிந்த மண்டைபோ
லெமக்கும் பெரும்புல வாகி
நும்மும் பெறேஎ மிறீஇயரெம் முயிரே." (குறுந்-169.)

இஃது அவனோடு நகுதற்குத் தோன்றிய உணர்வு இன்றியமையாமை கூறிக் காதற்சிறப்பு உரைத்தது.

ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்—தலைவற்குத் தலைவியைப் பாதுகாத்துக்கொள்ளெனக் கூறுங் கிளவியது பகுதிக்கண்ணும்: தோழிமேன கிளவி.

பகுதியாவன வரைவிடைப்பிரிவு முதலிய பிரிவிடத்தும் புனத்திடைப் புணர்ச்சியின்றி நீங்குமிடத்தும் பிற விடத்துங் கூறுவனவாம்.

உதாரணம்:

"நனைமுதிர் ஞாழற் சினைமரு டிரள்வீ
நெய்தன் மாமலர்ப் பெய்த போல
வூதை தூற்று முரவுநீர்ச் சேர்ப்ப
தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட்
டன்னா யென்னுங் குழவி போல
வின்னா செய்யினு மினிதுதலை யளிப்பினு
நின்வரைப் பினளென் றோழி
தன்னுறு விழுமங் களைஞரோ விலளே." (குறுந்-397.)

"பெருநன் றாற்றிற் பேணரு முளரே
வொருநன் றுடைய ளாயினும் புரிமாண்டு
புலவி தீர்வழி மதியிலை கவரப்
பாடமை யொழுகிய தண்ணறுஞ் சாரன்
மென்னடை மரையா துஞ்சு
நன்மலை நாட நின்னல திலளே." (குறுந்-115.)

"எறிந்தெமர் தாமுழுத *வின்குர லேனன்
மறந்துங் கிளியினமும் வாரா—கறங்கருவி
மாமலை நாட மடமொழி தன்கேண்மை
நீமறவ னெஞ்சத்துக் கொண்டு." (ஐந்திணை, 50-18.)

"அளிய தாமே செவ்வாய்ப் பைங்கிளி
குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கா
லிருவி நீள்புனங் கண்டும்
பிரித †றேற்றாப் பேரன் பினவே." (ஐங்குறு-284.)

இது தினை அரிந்துழிக் கிளியை நோக்கிக் கூறுவாள் போற் சிறைப்புறமாக ஓம்படுத்தது. இன்னும் ஓம்படைக் கிளவியென்றதற்கு இவளை நீ பாதுகாத்துக்கொள்ளென்று தலைவன் கூறுங் கிளவியது பகுதிக்கண்ணுமென்றும் பொருள் கூறுக.

"பிணங்கரில் வாடிய பழவிற னனந்தலை
யுணங்கூ ணுயத் தோரான் றெண்மணி
பைய விசைக்கு மத்தம் வைவெயிற்
றிவளொடுஞ் செலினோ நன்றே குவளை
நீர்சூழ் மாமல ரன்ன கண்ணழக்
கலையொழி பிணையிற் கலங்கி மாறி
யன்பிலி ரகறி ராயி னென்பர
மாகுவ தன்றிவ ளவல நாகத்
தணங்குடை யருந்தலை யுடலி வலனேர்
பார்கலி நல்லேறு திரிதருங்
கார்செய் மாலை வரூஉம் போழ்தே." (நற்றிணை-37.)

இது வரைவிடைப் பிரிகின்றான் ஆற்றுவித்துக்கொண்டிரு என்றாற்குத் தோழி கூறியது.

---

* 'ஏர்ங்குரல்' என்பதும் பாடம்.

† 'தோற்றா' என்பதும் பாடம்.

செங்கடுமொழியாற் சிதைவுடைத்தாயினும்—தோழி செவ்வனங் கூறுங் கடுஞ்சொற்களால் தலைவி நெஞ்சு சிதைவுடைத்தாயினும் : ஆண்டுந் தோழிமேன கிளவி.

அவை தலைவனை இயற்பழித்தலுந் தலைவியைக் கழறலுமாம்.

உதாரணம்:

"கௌவையம் பெரும்பழி தூற்ற நலனழிந்து
பைதலஞ் சிறுநுதல் பசலை பாய
நம்மிகற் படுத்த வவரினு மவர்நாட்டுக்
குன்றங் கொடியகொ றோழி
யொன்றுந் தோன்று மழைமறைந் தனவே."

இது வரைவிடைப் பருவங்கண்டு அழிந்த தோழி இயற்பழித்தது.

"மாசறக் கழீஇய யானை போலப்
பெரும் பெயலுழந்த விரும்பிணர்த் துறுகல்
பைத லொருதலை சேக்கு நாட
னோய்தந் தனனே தோழி
பசலை *யார்ந்தன குவளையங் கண்ணே." (குறுந்-13.)

"கேழ லுழுத கரிப்புனக் கொல்லையுள்
வாழை முதுகாய் கடுவன் புதைத்தயருந்
தாழருவி நாடன் றெளிகொடுத்தா னென்றோழி
நேர்வளை நெஞ்சூன்று கோல்." (ஐந்திணை, 70-11.)

இஃது அவன் சூளுறவு பொய்த்ததெனை இயற்பழித்தது.

---

* 'ஆன்றன' என்பதும் பாடம்.

"மகிழ்நன் மார்பே வெய்யை யானீ
யழியல் வாழி தோழி நன்னன்
னறுமா கொன்று நாட்டிற் போக்கிய
வொன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமொற் சிறிதே." (குறுந்-73.)

"மெய்யிற் றீரா மேவரு காமமொ
டெய்யா யாயினு முரைப்பல் றோழி
கொய்யா முன்னுங் குரல்வார் முதுதினை
யருவி *யார்ந்த பைங்கா றேறு
மிருவி தோன்றிய பலவே நீயே
முருகு முரண்கொள்ளுந் தேம்பாய் கண்ணிப்
பரிபன் னாயொடு பன்மலைப் படரும்
வேட்டுவற் பெறலோ டமைந்தனை யாழநின்
பூக்கெழு தொடலை நுடங்க வெழுந்து
கிள்ளைத் தெள்விளி யிடையிடை பயிற்றி
யாங்காங் கொழுகா யாயி னன்னை
சிறுகிளி கடித றேற்றா ளிவளெனப்
பிறர்த் தந்து நிறுக்குவ ளாயி
னுறற்கரி தாகுமவன் மலர்ந்த மார்பே." (அகம்-28.)

என வரும். இதனானே வரையும் பருவமன்றெனக் கூறு தலுங் கொள்க.

என்பு நெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ அன்பு தலைபடுத்த வன்புறைக்கண்ணும்—என்பு உருகுமாறு தலைவனாற் பிரியப்பட்ட தலைவிக்கு வழிபாடாற்றிச் சென்று தான் கூறும் மொழியை அவள்மனத்தே செலுத்தித் தலைவன் அன்பை அவளிடத்தே சேர்த்துக்கூறிய வற்புறுத்து தற்கண்ணும்:

* 'ஆன்ற' என்பதும் பாடம்.

அப்பிரிவு வரைந்து கோடற்குப் பொருள்வயிற்பிரிதலும், வேந்தர்க்குற்றுழிப்பிரிதலுங், காவற்குப்பிரிதலுமாம். ஆண்டு வற்புறுத்துங்கால் இயற்பழித்தும் இயற்படமொழிந்தும் பிறவாறும் வற்புறுத்தும். முன் 'செங்கடுமொழியா'லென்புழி இயற்பழித்தனவும் வற்புறுத்துதல் பயனாகக் கூறியன வென்றுணர்க.

உதாரணம்:

"யாஞ்செய் தொல்வினைக் கெவன்பே துற்றனை
*வருந்தல் வாழி தோழி யாஞ்சென்
றுரைத்தனம் வருக மெழுமதி புணர்திரைக்
கடல்விளை யமுதம் பெயற்கேற் றாஅங்
†குருகி யல்குத லஞ்சுவ லதுக்காண்
டம்மோன் கொடுமை நம்வயி னேற்றி
நயம்பெரி துடைமையிற் றாங்கல் செல்லாது
கண்ணீ ரருவி யாக
வழுமே தோழியவர் பழமுதிர் குன்றே." (நற்றிணை-88.)

இது பிரிவிடைத் தோழி இயற்பழித்து வற்புறுத்தது.

"தோளுந் தொல்கவின் றொலைந்தன நாளு
மன்னையு மருந்துய ருற்றன ளலரே
பொன்னணி நெடுந்தேர்த் தென்னர் கோமா
னெழூஉத் திணிதோ ளியறேர்ச் செழிய
னேரா வெழுவ ரடிப்படக் கடந்த
வாலங் கானத் தார்ப்பினும் பெரிதெனை
வழால் வாழி தோழி யவரே

* 'வருந்தல் வாழி நீயென யாஞ்சென்று' என்பதும் பாடம்.

† 'உருகி யுகுத லஞ்சுவ லதுகொண்—டம்மென் கொடுமை' என்பதும் பாடம்.

மாஅல் யானை மறப்போர்ப் புல்லிக்
காம்புடை நெடுவரை வேங்கடத் தும்ப
ரறையிறந் தசன்றன ராயினு நிறையிறந்
துள்ளா ராகலோ வரிதே செவ்வேன்
முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வி
லோரிக் கொன்று சேரலர்க் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி
நிலைபெறு *கடவு ளாக்கிய
பலர்புகழ் பாவை யன்னநின் னலனே." (அகம்-208.)

" அழிய லாயிழை யிழிபுபெரி துடைத்தன்
பழியு மஞ்சும் பயமலை நாட
னில்லா மையே நிலையிற் றாகலி
னல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சிற்
கடப்பாட் டாள னுடைப்பொருள் போலத்
தூங்குதற் குரிய தன்றுநின்
னங்கலுழ் மேனிப் பாஅய பசப்பே." (குறுந்-143.)

என்னுங் குறுந்தொகையுங் கொள்க.

"பெருங்கை யிருங்களி றைவன மாந்திக்
கருங்கான் மராம்பொழிற் பாசடைத் துஞ்சுஞ்
சுரும்பிமிர் சோலை மலைநாடன் கேண்மை
பொருந்தினார்க் கேமாப் புடைத்து." (ஐந்திணை, 70-12.)

இவை இயற்பட மொழிந்து வற்புறுத்தன. இன்னும் 'அன்புதலையடுத்த வன்புறை' என்றதனாற் பிறவுங்கொள்க.

"பெறமுறு செல்வர் பொன்னுடைப் புதல்வர்
சிறுதோட் கோத்த செவ்வரிப் பறையின்

* 'கடவுளர்க் கியா' என்பதும் பாடம்.

கண்ணகத் தெழுதிய *குரீஇப் போலக்
கோல்கொண் டலைப்பப் படீஇயர் மாதோ
வீரை வேண்மான் வெளியன் றித்தன்
முரசுமுதற் கொளீஇய மாலை விளக்கின்
வெண்கோ டியம்ப நுண்பனி யரும்பக்
கையற வந்த பொழுதொடு மெய்சோர்ந்
தவல நெஞ்சினம் பெயர வுயர்திரை
நீடுநீர்ப் பனித்துறைச் சேர்ப்ப
ஞேடுதேர் நுண்ணுக நுழைத்த மாவே." (நற்றிணை-58.)

இது பகற்குறி வந்து போகின்ற தலைவன் புறக்கிடை நோக்கி ஆற்ருத தலைவி குறிப்பறிந்து மாவின்மேல் வைத்து வற்புறுத்தது.

"விளையா டாயமொ டோரை யாடா
திளையோ †ரில்லிடத் திற்செறிந் திருத்த
லறனு மன்றே யாக்கமுந் தேய்மெனக்
குறுநுரை சுமந்து நறுமல ருந்திப்
பொங்கிவரு புதுநீர் நெஞ்சுண வாடுகம்
வல்லிதின் வணங்கிச் சொல்லுநர்ப் பெறினே
செல்கென விடுநண்மற் கொல்லோ வெல்லுமிழ்ந்
துரவுரு முரறு மரையிரு ணடுநாட்
கொடிநுடங் கிலங்கின மின்னி
யாடுமழை யிறுத்தன் றவர் கோடுயர் குன்றே."
(நற்றிணை-68.)

இது வரைவுநீட ஆற்ருத தலைவி வேறுபாடு புறத்தார்க்குப் புலனுகாமையும் இயையும் இங்ஙனங் கூறுவாரைப் பெறினெனக்கூறி வற்புறுத்தது.

---

* 'குறியேபோல' என்பதும் பாடம்.

† இச்சொற்றொடர் ஏட்டுப்பிரதியில் 'இவ்விடத்து' என்று படித்தற்கும் இசையும்.

"மறுகுபு புகலு நெஞ்ச நோயின்
றிறகப் புல்லி முயங்குசஞ்
சிறுபுன் மாலை செயிர்ப்ப நாமே."

இது பிரிவிடை யாற்றாத தலைவியைத் தோழி நன்னிமித்தங்கூறி வற்புறுத்தது.

ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்—தலைவன் வருகின்ற நெறியினது தீமையைத் தாங்கள் அறிதலுற்றதனானே எய்திய கலக்கத்தின்கண்ணும்: தோழிமேன கிளவி.

உதாரணம்:

"கழுதுகால் கிளர வூர்மடிந் தன்றே
யுருகெழு மரபிற் குறிஞ்சி பாடிக்
கடியுடை வியனகர்க் கானவர் துஞ்சார்
வயக்களிறு பொருத வாள்வரி *யுழுவை
கன்முழைச் சிலம்பிற் †குழூஉ மன்னே
மென்றோ ணெகிழ்ந்துநாம் வருந்தினு மின்றவர்
‡வாரா ராயினு நன்றுமற் றில்ல
வுயர்வரை யடுக்கத் தொளிறுபு மின்னிப்
பெயல்கான் மயங்கிய பொழுதுகழி பானாட்
டிருமணி யரவுத்தேர்ந் துழல
வுருமுச்சிவந் தெறியு மோங்குவரை யாறே."

(நற்றிணை-255.)

"கொடுவரி வேங்கை பிழைத்துக்கோட் பட்டு
மடிசெவி வேழம் §வெரீஇ—யடியோசை

---

* 'வேங்கை' என்பதும் பாடம்.
† 'குழுமும்' என்பதும் பாடம்.
‡ 'வாரா ராயினோ' என்பதும் பாடம்.
§ 'இரீஇ' என்பதும் பாடம்.

யஞ்சி யொதுங்கு மதருள்ளி யாரிருட்
டுஞ்சா சுடர்த்தொடி கண்.'' (ஐந்திணை, 50-16.)

இவை இரவுக்குறிவரவால் தலைவி வருந்துவளென்றது.

"*கரைபொரு கான்யாற்றங் கல்லதர்" என்பதும் அது. "கூருகிரெண்கின்" என்னும் அகப்பாட்டுங் காண்க.

'கலக்கம்' எனப் பொதுப்படக் கூறியவதனால் ஆற்றிடை ஏதமின்றிச் சென்றமை தோன்ற ஆண்டு ஓர் குறி செய் எனக் கூறுவனவுங் கொள்க.

"கான மானதர் யானையும் வழங்கும்
வான மீமிசை யுருமுநனி யுரறு
†மரவும் புலியு மஞ்சுதக வுடைய
விரவுச் சிறுநெறி தமியை வருதி
வரையிழி யருவிப் பாடொடு பிரசு
முழவுச்சேர் நரம்பி னிம்மென விமிரும்
பழவிற னனந்தலைப் பயமலை நாட
மன்றல் வேண்டினும் பெறுகுவை யொன்றோ
வின்றுதலை யாக வாரல் வரினே

"*கரைபொரு கான்யாற்றங் கல்லதரெம்முள்ளி வருதிராயி
னரையிருள் யாமத் தடுபுலியோ நும்மஞ்சி யகன்றுபோக
நரையுருமே றங்கைவேலெஞ்சுக நும்மை
வரையர மங்கையர் வவ்வுத லஞ்சுதும் வாரலையோ"

இச்செய்யுள் யாப்பருங்கலவிருத்தி 76-ஆவது சூத்திர வுரையில் இயற்சீர்ச்சிறப்புடை வெண்டளையானும் சிறப்பில் வெண்டளையானும் வந்த ஆசிரிய நேர்த்துறைக்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

† 'மாவும் புலியு மஞ்சுதக வுடைய—அரவு வழங்கு சிறுநெறி' என்பதும் பாடம்.

யேமுறு துயர நாமிவ ணொழிய
வெற்கண்டு பெயருங் காலை யாழவின்
கற்கெழு சிறுகுடி யெய்திய பின்றை
யூதல் வேண்டுமாற் சிறிதே வேட்டொடு
வேய்பயி லழுவத்துப் பிரிந்தநின்
னாய்பயிர் குறிநிலை கொண்ட கோடே." (அகம்-317.)

என்னும் நித்திலக்கோவையுள், 'வரினே ஏமுறு துயரம் நாமிவணொழிய, நின்னாய்பயிற் குறிநிலை கொண்ட கோட்டை யூதல்வேண்டுமாற் சிறிது' என்றவாறு காண்க.

காப்பின் கடுமை கையற வரினும்—காத்தற்றொழிலால் உண்டாங் கடுஞ்சொற்கள் களவொழுக்கத்திடத்தே எல்லை யற வருமிடத்தும்: தோழிமேன கிளவி; அவை பலவகைய.

உதாரணம் :

"கடலுடை னாடியுங் கான லல்கியுந்
தொடலை யாயமொடு தழுவணி யயர்ந்து
நொதுமலர் போலக் கதுமென வந்து
முயங்கினன் செலினே யலர்ந்தன்று மன்னே
துத்திப் பாந்தட் பைத்தக லல்குற்
றிருந்திழை துயல்வுக்கோட் டசைத்த பசுங்கழைத்
தழையினு முழையிற் போகான்
றான்றந் தனன்யாய் காத்தோம் பல்லே." (குறுந்-294.)

இது பகற்குறிக்கட் சிறைப்புறமாகச் செறிப்பறிவுறீஇயது.

"கணமுகை கையெனக் காந்தள் கவின
மணமுகை யென்றெண்ணி மந்திகொண் டாடும்
விறன்மலை நாட வரவரிதாங் கொல்லோ
புனமு மடங்கின காப்பு"

இது தினைவிளைந்தமை கூறிச் செறிப்பறிவுறீஇயது.

"அறையருவி யாடா டினைவளமுங் காவாள்
பொறையுயர் தண்சிலம்பிற் பூந்தழையுங் கொய்யா
ளுறைகவுள் வேழமொன் றுண்டென்று ளன்னை
மறையாதி வாழிய மையிருங் குன்றே."

இது குன்றத்திற்குக் கூறுவாளாகச் செறிப்பறி வுறீஇயது.

"சாந்த மெறிந்துழுத சாரற் சிறுதினைச்
*சாந்த விதண மிசைச்சார்ந்து—சாந்தஞ்
சமழக் கிளிகடியுங் கார்மயி லன்னா
ளிமிழக் கிளியெழா வார்த்து." (திணை, 150-3.)

இது பிறரைக் காத்தற்கு இடுவரெனச் செறிப்பறி வுறீஇயது.

"பல்லோர் துஞ்சு நள்ளென் யாமத்
துரவுக்களிறு போல்வந் திரவுக்கதவு முயறல்
கேளே மல்லேங் கேட்டனெம் பெரும
வோரி முருங்கப் பீலி சாய
நன்மயில் வலைப்பட் டாங்கியா
முயங்குதொறு முயங்கு மறனில் யாயே." (குறுந்-244.)

இஃது இரவுக்குறிக் காப்பின் கடுமை கூறியது.

"வினைவிளையச் செல்வம் விளைவதுபோ னீடாப்
பனைவிளைவு நாமெண்ணப் பாத்தித்—தினைவிளைய
மையார் தடங்கண் மயிலன்னாய் தீத்தீண்டு
கையார் பிரிவித்தல் காண்." (திணை, 150-5.)

இஃது இவ்வொழுக்கத்தினை வேங்கை நீக்கிற்றெனத்

---

* 'சாந்த மெறிந்த விதண்மிசை' என்பதும் பாடம்.

தலைவிக்குக் கூறியது. இன்னும் வேறுபட வருவன வெல்லாம் இதன்கண் அடக்குக.

" புன்னையம் பூம்பொழிலே போற்றவே பாதுகா
வன்னப் பெடையே யறமறவன்—மன்னுங்
கடும்புதர்மான் காவலி கானலஞ் செல்லூர்
நெடுங்கடலே நீயு நினை"

இது புனங் கைவிட்டுப் போகின்றுழிச் சிறைப்புறமாகத் தோழி கூறியது.

" பண்டைக்கொ ணல்வினை யில்லேம் பதிப்பெயர்துங்
கண்டற் குலங்காள் கழியருகேர்—முண்டகங்கா
ணணி யிராதே நயந்தங் கவர்க்குரைமின்
பேணி யவர்செறித்த லான்."

இது தலைவற்குக் கூறுமினென்றது.

களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக் காதன் மிகுதி உளப்பட—(*காதன் மிகுதி உளப்படக் களனும் பொழுதும் வரைநிலை விலக்கி) அவளிடத்துக் காதன் மிகுதி மனத்து நிகழாநிற்க இருவகையிடத்தையும் இருவகைக் காலத்தையுந் தாம் வரைந்து கூறும் நிலைமையைத் தவிர்த்து அவன் வயின் தோன்றிய கிளவியையும்; பிறவும்—கூறியவாறன்றிப் பிறவாறாக அவன்வயின் தோன்றிய கிளவியையும்; நாடும் ஊரும் இல்லுங் குடியும் பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி அவன் வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ—அவன் பிறந்தநாடும் அதன் பகுதியாகிய குடியிருப்பும் அவ்வூர்க்கு இருப்பாகிய மனையும் பார்ப்பார் முதலிய நால்வகை வருணமும் அவ்வருணத்துள் இன்னவழி இவனென்றலும் ஒரு

* இச்சொற்றொடர் பாடவுரை.

வயிற்றுப் பிறந்தோர் பலருள்ளுஞ் சிறப்பித்துக் கூறலும் பிறரின் ஒவ்வாதிறந்தனவாதல் நோக்கித் தலைவனிடத்தே தோழி கூறிய கிளவியோடே கூடி; அணைநிலை வகையான் வரைதல் வேண்டினும்—அத்தன்மைத்தாகிய நிலைமையின் கூறுபாட்டானே வரைந்து கோடலை விரும்பிய வழியும்: தோழிமேன கிளவி.

'பகற் புணர்களனே' (தொல்-பொ-கள-41) 'இரவுக் குறியேயில்' (தொல்-பொ-கள-40) 'குறியெனப்படுவது' (தொல்-பொ-கள-39) என்னுஞ் சூத்திரங்களாற் களனும் பொழுதும் உணர்க.

உதாரணம்:

"புன்னை காத்து மன்ன மோப்பியும்
பனியிருங் கானல் யாம்விளை யாட
மல்லலம் பேரூர் மறுகி
னல்கலு மோவா தலரா கின்றே."

இது பகற்குறி விலக்கியது.

"நெடுமலை நன்னாட *னின்வே றுணையாக்
கடுவிசை வாலருவி நீந்தி—நடுவிரு
ளின்னு வதர்வர வீர்ஞ்சோதை மாதரா
ளென்னுவா ளென்னுமென் னெஞ்சு." (ஐந்திணை, 50-19.)

இஃது இரவுக்குறி விலக்கியது.

"இரவு வாரலை யைய விரவுவீ
யகலறை வரிக்குஞ் சாரற்
பகலும் பெறுதியிவ டடமென் றோளே."

இது பகற்குறி நேர்வாள்போல் இரவுக்குறி விலக்கியது.

---

* 'நீள்வேல்' என்பதும் பாடம்.

“ திரைமேற்போந் தெஞ்சிய தெண்கழிக் கானல்
விரைமேவு பாக்கம் விளக்காக்—கரைமேல்
விடுவாய்ப் பசும்புற விப்பிகான் முத்தம்
படுவா யிருளகற்றும் பாத்து.” (திணை, 150-48.)

இதுவும் அது.

இவை வரவுநிலை விலக்கின.

“ வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார லுட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்
கிவளுயிர் தவச்சிறிது காமமோ பெரிதே.”

(குறுந்-18.)

இது காதன் மிகுதி கூறியது.

‘பிறவும்’ என்றதனால்,

“ கோடீ ரிலங்குவளை ஞெகிழ நாளும்
*பாடில கழிந்துகண் பனியா னுவே
துன்னரு நெடுவரைத் ததும்பிய வருவி
தண்ணென் †முழவி னிமிழிசை காட்டு
மருங்கிற் கொண்ட பலவிற்
பெருங்க லுடனின் னயந்தோள் கண்ணே.”

(குறுந்-365.)

இஃது யான் வரையுந் துணையும் ஆற்றுவளோ என்னுற்கு ஆற்றுளென்றது.

---

* ‘பாடில கலுழுந் துளியா னுவே’ என்பதும் பாடம்.
† ‘முரசின்’ என்பதும் பாடம்.

" நெடுவரை மிசையது குறுங்கால் வருடை
தினைபாய் கிள்ளை வெரூஉ நாட
*வல்லைமன் றம்ம பொய்த்தல்
வல்லாய் †மன்றநீ யல்லது செயலே. (ஐங்குறு-287.)

இது தலைவனைப் பழித்தது.

" கானற் கண்டற் கழன்றுகு பைங்காய்
நீனிற விருங்கழி யுட்பட வீழ்ந்தென
வுறுகா றூக்கத் தூங்கி யாம்பல்
சிறுவெண் காக்கை யாவித் தன்ன
வெளிய விரியுந் துறைவ வென்று
மளிய ‡பெரிய கேண்மை நும்போற்
சால்பெதிர் கொண்ட §செம்மை யோரும்
தேறா நெஞ்சங் கையறுபு வாடி
நீடின்று விரும்பா ராயின்
வாழ்தன்மற் றெவனோ தேய்கமா தெளிவே."
(நற்றிணை-345.)

இஃது ஆற்றாத தலைவியைக் கடிதின் வரைவேனென்று தலைவன் தெளிவிக்கப் புக்குழித் தோழி தெளிவிடை விலக்கியது.

" குன்றக் குறவன் காதன் மடமகண்
மென்றோட் கொடிச்சியைப் ¶பெறற்கரி தில்ல
பைம்புறப் படுகிளி யோப்பலவர்
புன்புல மயக்கத்து விளைந்தன தினையே." (ஐங்குறு-260.)

இது புனங்காவல் இனியின்று என்றது.

---

* 'வல்லை மன்ற பொய்த்தல்' என்பதும் பாடம்.
† 'மல்லநீ' என்பதும் பாடம்.
‡ 'பெரியோர் கேண்மை' என்பதும் பாடம்.
§ 'செம்மை யொருத்தி' என்பதும் பாடம்.
¶ 'பெறற்கரிது தில்ல' என்பதும் பாடம்.

"என்னுங்கொ *னீடி லினவேங்கை நாளுரைப்பப்
†பொன்னும்போல் வேலவர் தாம்புரிந்த—தென்னே
மருவியா மாலே மலைநாடன் கேண்மை
யிருவியா மேன லினி." (திணை, 150-18.)

இது தினை அரிகின்றமையுஞ் சுற்றத்தார் பொருள் வேட்கையுங் கூறியது.

"வெறிகமழ் ‡வெற்பவென் மெய்ந்நீர்மை கொண்ட
தறியாண்மற் றன்றோ வணங்கணங்கிற் றென்று
§மறியீர்ந் துதிரந்தூய் வேலற் றரீஇ
வெறியோ டலம்வரும் யாய்." (ஐந்திணை, 50-20.)

இது வெறியச்சுறுத்தியது.

"இனமீ னிருங்கழி யோத முலாவ
மணிநீர் பரிக்குந் துறைவ தகுமோ
குணநீர்மை குன்றாக் கொடியன்னாள் பக்க
லினநீர்மை யில்லா வொழிவு."

இஃது அருளவேண்டும் என்றது.

"மூத்தோ ரன்ன வெண்டலைப் புணரி
யிளையோ ராடும் வரிமனை சிதைக்குந்
தளையவிழ் தாழைக் கானலம் பெருந்துறைச்
சில்செவித் தாகிய புணர்ச்சி யலரெழ
வில்வயிற் செறித்தமை யறியாய் பன்னாள்

* 'ஈடி விளவேங்கை' என்பதும் பாடம்.
† 'பொன்னும்போர்' என்பதும் பாடம்.
‡ 'வெற்பனென்' என்பதும் பாடம்.
§ 'மறியீர்த்' தென்பதும் பாடம்.

*வருமுலை வருத்த வம்பகட்டு மார்பிற்
றெருமர லுள்ளமொடு வருந்து நின்வயி
†னீங்குக வென்றியான் யாங்கன மொழிகோ
வருந்திறற் கடவுள் செல்லூர்க் குணாது
பெருங்கடன் முழக்கிற் றாகி யாண
ரிரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கட் கோசர் நியம மாயினு
முறுமெனக் கொள்குவ ரல்லர்
நறுநுத லரிவை பாசிழை விலையே." (அகம்-90.)

இது பொருண்மிகக் கொடுத்தல் வேண்டுமென்றது.

இன்னும் வரைவுகடாவுதற் பொருட்டாய் வேறுபட வருவன வெல்லாம் இதனான் அமைக்க.

"கோழிலை வாழைக் கோண்மிகு பெருங்குலை
யூழுறு தீங்கனி யுண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொ டூழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேற
லறியா துண்ட கடுவ னயலது
கறிவளர் சாந்த மேறல் செல்லாது
நறுவீ யடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்குங்
குறியா வின்ப மெளிதி னின்மலைப்
பல்வேறு விலங்கு மெய்து நாட
குறித்த வின்ப நினக்கெவ னரிய
வெறுத்த வேளர் ‡வேய்மருள் பணைத்தோ
ணிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்
டிவளு மினைய ளாயிற் றந்தை

* 'வறுமுலை' என்பதும் பாடம்.
† 'ஈங்குசென்றியான்' என்பதும் பாடம்.
‡ 'வேய்புரை' என்பதும் பாடம்.

யருங்கடிக் காவலர் சோர்பத னொற்றிக்
கங்குல் வருதலு முரியை பைம்புதல்
வேங்கையு மொள்ளிணர் விரிந்தன
நெடுவெண் டிங்களு மூர்கொண் டன்றே." (அகம்-2.)

'விலங்கும் எய்து நாட' வென்று அந்நாட்டினை இறப்பக் கூறி இந்நாடுடைமையிற் 'குறித்த இன்பம் நினக்கெ வனரிய' வென வரைதல் வேண்டியவாறும், வேங்கை விரிந்த தனால் தினையறுத்தலின் இற்செறிப்புக் கூறியவாறும், 'கங்குல் வருதலும் உரியை' யெனப் பகற்குறிமறுத்து இரவுக் குறி நேர்வாள்போற் கூறி 'நெடுவெண்டிங்களு மூர்கொண் டன்றே' யென்று அதனையும் மறுத்து வரைதற்கு நல்லநா ளெனக்கூறி வரைவுகடாயவாறுங் காண்க.

"காமங் கடவ வுள்ள *மினைப்ப
யாம்வந்து காண்பதோர் பருவ மாயி
னோங்கித் தோன்று முயர்வரைக்
கியாங்கெனப் படுவது நும்மூர் தெய்யோ." (ஐங்குறு-237.)

இஃது ஊரை இறப்பக்கூறியது.

"துணைபுணர்ந் தெழுதரும்" என்னும் நெய்தற்கலியுட்,
"கடிமலர்ப் புன்னைக்கீழ்க் காரிகை தோற்றாளைத்
தொடிநெகிழ் தோளளாத் துறப்பாயான் மற்றுநின்
†குடிமைக்கட் பெரியதோர் குற்றமாய்க் கிடவாதோ;
ஆய்மலர்ப் புன்னைக்கீ ழணிநலந் தோற்றாளை
நோய்மலி நிலையளாத் துறப்பாயான் மற்றுநின்
வாய்மைக்கட் பெரியதோர் வஞ்சமாய்க் கிடவாதோ;
திகழ்மலர்ப் புன்னைக்கீழ்த் திருநலந் தோற்றாளை

* 'இளைப்ப' 'இனைய' என்பவும் பாடம்.
† 'குடிமைக்கீழ்' என்பதும் பாடம்.

யிகழ்மலர்க் கண்ணளாத் துறப்பாயான் மற்றுநின்
புகழ்மைக்கட் பெரியதோர் புகராகிக் கிடவாதோ.''
(கலி-135.)

என இவை ஒழுக்கமும் வாய்மையும் புகழும் இறப்பக் கூறியன. குடிப்பிறந்தார்க்கு இம்மூன்றுஞ் சிறப்பக் கூறல்வேண்டும். ஏனைய வந்துழிக் காண்க.

இன்னும் 'அனைநிலைவகை' என்றதனானே தலைவி யாற்றுமைகண்டு வரைவுகடாவவோவென்று தலைவியைக்கேட்டலுஞ் சிறைப்புறமாகவுஞ் சிறைப்புறமன்றாகவுந் தலைவி யாற்றுமைகூறி வரைவுகடாவுவனவும் பிறவும் வேறுபட வருவனவும் இதனான் அமைக்க.

"கழிபெருங் கிழமை கூறித் தோழி
யொழியா யாயினென் றுரைக்கோ தெய்ய
கடவு ணெற்றிய கருங்கால் வேங்கை
தடவுநிலைப் பலவொடு தாழ்ந்த பாக்கத்துப்
பின்னீ ரோதி யிவடமர்க் குரைப்பதோர்
பெண்யாப் பாயினு மாக வொண்ணுத
லிலங்குவளை மென்றோட் கிழமை
விலங்குமலை நாடநீ வேண்டுதி யெனினே."

"நிலவுமிருளும் போல நெடுங்கடற்
கழியுங் கானலு மணந்தன் று
நுதலுந் தோளு மணிந்தன்றாற் பசப்பே."

எனவரும்

ஐயச் செய்கை தாய்க்கு எதிர்மறுத்துப் பொய் என மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்—தலைவிக்குக் கூட்டம் உண்டுகொலென்று தாய் ஐயுற்றவழி அவ்வையப்பட்ட

செய்கையைத் தாய்க்கு எதிரேநின்று மறுத்து அதனைப் பொய்யெனவே கருதும்படி அவள் மனத்தினின்றும் போக்கி மெய்யல்லன சில சொற்களை மெய்வழிப்படுத்து அறிவுகொள்ளக் கொடுப்பினும்:

* உதாரணம்:

"உருமுரறு கருவிய பெருமழை தலைஇப்
பெயலான் றவிந்த தூங்கிரு ணடுநாண்
மின்னுநிமிர்ந் தன்ன கனங்குழை யிமைப்பப்
பின்னுவிடு நெறியிற் கிளைஇய கூந்தலள்
வரையிழி மயிலி னொல்குவ ளொதுங்கி
மிடையூர் பிழியக் கண்டனெ னிவளென
வலையல் வாழிவேண் டன்னைநம் படப்பைச்
சூருடைச் சிலம்பிற் சுடர்ப்பூ வேய்ந்து
தாம்வேண் டுருவி னணங்குமார் வருமே
நனவின் வாயே போலத் துஞ்சுநர்க்
கனவாண்டு மருட்டலு முண்டே யிவடான்
சுடரின்று தமியளாய்ப் பனிக்கும் வெருவர
மன்ற மராத்த கூகை குழறினும்
நெஞ்சழிந் தரணஞ் சேரு மதன்றலைப்
புலிக்கணத் தன்ன நாய்த்தொடர் விட்டு
முருகி னன்ன சீற்றத்துக் கடுந்திற
லெந்தையு மில்ல ஞகை
வஞ்சுவ ளல்லளோ விவளிது செயலே." (அகம்-157.)

இது மிடையை ஏறி இழிந்தாளென்றது காரணமாக ஐயுற்ற தாயைக் கனவுமருட்டலும் உண்டென்றது முதலாகப் பொய்யென மாற்றி அணங்கும் வருமென மெய்வழிக் கொடுத்தது.

இது சிறைப்புறமாகக் கூறி வரைவுகடாதலின் அதன் பின் வைத்தார்

" வேங்கை நறுமலர் வெற்பிடை யாங்கொய்து
மாந்தளிர் மேனி வியர்ப்பமற்—றுங்கெனைத்தும்
பாய்ந்தருவி யாடினே மாகப் பணிமொழிக்குச்
சேந்தனவாஞ் சேயரிக் கண்." (ஐந்திணை, 50-15.)

இதுவும் அது.

அவன் விலங்குறினும்—தன்னானுந் தலைவியானும் இடையீடு படுதலின்றித் தலைவனாற் கூட்டத்திற்கு இடையூறு தோன்றினும்: அது வரைவிடைப் பொருட்பிரிவும், வேந்தற் குற்றுழியும், காவற்பிரிவுமாம்.

உதாரணம்:

" செவ்விய தீவிய சொல்லி யவற்றொடு
பைய முயங்கிய வஞ்ஞான் றவையெல்லாம்
பொய்யாதல் யான்யாங் கறிகோமற் றைய
வகனகர் கொள்ளா வலர்தலைத் தந்து
பகன்முனி வெஞ்சுர முள்ள லறிந்தேன்
மகனல்லை மன்ற வினி." (கலி-19.)

" நுண்ஞாண் வலையிற் பரதவர் போத்தந்த
பன்மீ னுணங்கல் கவருந் துறைவனைக்
கண்ணினாற் காண வியையுங்கொ லென்றோழி
வண்ணந்தா வென்கந் தொடுத்து"

என வரும்

களம்பெறக் காட்டினும்—காப்புமிகுதியானுங் காதன் மிகுதியானுந் தமர் வரைவு மறுத்ததினானுந் தலைவி ஆற்றா ளாயவழி இஃதெற்றினா னயிற்றெனச் செவிலி அறிவரைக் கூஉய் அவர் களத்தைப் பெறுமிறகத் தலைவியை அவர்க்கு வெளிப்படக் காட்டினும்:

களமாவது கட்டுங் கழங்கும் இட்டுரைக்கும் இடமும் வெறியாட்டிடமுமாம்.

உதாரணம்:

"*பொய்படு பறியாக் கழங்கே மெய்யே
மணிவரைக் கட்சி †மடமயி லாலுநம்
‡மலர்ந்த வள்ளியங் கானங் கிழவோ
ணண்டகை விறல்வே ளல்லனிவள்
பூண்டாங் கிளமுலை யணங்கி யோனே." (ஐங்குறு-250.)

இது கழங்குபார்த்துழிக் கூறியது.

"கறிவளர் சிலம்பிற் கடவுட் பேணி
யறியா வேலன் வெறியெனக் கூறு
மதுமனங் §கொள்குவை யனையிவள்
புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே." (ஐங்குறு-243.)

இது தாயறியாமை கூறி வெறிவிலக்கியது.

"அம்ம வாழி தோழி ¶பன்மலர்
நறுந்தண் சோலை நாடுகெழு நெடுந்தகை
குன்றம் பாடா னாயி
னென்பயஞ் செய்யுமோ $வேலற்கு வெறியே."

(ஐங்குறு-244.)

---

* 'பொய்படுபழியா' என்பதும் பாடம்.

† 'மடமயிலாயநம்' என்பதும் பாடம்.

‡ 'வளர்ந்த வள்ளி' என்பதும் பாடம்.

§ 'கொள்வை யன்னையிவள்' என்பதும் பாடம்.

¶ 'புனமலர்' என்பதும் பாடம்.

$ 'வேலற்கவ் வெறியே' என்பதும் பாடம்.

இது தலைவிக்குக் கூறியது.

"நெய்த னறுமலர் செருந்தியொடு விரைஇக்
கைபுனை நறுந்தார் கமழு மார்ப
னருந்திறற் கடவு ளல்லன்
பெருந்துறைக் கண்டிவ ளணங்கி யோனே."
(ஐங்குறு-182.)

இது வேலற்குக் கூறியது.

"கடவுட் கற்சுனை யடையிறந் தவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தட்
குருதி யொண்பூ வுருகெழக் கட்டிப்
பெருவரை யடுக்கம் பொற்பச் சூர்மக
ளருவி யின்னியத் தாடு நாடன்
மார்புதர வந்த படர்மலி யருநோய்
நின்னணங் கன்மை யறிந்து *மண்ணூந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினு மாக
மடவை மன்ற வாழிய முருகே." (நற்றிணை-34.)

இது முருகற்குக் கூறியது.

† "அன்னை தந்த தாகுவ தறிவென்
பொன்னகர் வரைப்பிற் கன்னந் தூக்கி
முருகென மொழியு மாயி
னருவரை நாடன் பெயர்கொலோ வதுவே." (ஐங்குறு-247.)

இது தமர்கேட்பக் கூறியது.

பிறன்வரைவு ஆயினும்—நொதுமலர் வரையக் கருதிய

---

* 'மாணூந்து' என்பதும் பாடம்.

† 'அன்னை தந்தபு' என்பதும் பாடம்.

வழித் தலைவி சுற்றத்தார் அவ்வரைவினை ஆராயினும்: தோழி தலைவற்குந் தலைவிக்குங் கூறும்.

உதாரணம்:

" கண்டல் வேலிக் கழிசூழ் படப்பை
முண்டகம் வேய்ந்த குறியிறைக் குரம்பைக்
கொழுமீன் கொள்பவர் பாக்கங் கல்லென
நெடுந்தேர் பண்ணி வரலா றேதே
குன்றத் தன்ன குவவுமணல் நீந்தி
வந்தனர் பெயர்வர்கொ றாமே யல்க
லிளையரு முதியருங் கிளையுடன் குழீஇக்
கோட்சுறா வெறிந்தெனச் சுருங்கிய நரம்பின்
முடிமுதிர் பரதவர் மடமொழிக் குறுமகள்
வலையுந் தூண்டிலும் *பற்றிப் பெருங்காற்
றிரையெழு பௌவ முன்னிய
கொலைவெஞ் சுறாஅர் பாற்பட் டனளே." (நற்றிணை-207.)

இது நொதுமலர் வரைவு மலிந்தமை தோழி சிறைப்புறமாகக் கூறியது. 'பாற்பட்டனள்'எனத் தெளிவுபற்றி இறந்தகாலத்தாற் கூறினாள்.

" இனி, யாஅண் டையனோ தோழி குன்றத்துப்
பழங்குழி யகழ்ந்த கானவன் கிழங்கி
னேஎ ரகன்மை துணிபெறாஉ நாட
னறிவுகாழ்க் கொள்ளு மளவைச் செறிதொடி
யெம்மில் வருகுவை நீயெனப்
பொம்ம லோதி நீவி யோனே."

இது தாய்கேட்பத் தோழி தலைவிக்குக் கூறியது.

அவன் வரைவு மறுப்பினும்—தலைவி சுற்றத்தார்

* 'மரீஇய' என்பதும் பாடம்.

தலைவற்கு வரைவுமறுத்தவழியும்: தோழி அறத்தொடுநிலை யாற்கூறும்.

உதாரணம்:

* "அலங்குமழை பொழிந்த வகன்க ணருவி
யாடுகழை யடுக்கத் திழியு நாடன்
பெருவரை யன்ன திருவிறல் வியன்மார்பு
முயங்காது கழிந்த நாளிவண்
மயங்கிதழ் மழைக்கண் கலுழு மன்னாய்." (ஐங்குறு-220.)

"குன்றக் குறவன் காதன் மடமக
ளணிமயி லன்ன வசைநடைக் கொடிச் சியைப்
பெருவரை நாடன் வரையு மாயிற்
கொடுத்தனெ மாயினோ நன்றே
யின்னு மானாது நன்னுத றுயரே" (ஐங்குறு-258.).

என வரும்.

தலைவிக்குக் கூறுவனவுங் கொள்க.

"அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் †புணர்ப்பவவ ரிருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னு மாக்களோ
டின்றுபெரி தென்னு மங்கண தவையே" (குறுந்-146.)

இது தமர் வரைவு மறுப்பரோவெனக் கவன்றாட்குத் தோழி கூறியது.

"நுண்ணேர் புருவத்த கண்ணு மாடு
மயிர்வார் முன்கை ‡வளையுஞ் செறாஉம்

---

* அல் கன் மழை' என்பதும் பாடம்.

† 'புணர்ப்போர்' என்பதும் பாடம்.

‡ 'வளையுஞ் செற்றும்' என்பதும் பாடம்.

களிறுகோட் பிழைத்த கதஞ்சிறந் தெழுபுலி
யெழுதரு மழையிற் குழுமும்
பெருங்க னாட்டன் வருங்கொ லன்னாய்." (ஐங்குறு-218.)

இது தமர் வரைவுமறுத்துழி ஆற்றாத தலைவிக்குத் தோழி தீயகுறி நீங்கி நற்குறி தனக்குச் செய்யக்கண்டு கடிதின்வரைவரெனக் கூறியது.

முன்னிலை அறன் எனப் படுதல் என்று இருவகைப் புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும் [*அறனெனப்படுதல் இருவகைப் புரைதீர் முன்னிலையென்று கிளவி தாயிடைப் புகுப்பினும்]—அறனென்று சொல்லப்படுந் தன்மை இருவர் கண்ணுங் குற்றந்தீர்ந்த எதிர்ப்பாடென்று செவிலியிடத்தே கூறி அக்கிளவியை நற்றாயிடத்துஞ் செலுத்தினும்:

என்றது புனறருபுணர்ச்சியும், பூத்தரு புணர்ச்சியுங், களிறுதருபுணர்ச்சியும் போல்வன செவிலிக்குக் கூறி அவள் நற்றாய்க்குக் கூறுதலை நிகழ்த்துவித்தலாம். எனவே, அவள் தந்தைக்குந் தன்னையர்க்கும் உணர்த்துதலும் அதனை மீண்டு வந்து தலைவிக்கு உணர்த்துதலும் பெற்றாம். அவ்வறத் தொடுநிலை எழுவகைய எனப் பொருளியலுட் கூறுப.

உதாரணம்: "காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்" (கலி-39.) என்னுங் குறிஞ்சிக்கலியுள், "தெருமந்து சாய்த்தார் தலை" எனப் புனறருபுணர்ச்சியால் தோழி செவிலிக்கு அறத்தொடுநிற்பச் செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்ப அவள் ஏனையோர்க்கு அறத்தொடு நின்றவாறு காண்க.

"வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டீராய்க்
கோடாது நீர்கொடுப்பி னல்லது—கோடா

---

* இது பாடவுரை.

வெழிலு முலையு மிரண்டற்கு முந்நீர்ப்
பொழிலு மிலையாமோ போந்து.". (திணை, 150-15.)

"நான்றோர் வருந்திய வருத்தமு நுமது
வான்றோய் வன்ன குடிமையு நோக்கித்
திருமணி வரன்றுங் குன்றங் கொண்டிவள்
வருமுலை யாகம் வழங்கினோ நன்றே
யஃதான், றடைபொருள் கருதுவி ராயிற் குடையொடு
கழுமலந் தந்த நற்றேர்ச் செம்பியன்
பங்குனி விழவின் வஞ்சியோ
டுள்ளி விழவி னுறந்தையுஞ் சிறிதே."

இவை நற்றாய் தந்தை தன்னையர்க்கு அறத்தொடு நின்றன.

"அன்னாய் வாழிவேண் டன்னை யென்னை
*தானு மலைந்தா னெமக்குந் தழையாயின
பொன்வீ மணியரும் பினவே
யென்ன மரங்கொலவர் சார லவ்வே." (ஐங்குறு-201.)

இது தழைதந்தமை கூறிற்று.

"சுள்ளி சுனைநீலஞ் சோபா லிகைசெய
லள்ளி யளகத்தின் மேலாய்ந்து—தெள்ளி
யிதணாற் கடியொடுங்கா வீர்ங்கடா யானை
யுதணாற் கடிந்தா னுளன்." (திணை, 150-2.)

இது களிற்றிடையுதவி கூறிற்று.

"வில்லார் விழவினும் வேலாழி சூழுலகி
னல்லார் விழவகத்து நாங்காணே—நல்லா
†யுவர்க்கத் தெறிதிரைச் சேர்ப்பனோ டொப்பார்
சுவர்க்கத் துளராயிற் சூழ்" (திணை, 150-62.)

---

* 'தரினு மலைந்தான்' என்பதும் பாடம்.

† 'உவர்க்கத் தொரோவுதவிச் சேர்ப்பனெப் பாரை' என்பதும் பாடம்.

இது செவிலி தலைவியைக் கோலஞ்செய்து இவள் நலத்திற்கு ஒப்பான் ஒருவனைப் பெறவேண்டுமென்றாட்குத் தோழி கூறியது.

"பெருங்கடற் *றிரைய‍து சிறுவெண் காக்கை
துறைபடி யம்பி †யகமனை யீனுந்
தண்ணந் துறைவ னல்கி
னொண்ணுத லரிவை பாலா ரும்மே." (ஐங்குறு-168.)

இது நொதுமலர்வரைவுழி ஆற்றாது பசியட நின்றுழி இதற்குக் காரணமென்னென்ற செவிலிக்குத் தோழி கூறியது.

"எந்தையும் யாயு முணரக் காட்டி
‡யொளித்த செய்தி வெளிப்படக் கிளந்தபின்
மலைகெழு வெற்பன் றலைவந் திரப்ப
நன்றுபுரி கொள்கையி னொன்றா யின்றே
முடங்க லிறைய தூங்கணங் குரீஇ
நீடிரும் பெண்ணைத் தொடுத்த
§கூட்டினு மயங்கிய மைய லூரே." (குறுந்-374.)

இஃது அறத்தொடு நின்றமை தலைவிக்குக் கூறியது.

வரைவு உடன்பட்டோற் கடாவல் வேண்டினும்—தலைவி தமர்வரைவுடன்படத் தானும் வரைவுடன்பட்ட தலைவன் வரைவிடைவைத்துப் பிரிந்து நீட்டித்துழி இனி நீட்டிக்கற்பாலையல்லையெனக் கடுஞ்சொற் கூறி வரைவுகடாவல் வேண்டிய இடத்தும்:

---

* 'கரையது' என்பதும் பாடம்.
† 'அகமனை' என்பதும் பாடம்.
‡ 'ஒளித்த செய்தியின்' என்பதும் பாடம்.
§ 'கூடினு மயங்கிய' என்பதும் பாடம்.

உதாரணம்:

" மாமலர் முண்டகந் தில்லையோ டொருங்குடன்
கான லணிந்த வுயர்மண லெக்கர்மேற்
சீர்மிகு சிறப்பினோன் *மரமுத லசைத்த
நீர்மலி கரகம்போற் பழந்தூங்கு முடத்தாழைப்
பூமலர்ந் தவைபோலப் புள்ளல்குந் துறைவகேள்;
ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுத
லன்பெனப் படுவது தன்கிளை செறாமை
யறிவெனப் படுவது பேதையார் சொன்னோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாமை
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்;
ஆங்கதை யறிந்தனி ராயினென் றோழி
நன்னுத னலனுண்டு துறத்தல் கொண்க
தீம்பா லுண்போர் சொள்கலம் வரைதலி
னின்றலை வருந்தியா டுயரஞ்
சென்றனை களைமோ பூண்கனின் றேரே." (கலி-133.)

இது முற்காலத்து வரைவுகடாவுமாறு போலன்றி வரைவுகடாயது.

" யாரை யெலுவ யாரே நீயெமக்
கியாரையு மல்லை நொதும லாளனை
யனைத்தாற் கொண்கவெம் மிடையே நினைப்பிற்
கடும்பகட் டியானை நெடுந்தேர்க் குட்டுவன்
வேந்தடு களத்தின் முரசதிர்ந் தன்ன
வோங்கற் புணரி பாய்ந்தாடு மகளி

* 'மரமுதற் கைசேர்த்த' என்பதும் பாடம்.

ரணிந்திடு பல்பூ மரீஇ யார்ந்த
வாபுலம் புகுதரூஉ பேரிசை மாலைக்
கடல்கெழு மாந்தை யன்னவெம்
வேட்டனை யல்லையா னலந்தந்துசென்மே." (நற்றிணை-395.)

இது நலந்தொலைவுரைத்து வரைவுகடாயது.

ஆங்கு அதன் தன்மையின் வன்புறை உளப்பட—அங்ஙனங் கடாவியவழி அவ்வரைந்துகோடன் மெய்யாயினமையின் வதுவை முடியுமளவும் ஆற்றுதற்கு வற்புறுத்துக் கூறுதல் உளப்பட:

தன்மை, மெய்மை. எனவே, முன் பொய்மையான வற்புறுத்தலும் பெற்றாம்.

உதாரணம்:

"நெய்கனி குறும்பூழ் காய மாக
வார்பதம் பெறுக தோழி யத்தை
பெருங்கன் னாடன் வரைந்தென *வவனெதிர்
நன்றோ மகனே யென்றவி
னன்றே போலு மென்றுரைத் தோனே." (குறுந்-389.)

இது தலைவன் குற்றேவன்மகனான் வரைவுமலிந்த தோழி தலைவிக்குரைத்தது.

"*கூன்முண் முண்டகக் கூர்ம்பனி மாமலர்
நூலறு முத்திற் காலொடு பாறித்
துறைதொறும் †பரக்குந் தூமணற் சேர்ப்பனை
யானுங் காதலென் யாயு நனிவெய்ய
ளெந்தையுங் கொடீஇயர் வேண்டு
மம்ப லூரு மவனொடு மொழிமே." (குறுந்-51.)

* 'கூர்முள்' என்பதும் பாடம்.
† 'பரிக்கும்' என்பதும் பாடம்.

என வரும்.

" கொடிச்சி காக்கு மடுக்கற் பைந்தினை
முந்துவிளை பெருங்குரல் கொண்ட மந்தி
கல்லாக் கடுவனொடு நல்வரை யேறி
யங்கை நிறைய ஞெமிடிக் கொண்டுதன்
றிரையணற் கொடுங்கவு ணிறைய முக்கி
வான்பெய னனைந்த புறத்த நோன்பியர்
தையூ ணிருக்கையிற் றோன்று நாடன்
வந்தனன் வாழி தோழி யுலகங்
கயங்க ணற்ற பைதறு காலைப்
பீளொடு திரங்கிய நெல்லிற்கு
நள்ளென் யாமத்து மழைபொழிந் தாங்கே.''(நற்றிணை-22.)

இதனுள், தினைவிளைகாலம் வதுவைக்காலமாயினும் வம்பமாரி இடையிடுதலன்றி யான்கூறிய வரைவு பொய்த்தனரேனும் இன்று மெய்யாகவே வந்தனரென்றாள்.

" உரவுத்திரை பொருத பிணர்படு தடவுமுத
லரவுவாள் வாய முள்ளிலைத் தாழை
பொன்னேர் தாதிற் புன்னையொடு கமழும்
பல்பூங் கானற் பகற்குறி வந்துநம்
மெய்கவின் சிதையப் பெயர்ந்தன னாயினுங்
குன்றிற் றோன்றுங் குவவுமணல் வேறிக்
கண்டனம் வருகஞ் சென்மோ தோழி
தண்டா ரகலம் வண்டிமிர் பூதப்
படுமணிக் கலிமா கடைஇ
நெடுநீர்ச் சேர்ப்பன் வரூஉ மாறே.'' (நற்றிணை-235.)

இது தலைவன் வரைவொடு வருகின்றமை காண்கம வம்மோவென்றது.

பாங்குற வந்த நாலெட்டும்--பாங்கியர் பலருள்ளும் பாங்காந்தன்மை சிறப்பக் கூறிய முப்பத்திரண்டும்; நாலெட்டு

மென உம்மை விரிக்க: வகையும்—இக்கூற்றுக்களிலே வேறு பட வருவனவும்; தாங்கருஞ் சிறப்பின் தோழி மேன—பொறுத்தற்கரிய சிறப்பினையுடைய தோழியிடத்தன என்றவாறு.

எனவே, ஒன்றிய தோழிக்கன்றி ஏனையோர்க்கு இக் கூற்று இன்றென்றான். தாயத்தாய்க் கொண்டுவருஞ் சிறப்பும், இருவர் துன்பமுந் தான் உற்றாளாகக் கருதுஞ் சிறப்பும் உடைமையின் 'தாங்கருஞ் சிறப்பு' என்றான். உரைத்துழிக் கூட்டத்தோடே அகற்சியும் என்றலும் ஊட்டலும் உரைத்தலும் அச்சுறுத்தலும் எஞ்சாமற் கிளந்த இருநான்கு கிளவியும் பாங்குறவந்த என்க. நாட்டத்தின் கண்ணும் எஞ் சாமற் கிளந்த என்க. என்றது, ஆராய்ச்சியுடனே இவ் வெட்டுங் கூறுமென்றான். பெயர்ப்பினும் ஒழிப்பினும் உரைத்துழிக் கூட்டத்தோடு எஞ்சாமற் கிளந்த என்க. ஏனைப்பொருள்கள் ஏழனுருபும் வினையெச்சமுமாய் நின்ற வற்றைப் பாங்குறவந்த என்பதனோடு முடித்து அப்பெய ரெச்சத்தினை நாலெட்டென்னும் பெயரோடு முடித்து அத னைத் தோழிமேனவென முடிக்க.

இனி வகையாற்கொள்வன வருமாறு:

"அன்னை வாழிவேண் டன்னை நெய்த
னீர்ப்படர் தூம்பின் பூக்கெழு துறைவ
னெந்தோ டுறந்த காலை யெவன்கொல்
பன்னாள் வருமவ னளித்த போழ்தே." (ஐங்குறு-109.)

இஃது அறத்தொடு நின்றபின் வரைவான் பிரிந்து நீட் டித்துழி ஐயுற்றசெவிலி அவன் நம்மைத் துறந்தான்போ லும் நுங்கட்கு அவன் கூறியதிறம் யாதென்றாட்குத் தோழி

கூறியது.

“அன்னை வாழிவே ண் டன்னை *சழனிய
முண்டக மலருந் தண்கடற் சேர்ப்ப
னெந்தோ டறந்தனனுயி
னைவன்கொன் மற்றவ னயந்த தோளே.” (ஐங்குறு-108.)

இஃது அறத்தொடு நின்றபின் வரைவுநீட மற்றொரு குலமகளை வரையுங்கொலென்று ஐயுற்ற செவிலி குறிப்பறிந்தகோழி அவட்குக் கூறியது.

“அன்னை வாழிவேண் டன்னை புன்னையொடு
ஞாழல் பூக்குந் தண்ணந் துறைவ
னிவட்கமைந் தனனுற் றனே
தனக்கமைந் தன்றிவண் மாமைக் கவினே.” (ஐங்குறு-103.)

இது வதுவைமகிழாநின்றுழித் தாய்க்குக் காட்டித் தோழி கூறியது.

“கன்னவி றோளான் கடிநாள் விலக்குதற்
கென்னை பொருணினைந்தா ரேந்திழாய்—பின்ன
ரமரேற்றுக் கொள்ளுமென் றஞ்சினே னஞ்சார்
நமரேற்றுக் சொள்ளாத ஞான்று.”

இது சுற்றத்தார் பொருள்வேண்டி மறுத்தாரென்றது.

“நொதும லாளர் கொள்ளா ரிவையே
யெம்மொடு வந்து கடலாடு மகளிரு
நெய்தலம் பகைத்தழைப் பாவை புனையா
ருடலகங் கொள்வோ ரின்மையிற்
றொடலைக் குற்ற சிலபூ வினரே.’ (ஐங்குறு-187.)

* ‘கழிய’ என்பதும் பாடம்.

இது கையுறை மறுத்தது.

“ அம்ம வாழி தோழி நம்மலை
வரையா மிழியக் கோட னீடக்
காதலர்ப் பிரிந்தோர் கையற நலியுந்
தண்பனி வடந்தை *யச்சிர
முந்துவந் தனர்நங் காத லோரே.” (ஐங்குறு-223.)

இது வரைவிடைப் பிரிந்தோன் குறித்த பருவத்திற்கு முன் வருகின்றமை யறிந்த தோழி தலைவிக்குக் கூறியது.(உரு)

115. களவல ராயினுங் காமமெய்ப் படுப்பினு
மளவுமிகத்தோன்றினுந் தலைப்பெய் துகாணினுங்
கட்டினுங் கழங்கினும் வெறியென விருவரு
மொட்டிய திறத்தாற் செய்திக் கண்ணு
மாடிய சென்றுழி யழிவு தலைவரினுங்
காதல் கைமிகக் கனவி னரற்றலுந்
தோழியை வினவலுந் தெய்வம் வாழ்த்தலும்
போக்குட னறிந்தபிற் றோழியொடு கெழீஇக்
கற்பி னாக்கத்து நிற்றற் கண்ணும்
பிரிவி னெச்சத்து மகணெஞ்சு வலிப்பினு
மிருபாற் குடிப்பொரு ளியல்பின் கண்ணு
மின்ன வகையிற் பதின்மூன்று கிளவியோ
டன்னவை பிறவுஞ் செவிலி மேன.

இது செவிலிகூற்று நிகழுமாறு கூறுகின்றது : அக்கூற்றுச் செவிலி தானே கூறப்படுவனவுந், தலைவியுந் தோழியுங் கொண்டு கூற்றாகக் கூறப்படுவனவுமென இருவகையவாம்:

* ‘அற்சிரம்’ ‘அர்ச்சிரம்’ என்பவும் பாடம்.

இக்கூறப்பட்ட பதின்மூன்றுகிளவியும் அவைபோல்வன பிற வுஞ் செவிலி தானே கூறப்படுவனவுந் தலைவியுந் தோழியும் அவள் கூற்றாய்க் கொண்டெடுத்து மொழியப்படுவனவு மாய்ச் செவிலிக்குரியவா மென்றவாறு. 'இன்னவகை' யென்றார் தன்கூற்றுங் கொண்டுகூற்றுமாய் நிகழுமென்றற்கு.

இதன்பொருள்: களவு அலர் ஆயினும்—களவொழுக்கம் புறத்தார்க்குப் புலனாய் அலர்தூற்றப்படினும்:

உதாரணம்:

"பாவடி யுரல பகுவாய் வள்ளை
ஏதின் மாக்க ணுவறலு நுவல்ப
வழிவ தேவன்சொலிப் பேதை யூர்க்கே
பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கட் டெய்வங் குடவரை யெழுதிய
நல்லியற் பாவை *யன்னவென்
மெல்லியற் குறுமகள் பாடிநன் குறினே." (குறுந்-89.)

இது செவிலிதானே கூறியது.

"அம்ம வாழி தோழி நென்ன
லோங்குதிரை வெண்மண லுடைக்குந் துறைவற்
கூரார் பெண்டென †மொழிய வென்னை
யதுகேட் ‡டன்னா யென்றன ளன்னை
§பைஎபய வெம்மை யென்றனென்யானே." (ஐங்குறு-113)

இதனுள், பெண்டென்றதனைக்கேட்டு அன்னாயென்றனள் அன்னையென அலர்தூற்றினமைகண்டு செவிலிகூறிய கூற்றினைத் தலைவிகொண்டு கூறியவாறு காண்க.

---

* 'அன்னவிம்' என்பதும் பாடம்.

† 'மொழிப' என்பதும் பாடம்.

‡ 'அன்னை' என்பதும் பாடம்.

§ 'பைய' 'பைபய' என்பவும் பாடம்.

காமம் மெய்ப்படுப்பினும்—தலைவி கரந்தொழுகுங் காமந்தானே அக்களவினை நன்றாயுந் தீதாயும் மெய்க்கண் வெளிப்படுப்பினும்:

உதாரணம்:

"மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதொன் றுண்டு.' (குறள்-குறிப்பறிவு-3.)

இது காமத்தால் திகழ்ந்த பொலிவினைச் செவிலி தானே கூறியது.

அளவு மிகத் தோன்றினும்—கண்ணுந் தோளும் முலையும் பிறவும் புணர்ச்சியாற் கதிர்த்துக் காரிகை நீரவாய் அவளிடத்து அளவை மிகக்காட்டினும்:

உதாரணம்:

"கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது." (குறள்-குறிப்பறிவு-2.)

இது கதிர்ப்புக்கண்டு செவிலி தானேகூறியது.

"பின்னுவிட நெறித்த கூந்தலும் பொன்னென
வாகத் தரும்பிய சுணங்கும் வம்புடைக்
கண்ணுருத் தெழுதரு முலையு நோக்கி
யெல்லிவள் பெரிதெனப் பன்மாண் கூறிப்
பெருந்தோ ளடைய முயங்கி நீடுநினைந்
தருங்கடிப் படுத்தனள் *** ***
*** *** *** ***
தாரார் மார்பநீ தணந்த ஞான்றே." (அகம்-149.)

இது தோழி கொண்டுகூறியது.

தலைப்பெய்து காணினும்—இருவர்க்குங் கூட்டம் நிகழ்

னலானே தலைவனை இல்லிடத்தே வரக்காணினுந் தலைவியைப் புறத்துப்போகக் காணினும்:

பெய்தென்பது காரணகாரியப் பொருட்டாய்ப் பிறவினை கொண்டது.

உதாரணம்:

"இரும்புலி தொலைத்த பெருங்கை வேழத்துப்
புலவுநாறு புகர்நுதல் கழுவக் கங்கு
லருவி தந்த வணங்குடை நெடுங்கோட்
டஞ்சுவரு விடர்முன்கை யாரிரு ளகற்றி
மின்னொளி ரெஃகஞ் சென்னெறி விளக்கத்
தனியன் வந்து பனியலை முனியா
னீரழி மருங்கி னாரிடத் தமன்ற
குளவியொடு மிடைந்த கூதளங் கண்ணி
யசையா நாற்ற மசைவளி பகரத்
துறுக னண்ணிய கறியிவர் படப்பைக்
குறியிறைக் குரம்பைநம் மனைவயிற் புகுதரு
மெய்ம்மலி யுவகைய னந்நிலை கண்டு
முருகென வுணர்ந்து முகமன் கூறி
யுருவச் செந்தினை நீரொடு தூஉய்
நெடுவேட் பரவு மன்னை யன்னோ
வென்னா வதுகொ றானே பொன்னென
மலர்ந்த வேங்கை யலங்குசினை பொலிய
மணிநிற மஞ்ஞை யகவு
மணிமலை நாடனோ டமைந்தநந் தொடர்பே." (அகம்-271.)

இம் மணிமிடைபவளத்துத் தலைவனைச் செவிலிகண்டு முருகெனப் பராவினமை தோழி கொண்டுகூறினாள்.

"உருமுரறு கருவிய" (அகம்-157) என்பதனுள்,

* "மிடையூர் பிழியக் கண்டன னிவளென
வலையல் வாழிவேண் டன்னை"

என்றது தலைவி புறத்துப்போகக் கண்டு செவிலிகூறிய தனைத் தோழி கொண்டுகூறினாள். தானே கூறுவன வந்துழிக்காண்க.

கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும் ஒட்டிய திறத்தாற் செய்திக்கண்ணும்—கட்டுவிச்சியும் வேலனுந் தாம் பார்த்த கட்டினானுங் கழங்கினானுந் தெய்வத்திற்குச் சிறப்புச் செய்யாக்கால் இம்மையல் தீராதென்று கூறுதலின் அவ்விருவருந் தம்மினொத்த திறம்பற்றியதனையே செய்யுஞ் செய்தியிடத்தும்:

'திறம்' என்றதனான் அவர் வேறு வேறாகவுங் கூறப்படும்.

உதாரணம்:

"பெய்ம்மணன் முற்றங் கவின்பெற வியற்றி
மலைவான் † சோட்ட சினைஇய வேலன்
கழங்கினா னறிகுவ தென்றா
னன்றா லம்ம நின்றவிவ ளலனே." (ஐங்குறு-248.)

இது வேலன் கழங்குபார்த்தமை கூறிற்று.

"அறியா மையின் வெறியென மயங்கி
‡யன்னையு மருந்துய ருழந்தன §ளதனை
லெய்யாது விடுதலோ கொடிதே நிரையித

* இச்செய்யுளை ஆம் 542 பக்கத்திற் காண்க.

† 'கொண்ட' என்பதும் பாடம்.

‡ 'அன்னை' என்பதும் பாடம்.

§ 'அதனை-னறியாது' என்பதும் பாடம்.

மாய்மல ருண்கண் பசப்பச்
சேய்மலை நாடன் செய்த நோயே." (ஐங்குறு-242.)

இது வெறியென அன்னைமயங்கினமை கூறிற்று.

"*அணங்குடை நெடுவரை" என்னும் (22) அகப்பாட்டினுட் கட்டுக்கண்டு வெறியெடுத்தமை கூறிற்று. † "பனிவரை நிவந்த" என்னும் (98) அகப்பாட்டினுட் "பிரப்புளர் இரீஇ" எனக் கட்டுவிச்சியைக் கேட்டவாறும் "என்மகட்கு" எனச் செவிலிகூற்று நிகழ்ந்தவாறுங் காண்க. இதனுள் "நெடுவே ளணங்குவ னெனினே" எனத் தலைவி அஞ்சவேண்டியது, இருவரும் ஒட்டிக்கூறுமல் தெய்வந்தான் அருளுமென்று கோடலின்.

"இகுளை கேட்டிசிற் காதலந் தோழி
குவளை யுண்கண் டேன்பனி மல்க
வறிதியான் வருந்திய செல்லற் கன்னை
பிறிதொன்று கடுத்தனளாகி வேம்பின்
வெறிகொள் பாசிலை நீலமொடு சூடி
யுடலுணர்க் கடந்த கடலந் தானைத்
திருந்திலை நெடுவேற் றென்னவன் பொதியிற்
றருஞ்சிமை யிழிதரு மார்த்துவா லருவியிற்
றதும்புசீ ரின்னியங் கறங்கக் கைதொழு
துருகெழு சிறப்பின் முருகு மனைத்தரீஇக்
கடம்புங் களிறும் பாடி நுடங்குபு
தோடுந் தொடலையுங் கைக்கொண் டல்கலும்
பாடின ளாத னன்றோ நீடு
நின்னொடு தெளித்த நன்மலை நாடன்
குறிவர லரைநாட் குன்றத் துச்சி

* இச்செய்யுளை 349 ஆம் பக்கத்திலும், †இச்செய்யுளை 461 ஆம் பக்கத்திலும் காண்க.

நெறிகெட வீஇழ்ந் துன்னருங் கூரிருட்
டிருமணி யுமிழ்ந்த நாகங் காந்தட்
கொழுமடற் புதுப்பூ வூதுந் தும்பி
நன்னிற மருளு மருவிட
ரின்னா நீளிடை நினையுமெ னெஞ்சே." (அகம்-137.)

என்னும் மணிமிடைபவளம் விதந்து கூறுமையின் இரண்டும் ஒருங்கு வந்தது.

ஆடிய சென்றுழி அழிவு தலைவரினும்— அங்ஙனம் வெறியாடுதல் வேண்டிய தொழின் முடிந்த பின்னுந் தலைவிக்கு வருத்தம் மிகினும்:

உதாரணம்:

"வேங்கை யிரும்புனத்து வீழுங் கிளிகடியாள்
காந்தண் முகிழ்விரலாற் சண்ணியுங் கைதொடா
ளேந்தெழி லல்குற் றழைபுனையா ளெல்லேயென்
பூந்தொடி யிட்ட புலம்பு மறிதிரோ."

எனவும்,

"புனையிருங் குவளைப் போதுவிரி நாற்றஞ்
சுனையர மகளி ரவ்வே சினைய
வேங்கை யொள்வீ வெறிகமழ் நாற்றமொடு
காந்த ளுறுப சல்லர மகளி
ரகிலு மாரமு நாஅ றுபவன்
றிறலரு மரபிற் றெய்வ மென்ப
வெறிபுனங் காவ லிருந்ததற் றெருட்டுத்
தீவிய நாறு மென்மக
ளறியேன் யானிஃ தஞ்சுதக வுடைத்தே."

எனவும் வரும்.

இவை ஆற்றாமை கண்டு அஞ்சிச் செவிலி பிறரை வினாயின.

“ அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலு முண்ணாள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி யதன்றிறம்
யானுந் தெற்றென வுணரேன் மேனாண்
மலிபூஞ் சாரலென் றோழி மாரோ
டொலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப்
புலிபுலி யென்னும் பூச றோன்ற
வொண்செங் கழுநீர்க் கண்போ லாயிதழ்
ஊசி போகிய சூழ்செய் மாலையன்
பக்கஞ் சேர்த்திய செச்சைக் கண்ணியன்
குயமண் டாகஞ் செஞ்சாந்து நீவி
வரிபுனை வில்ல னொருகணை தெரிந்துகொண்
டியாதோ மற்றம் மாதிறம் படரென
வினவி நிற்றந் தோனே யவற்கண்
டெம்மு ளெம்முண் மெய்ம்மறை யொடுங்கி
நாணி நின்றன மாகப் பேணி
யைவகை வகுத்த கூந்த லாய்நுதன்
மையீ ரோதி மடவீர் நும்வாய்ப்
பொய்யு முளவோ வென்றனன் பையெனப்
பரிமுடுகு *தவிர்ந்தோ னெதிர மறுத்து
நின்மக ளுண்கண் பன்மா ணோக்கிச்
சென்றோன் மன்றவக் குன்றுகிழ வோனே
பகன்மா யந்திப் படுசுட ரமயத்
தவன்மறை தேஎ நோக்கி மற்றிவன்
மகனே தோழி யென்றன
ளிதனள வுண்டுகொன் மதிவல் லோர்க்கே.” (அகம்-48.)

* ‘ தவிர்த்தோன்’ என்பதும் பாடம்.

இது செவிலிகூற்றினைத் தோழி கொண்டு கூறியது.

காதல் கைமிகக் கனவின் அரற்றலும்—தலைவியிடத்துக் காதல் கையிகந்து பெருகுதலால் துயிலா நின்றுழியும் ஒன்று கூறி அரற்றுதலும் :

கனவு - துயில், துயிலிற் காண்டலைக் கனவிற் காண்டலென்ப.

உதாரணம் : "*பொழுது மெல்லின்று" (குறுங்-161) என்பதனுட் "புதல்வற்புல்லி அன்னாய்" என்று தலைவியை விளித்தது கனவின் அரற்றலாயிற்று.

அரற்றல், இன்னதோர் இன்னாக்காலத்து என் செய்கின்றாயெனக் காதல்பற்றி இரங்குதல்.

தோழியை வினவலும்—நின்றோழிக்கு இவ்வேறுபாடு எற்றினாயிற் றென்றாற்போலத் தோழியை வினாவுதலும்:

உதாரணம் :

"நெடுவே லேந்தி நீயெமக் கியாஅர்
தொடுதே லோம்பென வரற்றலு மரற்றுங்
கடவுள் வேங்கையுங் காந்தளு மலைந்த
தொடலைக் கண்ணி பரியலு மென்னும்
பாம்புபட இவந்த பயமழைத் தடக்கைப்
பூம்பொறிக் கழற்கா லாஅய் குன்றத்துக்
குறுஞ்சுனை மலர்ந்த குவளை நாறிச்
சிறுதேன் கமழ்ந்த வம்மெல் லாகம்
வாழியெம் மகளை யுரைமதி யிம்மலைத்
தேம்பொதி கிளவியென் பேதை
யாங்கா டினளோ வின்னெடு பகலே."

---

* இச்செய்யுளை 453 ஆம் பக்கத்திற் காண்க.

னை வரும்.

இது செவிலி தோழியை வினாயது.

" ஒங்குமலை நாட வொழிகவின் வாய்மை
சாம்புதலை மணந்த கல்லதர்ச் சிறுநெறி
யுறுபகை பேணா திரவின் வந்திவள்
பொறிகிளர் ஆகம் புல்லத் தோள்சேர்
பறுகாற் பறவை யளவில மொய்த்தலிற்
கண்கோ ளாக நோக்கிப் பண்டு
மினையை யோவென வினவினள் யாயே
யதனெதிர் சொல்லா ளாகி யல்லாந்
தென்முக நோக்கி யோளே யன்னா
யாங்குணர்ந் துய்குவள் கொல்லென மடுத்த
சாந்த ஞெகிழி காட்டி
யீங்கா யினவா லென்றிசின் யானே." (நற்றிணை-55.)

இது செவிலி வினாயினமையைத் தோழி கொண்டு கூறினாள்.

தெய்வம் வாழ்த்தலும்—இன்னதொன்று நிகழ்ந்ததெனத் துணிந்த பின்னர்த் தன்மகளொடு தலைமகனிடை நிகழ்ந்த ஒழுக்கம் நன்னர்த்தாகவெனத் தெய்வத்திற்குப் பராவுதலும் :

உதாரணம் :

" பெருமலைச் சிலம்பின் வேட்டம் போகிய
*செறிபடை யம்பின் வல்விற் கானவன்
பொருதுதொலை யானை வெண்கோடு †கொண்ட

* 'செறிமடை' என்பதும் பாடம்.
† 'கொண்டு' என்பதும் பாடம்.

நீர்திகழ் சிலம்பினன் போன கழலோன்
சண்பொரு திமைக்குந் திருமணி கிளர்ப்ப
வைந்நுதி வான்மருப் பொடிய வுக்க
தெண்ணீ ராலி கடுக்கு முத்தமொடு
மூவேறு தாரமு மொருங்குடன் சாற்றிச்
சார்ந்தன மொன்ற யாமாக நறைநார்
வேங்கைக் *கண்ணி யணிதரு நாடற்
கின்றீம் பலவி னேர்செழு செல்வத்
தெந்தையு மெதிர்ந்தனன் கொடையே யலர்வா
யம்ப லூரு மவனொடு மொழியுஞ்
சாயிறைத் திரண்ட தோள்பா ராட்டி
யாயு மவனே யென்னும் யாமும்
வல்லே வருக வரைந்த நாளென
நல்லிறை மெல்விரல் கூப்பி
யில்லுறை கடவுட் கோட்குதும் பலியே." (அகம்-281.)

இதனுள் 'தோள்பாராட்டி யாயுமவனே என்னும்' என்று யாய் தெய்வம் பராயினளென்பதுபடக் கூறி யாம் அத்தெய்வத்திற்குப் பலிகொடுத்து மென்றவாறு காண்க.

போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக் கற்பின் ஆக்கத்து நிற்றற்கண்ணும்—உடன்போக்கு அறிந்த பின்னர்ச் செவிலி தோழியொடு மதியுடம்பட்டு நின்று தலைவியது கற்புமிகுதியே கருதி உவந்த உவகைக்கண்ணும்:

அது,

" †எம்மனை முந்துறத் தருமோ
தன்மனை யுய்க்குமோ யாதவன் குறிப்பே." (அகம்-194.)

---

* 'கண்ணியி னிழிதரு' என்பதும் பாடம்.

† இச்செய்யுளை 84 ஆம் பக்கத்திற் காண்க.

என்றாற்போலக் கற்பினுக்கத்துக் கருத்து நிகழ்தல்.

உதாரணம் :

"முயங்குகம் வாராய் தோழி தயங்குபு
கடல்பெயர்ந் தன்ன கானலங் கல்லெனப்
பெயல்கடைக் கொண்ட பெருந்தண் வாடை
வருமுலை வெப்பங் கொழுநற் போற்றிய
சென்றன ளம்மனின் றோழி யவனொ
டென்றினி வரூஉ மென்றனள்
வலந்துரை தவிர்ந்தன் றலர்ந்த வூரே."

இது செவிலி கற்பினுக்கத்து நின்றமை தோழி கூறியது.

பிரிவின் எச்சத்தும்—தலைவி உடன்போயவழித் தான் பின் செல்லாதே எஞ்சுதலும் உளவாதலின் ஆண்டுக் கூறுவனவும் :

உதாரணம் :

"தெறுவ தம்ம நும்மகள் விருப்பே
யுறுதுய ரவலமொ டுயிர்செலச் சாஅய்ப்
பாழ்படு நெஞ்சம் படரடக் கலங்க
நாடிடை விலங்கிய *வெற்பிற்
காடிறந் தனணம் †மணங்கி யோளே." (ஐங்குறு-313.)

இது பின் செல்லாது வருந்தியிருந்த செவிலியைக் கண்ட நற்றாய் கூறியது.

இது நற்றாய் கூற்றாய்ச் 'செவிலிமேன' ஆயிற்று.

---

* 'வைப்பில்' என்பதும் பாடம்.
† 'காதலோளே' என்பதும் பாடம்.

மகள் நெஞ்சு வலிப்பினும்—உடன் போக்கிற்கு மகள் நெஞ்சு துணியினும்:

தன்மேல் அன்பு நீங்கியது உணர்ந்துசெவிலி கூறும்.

உதாரணம்:

"பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனெ னென்றன
ளினியறிந் தேனது துனியா குதலே
கழனெடி யாஅய் மழைதவழ் பொதியில்
வேங்கையுங் காந்தளு நாறி
யாம்பன் மலரினுந் தான்றண் ணியளே." (குறுந்-84.)

என வரும்.

இருபாற் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்—தலைவ னுந் தலைவியுந் தோன்றிய இருவகைக் குடியும் நிரம்பிவருதல் இயல்பாகப் பெற்றவழியும்:

'பொருள்' என்றார் பிறப்புமுதலிய பத்தையுங்கருதி.

"காமர் கடும்புனல்" என்னும் (39) கலியுள்,

"அவனுந்தா, னேன லிதணத் தகிற்புகை யுண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத்
தேனி னிறாலென வேணி யிழைத்திருக்குங்
கானக நாடன் மகன்; * * * * * *
எனவாங், கறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
வென்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்."

எனத் தோழி தான்கூறிய இருபாற் குடிப்பொருளைக் கூறிச் செவிலி அறத்தொடு நின்றாளெனக் கொண்டெடுத்து மொழிந்தவாறு காண்க.

இன்னவகையிற் பதின்மூன்று கிளவியோடு அன்னவை பிறவும்—இத்தன்மைத்தாகிய கூறுபாட்டையுடைய பதின்மூன்று கிளவியோடே அவைபோல்வன பிறவாய் வருவனவும்; செவிலிமேன—தன்கூற்றாயும் பிறர்கொண்டு கூறுங் கூற்றாயும் கூறுங் கூற்றுச் செவிலிக்கு உரியவாம் என்றவாறு.

'அன்னபிற' என்றதனால்,

" பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
*நல்லூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்
செயலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே." (குறுந்-15.)

இஃது உடன்போயபின் செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.

இன்னும் அதனானே,

" வல்லுரைக் கடுஞ்சொ லன்னை துஞ்சாள்"† (அகம்-121.)
என்றலும்,

" சிறுகிளி கடிதல் தேற்றா ளிவள்"‡ (அகம்-28.)

என்றலும்,

"கண்கோ ளாக நோக்கிப் பண்டு மினையையோ"§ (நற்றிணை 55.)
என்றலும் போல்வன பிறவுங் கொள்க. (உச)

---

* 'நரலூர்' என்பதும் பாடம்.
† இவ்வடி வந்த செய்யுளை 420 ஆம் பக்கத்திற்காண்க.
‡ இவ்வடி வந்த செய்யுளை 526 ஆம் பக்கத்திற் காண்க.
§ இவ்வடி வந்த செய்யுளை 565 ஆம் பக்கத்திற் காண்க.

116. தாய்க்கும் வரையா ருணர்வுடம் படினே.

இது செவிலிக்கு உரியனகூறி நற்றாய்க்கு உரிய கூற்றுக் கூறுகின்றது.

இதன்பொருள்: உணர்வு உடம்படின்—அங்ஙனஞ் செவிலி உணர்ந்தாங்கே நற்றாயும் மதியுடம்படில்; தாய்க்கும் வரையார்—நற்றாய்க்கும் முற்கூறிய பதின்மூன்று கிளவியும் பிறவுமாகக் கொண்டு எடுத்து மொழிதல் வரையார் என்றவாறு.

'தாய்க்கும்' என்றார் இவட்கு அத்துணை பயின்றுவாரா என்றற்கு. அது நற்றாய் இல்லறம் நிகழ்த்துங் கருத்து வேறு உடைமையின் உற்றுநோக்காள்; செவிலியே தலைவியை உற்றுநோக்கி ஒழுகுவாளாதலின். இலக்கணமுண்மையின் இலக்கியம் வந்துழிக் காண்க. (உரு)

117. கிழவோ னறியா வறிவின ளிவளென
மையறு சிறப்பி னுயர்ந்தோர் பாங்கி
னையக் கிளவி யறிதலு முரித்தே.

இஃது அங்ஙனங் களவு வெளிப்பட்ட பின்னர் நற்றாய்க்குஞ் செவிலிக்கும் உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

இதன்பொருள்: கிழவோன் அறியா அறிவினள் இவளென ஐயக்கிளவி—நங்குலத்திற்கு ஒத்த தலைவனை அறிந்து கூடாத அறிவினையுடையள் இவளென்று தம்மனத்தை ஐயமுற்றும் பிறரோடு உசாவுங் கிளவியை; மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின் அறிதலும் உரித்தே—குற்றமற்ற சிறப்பினையுடைய அந்தணர் முதலியோரிடத்தே கூறி அது

வும் முறைமையென்று அவர்கூற அறிதலும் உரித்து என்றவாறு.

என்றது, 'மிக்கோ னாயினுங் கடிவரை யின்றே' என முற்கூறினமையின் தலைவன் தன்குலத்தின் உயர்ந்தமை அறிந்தவிடத்து இங்ஙனங் கூடுதல் முறையன்றென்று ஐயுற்ற செவிலியும் நற்றாயும் உயர்ந்தோரைக் கேட்டு இதுவுங் கூடுமுறைமை என்றுணர்வர் என்பதாம். இலக்கணமுண்மையின் இலக்கியமும் அக்காலத்து உளவென்றுணர்க. (உசு)

118. தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்த
லெண்ணுங் காலைக் கிழத்திக் கில்லைப்
பிறநீர் மாக்களி னறிய வாயிடைப்
பெய்ந்நீர் போலு முணர்விற் றென்ப.

இது தலைவிக்கு உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

இதன்பொருள்: பிறநீர் மாக்களின்—வேறுவேறாகத் தம்மில் தாம் காதல்செய்து ஒழுகும் அறிவில்லாதாரைப் போல; கிழவன் அறியத் தன்னுறு வேட்கை முற்கிளத்தல் கிழத்திக்கு இல்லை—தலைவன் அறியும்படியாகத் தனக்குற்ற வேட்கையை அவன்முன்னர்க் கூறுதல் தலைவிக்கு இல்லை; ஆயிடை—அங்ஙனங் கூற்றில்லாதவிடத்து; எண்ணுங் காலையும்—அவள் வேட்கையை அவன் ஆராயுங்காலையும்; பெய்நீர் போலும் உணர்விற்று என்ப—அவ்வேட்கை புதுக்கலத்துப் பெய்த நீர் புறத்துப்பொசிந்து காட்டுமாறுபோலும் உணர்வினையுடைத்தென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

'கிழத்திக்கில்லை' யெனவே தோழிக்குத் தலைவி தனது வேட்கையை எதிர்நின்று கூறுதலுளதென்பது பெற்றாம்.

தலைவிக்குக் குறிப்பானன்றித் தலைவன்முன்னின்று கூறும் வேட்கைக்கூற்றின்மை முற்கூறிய செய்யுட்களுட் காண்க. எனவே, தோழிமுன்னர்த் தலைவிக்கு வேட்கைக்கூற்று நிகழ்தல் பெற்றாம்.

உதாரணம்:

"சேணோன் மாட்டிய நறும்புகை"* (குறுந்-150.)

"ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த"† (அகம்-8.)

என்பனவும்,

"இவளே நின்சொற் கொண்ட"‡ (குறுந்-81.)

என்றாற்போல் வருவனவும் முன்னர்க் காட்டினாம்.

"கடும்புனன் மலிந்த காவிரிப் போதந் தோளே."

என்றாற்போல்வன தலைவி வேட்கையைத் தலைவன் குறிப்பான் உணர்ந்தன. (உ௭)

119. காமக் கூட்டந் தனிமையிற் பொலிதலிற் றாமே தூதுவ ராதலு முரித்தே.

இஃது எய்தாதது எய்துவித்தது, பாங்கனுந் தோழியும் நிமித்தமாகவன்றித் தாமே தூதாகும் இடமும் உண்டென்றலின்.

இதன்பொருள்: காமக்கூட்டந் தனிமையிற் பொலிதலின்—இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப்பாடுங் கூட்டுவாரையின்றித் தனிமையாற் பொலிவுபெறுதலின்; தாமே

* இச்செய்யுளை 474 ஆம் பக்கத்திலும், † இச்செய்யுளை 487 ஆம் பக்கத்திலும், ‡ இச்செய்யுளை 507 ஆம் பக்கத்திலும் காண்க.

தூதுவர் ஆகலும் உரித்தே—ஒருவருக்கு ஒருவர் தூதுவ ராகி ஒருவர் ஒருவரைக் கூடுதலும் ஆண்டுரித்து என்றவாறு.

அது மெய்ப்பாட்டினுட் 'புகுமுகம்புரிதன்' முதலிய பன்னிரண்டானும் அறிக. இதன்பயன் இக்கூட்டத்தின் பின்னர் வரைதலும் உண்டென்பதாம். (உஅ)

120. அவன்வரம் பிறத்த லறந்தனக் கின்மையிற்
களஞ்சுட்டுக் கிளவி கிழவிய தாகுந்
தான்செலற் குரியவழி யாக லான.

இது முன்னர்க் களனும் பொழுதும் என்றவற்றுட் களங்கூறுதற்கும் உரியாள் தலைவியென்கின்றது.

இதன்பொருள்: அவன்வரம்பு இறத்தல்—தலைவன் கூறிய கூற்றின் எல்லையைக் கடத்தல்; தனக்கு அறமின்மை யின்—தலைவிக்கு உரித்தெனக்கூறிய தருமநூலின்மையின்; களஞ்சுட்டுக் கிளவி கிழவியது ஆகும்—தலைமகனை இன்ன விடத்து வருகவென்று ஓரிடத்தைத் தான்கருதிக் கூறுங் கூற்று அவன்குறிப்புவழி ஒழுகுந் தலைவியதாம்; தான் செலற்கு உரியவழி ஆகலான—தான் சென்று கூடுதற்குரிய இடந் தானே உணர்வள் ஆதலான் என்றவாறு.

'சுட்டுக்கிளவி' என்றதன் கருத்துத் தலைவன் இரு வகைக் குறியும் வேண்டியவழி அவனை மறுது தான் அறிந்த விடத்தினைக் கூற்றானன்றிக் குறிப்பானுதல் சிறைப்புறத்தா னுதல் தோழியானுதல் உணர்த்துமென்பதாம். தலைவன் களஞ்சுட்டுமாயின் யாண்டானும் எப்பொழுதானும் அக்கள வொழுக்கம் நிகழ்ந்து பிறர்க்கும் புலனாய்க் குடிப்பிறப்பு முத லியவற்றிற்குத் தகாதாம். "விரியிணர் வேங்கை*" என்னும்

*இச்செய்யுளை 468 ஆம் பக்கத்திற்காண்க.

(38) அகப்பாட்டுத் தலைவி களஞ்சுட்டியது; "மறந்திசின் யானே" என்றலின் இது குறிப்பான் உணர்த்திற்று. பிற வும் வந்துழிக் காண்க. (உகூ)

121. தோழியின் முடியு மிடனுமா ருண்டே.

இது தோழிக்குங் களஞ்சுட்டுக் கிளவி உரித்தென்று எய்தாதது எய்துவித்தது.

இதன்பொருள்: களஞ்சுட்டுக்கிளவி தலைவிகுறிப்பால் தோழி கூறுதலன்றித் தானேயுங் கூறப்பெறும் ஒரோவழி என்றவாறு. தோழி குறித்த இடமுந் தலைவி தான்சேறற் குரிய இடமாமென்பது கருத்து.

உதாரணம்:

"செவ்வி ஞாழற் கருங்கோட் டிஞ்சினைத்
தனிப்பார்ப் புள்ளிய தண்பறை நாரை
மணிக்கேழ் நெய்தன் மாக்கழி நிவப்ப
இனிப்புலம் பின்றே கானலு நளிகடற்
றிரைச்சுர முழந்த திண்டிமில் விளக்கிற்
பன்மீன் கூட்ட மென்னையர்க் காட்டிய
வெந்தையுஞ் செல்லுமா ரிரவே யந்தி
லணங்குடைப் பனித்துறை கைதொழு தேத்தி
யாயு மாயமோ டயரு நீயுந்
தேம்பா யோதி திருநுத லீவிக்
கோங்கு முகைத்தன்ன குவிமுலை யாகத்
தின்றுயி லமர்ந்தனை யாயின் வண்டுபட
விரிந்த செருந்தி வெண்மணன் முடுக்கர்ப்
பூவேய் புன்னையந் தண்பொழில்
வாவே தெய்ய மணந்தனை செலற்கே." (அகம்-239.)

எனத் தோழி களஞ்சுட்டிய வாறுங் காண்க. (௩௦)

122. முந்நா ளல்லது துணையின்று கழியா
தந்நா ளகத்து மதுவரை வின்றே.

இதுவும் அதிகாரத்தால் தலைவிக்கெய்தியதோர் இலக்கணங் கூறுகின்றது.

இதன்பொருள்: முந்நாள் அல்லது துணையின்று கழியாது—பூப்பெய்திய மூன்றுநாளும் அல்லது கூட்டமின்றி இக்களவொழுக்கங் கழியாது; அந்நாளகத்தும் அது வரைவு இன்றே—அம்மூன்றுநாளின் அகப்பட்ட நாளாகிய ஒருநாளினும் இரண்டுநாளினுந் துணையின்றிக் கழிதல் நீக்கப்படாது என்றவாறு.

'அது' என்றது துணையின்று கழிதலை. பூப்பினால் துணையின்றிக் கழிதல் பொருந்திற்றாயினும், பூப்பின்றி ஒருநாளும் இரண்டுநாளுந் துணையின்றிக் கழிதல் வழுவாமெனக்கருதின் அதுவும் புறத்தார்க்குப் புலனும் என்று அஞ்சுதலாற் கழிதலின் வழுவாகாவென்றற்கு 'வரைவின்று' என்றார். இன்னோரன்ன காரணந் தலைவற்கின்மையின் அவனால் துணையின்றிக் கழிதல் இன்றாயிற்று.

உதாரணம்:

"குக்கூ வென்றது கோழி யதனெதிர்
துட்கென் றற்றென் *றூஉ நெஞ்சந்
தோடோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றா லெனவே" (குறுந்-157.)

இது முந்நாளைப்பிரிவாகிய பூப்பிடைப்பிரிவு வந்துழித் தலைவி கூறியது.

* 'தூய' என்பதும் பாடம்.

இனி அல்லகுறிப்பட்டுழி ஒருநாளும் இரண்டுநாளும் இடையீடாமென்றுணர்க. பூப்புநிகழாத காலத்துக் களவொழுக்கம் பூப்பு நிகழ்காலம் வரையப்பட்டதென்று உரைப்பாரும் உளர். இவ்விதி அந்தணர்க்குக் கூறியதன்று; அரசர் வணிகராதியவர்க்குச் சிறுபான்மையாகவும், ஏனை வேளாளர் ஆயர் வேட்டுவர் முதலியோர்க்குப் பெரும்பான்மையாகவுங் கூறிய் விதியென்றுணர்க. என்னை? பூப்பு நிகழுங்காலத்து வரையாது களவொழுக்கம் நிகழ்த்தினோர்க்கு,

> 'அந்தரத் தெழுதிய வெழுத்தின் மான
> வந்தகுற்றம் வழிகெட வொழுகலும்' (தொல்-கற்பியல்-5.)

என்பதனாற் பிராயச்சித்தம் விதிப்பராதலின்.

இதனானே அந்தணர்மகளிர்க்கும் பூப்பெய்தியக்கால் அறத்தொடு நின்றும் வரைதல் பெறுதும். (௩௧)

123. பன்னூறு வகையினுந் தன்வயின் வரூஉ
நன்னய மருங்கி னாட்டம் வேண்டலிற்
றுணைச்சுட்டுக் கிளவி கிழவிய தாகுந்
துணையோர் கரும மாக லான.

இது தலைவிக்கு உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

இதன் பொருள்: தன்வயின் வரூஉம் நன்னய மருங்கின்—தலைவியிடத்தே தோழிக்குஞ் செவிலிக்கும் வருகின்ற அன்பு மிகுதிக்கண்ணே; பல்நூறு வகையினும் நாட்டம் வேண்டலில்—பலநூறாகிய பகுதியானும் ஆக்கமுங் கேடும் ஆராய்தலை அவர் விரும்புதலாலே; துணைச்சுட்டுக் கிளவி கிழவியதாகும்—இவள் ஓர் துணையுடையளென அவர் சுட்டுதலிடத்துக் கிளக்குங் கிளவி தலைவியதாம்; துணையோர் கருமம்

ஆகலான—அக்கிளவி அத்தோழியானுஞ் செவிலியானும் முடியுங்காரியம் ஆதலான் என்றவாறு.

என்றது, தோழி 'பலவேறு கவர்பொருணாட்டம்' உற்ற வழியுஞ் செவிலி களவு அலராதல் முதலியவற்றான் நாட்ட முற்றவழியுந் தலைவி அறத்தொடு நிற்குமென்று அறத்தொடு நிலைக்கு இலக்கணங் கூறியவாறாயிற்று. தோழிக்குத் தலைவி அறத்தொடுநிற்ப, அவள் செவிலிக்கு அறத்தொடு நிற்ப, அவள் நற்றாய்க்கு அறத்தொடு நிற்குமென்று உணர்க. இதனானே பாங்கற்கு உற்றதுரைத்தபின்னர்த் தலைவன் உரையாமையும் பெற்றாம். "*புனையிழை நோக்கியும்"(கலி-76.) என்னும் மருதக்கலியுள், "வினவுதியாயின்" என நாட்டம் நிகழ்ந்தவாறும் அதன்சுரிதகத்துக் கூட்டமுண்மை கூறுதலின் துணைச்சுட்டுக் கிளவி கிழவியதாயவாறுங் காண்க.

"†கொடியவுங் கோட்டவும்" (கலி-54.) என்பதன் சுரிதகத்துச் செவிலிக்கு உரையாயெனக் கூறியவாறுங்காண்க.

124. ஆய்பெருஞ் சிறப்பி னருமறை கிளத்தலிற்
றாயெனப் படுவோள் செவிலி யாகும்.

இது முற்கூறிய செவிலிசிறப்புக் கூறுகின்றது.

இதன்பொருள்: ஆய் பெருஞ்சிறப்பின்—தாயத்தாய்க் கொண்டு உயிர் ஒன்றாய் வருகின்றாளென்று ஆராய்ந்து துணியப்பட்ட பெருஞ்சிறப்புக் காரணமாக; அருமறை கிளத்தலின்—கூறுதற்கரிய மறைப்பொருளெல்லாங் குறிப்பானன்றிக் கூற்றாற் கூறத்தக்காளாதலின்; தாயெனப்

* இச்செய்யுளை 446 ஆம் பக்கத்திற் காண்க.

† இச்செய்யுளை 484 ஆம் பக்கத்திற்காண்க.

படுவோள் செவிலி ஆகும்—தாயென்று சிறப்பித்துச் சொல்லப்படுவாள் செவிலியேயாம் என்றவாறு.

எனவே ஈன்ற தாயினுங் களவின்கட் சிறந்தாள் இவளென்றார். கற்பிற்கு இருவரும் ஒப்பாராயிற்று. செவிலி சிறந்தமை சான்றோர் செய்யுளுட் பலருங் கூறியவாறு காண்க. (௩௩)

125. தோழி தானே செவிலி மகளே.

இது தோழியது சிறப்புணர்த்துகின்றது.

இதன் பொருள் : தோழிதானே—தோழியர் பலருள்ளும் ஒருத்தியெனப் பிரிக்கப்படுவாள்; செவிலிமகளே—முற்கூறிய செவிலியுடைய மகள் என்றவாறு.

இதற்கும் அருமறை கிளத்தல் அதிகாரத்தாற் கொள்க. தாயத்தாய்க் கொண்டுவருகின்றமையின் உழுவலன்பு போல்வதோர் அன்பு உடையர் இருவருமென்று கொள்க. இதனானே களவிற்குத் தோழியே சிறந்தாளாயிற்று; அது சான்றோர் செய்யுளுட் காண்க. (௩௪)

126. சூழ்தலு முசாத் துணை நிலைமையிற்பொலிமே.

இதுவுந் தோழி சிறப்பினையே கூறுகின்றது.

இதன்பொருள் : உசாத்துணை நிலைமையின்—தலைமகனுந் தலைமகளும் உசாவுதற்குத் துணைமைசான்ற நிலைமையினாலே; சூழ்தலும் பொலிமே—புணர்ச்சியுண்மையை ஏழு வகையானுஞ் சூழ்தற்கண்ணும் பொலிவுபெறும் என்றவாறு.

எனவே, இம்மூன்று நிலைக்குந் தோழி உரியள் என்றார். உதாரணம் முற்காட்டியவற்றுட் காண்க. (௩௬)

127. *குறையுற வுணர்தன் முன்னுற வுணர்த
லிருவரு முள்வழி யவன்வர வுணர்தலென
மதியுடம் படுத்த லொருமூ வகைத்தே.

இஃது அத்தோழி சூழ்ச்சி இத்துணைப்பகுதித்து என்கின்றது.

இதன்பொருள்: குறையுற உணர்தல்—தலைவன் தோழியை இரந்து குறையுற்றவழி உணர்தல்; முன் உற உணர்தல்-முன்னம் மிகவுணர்தல்; இருவரும் உள்வழி அவன் வர உணர்தல்—தலைவியுந் தோழியும் ஒருங்கிருந்தவழித் தலைவன்வருதலால் தலைவன்குறிப்புந் தலைவிகுறிப்புங் கண்டுணர்தல்; என மதியுடம்படுத்தல் ஒரு மூவகைத்தே—என்று இருவர் கருத்தினையுந் தன் கருத்தினோடு ஒன்றுபடுத்துணர்தல் ஒரு மூன்று கூற்றினையுடைத்து என்றவாறு.

எண்ணுதல் எண்ணென்றாற்போல முன்னுதல் 'முன்' னென நின்றது. உயிர்கலந்தொன்றலிற் குறிப்பின்றியும் பாகமுணர்வாள் குறிப்புப்பெற்றுழி மிகவுணரும் என்றுகொள்க. இது மூவர்மதியினையும் ஒன்றுபடுத்துதலின் மதியுடம்படுத்தலென்று பெயராயிற்று. இம்மூன்றுங்கூடிய பின்னரல்லது மதியுடம்படுத்தலின்றென்றற்கு மூவகைத்தென்று ஒருமையாற் கூறினார். 'முன்னுற'வென்றதனை 'முந்துற' வென்றாலோவெனின் குறையுறுதலான் உணர்தல் அவன்வருதலான் உணர்தலென்று இரண்டற்குங் காரணங் கூறுதலின் இதற்

* 'முன்னுற உணர்தல்' என்னும் இறையனா ரகப்பொருட்சூத்திரம் பெரும்பாலும் இச்சூத்திரத்தோடொப்புமை யுடைத்தாதல் காண்க.

கும் குறிப்புமிகுதலான் உணர்தலெனக் காரணங் கொடுத்தல் வேண்டுமென்றுணர்க. 'நாற்றமுந் தோற்றமும்' (தொல்-பொ-கள-23.) என்பதனுட் கூறியவாறன்றி முன்னுறவை இடைவைத்தார், அவ்விரண்டினான் உணருங்காலும் இக்குறிப்பான் உணரவேண்டுமென்றற்கு. இம்மூன்றும் முற்கூறிற்றேனும் ஒரோவொன்றாற் கூட்டமுணரில் தலைவியை நன்கு மதித்திலளாவளென்றற்கு இம்மூன்றும் வேண்டுமென்று ஈண்டுக் கூறினார்.

உதாரணம்:

"கோனே ரெல்வளை தெளிர்ப்ப நின்றோழி"

இது கூட்டமுணராதாள்போல நாணிற்கு மாறாகாமற் கூறலின் முன்னுறவுணர்தல்.

"நின்னின் விடாஅ நிழற்போற் றிரிதருவா
யென்னீ பெறாஅ திதென்" (கலி-61.)

இது குறையுறவுணர்தல்.

"* ஏனல் காவ லிவளு மல்லள்"

என்பது அவன் வரவுணர்தல். (கூசு)

128. அன்ன வகையா னுணர்ந்தபி னல்லது
பின்னிலை முயற்சி பெறாஅனென மொழிப.

இது மதியுடம்பட்டபின்னல்லது தலைவன் கூற்று நிகழ்த்தப் பெறானென்கின்றது.

* இச்செய்யுளை 495 ஆம் பக்கத்திற் காண்க.

இதன்பொருள்: அன்னவகையான் உணர்ந்தபின் அல்லது—அம் மூவகையானுந் தோழி மதியுடம்படுத்தபின்னல்லது; பின்னிலை—இவன் ஓர் குறையுடையனென்று தோழி உய்த்துணர நிற்குமிடத்து; முயற்சிபெறுன் என மொழிப—கூற்றுன் அக்குறைமுடித்தல் வேண்டுமென்று முடுக்குதல் பெறுனென்று கூறுப ஆசிரியர் என்றவாறு.

தோழி தன்னை வழிப்பட்டவாறு கண்டு மதியுடம்பட்டவாறுணர்ந்து கூற்றுன் உணர்த்தும்.

அது "*நெருநலு முன்னாள்" என்பதனுள் "ஆரணர் வருத்தங் களையாயோ" என்றவாறு காண்க. (௩௭)

129. முயற்சிக் காலத் ததற்பட நாடிப்
புணர்த்த லாற்றலு மவள்வயி னான.

இது தலைவன் முயற்சி கூறிய முறையே தோழி முயற்சி பிறக்குமிடங் கூறுகின்றது.

இதன்பொருள்: முயற்சிக்காலத்து—தலைவன் அங்ஙனங் கூடுதற்கு முயற்சி நிகழ்த்துங்காலத்தே; நாடி அதற்படப் புணர்த்தலும்—தலைவி கூடுதற்கு முயலுங் கருத்தினை ஆராய்ந்து அக்கூட்டத்திடத்தே உள்ளம்படும்படி கூட்டுதலும்; அவள் வயின் ஆன ஆற்றல்—தோழியிடத்து உண்டான கடைப்பிடி என்றவாறு.

ஆற்றல் ஒன்றனைமுடிவுபோக்கல். உம்மை, எச்சவும்மை. மதியுடம்படுத்தலேயன்றிக் கூட்டவும்பெறுமென்க.

---

* இச்செய்யுளை 501 ஆம் பக்கத்திற் காண்க.

130. குறியெனப் படுவ திரவினும் பகலினு
மறியத் தோன்று மாற்ற தென்ப.

அங்ஙனங் கூட்டுகின்றவட்குக் கூடுதற்குரிய காலமும் இடனுங் கூறுகின்றது.

இதன்பொருள்: குறியெனப் படுவது—குறியென்று சொல்லப்படுவது; இரவினும் பகலினும்—இரவின்கண்ணும் பகலின் கண்ணும்; அறியத் தோன்றும் ஆற்றது என்ப—தலைவனுந் தலைவியுந் தானும் அறியும்படி தோன்றும் நெறி யையுடைய இடம் என்றவாறு.

நெறியென்றூர் அவன் வருதற்குரிய நெறி இடமென் றற்கு. அதுவென்று ஒருமையாற் கூறினர், தலைப்பெய்வதோ ரிடமென்னும் பொதுமைபற்றி. இரவு களவிற்குச் சிறத்த லின் முற்கூறினர். அறியத் தோன்றுமென்றதனாற் சென்று காட்டல் வேண்டா நின்று காட்டல் வேண்டுமெனக் கொள்க.

131. இரவுக் குறியே யில்லகத் துள்ளு
மனையோர் கிளவி கேட்கும்வழி யதுவே
மனையகம் புகாஅக் காலை யான.

இது நிறுத்தமுறையானே இரவுக்குறியிடம் உணர்த் துகின்றது.

இதன்பொருள்: அகமனைப் புகாக் காலை ஆன இரவுக் குறியே—உண்மனையிற் சென்று கூடுதற்கு உரித்தல்லாத முற்காலத்து உண்டான இரவுக்குறியே:

ஏகாரம், பிரிநிலை.

இல்லகத்துள்ளும் மனையோர் கிளவி கேட்கும் வழி

யதுவே—இல்வரைப்பினுள்ளதாகியும் மனையோர் கூறிய கிளவிகேட்கும் பிறமனையிடத்ததாம் என்றவாறு.

அல்லகுறிப்பட்டதனை ஒருவாற்றான் உணர்த்தியகாலத்து அவன் அதுகேட்டு ஆற்றுவனென்பது கருதி 'மனையோர்கிளவி கேட்கும் வழியது' என்றார்; ஏகாரம் ஈற்றசை: என்றது, இரவுக்குறி. அம்முயற்சிக்காலத்து அச்சநிகழ்தலின் அகமனைக்கும் புறமதிற்கும் நடுவே புணர்ச்சி நிகழுமென்றதாம். *அகமனையிற் புகாக்காலையெனவே இரவுக்குறி அங்ஙனஞ் சிலநாள் நிகழ்ந்தபின்னர் அச்சமின்றி உண்மனையிற் சென்று கூடவும்பெறுமென்பதுங் கூறியதாம்.

உதாரணம்:

"அஞ்சிலம் பொடுக்கி யஞ்சினள் வந்து
துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோள்"

எனவும்,

"மிடையூர் பிழியக் கண்டனெ னிவளென
வலையல் வாழிவேண் டன்னை"

எனவும்,

"அட்டி லோலை தொட்டனை நின்மே" (நற்றிணை-300.)

எனவும் வருவன பிறவும் மனையோர்கிளவி கேட்கும்வழியது.

"உழைமான் றப்பி னோங்குதினைப் பெரும்புனத்துக்
கழுதிற் கானவன் பிழிமகிழ்ந்து வதிந்தெனக்
வுரைத்த சந்தி னூர விருங்கதுப்
பைதுவர லசைவளி மாற்றக் கைபெயரா

* 'இரவுமனையிகந்த' என்னும் இறையனார் களவியற் சூத்திரப் பொருளோடு இது முரணுதல் காண்க.

வொலியல் வார்மயி ருளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅம் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகன் மழகளி றுறங்கு நாட
ஞர மார்பி னண்ணிமிஞி றூர்ப்பத்
தாரன் கண்ணிய னெஃகுடை வலத்தன்
காவல ரறித லோம்பிப் பையென
விழாஅக் கதவ மசையினன் புகுதந்
தியங்குப்ட ரகல முயங்கித் தோண்மணந்
தின்சொ லளைஇப் பெயர்ந்தனன் றோழி
யின்றவன் கொல்லோ கண்டிகு மற்றவ
னல்கா மையி னம்ப லாகி
யொருங்குவந் துவக்கும் பண்பி
னிருஞ்சூ ழோதி யொண்ணுதற் பசப்பே." (அகம்-102.)

இது மனையகம் புக்கது.

தலைவி புறத்துப் போகின்றாளெனச் செவிலிக்கு ஓர் ஐயம் நிகழ்ந்தவழிப் பின்னர் மனையகத்துப் புணர்ச்சி நிகழு மென் றுணர்க. (௪0)

132. பகற்புணர் களனே புறனென மொழிப
வவளறி வுணர வருவழி யான.

இது முறையானே பகற்குறி உணர்த்துகின்றது.

இதன் பொருள்: அவள் அறிவு உணர வருவழி ஆன பகற்புணர் களனே—களஞ்சுட்டிய தலைவி அறிந்தவிடந் தலைவன் உணரும்படியாக வருவதோரிடத்து உண்டான பகற்புணருங் குறியிடத்தை; புறன் என மொழிப—மதிற் புறத்தேயென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

அறிவு, ஆகுபெயர்.

உதாரணம்:

"புன்னையங் கானற் புணர்குறி வாய்த்த
மின்னே ரோதியென் ரோழிக்கு"

எனவும்,

"பூவே புன்னையந் தண்பொழில்
வாவே தெய்ய மணந்தனை செலற்கே" (அகம் 239)

எனவும் வருவன பிறவுங் கொள்க. (சக)

133. அல்லகுறிப் படுதலு மவள்வயி னுரித்தே
யவன்குறி மயங்கிய வமைவொடு வரினே.

இது தோழி அல்ல குறிப்படுமாறு கூறுகின்றது. இரு வகைக் குறி பிழைப்பாகியவிடத்தும் என்புழித் தலைவி அல்லகுறிப்படுதல் கூறிற்று.

இதன்பொருள்: அவன்குறி—தலைவன் தன்வரவு அறிவிக்குங் கருவிகள்; மயங்கிய அமைவொடு வரின்—அவன் செயற்கையானன்றி இயற்கைவகையானே நிகழ்ந்து தோழி மயங்கிய அமைதியோடே வருமாயின்; அல்லகுறிப் படுதலும்—குறியிடத்துக் கூட்டுங்கால் அவ்வல்லவாகிய குறியிலே மயங்குதலும்; அவள்வயின் உரித்து—அத்தோழியிடத்து உரித்து என்றவாறு.

வெறித்தல் வெறியாயினாற்போலக் குறித்தல் குறியாயிற்று. அக்கருவி புனலொலிப்படுத்தல் முதலியன.

உதாரணம்:

"கொடுமுண் மடற்றாழைக் *கூன்புற வான்பூ
விடையு ளிழுதொப்பத் தோன்றிப்—புடையெலாந்
தெய்வங் கமழுந் தெளிகடற் றண்சேர்ப்பன்
செய்தான் றெளியாக் குறி." (ஐந்திணை, 50-49.)

இஃது அல்லகுறிப்பட்டமை சிறைப்புறமாகக் கூறியது.

"எறிசுறா நீள்கட லோத முலாவ
நெறியிறாக் கொட்கு நிமிர்கடற்றண் சேர்ப்ப
னறிவுறா வின்சொ லணியிழையாய் நின்னிற்
செறிவுறா செய்த குறி."

இஃது அவன்மேற் குறிசெய்கின்றமை தலைவிக்குக் கூறியது.

"இடுமணை லெக்க ரகன்கானற் சேர்ப்பன்
கடுமான் மணியரவ மென்று—கொடுங்குழை
புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தாள் சிறுகுடிய
ருள்ளரவ நாணுவ ரென்று,"

இஃது இவன் இனி ஆண்டுவரிற் சுற்றத்தார் அறிவரென்றது.

"வீழ்பெயற் கங்குனின் விளியோர்த்த வொடுக்கத்தால்
வாழுநாள் சிறந்தவள் வருந்துதோட் டவறுண்டோ
தாழ்செறி கடுங்காப்பிற் றாய்முன்னர் நின்சாரா
லூழுறு கோடல்போ லொளிவளை யுகுபவால்,"

இது தலைவற்குப் பிற்றைஞான்று கூறியது.

"அன்னை வாழியோ வன்னைநம் படப்பை
மிஃ றெனை நுடங்கிடைக் கின்னிழ லாகிய

---

* 'கூம்பவிழ்ந்த வொண்பூ' என்பதும் பாடம்.

புன்னை மென்காய் போகுசினை யிரிய
வாடுவளி தூக்கிய வசைவிற் கொல்லோ
தெண்ணீர்ப் பொய்கையுள் வீழ்ந்தென
வெண்ணினை யுரைமோ வுணர்குவல் யானே."

இது தோழி தாய்க்குக் கூறுவாளாய் அல்லகுறி அறிவித்தது.

"மணிசிற நெய்த விருங்கழிச் சேர்ப்ப
னணிநல முண்டகன் றென்றுகொ லெம்போற்
றிணிமண லெக்கர்மே லோதம் பெயரத்
துணிமுந்நீர் துஞ்சா தது."

இது தோழி இல்லுளிருந்து சிறைப்புறமாகக் கூறியது.

திங்கள்மேல் வைத்துக் கூறுவனவும் ஓதத்தின்மேல் வைத்துக் கூறுவனவும் பிறவுங் கொள்க.

"அரவளை மென்றோ ளணுங்கத் துறந்து
கரவல மென்றாரைக் கண்ட திலையா
விரவெலா வின்றுயா லீர்ங்கதிர்த் திங்காள்."

"புன்னை நனைப்பினும் பூஞ்சினை தோயினும்
பின்னிருங் கூந்தலென் றோழி நடையொக்கு
மன்னை நனையாதி வாழி கடலோதம்"

எனவருவன பிறவுங்கொள்க. 'படுதல்' எதிர்ப்படாமையை உணர்த்திற்று. ஆண்டுத் தன்மேல் தவறேற்றாது தலைவன் பொழுதறிந்து வாராமையின் மயங்கிற்றென்று அமைவு தோன்றலின் 'அமை'வென்றார். அது,

"தான்குறி வாயாத் தப்பற்குத்
தாம்பசந் தனவென் றடமென் றோளே." (குறுந்-121.)

என்றாற்போல வரும். இதன் பயன் தலைவி துன்பந் தனதாகத் துன்புறுதலாயிற்று. (௪௨)

134. ஆங்காங் கொழுகு மொழுக்கமு முண்டே
யோங்கிய சிறப்பி னொருசிறை யான.

இது தலைவனும் அல்லகுறியால் வருந்துவனென்கின்றது.

இதன்பொருள்: ஓங்கிய சிறப்பின்—தனது மிக்க தலைமைப்பாட்டினாலே பொழுதறிந்து வாராமையின்; ஒருசிறை ஆன ஆங்கு—தான் குறிசெய்வதோரிடத்தே தன்னானன்றி இயற்கையான் உண்டான அவ்வல்ல குறியிடத்தே; ஆங்கு ஒழுகும் ஒழுக்கமும் உண்டு—தலைவியுந் தோழியுந் துன்புறுமாறு போலத் தலைவனுந் துன்புற்று ஒழுகும் ஒழுக்கமும் உண்டு என்றவாறு.

முன்னர் நின்ற 'ஆங்கு' முன்னிற்சூத்திரத்து அல்லகுறியைச் சுட்டிற்று; பின்னர்நின்ற 'ஆங்கு' உவமவுருபு.

உதாரணம்:

" தாவி னன்பொன் றைஇய பாவை
விண்டவ ழிளவெயிற் கொண்டுநின் றன்ன
மிகுகவி னெய்திய தொகுகுர லைம்பாற்
கிளையரி நாணற் கிழங்குமணற் கீன்ற
முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்
நயவன் றைவருஞ் செவ்வழி நல்யா
ழிசையோர்த் தன்ன வின்றீங் கிளவி
யணங்குசா லரிவையை நசைஇப் பெருங்களிற்
றினம்படி நீரிற் கலங்கிய பொழுதிற்
பெறலருங் குரைய ளென்னாய் வைகலு

மின்னு வருஞ்சுர நீந்தி நீயே
யென்னை யின்னற் படுத்தனை மின்னுவசிப்
புரவுக்கால் கடுப்ப மறவி மைந்துற்று
விரவுமொழித் தகட்டூர் வேண்டுவயிற் கொளீஇப்
படைநிலா விலங்குங் கடன்மரு டானை
மட்டவிழ் தெரியன் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பெறாஅது விலங்கிச் சினஞ்சிறந்து
செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
யொருங்குதிரைப் பௌவ நீங்க வோட்டிய
நீர்மா ணெஃகா நிறத்துச்சென் றழுந்தத்
தாமத னழியரோ நெஞ்சே யானு
தெளிய னல்லோட்கு வருந்தி
விளியா வெவ்வந் தலைத்தந் தோயே." (அகம்-211.)

"வடமலை மிசையோன் கண்ணில் முடவன்
றென்றிசை யெல்லை விண்புகு பொதியிற்
சூருடை நெடுஞ்சுனை நீர்வேட் டாங்கு
வருந்தினை வாழியெ னுள்ளஞ் சாரற்
பொருது புறங்கண்ட பூநுத லொருத்தல்
சிலம்பிழி பொழுதி னத்தம் பெயரிய
வல்லிய மடுக்கத் தொடுங்கு நல்வரைக்
கல்லக வெற்பன் மடமகண்
மெல்லியல் வனமுலைத் துயிலுற் றோயே."

இவை அல்ல குறிப்பட்டு நீங்குகின்றான் நெஞ்சிற்குக் கூறியன. (௫௩)

135. மறைந்த வொழுக்கத் தோரையு நாளுந்
துறந்த வொழுக்கங் கிழவோற் கில்லை.

இது தலைவற்கு உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

இதன்பொருள்: ஓரையும் நாளுந் துறந்த ஒழுக்கம்— தீய இராசியின்கண்ணுந் தீயநாளின் கண்ணுங் கூட்டத்தைத் துறந்த ஒழுக்கம்; கிழவோற்கு மறைந்த ஒழுக்கத்து இல்லை—தலைவற்குக் களவொழுக்கத்தின்கண் இல்லை; எனவே கற்பின்கணுள என்றவாறு.

ஒழுக்கமாவது சீலமாதலிற் சீலங்காரணத்தால் துறப்பது தீதாகிய இராசியும் நாளுமென்பது பெற்றும். நாளாவது அவ்விராசி மண்டிலமுழுவதும். கிழத்தி துறந்த ஒழுக்கம் முந்நாளல்லதென முற்கூறிற்று. இதனான் அன்பு மிகுதி கூறினர். இதற்குப் பிராயச்சித்தம் அந்தணர்முதலிய மூவர்க்கும் உண்மை 'வந்தகுற்றம் வழிகெட வொழுகலும்' (தொல்-பொ-கற்-5) எனக் கற்பியலிற் கூறுப. (சச)

136. *ஆறின தருமையு மழிவு மச்சமு
மூறு முளப்பட வதனோ ரன்ன.

இதுவுந் தலைவற்கு இல்லன கூறுகின்றது.

இதன்பொருள்: உளப்பட—நிலவும் இருளும் பகை வரும் போல்வனபற்றிச் செலவழுங்குதல் உளப்பட; ஆறினது அருமையும்—நெறியினது அருமை நினைந்து கூட்ட நிகழ்ந்தவழிக் கூறுதலும்; அழிவும்—குறைந்த மனத்தனாதலும்; அச்சமும்—பாம்பும் விலங்கும் போல்வன நலியுமென்று அஞ்சுதலும்; ஊறும்—அக்கருமத்திற்கு இடையூறு உளவாங்கொலென்று அழுங்குதலும்; அதனோர் அன்ன— கிழவற்கு இல்லை என்றவாறு.

---

*'ஆறின் னருமையும் ஊறும் அச்சமும்' என்னும் இறையனாகப்பொருட் சூத்திரத்தை இதனோடொப்பிட்டு நோக்குக.

கிழவற்கில்லையெனவே கிழத்திக்குந் தோழிக்கும் உள வாயிற்று. அவை முற்காட்டியவற்றுட் காண்க. (சரு)

137. தந்தையுந் தன்னையு முன்னத்தி னுணர்ப.

இது தந்தையுந் தன்னையுங் களவொழுக்கம் உணருமாறு கூறுகின்றது.

இதன்பொருள்: தந்தையுந் தன்னையும் ஒருவர் கூறக் கொள்ளாது உய்த்துக்கொண்டுணர்வர் என்றவாறு.

நற்றாய் அறத்தொடு நின்றவழியும்,

"இருவர்கட் குற்றமு மில்லையா லென்று
தெருமந்து சாய்த்தார் தலை" (கலி-39.)

என்றலின் முன்னர் நிகழ்ந்த வெகுட்சிநீங்கி உய்த்துக் கொண்டு உணர்ந்தாராயிற்று. (சசா)

138. தாயறி வுறுதல் செவிலியோ டொக்கும்.

இது தந்தைதன்னைக்கு நற்றாய் களவொழுக்கம் உணர்த்துமாறு கூறுகின்றது.

இதன்பொருள்: தாய் அறிவுறுதல்—நற்றாய் களவொழுக்கம் உண்டென்று அறிந்த அறிவு தந்தைக்குந் தன்னைக்குஞ்சென்று உறுந்தன்மை; செவிலியோடு ஒக்கும்—செவிலி நற்றாய்க்கு அறத்தொடுநின்று உணர்த்திய தன்மையோடு ஒக்கும் என்றவாறு.

என்றது, செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றாற் போல நற்றாயுந் தந்தைக்குந் தன்னைக்கும் அறத்தொடுநிற்கும் என்றவாறாயிற்று. அது,

"எனவாங், கறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
வென்னையர்க் *குற்றுரைத்தாள் யாய்" (கலி-39.)

என்பதனான் உணர்க.

இனி இதற்கு நற்றாயுஞ் செவிலி உணர்ந்தாற்போல உணருமென்று பொருட்கூறில் 'தாய்க்கும் வரையார்' (தொல்-பொ-கள-25) என்னுஞ் சூத்திரம் வேண்டாவாம்.

139. அம்பலு மலருங் களவுவெளிப் படுத்தலி
னங்கதன் முதல்வன் கிழவ னாகும்.

இது களவு வெளிப்படுதற்கு நிமித்தமாவான் தலைமகனென்கின்றது.

இதன்பொருள்: அம்பலும் அலருங் களவு வெளிப் படுத்தலின்—முகிழ்த்தலும் பலரறியச் சொல் நிகழ்த்தலுங் களவொழுக்கத்தினை வெளிப்படுத்தலான்; அங்கதன் முதல்வன் கிழவன் ஆகும்—அவ்விடத்து அவ்வெளிப்படை நிகழ்த்துதற்கு நிமித்தமாயினான் தலைமகனும் என்றவாறு.

தலைவனை அறிந்தபின் அல்லது முற்கூறிய ஐயம் நிகழாமையின் தலைவிவருத்தம் நிமித்தமாகா, ஆண்டு ஐயம் நிகழ்தலன்றித் துணிவு தோன்றாமையின் வரைவு நீட்டிப் போனுந் தலைவி தமர்க்குக் கூறி வெளிப்படுப்போனுந் தலைவனே என்றுணர்க. அது, "நீரொலித்த லின்ன, பேரலர் நமக்கொழிய வழிப்பிரிந் தோரே" எனவும்,

"நெறியறி செறிகுறி புரிதிரி பறியா
வறிவனை முந்துறீஇ." (கலி-39.)

'*உய்த்துரைத்தாள்' என்பதும் பாடம்.

என்றாற்போல வருவனவும் பிறவும் வெளிப்படையாமாற்றாற் கண்டுணர்க. (சஅ)

140. வெளிப்படவரைதல் படாமைவரைதலென் றாயிரண் டென்ப வரைத லாறே.

இது வரையும் பகுதி இனைத்தென்கின்றது.

இதன்பொருள்: வெளிப்பட வரைதல்—முற்கூறிய வாற்றானே களவு வெளிப்பட்டபின்னர் வரைந்து கோடல்; படாமைவரைதல்—அக்களவு வெளிப்படுவதன் முன்னர் வரைந்துகோடல்; என்று ஆ இரண்டு என்ப வரைதல் ஆறே—என்று கூறப்பட்ட அவ்விரண்டே என்று கூறுவர் ஆசிரியர் வரைந்துகொள்ளும் வழியை என்றவாறு.

"சேயுயர் வெற்பனும் வந்தனன்
பூவெழி லுண்கணும் பொலிகமா வினியே" (கலி-39.)

இது வெளிப்பட்டபின் வரைவுநிகழ்ந்தது.

"கொல்லைப் புனத்த வகில்சுமந்து கற்பாய்ந்து
வானி னருவி ததும்பக் கவினிய
நாட னயனுடைய னென்பதனா னீப்பினும்
வாடன் மறந்தன தோள்." (ஐந்திணை, 70-2.)

இது வெளிப்படாமல் வரைவு நிகழ்ந்தது.

"எம்மனை முந்துறத் தருமோ
தன்மனை யுய்க்குமோ யாதவன் குறிப்பே."* (அகம்-194.)

என்றாற்போல்வன வெளிப்படுவதன்முன்னர்க் கொண்டுதலைக் கழிந்துழிக் கொடுப்போரின்றியுங் கரணம் நிகழ்ந்தமையின் அதுவும் வெளிப்படாமல் வரைந்ததாம். (சகூ)

* இச்செய்யுளை 84-ஆம் பக்கத்திற் காண்க.

141. வெளிப்படை தானே கற்பினொ டொப்பினு
ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக
வரையாது பிரிதல் கிழவோற் கில்லை.

இது முதற்கூறிய வரைவு நிகழ்த்தாது பிரியும் இடம் இதுவெனவும் பிரியலாகா இடம் இதுவெனவுங் கூறுகின்றது.

இதன்பொருள்: வெளிப்படைதானே கற்பினொடு ஒப்பினும்—முற்கூறிய வெளிப்படைதானே கற்பினுள் தலைவி உரிமை சிறந்தாங்கு அருமைசிறந்து கற்போடொத்ததாயினும்; ஞாங்கர்க்கிளந்த மூன்றுபொருளாக—முற்கூறிய ஓதல் பகை தூதென்ற மூன்றும் நிமித்தமாக; வரையாது பிரிதல் கிழவோற்கு இல்லை—வரைவிடைவைத்துப் பிரிதல் தலைமகற்கில்லை என்றவாறு.

மூன்றுமென முற்றும்மைகொடாது கூறினமையின் வினைப்பிரிவுகளின் வரையாது பிரியப்பெறும் என்றவாறாயிற்று. அவை வரைதற்குப் பொருள்வயிற்பிரிதலும் வேந்தற்குற்றுழியுங் காவற்குப் பிரிதலுமென மூன்றுமாம்.

உதாரணம்:

"பொன்னடர்ந் தன்ன வொள்ளிணர்ச் செருந்திப்
பன்மலர் வேய்ந்த நலம்பெறு கோதைய
டிணிமண லடைகரை யலவ னாட்டி
யசையின ளிருந்த வாய்தொடிக் குறுமக
*ணலஞ்சால் விழுப்பொருள் கலநிறை கொடுப்பினும்
பெறலருங் குரைய ளாயி னறந்தெரிந்து
நாமுறை தேஎ மரூஉப்பெயர்ந் தவனொ
டிருநீர்ச் சேர்ப்பி னுப்புட னுழுதும்

* 'அருஞ்சொல் விழுப்பொருள்' என்பதும் பாடம்.

பெருநீர்க் குட்டம் புணையொடு புக்கும்
படுத்தனம் பணிந்தன மடுத்தன மிருந்தபிற்
றருகுவன் கொல்லோ தானே விரிதிரைக்
*கண்டிரண் முத்தங் கொண்டுந் துஞ்சாத்
தேனிமிர் தண்கரைப் பகுக்குங்
கானலம் பெருந்துறைப் பரதவ னமக்கே." (அகம் 279.)

இதனுள் ஈண்டுள்ள பொருள் கொடுத்தாற் பெறல் அரியளாயின் தன்னை வழிப்பட்டால் தந்தை தருவனோ? அது நமக்கரிதாகலின் இன்னும்பொருள் நாம் மிகத் தேடிவந்து வரைதுமெனப் பொருள்வயிற்பிரியக் கருதியவாறு காண்க.

"பூக்கொடி மருங்குற் பொலம்பூ ணோயே
வேந்து வினைமுடித்து வந்தனர்
காந்தண் மெல்விரற் கவையினை ணினமே."

இது வேந்தற்குற்றுழிப் பிரிந்தான் வரைவு மலிந்தமை தோழிகூறியது. ஏனைய வந்துழிக் காண்க. ஓதுதற்கு ஏவுவார் இருமுதகுரவராதலின் அவர் வரையாமற் பிரிகவென்றார். பகைவென்று திறைகோடற்குப் பிரியுங்கால் அன்புறுகிழத்தி துன்புற்றிருப்பவரையாது பிரிதலின்று. இது தூதிற்கும் ஒக்கும். மறைவெளிப்படுதல் கற்பென்று செய்யுளியலுட்கூறுதலின் இதனை இவ்வோத்தின் இறுதிக்கண்வைத்தார். கற்பினோடொப்பினும் பிரிவின்றெனவே கற்பிற்காயிற் பிரிவு வரைவின்றாயிற்று.

மூன்றாவது களவியற்கு
†ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியார்
செய்த காண்டிகை யுரை
முடிந்தது.

---

* 'கண்டிரண் முத்தங்கொண்டு ஞாங்கர்' என்பதும் பாடம்.
†'ஆசிரியன்' என்றே ஏடுகளில் காணப்படுகிறது.

கற்பியல்.

142. கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக் [வே.
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வது

என்பது சூத்திரம். *இவ்வோத்துக் களவு கற்பென்னுங் கைகோளிரண்டினுட் கற்புணர்த்தினமையிற் கற்பியலென்னும் பெயர்த்தாயிற்று. கற்பியல் கற்பினது இயலெண விரிக்க. இயல், இலக்கணம். அஃது ஆகுபெயரான் ஓத்திற்குப் பெயராயிற்று. அது கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும் அவனை இன்னவாறே வழிபடுகவெனவும் இருமுதுகுரவர் கற்பித்தலானும் 'அந்தணர் திறத்துஞ் சான்றோர் தேஎத்தும்' 'ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்' (தொல்-பொ-கற்-5) ஒழுகும் ஒழுக்கந் தலைமகன் கற்பித்தலானுங் கற்பாயிற்று. இனித் தலைவனுங் களவின்கண் ஓரையும் நாளுந் தீதென்று அதனைத் துறந்தொழுகினாற் போல ஒழுகாது ஓத்தினுங் கரணத்தினும் யாத்த சிறப்பிலக்கணங்களைக் கற்பித்துக்கொண்டு துறவறத்திற் செல்லுந் துணையும் இல்லறநிகழ்த்துதலிற் கற்பா

---

* 'இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனிற் களவு கற்பு என்னும் கைகோளிரண்டினுள் கற்பினியல் உணர்த்தினமையிற் கற்பியல் என்னும் பெயர்த்து' என்பதும் பாடம்.

யிற்று. களவு வெளிப்பட்ட பின்னராயினும் அது வெளிப்படாமையாயினும் உள்ளப் புணர்ச்சி நிகழ்ந்தவழியாயினும் வரைதல் அக்களவின் வழியாதலின் மேலதனோடு இயைபுடைத்தாயிற்று. இச்சூத்திரம் கற்பிற்கெல்லாம் பொதுவிலக்கணங் கூறுகின்றது.

இதன் பொருள்: கற்பு எனப்படுவது—கற்பென்று சிறப்பித்துக் கூறப்படுவது; கரணமொடு புணர—வேள்விச் சடங்கோடேகூட; கொளற்கு உரி மரபிற் கிழவன்—ஒத்த குலத்தோனும் மிக்க குலத்தோனு மாகிக் கொள்ளுதற்குரிய முறைமையினையுடைய தலைவன்; கிழத்தியை—ஒத்த குலத்தாளும் இழிந்த குலத்தாளுமாகிய தலைவியை; கொடைக்கு உரி மரபினோர் கொடுப்ப—கொடுத்தற்குரிய முறைமையினையுடைய இருமுது குரவர் முதலாயினோர் கொடுப்ப; கொள்வது—கோடற்றொழில், என்றவாறு.

'எனப்படுவது' என்னும் பெயர் 'கொள்வது' என்னும் பெயர்ப் பயனிலை கொண்டது; *இது சிறப்புணர்த்துதல் 'அவ்வச்சொல்லிற்கு' (தொல்-சொல்-இடைச்-47) என்னுஞ் சூத்திரத்துட் கூறினும். 'கொடுப்போரின்றியும்' (தொல்-பொ-கற்-2) என மேல் வருகின்றதாகலின் இக் கற்புச் சிறத்தலிற் சிறந்ததென்றார். †இவ்விது 'என' என்கின்ற எச்சமாதலிற் சொல்லளவே எஞ்சிநின்றது. இதனாற் கரணம் பிழைக்கில் மரணம் பயக்குமென்றார். அத் தொழிலின் நிகழுங்கால் இவளை இன்னவாறு பாதுகாப்பா

* 'ஊரெனப்படுவதுறையூர்' என்புழி இச்சொல் சிறப்பு உணர்த்துதல் காண்க.

† 'சொல்லெ னெச்ச முன்னும் பின்னுஞ்-சொல்லள வல்ல தெஞ்சுத லின்றே' என்றார் சொல்லதிகாரத்தாகலின்.

யெனவும், இவற் கின்னவாறே நீ குற்றேவல் செய்தொழு கெனவும் அங்கியங்கடவுள் அறிகரியாக மந்திரவகையாற் கற்பிக்கப்படுதலின் அத்தொழிலைக் கற்பென்றார். தலைவன் பாதுகாவாது பரத்தைமை செய்து ஒழுகினும் பின்னர் அது கைவிட்டு இல்லறமே நிகழ்த்தித் துறவறத்தே செல்வ னென்றுணர்க. இக் கற்புக்காரணமாகவே பின்னர் நிகழ்ந்த ஒழுகலாறெல்லாம் நிகழவேண்டுதலின் அவற்றையுங் கற் பென்று அடக்கினார். இருவரும் எதிர்ப்பட்ட ஞான்று தொடங்கி உழுவலன்பால் உரிமை செய்து ஒழுகலிற் கிழ வனுங் கிழத்தியுமென்றார். தாயொடு பிறந்தாருந் தன்னை யருந் தாயத்தாரும் ஆசானும் முதலியோர் கொடைக்குரிய ரென்றற்கு மரபினோரென்றார்.

உதாரணம் :

“ உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவைப்
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகாற்
றண்பெரும் பந்தர்த் தருமணன் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிரு ளகன்ற கவின்பெறு காலைக்
கோள்கா ணீங்கிய கொடுவெண் டிங்கட்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
வுச்சிக் குடத்தர் புத்தகன் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவு *முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலைய வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பின் வழாஅ நற்பல வுதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென

* ‘முறைமுறைத் தாய’ என்பதும் பாடம்.

*நீரொடு சொரிந்த வீரித ழலரி
பல்லிருங் கதுப்பி னெல்லொடு தயங்க
வதுவை நன்மணங் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுந்து
பேரிற் கிழத்தி யாகென மாத
ரோரிற் கூட்டிய வுடன்புணர் கங்குற்
கொடும்புறம் வளைஇய கோடிக் கலிங்கத்
தொடுங்கினள் கிடந்தன ளோர்புறந் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப
வஞ்சின ளுயிர்த்த காலை யாழநின்
னெஞ்சம் படர்ந்த தெஞ்சா துரையென
வின்னகை யிருக்கைப் பின்யான் வினவலிற்
செஞ்சூட் டொண்குழை வண்காது துயல்வர
வகமலி யுவகைய ளாகி முகனிகுத்
தொய்யென விறைஞ்சி யோளே மாவின்
மடங்கொண் மதைஇய நோக்கி
னொடுங்கீ ரோதி மாஅ யோளே." (அகம்-86.)

இதனுள் வதுவைக்கு ஏற்ற கரணங்கள் நிகழ்ந்தவாறுந் தமர் கொடுத்தவாறுங் காண்க. சுற்றஞ் சூழ்ந்து நிற்றலானுந் தமர் அறிய மணவறைச் சேறலானுங் களவாற் சுருங்கிநின்ற நாண் சிறந்தமையைப் பின்னர்த் தலைவன் வினவ அவள் மறுமொழி கொடாது நின்றமையைத் தலைவன் தோழிக்குக் கூறியவாறு காண்க. இதனானே இது களவின் வழி நிகழ்ந்த கற்பாயிற்று. (க)

143. கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி.

---

* 'நீரொடு மலர்சொரிந்த' என்பதும் பாடம்.

இதன் பொருள் : கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே—முற்கூறிய கொடைக்குரிய மரபினோர் கொடுப்பக் கோடலன்றியுங் கரணம் உண்டாகும் ; புணர்ந்து உடன் போகிய காலையான—புணர்ந்து உடன்போகிய காலத்திடத்து, என்றவாறு.

இது புணர்ந்து உடன்போயினார் ஆண்டுக் கொடுப்போரின்றியும் வேள்வியாசான் காட்டிய சடங்கின் வழியாற் கற்புப்பூண்டு வருவதும் ஆமென்றவாறு. இனி ஆண்டு வரையாது மீண்டுவந்து கொடுப்பக் கோடல் உளதேல் அது மேற்கூறியதன்கண் அடங்கும். இனிப் போயவழிக் கற்புப் பூண்டலே கரணம் என்பாருமுளர். எனவே கற்பிற்குக் கரணம் ஒருதலையாயிற்று.

“பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
*நல்லூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்
செயலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே.” (குறுந்-15.)

இதனுள் ‘வாயாகின்று’ எனச் செவிலி நற்றாய்க்குக் கூறினமையானும் ‘விடலை’யெனப் பாலை நிலத்துத் தலைவன் பெயர் கூறினமையானும் இது கொடுப்போரின்றிக் கரணம் நிகழ்ந்தது. †“அருஞ்சுர மிறந்தவென் பெருந்தோட் குறுமகள்” என்பதும் அது. (உ)

* ‘நாலூர்’ என்பதும் பாடம்.

† ‘இச்செய்யு’ள 84-ஆம் பக்கத்திற்காண்க.

144. மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணங்
கீழோர்க் காகிய காலமு முண்டே.

இது முதனூழியில் வேளாளர்க்கு உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

இதன் பொருள் : மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்—வேதநூல்தான் அந்தணர் அரசர் வணிகரென்னும் மூவர்க்கும் உரியவாகக் கூறிய கரணம் ; கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டு—அந்தணர் முதலியோர்க்கும் மகட்கொடைக்குரிய வேளாண்மாந்தர்க்குந் தந்திரமந்திர வகையான் உரித்தாகிய காலமும் உள, என்றவாறு.

எனவே முற்காலத்து நான்கு வருணத்தார்க்குங் கரணம் ஒன்றாய் நிகழ்ந்தது என்பதாம். அஃது இரண்டாம் ஊழி தொடங்கி வேளாளர்க்குத் தவிர்ந்தது என்பதூஉந் தலைச்சங்கத்தாரும் முதனூலாசிரியர் கூறிய முறையே கரணம் ஒன்றாகச் செய்யுள் செய்தார் என்பதூஉங் கூறியவாறாயிற்று. உதாரணம் இக்காலத்தின்று. (௩)

145. பொய்யும் வழுவுந் தோன்றிய பின்ன
ரையர் யாத்தனர் கரண மென்ப.

இது வேதத்திற் கரணம் ஒழிய ஆரிடமாகிய கரணம் பிறந்தவாறும் அதற்குக் காரணமுங் கூறுகின்றது.

இதன்பொருள் : பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்—ஆதி ஊழி கழிந்த முறையே அக்காலத்தந்தந் தொடங்கி இரண்டாம் ஊழி முதலாகப் பொய்யும் வழுவுஞ் சிறந்து தோன்றிய பிற்காலத்தே ; ஐயர் யாத்தனர் கரணம்

என்ப—*இருடிகள் மேலோர்கரணமும் கீழோர்கரணமும் வேறுபடக் காட்டினரென்று கூறுவர், என்றவாறு.

ஈண்டு 'என்ப' என்றது முதனூலாசிரியரையன்று, வடநூலோரைக் கருதியது. பொய்யாவது செய்த ஒன்றனைச் செய்திலேனென்றல்; வழுவாவது சொல்லுதலே அன்றி ஒழுக்கத்து இழுக்கி ஒழுகல். அஃது அரசரும் வாணிகருந் தத்தம் வகையாற் செய்யத் தகுவன செய்யாது சடங்கொப்புமை கருதித் தாமும் அந்தணரோடு தலைமை செய்தொழுகுதலுங் களவொழுக்கத்தின் இழுக்குதல் போல்வனவும் அவர்க்கிழுக்கம். ஏனை வேளாளரும் இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்தபின்னர்ப் பொய்யும் வழுவுந் தோன்றி வழுவுதல் அவர்க்கிழுக்கம். இவற்றைக் கண்டு இருடிகள் மேலோர் மூவர்க்கும் வேறுவேறு சடங்கினைக்கட்டிக் கீழோர்க்குங் களவின்றியும் கற்பு நிகழுமெனவுஞ் சடங்கு வேறுவேறு கட்டினர். எனவே, ஒருவர் கட்டாமல் தாமே தோன்றிய கரணம் வேதநூற்கே உளதென்பது பெற்றாம். ஆயின் கந்தருவ வழக்கத்திற்குச் சிறந்த களவு விலக்குண்டதன்றோ எனின், ஒருவனையும் ஒருத்தியையும் எதிர்நிறீஇ 'இவளைக்கொள்ள இயைதியோ நீ' யெனவும் 'இவற்குக் கொடுப்ப இயைதியோ நீ' யெனவும் இருமுதுகுரவர் கேட்டவழி அவர் கரந்த உள்ளத்தான் இயைந்தவழிக் கொடுப்பவாகலின் அது தானே ஒருவகையாற் கந்தருவ வழக்கமாம், களவொழுக்கம் நிகழாதாயினும், என்பது கரணம் யாத்தோர் கருத்தென்பது பெற்றாம். இதனானே இயற்கைப்புணர்ச்சிக்கண் மெய்யுறு

* 'இருடிகள் மேலோர் கரணமும் கீழோர் கரணமும் வேறுபடக் கரணங்கள் கட்டினர்' என்பதும் பாடம்.

புணர்ச்சியையும் உள்ளப்புணர்ச்சியென்றுகூறி அதன் வழிக் கற்புநிகழ்ந்ததென்றுங் கூறவும்படும். இவ்வாசிரியர் ஆதியூழியின் அந்தத்தே இந்நூல் செய்தலின் முதனூலாசிரியர் கூறியவாறே களவு நிகழ்ந்தபின்னர்க் கற்பு நிகழுமாறுங் கூறித் தாம் நூல்செய்கின்ற காலத்துப் பொய்யும் வழுவும் பற்றி இருடிகள் கரணம் யாத்தவாறுங் கூறினார், அக்களவின்வழி நிகழ்ந்த கற்புங் கோடற்கென்று உணர்க.

உதாரணம்:

"மைப்புறப் புழுக்கி னெய்க்கனிடு வண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்
புள்ளுப்புணர்ந் தினிய வாகத் தெள்ளொளி
யங்க ணிருவிசும்பு விளங்கத் திங்கட்
சகட மண்டிய துகடீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்
படுமண முழவொடு பரூஉப்பணை யிமிழ
வதுவை மண்ணிய மகளிர் விசும்புற்றுப்
பூக்கணு மிமையார் நோக்குபு மறைய
மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறித்த பயம்பம லறுகைத்
தழங்குகுரல் வானந் தலைப்பெயற் கீன்ற
மண்ணு மணியன்ன மாயிதழ்ப் பாவைத்
தண்ணறு முகையொடு வெண்ணூல் சூட்டித்
தூவுடைப் பொலிந்து மேவரத் துவன்றி
மழைபட் டன்ன மணன்மலி பந்த
ரிழையணி சிறப்பிற் பெயர்வியர்ப் பாற்றித்
தமர்நமக் கீந்த தலைநா ளிரவி
னுவர்நீங்கு கற்பினெ முயிருடம் படுவி
முருங்காக் கலிங்க முழுவதும் வளைஇப்

பெரும்புழுக் குற்றநின் பிறைநுதற் பொறிவிய
ருறுவளி யாற்றிடச் சிறுவரை திறவென
வார்வ நெஞ்சமொடு போர்வையான் வௌவலி
னுறைகழி வாளி னுருவுபெயர்ந் திமைப்ப
மறைதிற னறியா ளாகி யொய்யென
நாணின ளிறைஞ்சி யோளே பேணிப்
பரூஉப்பகை யாம்பற் *குரூஉத்தொடை நீவிச்
சுரும்பிமி ராய்மலர் வேய்ந்த
விரும்பல் கூந்த லிருண்மறை யொளித்தே." (அகம்-136.)

என வரும். (௪)

146. கரணத்தி னமைந்து முடிந்த காலை
நெஞ்சுதளை யவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணு
மெஞ்சா மகிழ்ச்சி யிறந்துவரு பருவத்து
மஞ்ச வந்த வுரிமைக் கண்ணு
நன்னெறிப் படருந் தொன்னலப் பொருளினும்
பெற்ற தேஎத்துப் பெருமையி னிலைஇயக்
குற்றஞ் சான்ற பொருளெடுத் துரைப்பினு
நாமக் காலத் துண்டெனத் தோழி
யேமுறு கடவு ளேத்திய மருங்கினு
மல்ல றீர வார்வமொ டளைஇயச்
சொல்லுறு பொருளின் கண்ணுஞ் சொல்லென
†வேனது சுவைப்பினு நீகை தொட்டது

* 'குரூஉத்தொடர்' என்பதும் பாடம்.

† 'அமிர்தத்திற்கு மாறாகிய நஞ்சை நுகரினும்' என்று உரை கிடத்தலின் 'ஏனதுசுவைப்பினும்' என்று பாடங்கோடலே பொருட் பொருத்தம் உடைத்தாம்; 'எனது சுவைப்பினும்' என்பது பொருட் பேறின்று.

வானோ ரமுதம் புரையுமா லெமக்கென
வடிசிலும் பூவுந் தொடுதற் கண்ணு
மந்தணர் திறத்துஞ் சான்றோர் தேஎத்து
மந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறத்தினு
மொழுக்கங் காட்டிய குறிப்பினு மொழுக்கத்துக்
களவினு ணிகழ்ந்த வருமையைப் புலம்பி
யலமர லுள்ளமொ டளவிய விடத்து
மந்தரத் தெழுதிய வெழுத்தின் மான
வந்த குற்றம் வழிகெட வொழுகலு
மழிய லஞ்சலென் றுயிரு பொருளினுந்
தானவட் பிழைத்த பருவத் தானு
நோன்மையும் பெருமையு மெய்கொள வருளிய
பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித்
தன்னி னாகிய தகுதிக் கண்ணும்
புதல்வற் பயந்த புனிறுசேர் பொழுதி
னெய்யணி மயக்கம் புரிந்தோ ணோக்கி
யையர் பாங்கினு மமரர்ச் சுட்டியுஞ்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்
பயங்கெழு துணையணை புல்லிய புல்லா
துயங்குவள் கிடந்த கிழத்தியைக் குறுகிப்
புல்கென முன்னிய நிறையழி பொழுதின்
மெல்லென் சீறடி புல்லிய விரவினு
மூறலருங் குண்மையி னூடன் மிகுத்தோளைப்
பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற் கண்ணும்
பிரிவி னெச்சத்துப் புலம்பிய விருவரைப்

பிரிவி னீக்கிய பகுதிக் கண்ணு
நின்றுநனி பிரிவி னஞ்சிய பையுளுஞ்
சென்றுகை யிகந்துபெயர்த் துள்ளிய வழியுங்
காமத்தின் வலியுங் கைவிடி னச்சமுந்
தானவட் பிழைத்த நிலையின் கண்ணு
முடன்சேறல் செய்கையொ டன்னவை பிறவு
மடம்பட வந்த தோழிக் கண்ணும்
வேற்றுநாட் டகல்வயின் விழுமத் தானு
மீட்டுவர வாய்ந்த வகையின் கண்ணு
மவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும்
பேரிசை யூர்திப் பாகர் பாங்கினுங்
காமக் கிழத்தி மனையோ ளென்றிவ
ரேமுறு கிளவி சொல்லிய வெதிருஞ்
சென்ற தேஎத் துழப்புநனி விளக்கி
யின்றிச் சென்ற தந்நிலை கிளப்பினு
மருந்தொழின் முடித்த செம்மற் காலை
விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணு
மாலை யேந்திய பெண்டிரு மக்களுங்
கேளி ரொழுக்கத்துப் புகற்சிக் கண்ணு
மேனை வாயி லெதிரொடு தொகைஇயப்
பண்ணமை பகுதிமுப் பதினொரு மூன்று
மெண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன.

இது பார்ப்பார் முதலிய பன்னிருவருங் கற்பிடத்துக் கூற்றிற்கு உரியராயினும் அவருள் தலைவன் சிறந்தமையின்

அவன் கூற்றெல்லாந் தொகுத்துக் களவிற் கூறியாங்கு முற் கூறுகின்றது.

இதன்பொருள்: கரணத்தின் அமைந்து முடிந்த காலை —ஆதிக்கரணமும் ஐயர் யாத்த கரணமுமென்னும் இரு வகைச் சடங்கானும் ஓர் குறைபாடின்றாய் மூன்று இரவின் முயக்கம் இன்றி ஆன்றோர்க்கு அமைந்த வகையாற் பள்ளி செய்து ஒழுகி நான்காம் பகலெல்லை முடிந்தகாலத்து:

ஆன்றோராவார், மதியுங் கந்தருவரும் அங்கியும்.

நெஞ்சு தளை அவிழ்ந்த புணர்ச்சிக்கண்ணும்—களவிற் புணர்ச்சி போலுங் கற்பினும் மூன்றுநாளுங் கூட்டமின்மை யானும் நிகழ்ந்த மனக்குறைதீரக் கூடிய கூட்டத்தின் கண்ணும்:

அது நாலாம் நாளை யிரவின்கண்ணதாம்.

உதாரணம்:

"விரிதிரைப் பெருங்கடல் வளைஇய வுலகமு
மரிதுபெறு சிறப்பிற் புத்தே ணாடு
மிரண்டுந் தூக்கிற் சீர்சா லாவே
பூப்போ லுண்கட் பொன்போன் மேனி
மாண்வரி யல்குற் குறுமக
டோண்மாறு படூஉம் வைகலொ டெமக்கே." (குறுந்-101.)

இது நெஞ்சு தளையவிழ்ந்த புணர்ச்சி.

"*முகனிகுத் தொய்யென விறைஞ்சி யோளே"
(அகம்-86.)

என முற்காட்டியது கரணத்தின் அமைந்து முடிந்தது.

---

* இவ்வடிவந்த செய்யுளை 508 ஆம் பக்கத்தில் காண்க.

எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவத்தும்—அதன்பின்னர் ஒழியாத மகிழ்ச்சி பலவேறு வகையவாகிய நுகர்ச்சிக்கட் புதிதாகவந்த காலத்தினிடத்தும்:

உதாரணம்:

"அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு." (குறள்-111-10.)

என்றது பொருள்களை உண்மையாக உணர்ந்த இன்பத்தை அறியுந்தோறும் அவற்றை முன்னர் இவ்வாறு விளங்க உணராத அறிவின்மையை வேறுபடுத்துக் கண்டாற்போலுஞ் சேயிழைமாட்டுச் செறியுந்தொறுந் தலைத்தலை சிறப்பப் பெறுகின்ற காமத்தை முன்னர் அறியப் பெற்றிலே மென்று வேறுபடுத்தலென்றவாறு.

அஞ்ச வந்த உரிமைக்கண்ணும்—தலைவனும் பிறரும் அஞ்சும்படி தலைவிக்கட்டோன்றிய உரிமைகளிடத்தும்:

அவை இல்லறம் நிகழ்த்துமாறு தன் மனத்தாற் பலவகையாகக் காணலும் பிறர்க்குத் தான் கொடுத்தலுங் கற்புச் சிறத்தலுமாம்.

உதாரணம்:

"உள்ளத் துணர்வுடையா னோதிய நூலற்றால்
வள்ளன்மை பூண்டான்க ணொண்பொருள்—தெள்ளிய
வாண்மகன் கையி லயில்வா ளனைத்தரோ
நாணுடையாள் பெற்ற நலம்." (நாலடி-39-6.)

இதனுள் நலமென்றது இம்மூன்றினையும். தலைவி இல்லறப்பகுதியை நிகழ்த்துமாறு பலவகையாகக் காணும்

தன்மை உணர்வுடையோன் ஓதிய நூல் விரியுமாறுபோல விரியா நின்றதெனவும், இவள் கொடை நலம் வள்ளன்மை பூண்டான் பொருளனைத்தெனவும், இவளது கற்புச்சிறப் புப் பிறர்க்கு அச்சஞ் செய்தலின் வாளனைத்தெனவுந், தலைவன் அவளுரிமைகளை வியந்து கூறியவாறு காண்க.

நன்னெறிப் படரும் தொல் நலப் பொருளினும்—இல் லறத்திற்கு ஓதிய நெறியின்கண் தலைவி கல்லாமற் பாகம்பட ஒழுகுந் தொன்னலஞ் சான்ற பொருளின்கண்ணும்:

பொருள்வருவாய் இல்லாத காலமும் இல்லறநிகழ்த்து தல் இயல்பாயிருத்தற்குத் தொன்னலமென்றார்.

உதாரணம்:

“குடநீரட் டுண்ணு மிடுக்கட் பொழுதும்
கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கையாறக் கொள்ளு மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்.” (நாலடி-39-2.)

இஃது ஒரு குடம் நீராற் சோறமைத்து உண்ணுமாறு மிடிப்பட்ட காலத்தும் மனைக்கு மாட்சிமையுடையாள் கடல் நீரை வற்ற உண்ணுங் கேளிர் வரினும் இல்லறநிகழ்த்துதலைக் கைக்குநெறியாகக் கொள்ளுமெனத் தலைவன் வியந்துகூறி னான்.

பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலைஇக் குற்றஞ் சான்ற பொருள் எடுத்து உரைப்பினும்—தலைவி அங்ஙனம் உரிமை சான்ற இடத்து அவளைப் பெருமையின்கண்ணே நிறுத்திக் குற்றமமைந்த களவொழுக்கத்தை வழுவியமைந்த பொருளாகக் கேளிர்க்காயினும் பிறர்க்காயினும் உரைப்பி னும்:

அது களவொழுக்கத்தையுந் தீய ஓரையுள்ளுந் துற வாது ஒழுகிய குற்றத்தையும் உட்கொண்டும் அதனைத் தீதென்னுமற் கூறுதலாம்.

உதாரணம்:

"நாலாறு மாறாய் நனிசிறிதா யெப்புறனு
மேலாறு மேலுறை சோரினு—மேலாய
வல்லளாய் வாழுமூர் தற்புகழு மாண்கற்பி
னில்லா *ளமைந்ததே யில்." (நாலடி-39-3.)

இதனுள் மனைவி அமைந்துநின்ற †இல்நிலையே இல்லற மாவதெனவே யாம் முன்னரொழுகிய ஒழுக்கமும் இத்துணை நன்மையாயிற்று என்றானாயிற்று. இது குறிப்பெச்சம்.

நாமக் காலத்து உண்டெனத் தோழி ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும் (தோழி நாமக்காலத்து ஏமுறு கட வுள் உண்டென ஏத்திய மருங்கினும்)—தோழி இன்னது விளையுமென்று அறியாது அஞ்சுதலையுடைய களவுக் காலத்தே யாம் வருந்தாதிருத்தற்குக் காரணமாயதோர் கடவுள் உண்டு எனக் கூறி அதனைப் பெரிது மேத்திய இடத்துத் தலைவன் வதுவைகாறும் ஏதமின்றாகக் காத்த தெய்வம் இன்னுங் காக்குமென்று ஏத்துதலும்:

அது, "குனிகாயெருக்கின்" என்னுங் குணநாற்பதில் ஏமுறு கடவுளைத் தலைவன் தானே ஏத்தியது போலாது,

"நேரிழாய் நீயுநின் கேளும் புணர
வரையுறை தெய்வ முவப்ப வுவந்து

* 'அமர்ந்ததே' என்பதும் பாடம்.
† 'இந்நிலையே' என்பதும் பாடம்.

குரவை தழீஇயா மாடக் குரவையுட்
கொண்டு நிலைபாடிக் காண்''

எனத் தான் பராய தெய்வத்தினைத் தோழி கற்புக்காலத்துப் பரவுக்கடன் கொடுத்தற்கு ஏத்தியவழித் தலைவனும் ஏத்துதலாம்.

உதாரணம்:

"அதிரிசை யருவி யருவரைத் தொடுத்த
பன்மலர்த் தேனிறா அல்குநர்க் குதவு
நுந்தைநன் னாட்டு வெந்திறன் முருகென
நின்னோய்க் கியற்றிய வெறிநின் றோழி
யென்வயி னோக்கலிற் போலும் பன்னாள்
வருந்திய வருத்தந் தீரநின்
றிருந்திழைப் பணைத்தோள் புணர்ந்துவந் ததுவே.''

தேன் இறாலை அல்குநர்க்கு உதவும் நாடாதலின் நின் நோய்க்கு இயற்றிய வெறி நுமக்குப் பயன்படாது எமக்குப் பயன்றருமென்றேன் என்வயின் நோக்கலின் என்றது. எனக்குப் பயன் கொடுக்கவேண்டுமென்று பராவுதலிற் றோளைப் புணர்ந்து உவந்தது என்றான். இது கற்புக்காலத்துப் பரவுக்கடன் கொடுக்கின்ற காலத்துத் தலைவன் கூறியது.

அல்லல் தீர ஆர்வமொடு அளைஇச் சொல்லுறு பொருளின் கண்ணும்—வரைந்த காலத்து மூன்றுநாட் கூட்டமின்மைக்குக் காரணமென் னென்று தலைவி மனத்து நிகழாநின்ற வருத்தந் தீரும்படி மிக்க வேட்கையோடு கூடியிருந்து வேதஞ்சொல்லுதலுற்ற பொருளின்கண்ணும்: தலைவன் விரித்து விளங்கக் கூறும்.

அது முதனாள் தண்கதிர்ச் செல்வற்கும், இடைநாள் கந்தருவர்க்கும், பின்னாள் அங்கியங்கடவுட்கும் அளித்து நான்காநாள் அங்கியங் கடவுள் எனக்கு பின்னை அளிப்ப யான் நுகரவேண்டிற்று, அங்ஙனம் வேதங்கூறுதலால் எனத் தலைவிக்கு விளங்கக்கூறுதல். உதாரணம் இக்காலத்தின்று.

*சொல்லெலன வனது சுவைப்பினும் நீ கைதொட்டது வானோர் அமுதம் புரையுமால் எமக்கென அடிசிலும் பூவுந் தொடுதற் கண்ணும்—அமுதிற்கு மாறாகிய நஞ்சை நுகரினும் நீ கையால் தீண்டின பொருள் எமக்கு உறுதியைத் தருதலின் தேவர்களுடைய அமிர்தத்தை ஒக்கும் எமக்கெனப் புனைந்துரைத்து இதற்குக் காரணங் கூறென்று அடிசிலும் பூவுந் தலைவி தொடுதலிடத்தும்: கூற்று நிகழும்.

உம்மை இழிவுசிறப்பு.

"வேம்பின் பைங்காயென் றோழி தரினே
தேம்பூங் கட்டி யென்றனிர் * *" (குறுந்-196.)

எனத் தலைவன் கூற்றினைத் தோழி கொண்டுகூறியவாறு காண்க.

அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும் அந்தமில் சிறப்பிற் பிறர் பிறர் திறத்தினும் ஒழுக்கங் காட்டிய குறிப்பினும்—வேட்பித்த ஆசிரியனுங் கற்பித்த ஆசிரியனுமாகிய பார்ப்பார்கண்ணும், முற்ற உணர்ந்து ஐம்பொறியையும் அடக்கியோர்கண்ணும், முடிவில்லாச் சிறப்பினையுடைய

---

* 'சொல்' என்பது 'நெல்' என்னும் பொருட்டாகலின் அஃது தீண்டு நெல்லினாகிய 'அமுதை' உணர்த்திற்று ; 'சொல்லருஞ் சூற் பசும் பாம்பின் றோற்றம்போல்' என்புழியும் 'சொல்' இப்பொருட்டாதல் காண்க.

தேவர்கள் கண்ணும் ஒழுகும் ஒழுக்கத்தினைத் தான் தொழுது காட்டிய குறிப்பின்கண்ணும்:

'பிறர்பிற'ரென்றார் தேவர்மூவரென்பது பற்றி. தன்னை யன்றித் தெய்வந் தொழாதாளை இத்தன்மையோரைத் தொழல்வேண்டுமென்று தொழுது காட்டினான். குறிக்கொளுங் கூற்றால் உரைத்தலிற் குறிப்பினுமென்றார். உதாரணம் வந்துழிக் காண்க.

ஒழுக்கத்துக் களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி அலமரல் உள்ளமொடு அளவிய இடத்தும்—வணக்கஞ்செய்தும் எதிர்மொழியாது வினையவழிப் பிறராற் கூற்று நிகழ்த்தியும் எதிர்ப்பட்டுழி எழுந்தொடுங்கியுந் தான் அக்காலத்து ஒழுகும் ஒழுக்கத்திடத்து முன்னர்க் களவுக்காலத்து நிகழ்ந்த கூட்டத்தருமையைத் தனித்துச் சுழலுதலையுடைய உள்ளத்தோடே உசாவிய இடத்தும் தலைவற்குக் கூற்றுநிகழும்.

உதாரணம் வந்துழிக்காண்க. "கவவுக் கடுங்குரையள்" (குறுந்-132.) என்பது காட்டுவாரும் உளர்.

அந்தரத்து எழுதிய எழுத்தின் மான வந்த குற்றம் வழி கெட ஒழுகலும் (வந்த குற்றம் அந்தரத்து எழுதிய எழுத்தின் மான வழிகெட ஒழுகுதலும்)—களவுக் காலத்து உண்டாகிய பாவம் ஆகாயத்தெழுதிய எழுத்து வழிகெடுமாறுபோல வழிகெடும்படி பிராயச்சித்தஞ்செய்து ஒழுகுதற்கண்ணும்:

அது முன்புபோலக் குற்றஞ்சான்ற பொருளை வழுவமைத்துக் கொள்ளாது குற்றமென்றே கருதிக் கடிதலாம்.

"பொய்யற்ற கேள்வியாற் புரையோரைப் படர்ந்துநீ
மையற்ற படிவத்தால் * * *" (கலி-15.)

என்றவழி 'மையற்ற படிவம்' எனத் தலைவன் கூறிய தனைத் தோழி கூறியவாறு காண்க.

அழியல் அஞ்சல் என்று ஆ இரு பொருளினும்—வந்த குற்றம் நினக்கு உளதென்று அழியலெனவும் எனக்குள தென்று அஞ்சலெனவுஞ் சொல்லப்படும் அவ்விருபொருண் மைக்கண்ணும்:

இவை இரண்டாகக் கொள்ளின் முப்பத்துநான்காமா தலின் இருவர் குற்றமுங் குற்றமென ஒன்றாக்கியது. தெய் வத்தினாதலின் ஏதம் பயவாதென்றான்.

"யாயும் யாயும் யாரா கியரோ
வெந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதுஞ்
செம்புலப் பெயனீர் போல
வன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே." (குறுந்-40.)

இது நம்மானன்றி நெஞ்சந் தம்மில் தாங் கலத்தலின் தெய்வத்தான் ஆயிற்றெனத் தெருட்டியது.

தான் அவட் பிழைத்த பருவத்தானும்—அங்ஙனந் தெய்வத்தினான் ஆயிற்றேனுங் குற்றமேயன்றோ என உட் கொண்ட அவட்கு யான் காதன்மிகுதியாற் புணர்ச்சி வேண்ட என் குறிப்பிற்கேற்ப ஒழுகினையாகலின் நினக்கோர் குற்றமின்றென்று தான் பிழைத்த பருவமுணர்த்தும் இடத் தும்: கூற்று நிகழும்.

உதாரணம்:

" நகைநீ கேளாய் தோழி தகைபெற
நன்னாட் படராத் தொன்னிலை முயக்கமொடு
நாணிழுக் குற்றமை யறிகுநர் போல
நாங்கண் டனையநங் கேள்வர்
தாங்கண் டனைய நாமென் றோரே."

இதனுள் நன்னாள் வேண்டுமென்னாது கூடிய கூட்டத்துள் தங்கி நாணுச் சுருங்கி வேட்கை பெருகிய நம்மினும் ஆற்றாராயினார்போல நாங் குறித்தூழி வந்தொழுகிய தலைவர் தாங் குறித்தனவே செய்தனமென நமக்குத் தவறின்மை கூறினாரெனத் தோழிக்குத் தலைவி கூறியவழித் தலைவன் பிழைப்புக் கூறியவாறு காண்க.

(நோன்மையும் பெருமையும் மெய்கொள அருளிய பன்னல்சான்ற வாயிலொடு பொருந்தித் தன்னின் ஆகிய தகுதிக் கண்ணும்) தன்னின் ஆகிய நோன்மையும் பெருமையும் மெய் கொள—தலைவனான் உளதாகிய பொறையையுங் கல்விமுதலிய பெருமையையும் உடைய மகவைத் தலைவி தன்வயிற்றகத்தே கொள்கையினாலே; பன்னல்சான்ற வாயிலொடு பொருந்தி அருளிய தகுதிக்கண்ணும்—வேதத்தை ஆராய்தல் அமைந்த அந்தணரோடு கூடி இருத்தற்குச் செய்யத் தகுஞ் சடங்குகளைச் செய்த தகுதிப்பாட்டின்கண்ணும்:

'தன்னினாகிய மெய்' கருப்பம். அவிப்பலிகொள்ளும் அங்கியங்கடவுட்கும் அதுகொடுக்குந் தலைவற்கும் இடையே நின்று கொடுப்பித்தலின் அந்தணரை வாயிலென்றார்.

" ஆற்றல் சான்ற தாமே யன்றியு
நோற்றோர் மன்றநங் கேளிரவர் தகைமை

வட்டிகைப் படூஉந் திட்ட மேய்ப்ப
வரிமயி றொழுகுலின் னவ்வயி றருளி
மறைநவி லொழுக்கஞ் செய்து மென்றனர்
துனிதீர் கிளவிநந் தவத்தினு
நனிவாய்த் தனவான் முனிவர்தஞ் சொல்லே."

இதனுள் நந்தலைவரேயன்றிச் சுற்றத்தாரும் நோற்று ஓர் கருப்பந் தங்கிய நினது வயிற்றைக்கண்டு உவந்தெனவும், அதற்கேற்ற சடங்கு செய்துமென்று ரெனவும், முற்காலத்து நாங் கேட்ப நமக்குக் கூறிய முனிவர் சொல்லும் உண்மை யாயிற்றெனவுங் கூறியவாறு காண்க. தலைவன்கூற்று வந்துழிக் காண்க:

புதல்வற் பயந்த புனிறு சேர் பொழுதின்—அங்ஙனஞ் சிறப்பெய்திய புதல்வனைப் பெற்ற ஈன்றணுமை சேர்ந்த காலத்தே:

நெய் அணி மயக்கம் புரிந்தோள் நோக்கி—சுற்றக் குழாத்துடனே வாலாமை வரைதலின்றி எண்ணெயாடும் மயக்கத்தை விரும்பிய தலைவியை முகமனாகக் கூறுதலைக் குறித்து:

ஐயர்பாங்கினும்—முனிவர் மாட்டும்:

அமரர்ச் சுட்டியும்—தேவர்கள் புதல்வனைப் பாதுகாத் தலைக் கருதியும்:

செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற்கண்ணும்—அக்கா லத்துச் செய்யும் பெரிய சிறப்புக்களைக் குறித்த மனத் தோடே சென்று சார்தற்கண்ணும்:

சிறப்பாவன பிறந்த புதல்வன் முகங்காண்டலும் ஐம்படை பூட்டலும் பெயரிடுதலும் முதலியனவும் எல்லாமுனிவர்க்குந் தேவர்க்கும் அந்தணர்க்குங் கொடுத்தலும். சேர்தல் கூறவே, கருப்பம் முதிர்ந்த காலத்துத் தலைவன் பிறரொடு கூட்டமுண்மையுங் கூறிற்றும். ஆண்டுத் தோழி கூறுவனவும் 'ஒன்றெனமுடித்த'லாற் கொள்க.

"வாராய் பாண நகுகம் நேரிழை
கடும்புடைக் கடுஞ்சூ னங்குடிக் குதவி
நெய்யோ டிமைக்கு மையவித் திரள்காழ்
* விளங்குதர விளங்கக் கிடந்தோட் குறுகிப்
புதல்வ னீன்றெனப் பெயர்பெயர்த் தவ்வரித்
திதலை யல்குன் முதுபெண் டாகித்
துஞ்சுதி யோமெல் லஞ்சி லோதியெனப்
பன்மா ணகட்டிற் குவளை யொற்றி
யுள்ளினெ னுறையு மெற்கண்டு மெல்ல
முகைநாண் முறுவ லூற்றித்
தகைமலர் † நெடுங்கண் கைபுதைத் ததுவே."

(நற்றிணை-370.)

இது நெய்யணிமயக்கம்பற்றித் தலைவன் கூறியது.

"நெடுநா வொண்மணி கடிமனை யிரட்டக்
குரையிலைப் போகிய விரவுமணற் பந்தர்ப்
பெரும்பாண் காவல் பூண்டென வொருசார்த்
திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப
வெறியுற விரிந்த வறுவை மெல்லணைப்
புனிறுநாறு செவிலியொடு புதல்வன் றுஞ்ச

* 'விளங்குநகர்' என்பதும் பாடம்.

† 'உண்கண் புதைத்து வந்ததுவே' என்பதும் பாடம்.

வையவி யணிந்த நெய்யாட் டீரணிப்
பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை யீரிமை பொருந்த
நள்ளென் கங்குற் கள்வன் போல
வகன்றுறை யூரனும் வந்தனன்
சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே." (நற்றிணை-40.)

இது முன்வருங் காலத்து வாராது சிறந்தோன் பெயரன் பிறத்தலான் வந்தானெனத் தோழி கூறினள்.

"குவளை மேய்ந்த குறுந்தா ளெருமை
குடநிறை தீம்பால் படுமூர்
புதல்வனை யீன்றிவ ணெய்யா டினளே."

இதுவும் அது.

பயங்கெழு துணையணை புல்லிய புல்லாது உயங்குவள் கிடந்த கிழத்தியைக் குறுகிப் புல்கு என முன்னிய நிறையழி பொழுதின் மெல்லென் சீறடி புல்லிய இரவினும்—தலைவி தனது ஆற்றாமை மிகுதியால் தழுவி ஆற்றுதற்குக் குளிர்ந்து பயன்கொடுத்தல் பொருந்திய பல அணைகளைத் தழுவித் தன்னைப் புல்லுதல் பெறாதே வருந்திக் கிடந்த தலைவியை அணுகித் தான் கூடுதலைக் கருதின நிறையழிந்த காலத்தே அவளது மெத்தென்ற சிறிய அடியைத் தீண்டிய இரத்தற்கண்ணும்:

இதனானே *மகப்பெறுதற்கு முன்னர் அத்துணை யாற்றாமை எய்திற்றிலனென்றார். இப்பிரிவு காரணத்தால் தலைவனும் நிறையழிவனென்றார்.

* 'மகப்பேற்றுக்கு' என்பதும் பாடம்.

"அகன்றுறை யணிபெற" என்னும் மருதக்கலியுள்,

"என்னைநீ செய்யினு *முணர்ந்தீவா ரில்வழி
முன்னடிப் பணிந்தெம்மை யுணர்த்திய வருதிமன்
னிரைதொடி நல்லவர் துணங்கையுட் டலைக்கொள்ளக்
கரையிடைக் கிழிந்தநின் காழகம்வந் துரையாக்கால்"

(கலி-73.)

என இதனுட் சிறடிப் புல்லிய இரவினைத் தலைவி கூறிய வாறு காண்க. தலைவன்கூற்று வந்துழிக் காண்க.

உறலருங்கு உண்மையின் ஊடல் மிகுத்தோளைப் பிற பிற பெண்டிரிற் பெயர்த்தற்கண்ணும்—தலைவற்குச் சார்ந்தழி பெருங்குறிபெற்றார் கூந்தல் துகளும் உண்மையின் அவனைக் கூடுதல் அருமையினாலே ஊடன் மிகுத்த தலைவியைப் பிற பிற பெண்டிர் ஏதுவாக ஊடல் உணர்த்துதலிடத்தும்:

என்றது உலகத்துத் தலைவரோடு கூடுந் தலைவியர் மனை யறத்து இவ்வாறொழுகுவரென அவர் ஒழுக்கங் காட்டி அறத் துறைப் படுத்தலாம். மறைவெளிப்படுத்தலுந் தமரிற்பெறு தலும் மலிவும் முறையே கூறிப் பின்னர்ப் புலவி நிகழ்ந்து ஊடலாய் மிகுதலின் 'ஊடல் மிகுத்தோள்' என்றார். இரத்தற் பாலினும் பெண்பால் காட்டிப் பெயர்த்தலிற் 'பிறபிற பெண் டிர்' என்றார்.

"புனம்வளர் பூங்கொடி" என்னும் மருதக்கலியுள்,

"ஒருத்தி, புலவியாற் புல்லா திருந்தா ளலவுற்று
வண்டின மார்ப்ப விடைவிட்டுக் காதலன்
றண்டா ரகலம் புகும்" (கலி-92.)

எனக் கூறி,

* 'உரைத்தீவார்' என்பதும் பாடம்.

"அனவகை யால்யான் கண்ட கனவுத்தா
னனவாகக் காண்டை நறுநுதால் பன்மாணுங்
கூடிப் புணர்ந்தீர் பிரியன்மி னீடிப்
பிரிந்தீர் புணர்தம்மி னென்பன போல
வரும்பவிழ் பூஞ்சினை தோறு மிருங்குயி
லானு தகவும் பொழுதினன் மேவர
நான்மாடக் கூடன் மகளிரு மைந்தருந்
தேனிமிர் காவிற் புணர்ந்திருந் தாடுமா
ரானு விருப்போ டணியயர்பு காமற்கு
வேனில் விருந்தெதிர் கொண்டு." (கலி-92.)

எனவே, புல்லாதிருந்தாளென்றதனன் ஊடன்மிகுதி தோன்றுவித்து மகளிரும் மைந்தரும் வேனில் விழாச் செய்கின்றார் நாமும் அது செய்யவேண்டுமென்று கூறியவாறு காண்க.

பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப் பிரிவின் நீக்கிய பகுதிக்கண்ணும்—பரத்தையிற்பிரிவினது தவிர்ச்சிக்கண்ணே தனிமையுற்றிருந்த தலைமகனையுந் தலைமகளையுந் தனதருளினலே தானும் பிரிவினெச்சத்துப் புலம்பி நின்ருன் *ஒருவன் தலைவிதனைக் கண்டருளுதற்கு அப்பிரிவினின்று நீக்கிய கூறுபாட்டின் கண்ணும்:

பிரிந்து வந்துழியல்லது புலத்தல் பிறவாமையின் 'எச்சத்து' என்ருர். உதாரணம் வந்துழிக் காண்க. இதுவும் ஊடற்பகுதியாம்.

---

* 'ஒருதலைவன்' என்பதும் பாடம்.

நின்று நனி பிரிவின் அஞ்சிய பையுளும்—முன்னில்லா தொருசிறைப் போய் நின்று நீட்டித்துப் பிரிவினால் தலைவன் அஞ்சிய நோயின்கண்ணும்: இது துனி.

"மையற விளங்கிய" என்னும் மருதக்கலியுள்,

"* ஏதப்பா டெண்ணிப் புரிசை வியலுள்ளோர்
கள்வரைக் காணாது கண்டேமென் பார்போலச்
சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவுநின்
ஞாணை கடக்கிற்பார் யார்." (கலி-81.)

எனச் சேய்நின்றென்றதனால் † துனித்து நின்றவாறுஞ் சினவலென்றதனாற் பிரிவு நீட்டித்தவாறும் நின்னாணை கடக்கிற்பார் யாரென அஞ்சியவாறு கூறியவாறுங் காண்க.

"பொய்யெல்லா மேற்றித் தவறு தலைப்பெய்து
கையொடு கண்டாய் பிழைத்தே னருளினி" (கலி-95.)

என்பதும் அச்சமாதலின் இதன்கண் அடங்கும்.

(சென்று கை இகந்து பெயர்த்து உள்ளிய வழியும்) சென்று—தலைவன் ஆற்றாமையைத் துனியைத் தீர்த்தற்கு அவளை அணுகச் சென்று; கையிகந்து—அவன் மெய்க்கட் கிடந்த தவறுகண்டு தலைவி ஆற்றாளாய் நீக்கி நிறுத்த லானே; பெயர்த்து—அவன் ஒருவாற்றான் அவளாற்றாமை யைச் சிறிது மீட்கையினாலே; உள்ளிய வழியும்—அவள் கூடக் கருதியவிடத்தும்: தலைவன் கூற்று நிகழும்.

---

* 'ஏதப்பாடெள்ளி' என்பதும் பாடம்.

† 'துணித்து நின்றவாறும்' என்னும் முன் அச்சுப்பிரதியிலுள்ள பாடம் பொருட்பேறின்மையின் 'துனித்து நின்றவாறும்' என்பதே திருத்தமான பாடம் என்க; துனித்து—பெரிதும் புலந்து.

இதுவுந் துனிதீர்ப்பதோர் முறைமை கூறிற்று.

உதாரணம்:

முற்கூறிய பாட்டுள்,

"அதிர்வில் படிறெருக்கி வந்தென் மகன்மேன்
முதிர்பூண் முலைபொருத வேதிலாண் முச்சி
யுதிர்துக ளுக்கசின் ஞடை யொலிப்ப
வெதிர்வளி நின்றாய்நீ செல்;
இனி எல்லாயாந், தீதிலே மென்று தெளிப்பவுங் கைந்நீவி
யாதொன்று மெங்கண் மறுத்தர வில்லாயின்
மேதக்க வெந்தை பெயரனை யாங்கொள்வேந்
*தாவா விருப்பொடு கன்றியாத் துழிச்செல்லு
மாபோற் படர்தக நாம்" (கலி-81.)

எனத் தலைவன் கூறியவாறு காண்க.

காமத்தின் வலியும்—அவள் அது நீத்து நீங்கியவழி முற்கூறியவாறன்றிக் காமஞ் சிறத்தலின் ஆற்றாமைவாயிலாகச் சென்று வலித்துப் புக்கு நெருங்கிக் கூடுமிடத்தும்: தலைவன் கூற்று நிகழும்.

இதுவுந் துனி தீர்ப்பதோர் முறைமை கூறிற்று.

உதாரணம்:

"யாரிவ னெங்கூந்தல் கொள்வா னிதுவுமோ
ரூராண்மைக் கொத்த படிறுடைத் தெம்மனை
வாரனீ வந்தாங்கே மாறு." (கலி-89.)

என வலிந்து சென்றதனைத் தலைவி கூறியவழி,

* இவ்வடியில் 'கன்றியாத்' என்னுஞ் சீரில் குற்றியலிகரம் அலகு பெறாது; இதனை இரண்டு நேரசையான் வந்த சீராகக்கொண்டு பின் வருஞ்சீரொடு வெண்டளை பிழையாமற் பொருத்துக.

"ஏஎ, இவை, ஒருயிர்ப் புள்ளி னிருதலை யுள்ளொன்று
போரெதிர்ந் தற்றாப் புலவனீ கூறியென்
னாருயிர் நிற்குமா றியாது" (கலி-89.)

என ஆற்றாமை மிகுதியாற் சென்றமை கூறியவாறு காண்க.

கைவிடின் அச்சமும்—தலைவி தான் உணர்த்தவும் உணராமல் தன்னைக் கைவிட்டுப் பிரியில் தான் அவளை நீங்குதற்கு அஞ்சிய அச்சத்தின்கண்ணும்: தலைவற்குக் கூற்று நிகழும்.

அஃது உணர்ப்புவயின் வாராவூடலாம்.

"எவ்வி யிழந்த வறுமையர் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுறு மௌவ னாறும்
பல்லிருங் கூந்தல் *யாருளர் நமக்கே." (குறுந்-19.)

இதனுள் அவளையின்றி வருந்துகின்ற நெஞ்சே அவள் நமக்கு யாரெனப் புலத்தலன்றி ஆண்டுநின்றும் பெயர்தல் கூறாமையிற் கைவிடின் அச்சமாயிற்று.

தான் அவட் பிழைத்த நிலையின்கண்ணும்—தலைவன் தலைவியைப் பிழைத்த பிரிவின்கண்ணும்.

'பிழைத்த' வென்றார் ஆசிரியர், இயற்கைப்புணர்ச்சி தொடங்கிப் பலகாலும் பிரியேனெனத் தெளிவித்ததனைத் தப்பலின்.

உதாரணம்:

" அன்பு மடனுஞ் சாயலு மியல்பு
மென்பு நெகிழ்த்தன கிளவியும் பிறவு

* 'யாரளோ நமக்கே' என்பதும் பாடம்.

மொன்றுபடு கொள்கையொ டோராங்கு முயங்கி
யின்றே யிவண மாகி நாளைப்
புதலிவ ராடமைத் தும்பி குயின்ற
வகலா வந்துளை கோடை முகத்தலி
னீர்க்கியங் கினநிரைப் பின்றை வார்கோ
லாய்க்குழற் பாணியி னூதவந் திசைக்குந்
தேக்கமழ் சோலைய கடறோங் கருஞ்சுரத்
தியாத்த தூணித் தலைதிறந் தவைபோற்
பூத்த விருப்பைக் குழைபொதி குவியிணர்
கழறுளை முத்திற் செந்நிலத் துதிர
மழைதளி மறந்த *பைங்குடிச் சீறூர்ச்
சேக்குவங் கொல்லோ நெஞ்சே பூப்புனைப்
புயலென வொலிவருந் தாழிருங் கூந்தற்
செறிதொடி முன்கைநங் காதலி
யறிவஞர் நோக்கமும் புலவியு மினைந்தே." (அகம்-224.)

இது நெஞ்சினாற் பிரியக் கருதி வருந்திக் கூறியது.

"வயங்கு மணிபொருத" என்பதும் அது. அகம் (166).

(உடன்சேறல் செய்கையொடு அன்ன பிறவும் மடம்பட வந்த தோழிக்கண்ணும்) அன்னவும் பிற—நீ களவில் தேற்றிய தெளிவகப்படுத்தலுந் தீராத் தேற்றமும் பொய் யாம்; செய்கையொடு உடன்சேறல்—அவை பொய்யாகாத படி செய்கைகளோடே இவளை உடன்கொண்டு செல்க; மடம்பட வந்த தோழிக்கண்ணும்—தன்னறியாமை தோன் றக் கூறிவந்த தோழிக்கண்ணும்: கூற்று நிகழும்.

உடன்கொண்டுபோதன் முறைமையன்றென்று அறி யாமற் கூறலின் 'மடம்பட' வென்றார். செய்கைகளாவன

* 'வைங்குடி' என்பதும் பாடம்.

தலைவன் *'கைபுனை வல்வில்' நாண் ஊர்ந்தவழி இவள் *'மையில் வாண்முகம் பசப்பூர்' தலும் அவன் *'புனை மாண் மரீஇய அம்பு' தெரிந்தவழி இவள் *'இனைநோக்குண்கண்ணீர் நில்லா'மையும் பிறவுமாம்.

"பாஅலஞ்செவி" என்னும் பாலைக்கலியுள்,

"ஓரிரா வைகலுட் டாமரைப் பொய்கையு
ணீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ" (கலி-5.)

எனவும்,

"அந்நாள்கொண் டிறக்குமிவ ளரும்பெற லுயிரே" (கலி-5.)

எனவும், உடன்கொண்டு சென்மினெனத் தோழி கூறியது கேட்ட தலைவன் இவளை உடன்கொண்டு போதல் எல்லாவாற்றானும் முறைமையன்றென்று தோழிக்குக் கூறுவனவும் நெஞ்சிற்குக் கூறுவனவும் பிறவுங் கொள்க.

"வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த வழுகற் சின்னீர்
வளையுடைக் கைய ளெம்மொ டுணீஇய
வருகதில் லம்ம தானே
யளியளோ வளியளென் னெஞ்சமர்ந்தோளே." (குறுந்-56.)

---

* "நீயே, செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழநின்
கைபுனை வல்வின் ஞாணுளர் தீயே
இவட்கே, செய்வுறு மண்டில மையாப் பதுபோன்
மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே;
நீயே, வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் மரீஇய வம்பு தெரிதீயே
இவட்கே, சுனைமா ணீலங் காரெதிர் பவைபோ
லினைநோக் குண்கண் ணீர்நில் லாவே." (கலி-7.)

இது தோழி கேட்பக் கூறியது.

"நாண்கை யுடையை நெஞ்சே கடுந்திறல்
வேனி னீடிய வானுயர் வழிநாள்
வறுமை கூறிய மன்னீர்ச் சிறுகுளந்
தொடுகுழி மருங்கிற் றுவ்வாக் கலங்கல்
கன்றுடை மடப்பிடி கயந்தலை மண்ணிச்
சேறுகொண் டாடிய வேறுபடு வயக்களிறு
செங்கோல் வாலிணர் தயங்கத் தீண்டிச்
சொறிபுற முரிஞ்சிய நெறியயன் மராஅத்
தல்குறு வரிநிழ லசைஇய நம்மொடு
தான்வரு மென்ப தடமென் றோளி
யுறுகணை மழவ ருருள்கீண் டிட்ட
வாறுசென் மாக்கள் சோறுபொதி வெண்குடைக்
கண்மிசைக் *கடுவளி யெடுத்தலிற் றுணைசெத்து
வெருளேறு பயிரு மாங்கட்
கருமுக முசுவின் கானத் தானே." (அகம்-120.)

இது நெஞ்சிற்குக் கூறியது.

வேற்று நாட்டு அகல் வயின் விழுமத்தானும்—அங்ஙனம் வேற்றுநாட்டிற் பிரியுங் காலத்துத் தானுறும் இடும்பையிடத்து: தலைவற்குக் கூற்று நிகழும்.

விழுமமாவன பிரியக் கருதியவன் பள்ளியிடத்துக் கனவிற் கூறுவனவும், போவேமோ தவிர்வேமோ என வருந்திக் கூறுவனவும், இவள் நலன் திரியுமென்றலும், பிரியுங்கொலென்று ஐயுற்ற தலைவியை ஐயந்தீரக் கூறலும், நெஞ்சிற்குச் சொல்லி அழுங்குதலும் பிறவுமாம்.

"நெஞ்சுநடுக்குற" (கலி-24) என்னும் பாலைக்கலியுள் கனவிற் கூறியவாறு காண்க.

---

* 'கடுவெளி' என்பதும் பாடம்.

"உண்ணா மையி னுயங்கிய மருங்கி
னாடாப் படிவத் தான்றோர் போல
வரைசேர் சிறுநெறி நிரையுடன் செல்லுங்
கான யானை கவினழி குன்ற
மிறந்துபொரு ளருதலு மாற்றாய் சிறந்த
சில்லையங் கூந்த னல்லகம் பொருந்தி
யொழிவின் வறுமை யஞ்சுதி யழிதக
வுடைமதி வாழிய நெஞ்சே நிலவென
நெய்கனி நெடுவே லெஃகிலை யிமைக்கு
மழைமருள் பஃறோன் மாவண் சோழர்
கழைமாய் காவிரிக் கடன்மண்டு பெருந்துறை
யிறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கட லோதம் போல
வொன்றிற் கொள்ளாய் சென்றுதரு பொருட்கே"
(அகம்-122.)

இது போவேமோ தவிர்வேமோ என்றது.

"அருவி யார்க்கும் பெருவரை யடுக்கத்
தாளி நன்மான் வேட்டெழு கோளுகிர்ப்
பூம்பொறி யுழுவை தொலைச்சிய வைந்நுதி
யேந்துவெண் கோட்டு வயக்களி றிழுக்குந்
துன்னருங் கான மென்னாய் நீயே
குவளை யுண்க ணிவளீண் டொழிய
*வாள்வினைக் ககறி யாயி னின்றொடு
போயின்று கொல்லோ தானே படப்பைக்
கொடுமு ளீங்கை நெடுமா வந்தளிர்
நீர்மலி கதழ்பெய றலைஇய
வாய்சிறம் புரையுமிவண் மாமைக் கவினே" (நற்றிணை-205.)

இஃது இவள் நலனழியுமென்று செலவழுங்கியது.

---

* 'ஆள்வினைக் ககறி யாயின் மன்றோ' என்பதும் பாடம்.

"தேர்செல வழுங்கத் திருவிற் கோலி
யார்கலி யெழிலி சோர்தொடங் கின்றே
வேந்துவிடு விழுத்தொழி லொழிய
யான்றொடங் கினென *னிற்புறந் தரவே." (ஐங்குறு-428.)

இஃது ஐயந் தீர்த்தது.

"ஈதலுந் துய்த்தலு மில்லோர்க் கில்லெனச்
செய்வினை கைம்மிக வெண்ணுதி யவ்வினைக்
கம்மா வரிவையும் வருமோ
வெம்மை யுய்த்தியோ வுரைத்திசி னெஞ்சே." (குறுந்-63.)

இது தலைவியை வருகின்றாளன்றே எனக் கூறிச் செல வழுங்கியது.

மீட்டு வரவு ஆய்ந்த வகையின்கண்ணும்—பிரிந்த தலைவன் இடைச்சுரத்து உருவு வெளிப்பட்டுழியும் மனம் வேறுபட்டுழியும் மீண்டுவருதலை ஆராய்ந்த கூறுபாட்டின்கண்ணும்:

"உழையணந் துண்ட விறைவாங் குயர்சினைப்
புல்லரை யிரத்திப் †பசுங்காய் பொறப்பக்
கல்சேர் சிறுநெறி மல்கத் தாஅம்
பெருங்கா டிறந்து மெய்தவந் தனவா
லருஞ்செயற் பொருட்பிணி முன்னி யாமே
சேறு மடந்தை யென்றலிற் றான்ற
னெய்த லுண்கண் பைதல் கூரப்
பின்னிருங் கூந்தன் மறையினள் பெரிதழிந்
துதியன் மண்டிய வொலிதலை ஞாட்பி
னிம்மென் பெருங்களத் தியவ ருதூ
மாம்பலங் குழலி னேங்கிக்
கலங்கஞ ருறுவோள் புலம்புகொ ளேக்கே." (நற்றிணை-113.)

---

* 'னிற்புறந் தரலே' என்பதும் பாடம்.

† 'பொதிப்புறப் பசுங்காய்' என்பதும் பாடம்.

இஃது உருவுவெளிப்பட்டுக் கூறியது.

"ஒன்றுதெரிந் துரைத்திசி னெஞ்சே புன்காற்
சிறியிலை வேம்பின் பெரிய கொன்று
கடாஅஞ் செருக்கிய கடுஞ்சின முன்பிற்
களிறுமின் றிறந்த நீர லீரத்துப்
பால்வீ தோன்முலை யகடுநிலஞ் சேர்த்திப்
பசியட முடங்கிய பைங்கட் செந்நாய்
மாயா வேட்டம் போகிய கணவன்
பொய்யா மரபிற் பிணவுநினைந் திரங்கும்
விருந்தின் வெங்காட்டு வருந்துதும் யாமே
யாள்வினைக் ககல்வா மெனினு
மீள்வா மெனினு நீதுணிந் ததுவே." (நற்றிணை-103.)

இது வேறுபட்டு மீட்டுவரவு ஆய்ந்தது.

"ஆள்வழக் கற்ற பாழ்படு நனந்தலை
வெம்முனை யருஞ்சுர நீந்தி நம்மொடு
மறுதரு வதுகொ றானே செறிதொடி
கழிந்துகு நிலைய வாக
வொழிந்தோள் கொண்டவெ னுரங்கெழு நெஞ்சே."
(ஐங்குறு-329.)

இது மீளலுறும் நெஞ்சினை நொந்து தலைவன் உழையர்க்கு உரைத்தது.

"நெடுங்கழை முளிய வேனி னீடிக்
கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்
வெய்ய வாயின முன்னே யினியே
யொண்ணுத லரிவையை யுள்ளுதொறுந்
தண்ணிய வாயின சுரத்திடை யாறே." (ஐங்குறு-322.)

இஃது இடைச்சுரத்துத் தலைவி குணம் நினைந்து இரங்கியது. இன்னும் 'இரட்டுறமொழித'லென்பதனாற்

செய்வினை முற்றி மீண்டுவருங்கால் வருந்தி நெஞ்சொடு கூறுவனவும் பிறவுங் கொள்க. அது,

"என்றுகொ லெய்து ஞான்றே சென்ற
வளமலை நாடன் மடமக
ளிளமுலை யாகத் தின்னுயிர்ப் புணர்ப்பே."

"கொல்வினைப் பொலிந்த கூர்ங்குறும்* பெஃகின்
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
வப்பு நுனை யேய்ப்ப வரும்பிய விருப்பைச்
செப்பட ரன்ன செங்குழை யகந்தோ
றிழுதி னன்ன தீம்புழற் றுயவா
யுழுதுகாண் டுளைய வாகி யார்கழல்
பாலி வானிற் காலொடு பாறித்
துப்பி னன்ன செங்கோட் டியவி
னெய்த்தோர் மீமிசை நிணத்திற் பரிக்கு
மத்த நண்ணிய வங்குடிச் சீறூர்க்
கொடுநுண் ணோக்கின் மகளி ரோச்சிய
தொடிமா ணுலக்கைத் தூண்டுரற் பாணி
நெடுமால் வரைய குடிஞையொ டிரட்டுங்
குன்றுபி னொழியப் †போகியுந் துரந்து
ஞாயிறு படினு மூர்சேய்த் தெனாது
துணைபரி துரக்குந் துஞ்சாச் செலவி
னெம்மினும் விரைந்துவல் லெய்திப் பன்மா
ணோங்கிய நல்லி லொருசிறை நிலைஇப்
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோ ளெய்திக்
கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ

* 'புழுகின்' என்பதும் பாடம்.
† 'போகி யுரந்துரந்து' என்பதும் பாடம்.

நாளொடு மிடைந்த கற்பின் வாணுத
லந்தீங் கிளவிக் குறுமகண்
மென்றோள் பெறநசைஇச் சென்றவெ னெஞ்சே."
(அகம்-9.)

என வரும். இன்னும் வேறுபட வருவனவெல்லாம் இதன்கண் அடக்குக.

அவ்வழிப் பெருகிய சிறப்பின்கண்ணும்—பிரிந்தவிடத்துத் தான்பெற்ற பெருக்கம் எய்திய சிறப்பின்கண்ணும்: மனமகிழ்ந்து கூறும்.

சிறப்பாவன பகைவென்று திறைமுதலியன கோடலும் பொருண்முடித்தலுந் துறைபோகிய ஒத்தும் பிறவுமாம்.

உதாரணம்: "கேள்கே டூன்றவுங் கிளைஞ ராரவும்" (அகம்-93) எனவும், "தாமிது மேவியம்" என்பதனுட் "செய்வினை முடித்த செம்ம லுள்ளமொடு" எனவும், மனம்கிழ்ந்து கூறியவாறு காண்க. "முன்னியது முடித்தனமாயின்" என்னும் (169) நற்றிணையுட் பொதுப்படச் சிறப்புக் கூறியவாறு காண்க.

பேரிசை ஊர்திப் பாகர் பாங்கினும்—அச்சிறப்புக்களை எய்திய தலைவன் பெரிய புகழையுடைத்தாகிய தேரையுடைய பாகரிடத்தும்: கூற்று நிகழ்த்தும்.

அவரது சிறப்பு உணர்த்துதற்குப் பாகரெனப் பன்மையாற் கூறினர்.

"இருந்த வேந்த னருந்தொழின் முடித்தெனப்
புரிந்த காதலொடு பெருந்தேர் யானு
மேறிய தறிந்த தல்லது வந்த

வா றுநனி யறிந்தன்றோ விலனே *தாஅய
முயற்பறழ் ழுகளு முல்லையம் புறவிற்
கவைக்கதிர் வரகின் சீறூ ராங்கண்
மெல்லிய லரிவை யில்வயி னிறீஇ
யிழிமி னென்றநின் மொழிமருண் டிசினே
வான்வழங் கியற்கை வளிபூட் டினையோ
மானுரு வாகநின் மனம்பூட் டினையோ
வுரைமதி வாழியோ வலவ வெனத்தன்
வரைமருண் மார்பி னளிப்பனன் முயங்கி
மனைக்கொண்டு புக்கன னெடுந்தகை
விருந்தோ பெற்றன டிருந்திழை யோளே." (அகம்-384.)

இதனாற் பாகன் சிறப்புக் கூறியவாறு காண்க.

"மறத்தற் கரிதாற் பாக பன்னாள்
வறத்தொடு பொருந்திய வுலகுதொழிற் கொளீஇய
பழமழை பொழிந்த புதுநீ ரவல
நாநவில் பல்கிளை கறங்க நாவுடை
மணியொலி கேளாள் வாணுத லதனா
லேகுமி னென்ற விளையர் வல்லே
யில்புக் கறியுந ராக மெல்லென
மண்ணாக் கூந்தன் மாசறக் கழீஇச்
சில்போது கொண்டு பல்குர லழுத்திய
வந்திலைப் புகுதலின் மெய்வருத் துறாஅ
வவிழ்பூ முடியினள் கவைஇய
மடமா வரிவை மகிழ்ந்தயர் நிலையே." (நற்றிணை-42.)

இது தானுற்ற இன்பத்தினைப் பாகற்குக் கூறியது.

"ஊர்க பாக வொருவினை கழீஇய
செல்கதேரே நல்வலம் பெறுநன்"

எனவும் வரும்.

---

* 'தாவும்' என்பதும் பாடம்.

“ தயங்கிய களிற்றின்மேற் றகைகாண விடுவதோ
*　*　*　*　*
தாள்வளம் படவென்ற தகைநன்மா மேல்கொண்டு”
(கலி-31.)

என வருவன தலைவிகூற்றாதலின் தலைவன் மீண்டுவருங் காற் பாகற்கே கூறுவனென்றார்.

(காமக்கிழத்தி மனையோள் என்று இவர் ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்) காமக்கிழத்தி மனையோளென்றிவர் சொல்லிய ஏமுறு கிளவி எதிரும்—இற்பரத்தை தலைவி யென்று கூறிய இருவர் சொல்லிய வருத்தமுற்ற கிளவியின் எதிரிடத்தும்: *கூற்றுநிகழ்த்தும்.

அவை ‘அருஞ்சுரத்து வருத்தம் உற்றீரே’ எனவும் ‘எம்மை மறந்தீரே’ எனவுங் கூறுவனவும் பிறவுமாம்.

“ எரிகவர்ந் துண்ட வென்றாழ் நீளிடை
யரிய வாயினு மெளிய வன்றே
யவவுறு நெஞ்சங் கவவுநனி விரும்பிக்
கடுமான் றிண்டேர் கடைஇ
நெடுமா னேக்கினின் னுள்ளியாம் வரவே.” (ஐங்குறு-360.)

இது வருத்தம் உற்றீரே என்றதற்குக் கூறியது.

“ தொடங்குவினை தவிரா வசைவி லோன்றாட்
கிடந்துயிர் மறுகுவ தாயினு மிடம்படின்
வீழ்களிறு மிசையாப் புலியினுஞ் சிறந்த
†தாவி லுள்ளந் தலைத்தலைச் சிறப்பச்
செய்வினைக் ககன்ற காலை யெஃகுற்

* ‘கூற்றுநிகழும்’ என்பதும் பாடம்.
† ‘தாழ்விலுள்ளம்’ என்பதும் பாடம்.

திருவே ருகிய தெரிதகு வனப்பின்
மாவி னறுவடி போலக் காண்டொறு
மேவ றண்டா மகிழ் நோக்குண்க
ணினையாது கழிந்த வைக லெனையதூஉம்
வாழலென் யானெனத் தேற்றிப் பன்மாண்
டாழக் கூறிய தகைசா னன்மொழி
மறந்தனிர் போறி ரெம்மெனச் சிறந்தநி
னெயிறுசெழு-துவர்வா யின்னகை யழுங்க
வினவ லானுப் புனையிழை கேளினி
வெம்மை தண்டா வெரியுகு பறந்தலைக்
கொம்மை வாடிய வியவுள் யானை
நீர்மருங் கறியாது தேர்மருங் கோடி
யறுநீ ரம்பியி னெறிமுத லுணங்கு
முள்ளுநர்ப் பனிக்கு மூக்கருங் கடத்திடை
யெள்ள ளேனுப் பொருடரல் விருப்பொடு
நாணுத் தளையாக வைகி மாண்வினைக்
குடம்பாண் டொழிந்தமை யல்லதை
மடங்கெழு நெஞ்ச நின்னுழை யதுவே." (அகம்-29.)

இது மறந்தீர்போலும் என்றதற்குக் கூறியது.

"உள்ளினெ னல்லெலனோ யானே *பள்ளி
நினைத்தனெ னல்லெனோ பெரிதே நினைத்து
மருண்டனெ னல்லெனோ வுலகத்துப் பண்பே
†நீடிய மாஅத்த கோடுதோய் மலிர்நிறை
யிறைத்துணை சென்றற் றாஅங்
கனைப்பெருங் காம மீண்டுகடைக் கொளலே." (குறுந்-99.)

* 'உள்ளி' என்பதும் பாடம்.

† 'நீடிய மரத்த கோடு தொய்மலர், நிறையிறைத் துணைச்சென் றற்றாஅங்கு' என்பதும் பாடம்.

'பிறவு'மென்றதனான் இத்தன்மையனவுங் கொள்க. இவை இருவர்க்கும் பொது. இவற்றைக் காமக்கிழத்தி விரைந்துகூறுமென்றற்கு அவளை முற்கூறினர்.

சென்றதேஎத்து உழப்பு நனிவிளக்கி இன்றிச் சென்ற தம் நிலை கிளப்பினும்—அங்ஙனங்கூறிய இருவர்க்குந் தான் சென்ற தேயத்தில் வருத்தத்தை மிகவும் விளங்கக் கூறி நணவினாற் சேறலின்றிக் கனவினாற் கடத்திடைச் சென்ற தம்முடைய நிலையைத் தலைவன் கூறினும்:

உதாரணம் :

"ஒழித்துப் பழித்த நெஞ்சமொடு வழிப்படர்ந்
துள்ளியு மறிதிரோ வெம்மென யாழநின்
முள்ளெயிற் றுத் துவர்வாய் முறுவ லழுங்க
நோய்முந் துறுத்து நொதுமலர் மொழியநின்
ஞய்நல மறப்பெனோ மற்றே சேணிகந்
தொலிகழை மிசைந்த வொலிசொரி யொண்பொறி
படுஞமல் புதையப் பொத்தி நெடுநிலை
முளிபுன மீமிசை வளிசுழற் றுறூஉக்
காடுகவர் பெருந்தீ யோடுவயி னோடலி
*னதற்கெடுத் தலறிய சரத்தொ டொராங்கு
மதர்புலி வெரீஇய மையல் வேழத்
தினந்தலை மயங்கிய நனந்தலைப் பெருங்காட்டு
ஞான்றுதோன் றவிர்சுடர் மான்றுறப் பட்டெனக்
கட்பட ரோதி நிற்படர்ந் துள்ளி
யருஞ்செல லார்வற் †றுரிடை னெரேரெனப்
பரந்துபடு பாய னவ்வி பட்டென
விலங்குவளை செறியா விருத்த நோக்கமொடு

* 'அதர்கெடுத்து' என்பதும் பாடம்.
† 'ஆற்றிடை' என்பதும் பாடம்.

நிலங்கிளை நினைவினை நின்ற நிற்கண்
டின்னகை யினைய மாகவு மெம்வயி
னூடல் யாங்குவந் தன்றென யாழநின்
கோடேந்து புருவமொடு குவவுநுத னீவி
நறுங்கதுப் புள்ளிய நன்ன ரமயத்து
வறுங்கை காட்டிய வாயல் கனவி
னேற்றேக் கற்ற வலமரல்
போற்றா யாகலிற் புலத்தியா லெம்மே." (அகம்-39.)

இதனுள் வறுங்கை காட்டிய வாயல் கனவினென நனவின்றிச் சென்றவற்றைத் தலைவன் கூறியவாறு காண்க. இதுவும் இருவர்க்குமாம்.

அருந்தொழின் முடித்த செம்மற் காலை விருந்தொடு நல்லவை வேண்டற்கண்ணும்—செயற்கு அரிதாகியவினையை முடித்த தலைமையை எய்திய காலத்தே தலைவி விருந்தெதிர் கோடலோடே நீராடிக் கோலஞ்செய்தல் முதலியவற்றைக் காண்டல் வேண்டிய இடத்தும்: தலைவன் கூற்றுநிகழ்த்தும்.

உதாரணம் :

" முரம்புதலை மணந்த நிரம்பா வியவி
னோங்கித் தோன்று முமண்பொலி சிறுகுடிக்
களரிப் புளியிற் காய்பசி பெயர்ப்ப
வுச்சிக் கொண்ட வோங்குகுடை வம்பலீர்
முற்றையு முடையமோ மற்றே பிற்றை
வீழ்மா மணிய புனைநெடுங் கூந்த
னீர்வார் புள்ளி யாக நனைப்ப
விருந்தயர் விருப்பினள் வருந்துந்
திருந்திழை யரிவைத் தேமொழி நிலையே." (நற்றிணை-374.)

என இதனுள் விருந்தயர் விருப்பினளென விருந்தொடு நல்லவை வேட்டுக் கூறியவாறு காண்க.

மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும் கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்—வினைமுற்றிப் புகுந்த தலைமகனை எதிரேற்றுக் கொள்ளும் மங்கலமரபினர் மாலையேந்திய பெண்டிரும் புதல்வருங் கேளிரும் ஆகலான் அக்கேளிர் செய்யும் எதிர்கோட லொழுக்கத்துக் கண்ணும்: தலைமகன் உள்ளமகிழ்ந் துரைக்கும்.

உம்மை விரிக்க. பெண்டிரும் மக்களுமாகிய கேளி ரென்றுமாம்.

உதாரணம்:

" திருந்துங் காட்சிப் பெரும்பெயர்க் கற்பி
ஞனுடை யரிவை மாணகர் நெடுந்தே
ரெய்த வந்தன்றாற் பாக நல்வர
விளைய ரிசைத்தவிற் கிளையோ ரெல்லாஞ்
சேயுயர் நெடுங்கடைத் துவன்றின ரெதிர்மார்
தாயரும் புதல்வருந் தம்முன் பறியாக்
கழிபே ருவகை வழிவழி சிறப்ப
வறம்புரி யொழுக்கங் காண்சம்
வருந்தின காண்களின் றிருந்துநடை மாவே."

என வரும்.

ஏனை வாயில் எதிரொடு தொகைஇ—சிறந்த மொழியை ஒழிந்துநின்ற வாயில்கட்கு எதிரே கூறுங் கூற்றோடே முற் கூறியவற்றைத் தொகுத்து:

உதாரணம்:

" நகுகம் வாராய் பாண பகுவா
யரிபெய் கிண்கிணி யார்ப்பத் தெருவிற்
றேர்நடை பயிற்றுந் தேமொழிப் புதல்வன்

பூநாறு செவ்வாய் சிதைத்த சாந்தமொடு
காமர் நெஞ்சந் துரப்ப யாந்தன்
முயங்கல் விருப்பொடு குறுகினே மாகப்
பிறைவனப் புற்ற *மாசி திருநுத
ஞறிரும் கதுப்பினெங் காதலி வேறுணர்ந்து
வெரூஉ மான்பிணையி னொரீஇ
யாரை யோவென் றிகந்துநின் றதுவே.'' (நற்றிணை-250.)

இஃது ஏனைவாயிலாகிய பாணற்கு உரைத்தது.

பண்ணமை பகுதி முப்பதிற்றொருமூன்றும்—ஓதப்பட்ட இவையே இடமாக நல்லறிவுடையோர் ஆண்டாண்டு வேறு வேறாகச் செய்யுள் செய்துகோடற்கு அமைந்துநின்ற கூறு பாட்டை உடையவாகிய முப்பத்துமூன்று துறையும்:

எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன—களவுபோல இழிதொழிலின்றி ஆராய்தற்கரிய சிறப்போடுகூடிய தலைவன்கண்ண என்றவாறு.

சிறப்பாவன, வந்தகுற்றம் வழிகெட ஒழுகலும், இல்லறம் நிகழ்த்தலும், பிரிவாற்றுதலும், பிறவுமாம். இன்னவிடத்தும் இன்னவிடத்தும் நிகழுங் கூற்றுக்களை வாயிலெதிர் கூறுங் கூற்றோடே தொகுத்துப் பண்ணுதற்கமைந்த பகுதியுடையவாகிய முப்பத்துமூன்று துறையுந் தலைவன்கண் நிகழ்வன என்றுமுடிக்க. எடுத்துரைப்பினுந் தந்நிலைகிளப்பினும் அக்கூற்றுக்களையும் வாயிலெதிரொடு தொகைஇ யென முடிக்க. இவற்றுட் பண்ணிக்கொள்ளும் பகுதியாவன, யாம் மறைந்துசென்று இவனைக் கண்ணைப்புதைத்தால் தலைநின்றொழுகும் பரத்தையர்பெயர் கூறுவனென்று உட்கொண்டு காமக்கிழத்தியாதல் தலைவியாதல் சென்று கண்

* 'மாசறு திருநுதல்' என்பதும் பாடம்.

புதைத்துழித் தலைவன் கூறுவனவும், பள்ளியிடத்து வந்திருந்து கூறுவனவும், இவள் ஊடற்குக் காரணம் என்னென்று தோழி வினவுழிக் கூறுவனவும், பிரிந்தகாலத்து இவளை மறந்தவாறென்னென்ற தோழிக்குக் கூறுவனவும், பிறவுமாம்.

உதாரணம் :

"சிலம்புகமழ் காந்த ணறுங்குலை யன்ன
நலம்பெறு கையினெங் கண்புதைத் தோயே
பாய லின்றுணை யாகிய பணைத்தோட்
டோகை மாட்சிய மடந்தை
நீயல துளரோவென் னெஞ்சமர்ந் தோரே.' (ஐங்குறு-293.)

"தாழிரு டூமிய மின்னித் தண்ணென
*வீழுறை யினிய சிதறி யூழியிற்
கடிப்பிடு முரசின் முழங்கி யிடித்திடித்துப்
பெய்தினி வாழியோ †பெருவான் யாமே
செய்வினை முடித்த செம்ம லுள்ளமோ
டிவளின் மேவல மாகிக் குவளைக்
குறுந்தா ணெண்மலர் நாறு
நறுமென் கூந்தன் மெல்லணை யேமே." (குறுந்-270.)

"இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்." (குறள்-132-5.)

"தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
ரிந்நீர ராகுதி ரென்று." (குறள்-132-9.)

"எரிகவர்ந் துண்ட வென்றூழ் நீளிடைச்
சிறிதுகண் படுப்பினுங் காண்குவென் மன்ற

---

* 'வீழ்முறை' என்பதும் பாடம்.
† 'பெருமவான்' என்பதும் பாடம்.

நள்ளென் கங்கு னளிமனை நெடுநகர்
வேங்கை வென்ற சுணங்கிற்
றேம்பாய் கூந்தன் மாஅ யோளே." (ஐங்குறு-324.)

எனவும் வரும். இன்னும் அதனானே ஊடலைவிரும்பிக் கூறுவனவுங் கொள்க.

"ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று," (குறள்-131-7.)

"ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ விரா." (குறள்-133-9.)

என வரும். இன்னுங் கற்பியற்கண் தலைவன்கூற்றாய் வேறுபடவருஞ் சான்றோர்செய்யுட்களெல்லாம் இதனான் அமைத்துக்கொள்க. (ரு)

147. அவனறி வாற்ற வறியு மாகலி
னேற்றற் கண்ணு நிறுத்தற் கண்ணு
முரிமை கொடுத்த கிழவோன் பாங்கிற்
பெருமையிற் றிரியா வன்பின் கண்ணுங்
கிழவனை மகடூஉப் புலம்புபெரி தாகலி
னலமரல் பெருகிய காமத்து மிகுதியு
மின்பமு மிடும்பையு மாகிய விடத்துங்
கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி
நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ
நளியி னீக்கிய விளிவரு நிலையும்
புகன்ற வுள்ளமொடு புதுவோர் சாயற்
ககன்ற கிழவனைப் புலம்புநனி காட்டி
யியன்ற நெஞ்சந் தலைப்பெயத் தருக்கி

யெதிர்பெய்து மறுத்த வீரத்து மருங்கினுந்
தங்கிய வொழுக்கத்துக் கிழவனை வணங்கி
யெங்கையர்க் குரையென விரத்தற் கண்ணுஞ்
செல்லாக் காலைச் செல்கென விடுத்தலுங்
காமக் கிழத்தி தன்மகத் தழீஇ
யேமுறு விளையாட் டிறுதிக் கண்ணுஞ்
சிறந்த செய்கை யவ்வழித் தோன்றி
யறம்புரி யுள்ளமொடு தன்வர வறியாமைப்
புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானுந்
தந்தைய ரொப்பர் மக்க ளென்பதனு
லந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலுங்
கொடியோர் கொடுமை சுடுமென வொடியாது
நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப்
பகுதியி னீங்கிய தகுதிக் கண்ணுங்
கொடுமை யொழுக்கங் கோடல் வேண்டி
யடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்
காத லெங்கையர் காணி னன்றென
மாதர் சான்ற வகையின் கண்ணுந்
தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை
மாயப் பரத்தை யுள்ளிய வழியுந்
தன்வயிற் சிறைப்பினு மவன்வயிற் பிரிப்பினு
மின்னுத் தொல்சூ ளெடுத்தற் கண்ணுங்
காமக் கிழத்தியர் நலம்பா ராட்டிய
தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணுங்
கொடுமை யொழுக்கந் தோழிக் குரியவை

வடுவறு சிறப்பிற் கற்பிற் றிரியாமைக்
காய்தலு முவத்தலும் பிரித்தலும் பெட்டலு
மாவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்
வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇக்
கிழவோள் செப்பல் கிழவ தென்ப.

இது முறையானே தலைவி கூற்று நிகழும் இடங் கூறுகின்றது.

இதன்பொருள்: (அவன் அறிவு ஆற்ற அறியும் ஆகலின் ஏற்றற்கண்ணும் நிறுத்தற்கண்ணும் உரிமைகொடுத்த கிழவோன் பாங்கிற் பெருமையில் திரியா அன்பின்கண்ணும்) அவன் அறிவு ஆற்ற அறியும் ஆகலின்—வேதத்தையுந் தருமநூலையுந் தலைவன் அறிந்த அறிவைத் தலைவி மிக அறியுமாதலின்; ஏற்றற் கண்ணும்—அந்தணர் முதலிய மூவருந் தத்தமக்குரிய வேள்விசெய்யுங்கால் தம்மனைவியர் பலருள்ளுந் தமக்கு ஒத்தாளை வேள்விக்கண் உரிமைவகையான் ஏனைமகளிரின் உயர்த்தல் செய்யுமிடத்தும்; நிறுத்தற் கண்ணும்—தத்தங் குலத்திற்சேற்ப நிறுத்துதலைச் செய்யுமிடத்தும்; உரிமை கொடுத்த கிழவோன் பாங்கில்—அவர் குலத்திற்கேற்ற உரிமைகளைக் கொடுத்த தலைவனிடத்து; பெருமையில் திரியா அன்பின்கண்ணும்—தத்தங் குலத்திற் கேற்ற பெருமையினின்றும் நீங்காத அன்புசெய்து ஒழுகுதற்கண்ணும்: அறியுமாகலின் அன்புசெய்து ஒழுகுமெனக் கூட்டுக.

என்றது, அந்தணர்க்கு நால்வரும் அரசர்க்கு மூவரும் வணிகர்க்கு இருவருந் தலைவியராகியவழித் தங்குலத்திற் கொண்டவரே வேள்விக்கு உரியர் ஏனையோர் வேள்விக்கு

உரியரல்லரென்பதூஉம் அவர்க்குத் தங்குலங்கட்கு ஏற்ற வகையின் உரிமைகொடுப்பரென்பதூஉம் அவர்களும் இது கருமமேசெய்தானென்று அன்பில் திரியாரென்பதூஉங் கூறியவாறு.

உதாரணம்:

"* நின்ற சொல்லர் நீடுதோன் றினிய
ரென்று மென்றோள் பிரிபறி யலரே
தாமரைத் தண்டா தூதி மீமிசைச்
சாந்திற் †கொண்ட தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி
நறுநுதல் பசத்த லஞ்சிச்
சிறுமை யுறுபவோ செய்பறி யலரே." (நற்றிணை-1.)

இதனுள் தாமரைத்தாதையும் ஊதிச் சந்தனத்தாதையும் ஊதி வைத்த தேன்போலப் புரைய என்றதனான் ஏற்றற்கண் தலைவிகூறினாள். பிரிவறியலரென்றதும் அன்னதோர் குணக்குறையிலரென்றதாம். பிரிவுணர்ந்து புலந்துரைப்பின் நாணழிவாம்.

"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே." (குறுந்-3.)

இது நிறுத்தற்கட் கூறியது.

---

* 'நின்ற சொல்லால்' என்பதும் பாடம்.

† 'தொடுத்த' என்பதும் பாடம்.

கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின் அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்—அறமும் பொருளுஞ் செய்வதனாற் புறத்துறைதலில் தலைவனைத் தலைவி நீங்குங்காலம் பெரிதாகலின் அதற்குச் சுழற்சிமிக்க வேட்கைமிகுதி நிகழ்ந்தவிடத்தும்:

உதாரணம்:

"காமந் தாங்குமதி யென்போர் தாமஃ
*தறியலர் கொல்லோ வனைமதுகையர்கொல்
யாமெங் காதலர்க் காணே மாயிற்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல வில்லா குதுமே." (குறுந்-290.)

இது தெருட்டுந்தோழிக்குத் தலைவி காமத்துமிகுதிக்கட் கூறியது.

இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்தும்—அங்ஙனம் அலமரல் பெருகியவழித் தலைவனை எதிர்ப்பட்ட ஞான்று இன்பமுந் தனிப்பட்டஞான்று துன்பமும் உளவாகிய இடத்தும்:

உதாரணம்:

"வாரன் மென்றினைப் புலவுக்குரன் மாந்திச்
சாரல் வரைய கிளையுடன் குழீஇ
வளியெறி வயிரிற் கிளிவிளி பயிற்று
நளியிருஞ் சிலம்பி னன்மலை நாடன்
புணரிற் புணருமா ரெழிலே பிரியின்
மணிமிடை பொன்னின் மாமை சாயவெ

* 'அறியுநர் கொல்லோ' என்பதும் பாடம்.

னணிநலஞ் சிதைக்குமார் பசலை யதனு
லசுணங் கொல்பவர் கைபோ னன்று
மின்பமுந் துன்பமு முடைத்தே
தண்கமழ் நறுந்தார் விறலோன் மார்பே." (நற்றிணை-304.)

"இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு." (குறள்-116-2.)

என வரும்.

கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ நளியினீக்கிய இளிவரு நிலையும்—யானைக்கன்று போலும் புதல்வன் பிறத்தலான் உளதாகிய விருப்பத்தையுடைய நெய்யணிக்கு விரும்பிய தலைவனை நெஞ்சைவருத்தித் தன்னைச் செறிதலினின்று நீக்கிய இளிவந்த நிலைமைக்கண்ணும்.

தன்னை அவமதித்தானென்றது இளிவருநிலை யென்றார்.

"கரும்புநடு பாத்தியிற் கலித்த வாம்பல்
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வனை யீன்றவெம் *முயங்க
லதுவே தெய்யநின் மார்புசிதைப் பதுவே." (ஐங்குறு-65.)

இது புதல்வற் பயந்தகாலத்துப் பிரிவுபற்றிக் கூறியது.

புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு அகன்ற கிழவனை—புதல்வனை விளையாட்டை விரும்பின உள்ளத்தோடே புதுவது புணர்ந்த பரத்தையர் தன்மாட்டு மனநெகிழ்ந்த மென்மையின்பொருட்டு அவர்க்கு அருள்செய்யப் பிரிந்து வந்தோனை; புலம்பு நனி காட்டி—தனது தனிமை மிகவும்

* 'மேனி' என்பதும் 'முயங்கன்மே தெய்ய' என்பதும் பாடம்.

அறிவித்து; இயன்ற நெஞ்சந் தலைப்பெயர்த்து அருக்கி— அவன்மேற் சென்ற நெஞ்சினைச் செல்லாமல் அவனிடத்தினின்றும் மீட்டு அருகப்பண்ணி; எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கினும்—பிறருள் ஒருத்தியைக் காணாளாயினுங் கண்டாள்போலத் தன்முன்னர்ப் பெய்துகொண்டு வாயின் மறுத்ததனால் தோற்றிய நயனுடைமைக்கண்ணும்:

எனவே, மறுப்பாள்போல் நயந்தாளாயிற்று. கிழவனை மறுத்தவெனக்கூட்டுக.

உதாரணம்:

"கடல்கண் டன்ன கண்ணகன் பரப்பி
னிலம்பக வீழ்ந்த வேர்முதிர் கிழங்கிற்
கழைகண் டன்ன தூம்புடைத் திரள்காற்
களிற்றுச் செவியன்ன பாசடை மருங்கிற்
கழுநிவந் தன்ன கொழுமுகை யிடையிடை
முறுவன் முகத்திற் பன்மலர் தயங்கப்
பூத்த பொய்கைப் புள்ளிமிழ் பழனத்து
வேப்புநனை யன்ன நெடுங்க ணீர்ஞெண்
டிரைதேர் வெண்குரு கஞ்சி *யயல
வொலித்த பகன்றை யிருஞ்சேற் றள்ளற்
றிதலையின் வரிப்ப வோடி விரைபுத
னீர்மலி மண்ணளைச் செறியு மூர
மனைநடு வயலை †மரனிவர் கொழுங்கொடி
யரிமல ராம்பலொ டார்தழை தைஇ

---

* 'அயலது' என்பதும் பாடம்.

† 'மாணிவர் கொழுங்கொடி' என்னும் முன் அச்சுப்பிரதியிலுள்ள பாடம பொருட்பேறின் றாகலின், 'மரனிவர் கொழுங்கொடி' எனப் பாடமோதுதலே பொருத்தமாம்; 'மரத்தின்மீது ஏறுகின்ற கொழுவியகொடி' எனப் பொருள் உரைக்க.

விழவாடு மகளிரொடு தழூவணிப் பொலிந்து
மலரே ருண்கண் மாணிழை முன்கைக்
குறுந்தொடி தொடக்கிய நெடுந்தொடர் விடுத்த
துடன்றனள் போலுநின் காதலி யெம்போற்
புல்லுளைக் குடுமிப் புதல்வற் பயந்து
நெல்லுடை நெடுநகர் நின்னின் றுறையா
ளென்ன கடத்தளோ மற்றே தன்முகத்
தெழுதெழில் சிதைய வழுதன ளேங்கி
யடித்தென வுருத்த தித்திப் பல்லூழ்
நொடித்தெனச் சிவந்த மெல்விரற் றிருகுபு
கூர்நுதி மழுங்கிய வெயிற்ற
ளூர்முழுது நுவலுநிற் காணிய சென்மே." (அகம்-176.)

என வரும்.

எதிர்பெய்து மறுத்த ஈரமெனவே எதிர்பெய்யாது மறுத்த ஈரமுங் கொள்க.

"*கூர்முனை முள்ளிக் குவிகுலைக் கழன்ற
மீன்முள் ளன்ன வெண்கான் மாமலர்
பொய்தன் மகளிர் விழவணிக் கூட்டு
மவ்வய னண்ணிய வளங்கே ழூரனைப்
புலத்தல் கூடுமோ தோழி யல்சற்
பெருங்கதவு பொருத யானை மருப்பி
னிரும்புசெய் தொடியி னேர வாகி
மாக்க ணடைய மார்பகம் பொருந்தி
முயங்கல் †விடாஅ லிவையென மயங்கி
யானே மென்னவு மொல்லார் தாமற்
றிவைபா ராட்டிய பருவமு முளவே
யினியே, புதல்வற் றடுத்த பாலொடு தடைஇத்

---

* 'கூர்முண் முள்ளி' என்பதும் பாடம்.

† 'வீடால்' என்பதும் பாடம்.

திதலை யணிந்த தேங்கொண் மென்முலை
நறுஞ்சாந்து *புலர்ந்த சேழ்கிள ரகலம்
வீங்க முயங்கல் யாம்வேண் டினமே
தீம்பால் படுத ருமஞ் சினரே
யாயிடைக், †கவவுக்கை ஞெகிழ்ந்தமை போற்றி மதவு
செவிலி கையென் புதல்வனை நோக்கி [நடைச்
நல்லோர்க் கொத்தனிர் நீயி ரிஃதோ
செல்வற் கொத்தனெம் யாமென மெல்லவென்
மகன்வயிற் பெயர்தந் தேனே யதுகண்
டியாமுங் காதலெ மவற்கெனச் சாஅய்ச்
சிறுபுறங் கவையின னாக ‡வுறுபெயற்
றண்டுளிக் கேற்ற பலவுழு செஞ்செய்
§மண்போன் ஞெகிழ்ந்தவா கலுழ்ந்தெ
னெஞ்சறை போகிய வறிவி னேற்கே." (அகம்-26.)

இதனுள் ஒருத்திமை வரைந்துகூறுது நல்லோரைப் பொதுவாகக் கூறியவாறும் வேண்டினமெனப் புலம்புகாட்டிக் கலுழ்ந்தெதன ஈரங்கூறியவாறுங் காண்க.

தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி எங்கையர்க்கு உரையென இரத்தற்கண்ணும்—பரத்தையர்மாட்டுத் தங்கிய செவ்வியை மறையாத ஒழுக்கத்தோடே வந்த தலைவனை நீகூறுகின்ற பணிந்தமொழிகளை எங்கையர்க்கு வணங்கிக் கூறெனெ இரந்துகோடற்கண்ணும்:

உதாரணம்:

"அகன்றுறை யணிபெற" என்னும் மருதக்கலியுள்,

---

* 'அணிந்த' என்பதும் பாடம்.

† 'கவவுக்கை ஞெகிழ்ந்தமை நோக்க மதவுநடைச்
செவிலி கையெனப் புதல்வனை நோக்கி' என்பதும் பாடம்.

‡ 'இருபெயல்' என்பதும் பாடம். § 'மண்போ னெகிழ்ந்தவற் கலுழ்ந்தே-நெஞ்சறை போகிய வறிவி னேற்கே' என்பதும் பாடம்.

"நோதக்கா யெனவின்னை நொந்தீவா ரில்வழித்
தீதிலேன் யானெனத் தேற்றிய வருதிமன்
ஞெகிழ்தொடி யிளையவ ரிடைமுலைத் தாதுசோர்ந்
திதழ்வனப் பிழந்தநின் கண்ணிவந் துரையாக்கால்"
(கலி-73.)

என்பன கூறி,

"மண்டுநீ ராரா *மலிகடல் போலுநின்
றண்டாப் பரத்தை தலைக்கொள்ள நாளும்
புலத்தகைப் பெண்டிரைத் தேற்றிமற் றியாமேற்
ருலாமோ நின்பொய் மருண்டு" (கலி-73.)

எனவும் எங்கையரைத் தேற்றெனக் கூறியவாறு காண்க.

செல்லாக் காலைச் செல்கென விடுத்தலும்—தலைவன் செல்லானென்பது இடமுங் காலமும்பற்றி அறிந்தகாலத்து ஊட லுள்ளத்தாற் கூடப்பெறுதாள் செல்கெனக் கூறி விடுத்து ஆற்றுதற்கண்ணும்:

உதாரணம்:

"புள்ளுமி ழுகல்வயல்" என்னும் மருதக்கலியுள்,

"பூங்கட் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்கா யிகவாய் நெடுங்கடை நில்லாதி
யாங்கே யவர்வயிற் சென்றி யணிசிதைப்பா
னீங்கெம் புதல்வனைத் தந்து." (கலி-79.)

எனவும்,

"சேற்றுநிலை முனைஇய செங்கட் காரா
னூர்மடி கங்குலி னோன்றளை பரிந்து
கூர்முள் வேலி கோட்டி னீக்கி
நீர்முது பழனத்து மீனுட னிரிய

* 'மறிகடல்' என்பதும் பாடம்.

வந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை
வண்டூது பனிமல ராரு மூர
யாரை யோவிற் புலக்கேம் வாருற்
றுறையிறந் தொளிருந் தாழிருங் கூந்தற்
பிறழு'மொருத்தியை யெம்மனைத் தந்து
வதுவை யயர்ந்தனை யென்ப வஃதியாங்
கூறேம் வாழிய ரெந்தை செறுநர்
களிறுடை யருஞ்சமந் ததைய நூறு
மொளிறுவாட் டானைக் கொற்கைச் செழியன்
பிண்ட நெல்லி னள்ளூ ரன்னவெம்
மொண்டொடி ஞெகிழினு ஞெகிழ்க
சென்றீ பெருமவிற் றகைக்குநர் யாரே." (அகம்-46.)

எனவும் வரும்.

காமக்கிழத்தி தன்மகத் தழீஇ ஏமுறு விளையாட்டு இறுதிக்கண்ணும்—மனையறத்திற்கு உரியளாக வரைந்து கொண்ட காமக்கிழத்தி, தலைவி புதல்வன் மனைப்புறத்து விளையாடுகின்றவனைத் தழுவிக்கொண்டு தான் ஏமுறுதற்குக் காரணமான விளையாட்டின் முடிவின்கண்ணும்:

அவள் எம்மைப் பாதுகாப்பீரோவென வினயவழி *அவனும் அதற்கு உடன்பட்டான்போலக் கூறுவன உள வாதலின் 'ஏமுறுவிளையாட்டு' என்றார். 'இறுதி' யென்றார் விளையாட்டு முடியுந்துணையுந் தான் மறைய நின்று பின்னர்க் கூறுதலின்.

உதாரணம்:

"நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதி னல்லி யயலிதழ் புரைய

* 'அவனும்' என்பது ஈண்டுப் புதல்வன் மேற்று.

மாசி லங்கை *மணிமருள் செவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத்
தேர்வழங்கு தெருவிற் றமியோற் கண்டே
கூரெயிற் றரிவை குறுகினள் யாவருங்
காணுந ரின்மையிற் †சேர்த்தனள் பேணிப்
பொலங்கலஞ் சுமந்த பூண்டாங் கிளமுலை
வருக மாளவென் னுயிரெனப் பெரிதுவந்து
கொண்டனள் நின்றோட் கண்டுநிலைஇச் செல்லேன்
மாசில் குறுமக ளெவன்பே துற்றனை
நீயுந் தாயை யிவற்கென யான்றற்
கரைய வந்து ‡விரைஇனள் கவைஇக்
களவுடன் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா
நாணி நின்றோ ணிலைகண் டியானும்
பேணினே னல்லெனோ மகிழ்ந வானத்
தணங்கருங் கடவுளன் னோளின்
மகன்றா யாதல் §புரைவதா லெனவே." (அகம்-16.)

என வரும்.

(சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி அறம்புரி உள்ளமொடு தன்வரவு அறியாமைப் புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டு இடத்தானும்) சிறந்த செய்கை அவ்வழித்தோன்றி— காமக்கிழத்தியது ஏமுறும் விளையாட்டுப்போலாது தலைவி தன் புதல்வனைத் தழீஇ விளையாட்டையுடைய இல்லிடத்தே தலைவன் தோன்றி; அறம்புரி உள்ளமொடு தன்வரவு அறியாமைப் புறஞ்செய்து—அவ்விளையாட்டு மகிழ்ச்சியாகிய

---

* 'மணிமருளவ்வாய்' என்பதும் பாடம்.
† 'செத்தனள் பேணி' என்பதும் பாடம்.
‡ 'விரைவனன்' என்பதும் பாடம்.
§ 'புரைவதாங் கெனவே' என்பதும் பாடம்.

மனையறத்தினைக் காணவிரும்பிய நெஞ்சோடே தன்வரவி னைத் தலைவி அறியாமல் அவள்பின்னே நிற்றலைச்செய்து; பெயர்தல் வேண்டு இடத்தானும்—தலைவியது துனியைப் போக்குதல் வேண்டிய இடத்தும்:

'தன்வரவறியாமை' என்றதற்குத் தன்னைக் கண்டால் தலைவியுழை நின்றார் தமக்குச்செய்யும் ஆசாரங்களையும் அவர் செய்யாமற் கைகவித்துத் தன்வரவு அறியாமை நிற்ப னென்று கொள்க.

உதாரணம்:

“மையற விளங்கிய மணிமரு ளவ்வாய்தன்
மெய்பெறா மழலையின் விளங்குபூ ணனைத்தரப்
பொலம்பிறை யுட்டாழ்ந்த புனைவினை யுருள்கல
னலம்பெறு கமழ்சென்னி நகையொடு துயல்வர
வுருவெஞ்சா திடைகாட்டு முடைகழ லந்துகி
லரிபொலி கிண்கிணி யார்ப்போவா தடிதட்பப்
பாலோ டலர்ந்த முலைமறந்து முற்றத்துக்
கால்வரேர் கையி னியக்கி நடையயிற்றா
வாலமர் செல்வ னணிசால் பெருவிறல்
போல வருமெ னுயிர்;
பெரும, விருந்தொடு கைதுவா வெம்மையு முள்ளாய்
பெருந்தெருவிற் கொண்டாடி ஞாயர் பயிற்றத்
திருந்துபு நீகற்ற சொற்கள்யாங் கேட்ப
மருந்தோவா நெஞ்சிற் கமிழ்தயின் றற்றாற்
பெருந்தகாய் கூறு சில;
எல்லிழாய்,
சேய்நின்று நாங்கொணர்ந்த பாணன் சிதைந்தாங்கே

வாயோடி யேனுதிப் *பாடிய மென்றாக
நோய்நாந் தணிக்கு மருந்தெனப் பாராட்ட
வோவா தடுத்தடுத் தத்தாவென் பான்மாண
வேய்மென்றோள் வேய்த்திறஞ் சேர்த்தலு மற்றிவன்
†வாயுள்ளிற் போகா னரோ ;
உள்ளி யுழையே யொருங்கு படைவிடக்
கள்வர் படர்தந் ததுபோலத் தாமெம்மை
யெள்ளுமார் வந்தாரே யீங்கு ;
ஏதப்பா ‡டுள்ளிப் புரிசை வியலுள்ளோர்
கள்வரைக் காணாது கண்டேமென் பார்போலச்
சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவனின்
ஞாணை கடக்கிற்பார் யார்;
அதிர்வில் படிறெருக்கி வந்தென் மகன்மேல்
முதிர்பூண் முலைபொருத வேதிலாண் முச்சி
யுதிர்துக ளுக்கநின் னாடை யொலிப்ப
வெதிர்வளி நின்றாய்நீ செல்,
இனி யெல்லா யாம்,
யாதொன்று மெங்கண் மறுத்தர வில்லாயின்
மேதக்க வெந்தை பெயரனை யாங்கொள்வேந்
தாவா விருப்பொடு கன்றியாத் துழிச் செல்லு
மாபோற் படர்தக நாம்; (கலி-81.)

என வரும்.

தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால் அந்தமில் சிறப்பின் மகப் பழித்து நெருங்கலும்—அங்ஙனம் விளையாடுகின்றகாலத்து மக்கள் தந்தையரை ஒப்பரென்னும் வேதவிதி பற்றி முடிவில்லாத சிறப்பினையுடைய மகனைப் பழித்து வெகுளுதற்கண்ணும் :

---

* 'பாடிய மென்றற்றா' என்பதும் பாடம்.
† 'வாயுள்ளிப் போகானரோ' என்பதும் பாடம்.
‡ 'எண்ணி' என்பதும் பாடம்.

20

மகனுக்கும் இதுபடுமென்று கருதிக் கூறலின் தலைவனைப் பழித்தென்றது 'மகப்பழித்'தென்றார்.

"மைபடுசென்னி" என்னும் மருதக்கலியுள்,

"வனப்பெலா நுந்தையை யொப்பினு நுந்தை
நிலைப்பாலு ளொத்த குறியென்வாய்க் கேட்டொத்தி
கன்றிய தெவ்வர்க் கடந்து களங்கொள்ளும்
வென்றிமாட் டொத்தி பெருமமற் றெவ்வாதி
யொன்றினேம் யாமென் றுணர்ந்தாரை நுந்தைபோன்
மென்றோ ளணிகிழ விடல்." (கலி-86.)

என அவனைக் கொண்டு விளையாடியவழி அவன் தலைவன் மேல் வீழ்தலின்,

"தந்தை வியன்மார்பிற் பாய்ந்தா னறனில்லா
வன்பிலி பெற்ற மகன்" (கலி-86.)

எனத் தன் திறத்து அன்பிலனென நெருங்கிக் கூறியவாறு காண்க.

(கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப் பகுதியின் நீங்கிய தகுதிக்கண்ணும்) கொடியோர் நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇ—கொடியோரென்றது பாணர் கூத்தர் விறலியர் அந்தணர் முதலியோரை; கொடியோராய்த் தலைவன் புகழைக் கூறுதற்கு விரும்பினோர் பரத்தையர்க்கு வாயிலாய் வந்துகூறிய சொல்லோடே தானும் அவரிடத்தே சேர்ந்து; பகுதியி னீங்கிய கொடுமை—காவற்பாங்கிற் பக்கமும் ஆங்கோர் பக்கமுமாகிய பகுதி காத்தலினின்று நீங்கிய

பரத்தையரைக் கூடியகொடுமை; சுடுமென ஒடியாது தகுதிக் கண்ணும்—நெஞ்சைச் சுடுமென்று கூறி அவன் தவற்றைக் கூறுதலைத் தவிராமற் கூறுதற்குத் தக்க தகுதியிடத்தும்;

இன், நீக்கப் பொருட்டு; பகுதி-கூறுபாடு, ஆகுபெயர்; பகுதிகளைக் காத்தற்குப் பிரிவேனெனக் கூறிப் பிரிந்து பாணர் முதலியோர் புதிதிற் கூட்டிய பரத்தையரிடத்தே ஒழுகிய மெய்வேறுபாட்டோடு வந்தானைக் கண்டு அப் பகுதிகளைப் பரத்தையராகக் கூறுவாளாயிற்று. அது, "இணைபட நிவந்த" என்னும் மருதக்கலியுள்,

"கண்ணிநீ கடிகொண்டார்க் கனைதொறும் யாமழப்
பண்ணினாற் களிப்பிக்கும் பாணன்காட் டென்றானோ
பேணானென் றுடன்றவ ருகிர்செய்த வடுவினான்
மேனாணின் றோள்சேர்ந்தார் நகைசேர்ந்த விதழினை ;
நாடிநின் றூதாடித் துறைச்செல்லா ளூரவ
ராடைகொண் டொலிக்குநின் புலைத்திகாட் டென்றாளோ
கூடியார்ப் புனலாடப் புணையாய மார்பினி
லூடியா ரெறிதர வொளிவிட்ட வரக்கினை ;
வெறிதுநின் *புகழினை வேண்டாரி னெடுத்தேத்து
மறிவுடை யந்தண னவளைக்காட் டென்றானோ
களிபட்டார் கமழ்கோதை கயம்பட்ட வுருவின்மேற்
குறிபெற்றார் குரற்கூந்தற் கோடுளர்ந்த துகளினை."

(கலி-72.)

என்பவற்றாற் பாணர் முதலியோர் வாயிலாயவாறு காண்க.

"ஏந்தெழின் மார்ப வெதிரல்ல நின்வாய்ச்சொற்
பாய்ந்தாய்ந்த தானைப் பரிந்தானா மைந்தினை
சாந்தழி வேரை சுவற்றாழ்ந்த கண்ணியை யாங்குச்

* 'புகழ்களை' என்பதும் பாடம்.

சென்றீங்கு வந்தீத்தந் தாய்; கேளினி யேந்தி,
எதிரிதழ் நீலம் பிணைந்தன்ன கண்ணாய்
குதிரை வழங்கிவரு வல்; அறிந்தேன் குதிரைதான்;
பால்பிரியா வைங்கூந்தற் பன்மயிர்க் கொய்சுவன்
மேல்விரித் தியாத்த சிகழிகைச் செவ்வுளை
நீல மணிக்கடிகை வல்லிகை யாப்பின்கீழ்
ஞாலியன் மென்காதிற் புல்லிகைச் சாமரை
மத்திகைக் கண்ணுறை யாகக் கவின்பெற்ற
வுத்தி யொருகாழ்நூ லுத்திரியத் திண்பிடி
நேர்மணி நேர்முக்காழ் பல்பல கண்டிகைத்
தார்மணி பூண்ட தமனிய மேகலை
நூபுரப் புட்டி லடியோ டமைத்தியாத்த
வார்பொலங் கிண்கிணி யார்ப்பப் பயிற்றிநீ
காதலித் தூர்ந்தநின் காமக் குதிரையை
யாய்சுதை மாடத் தணிநிலா முற்றத்து
ளாதிக் கொளீஇய வசையினை யாகுவை
வாதுவன் வாழிய நீ;
சேகா,
கதிர்விரி வைகலிற் கைவாரூஉக் கொண்ட
மதுரைப் பெருமுற்றம் போலநின் மெய்க்கட்
குதிரையோ வீறி யது;
கூருகிர் மாண்ட குளம்பி *னதுவன்றே
கோரமே வாழிகுதி ரை;
வெதிருழக்கு நாழியாற் சேதிகைக் குத்திக்
குதிரை யுடலணி போலநின் மெய்க்கட்
குதிரையோ கவ்வி யது;
சீத்தை,
பயமின்றி யீங்குக் கடித்தது நன்றே
வியமமே வாழிகுதி ரை;

* 'அதுநன்றே' என்பதும் பாடம்.

மிகநன்,
றினியறிந்தே னின்றநீ யூர்ந்த குதிரை
பெருமணம் பண்ணி யறத்தினிற் கொண்ட
பருமக் குதிரையோ வன்று;
பெருமவின்,
னேதில் பெரும்பாணன் றூதாட வாங்கேயோர்
வாதத்தான் வந்த வளிக்குதிரை யாதி
யுருவழிக்கு மக்குதிரை யூரனீ யூரிற்
பரத்தை பரியாக வாதுவனாய் மற்றச்சாத்
திரிகுதிரை யேறிய செல்." (கலி-96.)

இதனுட் பாணன் றூதாட வாதத்தால் வந்த குதிரை யென்பதனால் அவன் கூட்டிய புதியபரத்தையர் என்பதூஉம் அவன் பகுதியினின்று நீங்கியவாறுங் குதிரையோ வீறிய தென்பது முதலியவற்றாற் கொடுமை நெஞ்சைச் சுடுகின்ற வாறும் அதனை நீக்கிய பரத்தையரைக் குதிரையாகக் கூறித் தான் அதற்குத் தக்குநின்றவாறுங் காண்க.

கடவுட்பாட்டு ஆங்கோர் பக்கமும் யானைப்பாட்டுக் காவற் பாங்கின் பக்கமுமாம்.

(கொடுமை ஒழுக்கங் கோடல் வேண்டி அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக் காதல் எங்கையர் காணின் நன்றென மாதர் சான்ற வகையின் கண்ணும்) கொடுமை ஒழுக்கங் கோடல்வேண்டி—அங்ஙனம் பகுதியினீங்கிப் பரத்தையர்மாட்டு ஒழுகிக் கொடுமை செய்த ஒழுக்கத்தைத் தலைவி பொறுத்தலை வேண்டி; அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கி—தன் அடிமேல் வீழ்ந்து வணங்கிய தலைவனை அதனின்மீது துனிமிக்குக் கழறி; காதல் எங்கையர் காணின் நன்றென—நின்மாட்டுக் காதலையுடைய எங்கையர்

காணின் இவை நன்றெனக் கொள்வரெனக் கூறி; மாதர் சான்ற வகையின் கண்ணும்—காதல் அமைந்து மாறிய வேறுபாட்டின் கண்ணும் :

பொருதாரைக் கொள்ளா ரென்பவாகலிற் கோடல் பொறுத்தலாயிற்று. 'காதலெங்கையர் மாதர் சான்ற' என் பனவற்றால் துனிகூறினார். எனவே, யாங்கண்டதனாற் பய னின்றென்றார்.

உதாரணம் :

"நில்லாங்கு நில்" என்னும் பூழ்ப்பாட்டினுள்,

"மெய்யைப் பொய்யென்று மயங்கிய கையொன்
றறிகல்லாய் போறி காணீ;
நல்லாய்,
பொய்யெல்லா மேற்றித் தவறு தலைப்பெய்து
கையொடு கண்டாய் பிழைத்தே னருளினி;
அருளுகம் யாம்யாரே மெல்லா தெருள
வளித்துநீ பண்ணிய பூழெல்லா மின்னும்
விளித்துநின் பாணனோ டாடி யளித்தி
விடலைநீ நீத்தலி னோய்பெரி தேய்க்கு
நடலைப்பட் டெல்லாநின் பூழ்" (கலி-95.)

இதனுள் 'அருளினி' யென அடிமேல் வீழ்ந்தவாறும் 'அருளுகம்யாம்யார்' எனக் காதல் அமைந்தவாறும் 'விளித் தளித்தி'யென இப்பணிவை நின்பெண்டிர் கொள்வரெனவுங் கூறியவாறுங் காண்க.

"நினக்கே யன்றஃ தெமக்குமா ரினிதே
நின்மார்பு நயந்த நன்னுத லரிவை

வேண்டிய குறிப்பினை யாகி
மீண்டுநீ யருளா தாண்டுறை தல்லே." (ஐங்குறு-46.)

இதுவும் அது.

தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை மாயப் பரத்தை உள்ளியவழியும்—பரத்தையர் கருதி அணிந்த நன்றாகிய அணிகளையுடைய புதல்வனை மாயப் பரத்தைமையைக் குறித்த விடத்தும் :

அவருள் தனியாலே வருந்திய பரத்தையர் தம்வருத் தத்தினை உணர்த்தியும் தலைநின்றொழுகும் பரத்தையர் தஞ் சிறப்பு உணர்த்தியும் அணிவரென்றற்குக் 'கண்ணிய' என் றார். பரத்தையர்சேரி சென்று அணியணிந்ததற்கு வெகுண்டு கூறலிற் பொய்யாகிய பரத்தை யென்றார். எனவே தலைவன்பரத்தைமை கருதினாளாயிற்று.

உதாரணம் :

"உறுவளி தூக்கு முயர்சினை மாவி
னறுவடி யாரிற் றவைபோ லழியக்
கரந்தியான் காக்கவுங் கைநில்லா வீங்கிச்
சுரந்தவென் மென்முலைப் பால்பழு தாகநீ
நல்வாயிற் போத்தந்த பொழுதினா னெல்லா
கடவுட் கடிநகர் தோறு மிவனை
வலங்கொளீஇ வாவெனச் சென்றாய் விலங்கினை
யீரமிலாத விவன்றந்தை பெண்டிருள்
யாரிற் றவிர்ந்தனை கூறு ;
நீருள்,
அடைமறை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட
குடைநிழற் றோன்றுநின் செம்மலைக் காணூஉ

விவன்மன்ற யாேனவ வுள்ளங்கொண் டுள்ளா
மகனல்லான் பெற்ற மகனென் றகனகர்
வாயில் வரையிறந்து போத்தந்து தாயர்
தெருவிற் றவிர்ப்பத் தவிர்ந்தனன் மற்றவர்
தத்தங் கலங்களுட் கையுறை யென்றிவற்
கொத்தவை யாராய்ந் தணிந்தார் பிறன்பெண்டி
ரீத்தவை கொள்வானு மிஃதொத்தன் சீத்தை
செறுத்தக்கான் மன்ற பெரிது;
சிறுபட்டி,
ஏதிலார் கையெம்மை யெள்ளுபு நீதொட்ட
மோதிரம் யாவோயாங் காண்கு;
அவற்றுள்,
நறுவிதழ் கண்டன்ன செவ்விரற் கேற்பச்
சுறுவே றெழுதிய மோதிரந் தொட்டாள்
குறியறிந்தேன் காமன் கொடியெழுதி யென்றுஞ்
செறியாப் பரத்தை யிவன்றந்தை மார்பிற்
பொறியொற்றிக் கொண்டாள்வ லென்பது தன்னை
யறீஇய செய்த வினை; அன்னையோ விஃதொன்று,
முந்தைய கண்டு மெழுகல்லா தென்முன்னர்
வெந்தபுண் வேலெறிந் தற்று விஃதொன்று
தந்தை யிறைத்தொடீஇ மற்று;
இஃதிவன், றன்கைக்கட் டந்தா ரியார்;
எல்லாவி திஃதொன்று,
என்னொத்துக் காண்க பிறரு மிவற்கென் னுந்
தன்னலம் பாடுவி தந்தாளா வின்னை
யிதுதொடு கென்றவர் யார்;
அஞ்சாதி,
நீயுந் தவறிலை நின்கை யிதுதந்த
பூவெழி லுண்க ணவளுந் தவறிலள்
வேனிற் புனலன்ன நுந்தையை நோவார்யார்

மேனின்று மெள்ளி யிதுவிவன் கைத்தந்தா
டான்யாரோ வென்று வினவிய நோய்ப்பாலேன்
யானே தவறுடை யேன்." (கலி-84.)

என வரும்.

தன்வயிற் சிறைப்பினும்—தலைவனில் தான் புதல்வற்குச் சிறந்தாளாகி அத்தலைவன்மாட்டும் அவன் காதலித்த பரத்தையர் மாட்டுஞ் செல்லாமற் புதல்வனைத் தன்பாற் சிறைசெய்தற்கண்ணும் :

உதாரணம்:

"புள்ளிமி ழகல்வயல்" என்னும் மருதக்கலியுள்,

"அணியொடு வந்தீங்கெம் புதல்வனைக் கொள்ளாதி
மணிபுரை செவ்வாய்நின் மார்பகல நனைப்பவாற்
றேய்ந்தாரை யறிகுவென் யானெனக் கமழுநின்
சாந்தினாற் குறிகொண்டாள் சாய்குவ ளல்லளோ;
புல்லலெம் புதல்வனைப் புகலக னின்மார்பிற்
பல்காழ்முத் தணியாரம் பற்றினன் பரிவானென்
மாணிழை மடநல்லார் முயக்கத்தை நின்மார்பிற்
பூணினாற் குறிகொண்டாள் புலக்குவ ளல்லளோ ;
கண்டேஎம் புதல்வனைக் கொள்ளாதி நின்சென்னி
வண்டிமிர் வகையிணர் வாங்கினன் பரிவானு
னண்ணியார்க் காட்டுவ திதுவெனக் கமழுநின்
கண்ணியாற் குறிகொண்டாள் காய்குவ ளல்லளோ;
எனவாங்கு,
பூங்கட் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்கா யிகவாய் நெடுங்கடை நில்லாதி
யாங்கே யவர்வயிற் சென்றி யணிசிதைப்பா
னீங்கெம் புதல்வனைத் தந்து." (கலி-79.)

இது தலைவனிடத்தினின்றும் புதல்வனைச் சிறைத்தது.

"ஞாலம் வறந்தீர" என்னும் மருதக்கலியுள்,

"அவட்கினி தாகி விடுத்தனன் போகித்
தலைக்கொண்டு நம்மொடு காயுமற் றீதோர்
புலத்தகைப் புத்தேளில் புக்கா னலைக்கொரு
கோறா வினக்கவள் யாராகு மெல்லா
வருந்தியா நோய்கூர நுந்தையை யென்றும்
பருந்தெறிந் தற்றாகக் கொள்ளுங்கொண் டாங்கே
தொடியு முகிரும் படையாக நுந்தை
*கடிகமழ் மார்பிற் சிறுகண்ணு முட்காள்
வடுவுங் குறித்தாங்கே செய்யும் விடுவினி
யன்ன பிறவும் பெருமா னவள்வயிற்
றுன்னுத லோம்பித் துறவதன் முன்னினி
யையமில் லாதவ ரில்லொழிய வெம்போலக்
கையா றுடையவ ரில்லல்லாற் செல்ல
லமைந்த தினிநின் றொழில்." (கலி-82.)

இது காதற்பரத்தையர்பாற் புதல்வன் செல்லாமற் சிறைத்தது.

அவன்வயிற் பிரிப்பினும்—தன்னொடு மைந்தனிடை உறவுநீக்கி அவனைத் தலைவனொடு சார்த்துதற்கண்ணும்:

என்றது, எமக்கிவன் யாரென்று அயன்மை கூறுதலாம்.

உதாரணம்:

"மைபடுசென்னி" என்னும் மருதக்கலியுள்,

* 'கடியுடை' என்பது கலித்தொகை அச்சுப்பிரதியில் உள்ள பாடம்.

"மறைவின்று,
தாமன்ற வந்தீத் தனர்;
ஆயினுமிழாய், தாவாத வெற்குத் தவறுண்டோ காவாதீங்
கீத்தை யிவனையாங் கோடற்குச் சீத்தையாங்
கன்றி யதனைக் கடியவுங் கைந்நீவிக்
குன்ற *விறுவரைமேற் கோண்மா விவர்ந்தாங்குத்
தந்தை வியன்மார்பிற் பாய்ந்தா னறனில்லா
வன்பிலி பெற்ற மகன்." (கலி-86.)

என்புழி "அறனில்லா வன்பிலி பெற்றமகன்" எனவும், "நின்மகன் ருயாதல் புரைவதா லெனவே" என்புழி "நின் மகன்" எனவும் பிரித்தவாறு காண்க.

இன்னாத் தொல் சூள் எடுத்தற்கண்ணும்—இன்னாங் குப் பயக்குஞ் சூளுறவினைத் தலைவன் சூளுறுவலெனக் கூறு மிடத்தும் :

தலைவன் 'வந்தகுற்றம் வழிகெட' ஒழுகிக், களவிற் சூளுறவான்வந்த ஏதம் நீக்கி, இக்காலத்துக் கடவுளரையும் புதல்வனையுஞ் சூளுறுதலின் 'இன்னாதசூள்' என்றார். அது களவுபோலச் சூளுறுதலின் 'தொல்சூள்' என்றார்.

உதாரணம்:

"ஒரூஉக்கொடி யியனல்லார்" என்னும் மருதக்கலியுள்,

"வேற்றுமை யென்கண்ணோ வோராதி தீதின்மை
தேற்றக்கண் டீயாய் தெளிக்கு;
இனித் தேற்றேம்யாம்,

---

* 'இறுவரைக் கோண்மா' என்பது கலித்தொகை அச்சுப் பிரதியில் உள்ள பாடம்.

தேர்மயங்கி வந்த தெரிகோதை யந்நல்லார்
தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி
நீயுறும் பொய்ச்சூ ளணங்காகின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு." (கலி-88.)

எனத் தலைவி எம்மேலே இப்பொய்ச்சூளால் வருங்கேடு வருமென மறுத்தவாறு காண்க.

காமக் கிழத்தியர் நலம் பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின்கண்ணும்—நலம்பாராட்டிய காமக்கிழத்தியர் தலைவி தன்னிற் சிறந்தாராகத் தன்னுன் நலம்பாராட்டப் பட்ட இற்பரத்தையர்மேல் தீமையுறுவரென முடித்துக் கூறும் பொருளின்கண்ணும்:

உதாரணம்:

" மடவ ளம்மநீ யினிக்கொண் டோளே
தன்னொடு நிகரா வென்னொடு நிகரிப்
பெருநலந் தருக்கு மென்ப விரிமலர்த்
தாதுண் வண்டினும் *பலர்நீ
யோதி யொண்ணுதல் பசப்பித் தோரே." (ஐங்குறு-67.)

இதனுள் இப்பொழுது கிடையாதது கிடைத்ததாக வரைந்துகொண்ட பரத்தை தன்னொடு இளமைச்செவ்வி ஒவ்வா என்னையுந் தன்னோடொப்பித்துத் தன் பெரியநலத்தாலே மாறுபடுமென்பவென அவள் நலத்தைப் பாராட்டிய வாறும், நீ பசப்பித்தோர் வண்டு தாது உண்டமலரினும் பலரெனத் தீமையின் முடித்தவாறுங் காண்க.

---

* 'பலரே' என்பதும் பாடம்.

"அணிற்பல்லன்ன" என்னும் *பாட்டுக் கற்பாகலின் இதன்பாற்படும்.

(கொடுமையொழுக்கம் தோழிக்கு உரியவை வடுவறு சிறப்பிற் கற்பில் திரியாமைக் காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும் ஆவயின் வரூஉம் பல் வேறு நிலையினும்) கொடுமை ஒழுக்கம் தோழிக்கு உரியவை—பரத்தையிற்பிரிவும் ஏனைப்பிரிவுகளும் ஆகித் தலைவன்கண் நிகழுங் கொடுமையொழுக்கத்தில் தோழி கூறுதற்கு உரியவென மேற் கூறுகின்றவற்றைக் கேட்டவழி; வடுவறு சிறப்பிற் கற்பில் திரியாமை—எஞ்ஞான்றுங் குற்றமின்றி வருகின்ற பிறப்புமுதலிய சிறப்பிடத்துங் கற்பிடத்துந் திரிவுபடாதபடி; காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும் நிலையினும்—தோழி கூற்றினை வெகுளலும் மகிழ்தலும் அவளைப் †பிரித்தலும் பின்னும் அவள்கூற்றினைக் கேட்டற்கு விரும்புதலுமாகிய நிலையின்கண்ணும்; ஆவயின் வரூஉம் நிலையினும்—அத்தோழியிடத்துத் தலைவனைக் காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலுமாய் வரும் நிலையின்கண்ணும்; பல் வேறு நிலையினும்—இக்கூறியவாறன்றிப் பிறவாற்றாய்ப் பலவேறுபட்டு வரும் நிலையின்கண்ணும்:

அவள்வயினென்னாது 'ஆவயி'னென்றார், தோழியும் பொருளென்பதுபற்றி.

---

* 'அகப்பாட்டு' என்பது முன் அச்சுப்பிரதியில் உள்ளபாடம். இப்பாட்டுக் குறுந்தொகை (49). இவ்வாறு தொடங்கும் பாட்டு அகநானூறு கையெழுத்துப் பிரதிகளில் இல்லை. தொல்காப்பியக் கையெழுத்துப் பிரதியில் 'என்னும் பாட்டு' என்றே உள்ளது.

† 'பிரிதலும்' என்பதும் பாடம்.

"இதுமற் றெவனோ தோழி துனியிடை
யின்ன ரென்னு மின்னாக் கிளவி
யிருமருப் பெருமை யீன்றணிக் காரா
னுழவன் யாத்த குழவியி னகலாது
பாற்பெய் பைம்பயி ராரு மூரன்
றிருமனைப் பல்கடம் பூண்ட
பெருமுது பெண்டி ராகிய நமக்கே." (குறுந்-181.)

இது தோழி இன்னாக்கிளவி கூறியதனை இதுபொழுது கூறிப் பயந்ததென்னெனக் காய்ந்து கூறினாள்.

"பார்பக வீழ்ந்த வேருடை விழுக்கோட்
டுடும்படைந் தன்ன நெடும்பொரி விளவி
னூட்டொழி பந்திற் கோட்டுமூக் கிறுபு
கம்பலத் தன்ன பைம்பயிர்த் தாஅம்
வெள்ளில் வல்சி வேற்றுநாட் டாரிடைச்
சேறு நாமெனச் சொல்லச் சேயிழை
நன்றெனப் புரிந்தோய் நன்றுசெய் தனையே
செயல்படு மனத்தர் செய்பொருட்
ககல்வ ராடவ ரதுவதன் பண்பே." (நற்றிணை-24.)

இது செய்தனையெனத் தலைவி உவந்து கூறியது.

"வண்டுபடத் ததைந்த கொடியிண ரிடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானங் காரெனக் கூறினும்
யானோ தேறேனவர் பொய்வழங் கலரே." (குறுந்-21.)

இது கானங் காரெனக் கூறவும் வாராரென்றவழி அது கூறினும் யானோ தேறே னெனப் பிரிநிலை ஓகாரத்தாற் பிரிந்தது.

"யாங்கறிந் தனர்கொ றோழி பாம்பி
னுரிவிமிர்ந் தன்ன வுருப்பவி ரமையத்
திரைவேட் டெழுந்த சேவ *லுள்ளிப்
பொறிமயி ரெருத்திற் குறுநடைப் பேடை
பொரிகாற் கள்ளி விரிகாய்ங் கவட்டுத்
தயங்க விருந்து புலம்பக் கூஉ
மருஞ்சுர வைப்பிற் கானம்
பிரிந்துசே ணுறைதல் வல்லு வோரே." (குறுந்-154.)

இது வல்லுவோர் என்னும் பெயர்கூறித் தோழி கொடுமை கூறியவழி அவனையே பிரிதல்வன்மை யாங்கறிந்தனரெனத் தலைவி வினவுதலின் அது பின்னுங் கேட்டற்கு அவாவியதாம்.

இனித் தோழியிடத்துத் தலைவனைக் காய்தல் முதலியன வருமாறு:

"நன்னலந் †தொலைய நலமிகச் சாஅ
யின்னுயிர் கழியினு முரைய லவர்நமக்
கன்னையு மத்தனு மல்லரோ ‡தோழி
புலவிய தெவனோ வன்பிலங் கடையே." (குறுந்-93.)

இது காய்தல்.

"வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
பதைப்பத் ததைந்த நெய்தல் கழிய
வோதமொடு பெயருந் துறைவற்குப்
பைஞ்சாய்ப் பாவை யீன்றனென் யானே."(ஐங்குறு-155.)

---

* 'உன்னி' என்பதும் பாடம்.

† 'தொலைந்து' என்பதும் பாடம்.

‡ 'தோழி' என்பது குறுந்தொகை அச்சுப்பிரதியில் இல்லை.

இது பல்லாற்றானும் வாயில் நேராத தலைவியை மகப் பேற்றிற்கு உரியகாலங்கழிய ஒழுகாநின்றாயென நெருங்கிய தோழிக்கு யான் களவின்கண் மகப்பெற்றேனெனக் காய்ந்து கூறியது.

"கொடிப்பூ வேழந் தீண்டி யயல
வடுக்கொண் மாஅத்து வண்டளிர் நுடங்கு
மணித்துறை யூரன் மார்பே
பனித்துயில் செய்யு மின்சா யற்றே." (ஐங்குறு-14.)

இஃது உவத்தல்.

"புதன்மிசை நுடங்கும் வேழ வெண்பூ
விசும்பாடு குருகிற் றோன்று மூரன்
புதுவோர் மேவல னாகலின்
வறிதா கின்றென் மடங்கெழு நெஞ்சே." (ஐங்குறு-17.)

இது பிரித்தல்.

"நாமவர் திருந்தெயி றுண்ணவு மவர்நம்
மேந்துமுலை யாகத்துச் சார்ந்துகண் படுப்பவுங்
கண்சுடு பரத்தையின் வந்தோர்க் கண்டு
மூடுதல் பெருந்திரு வுறுகெனப்
பெறலரு மையின் முயங்கி யோனே."

இது பெட்டது.

"நீரார்செறுவின்" (கலி-75) என்னும் மருதக் கலியும் அது.

இனிப் 'பல்வேறுநிலை'யாவன, தோழி பிரிவுணர்த்திய வழிச் செலவழுங்கக் கூறுவனவற்றின் வேறுபாடுகளும், பிரிந்துழி வழியருமை பிறர்கூறக்கேட்டுக் கூறுவனவுந், தலைவ

னது செலவுக்குறிப்பு அறிந்து தானே கூறுவனவுந், தூது விடக் கருதிக் கூறுவனவும், நெஞ்சினையும் பாணனையும் தூதுவிட்டுக் கூறுவனவும், வழியிடத்துப் புட்களை நேர்ந்து கூறுவனவும், பிரிவிடையாற்றாளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவலெனக் கூறுவனவும், அவன் வரவு தோழி கூறியவழி விரும்பிக் கூறுவனவுங், கூறிய பருவத்தின் வாராது பின்னர் வந்தவனொடு கூடியிருந்து முன்னர்த் தன்னை வருத்திய குழலை மாலையிற் கேட்டுத் தோழிக்குக் கூறுதலுந், தலைவன் தவறிலனெனக் கூறுவனவும், புதல் வனை நீங்காதொழுகிய தலைவன் நீங்கியவழிக் கூறுவனவுங், காமஞ்சாலா விளமையோளைக் களவின்கண் மணந்தமை அறிந்தேனெனக் கூறுவனவும், இவற்றின் வேறுபட வருவன பிறவுமாம்.

"அருளு மன்பு நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோ ருரவோ ராயி
னுரவோ ருரவோ ராக
மடவ மாக மடந்தை நாமே." (குறுந்-20.)

இது செலவழுங்கக் கூறியது.

"வெந்திறற் கடுவளி பொங்கர்ப் போந்தென
நெற்றுவிளை யுழிஞ்சில் வற்ற லார்க்கு
மலையுடை யருஞ்சுர மென்பநம்
முலையிடை முனிநர் சென்ற வாறே." (குறுந்-39.)

"எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
வுலைக்கல் லன்ன பாறை யேறிக்
கொடுவி லெயினர் பகழி மாய்க்குங்
கவலைத் தென்பவவர் தேர்சென்ற வாறே
யதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கலுழுமிவ் வழுங்க லூரே" (குறுந்-12.)

இவை வழியருமை கேட்டவழிக் கூறியன.

"நுண்ணெழின் மாமைச் சுணங்கணி யாகந்தங்
கண்ணொடு தொடுத்தென நோக்கியு மமையாரென்
ஞெண்ணுத னீவுவர் காதலர் மற்றவ
ரெண்ணுவ தெவன்கொ லறியே னென்னும்." (கலி-4.)

இது செலவுக் குறிப்பறிந்து தோழிக்குக் கூறியது கொண்டுகூறிற்று.

"பலர்புகழ் சிறப்பினுங் குரிசி *லுள்ளிச்
செலவுநீ நயந்தனை யாயின் மன்ற
வின்ன வரும்பட ரெம்வயிற் செய்த
பொய்வ லாளர் போலக்
கைவல் பாணவெம் மறவா தீமே." (ஐங்குறு-473.)

இது தூதுவிடக் கருதிக் கூறியது.

"சூழ்கம் வம்மோ தோழிபாழ் பட்டுப்
பைதற வெந்த பாலை வெங்காட்
டருஞ்சுர மிறந்தோர் தேஎத்துச்
சென்ற நெஞ்ச † மீட்டிய பொருளே." (ஐங்குறு-317.)

இது நெஞ்சினைத் தூதுவிட்டுக் கூறியது.

"மையறு சுடர்நுதல் விளங்கக் கறுத்தோர்
செய்யரண் சிதைத்த செருமிகு தானையொடு
கதழ்பரி நெடுந்தே ரதர்படக் கடைஇச்
சென்றவர்த் தருகுவ லென்னு
நன்றா லம்ம பாணன தறிவே." (ஐங்குறு-474.)

---

* 'உள்ள' என்பதும் பாடம்.
† 'நீடிய' 'நீட்டிய' என்பதும் பாடம்.

இது பாணனைத் தூதுவிட்டுக் கூறியது.

"புல்வீ ழிற்றிக் கல்லிவர் வெள்வேர்
வரையிழி யருவியிற் றோன்று நாடன்
றீதி னெஞ்சத்துக் கிளவி நம்வயின்
வந்தன்று வாழி தோழி நாமு
நெய்பெய் தீயி னெதிர்கொண்டு
தாமணந் தனையமென விடுகந் தூதே." (குறுந்-106.)

இது தூதுகண்டு கூறியது.

"ஆம்பற் பூவின் சாம்ப லன்ன
கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றி லுணங்கன் மாந்தி மன்றத்
தெருவி னுண்டாது குடைவன வாடி
யில்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பு
மின்றுகொ றோழியவர் சென்ற நாட்டே." (குறுந்-46.)

இது சென்ற நாட்டு இவை இன்றுகொலென்றது.

"வாரா ராயினும் வரினு மவர்நமக்
கியாரா கியரோ தோழிநீர் சிலைப்பைம்
போதுளரிப் புதல்பிலி யொண்பொறிக் கருவிளை
நுண்மு ளீங்கைச் செவ்வரும் பூழ்த்த
வண்ணத் துய்ம்மல ருதிரத் தண்ணென்
றின்னா தெறிவரும் வாடையொ
டென்னா யினள்கொ லென்னு தோரே." (குறுந்-110.)

இது பருவங்கண்டு அழிந்து கூறியது.

"உதுக்கா ணதுவே யிதுவென மொழிகோ
னோர்சினை யிருந்த விருந்தோட்டுப் புள்ளினந்
தாம்புணர்ந் தமையிற் பிரிந்தோ ருள்ளா

தீங்குர லகவக் கேட்டு நீங்கிய
வேதி லாள ரிவண்வரிற் போதிற்
பொம்ம லோதியும் புனைய
லெம்முந் தொடாஅ லென்குவ மன்னே." (குறுந்-191.)

இது காய்ந்து கூறியது.

"முதைப்புனங் கொன்ற வார்கலி யுழவர்
விதைக்குறு வட்டி போதொடு பொதுளப்
பொழுதோ தான்வந் தன்றே மெழுகான்
றாதுலைப் பெய்த பகுவாய்த் தெண்மணி
மரம்பயி லிறும்பி னார்ப்பச் சுரனிழிபு
மாலை நனிவிருந் தயர்மார்
தேர்வரு மென்முன் னுரைவா ராதே." (குறுந்-155.)

இது பொழுதொடு தான் வந்தன்றெனப் பொழுது கண்டு மகிழ்ந்து கூறினாள்.

"அம்ம வாழி தோழி சிறியிலை
நெல்லி நீடிய கல்காய் கடத்திடைப்
பேதை நெஞ்சம் *பின்படச் சென்றோர்
கல்லினும் வலியர் மன்ற
பல்லித ழுண்க ணழப்பிரிந் தோரே." (ஐங்குறு-334.)

இது வன்புறை எதிரழிந்து கூறியது.

"அம்ம வாழி தோழி யாவதும்
†வல்லா கொல்லோ தாமே யவண
கல்லுடை நன்னாட்டுப் புள்ளினப் பெருந்தோ
டியாஅந் துணைபுணர்ந் துறைதுஞ்
யாங்குப் பிரிந்துறைதி ‡யென்னு மாறே." (ஐங்குறு-333.)

* 'பின்செல' என்பதும் பாடம்.

† 'வல்லார் கொல்லோ' என்பதும் பாடம்.

‡ 'என்னுதவ்வே' 'என்னுவவ்வே' என்பதும் பாடம்.

இது புள்ளை நொந்து கூறியது.

" காதல ருழைய ராகப் பெரிதுவந்து
சாறுகொ ளூரிற் புகல்வேன் மன்ற
வத்த நண்ணிய வங்குடிச் சீறூர்
மக்கள் போகிய வணிலாடு முன்றிற்
புலம்பில் போலப் புல்லென்
றலப்பேன் றோழியவ ரகன்ற ஞான்றே." (குறுந்-41.)

இஃது ஆற்றுவலெனக் கூறியது.

" நீகண் டனையோ கண்டார்க்கேட்டனையோ
*வொன்று தெளிய நசையின மொழிமோ
வெண்கோட் டியானை பூஞ்சுனை படியும்
பொன்மலி பாடிலி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே." (குறுந்-75.)

இது தலைவன் வரவை விரும்பிக் கூறியது.

" இம்மையாற் செய்ததை யிம்மையே யாம்போலு
†மும்மையா மென்பவ ரோராரகா—ணம்மை
யெளிய ரென ‡விளைந்த வின்குழலா ரேடி
தெளியச் சுடப்பட்ட வாறு." (திணை, 150-123.)

இது குழல் கேட்டுத் தோழிக்குக் கூறியது.

" பெருங்கடற் றிரையது சிறுவெண் காக்கை
நீத்துநீ ரிருங்கழி யிரைதேர்ந் துண்டு
பூக்கமழ் பொதும்பிற் சேக்குந் துறைவனோ

---

* 'என்றுகேளிய தகையினை மொழிமோ' என்பதும் பாடம்.
† 'மும்மையே யாமென்பார்' என்பதும் பாடம்.
‡ 'நலிந்த ஈர்ங்குழலார்' என்பதும் பாடம்.

டியாத்தேம் யாத்தன்று நட்பே
யவிழ்த்தற் கரிதது முடிந்தமைந் தன்றே."* (குறுந்-313.)

இது தலைவன் தவறிலனென்று கூறியது.

"உடலினே னல்லேன் பொய்யா துரைமோ
யாரவண் மகிழ்ந தானே தேரொடு
தளர்நடைப் புதல்வனை யுள்ளிநின்
வளமனை வருதலும் வெளவி யோளே." (ஐங்குறு-66.)

இது புதல்வனை நீங்கியவழிக் கூறியது.

"கண்டனெ மல்லமோ மகிழ்நநின் பெண்டே
பலராடு பெருந்துறை மலரொடு வந்த
தண்புனல் வண்ட லுய்த்தென
வுண்கண் சிவப்ப வழுதுநின் றோளே." (ஐங்குறு-69.)

இது காமஞ்சாலா விளமையோளைக் களவின் மணந்தமை அறிந்தேனென்றது.

வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇ—வாயில்தன் ஏதுவாகத் தலைவிக்கு வருங் கூற்றுவகையோடு கூட்டி ;

---

* பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
நீத்துநீ ரிருங்கழி யிரைதேர்ந் துண்டு
பூக்கமழ் பொதும்பர்ச் சேக்குந்
துறைவன் சொல்லோ பிறவாயி னவே."

என்பது ஐங்குறுநூறு (162).

வாயில்களாவார் செய்யுளியலுட் கூறும் பாணன் முதலி யோர்.* 'வகை' யென்றதனான் ஆற்றாமையும் புதல்வனும் ஆடைகழூவுவாளும் பிறவும் வாயிலாதல் கொள்க.

"கொக்கினுக் கொழிந்த தீம்பழங் கொக்கின்
கூம்புநிலை யன்ன †முகைய வாம்பற்
றூங்குநீர்க் குட்டத்துத் துடுமென வீழுந்
தண்டுறை யூரன் றண்டாப் பரத்தமை
புலவா யென்றி தோழி புலவேன்
பழன யாமைப் பாசறைப் புறத்துக்
கழனி காவலர் சுடுநந் துடைக்குந்
தொன்றுமுதிர் வேளிர் குன்றூ ரன்னவென்
னன்மனை நனிவிருந் தயருங்
கைதூ வின்மையி னெய்தா மாறே." (நற்றிணை-280.)

இந் நற்றிணை தலைவனொடு புலவாமை நினக்கு இயல்போ வென்ற தோழிக்கு விருந்தாற் கைதூவாமையின் அவனை எதிர்ப்படப் பெற்றிலேனல்லது புலவேனோ என்றவாறு.

"அன்னா யிவனோ ‡ரிளமா ணாக்கன்
றன்னூர் மன்றத் தென்ன கொல்லோ
விரந்தூ ணிரம்பா மேனியொடு
விருந்தி னூரும் பெருஞ்செம் மலனே. (குறுந்-33.)

---

* "பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற வறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த கிளவியொடு தொகைஇத்
தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்."

—தொல்-செய்யுளியல்-191

† 'தகைய' என்பதும் பாடம்.

‡ 'இன்மாணாக்கன்' என்பதும் பாடம்.

இது பாணன் *சொல்வன்மைக்குத் தோற்று வாயில் நேர்ந்த தலைவி தோழிக்கு உரைத்தது.

"காண்மதி பாணநீ யுரைத்தற் குரியை
துறைகெழு கொண்கன் பிரிந்தெனக்
கறைகேழ் மெல்வளை நீங்கிய நிலையே." (ஐங்குறு-140.)

இது பரத்தையிற் பிரிந்துழி இவன் நின்வார்த்தையே கேட்பனென்பது தோன்றப் பாணற்குத் தலைவி கூறியது.

"ஆடியல் விழவி னழுங்கன் மூதூ
ருடையோர் பான்மையிற் பெருங்கை தூவா
வறனில் புலத்தி யெல்லித் தோய்த்த
புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கமொடு
வாடா மாலை துயல்வர வோடிப்
பெருங்கயிறு நாலு மிரும்பனம் பிணையற்
பூங்க ணுயர மூக்க வூங்கா
ளழுதனள் பெயரு மஞ்சி லோதி
நல்கூர் பெண்டின் சில்வளைக் குறுமக
ளூசல் லுறுதொழிற் பூசற் கூட்டா
நயனின் மாக்களொடு குழீஇப்
பயனின் றம்மவிவ் வேந்துடை யவையே." (நற்றிணை-90.)

இது †பாணனைக் குறித்துக் கூறியது.

"நெய்யுங் குய்யு மாடி மையொடு
‡மாசுபட் டன்றே கலிங்கமுந் தோளுந்
திதலை மென்முலைத் தீம்பால் §பிலிற்றப்

---

* 'சொல்வண்மை' என்னும் முன் அச்சுப்பிரதியின் பாடம் அத்துணைச் சிறந்ததன்று.

† 'பாங்கனை' என்பதும் பாடம்.

‡ 'மாசுபட்டின்றே' என்பதும் பாடம்.

§ 'பிலிற்று' 'பனிற்ற' என்பவும் பாடம்.

புதல்வற் புல்லிப் புனிறு நாறும்மே
வாலிழை மகளிர் சேரித் தோன்றுந்
தேரோற் கொத்தனெ மல்லே மதனுற்
பொன்புனை நரம்பி னின்குரற் சீறியா
ழெழாஅல் வல்லே யாயினுந் தொழாஅல்
[*புரையோ ரன்ன புரையின நட்பி
னிளையோர் கூம்புகை மருள்வோ ராங்குக்]
கொண்டுசெல் பாணநின் றண்டுறை யூரனைப்
பாடுமனைப் பாடல் கூடாது நீடுநிலைப்
புரவியும் †பூணிலை முனிகுவ
விரகில மொழியல்யாம் வேட்டதில் வழியே"
(நற்றிணை-380.)

இது பாணனுக்கு வாயின் மறுத்தது.

"புல்லேன் மகிழ்ந ‡புலத்தலு மிலனே
கல்லா யானைக் கடுந்தேர்ச் செழியன்
§படைமாண் பெருங்குள மடைநீர் விட்டெனக்
காலணைந் தெதிரிய கணைக்கோட்டு வாளை
யள்ளலங் கழனி யுள்வா யோடிப்
பகடுசே றுதைத்த புள்ளிவெண் புறத்துச்
செஞ்சா லுழவர் கோற்புடை மதரிப்
பைங்காற் செறுவி னணைமுதற் புரளும்
வாணன் சிறுகுடி யன்னவென்
கோனே ரெல்வளை ஞெகிழ்த்த நும்மே." (நற்றிணை-340.)

---

* இவ்வீரடிகளும் நற்றிணை அச்சுப்பிரதியில் உள்ள பாடத்தில் காணப்படுகின்றில.

† 'பண்ணிலை' என்பதும் பாடம்.

‡ 'புலத்தலு மில்லேன்' என்பதும் பாடம்.

§ 'மடைமாண்' என்பதும் பாடம்.

இஃது ஆற்றுமை வாயிலாகச் சென்றுழித் தலைவி கூறியது.

"வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
காலை யிருந்து மாலைச் சேக்குந்
*தண்கடற் சேர்ப்பனொடு வாரான்
றான்வந் தனனெங் காத லோனே." (ஐங்குறு-157.)

இது வாயில் வேண்டி ஒழுகுகின்றான் புதல்வன் வாயிலாக வருமெனக் கேட்டு அஞ்சிய தலைவி அவன் விளையாடித் தனித்து வந்துழிக் கூறியது.

"கூர்முண் முள்ளி" என்னும் (26) அகப்பாட்டு ஆற்றுமை வாயிலாகச் சென்றுழித் தடையின்றிக் கூறியவாறு.

'மாறுப் புண்போன் மாற்றச் சீற்றங் கனற்றப்' பின்னும் புலவிகூர்ந்து தலைவன் கேட்ப முன்னிலைப் புறமொழியாக யான் நோமென்னவும் பொல்லாரென வலிதிற் கூறியவாறு காண்க.

"பூங்கட் புதல்வனைப் பொய்பல பாராட்டி" (கலி-79.) எனப் புதல்வனை வாயிலாகக் கொண்டு சென்றவாறு காண்க.

"நாடிநின் றூதாடித் துறைச்செல்லா ளூரவ
ராடைகொண் டொலிக்குநின் புலத்திகாட் டென்றாளோ
கூடியார் புனலாடப் புணையாய மார்பினி
லூடியா ரெறிதர வொளிவிட்ட வரக்கினை (கலி-72.)

இஃது ஆடைகழுவுவாளை வாயிலென்றது.

பிறவும் வேறுபட வருவனவெல்லாம் இதனாற்கொள்க.

* 'தெண்கடல்' என்பதும் பாடம்.

கிழவோள் செப்பல் கிழவது என்ப—இப்பத்தொன்பதுங் கிழவோளுக்கு உரிமையுடைத்தென்று கூறுவர் ஆசிரியர், என்றவாறு. முன்னர்நின்ற ஏழனுருபுகளைத் தொகுத்து இன்னதன் கண்ணும் இன்னதன்கண்ணுந் தலைவி செப்புதலை வாயிலின் வகையோடே கூட்டிக் கிழவோள் செப்பல் வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇ என மாறுக. (சு)

148. புணர்ந்துடன் போகிய கிழவோண் மனையிருந்
திடைச்சுரத் திறைச்சியும் வினையுஞ் சுட்டி
யன்புறு தக்க கிளத்த றானே
கிழவோன் செய்வினைக் கச்ச மாகும்.

இது தலைவி கூற்றின்கட் படுவதோர் இலக்கணங் கூறுகின்றது.

இதன் பொருள்: புணர்ந்து உடன் போகிய கிழவோள் மனை இருந்து—களவுக் காலத்துப் புணர்ந்து உடன் போகிய தலைவி கற்புக்காலத்து இல்லின்கண் இருந்து; இடைச்சுரத்து இறைச்சியும் அன்புறுதக்க வினையுஞ் சுட்டிக் கிளத்தல் தானே—தான் போகிய காலத்துக் காட்டின்கட் கண்ட கருப்பொருள்களையுந் தலைவன் தன்மேல் அன்பு செய்தற்குத்தக்க கருப்பொருளின் தொழில்களையுங் கருதிக் கூறுதல் தானே; கிழவோன் செய்வினைக்கு அச்சம் ஆகும்—தலைவன் எடுத்துக்கொண்ட காரியத்திற்கு முடித்தலாற்றுன்கொலென்று அஞ்சும் அச்சமாம், என்றவாறு.

எனவே, அருத்தாபத்தியாற் புணர்ந்து உடன் போகாத தலைவி மனைக்கணிருந்து தலைவன் கூறக்கேட்டு *அக்கருப்

* 'அக்கருப்பொருளினது' என்னும் பாடம் பொருட்பேறின்று.

பொருள்கள் தன்மேல் அன்புறுதக்க வினைகளைக் கூறுதல் தலைவன் செய்வினைக்கு அச்சமாகாது வருவரெனத் துணிந்து கூறுதலாமென்று ராயிற்று.

"கான யானை தோனயந் துண்ட
பொரிதா ளோமை வளிபொரு நெடுஞ்சினை
யலங்க லுலவை யேறி யொய்யெனப்
புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரு
மத்த நண்ணிய வங்குடிச் சீறூர்ச்
சேர்ந்தனர் கொல்லோ தாமே யாந்தமக்
கொல்லே மென்ற தப்பல்
சொல்லா *தகறல் வல்லு வோரே." (குறுந்-79.)

புலம்புதரு குரலவாய்ப் புறவினைப் பெடை அழைக்கும் வருத்தங் கண்டு வினைமுடியாமல் வருவரோவென அஞ்சி வாறு காண்க.

†"அரிதாய வறனெய்தி" என்னும் (11) கலிப்பாட்டுத் தலைவன் அன்புறுதக்கன கூறக் கேட்ட தலைவி அவற்றைக் கூறிப் புனைநலம் வாட்டுநர் அல்லரென வரவுகருதிக் கூறிய வாறு காண்க. இதனுள் ஆற்றுவிக்குந் தோழி வருவர் கொல்லென ஐயுற்றுக் கூறலின்மையின் தோழி கூற்றன்மை யும் உணர்க.

"புல்லுவிட் டிறைஞ்சிய பூங்கொடி தகைப்பன" (கலி-3) என்றாற் போல்வன தலைவி கூற்றாய் வருவன உள வாயின் இதன்கண் அடக்குக. (எ)

---

* 'ஏகல்' என்பதும் பாடம்.

† இச்செய்யுளை 111-ம் பக்கத்திற் காண்க.

149. தோழியுள் ளுறுத்த வாயில் புகுப்பினு
மாவயி னிகழு மென்மனார் புலவர்.

இது தோழி முதலிய வாயில்கட்கு எய்தாத தெய்து வித்தது.

இதன் பொருள்: தோழி உள்ளுறுத்த வாயில் புகுப்பினும்—தலைவனது செலவுக் குறிப்பு அறிந்து அவனைச் செலவழுங்குவித்தற்குத் தோழி யுள்ளிட்ட வாயில்களைத் தலைவி போகவிட்ட அக்காலத்து அவர் மேலன போலக் கூறுங் கூற்றுக்களும்; ஆவயின் நிகழும் என்மனார் புலவர்—தலைவி அஞ்சினாற்போல அவ்வச்சத்தின்கண்ணே நிகழு மென்று கூறுவர் புலவர், என்றவாறு.

"அறனின்றி யயறாற்றும்" (கலி-3) என்னும் பாலைக் கலியுள் இறைச்சியும் வினையுமாகிய பூ முதலியனகூறியவாற் றால் தலைவிக்கிரங்கி நீர் செலவழுங்குமெனக் கூறுவாள் "யாமி ரப்பவு மெமகொள்ளா யாயினை" எனப் பிறவாயில்களையுங் கூட்டி உரைத்தவாறு காண்க. (அ)

150. பெறற்கரும்பெரும்பொருண் முடிந்தபின்வந்த
தெறற்கரு மரபிற் சிறப்பின் கண்ணு
மற்றமழி வுரைப்பினு மற்ற மில்லாக்
கிழவோட் சுட்டிய தெய்வக் கடத்தினுஞ்
சீருடைப் பெரும்பொருள் வைத்தவழி மறப்பினு
மடங்கா வொழுக்கத் தவன்வயி னழிந்தோளை
யடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்
பிழைத்துவந் திருந்த கிழவனை நெருங்கி
யிழைத்தாங் காக்கிக் கொடுத்தற் கண்ணும்

வணங்கியன் மொழியான் வணங்கற் கண்ணும்
புறம்படு விளையாட்டுப் புல்லிய புகற்சியுஞ்
சிறந்த புதல்வனை நேராது புலம்பினு
மாணலந் தாவென வகுத்தற் கண்ணும்
பேணு வொழுக்க நாணிய பொருளினுஞ்
சூணயத் திறத்தாற் சோர்வுகண் டழியினும்
பெரியோ ரொழுக்கம் பெரிதெனக் கிளந்து
பெறுதகை யில்லாப் பிழைப்பினு மவ்வயி
னுறுதகை யில்லாப் புலவியுண் மூழ்கிய
கிழவோள்பா னின்று கெடுத்தற் கண்ணு
முணர்ப்புவயின் வாரா வூடலுற் றோள்வயி
னுணர்த்தல் வேண்டிய கிழவோன்பா னின்று
தான்வெகுண் டாக்கிய தகுதிக் கண்ணு
மருமைக் காலத்துப் பெருமை காட்டிய
வெண்மைக் காலத் திரக்கத் தானும்
பாணர் கூத்தர் விறலிய ரென்றிவர்
பேணிச் சொல்லிய குறைவினை யெதிரு
நீத்த கிழவனை நிகழுமாறு படீஇக்
காத்த தன்மையிற் கண்ணின்று பெயர்ப்பினும்
பிரியுங் காலை யெதிர்நின்று சாற்றிய
மரபுடை யெதிரு முளப்படப் பிறவும்
வகைபட வந்த கிளவி யெல்லாந்
தோழிக் குரிய வென்மனார் புலவர்.

இது முறையானே தோழிக்குரிய கூற்றுக் கூறுன்றது.

இதன்பொருள்: (பெறற்கு அரும் பெரும் பொருள் முடிந்தபின் வந்த தெறற்கு அரும் மரபிற் சிறப்பின் கண்ணும்) பெறற்கு அரும் பெரும்பொருள் முடிந்தபின் வந்த—தலைவனுந் தலைவியுந் தோழியும் பெறுதற்கரிதென நினைத்த பெரிய பொருளாகிய வதுவை வேள்விச்சடங்கான் முடிந்தபின்பு தோன்றிய; தெறற்கு அரும் மரபிற் சிறப்பின் கண்ணும்—தனது தெறுதற்கரிய மரபுகாரணத்தால் தலைவன் தன்னைச் சிறப்பித்துக் கூறுமிடத்தும்; தோழி கூற்று நிகழும்.

தலைவியையுந் தலைவனையும் வழிபாடாற்றுதலின் 'தெறற் கருமரபின்' என்றார். தெறுதல் - அழன்றுநோக்குதல். சிறப்பு, இவளை நீ ஆற்றுவித்தலின் எம் உயிர் தாங்கினேம் என்றாற் போல்வன. அவை எம்பெருமானே அரிதாற்றிய தல்லது யான் ஆற்றுவித்தது உண்டோ வென்றானும் நின் அருளால் இவள் ஆற்றியதல்லது யான் ஆற்றுவித்தது உண் டோவென்றானுங் கூறுவனவாம்.

"அயிரை பரந்த வந்தண் பழனத்
தேந்தெழின் *மலர தூம்புடைத் †திரடா
ளாம்பல் குறுநர் நீர்வேட் டாங்கிவ
ளிடைமுலைக் கிடந்து நடுங்க லானீர்
தொழுதுகாண் பிறையிற் றோன்றி யானுமக்
கரியே மாகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே." (குறுந்-178.)

---

* 'மலர்ந்த' என்பதும் பாடம்.
† 'திரள்கால்' என்பதும் பாடம்.

இதனுண் முலையிடைக்கிடந்தும் பனிக்கின்ற நீர் அரியமாகிய காலத்து எங்ஙனம் ஆற்றினீரென யான் நோவாநின்றேன், இங்ஙனம் அருமைசெய்தலால் தேற்றுதற்கு உரியேனாகிய என்னைச் சிறப்பித்துக் கூறல் ஆகாது என்றவாறு காண்க.

"பொங்குதிரை பொருத வார்மண லடைகரைப்
*புன்கா ஞவற் பொதிப்புற விருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி பழஞ்செத்துப்
பல்கா லலவன் கொண்டகோட் கூர்ந்து
கொள்ளா நரம்பி னிமிரும் பூச
லிரைதேர் நாரை யெய்திய விடுக்குந்
துறைகெழு மாந்தை யன்ன விவணலம்
பண்டு மிற்றே கண்டிசிற் றெய்ய
வுழையிற் போகா தளிப்பினுஞ் சிறிய
ஞெகிழ்ந்த கவினலங் கொல்லோ மகிழ்ந்தோர்
கட்கழி செருக்கத் தன்ன
காமங் கொல்லிவள் கண்பசந் ததுவே." (நற்றிணை-35.)

இதனுள் தலைவி கனியாகவுந் தும்பி தோழியாகவும் அலவன் தன்மேல் தவறிழைக்குந் தமராகவுந் தலைவன் இரைதேர் நாரையாகவும் உள்ளுறையுவமங் கொள்வுழித் தலைவி பொருட்டு யாய்க்கு அஞ்சி யொழுகினேனை நீ காத்ததன்றி யான் ஆற்றுவித்தது உளதோவெனத் தலைவன் சிறப்பிற்கு எதிர் தோழி கூறியவாறு காண்க. 'பண்டும் இற்றே' என்றது பண்டையின் மிகவும் வருத்தினானென்றாள். இவள் கண் நீண்டு பசந்தது, களவின்கண் நீங்காது அளியாநிற்கவுஞ் சிறிது கெட்ட அழகின் மிகுதியோ, கள்ளுண்டார்க்குக் கள் அறாஉங் காலத்துப் பிறந்த வேறுபாடுபோலுங் காம

* 'புன்கா ஞவல் புகர்ப்புற' என்பதும் பாடம்.

வேறுபாடோ, அவ்விரண்டும் அல்லவே, இஃது ஓர் அமளிக் கண் துயிலப்பெற்றும் வேதவிதிபற்றிக் கூட்டம் நிகழாமை யாற் பிறந்த மிக்க வேறுபாடன்றோ? இதனை இவளே ஆற்றுவதன்றி யான் ஆற்றுவிக்குமாறென்னை என்றாளென்க.

அற்றம் அழிவு உரைப்பினும்—களவுக்காலத்துப் பட்ட வருத்தம் நீங்கினமை கூறினும்:

“ எக்கர் ஞாழ லிகந்துபடு பெருஞ்சினை
வீயினிது கமழுந் துறைவனை
நீயினிது முயங்குமதி காத லோயே.” (ஐங்குறு-148.)

“ எரிமருள் வேங்கை யிருந்த தோகை
யிழையணி மடந்தையிற் றோன்று நாட
வினிதுசெய் தனையா லுந்தை வாழியர்
நன்மனை வதுவை யயரவிவள்
பின்னிருங் கூந்தன் மலரணிந் தோயே.” (ஐங்குறு-294.)

என வரும்.

அற்றம் இல்லாக் கிழவோட் சுட்டிய தெய்வக் கடத்தினும்—களவொழுக்கம் புலப்பட ஒழுகுதல் இல்லாத தலைவியைத் தலைவன் வரைந்து கோடல் குறித்துப் பரவிய தெய்வம் அதனை முடித்தலின் அப்பரவுக்கடன் கொடுத்தல் வேண்டுமெனத் தலைவற்குக் கூறும் இடத்தும்:

உதாரணம்:

“ நெஞ்சொடு மொழிகடுத் தஞ்சுவர நோக்குந்
தாயவட் டெறுவது தீர்க்க வெமக்கெனச்
சிறந்த தெய்வத்து நிறையுறை குன்ற
மறைந்துநின் றிறைஞ்சினம் பலவே
பெற்றனம் யாமே மற்றதன் பயனே.”

'கிழவோற் சுட்டிய தெய்வக்கடம்' என்று பாடம் ஓதி,

"வாழி யாதன் வாழி யவினி
வேந்துபகை தணிக யாண்டுபல நந்துக
வெனவேட் டோளே யாயே யாமே
மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்
தண்டுறை யூரன் வரைக
வெந்தையுங் கொடுக்க வெனவேட் டேமே." (ஐங்குறு-6.)

என்பது உதாரணங் காட்டுவாரும் உளர்.

சீருடைப் பெரும் பொருள் வைத்த வழி மறப்பினும்—தலைமையுடைய இல்லறத்தைத் தலைவிமாட்டு வைத்த காலத்துத் தலைவன் அறஞ்செயற்கும் பொருள் செயற்கும் இசையுங் கூத்துமாகிய இன்பம் நுகர்தற்குந் தலைவியை மறந்து ஒழுகினும்:

உதாரணம்:

"கரும்பி னெந்திரங் களிற்றெதிர் பிளிறுந்
தேர்வண் கோமான் றேனூ ரன்னவிவ
ணல்லணி நயந்துநீ துறத்தலிற்
பல்லோ ரறியப் பசந்தன்று நுதலே." (ஐங்குறு-55.)

இதனுள் துறத்தலினெனப் பொதுவாகக் கூறினாள் அறமுதலியவற்றைக் கருதுதலின்.

அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அழிந்தோளை அடங்கக் காட்டுதற் பொருளின்கண்ணும்—புறத்து ஒழுக்கத்தை உடையனாகிய தலைவன்மாட்டு மனம் வேறுபட்ட தலைவியைப் புறத்து ஒழுக்கமின்றி நின்மேல் அவர் அன்புடையரென அவ்வேறுபாடு நீங்க நெருங்கிக் கூறுதலையுடைத்தாகிய பொருளின்கண்ணும்:

உதாரணம்:

“*செந்நெற் செறுவிற் கதிர்கொண்டு கள்வன்
†றண்ணக மண்ணளைச் செல்லு மூரற்
கெல்வளை ஞெகிழச் சாஅ
யல்ல லுழப்ப தெவன்கொ லன்னாய்.” (ஐங்குறு-27.)

இதன் உள்ளுறையாற் பொருளுணர்க.

பிழைத்து வந்து இருந்த கிழவனை நெருங்கி இழைத்து ஆங்கு ஆக்கிக் கொடுத்தற்கண்ணும்—பரத்தையர் மனைக்கண் தங்கி ‡வந்து அகனகர் புகுதாது புறத்திருந்த தலைவனை மிகக் கழறிச், சில மொழிகளைக் கூறி, இதனானே தலைவி மனத்தின்கண் ஊடல்நீங்குந் தன்மை உளதாக்கிக் கூட்டும் இடத்தும்:

உதாரணம்:

“நகைநன் றம்ம தானே யிறைமிசை
மாரிச் சுதையி னீர்ம்புறத் தன்ன
கூரற் கொக்கின் குறும்பறைச் சேவல்
வெள்ளி வெண்டோ டன்ன கயல்குறித்துக்
கள்ளா ருவகைக் கலிமகி ழுழவர்
காஞ்சியங் குறுந்தறி குத்தித் தீஞ்சுவை
மென்கழைக் கரும்பி னன்பல மிடைந்து
பெருஞ்செந் நெல்லின் பாசமல் போற்றி
வருந்திக் கொண்ட வல்வாய்க் கொடுஞ்சிறை
யிதழி கடுநீர் நோக்கிப் பைபயப்
பார்வ லிருக்கும் பயங்கே ழூர

* ‘செந்நெலம்’ என்பதும் பாடம்.
† ‘தன்னகம்’ என்பதும் பாடம்.
‡ ‘வந்தான்’ என்பதும் பாடம்.

யாமது பேணின்றோ விலமே நீயின்
பண்ணமை நல்யாழ்ப் பாணனொடு விசிபிணி
மண்ணார் முழவின் கண்ணதிர்ந் தியம்ப
மகிழ்துணைச் சுற்றமொடு மட்டு மாந்தி
யெம்மனை வாரா யாகி முன்னா
ளும்மனைச் சேர்ந்த ஞான்றை யம்மனைக்
குறுந்தொடி மடந்தை யுவந்தன ணெடுந்தே
ரிழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகிற் கூட லாங்கண்
வெள்ளத் தானையொடு வேற்றுப்புலத் திறுத்த
கிள்ளி வளவ னல்லமர் சாயக்
கடும்பரிப் புரவியொடு களிறுபல வௌவி
யேதின் மன்ன ரூர்கொளக்
கோதை மார்ப னுவகையிற் பெரிதே."

"கேட்டிசின் வாழியோ மகிழ்ந வாற்றுற
மைய னெஞ்சிற் கெவ்வந் தீர
நினக்குமருந் தாகிய யானினி
யிவட்குமருந் தன்மை நோமெ னெஞ்சே." (ஐங்குறு-59.)

என வரும்.

வணங்கியன் மொழியான் வணங்கற்கண்ணும்—தாழும் இயல்பினையுடைய சொற்களால் தோழி தாழ்ந்து நிற்கும் நிலைமைக்கண்ணும்:

உதாரணம்:

"உண்டுறைப் பொய்கை வராஅ லினமிரியுந்
தண்டுறை யூர தகுவகொ—லொண்டொடியைப்
பாராய் மனைத்துறந்தச் சேரிச் செலவதனை
யூராண்மை யாக்கிக் கொளல்."

எனவரும்.

“பகலிற் றோன்றும் பல்கதிர்த் தீயி
னாம்பலஞ் செறுவிற் றேனூ ரன்ன
விவணலம் புலம்பப் பிரிய
*வனைநலமுடையளோமகிழ்நநின்பெண்டே”(ஐங்குறு-57.)

இதுவும் அதன்பாற் படும்.

புறம்படு விளையாட்டும் புல்லிய புகற்சியும்—பரத்தையா ரிடத்தே உண்டாம் விளையாட்டினைத் தலைவன் பொருந்திய மனமகிழ்ச்சிக்கண்ணும்:

விளையாட்டாவது யாறுங் குளனுங் காவும் ஆடிப் பதியிகந்து நுகர்தலாம்.

“பருவாய் வராஅற் பல்வரி யிரும்போத்துக்
கொடுவா யிரும்பின் கோளிரை துற்றி
யாம்பன் மெல்லடை கிழியக் குவளைக்
கூம்புவிடு பன்மலர் சிதையப் பாய்ந்தெழுந்
தரில்படு வள்ளை யாய்கொடி மயக்கித்
தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது
கயிறடு கதச்சேப் போல மதமிக்கு
நாட்கய முழக்கும் பூக்கே ழூர
வருபுனல் வையை வார்மண லகன்றுறைத்
திருமரு தோங்கிய விரிமலர்க் காவி
னறும்பல் கூந்தற் குறுந்தொடி மடந்தையொடு
வதுவை யயர்ந்தனை யென்ப வலரே
கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழிய
னாலங் கானத் தகன்றலை சிவப்பச்
†சேரலன் செம்பியன் சினங்கெழு திதியன்

---

* ‘அவணலம்’ ‘அனநலம்’ என்பவும் பாடம்.

† ‘சேரல் செம்பியன் சினங்கேழு திதியன்’ என்பதும் பாடம்.

போர்வல் லியானைப் பொலம்பூ ணெழினி
நாரரி நறவி னெருமை யூரன்
றேங்கம ழகலத்துப் புலர்ந்த சாந்தி
னிருங்கோ வேண்மா னியறேர்ப் பொருநனென்
றெழுவர் நல்வல மடங்க வொருபகன்
முரசொடு வெண்குடை யகப்படுத் துரைசெலக்
கொன்றுகளம் வேட்ட ஞான்றை
*வென்றி கொள்வா ரார்ப்பினும் பெரிதே." (அகம்-36.)

இதனுள் கொள்வா ரார்ப்பினும் பெரிதெனவே நாண் நீங்கிப் புலப்படுத்தலை மகிழ்ந்தவாறு காண்க.

சிறந்த புதல்வனை நேராது புலம்பினும்—யாரினுஞ் சிறந்த புதல்வனை வாயிலாகக்கொண்டு சென்றுழி அவற்குத் தலைவி வாயில் நேராமல் தலைவன் வருந்தினும்:

உதாரணம்:

"பொன்னொடு குயின்ற பன்மணித் தாலித்
தன்மார்பு நனைப்பத்தன் றலையு மிஃதோ
மணித்தகைச் செவ்வாய் மழலையங் கிளவி
புலர்த்தகைச் சாந்தம் புலர்தொறு நனைப்பக்
காணு யாகலோ கொடிதே கடிமனைச்
சேணிகர் தொதுங்கு மாணிழை யரிவை
நீயிவ ணேரா வாயிற்கு நாணுந்
தந்தையொடு வருவோன் போல
மைந்தனொடு புகுந்த மகிழ்நன் மார்பே."

என வரும்.

மாண் நலம் தா என வருத்தற்கண்ணும்—இவள் இழந்த மாட்சிமைப்பட்ட நலத்தைத் தந்து இகப்பினும் இகப்பாயெனத் தலைவனை வேறுபடுத்தற்கண்ணும்:

* 'வென்றிகொள் வீரர்' என்பதும் பாடம்.

உதாரணம்:

"யாரை யெலுவ யாரே நீயெமக்
கியாரையு மல்லை னொதும லாளனை
யனைத்தாற் கொண்கவெம் மிடையே நினைப்பிற்
கடும்பகட் டியானை நெடுந்தேர்க் குட்டுவன்
வேந்தடு களத்தின் முரசதிர்ந் தன்ன
வோங்கற் புணரி பாய்ந்தாடு மகளி
*ரணிந்திடு பல்பூ மரீஇ யார்ந்த
வாபுலம் புகுதரு பேரிசை மாலைக்
கடல்கெழு மாந்தை யன்னவெம்
†வேட்டனை யல்லையா னலந்தந்து சென்மே"

(நற்றிணை-395.)

என வரும்.

"நுண்ஞாண் வலையிற் பரதவர் போத்தந்த
புன்மீ னுணங்கல் கவருந் துறைவனைக்
கண்ணினாற் காண விலையுங்கொ லென்றோழி
வண்ணந்தா வென்கந் தொடுத்து."

இதுவும் இதன்பாற் படும்.

பேணு ஒழுக்கம் நாணிய பொருளினும்—பரத்தை தலைவியைப் பேணாது ஒழுகிய ஒழுக்கத்திற்குத் தலைவி நாணிய பொருளின்கண்ணும்: தலைவற்குத் தோழி கூற்று நிகழ்த்தும்.

உதாரணம்:

"பொய்கை நீர்நாய்ப் புலவுநா றிரும்போத்து
வாளை நாளிரை தேரு மூர

* 'அணைந்திடு' என்பதும் பாடம்.
† 'பெட்டனை' என்பதும் பாடம்.

நாணினென் பெரும யானே பாணன்
மல்லடு மார்பின் வலியுற வருந்தி
யெதிர்தலைக் கொண்ட வாரியம் பொருந
னிறைத்திரண் முழவுத்தோள் கையகத் தொழிந்த
திறன்வேறு கிடக்கை நோக்கி நற்போர்க்
கணையி னணி யாங்கு மறையினள்
மெல்ல வந்து நல்ல கூறி
மையீ ரோதி மடவோ யானு
நின், சேரி யேனே யயலி லாட்டியே
னுங்கை யாகுவெ னினக்கெனத் தன்கைத்
தொடுமணி மெல்விரற் றண்ணெனத் தைவர
நுதலுங் கூந்தலு நீவிப்
பகல்வந்து பெயர்ந்த வாணுதற் கண்டே." (அகம்-385.)

இதனுள் யான் நினக்குத் தோழியாவேனெனப் பரத்தை நீவிய பேணு ஒழுக்கத்திற்குத் தலைவி நாணியது கண்டு தான் நாணினேனென்று தலைவற்குத் தோழி கூறியவாறு காண்க.

இன்னுந் தலைவனது பேணு ஒழுக்கத்திற்குத் தலைவி நாணிய பொருளின்கண்ணுமெனவுங் கூறுக.

"யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமியள் வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கா னெய்த
லினமீ னிருங்கழி யோத மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானுந்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு னணிக் *கரப்பா டும்மே." (குறுந்-9.)

* 'காப்பாடும்' என்றும் பாடங்கொள்ளலாமேனும், 'மறைக்கப் படும்' என்னும் ஈண்டைப் பொருளுக்குக் 'கரப்பாடும்' என்னும் பாடம்போல் அது சிறவாமை உணர்க.

என வரும்.

இவை இரண்டும் பொருள்.

(சூள் நயத் திறத்தாற் சோர்வு கண்டு அழியினும்) *நயத்திறத்தாற் சூள் சோர்வு கண்டு அழியினும்—கூடுதல் வேட்கைக் கூறுபாட்டால் தான் சூளுறக்கருதிய சூளுற வினது பொய்ம்மையைக் கருதித் தலைவி வருந்தினும்: தோழிக்குக் கூற்று நிகழும்.

உதாரணம்:

" பகல்கொள் விளக்கோ டிராநா ளறியா
†வென்வேற் சோழ ராமூ ரன்னவிவ
ணலம்பெறு சுடர்நுத றேம்ப
வெவன்பயஞ் செய்யுநீ தேற்றிய மொழியே"
(ஐங்குறு-56.)

இதனுள் இவள் நுதல் தேம்பும்படி நீ தேற்றிய சொல் லெனவே சோர்வுகண்டு அழிந்தாளென்பது உணர்ந்தும் இப்பொய்ச்சூள் நினக்கு என்னபயனைத் தருமெனத் தோழி தலைவனை நோக்கிக் கூறியவாறு காண்க.

"கோடுற நிவந்த" (அகம்-266) என்னும் மணிமிடை பவளத்தைத் தோழிகூற்றாகக் காட்டுவாரும் உளர்.

(பெரியோர் ஒழுக்கம் பெரிது எனக் கிளந்து பெறு தகை இல்லாப் பிழைப்பினும்) பெரியோர் பெறுதகை இல் லாக் கிளந்து—நன்மக்கள் பெறுந் தகைமை இல்லறமாயிருக் குமென்றுஞ் சொல்லி; பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து பிழைப்பினும்—நன்மக்கள் ஒழுகும் ஒழுக்கம்

* பொருட்கேற்ப இங்ஙனம் பாடம் கூறிக்கொள்க.
† 'வெல்போர்' என்பதும் பாடம்.

பெரிதாயிருக்குமென்றுஞ் சொல்லித் தான் தலைவனை வழி பாடுதப்பினும்: தோழிக்குக் கூற்று நிகழும்.

பெரியோரையுங் கிளங்தென்பதனையும் இரண்டிடத்துங் கூட்டுக.

உதாரணம்:

"வெள்ளி விழுத்தொடி மென்கருப் புலக்கை
வள்ளி நுண்ணிடை வயின்வயி னுடங்க
மீன்சினை யன்ன வெண்மணற் குவைஇக்
காஞ்சி நீழற் றமர்வளம் பாடி
*யூர்க்குல மகளிர் † குறுவழி விறந்த
வார லருந்திய சிறுசிரன் மருதின்
றாழ்சினை யுறங்குந் தண்டுறை யூர
விழையா வுள்ளம் விழையு மாயினுங்
கேட்டவை தோட்டி யாக மீட்டாங்
கறனும் பொருளும் வழாஅமை ‡நாட்டித்
தற்றக வுடைமை நோக்கி மற்றதன்
பின்னா கும்மே முன்னியது முடித்த
லனைய பெரியோ ரொழுக்க மதனா
லரிய பெரியோர்த் §தெருங் காலை
நும்மோ ரன்னோர் மாட்டு மின்ன
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்
மெய்யாண் டுளதோவிவ் வுலகத் தானே." (அகம்-285.)

இதனுள் 'அற'னென்றது இல்லறத்தை; 'தற்றகவுடைமைநோக்கி'யென்றது தன்னால் அவ்வறனும் பொருளுந்

* 'ஊர்க்குறுமகளிர்' 'ஊர்க்கோமகளிர்' † 'குறுவழியிறந்த' என்பவும் பாடம்.

‡ 'நாடி' என்பதும் பாடம்.

§ 'தெரியுங்காலை' என்பதும் பாடம்.

தகுதிப்பாடுடையவாந் தன்மையைநோக்கி என்றவாறும்; 'முன்னிய'தென்றது புறத்தொழுக்கத்தை; 'பெரியோ ரொழுக்கமனைய'வென்றது பெரியோர் ஒழுக்கம் பெரிய வென்றவாறு.

இது முன்னர் நிகழ்ந்த பொய்ச்சூள்பற்றி நும்மனோர் மாட்டும் இன்னபொய்ச்சூள் பிறக்குமாயின் இவ்வுலகத்து மெய்ச்சூள் இனி இன்றும், அதனாற் பெரியோரைத் தமது ஒழுக்கத்தைத் தேருங்காலை அரியவாயிருந்தனவெனத் தலைவனைநோக்கித் தோழிகூறலின் அவனை வழிபாடு தப்பினளா யிற்று. உள்ளுறையுவமம் இதற்கு ஏற்குமாறுணர்க.

அவ்வயின் உறுதகை இல்லாப் புலவியுண் மூழ்கிய கிழவோள் பால் நின்று கெடுத்தற்கண்ணும்—தலைவன் அங்ஙனம் பிறழ்ந்த இடத்து அவன் சென்று சேருந் தகைமை இல்லாமைக்குக் காரணமாகிய புலவியின்கண் அழுந்திய தலைவிபக்கத்தானாய் நின்று அவள்புலவியைத் தீர்த்தற்கண்ணும்:

உதாரணம்:

"மானோக்கி நீயழ நீத்தவ னானாது
நாணில னாயி னலிதந் தவன்வயி
னூடுத லென்னோ வினி." (கலி-87.)

"உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றா னீள விடல்." (குறள்-131-2.)

"காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்க் *கழீஇய சென்ற

* 'தழீஇய' 'தரீஇய' என்பவும் பாடம்.

மல்ல லூர னெல்லினன் பெரிதென
மறுவருஞ் *சிறுவன் றாயே
தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே." (குறுங்-45.)

(உணர்ப்புவயின் வாரா ஊடல் உற்றோள்வயின் உணர்த்தல்வேண்டிய கிழவோன்பால் நின்று தான் வெகுண்டு ஆக்கிய தகுதிக்கண்ணும்) உணர்ப்புவயின் வாரா ஊடல் உற்றோள்வயின்—தலைவன் தெளிவிக்கப்படுந் தன்மைக்கணில்லாத ஊடல் மிகுத்தோளிடத்து;

உணர்ப்புப் புணர்ப்புப்போல் நின்றது.

உணர்த்தல் வேண்டிய கிழவோன்பால் நின்று—ஊடல் தீர்த்தலை விரும்பிய தலைவன்வயத்தாளாய்நின்று; தான் வெகுண்டு ஆக்கிய தகுதிக்கண்ணும்—தான் தலைவியைக் கழறி அவள் சீற்றம் போந்தன்மை உண்டாக்கிய தகுதிக்கண்ணும்:

உதாரணம்:

" துறைமீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை
யரிமல ராம்பன் மேய்ந்த நெறிமருப்
பீர்ந்த ணெருமைச் சுவல்படு முதுபோத்துத்
தூங்குசேற் றள்ளற் றுஞ்சிப் பொழுதுபடப்
பைந்நிண வராஅல் குறையப் †பெயர்தந்து
‡பரூஉக்கொடிப் பகன்றை சூடி மூதூர்ப்
போர்ச்செறி மள்ளரிற் §புகுதரு மூரன்

---

*'சிறுவர் தாயே' என்பதும் பாடம்.
†'போதந்து' என்பதும் பாடம்.
‡'குரூஉக் கொடி' என்பதும் பாடம்.
§'புகுதருமூரன்' என்பதும் பாடம்.

றோர்தர வந்த *நெரியிழை ஞெகிழ்த்தோ
ளூர்கோள் கல்லா மகளிர்த் தரத்தரப்
†பரத்தைமை தாங்கலோ விலனென வறிதுநீ
‡புலத்த லோம்புமதி மனைகெழு மடந்தையது
புலந்துறை நுதல §வல்லி யோளே
செய்யோ ணீங்கச் சிலபதங் கொழித்துத்
தாமட் டுண்டு தமிய ராகித்
தேமொழிப் $புதல்வர் திரங்குமுலை சுவைப்ப
வைகுந ராகுத லறிந்து
மறியா ரம்மவிவ் வுலகத் தானே.'' (அகம்-315.)

இது தோழி தலைவியை வெகுண்டு ஆக்கியவாறு காண்க.

(அருமைக் காலத்துப் பெருமை காட்டிய எண்மைக் காலத்து இரக்கத்தானும்) எண்மைக் காலத்து—தாம் எளிய ராகிய கற்புக்காலத்திலே; அருமைக் காலத்துப் பெருமை காட்டிய இரக்கத்தானும்—களவுக்காலத்துத் தமது பெருமையை உணர்த்திய வருத்தத்தின்கண்ணும்:

உதாரணம்:

"வேம்பின் பைங்காயென் றோழி தரினே
தேம்பூங் கட்டி யென்றனி ரினியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கட் டண்ணிய தரினும்

*'தெரியிழை' என்பதும் பாடம்.

†'பரத்தை' என்பதும், ‡'புலத்த லொல்லுமோ' என்பதும் §'வல்லியோரே' என்பதும் பாடம்.

$'புதல்வர்க் கிரங்குமுலை' என்பதும் பாடம்.

வெய்ய வுவர்க்கு மென்றனி
ரைய வற்ற லன்பின் பாலே." (குறுந்-196.)

என வரும்.

பாணர் கூத்தர் விறலியர் என்று இவர்—பாணருங் கூத்தரும் விறலியருமென்று சொல்லுகின்ற இம் மூவரும்; பேணிச் சொல்லிய குறைவினை எதிரும்—விரும்பிக்கூறிய குறையுறும் வினைக்கு எதிராகவும்: கூற்று நிகழும்.

'எதிரு' மென்றது அவர் வாயில்வேண்டிய வழித் தோழி அவர்க்கு மறுத்தலும் மறுத்தாள்போல நேர்தலுங் கூறியதாம்.

உதாரணம்:

“புலைமக னுதலிற் பொய்ந்நின் வாழி
யில்லல் பாண செல்லினிப் பரியல்
பகலெஞ் சேரி சாணி
ன கல்வய லூர னுணவும் பெறுமே."

இது பாணர்க்கு வாயின்மறுத்தது.

“விளக்கி னன்ன சுடர்விடு தாமரைக்
களிற்றுச் செவியன்ன பாசடை தயங்க
வுண்டுறை மகளி ரிரியக் குண்டுநீர்
வாளை பிறழு மூரற்கு நாளை
மகட்கொடை யெதிர்ந்த மடங்கெழு பெண்டே
தொலைந்த நாவி னுலைந்த குறுமொழி
யுடன்பட் டோராத் தாயரோ டொழிபுடன்
சொல்லலை கொல்லோ நீயே வல்லைக்
கன்றுபெறு வல்சிப் பாணன் கையதை
வள்ளுயிர்த் தண்ணுமை போல
வுள்யாது மில்லதோர் போர்வையஞ் சொல்லே"
(நற்றிணை-310.)

இது விறலிக்கு வாயின்மறுத்தது. மறுப்பாள்போல் நேர்வ வந்துழிக் காண்க.

(நீத்த கிழவனை நிகழுமாறு படீஇக் காத்த தன்மையிற் கண்ணின்று பெயர்ப்பினும்) நீத்த கிழவனை—பரத்தையிற் பிரிந்து தலைவியைக் கைவிட்ட தலைவனை; நிகழுமாறு படீஇ—தானொழுகும் இல்லறத்தே படுத்தல்வேண்டி; காத்த தன்மையிற்—புறத்தொழுக்கிற் பயனின்மைகூறிக் காத்த தன்மையினாலே; கண் இன்று பெயர்ப்பினும்—கண்ணோட்டமின்றி நீக்கினும்:

உதாரணம்:

“மனையுறை கோழிக் குறுங்காற் பேடை
வேலி வெருகின் மாலை யுற்றெனப்
புகுமிட னறியாது தொகுபுடன் குழீஇப்
பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்
கின்னா திசைக்கு மம்பலொடு
வாரல் வாழிய ரையவெந் தெருவே.” (குறுந்-139.)

இதனுள் ‘அம்பலொடு வார’ லெனவே பன்னாள் நீத்தமையுங் கண்ணின்று பெயர்த்தமையுங் கூறிற்று. கோழி போலத் தாயர் மகளிரைத் தழீஇக்கொண்டாரென்றலிற் புறம்போயும் பயமின்றெனக் காத்ததன்மை கூறிற்று.

(பிரியுங் காலை எதிர்நின்று சாற்றிய மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்) பிரியுங் காலை எதிர்நின்று சாற்றிய—தலைவன் கற்பிடத்துப் பிரியுங்கால் தெய்வத்தன்மையின்றி முன்னின்று வெளிப்படக்கூறிய; மரபுடை எதிரும் உளப் படப் பிறவும்—முறையுடைத்தாகிய எதிர்காலமும் இறந்த காலமும் உட்படப் பிறவற்றுக்கண்ணும்:

எதிருமென்ற உம்மை எச்சவும்மை. 'பிற' ஆவன தலைவன் வரவுமலிர்ந்து கூறுவனவும், வந்தபின்னர் முன்பு நிகழ்ந்தன கூறுவனவும், வற்புறுப்பாள் பருவமன்றெனப் படைத்துமொழிவனவுந், தூதுகண்டு கூறுவனவுந், தூது விடுவனவுஞ், சேணிடைப் பிரிந்தோன் இடைநிலத்துத் தங்காது இரவின்வந்துழிக் கூறுவனவும், நிமித்தங்காட்டி கூறுவனவும், உடன்சேறலை மறுத்துக் கூறுவனவும் பிறவுமாம்.

"பாஅலஞ்செவி" என்னும் பாலைக்கலியுள்,

"பொய்ந்நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்
டெந்நாளோ நெடுந்தகாய் நீசெல்வ
தந்நாள்கொண் டிறக்குமிவ ளரும்பெற லுயிரே" (கலி-5.)

இதனுட் 'புரிந்தனை' யென இறப்பும் 'இறக்குமென' எதிரும் மரபில் தப்பாமல் வந்தவாறு காண்க.

"வேனிற் றிங்கள் வெஞ்சுர மிறந்து
செலவயர்ந் தனையா னீயே நன்று
மின்னயந் துறைவி கடுஞ்சூற் சிறுவன்
முறுவல் காண்டலி னினிதோ
இறுவரை நாடநீ *விரைந்துசெய் பொருளே"
(ஐங்குறு-309.)

இஃது எதிரது நோக்கிற்று.

"புறவணி நாடன் காதன் மடமக
ளொண்ணுதல் பசப்ப நீசெலிற் றெண்ணீர்ப்
போதவிழ் தாமரை யன்னநின்
காதலம் புதல்வ †னழுமினி முலைக்கே." (ஐங்குறு-424.)

---

* 'இறந்துசெய்பொருளே' என்பதும் பாடம்.

† 'அழுமணி' என்பதும் பாடம்.

இதுவும் அது.

இனிப் 'பிற' வருமாறு:

" பார்வை வேட்டுவன் படுவலை வெரீஇ
நெடுங்காற் கணந்துளம் புலம்புகொ டெள்விளி
சுரஞ்செல் கோடியா கதுமென விசைக்கு
*நரம்பொடு கொள்ளு மத்தத் தாங்கட்
கடுங்குரற் பம்பைக் கதநாய் வடுகர்
நெடும்பெருங் குன்ற நீந்தி நம்வயின்
வந்தனர் வாழி தோழி கையதை
செம்பொற் கழறொடி நோக்கி மாமகன்
கவவுக்கொ ளின்குரல் கேட்டொறு
மவவுக்கொண் மனத்தே மாகிய நமக்கே." (நற்றிணை-212.)

இது தலைவிக்கு †வரவுமலிந்தது. நற்றிணை.

" நீலத் தன்ன நீர்பொதி கருவின்
மாவிசும் பதிர முழங்கி யாலி
விலந்தண் ணென்று கானங் குழைப்ப
வினந்தே ருழவ ரின்குர லியம்ப
மறியுடை மடப்பிணை தழீஇப் புறவிற்
றிரிமருப் பிரலை பைம்பயி ருகள
வார்பெய லுதவிய கார்செய் காலை
நூனெறி நுணங்கிய கானவில் புரவிக்
கல்லெனக் கறங்குமணி யியம்ப வல்லோன்
‡கவர்ச்செல வணக்கி யதர்ப்பரி நெடுந்தே

---

* 'கடும்பொடு' என்பதும் பாடம்.

† 'வரவுமலிதல்' என்பது தலைமகன் வரவினைக்கண்டு அகம்மலி உவகையளாய்த் தோழி கூறுவது.

‡ 'வாய்ச்செல' என்பதும் பாடம்.

*"ஈர்ம்புற வியங்குவழி யறுப்பத் தீந்தொடைப்
பையு ணல்யாழ் செவ்வழி மறப்ப
வின்னிலை வாரா ராயிற் றன்னிலை
யென்கொல் பாண வுணர்த்திசிற் சிறிதெனக்
கடவுட் கற்பின் மடவோள் கூறச்
செய்வினை யழிந்த மைய னெஞ்சிற்
றுனிகொள் பருவர றீர வந்தோ
யினிது செய்தனையால் வாழ்கநின் கண்ணி
வேலி சுற்றிய வால்வீ முல்லைப்
பெருந்தகழ் கமழும் விரிந்தொலி கதுப்பி
னின்னகை யிளையோள் கலவ
மன்னுக பெருமநின் மலர்ந்த மார்பே." (அகம்-313.)

இது முன்பு தலைவிக்கு நிகழ்ந்த ஆற்றாமையும் அது கண்டு தான் கலங்கியவாறுந் தலைவற்குக் கூறியது.

"மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா வளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிணர் ரூழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே." (குறுந்-66.)

இது பருவம் அன்றெனப் படைத்து மொழிந்தது.

"எனநீ, தெருமரல் வாழி தோழிநங் காதலர்
பொருமுரண் யானையர் போர்மலைந் தெழுந்தவர்
செருமேம் பட்ட வென்றியர்
வருமென வந்தன்றவர் வாய்மொழித் தூதே." (கலி-26.)

இது தூதுவந்தமை தலைவிக்குக் கூறியது.

"கைவல் சீறியாழ்ப் பாண நுமரே
செய்த பருவம் வந்துநின் றதுவே

---

* 'ஈரிய புறவி னியங்குவழி யறுப்ப' என்பதும் பாடம்.

யெம்மி னுணரா ராயினுந் தம்வயிற்
பொய்படு கிளவி நாணலு
மெய்யா ராகுத ளேகோ யானே.'' (ஐங்குறு-472.)

இது குறித்த பருவத்துத் தலைவன் வாராதவழித் தூதாய்வந்த பாணற்குத் தோழி கூறியது.

தூதுவிட்டது வந்துழிக் காண்க.

“பதுக்கைத் தாய வொதுக்கருங் கவலைச்
சிறுகண் யானை யுறுபகை நினையா
தியாங்குவந் தனையோ பூந்தார் மார்ப
வருள்புரி நெஞ்ச முய்த்தர
விருள்பொர நின்ற விரவி னானே.'' (ஐங்குறு-362.)

இது சேணிடைப்பிரிந்து இரவின்வந்துழிக் கூறியது.

“ஆமா சிலைக்கு மணிவரை யாரிடை
யேமாண் சிலையார்க் கினமா விரிந்தோடுந்
தார்மாண்பில் வெஞ்சுரஞ் சென்றார் வரக்கூறும்
வாய்மாண்ட பல்லி படும்.''

இது நிமித்தங் காட்டிக் கூறியது.

இன்னும் அதனானே நமர் பொருள்வேண்டுமென்றார் அதற்கு யான் அஞ்சினேனெனக் களவின் நிகழ்ந்ததனைக் கற்பில் தலைவிக்குக் கூறுதலுங் கொள்க.

“கன்னவி றோளான் கடிநாள் விலக்குதற்
கென்னை பொருணினைந்தா ரேந்திழாய்—பின்ன
ரமரேற்றுக் கொள்ளுமென் றஞ்சினே னஞ்சார்
நமரேற்றுக் கொள்ளாத நான்று.''

என வரும்.

இன்னுந் தோழிகூற்றாய்ப் பிறவாற்றான் வருவன வெல்லாம் இதனான் அமைக்க.

"அன்னை வாழிவேண் டன்னை நம்மூர்ப்
பலர்மடி பொழுதி னலமிகச் சாஅய்
நள்ளென வந்த வியறேர்ச்
செல்வக் கொண்கன் செல்வனஃ தூரே." (ஐங்குறு-104.)

இது புதல்வற்பெற்றுழித் தலைவன் மனைக்கட்சென்று செவிலிக்கு அறத்தொடு நின்று வதுவைகூட்டிய தோழி அவன் ஊர் காட்டிக் கூறியது.

வகைபட வந்த கிளவி எல்லாம் தோழிக்கு உரிய என்மனார் புலவர்—தோழிகூற்றாய்த் தலைவிகூற்றினுள் அடங்குவதன்றித் தோழிக்கே கூறத்தகும் வேறுபாடு உண்டாக வந்த கிளவிகளெல்லாந் தோழிக்கு உரியவென்று கூறுவர் புலவர், என்றவாறு.

இச்சூத்திரத்துக்கண் ஏழனுருபும் அவ்வுருபு தொக்குநின்று விரிந்தனவுஞ் செயினென்னும் வினையெச்சமும் உரியவென்னுங் குறிப்புவினை கொண்டன. அவற்றை இன்னவிடத்தும் இன்னவிடத்தும் இன்னதுசெய்யினும் உரியவென்று ஏற்பித்து முடிக்க. (கூ)

151. புல்லுதன் மயக்கும் புலவிக் கண்ணு
மில்லோர் செய்வினை யிகழ்ச்சிக் கண்ணும்
பல்வேறு புதல்வர்க் கண்டுநனி யுவப்பினு
மறையின் வந்த மனையோள் செய்வினை
பொறையின்று பெருகிய பருவரற் கண்ணுங்
காதற் சோர்விற் கடப்பாட் டாண்மையிற்
றாய்போற் றழீஇக் கழறியம் மனைவியைக்
காய்வின் றவன்வயிற் பொருத்தற் கண்ணு

மின்னகைப் புதல்வனைத் தழீஇ யிழையணிந்து
பின்னர் வந்த வாயிற் கண்ணு
மனையோ ளொத்தலிற் றன்னோ ரன்னோர்
மிகைபடக் குறித்த கொள்கைக் கண்ணு
மெண்ணிய பண்ணையென் றிவற்றொடு பிறவுங்
கண்ணிய காமக் கிழத்தியர் மேன.

இது காமக்கிழத்தியர் கூற்றெல்லாந் தொகுத்துக் கூறுகின்றது: காமக்கிழத்தியராவார் கடனறியும் வாழ்க்கையுடையராகிக் காமக்கிழமைபூண்டு இல்லறநிகழ்த்தும் பரத்தையர். அவர் பலராதலிற் பன்மையாற் கூறினார். அவர் தலைவனது இளமைப்பருவத்திற் கூடி முதிர்ந்தோரும், அவன் தலைநின்று ஒழுகப்படும் இளமைப்பருவத்தோரும், இடைநிலைப்பருவத்தோருங், காமஞ்சாலா இளமையோருமெனப் பலபகுதியாம். இவரைக் 'கண்ணிய காமக்கிழத்திய'ரெனவே கண்ணாத காமக்கிழத்தியரும் உளராயிற்று. அவர் கூத்தும் பாட்டும் உடையராகிவருஞ் சேரிப்பரத்தையருங் குலத்தின்கண் இழிந்தோரும் அடியரும் வினைவலபாங்கினரும் பிறருமாம். இனிக் காமக்கிழத்தியரைப், பார்ப்பார்க்குப் *பார்ப்பனியையொழிந்த மூவரும், ஏனையோர்க்குத் தங்குலத்தல்லாதோரும், வரைந்துகொள்ளும் பரத்தையருமென்று பொருளுரைப்பாரும் உளர். அவர் அறியார்; என்னை? சிறப்புடைத் தலைவியரொடு பரத்தையரையுங் கூட்டிக் காமக்கிழத்தியரென்று ஆசிரியர் சூத்திரஞ்செய்யின் மயங்கக்கூறலென்னுங் குற்றந்தங்குமாதலின். அன்றியுஞ் சான்றோர் பலருங்

---

* 'பார்ப்பினி' என்பதும் பாடம்.

காமக்கிழத்தியரைப் பரத்தையராகத் தோற்றுவாய்செய்து கூறுமாறும் உணர்க.

இதன்பொருள்: புல்லுதன் மயக்கும் புலவிக்கண்ணும்—தலைவன் தனது முயக்கத்தைத் தலைவியிடத்துந் தம்மிடத்தும் இடைவிட்டு மயக்குதலால் தலைவிக்கண்டோன்றிய புலவியிடத்தும்: காமக்கிழத்தியர் புலந்து கூறுப.

உதாரணம்:

"மண்கணை முழவொடு மகிழ்மிகத் தூங்கத்
தண்டுறை யூரனெஞ் சேரி வந்தென
வின்கடுங் கள்ளி *னகுதை களிற்றொடு
நன்கல னீயு நாண்மகி ழிருக்கை
யவைபுகு பொருநர் பறையி னானது
கழறுப வென்பவவன் பெண்டி ரந்திற்
கச்சினன் கழலினன் றேந்தார் மார்பின்
வகையமை பொலிந்த வனப்பமை தெரியற்
சுரியலம் பொருநனைக் காணி ரோவென
வாதி மந்தி பேதுற் றினையச்
சிறைபாய்ந் துரைஇச் செங்குணக் கொழுகு
மந்தண் காவிரி போலக்
கொண்டுகை வலித்தல் சூழ்ந்திசின் யானே." (அகம்-76.)

இதனுள் எஞ்சேரி வந்தெனக் கழறுபவென்ப அவன் பெண்டிரென முன்னேனான்று புல்லுதன்மயக்குதலால் தலைவிபுலந்தவாறும் அதுகண்டு காமக்கிழத்தி கொண்டுகைவலிப்பலெனப் பெருமிதம் உரைத்தவாறுங் காண்க.

---

* 'அகுதை' என்னுஞ் சொல் பரிசிலர்க்குக் களிற்றியானை வழங்கிய கொடையாளி ஒருவர்க்குப் பெயராகப் பண்டை நூல்களிற் காணப்படுகின்றது; இதனைப் "பொய்யாகியரோ" என்னும் புறப்பாட்டினுன் உணர்க.

இது பெருமிதங்கூறலின் இளமைப்பருவத்தாள் கூற்று யிற்று.

"ஒண்டொடி யாயத் துள்ளு நீயயந்து
கொண்டனை யென்பவோர் குறுமகள்" (அகம்-96.)

எனக் காமஞ்சாலா இளமையோளைக் கூறிற்று.

இரட்டுற மொழிதலென்பதனாற் பரத்தையரிடத்துப் புலப்பட ஒழுகாது அவர்புல்லுதலை மறைத்தொழுகுதலாற் காமக்கிழத்தியர்க்குப் பிறக்கும் புலவிக்கண்ணும் அவர்க்குக் கூற்று நிகழுமெனவும் பொருள் கூறுக. உதாரணம், "கண்டேனின் மாயங் களவாதல் பொய்ந்நகா" (கலி-90) என்னும் மருதக்கலியுட் காண்க.

இல்லோர் செய்வினை இகழ்ச்சிக்கண்ணும்—இல்லிடத்திருந்த தலைவனுந் தலைவியும் ஊடியும் உணர்த்தியுஞ் செய்த தொழிலைக்கேட்டு இகழும் இகழ்ச்சிக்கண்ணும்:

உதாரணம்:

"கழனி மரத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூர
னெம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையுங் காலுந் தூக்கத் தூக்கு*
மாடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் றாய்க்கே." (குறுந்-8.)

"நன்மரங் குழீஇய நனைமுதிர் சாடிப்
பன்னா ளரித்த கோதுடை வைப்பின்
மயங்குமழைத் துவலையின் மறுகுடன் பனிக்கும்

* 'தூங்கும்' என்பதும் பாடம்.

பழம்ப னெல்லின் *வேளூர் வாயி
னறுவிரை †தெளித்த நாறிணர் மாலை
பொறிவரி யினவண் டூதல் கழியு
முயர்பலி பெறூஉ முருகெழு கதவம்
புனையிருங் கதுப்பி னீகடுத் தோள்வயி
னனையே னாயி னணங்குக வென்னென
மனையோட் டேற்று மகிழ்ந ளாயின்
யார்கொல் வாழி தோழி ‡நெருநை
தார்பூண் களிற்றிற் றலைப்புனைத் தழீஇ
வதுவை யீரணிப் பொலிந்த நம்மொடு
புதுவது வந்த காவிரிக்
கொடுத்தோய் மலிர்நிறை யாடி யோரே." (அகம்-165.)

என வரும்.

இவையும் இளையோர் கூற்று. பிறவும் அன்ன.

பல்வேறு புதல்வர்க் கண்டு நனி உவப்பினும்—வெவ்வேறாகிய புதல்வரைத் தாங்கண்டு மிகமகிழ்ச்சிசெய்யினும்:

'வேறுபல் புதல்வ' ரென்றார் முறையாற்கொண்ட மனைவியர் பலரும் உளராதலின்.

"ஞாலம் வறந்தீர" என்னும் மருதக்கலியுள்,

"அடக்கமில் போழ்தின்கட் டந்தைகா முற்ற
தொடக்கத்துத் தாயுழைப் புக்காற் கவளு

---

* 'பேரூர்' என்பதும் பாடம்.

† 'களித்த' என்பதும் பாடம்.

‡ நேற்று எனப் பொருள்படும் 'நெருநல்' என்னுஞ் சொல் 'நெருநை' எனவும் நிற்றல் "நெருநைப் பகலிடங் கண்ணிப் பலரொடுங் கூடி" எனப் புறத்தினும், "நெருநை யாடினை யென்ப புனலே" என்னும் ஐங்குறுநூற்றினுங் காண்க.

மருப்புப்பூண் கையுறை யாக வணிந்து
பெருமா நகைமுகங் காட்டென்பாள் கண்ணீர்
சொரிமுத்தங் காழ்சோர்வ போன்றன.'' (கலி-82.)

இது முதிர்ந்தாள் உண்ணயர்ந்து கூறியது.

“மற்றும், வழிமுறைத் தாயுழைப் புக்காற் கவளு
மயக்குநோய் தாங்கி மகனெதிர் வந்து
முயங்கினண் முத்தின ணோக்கி நினைந்தே
நினைக்கியாம் யாரே மாகுது மென்று
வனப்புறக் கொள்வன நாடி யணிந்தனள்.'' (கலி-82.)

இதனுள் நோய்தாங்கினளென இளமைப்பருவத்து மகிழ்ச்சியும் முதிர்ந்த பருவத்து மறவியுந் தோன்றக் கூறு மையினானும் வழிமுறைத்தா யென்றமையானும் இஃது இடைநிலைப் பருவத்தாள் கூற்று.

“அவட்கினி தாகி விடுத்தனன் போகித்
தலைக்கொண்டு நம்மொடு காயுமற் றீதோர்
புலத்தகைப் புத்தேளில் புக்கான்.'' (கலி-82.)

என்றவழிப் புத்தேளென்றதுவுந் தலைநின்றொழுகும் இளையோளைக் கூறியது.

“தந்தை யிறைத்தொடீஇ மற்று;
இஃதிவன், றன்கைக்கட் டந்தா ரியார்;
எல்லா விது விஃதொன்று;'' (கலி-84.)

என்றாற்போல அவள் கொடுப்பக் கொள்வனவுங் கொள்க.

(மறையின் வந்த மனையோள் செய்வினைப் பொறையின்று பெருகிய பருவரற்கண்ணும்) மறையின் வந்த—தலைவற்கு வேறோர் தலைவியோடு களவொழுக்கம் நிகழ்தலின்

அவன் செய்திகளின் *வேறுபாட்டால் தமக்குப் புலப்பட வந்த; மனையோள் செய்வினை—மனையோளாதற்குரியவள் தமர்பணித்தலிற் றைந் நீராடலும் ஆருடலும் முதலிய செய் தொழில்களைச் செய்யுமிடத்து; பொறை இன்று பெருகிய பருவரற்கண்ணும்—இவள் தோற்றப்பொலிவால் தலைவன் கடிதின்வரைவனெனக் கருதிப் பொறுத்தலின்றி மிக்க வருத்தத்தின் கண்ணும்:

உதாரணம்:

"வாளை வாளிற் பிறழ நாளும்
பொய்கை நீர்நாய் வைகுதுயி லேற்குங்
கைவண் கிள்ளி வெண்ணி சூழ்ந்த
வயல்வெள் ளாம்ப லுருவ நெறித்தழை
யைதக லல்கு லணிபெறத் தைஇ
விழவிற் செலீஇயர் வேண்டு மன்னோ
யாண ரூரன் காணு நாயின்
வரையா மையோ வரிதே வரையின்
வரைபோல் யானை வாய்மொழி முடியன்
வரைவேய் புரையு நற்றோ
ளளிய தோழி தொலையுந பலவே." (நற்றிணை-390.)

இதனுள் விழவிற்செல்கின்ற தலைவியைக்கண்டு காமக் கிழத்தி இவள் தோற்றப்பொலிவோடு புறம்போதரக் காணின் வரைவனெனவும் அதனான் இல்லுறைமகளிர் பலருந் தோள்நெகிழ்பவெனவும் பொறாது கூறியவாறு காண்க.

(காதற் சோர்விற் கடப்பாட்டு ஆண்மையில் தாய் போல் தழீஇக் கழறி அம்மனைவியைக் காய்வு இன்று அவன் வயிற் பொருத்தற்கண்ணும்) காதற் சோர்வில்—தானுங்

* 'வேறுபட்டவா றெமக்கு' என்பதும் பாடம்.

காய்தற்குரிய காமக்கிழத்தி தலைவன் தன்மேற் காதலை*மறத் தலானும்; கடப்பாட்டாண்மையிற் சோர்வில் — அவற்கு இல்லொடு பழகிய தொல்வரற் கிழமையாகிய ஒப்புரவின்மை யானும்; தாய்போல் தழீஇக் கழறி — தலைவியைச் செவிலி போல உடன்படுத்திக்கொண்டு தலைவனைக் கழறி; அம்மனை வியைக் காய்வின்று அவன்வயிற் பொருத்தற்கண்ணும் — அத்தலைவியைக் காய்தலின்றாக்கித் தலைவனிடத்தே கூட்டு மிடத்தும்:

இது துனிநிகழ்ந்துழித் தலைவனது தலைவளரிளமைக்கு ஒருதுணையாகி முதிர்ந்த காமக்கிழத்தி இங்ஙனங் கூட்டு மென்றார்.

உதாரணம்:

"வயல்வெள் ளாம்பற் *சூடுதரு புதுப்பூக்
கன்றுடைப் புனிற்றா தின்ற மிச்சில்
லோய்வுடை நடைப்பக டாரு மூரன்
றொடர்புநீ வெஃகினை யாயி னென்சொற்
கொள்ளன் மாதோ முள்ளெயிற் றோயே
நீயே பெருநலத் தகையே யவனே
நெடுநீர்ப் பொய்கை நடுநா ளெய்தித்
தண்கமழ் புதுமல ரூதும்
வண்டென மொழிப மகனென் னாரே." (நற்றிணை-290.)

இதனுள் நீ இளமைச்செவ்வியெல்லாம் நுகர்ந்து புதல் வற்பயந்த பின்னர் உழுதுவிடு பகடு எச்சிலை அயின்றாற் போலப் பிறர் அவனை நுகர்ந்தமை நினக்கு இழுக்கன்றெனவும், அவனோடு கூட்டம் நெடுங்காலம் நிகழ்த்தவேண்டும் நீ அவள் அவனோடு கட்டில்வரை எய்தியிருக்கின்றாளென்று

* 'சூடுதெரி' என்பதும் பாடம்.

ஊரார்கூறுகின்ற சொல்லை என்னைப்போல வேறுபட்டுக் கொள்ளாதே கொள்வது நின் இளமைக்கும் எழிற்கும் ஏலா தெனவும், அவனை வண்டென்பதன்றி மகனென்றாராதலின் அவன் கடப்பாட்டாண்மை அதுவென்றுங் கூறினள்.

இனி "என்சொற்கொள்ளன்மாதோ" என்பதற்கு என் வார்த்தையைக் கேட்டல்நினக்கு விருப்பமோ? விருப்பமாகில் யான் கூறுகின்றதனைக் கொள்க.

"ஈண்டுபெருந் தெய்வத் தியாண்டுபல கழிந்தெனப்
பார்த்துறைப் புணரி யலைத்தலிற் புடைகொண்டு
மூத்துவினை போகிய முரிவா யம்பி
நல்லெருது நடைவளம் *வைத்தென வுழவர்
புல்லுடைக் காவிற் றொழில்விட் டாங்கு
நறுவிரை நன்புகைக் கொடாஅர் சிறுவீ
ஞாழலொடு கெழீஇய புன்னையங் கொழுநிழன்
முழவுமுதற் பிணிக்குந் துறைவ நன்றும்
விழுமிதிற் கொண்ட கேண்மை நொவ்விதிற்
றவறுநற் கறியா யாயி †னெம்போன்
ஞெகிழ்தோட் கலுழ்ந்த கண்ணர்
மலர்தீய்ந் தனையர் நின்னயந் தோரே." (நற்றிணை-315.)

இதனுள் மூத்துவினை போகிய அம்பிபோலப் பருவஞ் சென்ற பிணிக்கப்பட்ட எம்மைப்போலாது இவள் இப்பருவத்தே இனையளாகற் பாலளோ மலர்ந்த செவ்வியான் முறைவியாய்க் கழியாது இடையே எரிந்து கரிவுற்ற பூவினைப் போலவெனத் தலைவனுக்குக் காமக்கிழத்தி கூறியவாறு காண்க.

* 'வாய்த்தென' என்பதும் பாடம்.
† 'என்போல்' என்பதும் பாடம்.

(இன் நகைப் புதல்வனைத் தழீஇ இழை அணிந்து பின்னர் வந்த வாயிற்கண்ணும்) இன்நகைப் புதல்வனைத் தழீஇ இழை அணிந்து—கண்டோர்க்கெல்லாம் இன்பத்தைப் பயக்கும் புதல்வனை எடுத்துப் பொலங்கலத்தாற் புனைந்துகொண்டு ; பின்னர் வந்த வாயிற் கண்ணும்—பலவாயில்களையும் மறுத்தபின்னர் வாயிலாகக்கொண்டு புகுந்த வாயிலின் கண்ணும் :

உதாரணம் :

"என்குறித் தனன்கொல் பாணநின் கேளே
வன்புறை வாயி லாகத் தந்த
பகைவரு நகூஉம் புதல்வனை
நகுவது கண்டு நகூஉ மோரே.''

இதனுள் வன்புறை வாயிலாகிய புதல்வனைக் கண்டு நகுவாரைத் தனக்கு நகுவாரைப்போல நகாநின்றுனெனக் காமக்கிழத்தி கூறி வாயில்நேர்ந்தவாறு காண்க. 'பகைவரும் நகூஉ'மெனவே தான் புலக்கத்தகுந் தலைவியர் புதல்வனென்றுளாயிற்று.

(மனையோள் ஒத்தலில் தன்னோர் அன்னோர் மிகைபடக் குறித்த கொள்கைக்கண்ணும்) மனையோள் ஒத்தலின்—தானும் உரிமைபூண்டமைபற்றி மனையோளொடு தானும் ஒத்தாளாகக் கருதுதலின் ; தன்னோர் அன்னோர் மிகைபடக் குறித்த கொள்கைக்கண்ணும்—தன்னை ஒக்கும் ஏனைமகளிரின் தன்னை விசேடமுண்டாகக் குறித்துக்கொண்ட கோட்பாட்டின் கண்ணும் :

உதாரணம் :

"*புழற்காற் சேம்பின் கொழுமட லகலிலைப்
பாசிப் பரப்பிற் பறழொடும் வதிந்த
வுண்ணாப் பிணவி †னுயக்கஞ் சொலிய
நாளிரை தரீஇய வெழுந்த நீர்நாய்
வாளையொ டுழப்பத் துறைகலுழ்ந் தமையிற்
றெண்கட் டேறன் மாந்திய மகளிர்
நுண்செய லங்குட னிரீஇப் பண்பின்
மகிழ்நன் பரத்தை பாடிய வீழிணர்க்
காஞ்சி நீழற் குரவை யயருந்
தீம்பெரும் பொய்கைத் துறைகே ழூரன்
றேர்தர வந்த நேரிழை மகளி
ரேசுப வென்பவென் னலனே யதுவே
பாக னெடிதுயிர் வாழ்தல் காய்சினக்
கொல்களிற் றியானை நல்கா மாறே
தாமும் பிறரு முளர்போற் ‡சென்றனர்
முழவிமிழ் துணங்கை தூங்கும் விழவினுள்
யானவண் வாரா மாறே வரினே
சுடரொடு திரிதரு நெருஞ்சி போல
வென்னொடு திரியே னயின் வென்வேன்
மாரியம்பின் மழைத்தோற் சோழர்
வில்லீண்டு குறும்பின் வல்லத்துக் குறும்பிளை
யாரியர் படையி னுடைகவென்
னேரிறை முன்கை வீங்கிய வளையே." (அகம்-335.)

இதனுள் யான் அவண் வாராமாறே எனத் தான் மனை யோளைப்போல் இல்லுறைதல்கூறி யாண்டுச்செல்லிற் சுட

---

* 'குழற்கால்' என்பதும் பாடம்.

† 'உய்கதஞ்சொலிய' என்பதும் பாடம்.

‡ 'சேறல்' என்பதும் பாடம்.

ரொடுதிரியும் நெருஞ்சிபோல என மகளிரை யான்செல்வு ழிச் செல்லுஞ் சேடியர்போலத் திரியும்படி பண்ணிக்கொள் வலெனக் கூறியவாறு காண்க.

எண்ணிய பண்ணை—தலைவற்குத் தகுமென்று ஆய்ந்த யாறுங் குளனும் காவும் ஆடிப் பதியிகந்து நுகர்வனபோல் வனவற்றுக்கண் தாமும் விளையாடுதற்கண்ணும் :

உதாரணம் :

" கூந்த லாம்பன் முழுநெறி யடைச்சிப்
பெரும்புனல் வந்த விருந்துறை விரும்பி
யாமஃ தயர்கஞ் சேறுந் தானஃ
தஞ்சுவ துடைய ளாயின் வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வே லெழினி
முனையான் பெருநிரை போலக்
கிளையொடு காக்கதன் கொழுநன் மார்பே." (குறுந்-80.)

இதனுள் யாமஃதயர்கஞ்சேறும் என விளையாட்டுக் கூறினாள்.

என்று இவற்றொடு பிறவும்—இக்கூறியவற்றின் கண் ணும், புதல்வற்கண்டு நனியுவப்பினுங் கூற்று நிகழுமென்று கூறப்பட்ட இவ்வெட்டோடே பிறகூற்றுக்களும் ; கண்ணிய காமக்கிழத்தியர் மேன—இக்கருதப்பட்ட காமக்கிழத்திய ரிடத்தன, என்றவாறு.

கூற்றென்பது அதிகாரத்தான் வருவிக்க ; ஒடுவென் றது, உருபு ; கண்ணுதல், ஒருமனைத் தெருவின்கண் உரிமை பூண்டு இல்லறநிகழ்த்துவரென்று சிறப்புக்கருதுதல். 'பிறவு' மென்றதனால் தலைவனை என்னலந் தாவெனத் தொடுத்துக் கூறுவனவும், நின் பரத்தைமையெல்லாம் நின் றலைவிக்கு

உரைப்பலெனக் கூறுவனவுஞ், சேரிப்பரத்தையரொடு புலந்துரைப்பனவுந், தலைவிகூற்றோடொத்து வருவனவும் பிறவாறு வருவனவுங் கொள்க.

"தொடுத்தென மகிழ்ந செல்லல் கொடித்தேர்ப்
பொலம்பூ ணன்னன் புனனாடு கடிந்தென
யாழிசை மறுகிற் பாழி யாங்க
ணஞ்ச லென்ற வாவு வெயின
னிகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
தன்னுயிர் *கொடுத்தனன் சொல்லிய தமையாது
தெறலருங் கடவுண் முன்னர்த் தேற்றிய
மெல்லிறை முன்கை பற்றிச் சொல்லிறந்
தார்வ நெஞ்சந் தலைத்தலை சிறப்பநின்
மார்புதரு கல்லாய் பிறனு யினையே
யினியான் விடுகுவெ னல்லென் மந்தி
பனிவார் கண்ண பலபுலந் துறையக்
கடுந்திற லத்தி யாடணி நசைஇ
நெடுநீர்க் காவிரி கொண்டொளித் தாங்குநின்
மனையோ ளவ்வல மஞ்சுவல் சினைஇ
யாரிய ரலறத் தாக்கிய பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் †பிணித்தோன்
வஞ்சி யன்னவென் னலந்தந்து சென்மே." (அகம்-396.)

இது காமக்கிழத்தி என்னலந்தாவென்றது.

"உள்ளுதொறு நகுவேன் றோழி வள்ளுகிர்
மாரிக் கொக்கின் கூரல கன்ன
குண்டுநீ ராம்பற் றண்டுறை யூரன்
றேங்கம ழைம்பால் பற்றி யென்வயின்

* 'கொடுத்தநன்னன்' என்பதும் பாடம்.
† 'பணித்தோன்' என்பதும் பாடம்.

வான்கோ லெல்வளை வெளவிய பூசல்
சினவிய முகத்துச் சினவாது சென்றுநின்
மனையோட் குரைப்ப லென்றலின் முனையூர்ப்
பல்லா நெடுநிரை வில்லி னொய்யுந்
தேர்வண் மலையன் முந்தைப் பேரிசைப்
புலம்பிரி வயிரியர் நலம்புரி முழவின்
மண்ணார் கண்ணி னதிரு
நன்ன ராள னடுங்களுர் நிலையே." (நற்றிணை-100.)

இது மனையோட்கு உரைப்பலென்றலின் நடுங்கினு னென்றது. "கண்டேனின் மாயம்" என்னும் மருதக்கலியுள்,

"ஆராக் கவவி னொருத்திவந் தல்கற்றன்
சீரார் ஞெகிழஞ் சிலம்பச் சிவந்துநின்
போரார் கதவ மிதித்த தமையுமோ
வாயிழை யார்க்கு மொலிகேளா வவ்வெதிர்
தாழா தெழுந்துநீ சென்ற தமையுமோ
மாறுள் சினைஇ யவளாங்கே நின்மார்பி
னறிணர்ப் பைந்தார் பறிந்த தமையுமோ
தேறிநீ தீயே னலேனென்று மற்றவள்
சீறடி தோயா விறுத்த தமையுமோ." (கலி-90.)

எனச் சேரிப் பரத்தையராற் புலந்து தலைவனோடு கூறிய வாறு காண்க. இன்னும் இதனானே,

"நீளிரும் பொய்கை யிரைவேட் டெழுந்த
வாளை வெண்போத் துணீஇய நாரைதன்
னடியறி வுறுத லஞ்சிப் பைப்பயக்
கடியிலம் புகூஉங் கள்வன் போலச்
சாஅ யொதுங்குந் துறைகே ழூரனொ
டொல்கா தாக* வினிநா ளுண்டோ
வருகதி லம்மவெஞ் சேரிசேர

* 'ஆவதாக' என்பதும் பாடம்.

வரிவே லுண்கணன் பெண்டிர் காணத்
தாருந் தானையும் பற்றி யாரியர்
பிடி†பயிர்ந்து தரூஉம் பெருகளிறு போலத்
தோள்கந் தாகக் கூந்தலிற் பிணித்தவன்
மார்புகடி கொள்ளே னாயி னார்வுற்
றிரந்தோர்க் கீயா தீட்டியோன் பொருள்போற்
பரந்து வெளிப்படா தாகி
வருந்துக தில்லயா யோம்பிய நலனே." (அகம்-275.)

இதனுட் பரந்து வெளிப்படாதாகி வருந்துக என்னலம் என்றமையிற் சேரிப்பரத்தையைப் புலந்து கூறுதன் முதலியனவுங் கொள்க. இன்னும் வேறுபட வருவனவெல்லாம் இதன்கண் அடக்குக. (௫0)

152. கற்புங் காமமு நற்பா லொழுக்கமு
மெல்லியற் பொறையு நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலுஞ் சுற்ற மோம்பலும்
பிறவு மன்ன கிழவோண் மாண்புகண்
முகம்புகன்முறைமையிற் கிழவோற்குரைத்த
லகம்புகன் மரபின் வாயில்கட் குரிய.

இது விருந்து முதலிய வாயில்கள் போலாது அகநகர்க்கட் புகுதற்குரிய வாயில்கள் கூற்று உணர்த்துகின்றது.

இதன் பொருள்: கற்பும்—கணவன் முதலியோர் கற்பித்த நிலையில் திரியாத நல்லொழுக்கமும்; காமமும்—அன்பும்; நற்பால் ஒழுக்கமும்—எவ்வாற்றானுந் தங் குலத்திற்கு ஏற்றவாற்றான் ஒழுகும் ஒழுக்கமும்; மெல் இயற் பொறையும்—வல்லென்ற நெஞ்சொடு பொறுக்கும் அவனைப்

† 'பயின்று' 'இரந்து' என்பவும் பாடம்.

போலாது ஒருதலையாக மெல்லென்ற நெஞ்சினராய்ப் பொறுக்கும் பொறையும்; நிறையும்—மறை புலப்படாமை நிறுக்கும் நெஞ்சுடைமையும்; வல்லிதின் விருந்து புறந்தருதலும்— வறுமையுஞ் செல்வமுங் குறியாது வல்லவாற்றான் விருந்தினரைப் பாதுகாத்து அவர் மனமகிழ்வித்தலும்; சுற்றம் ஓம்பலும்—கொண்டோன்புரக்கும் நண்புடை மாந்தருஞ் சுற்றத்தாருங் குஞ்சர முதலிய காலேசங்களும் பலபடை மாக்களும் உள்ளிட்ட சுற்றங்களைப் பாதுகாத்து அவை உண்டபின் உண்டலும்; அன்னபிறவுங் கிழவோள் மாண்புகள்—அவைபோல்வன பிறவுமாகிய தலைவியுடைய மாட்சிமைகளை; முகம்புகன் முறைமையிற் கிழவோற்கு உரைத்தல்—அவன் *முகம்புகுதும் முறைமை காரணத்தால் தலைவற்குக் கூறுதல்; அகம்புகன் மரபின் வாயில்கட்கு உரிய—அகநகர்க்கட் புகுந்து பழகி அறிதன் முறைமை யினையுடைய வாயில்களுக்குரிய, என்றவாறு.

அன்னபிறவாவன, அடிசிற்றொழிலுங், குடிநீர்மைக் கேற்றவகையான் தலைமகள் ஒழிந்ததலைமகளிரையும் மனமகிழ்வுறுத்தலுங், காமக்கிழத்தியர் நண்புசெய்து நன்கு மதிக்கப்படுதலும் போல்வன. புகலுதல், மகிழ்தல். செவிலி கூறுமைகொள்க, அவட்கு முகம்புகன் முறைமையின்மையின்.

உதாரணம்:

“கடல்பா டவிந்து தோணி நீங்கி
நெடுநீ ரிருங்கழிக் கடுமீன் கலிப்பினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை தூற்றினு

* ‘முகம் புகலும்’ என்பதும் பாடம்.

மாணிழை நெடுந்தேர் பாணி விற்பப்
பகலு நம்வயி னகலா னாகிப்
பயின்றுவரு மன்னே பனிநீர்ச் சேர்ப்ப
னினியே, மணப்பருங் காமந் தணப்ப நீங்கி
வாரா தோர்நமக் கியாஅ ரென்னாது
மல்லன் மூதூர் மறையினை சென்று
சொல்லி னெவனோ பாண வெல்லி
மனைசேர் பெண்ணை *மடல்வா யன்றி
றுணையொன்று பிரியினுந் துஞ்சா காணெனக்
கண்ணிறை நீர்கொண்டு †காக்கு
மொண்ணுத லரிவையா னென்செய்கோ வெனவே."

(அகம்-50.)

இதனுட் காமமிகுதியாற் கண் தாமே அழவுங் கற்பிற் காக்குமெனத் தலைவி பொறையும் நிறையுந் தோழி பாணற்குக் கூறினாள், அவள் தலைவற்கு இவ்வாறே கூறுவனெனக் கருதி. 'இனி' என்றதனாற் கற்புப்பெற்றாம்.

தலைவற்குக் கூறுவன வந்துழிக் காண்க.

'வாயி லுசாவே தம்முளு முரிய' (தொல்-செய்-201.) என்பதனால் தலைவற்கு ‡உரையாமல் தம்முட் டாமே உசாவுவனவும் ஈண்டே கொள்க.

§ "அணிநிற வெருமை யாடிய வள்ளன்
மணிநிற நெய்த லாம்பலொடு கலிக்குங்
கழனி யூரன் மகளிவள்
பழன வூரன் பாயலின் றுணையே." (ஐங்குறு-96.)

---

* 'மடிவா யன்றில்' என்பதும் பாடம்.

† 'கரக்கும்' எனவும் பாடமோதலாம்.

‡ 'உரையா மாற்றமுறுவனவுடன் உசாவும்' என்பதும் பாடம்.

§ 'அணிநடை யெருமை' என்பதும் பாடம்.

இது கற்புக்கூறியது.

"முளிதயிர் பிசைந்த" (குறுந்-167.) என்பது அடிசிற்றொழிலின்கண் மகிழ்ச்சி வாயில்கள் தம்முட் கூறியது.

"கிழமை பெரியோர்க்குக் கேடின்மை கொல்லோ
பழமை பயனேக்கிக் கொல்லோ—கிழமை
குடிநாய்கர் தாம்பல *பெற்றுருட் கேளா
வடிநாயேன் பெற்ற வருள்." (திணை, 150-134.)

பலவாயில்களை மறுத்த தலைவி தனக்கு வாயில் நேர்ந்தமை † தோழிக்கு விறலி கூறியது. (கக)

153. கழிவினும் வரவினு நிகழ்வினும் வழிகொள
நல்லவை யுரைத்தலு மல்லவை கடிதலுஞ்
செவிலிக் குரிய வாகு மென்ப.

இது செவிலிகூற்று உணர்த்துகின்றது.

இதன் பொருள்: கழிவினும் வரவினும் நிகழ்வினும் வழிகொள—மூன்றுகாலத்துந் தத்தங் குலத்திற்கு ஏற்கும்படியாக; நல்லவை உரைத்தலும்—முற்கூறிய கற்பு முதலிய நல்லவற்றைக் கற்பித்தலும்; அல்லவை கடிதலும்—காமநுகர்ந்த இன்பமாகிய கற்பிற்குத் தீயவற்றைக் கடிதலும்; செவிலிக்கு உரிய ஆகும் என்ப—செவிலித்தாய்க்கு உரியவாகுமென்று கூறுவர் புலவர், என்றவாறு.

உதாரணம்:

"கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவா
ளுட்குடையா ‡ளூரா ணியல்பினு—ளுட்கி

* 'பெற்றுரில்' என்பதும் பாடம்.

† 'தோழி விறலிக்குக் கூறியது' என்பதும் பாடம்.

‡ 'ஊர்நா ணியல்பினுள்' என்பதும் பாடம்.

யிடனறிந் தூட்டி யினிதி னுணரு
மடமொழி மாதராள் பெண்." (நாலடி-39-4.)

கட்கினியாள், இது காமம்; வகைபுனைவாள், இது கற்பு; உட்குடையாள், இஃது ஒழுக்கம்; ஊராண்மை, இது சுற்றமோம்பல்; ஊடியுணர்தல், அல்லவைகடிதல்.

"நாலாறு மாறாய் நனிசிறிதா யெப்புறனு
மேலாறு மேலுரை சோரினு—மேலாய
வல்லாளாய் வாழுமூர் தற்புகழு மாண்கற்பி
னில்லா ளமர்ந்ததே யில்." (நாலடி-39-3.)

என்னும் வெண்பா விருந்துபுறந்தருதல் கூறியதுமாம்.

இனி 'ஆகு' மென்றதனானே செவிலி நற்றாய்க்கு உவந்துரைப்பனவுங் கொள்க.

"கானங் கோழி கவர்குரற் சேவ
*லுண்பொறி யெருத்திற் றண்சித ருறைப்பப்
புதனீர் வாரும் பூநாறு புறவிற்
சீறூ ரோளே மடந்தை வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செல்லினுஞ்
சேர்ந்துவர லறியாது செம்ம றேரே." (குறுந்-242.)

"மறியிடைப் படுத்த மான்பிணை போலப்
†புதல்வ னடுவண ளாகி நன்று
மினிது மன்றவவர் கிடக்கை முனிவின்றி
‡நீனிற வியலகங் கவைஇய
வீனு மும்பரும் பெறலருங் குரைத்தே." (ஐங்குறு-401.)

---

* 'ஒண்பொறி' என்பதும் பாடம்.

† 'புதல்வனை யிவண தாளுகவின்று' என்பதும் பாடம்.

‡ 'நீர்சிறவியலகம்' என்பதும் பாடம்.

"வாணுத லரிவை மகன்முலை யூட்டத்
தானவள் சிறுபுறங் கவையின னன்று
நறும்பூந் தண்புற வணிந்த
குறும்பல் பொறைய நாடுகிழ வோனே." (ஐங்குறு-404.)

இவை உவந்துகூறியன.

"* பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத் தொருகை யேந்திப்
†புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோ
லுண்ணென் றோக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம் பொலிப்பத் தத்துற்
றரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரீஇ மெலிந்தொழியப் பந்த ரோடி
யேவன் மறுக்குஞ் ‡சிறுவிளை யாட்டி
யறிவு மொழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவற னுற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோ றுள்ளா
ளொழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுது §மறுத்துண்ணுஞ் சிறுமது கையளே."
(நற்றிணை-110.)

இது மனையறங் கண்டு $மருண்டு உவந்து கூறியது.

‖ "அடிசிற் கினியாளை யன்புடை யாளைப்
படுசொற் பழிநாணு வாளை—யடிவருடிப்
பின்றூங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தா
லென்றூங்குங் கண்க ளெனக்கு."

---

* 'பீரங்கலந்த' † 'புடைப் புறத்தாற்றும்' என்பதும் பாடம்.
‡ 'சிறுகுடியாட்டி' என்பதும் பாடம்.
§ 'பாத்துண்ணும்' என்பதும் பாடம்.
$ 'மருண்டு மகிழ்ந்து கூறியது' என்பதும் பாடம்.
‖ இப்பகுதி சில ஏட்டுப் பிரதிகளிற் காணப்படவில்லை.

என்னும் பாட்டுச் செவிலிகூற்றன்றாயினுந் தலைவன்மனை யறங்கண்டு கூறியதன்பாற் படுமெனக் கொள்க. (கஉ)

154. சொல்லிய கிளவி யறிவர்க்கு முரிய.

இஃது அறிவரது கூற்றுக் கூறுகின்றது.

இதன்பொருள்: முற்கூறிய நல்லவையுணர்த்தலும் அல்லவை கடிதலுமாகிய கிளவி செவிலிக்கேயன்றி அறிவர்க்கு முரிய, என்றவாறு.

என்றது, அறியாததலைவியிடத்துச் சென்று அறிந்தார் முன்னுள்ளோர் அறம் பொருளின்பங்களாற் கூறிய புறப்புறச் செய்யுட்களைக் கூறிக் காட்டுவரென்பதாம்.

உதாரணம்:

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை." (குறள்-6-5.)

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்." (குறள்-6-6.)

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை." (குறள்-6-1.)

இவை நல்லவையுணர்த்தல்.

"எறியென் றெதிர்நிற்பாள் கூற்றஞ் சிறுகாலை
யட்டிற் புகாதா ளரும்பிணி—யட்டதனை
யுண்டி யுதவாதா ளில்வாழ்பே யிம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை." (நாலடி-37-3.)

"தலைமகனிற் றீர்ந்தொழுகல் தான்பிறரிற் சேற
னிலைமையி றீப்பெண்டிர்ச் சார்தல்—கலனணிந்து

வேற்றூர் புகுதல் விழாக்காண்ட ஞேன்பெடுத்தல்
கோற்றொடியார் கோளழியு மாறு."

இவை அல்லவைகடிதல். இவை அறிவர்கூற்றுதலிற் புறப்புறப் பொருளாயிற்றென உணர்ந்துகொள்க. (கங)

155. இடித்துவரை நிறுத்தலு மவர தாகுங்
கிழவனுங் கிழத்தியு மவர்வரை நிற்றலின்.

இஃது அறிவர்க்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இதன்பொருள்: கிழவனுங் கிழத்தியும் அவர்வரை நிற்றலின்—தலைவனுந் தலைவியும் அவ்வறிவரது ஏவலைச்செய்து நிற்பராதலின்; இடித்துவரை நிறுத்தலும் அவரது ஆகும்—அவரைக் கழறி ஒரெல்லையிலே நிறுத்தலும் அவ்வறிவரது தொழிலாகும், என்றவாறு.

அஃது உணர்ப்புவயின் வாராது ஊடிய தலைவிமாட்டு ஊடினானையும் உணர்ப்புவயின்வாராது ஊடினாளையுங் கழறுப.

"உடுத்துந் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயுந்
தழையணிப் பொலிந்த வாயமொடு துவன்றி
விழவொடு *வருதி நீயே யிஃதோ
வோரா வல்சிச் சீறில் †வாழ்க்கைப்
பெருநலக் குறுமகன் வந்தென
வினிவிழ வாயிற் றென்னுமிவ் வூரே." (குறுந்-295.)

இது தலைவனைக் கழறியது.

"மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்." (குறள்-6-2.)

இது தலைவியைக் கழறியது. (கச)

---

* 'வின்றாய்' என்பதும் பாடம். † 'யாக்கை' என்பதும் பாடம்.

156. உணர்ப்புவரை யிறப்பினுஞ் செய்குறி பிழை
[ப்பினும்
புலத்தலு மூடலுங் கிழவோற் குரிய.

இது தலைவற்குப் புலவியும் ஊடலும் நிகழுமிடங் கூறுகின்றது.

இதன்பொருள்: உணர்ப்புவரை இறப்பினும்—கற்பிடத்துத் தலைவி ஊடியவழி அவன் தேற்றத் தேறுமெல்லை *இகந்தனளாயினும்; செய்குறி பிழைப்பினும்—களவின்கட் டலைவிசெய்த குறியைத் தானே தப்பினும்; புலத்தலும் ஊடலுங் கிழவோற்கு உரிய—உள்ளஞ் சிறிது வேறுபடுதலும் அவ்வேறுபாடு மிக்கு நீடுநின்று †தேற்றியக்கால் அது நீங்குதலுந் தலைவற்குரிய, என்றவாறு.

எனவே, கற்பிற்கும் புலத்தலும் ஊடலும் உரிய, களவிற்கும் புலத்தலும் ஊடலுமுரிய வென்றார். புலவியும் ஊடலுங் கற்பிற்கே பெரும்பான்மை நிகழ்தலிற் கற்பிற்கு அவை உரியவென்கின்றார், அவை களவிற்குஞ் சிறுபான்மை உரிமை பற்றிச் சேரக் கூறினார், சூத்திரச் சுருக்கம் நோக்கி.

"எவ்வி யிழந்த வறுமையர்" (குறுந்-19.)

இது கற்பிற் புலந்தது.

"தீதிலே மென்று தெளிப்பவுங் கைந்நீவி
யாதொன்று மெங்கண் மறுத்தர வில்லாயின்" (கலி-81.)

---

* முன் அச்சுப் பிரதியில் உள்ள 'இகழ்ந்தனளாயினும்' என்னும் பாடம் பொருட்கு இயைபின்று.

† 'தேற்றியகாலத்து' என்பதும் பாடம்.

என்பது ஊடல். பிற இடத்தும் ஊடுதல் அறிந்துகொள்க.

> "கலந்தநோய் கைம்மிகக் கண்படா வென்வயிற்
> புலந்தாயு நீயாயிற் பொய்யானே வெல்குவை" (கலி-46.)

என்பது குறிபிழைத்துழிப் புலந்தது.

> "குணகடற் றிரையது பறைதபு நாறை" (குறுந்-128.)

என்பதனுள் நாரை தெய்வங் காக்கும் *அயிரை இரையை வேட்டாற்போல் நமக்கரியளாயினளை நீ வேட்டா யென்பதனாற் குறிபிழைத்துழி ஊடினமை கூறிற்று. பிறவும் இவ்வாறு வருவன உய்த்துணர்ந்துகொள்க. (கரு)

157. புலத்தலு மூடலு மாகிய விடத்துஞ்
சொலத்தகு கிளவி தோழிக் குரிய.

இது முன்னர்த் தலைவன் புலக்குமென்றார், அவ்விடத்துந் †தோழியே கூற்றுநிகழ்த்துதற்கு உரியளென்கிறது.

இதன்பொருள்: புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும்—தலைவன் தலைவியையுந் தோழியையும் அச்சுறுத்தற்குச் செய்கையாகச்செய்துகொண்டு புலத்தலும் அது நீட்டித்து ஊடலும் உடன் நிகழ்த்தியவழியும்; சொலத்தகு கிளவி தோழிக்கு உரிய—சொல்லத்தகும் பணிமொழி தோழிக்கு உரிய, என்றவாறு.

எனவே, தலைவிகுறிப்பறிந்து தோழிகூறுதலன்றித் தலைவி தானே கூறப்பெறாளென்றவாறு. எனவே பாடாண்

---

* பழைய அச்சுப்பிரதியில் உள்ள 'அயிரையம் பொற்றாது' என்னும் பாடங்கள் பொருட்பேறில. 'அயிரையிரை' என்பது அயிரை என்னுஞ் சிறுமீனாகிய உணவு என்று பொருள் படும்.

† 'தோழி' என்பதும் பாடம்.

டிணைக் கைக்கிளையாயின் தலைவி கூறவும் பெறுமென்று கொள்க. உம்மை சிறப்பும்மை.

உதாரணம் :

" தாயுயிர் வேண்டாக் கூருகி ரலவ
னரிதின்று பரிக்கு மூர யாவது
மன்புமுத லுறுத்த காத
லின்றெவன் பெற்றனை பைந்தொடி திறத்தே."

" அலந்தாரை யல்லனோய் செய்தற்றாற் றம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்." (குறள்-131-3.)

என வரும்.

இவை கற்பில் தலைவிகுறிப்பினால் தோழிகூற்று வந்தன.

" புலந்தாயு நீயாயிற் பொய்யானே வெல்குவை" (கலி-46.) என்று களவில் தோழிகூறினாள் தலைவிகுறிப்பினால்.

" கனைபெய *னடுநாள்யான் கண்மாறக் குறிபெறாஅன்
புனையிழா யென்பழி நினக்குரைக்குந் தானென்ப
துளிநசைஇ வேட்கையான் மிசைபாடும் புள்ளிற்றன்
னளிநசை யார்வுற்ற வன்பினேன் யானாக." (கலி-46.)

எனத் தோழி சொல்லெடுப்புதற்குத் தலைவி சிறுபான்மை கூறுதலும் ஈண்டு உரியவென்றதனாற் கொள்க.

" யானூடத் தானுணர்த்த யானுணரா விட்டதற்பின்
றானூட யானுணர்த்தத் தானுணரான்—றேனூறுங்
கொய்தார் வழுதிக் குளிர்சாந் தணியகல
மெய்தா திராக்கழிந்த வாறு." (முத்தொள்ளாயிரம்.)

* 'நெடுநாள்' என்பதும் பாடம்.

இதனுள் யானுணர்த்தத் தானுணரானெனப் பாடாண்டிணைக்கைக்கிளையுட் டலைவி கூறியது காண்க. (கசு)

158. *பரத்தைமை மறுத்தல் வேண்டியுங் கிழத்தி
மடத்தகு கிழமை யுடைமை யானு
மன்பிலை கொடியை யென்றலு முரியள்.

இது சொல்லத்தகுங் கிளவியேயன்றிச் சொல்லத்தகாக் கிளவியுந் தோழி கூறுமென எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

இதன்பொருள்: பரத்தைமை மறுத்தல் வேண்டியும்—தலைவன் படிற்றுள்ளத்தாற் புறத்து ஒழுகும் ஒழுக்கத்தைப் போக்குதல் விரும்பியும்; கிழத்தி மடத்தகு கிழமை உடைமையானும்—தலைவி அவன் பரத்தைமை அறிந்தேயும் அவன் கூறியவற்றை மெய்யெனக்கொண்டு சீற்றங்கொள்ளாது ஒழுகும் மடனென்னுங் குணத்திற்கு ஏற்றன அறிந்தொழுகும் உரிமையுடையளாகிய எண்மையானும்; அன்பிலை கொடியை என்றலும் உரியள்—தலைவனை அன்பிலையென்றலுங் கொடியை யென்றலு முரியள் தோழி, என்றவாறு:

கொடுமை கடையாயினூர் குணம். களவினுள் தன்வயினுரிமையும் அவன்வயிற் பரத்தைமையுங்கோடலின் இதற்குப் பரத்தைமை மறுத்தல்கொள்க.

உதாரணம்:

"கண்டவ ரில்லென வுலகத்து ளுணராதார்
தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளு

* முன் அச்சுப்பிரதியில் உள்ள 'பரத்தை' என்னும் பாடம் புறத்தொழுக்கத்தை உணர்த்தாமையின் 'பரத்தைமை' என்பதே ஈண்டைக்கு இயைவதா மென்க.

ணெஞ்சறிந்த கொடியவை மறைப்பினு மறிபவர்
நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை யாகலின்
வண்பரி நவின்ற வயமான் செல்வ
நன்கதை யறியினு நயனில்லா நாட்டத்தா
லன்பிலை யெனவந்து கழறுவ லையகேள்;
மகிழ்செய் தேமொழித் தொய்யில்சூ ழிளமுலை
முகிழ்செய மூழ்கிய தொடர்பவ ளுண்க
ணவிழ்பனி யுறைப்பவு நல்காது விடுவா
யிமிழ்திரைக் கொண்க கொடியை காணீ;
இலங்கே ரெல்வளை யேர்தழை யல்கு
னலஞ்செல நல்கிய தொடர்பவள் சாஅய்ப்
*புலந்தழப் புல்லாது விடுவா
யிலங்குநீர்ச் சேர்ப்ப †கொடியை காணீ;
* * * *
எனவாங், கனையவொன் றளிமதி பெரும நின்னின்
றிறைவரை நில்லா வளைய ளிவட்கினிப்
பிறையேர் ‡சுடர்நுதற் பசலை
மறையச் செல்லுநீ மணந்தனை விடினே" (கலி-125.)

என்னும் நெய்தற்கலி கைகோள் இரண்டிற்குங்கொள்க (கள)

159. அவன்குறிப் பறிதல் வேண்டியுங் கிழவி
யகன்மலி யூட லகற்சிக் கண்ணும்
வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே.

இது தலைவிக்கு ஆவதோர் இலக்கணம் உணர்த்துகின்றது.

---

*'புலந்தழ வுலந்தழீஇப் புல்லாது' என்பது ஏட்டுப்பிரதியிலுள்ள பாடம்.

† 'வலியை காணீ' என்பதும் பாடம்.

‡ 'சிறுநுதல்' என்பதும் பாடம்.

இதன்பொருள்: அவன் குறிப்பு அறிதல் வேண்டியும்— தோழி அன்பிலை கொடியையெனக் கேட்ட தலைவன் முனிந்த உள்ளத்தனாங்கொல்லோவென ஐயுற்று அவனது குறிப்பை அறிதல்வேண்டியும்; அகன்மலி ஊடல் அகற்சிக் கண்ணும்—தனது நெஞ்சில் நிறைந்துநின்ற ஊடல் கையிகந்து துனியாகியவழி இஃது அவற்கு எவனாங்கொல்லென அஞ்சியவழியும்; கிழவி வேற்றுமைக்கிளவி தோற்றவும் பெறும்—தலைவி தலைவனோடு அயன்மையுடையசொல்லைத் தோற்றுவிக்கவும் பெறும், என்றவாறு.

உதாரணம்:

> "நன்னலந் *தொலைய நலமிகச் சாஅ
> யின்னுயிர் கழியினு முரைய லவர்நமக்
> கன்னையு மத்தனு மல்லரோ
> புலவிய தெவனோ வன்பிலங் கடையே." (குறுந்-93.)

இதனுள் அவரை அன்பிலை கொடியையென்றாதி, அன்பில்வழிநின்புலவி அவரை என்செய்யும் அவர் நமக்கு இன்றியமையாத எமரல்லரோவென இருவகையானும் அயன்மை கூறியவாறு காண்க. (கஅ)

160. காமக் கடப்பி னுட் பணிந்த கிளவி
காணுங் காலைக் கிழவோற் குரித்தே
வழிபடு கிழமை யவட்கிய லான.

இது தலைவி வேற்றுமைக்கிளவி தோற்றியபின்னர்த் தலைவற்கு உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

---

* 'தொலைந்து' என்பதும் பாடம்.

இதன்பொருள்: காமக் கடப்பினுட்பணிந்த கிளவி—அங்ஙனந் தலைவிகண்ணுந் தோழிகண்ணும் வேறுபாடு கண்டுழித் தனக்குக் காமங் கையிகந்துழித் தாழ்ந்துகூறுங் கூற்று; காணுங் காலை கிழவோற்கு உரித்தே—ஆராயுங் காலத்துத் தலைவற்கு உரித்து; வழிபடு கிழமை அவட்கு இயலான—அவனை எஞ்ஞான்றும் வழிபட்டொழுகுதல் தலைவிக்கு இல்லறத்தோடு பட்ட இயல்பாகலான், என்றவாறு.

உதாரணம்:

> "ஆயிழாய், நின்கண் பெறினல்லா லின்னுயிர் வாழ்கல்லா
> வென்கணெவனோ தவறு." (கலி-88.)
>
> "கடியர்தமக், கியார்சொல்லத் தக்கரா மற்று;" (கலி-88)
> "நின்னணை கடக்கிற்பா ரியார்" (கலி-81.)

என்றாற்போல்வன கொள்க.

'காணுங்காலை' என்றதனால் தலைவன் தலைவியெதிர் புலப்பது தன்றவறு சிறிதாகிய இடத்தெனவும் இங்ஙனம் பணிவது தன்றவறு பெரிதாகிய இடத்தெனவுங்கொள்க. (கசு)

161. அருண்முந் துறுத்த வன்புபொதி கிளவி
பொருள்பட மொழிதல் கிழவோட்கு முரித்தே.

இது தலைவன் பணிந்து மொழிந்தாங்குத் தலைவியும் பணிந்து கூறுமென்கின்றது.

இதன் பொருள்: அருள் முந்துறுத்த அன்பு பொதி கிளவி—பிறர் அவலங் கண்டு அவலிக்கும் அருள் முன் தோற்றுவித்த அவ்வருள் பிறத்தற்கு ஏதுவாகி

என்ஞான்றும் அகத்து நிகழும் அன்பினைக் கரந்துசொல்லுங் கிளவி; பொருள்பட மொழிதல் கிழவோட்கும் உரித்தே—பணிந்தமொழி தோற்றாது வேறோர்பொருள் பயப்பக்கூறுதல் தலைவிக்கும் உரித்து, என்றவாறு.

வேறுபொருளாவது தலைவன் கூறியாங்குத் தானும் பணிந்து கூறுவாள், பணியாதே தன் நெஞ்சு தன்னையுங் கைகடந்து அவன் ஏவலைச் செய்ததென்றாற்போலக் கூறுதலுமாம்.

இது 'தன்வயிற் கரத்தலு மவன்வயின் வேட்டலும்' (தொல்-பொரு-11) எனப் பொருளியலுள் வழுவமைத்தற்கு இலக்கணம்.

''இணையிரண்டு'' என்னும் மருதக்கலியுள்,

" மாசற மண்ணுற்ற மணியேசு மிருங்கூந்தல்
வீசேர்ந்து வண்டார்க்குங் கவின்பெறல் வேண்டேன்மன்
ஞேய்சேர்ந்த திறம்பண்ணி நின்பாண னெம்மனை
நீசேர்ந்த வில்வினாய் *வாராமற் பெறுகற்பின்'' (கலி-77.)

எனக் கூறிய தலைவி,

" கடைஇய நின்மார்பு தோயல மென்னு
மிடையு நிறையு மெளிதோநிற் காணிற்
கடவுபு கைத்தங்கா நெஞ்சென்னுந் தம்மோ
டுடன்வாழ் பகையுடை யார்க்கு." (கலி-77.)

என்புழி நிற்காணிற் கடவுபு கைத்தங்கா நெஞ்செனவே அவன் ஆற்றாமை கண்டருளி நெஞ்சு ஏவல்செய்ததென

* 'உரையாமை' 'வாராமை' என்பவும் பாடம்.

வேறோர் பொருள் பயப்பக் கூறித் தன் அன்பினைக் காந்த வாறு காண்க.

"*கூர்முண்முள்ளி" (அகம்-26) என்பதனுட் "சிறுபுறங் கவையினன்" என அவன்வருந்தியது ஏதுவாகத் தான் மண் போன் ஞெகிழ்ந்தே னென அருண் முந்துறுத்தவாறும், இவை பாராட்டிய பருவமும் உளவென அன்புபொதிந்து கூறியவாறும், ஆண்டும் பணிந்தமொழி வெளிப்படாமல் நெஞ்சறைபோகிய அறிவினேற்கெனத் தன் அறிவினை வேறாக்கி அதன்மேலிட்டுக் கூறியவாறுங் காண்க. (உ0)

162. களவுங் கற்பு மலர்வரை வின்றே.

இதுவுந் தலைவிக்குந் தோழிக்கும் உரிய கூற்றுக் கூறு கின்றது.

இதன்பொருள்: களவின்கண்ணுங் கற்பின்கண்ணும் அலரெழுகின்றதென்று கூறுதல் தலைவிக்குந் தோழிக்கும் நீக்குநிலைமையின்று, என்றவாறு.

வரைவின்றெனப் பொதுப்படக் கூறினமையான் இரு வரையுங் கொண்டாம். தலைவன் ஆங்குக் கூறுவனாயிற் கள விற் கூட்டமின்மையுங் கற்பிற் பிரிவின்மையும் பிறக்கும். 'ஒப்பக்கூற' லென்னும் உத்திபற்றிக் களவும் உடனோதினார் சூத்திரஞ் சுருங்குதற்கு. 'களவலராயினும்' (தொல்-கள-24) எனவும் 'அம்பலுமலரும்' (தொல்-கள-48) எனவுங் களவிற் கூறியவை அலராய்நிகழ்ந்தவழி வேறுசில பொருண்மை

---

* இச்செய்யுள் முழுவதையும் 647-ஆம் பக்கத்திற் காண்க. 'கூர்முனைமுள்ளி' எனவும் பாடமுண்டு

பற்றிக் கூறுதற்குவந்தன. அவை அலர்கூறப் பெறுப என்றற்கு வந்தன வன்றெனஉணர்க.

உதாரணம்:

"கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று." (குறள்-115-6.)

இது களவு.

"வேதின வெரிநி னோதி முதுபோத்
தாறுசென் மாக்கள் புட்கொளப் பொருந்துஞ்
சுரனே சென்றனர் காதல ருரனழிந்
தீங்கியான் றுஞ்சிய வெவ்வம்
யாங்கறிந் தன்றிவ் வழுங்க லூரே." (குறுந்-140.)

இது கற்பு.

"கரும்பி னெந்திரங் களிற்றெதிர் *பிளிறுந்
தேர்வண் கோமான் றேனூ ரன்னவிவ
ணல்லணி நயந்துநீ துறத்தலிற்
பல்லோ ரறியப் †பசந்தன்று நுதலே." (ஐங்குறு-55.)

இது தோழி அலர்கூறியது. (உக)

163. அலரிற் றோன்றுங் காமத்திற் சிறப்பே.

இஃது அலர்கூறியதனாற் பயன் இஃது என்கின்றது.

இதன்பொருள்: அலரில் தோன்றுங் காமத்திற் சிறப்பே—இருவகைக் கைகோளினும் பிறந்த அலரால் தலைவற்குந் தலைவிக்குங் காமத்திடத்து மிகுதிதோன்றும், என்றவாறு.

---

* 'பிளிற்றும்' என்பதும் பாடம்.

† 'பசந்த நறுநுதலே' என்பதும் பாடம்.

என்றது, களவு அலராகியவழி இடையீட்டிற்கு அஞ்சிய அச்சத்தான் இருவர்க்குங் காமஞ்சிறத்தலுங் கற்பினுட் பரத்தைமையான் அலர்தோன்றியவழிக் காமஞ்சிறத்தலும் அவள் வருந்துமென்று தலைவற்குக் காமஞ்சிறத்தலுந் தலைவன்பிரிவின்கட் டலைவிக்குக் காமஞ் சிறத்தலும் பிறவுமாம்.

உதாரணம்:

"ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொன்
னீராக நீளுமிந் நோய்." (குறள்-115-7.)

"நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற்
காம நுதுப்பே மெனல்" (குறள்-115-8.)

என்றாற் போல்வன கொள்க. (உஉ)

164. கிழவோன் விளையாட் டாங்கு மற்றே.

இதுவுங் காமச்சிறப்பே கூறுகின்றது.

இதன்பொருள்: கிழவோன் விளையாட்டு—தலைவன் பரத்தையர் சேரியுள் ஆடலும் பாடலுங் கண்டுங் கேட்டும் அவருடன் யாறுமுதலியன ஆடியுய *இன்பம் நுகரும் விளையாட்டின்கண்ணும்; ஆங்கும் அற்று—அப்பரத்தையரிடத்தும் அலரால் தோன்றுங் காமச்சிறப்பு, என்றவாறு.

ஆங்கும் என்ற உம்மையான் ஈங்கும் அற்றெனக் கொள்க. தம்மொடு தலைவன் †ஆடியது பலரறியாதவழி யென்றுமாம். பலரறிந்தவழி அவனது பிரிவு தமக்கு இழி

*'இன்பந்தரும் விளையாட்டின்கண்ணும்' என்பதும் பாடம்.

† 'ஆடிய பலரறியாதவழி' என்னும் பாடம் பொருளியைபுடைத்தன்று. 'ஆடியவழி' என்பதும் பாடம்.

வெனப்படுதலின் அவர் காமச்சிறப்புடையராம். தலைவன் அவரொடு விளையாடிய அலர்கேட்குந்தோறுந் தலைவிக்கு புலத்தலும் ஊடலும் பிறந்து காமச்சிறப்பெய்தும். ஆங்கும் ஈங்குமெனவே *அவ்விருவரிடத்துந் தலைவன் அவை நிகழ்த்திணுகலின் அவற்குங் காமச்சிறப்பு ஒருவாற்றாற் கூறியவாறாயிற்று. இது காமக்கிழத்தியரல்லாத பரத்தையரொடு விளையாடிய பகுதியாகலின் வேறுகூறினார். காமக்கிழத்தியர் ஊடலும் விளையாடலுந் தலைவி ஊடலும் விளையாடலும் 'யாறுங் குளனும்' (தொல்-கற்-50) என்புழிக் கூறுப. அஃது அலரெனப்படாமையின் விளையாட்டுக் கண்ணென விரித்த உருபு வினைசெய்யிடத்து வந்தது.

உதாரணம்:

"எஃகுடை யெழினலத் தொருத்தியொடு †நெருநை
வைகுபுன லயர்ந்தனை யென்ப வதுவே
பொய்புறம் பொதிந்தயான் கரப்பவுங்
‡கையிகந் தலரா கின்றாற் றனே." (அகம்-115.)

எனவும்,

"கொடுத்தோய் மலிர்நிறை யாடி யோரே." (அகம்-165.)

எனவுந் தலைவியும் பரத்தையும் பிறர் அலர்கூறிய வழிக் காமஞ்சிறந்து புலந்தவாறு காண்க. ஆண்டுப் பணிந்து கூறுங்காலும் விளையாடுங்காலுந் தலைவன் காமச்சிறப்புக் காண்க. (உகூ)

* 'அவ்வீரிடத்தும்' என்பதும் பாடம்.
† 'நெருநல்' என்பதும் பாடம்.
‡ 'கைகடந்து' என்பதும் பாடம்.

**165. மனைவி தலைத்தாட் கிழவோன் கொடுமை
தம்முள வாதல் வாயில்கட் கில்லை.**

இது வாயில்கட்கு உரிய இலக்கணங் கூறுகின்றது.

இதன்பொருள்: மனைவி தாட் டலை—தலைவி எத்திறத்தானும் புலந்துழி அவளிடத்து; கிழவோன் கொடுமை—தலைவன் கொடுந்தொழில்களை; தம் உள ஆதல்—தம் உரைக்கண் உள்வாக்கி உரைத்தல்; வாயில்கட்கு இல்லை—தோழி முதலிய வாயில்களுக்கில்லை, என்றவாறு.

தாட்டலையெனமாறுக. அது பாதத்திடத்தென்னுந் தகுதிச்சொல். அது வாயில்கள் கூற்றாய் வந்தது. உதாரணம் வந்துழிக் காண்க. (௰௫)

**166. மனைவி முன்னர்க் கையறு கிளவி
மனைவிக் குறுதி யுள்வழி யுண்டே.**

இஃது எய்தியது இகந்துபடாமற் காத்தது, இன்னுழியாயிற் பெறுமென்றலின்.

இதன்பொருள்: மனைவி முன்னர்க் கையறு கிளவி—தலைவிமுன்னர்த் தலைவன் காமக்கடப்பினாற் பணியுந்துணையன்றி நம்மைக் கையிகந்தானெனக் கையற்றுக் கூறுங் கூற்று; மனைவிக்கு உறுதி உள்வழி உண்டே—புலந்துவருந் தலைவிக்கு மருந்தாய் அவன் கூடுவதோர் ஆற்றல் உறுதி பயக்குமாயின் அவ்வாயில்கட்கு உளதாம், என்றவாறு.

உதாரணம்:

"அறியா மையி னன்னை யஞ்சிக்
குழையன் கோதையன் குறும்பைந் தொடியன்

விழவயர் துணங்கை தழூஉகஞ் செல்ல
நெடுநீமிர் தெருவிற் கைபுகு கொடுமிடை
நொதும லாளன் கதுமெனத் தாக்கலிற்
கேட்போ ருளர்கொ லில்லைகொல் போற்றென
*யாண்டைய பசலை யென்றன னதனெதிர்
நாணிலை யெலுவ வென்றுவந் திசினே
செருநரும் விழையுஞ் செம்ம லோனென
நறுநுத லரிவை போற்றேன்
சிறுமை பெருமையிற் காணாது துணிந்தே." (நற்றிணை-50.)

இதனுள் என்னறியாமையாலே அன்னாய் நின்னை யஞ்சி யாங் கள்வன் துணங்கையாடுங் களவைக் கையகப் படுப்பேமாகச் செல்லாநிற்க, அவன் குழை முதலியவற்றை உடையனாய்த் தெருவுமுடிந்த இடத்தே எதிர்ப்பட்டானாக, அவ்வருளாமையின் யாண்டையதென்கட் பசலையென்றானாக, அவனெதிரே என்சிறுமை பெரிதாகலான் ஆராயாதே துணிந்து நாணிலை எலுவ வந்தேனெனத் தோழி மெய்யானும் பொய்யானும் புனைந்துரைத்தவாறு காண்க. ஏனைய வாயில்கள் கூற்று வந்துழிக் காண்க.

இங்ஙனந் தலைவன் சிறைப்புறமாகக் கூறுவன 'அன்பு தலைப் பிரிந்த கிளவி தோன்றின்' (தொல்-கற்-38.) என் புழிக் கூறுதும். (௨௫)

167. முன்னிலைப் புறமொழி யெல்லா வாயிற்கும்
பின்னிலைத் தோன்று மென்மனார் புலவர்.

இது வாயில்கட்கு உரியதோர் பகுதி கூறுகின்றது.

* 'யாணது பசலை' என்பதும் பாடம்.

இதன்பொருள்: முன்னிலைப் புறமொழி—முன்னிலை யாய் நிற்கின்ற தலைவனை நோக்கிப் பிறரைக் கூறுமாறுபோலக் கூறுதல்; எல்லாவாயிற்கும்—பன்னிரண்டு வாயில்களுக்கும்; பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர்—குறை வேண்டி முயலுங்கால் தோன்றுமென்று கூறுவர் புலவர், என்றவாறு.

உதாரணம்:

"உண்கடன் வழிமொழிந் திரக்குங்கான் முகனுந்தாங்
கொண்டது கொடுக்குங்கான் முகனும்வே றாகுதல்
பண்டுமிவ் வுலகத் தியற்கை யஃதின்றும்
புதுவ தன்றே புலனுடை மாந்திர்
தாயுயிர் பெய்த பாவை போல
நலனுடை யார்மொழிக்கட் டாவார்தாந் தந்நலந்
தாதுதேர் பறவையி னருந்திறல் கொடுக்குங்கா
லேதிலார் கூறுவ தெவனோநின் பொருள்வேட்கை"

(கலி-22.)

எனத் தலைவனை நோக்கி முன்னிலைப் புறமொழியாகக் கூறிற்று. (உசு)

168. தொல்லவை யுரைத்தலு நுகர்ச்சி யேற்றலும்
பல்லாற் றானு மூடலிற் றணித்தலு
முறுதி காட்டலு மறிவுமெய் நிறுத்தலு
மேதுவி னுணர்த்தலுந் துணிவு காட்டலு
மணிநிலை யுரைத்தலுங் கூத்தர் மேன.

இது கூத்தர்க்குரிய கிளவி கூறுகின்றது.

இதன்பொருள்: தொல்லவை உரைத்தலும்—முன்பே மிக்கார் இருவர் இன்பம் நுகர்ந்தவாறு இதுவெனக் கூறலும்; நுகர்ச்சி ஏற்றலும்— நுமது நுகர்ச்சி அவரினுஞ் சிறந்ததெனக் கூறலும்; பல் ஆற்றானும் ஊடலில் தணித்தலும்— இல்லறக்கிழமைக்கு இயல்பன்றென்றாயினும் இஃது அன்பின்மையா மென்றாயினுங் கூறித் தலைவியை ஊடலினின்று மீட்டலும்; உறுதிகாட்டலும்—இல்வாழ்க்கை நிகழ்த்தி இன்பநுகர்தலே நினக்குப் பொருளென்றலும்:

இனிக் கூறுவன தலைவற்குரிய: அறிவு மெய் நிறுத்தலும்—புறத்தொழுக்கம் மிக்க தலைவற்கு நீ கற்றறிந்த அறிவு இனி மெய்யாக வேண்டுமென்று அவனை மெய்யறிவின் கண்ணே நிறுத்தலும்; ஏதுவின் உணர்த்தலும்—இக் கழி காமத்தான் இழிவு தலைவருமென்றதற்குக் காரணங்கூறலும்; துணிவு காட்டலும்—அதற்கேற்பக் கழிகாமத்தாற் கெட்டாரை எடுத்துக்காட்டலும்; அணிநிலை உரைத்தலும்— முலையினுந் தோளினும் முகத்தினும் எழுதுங்காற் புணர்ச்சி தோறும் அழித்தெழுதுமாறு இதுவெனக் கூறலும்; கூத்தர் மேன—இவ்வெட்டுங் கூத்தரிடத்தன, என்றவாறு.

கூத்தர், நாடகசாலையர். தொன்றுபட்ட நன்றுந் தீதுங் கற்றறிந்தவற்றை அவைக்கெல்லாம் அறியக்காட்டுதற்கு உரியராகலிற் கூத்தர் இவையுங் கூறுபவென்றார். இலக்கியம் இக்காலத்திறந்தன.

"பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு
ளாயு மறிவி னவர்." (குறள்-92-4.)

இஃது அறிவுமெய்ந்நிறுத்தது. (உஎ)

**169. நிலம்பெயர்ந் துறைதல் வரைநிலை யுரைத்தல்
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை யுரிய.**

இஃது அதிகாரப்பட்ட கூத்தரோடு பாணர்க்கும் உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

இதன்பொருள்: நிலம் பெயர்ந்து உறைதல் வரைநிலை உரைத்தல்—தலைவன் சேட்புலத்துப் பிரிந்துறைதலைத் தலைவிக்காக வரைந்துள மீளும் நிலைமை கூறுதல்; கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய—கூத்தர்க்கும் பாணர்க்கும் யாப்பமைந்தன உரிய, என்றவாறு.

யாப்பமைதலாவது, தோழியைப்போலச் செலவழுங்குவித்தல் முதலியன பெறாராகலின், யாழெழீஇக் கடவுள் வாழ்த்தி அவளது ஆற்றாமை தோற்றும்வகையான் எண்வகைக் குறிப்பும்பட நன்னயப்படுத்துத் தலைவற்குக் காட்டல் போல்வன.

உதாரணம்:

“அரக்கத் தன்ன செந்நிலப் பெருவழிக்
காயாஞ் செம்ம லூஅய்ப் பலவுட
னீயன் மூதா *பரப்பப் பவளமொடு
மணிமிடைந் தன்ன குன்றங் கவைஇய
†வங்காட் டாரிலிடை மடப்பிணை தழீஇத்
திரிமருப் பிரலை புல்லருந் துகள
முல்லை வியன்புலம் பரப்பிக் கோவலர்
குறும்பொறை ‡மருங்கி னிறும்பூ தயரப்

* ‘வரிப்ப’ என்பதும் பாடம்.
† ‘அங்காட் டாரிடை’ என்பதும் பாடம்.
‡ ‘மருங்கி னறும்பூ வயர’ என்பதும் பாடம்.

பதவுமேய லருந்து மதவுநடை நல்லான்
வீங்குமாண் செருத்த நீம்பால் *பிலிற்றக்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரு
மாலையு முள்ளா ராயிற் காலை
யாங்கா குவங்கொல் பாண வென்ற
மனையோள் சொல்லெதிர் சொல்லல் செல்லேன்
செவ்வழி நல்யா ழிசையினென் பையெனக்
கடவுள் வாழ்த்திப் பையுண்மெய்ந் நிறுத்த
லவர்திறஞ் செல்வேன் கண்டனென் யானே
†விடுவிசைப் புரவி வீங்குபரி முடுகக்
கல்பொரு திரங்கும் பல்லார் நேமிக்
கார்மழை முழக்கிசை கடுக்கும்
முனைநல் லூரன் புனைநெடுந் தேரே." (அகம்-14.)

இதனுள் தலைவி இரக்கந்தோன்றக் கடவுள்வாழ்த்திப் பிரிந்தோர்மீள்க நினையாநின்றேனாக அவர்மீட்சி கண்டேனெனப் பாணன் கூறியவாறு காண்க.

கூத்தர்கூற்று வந்துழிக்காண்க. (உஅ)

170. ஆற்றது பண்புங் கருமத்து விளைவு
மேவன் முடிவும் வினவுஞ் செப்பு
மாற்றிடைக் கண்ட பொருளு மிறைச்சியுந்
தோற்றஞ் சான்ற வன்னவை பிறவு
மிளையோர்க் குரிய கிளவி யென்ப.

இஃது உழைக்குறுந்தொழிற்குங் காப்பிற்கும் உரியராகிய இளையோர்க்குரிய இலக்கணங் கூறுகின்றது.

---

* 'பிலிற்றி' என்பதும் பாடம்.

† 'விடுவிசைக் குதிரை' என்பதும் பாடம்.

இதன்பொருள்: ஆற்றது பண்பும்—தலைவன் தலைவியுடனாயினுந் தானே யாயினும் போக்கு ஒருப்பட்டுழி வழிவிடற்பாலராகிய இளையோர் தண்ணிது வெய்து சேய்த்து அணித்தென்று ஆற்றது நிலைமை கூறுதலும்; கருமத்து விளைவும்—ஒற்றாகச் சென்று வந்து செய்பொருண் முடிக்குமாறு அறிந்து கூறுதலும்; ஏவல் முடிவும்—இன்னுழி இன்னது செய்க என்று ஏவியக்கால் அதனை முடித்துவந்தமை கூறலும்; வினாவும்—தலைவன் ஏவலைத் தாங் கேட்டலும்; செப்பும்—தலைவன் வினாவாதவழியும் தலைவிக்காகவாயினுஞ் செப்பத் தகுவன தலைவற்கு அறிவுகூறுதலும்; ஆற்றிடைக் கண்ட பொருளும்—செல்சுரத்துக் கண்ட நிமித்தம் முதலிய பொருள்களைத் தலைவற்குந் தலைவிக்கும் உறுதிபயக்குமாறு கூறலும்; இறைச்சியும்—ஆண்டு மாவும் புள்ளும் புணர்ந்து விளையாடுவனவற்றை அவ்விருவர்க்குமாயினுந் தலைவற்கே யாயினுங் காட்டியும் ஊறுசெய்யுங் கோண்மாக்களை அகற்றியுங் கூறுவனவும்; தோற்றஞ் சான்ற அன்னவை பிறவும்—அங்ஙனம் அவற்குத் தோற்றுவித்தற்கமைந்த அவைபோல்வன பிறகூற்றுக்களும்; இளையோர்க்கு உரிய கிளவி என்ப—இளையோர்க்கு உரிய கூற்றென்று கூறுவர் ஆசிரியர், என்றவாறு.

தலைவியது செய்தி அறிந்துவந்து கூறுவனவும் பிறபொருளுணர்ந்து வந்துரைப்பனவும் ஒற்றர்கண் அடங்கும் ஏவன் முடிவிற்கும் இஃதொக்கும். 'சான்ற' வென்றதனான் ஆற்றது பண்பு கூறுங்கால் இதுபொழுது இவ்வழிச்சேறல் அமையாதென விலக்கலுங் கருமங்கூறுங்காற் சந்துசெய்தல் அமையுமெனக் கூறுதலும் போல்வன அமையாவாம், அவர் அவை கூறப்பெறாராகலின். பிறவாவன, தலைவன் வருவ

னெனத்தலைவிமாட்டுத் தூதாய்வருதலும், அறிந்துசென்ற தலைவற்குத் தலைவிநிலை கூறுதலும், மீளுங்கால் விருந்து பெறுகுவள் கொல்லெனத் தலைவிநிலை யுரைத்தலும் போல்வன. இலக்கியம் வந்துழிக் காண்க.

"*விருந்தும் பெறுகுநள் போலுந் திருந்திழைத்
தடமென் பணைத்தோண் †மடமொழி யரிவை
தளரியற் கிள்ளை யினிதினி னெடுத்த
வளரிளம் பிள்ளைத் தூவி யன்ன
வார்பெயல் வளர்த்த பைம்பயிர்ப் புறவிற்
பறைக்க ணன்ன நிறைச்சுனை தோறுந்
துளிபடு மொக்கு ளுளுவன சாலத்
‡தெளிபொரு பொகுட்டிற் றோன்றுவன மாய
வளிசினை யுதிர்த்தலின் வெறிகொள்பு தாஅய்ச்
சிரற்சிற கேய்ப்ப வறற்கண் விரித்த
வண்டு ணறுவீ துமித்த நேமி
தண்ணில மருங்கிற் போழ்ந்த வளியு
நிரைசெல் பாம்பின் விரைவுநீர் முடுகச்
செல்லு நெடுந்தகை தேரே
முல்லை மாலை நகர்புக லாய்ந்தே." (அகம்-323.)

அவர்கள் தங்களுக்கு வளராப்பிள்ளை யென்றலுமாம்.

இது பெறுவளென்றது.

ஆற்றது பண்பும், ஆற்றிடைக்கண்ட பொருளும் இறைச்சியும் உடன்போக்கிலுங் கற்பிலுங் கூறுவனவாதலின் இச்சூத்திரங் கைகோள் இரண்டற்கும் பொதுவிதி. (உசு)

---

* 'விருந்து பெறுகுவள் போலும்' என்பதும் பாடம்.

† 'மடமா வரிவை' என்பதும் பாடம்.

‡ 'தொளிபொரு' என்பதும் பாடம்; தொளி-சேறு.

171. உழைக்குறுந்தொழிலுங்காப்புமுயர்ந்தோர்க்கு
நடக்கை யெல்லா மவர்கட் படுமே.

இது முற்கூறியவற்றிற்கு உரியார் இங்ஙனஞ் சிறந்தாரென மேலதற்கோர் புறனடை.

இதன்பொருள்: உழைக்குறுந் தொழிலும் காப்பும் உயர்ந்தோர்க்கு நடக்கை எல்லாம்—அவரிடத்து நின்று கூறிய தொழில்செய்தலும் போற்றீடுமுதலிய பாதுகாவலும் பிறவும் உயர்ந்தோர்க்குச் செய்யுந் தொழிற்பகுதியெல்லாம்; அவர்கட் படும்—முற்கூறிய இளையோரிடத்து உண்டாம், என்றவாறு.

என இவ்விரண்டற்குமுரியர் அல்லாத புறத்திணையர் முற்கூறியவை கூறப்பெறாரென்பது பொருளாயிற்று. (௩௦)

172. பின்முறையாக்கிய பெரும்பொருள்வதுவைத்
தொன்முறை மனைவி யெதிர்ப்பா டாயினு
மின்னிழைப்புதல்வனைவாயில்கொண்டுபுகினு
*கிழவோ னிறந்தது நினைஇ யாங்கட் [ங்
கலங்கலு முரிய னென்மனார் புலவர்.

இது மேல் அதிகாரப்பட்ட வாயில் பரத்தையிற் பிரிவொடும பட்டதாகலின் அதுகூறி இனித் தலைவன் பரத்தைமை நீங்குமிடங் கூறுகின்றது.

இதன்பொருள்: பின்முறை ஆக்கிய பெரும்பொருள் வதுவை—மூவகை வருணத்தாரும் முன்னர்த் தத்தம்வருணத்தெய்திய வதுவைமனைவியர்க்குப்பின்னர் முறையாற்

* 'இறந்தது நினைஇக் கிழவோ னாங்கண்' என்பதும் பாடம்.

செய்துகொள்ளப்பட்ட பெரியபொருளாகிய வதுவைமனைவியரை; தொன்முறை மனைவி எதிர்ப்பாடாயினும்—பழைதாகிய முறைமையினையுடைய மனைவி விளக்கு முதலிய மங்கலங்களைக் கொண்டு எதிரேற்றுக்கோடற் சிறப்பினும்; இன் இழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும்—இனிய பூண்களையணிந்து தொன்முறை மனைவி புதல்வனைக் கோலங் காட்டிய செல்வாள்போலப் பின்முறை வதுவையரிடத்து வாயிலாகக் கொண்டு செல்லினும்; கிழவோன் இறந்தது நினைஇ—தலைவன் இங்ஙனஞ் செய்கையுடைய இருவகைத் தலைவியரையுங் கைவிட்டுப் பரத்தைமைசெய்து ஒழுகியவற்றை நினைந்து; ஆங்கட் கலங்கலும் உரியன் என்மனார் புலவர்—அப்பரத்தையர்கண் நிகழ்கின்ற காதல் நிலைகுலைந்து மீளுதலும் உரியன் எனக் கூறுவர் புலவர், என்றவாறு.

உம்மை எதிர்மறையாகலான் மீளாமையும் உரித்தாயிற்று; என்னை? இளமைப்பருவங் கழியாத காலத்து அக் காதன் மீளாதாகலின். பெரும்பொருளென்றார், வேதநூல் அந்தணர்க்குப் பின்முறைவதுவை மூன்றும் அரசர்க்கிரண்டும் வணிகர்க்கொன்றும் நிகழ்த்தல்வேண்டுமெனக் கூறிற்றென்பது உணர்த்துதற்கு.

இனி மகப்பேறு காரணத்தாற் செய்யும் வதுவையென்றுமாம். 'ஆக்கிய' வென்றதனானே வேளாளர்க்கும் பின் முறைவதுவை கொள்க. தொன்மனைவியென்னாது 'முறை' யென்றதனானே அவரும் பெருஞ்சிறப்புச்செய்து ஒருகோத்திரத்தராய் ஒன்றுபட்டொழுகுவரென்பது கூறினார். இங் ஙனந்தொன்முறையார் பின்முறையாரை மகிழ்ச்சிசெய்தமை கண்டு இத்தன்மையாரை இறந்தொழுகித் தவறுசெய்தேமே

யென்றும் பின்முறையார் அவர்புதல்வரைக் கண்டு மகிழ்ச்சி செய்து வாயில் நேர்ந்த குணம்பற்றி இவரை இறந்தொழுகித் தவறுசெய்தேமேயென்றும் பரத்தைமை நீங்குவனென்றார். 'புகினு' மெனவே பிறர்மனைப் புதல்வரென்பது பெற்றாம். தொன்முறைமனைவி எதிர்ப்பட்டதற்கு இலக்கியம் வந்துழிக் காண்க.

இனிப் பரத்தைமையிற் பிரிவொழிந்து மனைக்கண் இருந்ததற்கு உதாரணம்:

"மாத ருண்கண் மகன்விளை யாடக்
*காதலிற் றழீஇ யினிதிருந் தனனே
தாதார் †பிரச முரலும்
போதார் புறவி னாடுகிழ வோனே." (ஐங்குறு-406.)

இன்னும் இவ்வாறு வருவன பிறவும் உய்த்துணர்ந்து கொள்க. (௩௧)

173. தாய்போற் கழறித் தழீஇக் கோட
லாய்மனைக் கிழத்திக்கு முரித்தென மொழிப
கவவொடு மயங்கிய காலை யான.

இது தலைவி புலவிகடைக்கொள்ளுங் காலம் உணர்த்துகின்றது.

இதன்பொருள்: தாய்போற் கழறித் தழீஇக் கோடல் —பரத்தையிற் பிரிவுநீங்கிய ‡ தலைவன் தன்னினும் உயர்ந்த

---

* 'காதலித் தழீஇ' என்பதும் பாடம்.

† 'பிரச மூதும்' என்பதும் பாடம்.

‡ 'தலைவனை உலகில் தன்னினும் உயர்ந்த' என்பதும் பாடம்.

குணத்தினளெனக் கொள்ளுமாற்றான் மேல் நின்று மெய் கூறுங் கேளிராகிய தாயரைப்போலக் கழறி அவன் மனக் கவலையை மாற்றிப் பண்டுபோல மனங்கோடல்; ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப—ஆராய்ந்த மனையற நிகழ்த்துங் கிழத்திக்கும் உரித்தென்று கூறுப; கவவொடு மயங்கிய காலையான—அவன் முயக்கத்தால் மயங்கிய காலத்து என்றவாறு.

என்றது, தலைவன் தவற்றிற்கு உடம்பட்டுக் கலங்கி னமை கண்ட தலைவி அதற்கு ஆற்றாது தன்மனத்துப் புலவி யெல்லாம் மாற்றி இதற்கொண்டும் இனையை யாகலெனத் தழீஇக்கொண்டமை கூறிற்று. தலைவன் தன்குணத்தினும் இவள்குணம் மிகுதிகண்டு மகிழவே தலைவி தன்னைப் புகழ்ந்த குறிப்பு உடையளென்பதூஉங் கொள்க. (௩௨)

174. அவன்சோர்பு காத்தல் கடனெனப் படுதலின்
மகன்றா யுயர்புந் தன்னுயர் பாகுஞ்
செல்வன் பணிமொழி யியல்பாக லான.

இதுவுந் தலைவி குணச்சிறப்புக் கூறுகின்றது.

இதன்பொருள்: அவன்சோர்பு காத்தல் கடன் எனப் படுதலின்—தான் நிகழ்த்துகின்ற இல்லறத்தால் தலைவற்கு இழுக்கம் பிறவாமற் பாதுகாத்தல் தலைவிக்குக் கடப்பா டென்று கூறப்படுதலால்; மகன் தாய் உயர்பும் தன் உயர்பு ஆகும்—மகன் தாயாகிய மாற்றாளைத் தன்னின் இழிந்தாளா கக் கருதாது தன்னோடு ஒப்ப உயர்ந்தாளாகக் கொண் டொழுகுதல் தனது உயர்ச்சியாம்; செல்வன் பணிமொழி இயல்பு ஆகலான—தலைவன் இவ்வாறொழுகுகவென்று

தமக்குப் பணித்தமொழி நூலிலக்கணத்தான் ஆன மொழி யாகலான், என்றவாறு.

ஈண்டு 'மகன்று' யென்றது பின்முறையாக்கிய வதுவை யாளே. இன்னும் அவன் சோர்பு காத்தல் தனக்குக் கட னென்று கூறப்படுதலாலே முன்முறையாக்கிய வதுவை யாளைத் தம்மின் உயர்ந்தாளென்றும் வழிபாடாற்றுதலும் பின்முறை வதுவையாளுக்கு உயர்பாஞ் செல்வன் பணித்த மொழியா லென்றவாறு. ஈண்டு 'மகன்று' யென்றது உயர்ந் தாளை, உய்த்துக்கொண்டுணர்த லென்னுமுத்தியால். இவை யிரண்டும் பொருள். 'செல்வ' னென்றார், பன்மக்களையுந் தன்னுணை வழியிலே இருத்துந் திருவுடைமைபற்றி. இவை வந்த செய்யுள்கள் உய்த்துணர்க. (௩௩)

175. எண்ணரும் பாசறைப் பெண்ணொடு புணரார்.

இஃது எய்தியது விலக்கிற்று; 'முந்நீர்வழக்கம்'(தொல்-அகத்-34) என்பதனுற் பகைதணிவினைக்குங் காவற்குங் கடும்பொடு சேறலாமென்று எய்தியதனை விலக்கலின்.

இதன்பொருள்: எண் அரும் பாசறை—போர்செய்து வெல்லுமாற்றை எண்ணும் அரிய பாசறையிடத்து; பெண் ணொடு புணரார்—தலைவியரொடு தலைவனைக்கூட்டிப் புல னெறிவழக்கஞ் செய்யார், என்றவாறு.

இரவும் பகலும் போர்த்தொழின் மாறுமை தோன்ற அரும்பாசறையென்றார்.

"நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே."

(பத்து-நெடுநல்-186-188.)

எனவும்,

"ஒருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து"
(பத்து-முல்லை-75-76.)

எனவும் வருவனவற்றான் அரிதாக உணர்ற்றியவாறு காண்க.

இனிக் காவற்பிரிவுக்கு முறைசெய்து காப்பாற்றுதலை எண்ணுமெனப் பொருளுரைக்க. (௧௭௪)

176. புறத்தோ ராங்கட் புரைவ தென்ப.

இஃது எய்தியது இகந்துபடாமற் காத்தது.

இதன்பொருள்: புறத்தோர் ஆங்கண்—அடியோரும் வினைவல பாங்கினோருமாகிய அகப்புறத்தலைவருடைய பாசறையிடத்தாயில்; புரைவது என்ப—அவரைப் பெண்ணொடு புணர்த்துப் புலனெறி வழக்கஞ் செய்தல் பொருந்துவது என்று கூறுவர் ஆசிரியர், என்றவாறு.

இப்பாசறைப்பிரிவை வரையறுப்பவே ஏனைப்பிரிவுகளுக்குப் *புணர்த்தலும் புணராமையும் புறத்தோர்க்கு வரைவின்றாயிற்று. (௧௭௫)

177. காமநிலை யுரைத்தலுந் தேர்நிலை யுரைத்தலுங்
கிழவோன் குறிப்பினை யெடுத்தனர் மொழிதலு
மாவொடு பட்ட நிமித்தங் கூறலுஞ்
செலவுறு கிளவியுஞ் செலவழுங்கு கிளவியு
மன்னவை பிறவும் பார்ப்பார்க் குரிய.

இது பார்ப்பார்க்குரிய கிளவி கூறுகின்றது.

* 'புணர்தலும்' என்பதும் பாடம்.

இதன்பொருள் : காமநிலை உரைத்தலும்—தலைவனது காமமிகுதிகண்டு இதன் நிலை இற்றென்று இழித்துக் கூறுவனவும்; தேர் நிலை உரைத்தலும்—அங்ஙனங் கூறி அவன் தேருமாறு ஏதுவும் எடுத்துக்காட்டுங் கூறலும்; கிழவோன் குறிப்பினை எடுத்தனர் மொழிதலும்—தலைவன் தாழ்ந்தொழுகியவற்றை அவன் குறிப்பான் அறிந்து வெளிப்படுத்தி அவற்கே கூறுதலும்; ஆவொடு பட்ட நிமித்தம் கூறலும்—*வேள்விக்கபிலை பாற்பயங்குன்றுதலானுங், குன்றாது கலநிறையப் பொழிதலானும் உளதாய நிமித்தம் பற்றித் தலைவற்குவரும் நன்மைதீமை கூறுதலும்; செலவுறு கிளவியும்—அவன் பிரியுங்கால் நன்னிமித்தம்பற்றிச் செலவு நன்றென்று கூறுதலும்; செலவு அழுங்கு கிளவியும்—தீயநிமித்தம்பற்றிச் செலவைத் தவிர்த்துக் கூறுதலும்; அன்னபிறவும்—அவைபோல்வன பிறவும்; பார்ப்பார்க்கு உரிய—அந்தணர்க்கு உரிய, என்றவாறு.

'தேர்நிலை' யென்றதனால் தேர்ந்து பின்னுங் கலங்கினுங் கலங்காமல் தெளிவுநிலை காட்டலுங் கொள்க. 'அன்னபிறவும்' என்றதனான், †அறிவர் இடித்துக் கூறியாங்குத் தாமும் இடித்துக் கூறுவனவும், வாயிலாகச் சென்று கூறுவனவுந்,

---

* முன் அச்சுப்பிரதியிலுள்ள 'வேள்விக்கபிலையாற் பயங்குன்றுதலானும்' என்னும் பாடம் பொருட்பொருத்தமில்லாமையின் 'வேள்விக்கபிலை பாற்பயங்குன்றுதலானும்' என்பதே திருத்தமான பாடமென்க.

† முன் அச்சுப்பிரதியிலுள் 'அவர்' என்னும் பாடம் பொருந்தாமையின், 'அறிவர்' என்டதே திருத்தமான பாடமென்க. அறிவர் இடித்துக் கூறுமாறு 'சொல்லிய கிளவி யறிவர்க்கு முரிய' (தொல்-கற்-13) என்னுஞ் சூத்திரத்திற் காண்க.

னாதுசென்று கூறுவனவுங் கொள்க. 'மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல்' என்பதனாற் களவியலிற் கூறுதனவும் ஈண்டே கூறினார். அஃது இப்பேரறிவு உடையையாயின் இனையையாதற்பாலை யல்லையெனக் காமநிலை யுரைத்தலுங் கற்பினுள் " இல்லிருந்து மகிழ்வோற் கில்லையாற் புகழே'' எனத் தலைவன் நினையுமாற்றாற் காமநிலை யுரைத்தலும் அடங்கிற்று. ஏனையவற்றிற்கும் இருவகைக் கைகோளிற்கும் ஏற்பன கொணர்ந்து ஓட்டுக. 'பார்ப்பான் பாங்கன்' என உடன் கூறினமையிற் பாங்கற்கும் ஏற்பனவுங் கொள்க. இவையெல்லாந் தலைச்சங்கத்தாரும் இடைச்சங்கத்தாருஞ் செய்த பாடலுட் பயின்றபோலும். இக்காலத்தில் இலக்கியமின்று. பாங்கன் கூறுவன 'நோய்மருங் கறிநரு' ளடக்கிக்கொண்டு எடுத்து மொழியப்படுதலன்றிக் கூற்று அவண் இன்மை உணர்க. அது,

> " வேட்டோர் திறத்து விரும்பியநின் பாகனும்
> நீட்டித்தா யென்று கடாங்கடுந் திண்டேர்
> பூட்டு விடாஅ நிறுத்து.'' (கலி-66.)

எனவும் வரும்.

இன்னும் சான்றோர் கூறிய செய்யுட்களில் இதுபோல வருவன பிற அனைத்தும் உய்த்துணர்ந்து கொள்க. (௱௭௭)

178. எல்லா வாயிலு மிருவர் தேஎத்தும்
புல்லிய மகிழ்ச்சிப் பொருள வென்ப.

இது வாயில்களின் இலக்கணங் கூறுகின்றது.

இதன்பொருள்: எல்லாவாயிலும்—பார்ப்பான்முதலிய வாயில்களெல்லாம்; இருவர் தேஎத்தும் புல்லிய—தலைவன் கண்ணுந் தலைவிகண்ணும் பொருந்திய; மகிழ்ச்சிப் பொருள என்ப—மனமகிழ்ச்சிப் பொருளினை நிகழ்த்துதலைத் தமக்குப் பொருளாகவுடையர், என்றவாறு.

எனவே மகிழ்ச்சி கூறப்பெறுராயிற்று. 'புல்லிய' என்றதனானே விருந்தும் புதல்வரும் ஆற்றுமையும் வாயிலாகுப என்று கொள்க. வாயில்கள் "தோழி தாயே" தொல்--கற்-52) என்பதனுட் கூறுப. உதாரணம் வந்துழிக் காண்க. (௱எ)

179. அன்பு தலைப்பிரிந்த கிளவி தோன்றிற்
சிறைப்புறங் குறித்தன் றென்மனர் புலவர்.

இது மகிழ்ச்சிப்பொருளன்றி வாயில்கள் இவ்வாறுங் கூறப்பெறுவர் என்றலின் எய்திய திகந்துபடாமற் காத்தது.

இதன்பொருள்: அன்பு தலைப்பிரிந்த கிளவி தோன்றில்—அன்பு இருவரிடத்தும் நீங்கிய கடுஞ்சொல் அவ்வாயில்களிடத்துத் தோன்றுமாகில்; சிறைப்புறங் குறித்தன்று என்மனர் புலவர்—ஒருவர்க்கொருவர் சிறைப்புறத்தாராகக் கூறல்வேண்டுமென்று கூறுவர் புலவர், என்றவாறு.

'தோன்றி'னென்பது படைத்துக்கொண்டு கூறுவரென்பதாமாகலின். குறித்தன்றென்பது போயின்றென்பதுபோல றகரம் ஊர்ந்த குற்றியலுகரம். "அறியாமையின்" என்னும் (50) நற்றிணைப்பாட்டும் உதாரணமாம், அது சிறைப்புறமாகவுங் கொள்ளக் கிடந்தமையின். (௱அ)

180. தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்த
லெத்திறத் தானுங் கிழத்திக் கில்லை
மூற்பட வகுத்த விரண்டலங் கடையே.

இது தலைவியிலக்கணங் கூறுகின்றது.

இதன் பொருள்: தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்தல்—தன்னைப் புகழ்ந்துரைத்தலைக் கிழவன் முன்னர்ச் சொல்லுதல்; எத்திறத்தானுங் கிழத்திக்கு இல்லை—நனிமிகு சீற்றத்துனியினும் தலைவிக்கு இல்லை; முற்பட வகுத்த இரண்டலங்கடையே—முன்பு கூறுபடுத்தோதிய 'தாய் போற் கழறித் தழீஇக்கோடலும்' அவன் சோர்புகாத்தற்கு மகன்றாயுயர்பு தன்னுயர்பாதலும் அல்லாதவிடத்து, என்றவாறு.

கிழத்திக்கில்லையென முடிக்க. அவ்விரண்டிடத்துந் தனது குணச்சிறப்பைக் குறிப்பால் தலைவன்முன்னே புகழ்வாள்போல ஒழுகினளென் றுணர்க.

இனி 'முற்படவகுத்த இரண்டு' என்பதற்கு 'இரத்தலுந் தெளித்தலும்' (தொல்-அகத்-41) என அகத்திணையியலுட் கூறியனவென்று மாம். தலைவன்முன்னர் இல்லையெனவே அவன்முன்னர் அல்லாதவிடத்துப் புகழ்தல் பெற்றாம். அவை காமக்கிழத்தியரும் அவர்க்குப் பாங்காயினாருங் கேட்பப் புகழ்தலாம்.

உதாரணம்.

"பேணுதகு சிறப்பிற் பெண்ணியல் பாயினு
மென்னொடு புரையுந ளல்ல
டன்னொடு புரையுநர்த் தானறி குநளே."

எனப் பதிற்றுப்பத்தில் வந்தது. (கூகூ)

181. கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி
கிழவோன் வினைவயி னுரிய வென்ப.

இது தலைவன் தன்னைப் புகழ்ந்துரைக்கும் இடம் இன்னுழி என்கின்றது.

இதன்பொருள்: கிழவிமுன்னர்க் கிழவோன் தற் புகழ் கிளவி—தலைவிமுன்னர்த் தலைவன் தன்னைப் புகழ்ந்துகூறுங் கூற்று; வினைவயின் உரிய என்ப—காரியங்களை நிகழ்த்துங் காரணத்திடத்து உரியவென்று கூறுவார் ஆசிரியர், என்றவாறு.

அக்காரணமாவன, கல்வியுங், கொடையும், பொருள் செய்லும், முற்றகப்பட்டோனை முற்றுவிடுத்தலுமாகிய காரியங்களை நிகழ்த்துவலெனக் கூறுவன. இவ் வாள்வினைச் சிறப்பை யான் எய்துவலெனத் தன்னைப்புகழவே அதுபற்றித் தலைவி பிரிவாற்றுதல் பயனாயிற்று.

"இல்லென விரந்தோர்க்கொன் றீயாமை யிளிவென" (கலி-2.)

என்றவழி யான் இளிவரவு எய்தேனென்றலிற் புகழுக்குரியேன் யானேயெனக் கூறியவாறு காண்க. ஏனையவும் வந்துழிக்காண்க. (௪0)

182. மொழியெதிர் மொழிதல் பாங்கற் குரித்தே.

இது மேற் பார்ப்பார்க்குரியன பாங்கற்குமாமென எய்துவித்ததனை ஒருமருங்கு மறுக்கின்றது.

இதன்பொருள்: மொழியெதிர் மொழிதல்—பார்ப்பானைப்போலக் காமநிலை உரைத்தல்போல்வன கூறுங்கால்

தலைவன் கூறிய மொழிக்கு எதிர் கூறுதல்; பாங்கற்கு உரித்து—பாங்கனுக்கு உரித்து, என்றவாறு.

இது களவிற்கும் பொது: அது பாங்கற்கூட்டத்துக் காண்க. கற்பிற் புறத்தொழுக்கத்துத் தலைவன் புகலாமற் கூறுவன வந்துழிக் காண்க. 'உரித்'தென்றதனால் தலைவன் இடுக்கண் கண்டுழி எற்றினான் ஆயிற்றென அவன்மொழிக்கு முன்னே வினாதலுங் கொள்க. (சக)

183. குறித்தெதிர் மொழித லஃகித் தோன்றும்.

இதுவும் பாங்கற்குரியதோ ரிலக்கணங் கூறுகின்றது.

இதன்பொருள்: குறித்து எதிர்மொழிதல்—தலைவன் குறிப்பினை அவன் கூறாமல் தான் குறித்துணர்ந்ததற்கு எதிர் மொழி கொடுத்தல்; அஃகித் தோன்றும்—சுருங்கித் தோன் றும், என்றவாறு.

அவன் *குறிப்பறிந்து கூறல் சிறுவரவிற்றெனவே 'காமநிலையுரைத்தல்' (தொல்-கற்-36) என்னுஞ் சூத்திரத் தின்கட் கூறிய 'ஆவொடு பட்ட நிமித்தம்' ஆயின் பார்ப் பான்கூறக் கேட்டுத் தான் கூறவும்பெறுமெனவும் ஏனைய வுங் கிழவன்கூறாமல் தாமே கூறவும் பெறுமெனவுங் கூறிய வாறாயிற்று. (சஉ)

184. துன்புறு பொழுதினு மெல்லாங் கிழவன்
வன்புறுத் தல்லது சேற லில்லை.

இது முன்னர்க் 'கிழவி முன்னர்' (தொல்-கற்-40) என் பதனாற் குறிப்பினான் ஆற்றுவித்துப் பிரிதல் அதிகாரப் பட்டதனை ஈண்டு விளங்கக்கூறி வற்புறுத்துமென்கின்றது.

---

* 'குறிப்புணர்ந்து' என்பதும் பாடம்

இதன்பொருள்: துன்பு உறு பொழுதினும்—உணர்த்தாது பிரிந்து தலைவி துன்பம் மிக்க பொழுதினும், உம்மையான் உணர்த்திப் பிரிந்து துன்பம் மிகாத பொழுதினும்; எல்லாம்—சுற்றமுந் தோழியும் ஆயமுந் தலைமகள் குணமாகிய அச்சமும் நாணமும் மடனுமாகியவற்றையெல்லாம்; கிழவன் வன்புறுத்து அல்லது சேறல் இல்லை—தலைவன் வலியுறுத்து அல்லது பிரியான், என்றவாறு.

எனவே இவற்றை முன்னர் நிலைபெறுத்திப் பின்னர்ப் பிரியுமாயிற்று. சொல்லாது பிரியுங்கால், 'போழ்திடைப் படாமன் முயங்கியும்' அதன்றலைத் 'தாழ்கதுப் பணிந்து முள்ளெயிற் றமுதங் கள்ளினு மகிழ்செய்யு மெனவுரைத்தும்' * இவை முதலிய தலையளிசெய்து தெருட்டிப் பிரிய அவை பற்றுக்கோடாக ஆற்றுதலின் அவள்குணங்கள் வற்புறுத்துவன ஆயின.

இனி உலகத்தார் பிரிதலும் ஆற்றியிருத்தலுமுடையரென உலகியலாற் கூறலும் பிரிவுணர்த்திற்றேயாம். இனிப் பிரிவினை விளங்கக்கூறி ஆற்றியிருவென்றலும் அவற்றை வற்புறுத்தலாம்.

---

* "காழ்விரி வகையார மீவரு மிளமுலை
போழ்திடைப் படாமன் முயங்கியு மமையாரென்
தாழ்கதுப் பணிகுவர் காதலர் மற்றவர்
சூழ்வதை யெவன்கொ லறியே னென்னும் ;

"முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறுந் தீநீரைக்
கள்ளினு மகிழ்செயு மெனவுரைத்து மமையாரென்
ஒள்ளிழை திருத்துவர் காதலர் மற்றவர்
உள்ளுவ தெவன்கொ லறியே னென்னும்" (கலி-4.)

"யாந்தமக் கொல்லோ மென்ற தப்பல்
சொல்லா தகறல் வல்லு வோரே."

இது சொல்லாது பிரிதல்.

"அரிதாயவறனெய்தி" (கலி-11) இது சொல்லிப் பிரிதல். (சரு)

185. செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே
வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும்.

இது செலவழுங்கலும் பாலையா மென்கின்றது.

இதன்பொருள்: செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே—தலைவன் கருதிய போக்கினை இடையிலே தவிர்ந்திருத்தல் பிரிந்துபோதல் ஆற்றுமைக்கன்று; வன்புறை குறித்தல் தவிர்ச்சி ஆகும்—தலைவியை ஆற்றுவித்துப் பிரிதற்குத் தவிர்ந்த தவிர்ச்சியாகும், என்றவாறு.

செலவழுங்கி ஆற்றுவிக்க *அவள் ஆற்றியிருத்தல் இப்பிரிவிற்கு நிமித்தமாதலிற் பாலையாயிற்று.

† "மணியுரு விழந்த வணியிழை தோற்றங்
கண்டே கடிந்தனஞ் செலவே யொண்டொடி
யுழைய மாகவு மினைவோள்
பிழையலண் மாதோ பிரிதுநா மெனினே" (அகம்-5.)

"களங்காய்க் கண்ணி நார்முடிச் சேர
லிழந்த நாடு தந்தன்ன
வளம்பெரிது பெறினும் வாரலேன் யானே" (அகம்-198.)

---

* 'அவள் ஆற்றியிருத்தலிற் பிரிவிற்கு நிமித்தமாயிற்று' என்பதும் பாடம்.

† இச்செய்யுள் முழுவதையும் 120-ஆம் பக்கத்திற் காண்க.

இவை வன்புறைகுறித்துச் செலவழுங்குதலிற் பாலை யாயிற்று. (சச)

186. கிழவி நிலையே வினையிடத் துரையார்
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்.

இஃது அகத்திணையியலுட் 'பாசறைப் புலம்பலும்' (தொல்-அகத்-41) என்றார் ஆண்டைப்புலம்பல் இன்னுழி யாகாது இன்னுழியாமென வரையறை கூறுகின்றது.

இதன் பொருள் : கிழவி நிலையே வினையிடத்து உரையார்—தலைவியது தன்மையை வினைசெய்யா நிற்றலாகிய விடத்து நினைந்துகூறினாகச் செய்யுள் செய்யப்பெறார்; வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்—வெற்றி நிகழு மிடத்துந் தான்குறித்த பருவம் வந்துழியுந் தூதுகண்டுழி யும் வருத்தம் விளங்கிக் கூற்றுத்தோன்றிற்றாகச் செய்யுள் செய்ப, என்றவாறு.

உரையாரெனவே நினைத்தலுள தென்பதூஉம் அது போர்த்திறம்புரியும் உள்ளத்தாற் கதுமென மாயுமென்ப தூஉங்கொள்க. வினையிடம், வினைசெய்யிடம். காலத்து மென்னும் எச்சவும்மை தொக்குநின்றது. அன்றி அங்ஙன ம் பாடங்கூறலும் ஒன்று.

உதாரணம் :

" வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
*வளைகளைந் தொழிந்த கொழுந்தி னன்ன
தளைபிணி யவிழாச் †சுரிமுகிழ்ப் பகன்றை
சிதரலந் துவலை தூவலின் மலருந்

* 'வளைகளைந் தொழித்த' என்பதும் பாடம்.
† 'சுரிமுகப் பகன்றை' என்பதும் பாடம்.

தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்
வயங்குகதிர் கரந்த வாடை வைகறை
விசும்புரி வதுபோல் வியலிடத் தொழுகி
மங்குன் மாமழை *சேண்புலம் படரும்
பனியிருங் கங்குலுந் தமிய ணீந்தித்
தன்னூ ரோளே நன்னுதல் யாமே
கடிமதிற் கதவம் பாய்தலிற் றொடிபிளந்து
நுதிமுக மழுங்கிய மண்ணைவெண் கோட்டுச்
சிறுகண் யானை நெடுநா வொண்மணி
கழிபிணிக் கறைத்தோற் பொழிகணை யுதைப்புத்
தழங்குகுரன் முரசமொடு †மயங்கும் யாமத்துக்
கழித்துறை செறியா வாளுடை யெறுழ்த்தோ
ளிரவுத்துயின் மடிந்த தானை
யுரவுச்சின வேந்தன் பாசறை யேமே." (அகம்-24.)

இதனுட் கணையுதைப்பு முரசொடு மயங்கும் யாமத்துத் துயின்மடிந்து வாளுறைசெறியாத் தானையையுடைய வேந்தனெனவே வென்றிக்காலங் கூறியவாறுங் கிழவினை உரைத்தவாறுங் காண்க.

பருவங்கண்டுந் தூதுகண்டுங் கூறியவை 'பாசறைப் புலம்பலும்' (தொல்-அகத்-41) என்புழிக் காட்டினும்.

187. ***பூப்பின் புறப்பா டீராறு நாளு**
நீத்தகன் றுறையா ரென்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான.

---

* 'தென்புலம்' என்பதும் பாடம்.

† 'முழங்கும் யாமத்து' என்பதும் பாடம்.

‡ இச்சூத்திரமும் இதனுரையும், "பரத்தையிற்பிரிந்த கிழவோன் மனைவி" என்னும் இறையனாரகப்பொருட் சூத்திரத்தோடும் அதனுரையோடும் ஒத்துநோக்கற்பாலன.

இது பரத்தையிற் பிரிவின்கட் டலைவற்குந் தலைவிக்கும் உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.

இதன் பொருள்: பரத்தையிற் பிரிந்த காலை யான —பரத்தையிற் பிரிந்த காலத்தின்க ணுண்டான; பூப்பின் நீத்து—இருதுக்காலத்தின்கட் சொற்கேட்கும் அணுமைக் கண் நீங்கியிருந்து; புறப்பாடு ஈராறு நாளும் அகன்று உறை யார் என்மனார் புலவர்—அவ் விருதுக்காலத்தின் புறக்கூறா கிய பன்னிரண்டு நாளும் இருவரும் பிரிந்துறையாரென்று கூறுவர் புலவர், என்றவாறு.

என்றது பூப்புத்தோன்றிய மூன்றுநாளுங் கூட்ட மின்றி அணுகவிருந்து அதன் பின்னர்ப் பன்னிரண்டு நாளுங் கூடியுறைப என்றதாம்.

தலைவியுந் தலைவனுந் *துனித்தும் இருத்தலிற் பிரிந் துறையாரெனப் பன்மையாற் கூறினார்.

இனிப் பூப்பின் முன்னாறுநாளும் பின்னாறு நாளுமென் றும், பூப்புத்தோன்றிய நாள் முதலாகப் பன்னிரண்டு நாளு மென்றும், நீத்தல்தலைவன்மேல் ஏற்றியும், அகறலைத் தலைவி மேல் ஏற்றியும் உரைப்பாருமுளர். பரத்தையிற் பிரிந்த காலத்துண்டான பூப்பெனவே, †தலைவி சேடியர் செய்ய கோலங்கொண்டு பரத்தையர் மனைக்கட்சென்று தலைவற் குப் பூப்புணர்த்துதலுங் கொள்க. இது,

---

* முன் அச்சுப்பிரதியிலுள்ள 'துணிந்தும்' என்னும் பாடம் பொருட்கு இயைபின்று.

† 'தலைவிசேடியர்' தலைவியின்சேடியர் என ஆறும்வேற்றுமை கொள்க.

"அரத்த முடீஇ * யணிபழுப்புப் பூசிச்
சிரத்தையாற் செங்கழுநீர் † சூட்டிப்—பரத்தை
வினைநோக்கிக் கூறினு நீமொழிய லென்று
மனைநோக்கி மாண விடும்." (திணை, 150-144.)

இது தோழி செவ்வணியணிந்து விட்டமை தலைவன் பாங்காயினர் கூறியது.

இக்காலத்தின்கண் வேறுபாடாக வருவனவெல்லாம் ஈண்டு அடக்கிக் கொள்க.

பூப்புப்புறப்பட்ட ஞான்றும் மற்றைநாளுங் கருத் தங்கில் அதுவயிற்றில் அழிதலும், மூன்றுநாள் தங்கில் அது இல்வாழ்க்கைத்தாகலும் பற்றி முந்நாளுங் கூட்டமின்றென்றார். கூட்டமின்றியும் நீங்காதிருத்தலிற் பரத்தையிற் பிரிந்தானெனத் தலைவி நெஞ்சத்துக்கொண்ட வருத்தம் அகலும். ‡அகல வாய்க்குங்கரு மாட்சிமைப் படுமாயிற்று. இது மகப்பேற்றுக்காலத்திற்குரிய நிலைமை கூறிற்று. இதனாற் பரத்தையிற் பிரியுநாள் ஒருதிங்களிற் பதினைந்தென்றாராயிற்று. உதாரணம் வந்துழிக் காண்க. "குக்கூ" (குறுங்-157) என்பதனைக் காட்டுவாருமுளர். (சகூ)

188. வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது.

இஃது 'ஓதலுந் தூதும்' (தொல்-அகத்-26) என்னுஞ் சூத்திரத்திற் கூறிய ஓதற்பிரிவிற்குக் காலவரையறையின்றென்பதூஉம் அவ்வோத்து இதுவென்பதூஉம் உணர்த்துகின்றது.

---

* 'அணிபழுப்ப' என்பதும் பாடம்.
† 'சூடி' என்பதும் பாடம்.
‡ 'அகலவே அக்கரு' என்பதும் பாடம்.

இதன் பொருள் : கல்வி வேண்டிய யாண்டு இறவாது—துறவறத்தினைக்கூறும் வேதாந்த முதலிய கல்வி வேண்டிய யாண்டைக் கடவாது ; மூன்று இறவாது—அக்கல்வியெல்லாம் மூன்றுபதத்தைக் கடவாது, என்றவாறு.

இறவாதென்பதை இரண்டிடத்துங் கூட்டுக. மூன்று பதமாவன அதுவென்றும் நீயென்றும் ஆனுயென்றுங் கூறும் பதங்களாம். அவை பரமுஞ் சீவனும் அவ்விரண்டும் ஒன்றுதலும். ஆதலின் இம்மூன்று பதத்தின்கண்ணே தத்துவங்களைக் கடந்த பொருளை உணர்த்தும் ஆகமங்களெல்லாம் விரியுமாறு உணர்ந்துகொள்க. இது மூன்று வருணத்தார்க்குங் கூறினார். ஏனைய வேளாளரும் ஆகமங்களானும் அப்பொருளைக் கூறிய தமிழானும் உணர்தல் 'உயர்ந்தோர்க்குரிய' (தொல்-அகத்-31) என்பதனான் உணர்க. இஃது இல்லறம் நிகழ்த்தினார் துறவறம் நிகழ்த்துங் கருத்தினராக வேண்டுதலின் காலவரையறை கூறாராயினார். முன்னர்க்காட்டிய "*அரம்போழவ்வளை" (அகம்-124) என்னும் பாட்டினுட் 'பானாட் கங்குலின் முனிய வலைத்தி - கடவுளர் சான்ற செய்வினை மருங்கிற் - சென்றோர் வலவரின் ஓடுவை' என்றது இராப்பொழுது அகலாது நீட்டித்ததற்கு ஆற்றாளாய்க் கூறினாளென்று உணர்க. (சஎ)

189. வேந்துறு தொழிலே யாண்டின தகமே.

இது வரையறையுடைமையிற் பகைவயிற்பிரிவிற்கு வரையறை கூறுகின்றது.

இதன் பொருள்: வேந்து உறு தொழிலே—இருபெருவேந்தருறும் பிரிவும், அவருள் ஒருவற்காக மற்றொரு

---

* இச் செய்யுளை 68-ஆம் பக்கத்திற் காண்க.

வேந்தனுறும் பிரிவும்; யாண்டினது அகமே—ஓர் யாண்டினுட்பட்டதாம், என்றவாறு.

'வேந்துறுதொழி'லென்பதனை இரட்டுறமொழிதலென்பதனான் வேந்தனுக்கு மண்டிலமாக்களுந் தண்டத்தலைவரு முதலியோர் உறும் பிரிவும் யாண்டினதகமெனவும் பொருளுரைக்க. 'தொழி'லென்றது அதிகாரத்தாற் பிரிந்து மீளும் எல்லையை. அது 'நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு' (தொல்-அகத்-9) என்பதனாற் பிரிவிற்கோதிய இருவகைக் காலத்துள்ளும் முதற்கணின்ற சித்திரை தொடங்கித் தையீறாகக்கிடந்த பத்துத் திங்களுமாம். இனிப் பத்தென்னாது யாண்டென்றதனாற், 'பின்பனிதானும்' (தொல்-அகத்-10) என்பதனாற் கொண்ட சிறப்பில்லாத பின்பனிக்குரிய மாசிதொடங்கித் தையீறாக யாண்டுமுழுவதூஉங் கொள்ளக்கிடந்ததேனும் அதுவும் பன்னிருதிங்களுங்கழிந்த தன்மையின் யாண்டினதக மாமாறுணர்க. இதற்கு இழிந்த எல்லை வரைவின்மையிற் கூறாராயினர்; அது,

"இன்றே சென்று வருவது நாளைக்
குன்றிழி யருவியின் வெண்டேர் முடுகெ" (குறுந்-189.)

எனச் சான்றோர் கூறலின்.

"நிலநாவிற் றிரிதரூஉ நீண்மாடக் கூடலார்
புலநாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ
பலநாடு நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்கால்
*சுடர்நுதா னமக்கவர் வருதுமென் றுரைத்ததை."
(கலி-35.)

* 'சுடரிழாய்' என்பதும் பாடம்.

இது பின்பனியிற் பிரிந்து இளவேனிலுள் வருதல் குறித்தலின் இருதிங்கள் இடையிட்டது.

"கருவிக் காரிடி யிரீஇய
பருவ மன்னவர் வருதுமென் றதுவே."

இது கார்குறித்து வருவலென்றலின் அறுதிங்கள் இடையிட்டது.

'வேளாப் பார்ப்பான்' (அகம்-24) என்பது "தைஇ நின்ற தண்பெயற் கடைநாட் பனியிருங் கங்குல்" என்றலின் யாண்டென்பதூஉம், அது கழிந்ததன்மையின் அஃது அகமெனவும் பட்டதென்பதூஉம் தலைவன் வருதுமென்று காலங் குறித்ததற்கொத்த வழக்கென்றுணர்க. காவற்பிரிவும் வேந்துறுதொழிலெனவே அடங்கிற்று, தான்கொண்ட நாட்டிற்குப் பின்னும் பகையுளதாங்கொலென்று உட்கொண்டு காத்தலின். (சஅ)

190. ஏனைப் பிரிவு மவ்வயி னிலையும்.

இஃது எஞ்சிய பிரிவிற்கு வரையறை கூறுகின்றது.

இதன் பொருள்: ஏனைப் பிரிவும் அவ்வயின் நிலையும் —கழிந்துநின்ற தூதிற்கும் பொருளிற்கும் பிரிந்துமீளும் எல்லையும் யாண்டினதகம், என்றவாறு. உதாரணம்:

"மண்கண் குளிர்ப்ப வீசித் தண்பெயல்
பாடுலந் தன்றே பறைக்குர லெழிலி
புதன்மிசைத் தளவி னிதன்முட் செந்நனை
*நெடுங்குலைப் பிடவமோ டொருங்குபிணி யவிழக்
காடே கம்மென் றன்றே யவல

* 'நெருங்குகுலை' என்பதும் பாடம்.

கோடுடைந் தன்ன கோடற் பைம்பயிர்ப்
பதவின் பார்வை முனை இ மதவுநடை
*யண்ண னல்லே றமர்பிணை தழீஇத்
†தண்ணறல் பருகித் தாழ்ந்துபட் டன்றே
யனையகொல் வாழி தோழி மனைய
தாழ்வி ளெச்சி சூழ்வன மலரும்
மௌவன் மாச்சினை காட்டி
யவ்வள வென்றோ ராண்டுச்செய் பொருளே."

(அகம்-23.)

இது பொருட்பிரிவின்கட் கார்குறித்து ஆறு திங்கள் இடையிட்டது.

"நெஞ்சுநடுக்குற" (கலி-24) என்னும் பாலைக்கலியுள் "நடுநின்று செய்பொருண் முற்றுமளவென்றார்" என்றலின் எத்துணையும் அணித்தாக மீள்வலென்றதாம். இவற்றிற்குப் பேரெல்லைவந்த செய்யுள் வந்துழிக் காண்க. (சசு)

191. யாறுங் குளனுங் காவு மாடிப்
பதியிகந்து நுகர்தலு முரிய வென்ப.

இது தலைவற்குங் காமக்கிழத்தியர்க்குந் தலைவியர்க்கும் உரியதோர் மரபு கூறுகின்றது.

இதன் பொருள்: யாறும் குளனும் காவும் ஆடி-காவிரியுந் தண்பொருநையும் ஆன்பொருநையும் வையையும் போலும் யாற்றிலும், மிருகாமத்தினையேரிபோலுங் குளங்களினுங், திருமருதத்துறைக்காவேபோலுங் காக்களினும் விளையாடி; பதி இகந்து நுகர்தலும் உரிய என்ப—உறை

* 'அண்ண னல்விரலை யமர்பிணை தழீஇ' என்பதும் பாடம்.
† 'தண்ணறன் மருங்கிற் றாழ்ந்து பட்டனவே' என்பதும் பாடம்.

பதியைக் கடந்துபோய் நுகர்ச்சியெய்துதலுந் தலைவற்குங் காமக்கிழத்தியர்க்குந் தலைவியர்க்கும் உரிய, என்றவாறு.

ஏற்புழிக்கோடலால் தலைவியர்க்குச் சிறுபான்மையென் றுணர்க.

“ கதிரிலை நெடுவேற் *கடுமான் கிள்ளி
மதில்கொல் யானையிற் †கதழ்வுநெரி தந்த
சிறையழி புதுப்புன லாடுக
மெம்மொடுங் கொண்மோவெந் தோள்புரை புணையே.”
(ஐங்குறு-78.)

இது காமக்கிழத்தி நின்மனைவியோடன்றி எம்மொடு புணைகொள்ளின் யாமாடுதுமென்று புனலாட்டிற்கு இயைந் தாள்போல மறுத்தது.

“ வயன்மல ‡ராம்பற் கயிலமை நுடங்குதழைத்
திதலை யல்குற் றுயல்வருங் கூந்தற்
குவளை யுண்க ணேஎர் மெல்லியன்
மலரார் மலிர்நிறை வந்தெனப்
புனலாடு புணர்துணை யாயின ளெமக்கே.” (ஐங்குறு-72.)

இது தலைவி புலவிநீங்கித் தன்னொடு புனலாடல்வேண் டிய தலைவன், முன் புனலாடியதனை அவள் கேட்பத் தோழிக்குரைத்தது.

“வண்ண வொண்டழை” (ஐங்குறு-73) “விசும்பிழி தோகை” (ஐங்குறு-74) இவையும் அது. “புனல்வளர் பூங் கொடி” என்னும் மருதக்கலியுள்,

---

* ‘கதியான்’ என்பதும் பாடம்.

† ‘கதவுநெரிதந்த’ என்பதும் ‘கதழ்புநெறிவந்த’ என்பதும் பாடம்.

‡ ‘ஆம்பற்சயலமை’ என்பதும் பாடம்.

"அன்ன வகையால்யான் கண்ட கனவுத்தா
னனவாகக் காண்டை நறுநுதா அல் பன்மாணுங்
கூடிப் புணர்ந்தீர் பிரியன்மி னீடிப்
பிரிந்தீர் புணர்தம்மி னென்பன போல
வரும்பவிழ் பூஞ்சினை தோறு மிருங்குயி
லானு தகவும் பொழுதினுன் மேவர
நான்மாடக் கூடன் மகளிரு மைந்தருந்
தேனிமிர் காவிற் புணர்ந்திருந் தாடுமா
ரானு விருப்போ *டணியயர்பு காமற்கு
வேனில் விருந்தெதிர் கொண்டு." (கலி-92.)

என்னுஞ் சுரிதகத்துக் காவிற் புணர்ந்திருந்தாட நீயும் கருதெனத் தலைவன் தலைவிக்குக் கூறியவாறு காண்க. (௫0)

192. காமஞ் சான்ற கடைக்கோட் காலை
யேமஞ் சான்ற மக்களொடு துவன்றி
யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே.

இது முன்னர் இல்லறநிகழ்த்திய தலைவனுந் தலைவியும் பின்னர்த் துறவறநிகழ்த்தி வீடுபெறுப என்கின்றது.

இதன்பொருள்: கிழவனும் கிழத்தியும் — தலைவனுந் தலைவியும்; சுற்றமொடு துவன்றி அறம்புரி மக்களொடு— உரிமைச்சுற்றத்தோடே கூடிநின்று இல்லறஞ்செய்தலை விரும்பிய மக்களோடே; சான்ற காமங் கடைக்கோட் காலை—தமக்கு முன்னரமைந்த காமத்தினையுந் தீதாக உட்கொண்ட காலத்திலே; சிறந்தது ஏமஞ் சான்ற பயிற்றல்— அறம்பொருளின்பத்திற் சிறந்த வீட்டின்பம் பெறுதற்கு

* 'அணியயர்ப' என்பதும் பாடம்.

ஏமஞ்சான்றவற்றை அடிப்படுத்தல்; இறந்ததன் பயனே—யான் முற்கூறிய இல்லறத்தின்பயன், என்றவாறு.

'சான்றகாமம்'என்றார், நுகர்ச்சியெல்லாம் முடிந்தமை தோன்ற. இது கடையாயினார்நிற்கும் நிலையென்று உரைத்தற்குக் 'கடை' யென்றார். ஏமஞ்சான்றவாவன, வானப்பிரத்தமுஞ் சன்னியாசமும்; எனவே, இல்லறத்தின்பின்னர் இவற்றின் கண்ணேநின்று பின்னர். மெய்யுணர்ந்து வீடுபெறுப என்றார். இவ்வீடுபேற்றினை இன்றியமையாது இவ்வில்லறமென்பது இதன் பயன். இது காஞ்சியாகாதோவெனின், ஆகாது; தங்குறிப்பினானன்றி நிலையாமை தானே வருவதுதான் சிறந்தநிலைபெற்று நிற்குமெனச் சான்றோர் கூறுதலும் அதுதானே வந்துநிற்றலுங் காஞ்சி; இஃது அன்னதன்றிச் சிறந்த வீட்டின்பவேட்கையால் தாமே எல்லாவற்றையும் பற்றறத் துறத்தலின் அகப்பொருட் பகுதியாம். இதனானே இவ்வோத்தினுட் பலவழியுங் கூறிய காமம் நிலையின்மையின்மேல் இன்பத்தை விளைத்தே வருதலிற் காஞ்சியாகாமையுணர்க.

உதாரணம்:

“ அரும்பெறற் கற்பி னயிராணி யன்ன
பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும்—விரும்பிப்
பெறுநசையாற் பின்னிற்பா ரின்மையே பேணு
நறுநுதலா ணன்மைத் துணை.” (நாலடி-39-1.)

இதனுள் அருந்ததியைப்போலுந் தமக்குப் பெரும்பொருள்களை நச்சுதலாலே இரப்பாரது வறுமையே விரும்பிப் பாதுகாத்து, அவர்க்கு வேண்டுவன கொடுக்கும் மகளு

ளிர், நாஞ் செல்கின்ற வானப்பிரத்த *காருகத்திற்குத் துணையாவரெனத் தலைவன் கூறவே தலைவியும் பொருள்களிற் பற்றற்றாளாய் யாமுந் துறவறத்தின்மேற் செல்வாமெனக் கூறியவாறு காண்க. பிறவும் வந்துழிக் காண்க.

193. தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி யிளையர் விருந்தினர்
கூத்தர் விறலிய ரறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்க ளென்ப.

இது வாயில்களைத் தொகுத்து அவருந் துறவிற்கு உரியராவர் என்கின்றது.

இதன்பொருள்: தோழி—அன்பாற்சிறந்த தோழியும்; தாய்—அவளேபோலுஞ் செவிலியும்; பார்ப்பான்—அவரின் ஆற்றலுடைய பார்ப்பானும்; பாங்கன்—அவரேபோலும் பாங்கனும்; பாணன்—பாங்குபட்டொழுகும் பாணனும்; பாடினி—தலைவிமாட்டுப் பாங்காயொழுகும் பாடினியும்; இளையர்—என்றும் பிரியா இளையரும்; விருந்தினர்—இருவரும் அன்புசெய்யும் விருந்தினரும்; கூத்தர்—தலைவற்கு இன்றியமையாக் கூத்தரும்; விறலியர்—தாமே ஆடலும் பாடலும் †நிகழ்த்தும் விறலியரும்; அறிவர்—முன்னே

* 'காருகம்' என்னும் வடசொல் 'காரு' என்னும் பெயருரிச் சொல்லினின்றும் பிறந்தது. 'காரு' என்பது ஊழியக்காரன் என்னும் பொருட்டாகலின் அதனினின்றுவந்த 'காருகம்' ஊழியம் என்றே பொருளாம். ஆகவே 'வானப்பிரத்தகாருகத்திற்குத் துணையாவர்' என்பது வானப்பிரத்த நிலையில் நிற்பார்க்குச் செயக்கடவதான தொண்டிற்குத் துணையாவரெனப் பொருள்படும். முன் அச்சுப்பிரதியிலுள்ள 'கிரகத்தத்திற்கு' என்னும் பாடம் பொருட்பேறின்று.

† 'புரியும்' என்பதும் பாடம்.

துறவுள்ளத்தராகிய அறிவரும்; கண்டோர்—அவர் துறவு கண்டு கருணைசெய்யுங் கண்டோரும்; யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப—இந்தத் தலைவனுந் தலைவியும் பெற்ற துறவின்கண்ணே மனம் பிணிப்புண்ட சிறப்பினையுடைய வாயில்களென்று கூறுவர் ஆசிரியர், என்றவாறு.

என்றது, இவர் அத்துறவிற்கு இடையூறாகாது முன் செல்வர், தாமும் அவரைப் பிரிவாற்றாமையினென்பதாம். இதனைக் 'கற்புங்காமமும்' (தொல்-கற்-11) என்னுஞ் சூத்திரத்துமுன்னாக வாயில்களைத் தொகுத்துக்கூறிய சூத்திரமாக வைத்தல் பொருத்தமுடைத்தேனும் 'யாத்தசிறப்பி'னென்று துறவுநோக்குதலின் இதன்பின் வைத்தார். இதற்குக் கோப்பெருஞ்சோழன் துறந்துழிப் பிசிராந்தையாரும் பொத்தியாரும் போல்வார் துறந்தாரென்று கூறும் புறச்செய்யுட்கள் உதாரணம் என்றவாறு. (ருஉ)

194. வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவருங் காலை
யிடைச்சுர மருங்கிற் றவிர்த லில்லை
யுள்ளம் போல வுற்றுழி யுதவும்
புள்ளியற் கலிமா வுடைமை யான.

இது பிரிந்து மீளுங்காற் செய்யத்தகுவதோர் இயல்பு கூறுகின்றது.

இதன்பொருள்: வினைவயின் பிரிந்தோன் மீண்டு வரு காலை—யாதானுமோர் செய்வினையிடத்துப் பிரிந்தோன் அதனைமுடித்து மீண்டுவருங் காலத்து; இடைச் சுர மருங்கில் தவிர்தல் இல்லை—எத்துணைக்காதம் இடையிட்டதாயினும் அவ்விடையின்கணுண்டாகிய வருவழியிடத்துத் தங்கி

வருதலில்லை; உள்ளம்போல உற்றுழி உதவும்—உள்ளஞ் சேட்புலத்தை ஒருகணத்திற் செல்லுமாறுபோலத் தலைவன் மனஞ் சென்றுற்றவிடத்தே ஒருகணத்திற்சென்று உதவி செய்யும்; புள் இயல் கலிமா உடைமையான—புட்போல நிலந்தீண்டாத செலவினையுடைய கலித்த குதிரையையுடைய ஞதலான், என்றவாறு.

தேருங் குதிரையாலல்லது செல்லாமையிற் குதிரையைக் கூறினர். இஃது இடையில் தங்காது, இரவும்பகலுமாக வருதல் கூறிற்று. இதனை மீட்சிக்கெல்லைகூறிய சூத்திரங்களின்பின் வையாது, ஈண்டுத் துறவு கூறியதன்பின்னர் வைத்தார், இன்பநுகர்ச்சியின்றி இருந்து *அதன்மேல் இன்பமெய்துகின்ற நிலையாமைநோக்கியும், மேலும் இன்பப் பகுதியாகிய பொருள்கூறுகின்றதற்கு அதிகாரப் படுத்தற்குமென்றுணர்க.

உதாரணம்:

"வேந்துவினை முடித்த காலைத் தேம்பாய்ந்
தினவண் டார்க்குந் தண்ணம் புறவின்
வென்வே லிளைய ரின்புற வலவன்
வம்புவலித் தூரி னல்லதை முள்ளூன்றின்
மூந்நீர் மண்டில மாதி யாற்று
நன்னுன்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர்
வாங்குசினைப் பொலிய வேறிப் புதல
பூங்கொடி யவரைப் பொய்யத ளன்ன
வுள்ளில வயிற்ற வெள்ளை வெண்மறி
மாழ்கி யன்ன தாழ்பெருஞ் செவிய

* முன் அச்சுப் பிரதியிலுள்ள 'அதன் இன்பம்' என்னும் பாடத்தில் பொருள் இயைவு படுகின்றிலது.

புன் றலைச் சிறாஅ ரொடுகளி மன்றுழைக்
கவையிலை யாவி னிளங்குழை கறிக்குஞ்
சீறூர் பல்பிறக் கொழிய மாலை
யினிதுசெய் தனையா லெந்தை வாழிய
பனிவார் கண்ணள் பலபுலந் துறைய
மாய்தொடி யரிவை கூந்தற்
போதுகுர லணிய வெய்தந் தோயே." (அகம்-104.)

இதனுள் வினைமுடித்த காலைத் தேரினையர் செவ்விக்கேற்ப ஊராது கோலூன்றின் உலகிறந்தன செவ்விக்குப் பற்றாத குதிரைத்தேரேறி இடைச்சுரத்தில் தங்காது மாலைக் காலத்து வந்து பூச்சூட்டினை இனிதுசெய்தனை எந்தை வாழிய எனத் தோழி கூறியவாறு காண்க.

"இருந்த வேந்த னருந்தொழின் முடித்தென" என்னும் அகப்பாட்டினுள்,

"பெருந்தேர் யானு * * *
* * * *
மேறிய தறிந்த தல்லது வந்த
வாறு, நனியறிந் தன்றோ விலனே * * *
* * * *
இழிமி னென்றநின் மொழிமருண் டிசினே
வான்வழங் கியற்கை வளிபூட் டினையோ
மானுரு வாகநின் மனம்பூட் டினையோ
வுரைமதி வாழிநீ வலவ" (அகம்-384.)

என உள்ளம்போல உற்றுழி உதவிற்றெனத் தலைவன் கூறியவாறு காண்க. (ருஉ)

நான்காவது கற்பியற்கு
ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியார்
செய்த காண்டிகை யுரை
முடிந்தது.

ஐந்தாவது

பொருளியல்.

195. இசைதிரிந் திசைப்பினு மியையுமன் பொருளே
யசைதிரிந் தியலா வென்மனார் புலவர். [ளே

இவ்வோத்துப் பொருளிலக்கணம் உணர்த்தினமையிற் பொருளியலென்னும் பெயர்த்தாயிற்று. ஏனை ஓத்துக்களும் பொருளதிலக்கணமன்றே உணர்த்தின, இதற்கிது பெயராயவாறென்னை யெனின்; சொல்லதிகாரத்திற் கூறியசொற்களை மரபியலின் இருதிணை ஐம்பா லியனெறி வழாமைத் திரிபில்சொல்லென்பாராதலின் அவை ஈண்டுத் தம்பொருளை வேறுபட்டிசைப்பினும் பொருளாமெனவும், இப்பொருளதிகாரத்து முன்னர்க்கூறிய பொருள்களிற் பிறழ்ந்திசைப்பனவும் பொருளாமெனவும் அமைத்துச், சொல்லுணர்த்தும் பொருளுந் தொடர்மொழியுணர்த்தும் பொருளும் ஒருங்கே கூறலிற் பொருளிய லென்றார். இச்சூத்திரம் இவ்வோத்தின்கண் அமைக்கின்ற வழுவமைதிகளெல்லாஞ் சொற்பொருளின் வழுவமைதியும் பொருளின் வழுவமைதியுமென இருவகைய என்கின்றது.

இதன்பொருள்: இசை திரிந்து இசைப்பினும்—சொற்கள் தத்தம் பொருளுணர்த்தாது வேறுபட்டிசைப்பினும்; அசை திரிந்து இயலா இசைப்பினும்—இவ்வதிகாரத்துள்

யாத்தபொருள்கள் நாடகவழக்கும் உலகியல்வழக்குமாகிய புலனெறி வழக்கிற் றிரிந்து இயன்றிசைப்பினும்; மன் பொருள் இயையும் என்மனர் புலவர்—அவை மிகவும் பொருளேயாய்ப் பொருந்துமென்று தொல்லாசிரியர் கூறுவர், என்றவாறு. அதனால் யானும் அவ்வாறு கூறுவலென்றார்.

சொல்லாவது எழுத்தினான் ஆக்கப்பட்டுப் பொருளறிவுறுக்கும் ஓசையாதலின் அதனை இசையென்றார்: இஃது ஆகுபெயர். அசைக்கப்பட்டது அசையென்பதும் ஆகுபெயர். 'நோயுமின்பமும்' (தொல்-பொரு-2) என்பதனுள் 'இருபெயர் மூன்று முரிய வாக' என்பதனால் திணை மயங்குமென்றும், 'உண்டற்குரியவல்லாப் பொருளை' (தொல்-பொரு-19) என்றும் பிறாண்டுஞ் சொல் வேறுபட்டுப் பொருளுணர்த்துதலும், இறைச்சிப்பொருண் முதலியன நாடக வழக்கின் வழீஇயவாறுந், 'தேரும் யானையும்' (தொல்-பொரு-18) 'அறக்கழிவுடையன' (தொல்-பொரு-24) 'தாயத்தினடையா' (தொல்-பொரு-27) என்னுஞ் சூத்திர முதலியன உலகியல்வழக்கின் வழீஇயவாறுங் கூறி, அவ்வழூ அமைக்கின்றவாறு மேமேலே காண்க. புறத்திணையியலுட் புறத்திணை வழூக்கூறி அகப்பொருட்குரிய வழூவே ஈண்டுக் கூறுகின்றதென்றுணர்க.

'இயலா' என்றதனால் என்செய்வாமென்றவழிப் பொன் செய்வாமென்றாற்போல வினாவிற் பயவாது இறைபயந்தாற் போல நிற்பனவுங்கொள்க. இன்னும் அதனானே செய்யுளிடத்துச் சொற்பொருளானன்றித் தொடர்பொருளாற் பொருள்வேறுபட இசைத்தலுங்கொள்க. அது சூத்திரத்துஞ் செய்யுளுள்ளும் பொருள்கூறுமாற்றா னுணர்க. (க)

196. நோயு மின்பமு மிருவகை நிலையிற்
காமங் கண்ணிய மரபிடை தெரிய
வெட்டன் பகுதியும் விளங்க வொட்டிய
வுறுப்புடை யதுபோ லுணர்வுடை யதுபோன்
மறுத்துரைப்பதுபோ னெஞ்சொடு புணர்த்துஞ்
சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்
செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியு
மவரவ ருறுபிணி தமபோலச் சேர்த்தியு
மறிவும் புலனும் வேறுபட நிறீஇ
யிருபெயர் மூன்று முரிய வாக
வுவம வாயிற் படுத்தலு முவமமோ
டொன்றிடத் திருவர்க்கு முரியபாற் கிளவி.

இது முற்கூறிய இருவகையானும் பொருள்வேறுபட்டு வழீஇ யமையுமாறு கூறுகின்றது.

இதன்பொருள்: நோயும் இன்பமும் இருவகை நிலையிற் காமம் கண்ணிய மரபிடைதெரிய—துன்பமும் இன்பமுமாகிய இரண்டுநிலைக்களத்துங் காமங் கருதின வரலாற்றுமுறைமையிடம் விளங்க; எட்டன் பகுதியும் விளங்க—நகைமுதலிய மெய்ப்பாடு எட்டனுடைய கூறுபாடுந் தோன்ற; அறிவும் புலனும் வேறுபட நிறீஇ இருபெயர் மூன்றும் உரிய வாக—மனவறிவும் பொறியறிவும் வேறுபடநிறுத்தி அஃறிணை யிருபாற்கண்ணும் உயர்திணை மூன்றுபொருளு முரியவாக; அவரவர் ஒட்டிய உறுப்புடையதுபோல் உணர்வுடையதுபோல் மறுத்துரைப்பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும்—கூறுகின்ற அவரவர் தமக்குப் பொருந்திய உறுப்

பெல்லாம் அதுவுடையது போலவும் உணர்வுடையதுபோல வும் மறுமாற்றந்தருவதுபோலவுந் தங்நெஞ்சொடு புணர்த் துச்சொல்லியும்; சொல்லாமரபினவற்றொடு கெழீஇச் செய் யாமரபிற் றொழிற் படுத்து அடக்கியும்—வார்த்தை சொல்லா முறைமையுடையனவாகிய புள்ளும் மாவும் முதலியனவற் றோடே அவை வார்த்தைகூறுவனவாகப் பொருந்தி அவை செய்தலாற்றாத முறைமையினையுடைய தொழிலினை அவற் றின்மேலே ஏற்றியும்; உறுபிணி தமபோலச் சேர்த்தியும்—அச்சொல்லா மரபினவைஉற்றபிணிகளைத் தம்பிணிக்கு வருந் தினபோலச் சார்த்திக்கூறியும்; உவமம் ஒன்றிடத்து உவம வாயிற்படுத்தலும்—அம்மூவகைப்பொருளை உவமஞ்செய் தற்குப் பொருந்துமிடத்து உவமத்தின்வழியிலே சார்த்திக் கூறுதலும்; இருவர்க்கும் உரிய பாற் கிளவி—அத்தலைவர்க் குந் தலைவியர்க்குமுரிய இலக்கணத்திற் பக்கச்சொல், என்ற வாறு.

தெரிய விளங்க உரியவாகப் புணர்த்தும் அடக்கியுஞ் சேர்த்தும் அவற்றைப் படுத்தலும் இவ்விருவர்க்குமுரிய பாற் கிளவியென முடிக்க. 'அவரவ'ரென்கின்றார் அகத்திணை யியலுட் பலராகக் கூறிய தலைவரையுந் தலைவியரையும். 'இருவ'ரென்றதும் அவரென்னுஞ் சுட்டு. நெஞ்சென்னும் அஃறிணையொருமையைத் தெரியவிளங்கத் தலைவன்கூறும் வழி உயர்திணையாண்பாலாகவுந் தலைவிகூறும்வழி உயர் திணைப்பெண்பாலாகவும் பன்மையாற்கூறும்வழிப் பன்மைப் பாலாகவுங்கொள்க. என்றுஞ்சொல்லா மரபினவற்றையும் உயர்திணைப்பாலாக்கியும் அவற்றைத் தமபோலச் சேர்த்திக் கூறுபடுத்து உயர்திணைமுப்பாலாக்கியுங் கூறுபவென வழு வமைத்தார்.

இருவகை நிலைக்களத்து எட்டனையுஞ் சேர்க்கப் பதினாறாம். அவற்றை நெஞ்சொடுசேர்க்கப் பலவாமென்றுணர்க.

" உண்ணாமையின் " என்னும் (123) அகப்பாட்டினுள்,

" இறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கட லோதம் போல
வொன்றிற் கொள்ளாய் சென்றுதரு பொருட்கே "

என்றவழி " அழிதக வுடைமதி வாழிய நெஞ்சே " என்றதனான் நிலையின்றாகுதியென நெஞ்சினை உறுப்புடையதுபோலக் கழறினர்க்குரைத்தவாறும் ஓதத்தையும் நெஞ்சையும் உயர்திணையாக்கி உவமவாயிற்படுத்தவாறுங் காண்க.

"கைகவியாச் சென்று *** நசைஇச்சென்றவென் னெஞ்சே"

இஃது உறுப்புடையதுபோல் உவந்துரைத்தது.

" அன்றவ ணொழிந்தன்று மிலையே " என்னும் (19) அகப்பாட்டினுள்,

"வருந்தினை வாழியை நெஞ்சே
* * *
செலவினிச் சிறக்கநின் னுள்ளம் "

என அறிவுடையதுபோல் அழுகைபற்றிக் கூறிற்று.

" பூவில் வறுந்தலை போலப் புலநெஞ்சே "

என்றது உணர்வுடையதுபோல் வெகுளிபற்றிக் கூறிற்று.

"உள்ளம் பிணிக்கொண் டோள்வயி னெஞ்சஞ்
செல்ல வுடம்பே "

இஃது உணர்வுடையதுபோல இளிவரல் பற்றிக் கூறியது.

"ஈதலுந் துய்த்தலு மில்லோர்க்கில்லெனச்
செய்வினை கைம்மிக வெண்ணுதி யவ்வினைக்
கம்மா வரிவையும் வருமோ
வெம்மை யுய்த்தியோ வுரைத்திசி னெஞ்சே." (குறுந்-63.)

இது மறுத்துரைப்பதுபோல நெஞ்சினை இளிவரல்பற்றிக் கூறியது.

"பின்னின்று துரக்கு நெஞ்சநின் வாய்போலப் பொய்மொழிகளையா" என்பதும் அது.

"விசும்புற நிவந்த" (அகம்-130) என்பதனுள்,

"வருக வென்னுதி யாயின்
வாரா நெஞ்சம் வாய்க்கநின் வினையே"

என்பது மறுத்துரைப்பதுபோற் றறுகண்மைபற்றிய பெருமிதங்கூறிற்று. வினை அச்சமும் மருட்கையும்பற்றியன தலைவன் கூற்று வந்துழிக்காண்க. இவை நெஞ்சை ஆண்பாலாகக் கூறியன.

*"மன்று பாடவிந்து" (அகம்-128) என்பதனுள் "நெஞ்சந் தளரடித் தாங்கிய சென்ற தின்றே" என்பது உறுப்புடையது போல் அழுகைபற்றிக் கூறியது.

"குறுநிலைக்குரவின்" (நற்றிணை 56) என்பது உறுப்புமுணர்வுமுடையதுபோல இளிவரல்பற்றிக் கூறியது.

---

* இச்செய்யுளை 470-ஆம் பக்கத்திற் காண்க.

"அறியவும் பெற்றாய்நீ யறியாயோ மடநெஞ்சே." (கலி-123.)

இஃது உணர்வுடையதுபோல் நகைபற்றிக் கூறியது.

"கோடெழி லகலல்குற் கொடியன்னார் முலைமூழ்கி
* * * நெஞ்சே." (கலி-67.)

இது மறுத்துரைப்பதுபோல் உவகைபற்றிக் கூறியது.

"அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது." (குறள்-130-1.)

இஃது இளிவரல் பற்றி மறுத்துக் கூறியது. ஏனைய வந்துழிக்காண்க. இவை நெஞ்சினைத் தலைவி பெண்பாலாகக் கூறியன. இவை துன்பமும் இன்பமும் நிலைக்களமாகக் காமங்கண்ணியமரபிடை தெரியவந்தன.

"கானலுங் கழறாது * * * அலவ" (அகம்-170.) *

இது சொல்லாமரபின சொல்லுவனவாக அழுகைபற்றிக் கூறியது. இவை உயர்திணையுமாயிற்று.

"கொங்குதேர் வாழ்க்கை * * *" (குறுந்-2.) †

என்பது உவகைபற்றிக் கூறியது.

"போர்தொலைந் திருந்தாரைப் பாடெள்ளி நகுவார்போ
லாரஞ ருற்றாரை யணங்கிய வந்தாயோ" (கலி-120.)

இது செய்கையில்லாத மாலைப்பொழுதினைச் செய்யாமரபில் தொழிற்படுத்தடக்கி உவமவாயிற்படுத்தது.

"தொல்லூழி தடுமாறி" (கலி-129) என்பதனுள்,

---

* இச்செய்யுளை 47-ஆம் பக்கத்திற் காண்க.

† இச்செய்யுளை 371-ஆம் பக்கத்திற் காண்க.

"பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கடல்
* * *
மன்றிரும் பெண்ணை மடல்சே ரன்றில்
* * *
பனியிருள் சூழ்தரப் பைதலஞ் சிறுகுழல்
* * *"

எனக் கடலும் அன்றிலுங் குழலும் உற்ற பிணியைத் தம் பிணிக்கு வருந்தினவாகச் சேர்த்தி உயர்திணையாக்கி உவம வாயிற்படுத்தவாறு காண்க.

'ஒன்றிடத்'தென்றூர் வேண்டியவாறு உவமங்கோட லாகாதென்றற்கு. பகுதியைப் 'பால்கெழு கிளவி' (தொல்-பொ-5) என மேலும் ஆளுப. 'காமங்கண்ணிய' என்ற தனாற் கைக்கிளையும் பெருந்திணையுமாகிய காமத்திற்குவரு வனவுங் கொள்க.

"சென்றதுகொல் போந்ததுகொல் செவ்வி பெறுந்துணையு
நின்றதுகொ னேர்மருங்கிற் கையூன்றி—முன்றின்
முழங்குங் கடாயானை மொய்ம்மலர்த்தார் மாறற்
குழந்துபின் சென்றவென் னெஞ்சு."

இது கைக்கிளைக்கண் உறப்புடையதுபோல் அவலம் பற்றி நெஞ்சினைக்கூறியது.

"ஒங்கெழிற் கொம்பர் நடுவி தெனப்புல்லுங்
காந்தட் கிவருங் கருவிளம் பூக்கொள்ளு
மாந்தளிர்க் கையிற் றடவரு மாமயில்
பூம்பொழி ஞேக்கிப் புகுவள்பின் செல்லும்"

என்றூற்போல உயர்திணையாக உவமவாயிற்படுத்த பெருந் திணையாய் வருவனவுங் காண்க. இஃது அவலம். (உ)

197. கனவு முரித்தா லவ்விடத் தான.

இது மேற்கூறிய நிலைமைகள் கனவின் கண்ணும் நிகழு மெனப் பகுதிக்கிளவி கூறுகின்றது.

இதன் பொருள்: அவ்விடத்தான—முன்னர் வழுவமைத்த நிலைமையின் கண்ணே வந்தன; கனவும் உரித்தால்—கனவும் உரித்தாயிருந்தது முந்துநூற்கண், என்றவாறு.

எனவே, யானுங் கூறுவலென்றார்.

" அலந்தாங் கமையலே னென்றானைப் பற்றியென்
னலந்தாரா யோவெனத் தொடுப்பேன் போலவுங்
கலந்தாங் கேயென் கவின்பெற முயங்கிப்
புலம்ப லோம்பென வளிப்பான் போலவும்;

முலையிடைத் துயிலு மறந்தீத் தோயென
வலையழி நெஞ்சத்தே னழுவேன் போலவும்
வலையுறு மயிலின் வருந்தினை பெரிதெனத்
தலையுற முன்னடிப் பணிவான் போலவும்;" (கலி-128.)

இவற்றுள் தன்னெஞ்சினை உறுப்பும் உணர்வும் மறுத்துரைத்தலு முடையதாகத் கூறியவாறும், ஆங்கு எதிர் பெய்துகொண்ட தலைவன் உருவும் உறுப்பும் உணர்வும் மறுத்துரைத்தலு முடையதாகச் செய்யாமரபின செய்த தாகக் கூறியவாறும், அவை உயர்திணையாகக் கூறியவாறும், பிறவு முணர்க.

" இன்னகை யினையமாகவு மென்வயின் வாயல் கனவினம்" என வருவனவுங் கொள்க. (௩)

198. தாய்க்கு முரித்தாற் போக்குடன் கிளப்பின்.

இது முற்கூறிய கனவு களவின்கட் செவிலிக்கு முரித்தென வழுவமைக்கின்றது.

இதன் பொருள் : உடன்போக்குக் கிளப்பின்—உடன் போக்கின்கட் கூறின் ; தாய்க்கும் உரித்தால்—அக்கனவு செவிலிக்கும் உரித்தாயிருந்தது முந்து நூற்கண், என்றவாறு.

தோழி *உடன்பட்டுப் போக்குதலானும் நற்றாய் "நற்பாற்பட்டனள்" என்று வருதலானுந் "தாயெனப்படுவோள் செவிலியாகும்" என்பதனானுஞ் செவிலியைத் தாயென்றார். தலைவிபோகாமற் காத்தற்குரியளாதலானும் அவளை என்றும் பிரியாத பயிற்சியானுஞ் செவிலிக்குக் கனவு உரித்தாயிற்று.

"காய்ந்து செல்லற்கனலி" (அகம்-55) என்பதனுட் "கண்படை பெறேன் கனவ" என்றவாறு காண்க. (௬)

199. பால்கெழு கிளவி நால்வர்க்கு முரித்தே.

இஃது எய்தாததெய்துவித்து வழுவமைக்கின்றது.

இதன் பொருள் : பால்கெழு கிளவி—இலக்கணத்திற் பக்கச்சொல் ; நால்வர்க்கும் உரித்து—தோழியுஞ் செவிலியும் நற்றாயும் பாங்கனுமென்னும் நால்வர்க்கும் உரித்தாம், என்றவாறு.

மேல் 'இருவர்க்குமுரிய பாற்கிளவி' (தொல்-பொரு-2) என்றலின் தலைவனையுந் தலைவியையும் ஆண்டைக் கூறலின் ஈண்டு இந்நால்வருமென்றே கொள்க.

---

* 'உடன்பட' என்பதும் பாடம்.

" தருமணற் கிடந்த பாவை * * *
யென்னை வழுமே" (அகம்-164.)

இது நற்றாய் மணற்பாவையைப் பெண்பாலாகக்கூறித் தழீஇக்கொண்டழுதலிற் பால்கெழுகிளவியாயிற்று.

" தான்றாயாக் கோங்கந் தளர்ந்துமுலைகொடுப்ப
வீன்றாய்நீ பாவை யிருங்குரவே—யீன்றாண்
மொழிகாட்டா யாயினு முள்ளெயிற்றாள் சென்ற
வழிகாட்டா யீதென்று வந்து." (திணை, 150-65.)

என்பது செவிலி குரவை வழிகாட்டென்றலிற் பால்கெழு கிளவியாயிற்று. ஏனையிரண்டும் மேல்விலக்குப. (ரு)

200. நட்பி னடக்கை யாங்கலங் கடையே.

இஃது இறந்தது காத்தது.

இதன் பொருள் : ஆங்கு—அந்நால்வரிடத்து ; நட்பின் நடக்கை அலங்கடை—நட்பின் கண்ணே ஒழுகுதலல்லாத *அவ்வீரிடத்தும் பால்கெழுகிளவி உரித்து, என்றவாறு.

எனவே, நட்புச்செய் தொழுகுந் தோழிக்கும் பாங்க னுக்கும் 'பால்கெழுகிளவி' இன்றென்றார், எனக்கொள்க.

201. உயிரு நாணு மடனு மென்றிவை
செயிர்தீர் சிறப்பி னால்வர்க்கு மூரிய.

இது தலைவிக்குத் தலைவனாற் பிறப்பதோர் வேறுபாடு தோன்றியவழி அதனைப் பரிகரித்தற் குரியோர் இவரென வழுவமைக்கின்றது.

---

* 'அவ்வீரிடத்தும்' என்றது 'நோயும் இன்பமும்' என்னும் 2-ஆம் சூத்திரத்திற் கூறியதனை.

இதன் பொருள் : உயிரும் நாணும் மடனும் என்றிவை—உயிரும் நாணும் மடனுமென்று கூறப்பட்ட இவை மூன்றும் ; செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய—குற்றந் தீர்ந்த தலைமையினையுடைய நற்றாய்க்குஞ் செவிலிக்குந் தோழிக்குந் தலைவற்குமுரிய, என்றவாறு.

உம்மை ஐயமாதலின் தலைவனை யொழிந்த மூவர்க்குமுரிய என்றாராயிற்று. என்றது தலைவன் இவற்றைக் களவிலுங் கற்பிலுங் காத்தலும் வரைவிடைவைத்துப் பிரிந்தும் பரத்தையிற் பிரிந்துங் காவாமையுமுடைய னென்பது கூறிற்று. அவை எழுவகையால் தோழி அவற்றைக்காத்து அறத்தொடுநிற்ப, அதனைச் செவிலி உட்கொண்டு அவற்றைக் காத்து நற்றாய்க் கறத்தொடுநிற்ப, அவளும் அவற்றை உட்கொண்டு காத்தற்கு அறத்தொடு நிற்றலும் உடன்போயது அறனென நற்றாய் கோடலுஞ் செவிலி பிறரை வரைகின்றானோ வெனத் தோழியை வினவலும் பிறவுமாம். உதாரணம் முன்னர்க் காட்டியவற்றுட் காண்க. இனி உம்மையை முற்றும்மையாக்கி உயிர் முதலிய தலைவியுறுப்பினை உறுப்புடைத்தாகவும் மறுத்துரைப்பதாகவும் கூறப்பெறுமென்றார். (எ)

202. வண்ணம் பசந்து புலம்புறு காலை
யுணர்ந்த போல வுறுப்பினைக் கிழவி
புணர்ந்த வகையிற் புணர்க்கவும் பெறுமே.

இது வருத்தமிக்கவழி *இவையுமா மென்கிறது.

---

* ' அமையுமாம் ' என்பதும் பாடம்.

இதன் பொருள் : வண்ணம் பசந்து புலம்பு உறுகாலை—மேனி பசந்து தனிப்படரு றுறங் காலத்து ; கிழவி உறுப்பினை உணர்ந்த போல—தலைவி தனது உறுப்பினை அறிந்தன போல; புணர்ந்த வகையிற் புணர்க்கவும் பெறுமே—பொருந்தின கூற்றாற் சொல்லவும் பெறும், என்றவாறு.

"கேளல னமக்கவன் குறுகன்மி னெனமற்றெந்
தோளொடு பகைபட்டு நினைவாடு நெஞ்சத்தேம்" (கலி-68)

"நாணில மன்றவெங் கண்ணே" (குறுந்-35)
"நாணேராக் கழலே"

"*தணந்தநாள் சால வறிவிப்ப போலு
மணந்தநாள் வீங்கிய தோள்." (திருக்குறள்-124-3.)

என வரும்.

காதும் ஓதியும் முதலியன கூறப்பெறா; கண்ணுந் தோளும் முலையும் போல்வன புணர்க்கப்படுமென்றற்குப் 'புணர்ந்தவகை' யென்றார். இதனானே இவற்றைத் தலைவன்பாற் செலவுவர வுடையனபோலக் கூறலுங்கொள்க.

"கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே †யிவையெம்மைத்
தின்னு மவர்க்காண லுற்று" (குறள்-125-4.)

எனக் கண்ணினைச் செல்வனவாகக் கூறினாள். (அ)

203. உடம்பு முயிரும் ‡வாடியக் காலு
மென்னுற் றனகொ லிவையெனி னல்லது
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை.

---

* 'தணந்தமை' என்பதும் பாடம்.
† 'இவை யென்னை' என்பதும் பாடம்.
‡ 'வாடியக் கண்ணும்' என்பதும் பாடம்.

இது தலைவனொடு வேறுபட்டுழிப் பிறப்பதோர் வழூ வமைதி கூறுகின்றது.

இதன் பொருள் : உடம்பும் உயிரும் வாடியக்காலும்—தன் உடம்பும் உயிருந் தேய்ந்து கூட்டமின்றி இருந்தகாலத்தும்; இவை என் உற்றன கொல் எனின் அல்லது—இவை என்ன வருத்த முற்றனகொலென்று *தனக்கு வருத்தமில்லதுபோலக் கூறினல்லது; கிழத்திக்குக் கிழவோற் சேர்தல் இல்லை—தலைவிக்குத் தலைவனைத் தானேசென்று சேர்தல் இருவகைக் கோளினுமில்லை, என்றவாறு.

இது காதல்கூரவுங் கணவற்சேராது வஞ்சம்போன்றொழுகலின் வழூவாயினும் அமைக்க என்றவாறு.

"எற்றோ வாழி தோழி முற்றுபு
கறிவள ரடுக்கத் திரவின் முழங்கிய
மங்குல் மாமழை வீழ்ந்தெனப் பொங்குமயிர்க்
கலைதொட, விழுக்கிய பூநாறு பலவுக் கனியினை
வரையிழி யருவி யுண்டுறை தரூஉங்
குன்ற நாடன் கேண்மை
மென்றோள் சாய்த்துஞ் சால்பின்றன்றே." (குறுந்-90)

என்பதனுட் கேண்மை தோளை மெலிவித்ததாயினும் எனக்கு அமைதியைத் தந்தது, யான் ஆற்றவுந் தாம் மெலிதல் பொருந்தாதது எத்தன்மைத்தெனத் தலைவி தோழிக்குக் கூறியவாறு காண்க. 'கலைதீண்ட வழுக்கி வீழ்ந்த பழத்தை யருவிப் பின்னும் பயன்படுத்து நாடன்' என்றதனானே அலரால் நஞ்சுற்றத்திற் பிரிந்தேமாயினும் அவன் நம்மை வரைந்துகொண்டு இல்லறஞ்செய்வித்துப் பயன்படுத்துவ னென்பதாம்.

---

* 'வருத்தமற்றதுபோல' என்பதும் பாடம்.

"கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழு
மிதுநகத் தக்க துடைத்து." (குறள்-118-3.)

இதுவும் அது.

"ஓஒ இனிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ *மிடர்ப்பட் டது." (குறள்-118-6.)

இதுவும் இதன்பாற்படும். இனி,

"புணர்ந்த வெழில் * * * நெஞ்சே."

இதனுள் யான் துனித்தல்வல்லேன், என் நெஞ்சிற்குத் தன்றன்மை யென்பதொன்றில்லை, ஈதென்னென்றலின் அவ்வாறு காண்க. (கூ)

204. ஒருசிறை நெஞ்சமோ டுசாவுங் காலை
உரிய தாகலு முண்டென மொழிப.

இதுவும் அது.

இதன் பொருள்: ஒருசிறை—தன் உள்ளத்து நின்ற தலைவனையொழியப் போந்துநின்றது; நெஞ்சமொடு உசாவுங் காலை—தானுந் தன் நெஞ்சமும் வேறாகநின்று கூட்டத்திற்கு உசாவுங்காலம்; உரியதாகலும் உண்டென மொழிப—தலைவிக்குரித்தாகலும் உண்டென்று கூறுவர் புலவர், என்றவாறு.

உம்மையால் தோழியுடன் உசாவுங்காலமும் உண்டு என்று கொள்க. உம்மை எச்சவும்மை. இது தலைவனை வேறுபடுத்துத் தானும் நெஞ்சமும் ஒன்றாய் நின்று உசாவுதலின் வழுவாயமைந்தது. இது யாண்டு நிகழுமெனின் இவனொடு

* 'இதற்பட்டது' என்பதும் பாடம்.

கூடாமையின் இவன் ஆற்ருனவனென்ருனும் 'உணர்ப்புவ யின்வாராவூடற்'கட் (தொல்-கற்-9) புலக்குமென்ருனும் பிற வாற்ருனுமென்ருனும் உசாவும்.

"மாண்மறந் துள்ளாத நாணிலிக் கிப்போர்
புறஞ்சாய்ந்து கண்டைப்பாய் நெஞ்சே யுறழ்ந்திவனைப்
பொய்ப்ப விடேஎ மென நெருங்கிற் றப்பினெ
னென்றடி சேர்தலுமுண்டு." (கலி-89.)

என வரும்.

"பகலே பலருங்காண நாணிவிட்டு * * * தோழி"

இது தோழியோடு உசாவியது. (கo)

205. தன்வயிற் கரத்தலு மவன்வயின் வேட்டலு
மன்ன விடங்க ளல்வழி யெல்லா
மடனொடு நிற்றல் கடனென மொழிப.

இது பெண்டிர்க்கியல்பாகிய மடமை யழிவதோர் வழு வமைக்கின்றது.

இதன் பொருள்: தன்வயிற் கரத்தலும்—தலைவன் தலைவியிடத்தே புறத்தொழுக்க மின்றென்று பொய்கூறலும்; அவன்வயின் வேட்டலும்—அங்ஙனங் கரந்துகூறிய தலைவன்கட் டலைவி விரும்புதலும்; அன்ன இடங்கள் அல்வழி எல்லாம்—ஆகிய அவைபோலும் இடங்களல்லாத இடத்தெல்லாம்; மடனொடு நிற்றல் கடன் என மொழிப—தலைவி மடமையுளளாகிநிற்றல் கடப்பாடென்று கூறுவர் புலவர் என்றவாறு.

எனவே இவ்விரிடத்தும் மடனழிதலுடையவென வழு வமைத்தார். அது "குதிரை வழங்கிவருவல்" (கலி-96) என்று அவன் கரந்தவழி, அதனை மெய்யெனக் கோட லன்றே மடமை, அங்ஙனங்கொள்ளாது அறிந்தேன் குதிரை தானெனப் பரத்தையர்கட் டங்கினுயெனக் கூறுதலின் இது மடனழிந்த வழுவமைதியாயிற்று.

> "கவவுக்கை ஞெகிழ்ந்தமை போற்றி மதவுநடைச்
> செவிலி * * * பெயர்தந் தேனே" (அகம்-26.)

என்றவழி மனத்து நிகழ்ந்த வேட்கையை மறைத்து வன்கண்மைசெய்து மாறினமையின் அதுவும் மடனழிந்து வழுவாகி யமைந்தது. அன்னவிடமென்றதனுல்,

> "யாரினுங் காதல மென்றேனு வூடினாள்
> யாரினும் யாரினு மென்று." (குறள்-132-4.)

என்றாற்போல மடனழிய வருவனவுங்கொள்க. (கக)

206. அறத்தொடு நிற்குங் காலத் தன்றி
யறத்தியன் மரபில டோழி யென்ப.

இது தலைவியால் தோழிக்கு வருவதோர் வழுவமைக் கின்றது.

இதன்பொருள்: அறத்தொடு நிற்குங் காலத்தன்றி— தலைவி இக்களவினைத் தமர்க்கறிவுறுத்தல் வேண்டுமென் னுங் கருத்தினளாகிய காலத்தன்றி; தோழி அறத்தியன் மரபிலளென்ப—தோழி அறத்தினியல்பாகத் தமர்க்குக் கூறும் முறைமையிலளென்று கூறுவர் புலவர், என்றவாறு.

காலமாவன நொதுமலர்வரைவும் வெறியாட்டெடுத்தலும் முதலியன. தலைவி களவின்கண்ணே கற்புக்கடம் பூண்டு ஒழுகுகின்றாளை நொதுமலர் வரைவைக் கருதினார் என்பதூஉம் இற்பிறந்தார்க்கேலாத வெறியாட்டுத் தம்மனைக்கண் நிகழ்ந்ததூஉந் தலைவிக்கிறந்துபாடு பிறக்குமென்று உட்கொண்டு அவை பிறவாமற் போற்றுதல் தோழிக்குக் கடனாதலின் இவை நிகழ்வதற்கு முன்னே தமர்க்கறிவித்தல் வேண்டும்; அங்ஙனம் அறிவியாதிருத்தலின் வழுவாயமைந்தது.

"இன்றியாண் டையனோ தோழி குன்றத்துப்
பழங்குழி யகழ்ந்த கானவன் கிழங்கி
னோர்கண் ணகன்மத் துணிபெறூஉ நாட
னறிவுகாழ்க் கொள்ளு மளவைச் சிறுதொடி
யெம்பின் வருகுவை நீயெனப்
பொம்ம லோதி நீவி யோனே." (குறுந்-379.)

இது நொதுமலர் வரைவுகூறி உசாவி அறத்தொடு நின்றது.

"கடவுட் கற்சுனை யடையிறந் தவிழ்ந்த" (நற்றிணை-34.)*

இது வெறியாட்டெடுத்தவழி அறத்தொடு நின்றது.

"அகவன் மகளே அகவன் மகளே" (குறுந்-23.)

இது கட்டுக்காணிய நின்றவிடத்து அறத்தொடுநின்றது.

அதுவும் வெறியாட்டின்கண் அடங்கும். தலைவிக்குக் குறிப்பினுமிடத்தினுமல்லது வேட்கைநெறிப்பட வாராமையிற் சின்னாள் கழித்தும் அறத்தொடு நிற்பாளாகலானுஞ்

---

* இச்செய்யுளை 545-ஆம் பக்கத்திற் காண்க.

செவிலியும் நற்றாயுங் கேட்டபொழுதே அறத்தொடுநிற்பரா கலானும் ஆண்டு வழுவின்று. (கஉ)

207. எளித்த லேத்தல் வேட்கை யுரைத்தல்
கூறுத லுசாத லேதீடு தலைப்பா
டுண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ
யவ்வெழு வகைய வென்மனார் புலவர்.

இதுவும் *அவ்வறத்தொடு நிலை இனைத்தென்கின்றது.

இதன்பொருள் : எளித்தல்—தலைவனை எளியனாகக் கூறுதல் ; ஏத்தல்—அவனை உயர்த்துக்கூறல் ; வேட்கை உரைத்தல்—அவனது வேட்கை மிகுத்துரைத்துக்கூறல் ; கூறுதல் உசாதல்—தலைவியுந் தோழியும் வெறியாட்டிடத்தும் பிரிவிடத்துஞ் சிலகூறுதற்கண்ணே தாமும் பிறருடனேயும் உசாவுதல்; ஏதீடு—ஒருவன் களிறும் புலியும் நாயும் போல்வன காத்து எம்மைக் கைக்கொண்டானெனவும் பூத்தந்தான் தழைதந்தானெனவும் இவைமுதலிய காரணமிட்டுணர்த்தல்; தலைப்பாடு—இருவருந் தாமே எதிர்ப்பட்டார் யான் அறிந்திலேனெனக் கூறுதல்; உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ—என்று அவ்வாறனையும் படைத்துமொழியாது பட்டாங்கு கூறுதலென்னுங் கிளவியோடே கூட்டி; அவ் எழுவகைய என்மனார் புலவர்—அத்தன்மைத்தாகிய ஏழுகூற்றையுடைய அறத்தொடு நிற்றலென்று கூறுவர் புலவர், என்றவாறு.

'அவ்வெழுவகைய' என்றதனால் உண்மைசெப்புங்கால் ஏனையாறுபொருளினுட்சில உடன்கூறி உண்மைசெப்பலும்

* 'இவ்வறத்தொடு நிற்றலை' என்பதும் பாடம்.

ஏனைய கூறுங்காலுந் தனித்தனிகூறுது இரண்டும்மூன்றும் உடனே கூறுதலுங் கொள்க.

உதாரணம்:

‘ எல்லு மெல்லின் றசைவுபெரி துடையன்
* * * ஒருவன்’’

என்பது எளித்தல்.

“ பகன்மா யந்திப் படுசுடரமையத்
தவன்மறை தேஎ நோக்கி மற்றிவன்
மகனே தோழி என்றனள்.” (அகம்-48) *

என்பது ஏத்தல்.

“ பூணாக முறத்தழீஇப் போதந்தான்” (கலி-39.)

என்பது வேட்கையுரைத்தல.

“ முருகயர்ந்து வந்த முதுவாய் வேலன்
சினவ லோம்புமதி வினவுத லுடையேன்
பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு
சிறுமறி கொன்றிவ ணறுநுத னீவி
வணங்கினை கொடுத்தி யாயி னணங்கிய
விண்டோய் மாமலைச் சிலம்ப
னொண்டா ரகலமு முண்ணுமோ பலியே.” (குறுந்-362.)

இது வேலனொடு கூறுதலுசாதல். கூறுதற்கண் உசாத லென விரிக்க.

“ வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்
கோடாது †நீர்கொடுப்ப தல்லது—கோடா

* இச் செய்யுளை 563-ஆம் பக்கத்திற் காண்க.
† ‘ நீர்கொடுப்பி னல்லது’ என்பதும் பாடம்.

வெழிலு முலையு மிரண்டற்கு முந்நீர்ப்
பொழிலும் விலையாமோ போந்து" (திணை, 150-15.)

இதுவும் உசாதலாய் அடங்கும்.

"உரவுச்சினஞ் செருக்கித் துன்னுதொறும் வெகுளு
முளைவா ளெயிற்ற வள்ளுகிர் ஞமலி
கிளையாக் கண்ண வளைகுபு நெரிதர
நடுங்குவன மெழுந்து நல்லடி தளர்ந்தியா
மிடும்பைகூர் மனத்தே மருண்டு புலம்படர
மாறுபொரு தோட்டிய புகல்வின் வேறுபுலத்
தாகாண் விடையி னணிபெற வந்தெ
மலமர லாயிடை வெருவுத லஞ்சி
மெல்லிய வினிய மேவரக் கிளந்தெ
மைம்பா லாய்கவி னேத்தி யொண்டொடி
டசைமென் சாய லவ்வாங் குந்தி
மடமதர் மழைக்க ணிளையீ ரிறந்த
கெடுதியு முடையே னென்றனன்."
(குறிஞ்சிப்பாட்டு, 130-142)

என நாய் காத்தவாறும்,

"கணைவிடு புடையூக் கானங் கல்லென
மடிவிடு வீளையர் வெடிபடுத் தெதிரக்
கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக
விரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅஞ் செருக்கிமரங் கொல்பு
மையல் வேழ மடங்கலி னெதிர்தர
வுய்விட மறியே மாகி யொய்யெனத்
திருந்துகோ லெல்வளை *தெளிர்ப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்
சூருறு மஞ்ஞையி னடுங்க வார்கோ

* 'தெழிப்ப' என்பதும் பாடம்.

லுடுவுறு பகழி வாங்கிக் கடுவிசை
யண்ணல் யானை யணிமுகத் தழுத்தலிற்
புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப்
புள்ளி வரிநுதல் சிதைய நில்லா
தயர்ந்துபுறங் கொடுதத பின்னர் நெடுவே
ளணங்குறு மகளி ராடுகளங் கடுப்பத்
திண்ணிலைக் கடம்பின் றிரளரை வளைஇய
துணையறை மாலையிற் கைபிணி விடேஎ
நுரையுடைக் கலுழி பாய்தலி னுரவுத்திரை
யருங்கரை வாழையி னடுங்கப் பெருந்தகை
யஞ்சி லோதி யசைய *லெனையதூஉ
மஞ்ச லோம்புநின் னணிநலங் † காக்கென
மாசறு சுடர்நுத னீவி நீடுநினைந்
தென்முக நோக்கி நக்கனன் * * * "

(பத்து-குறிஞ்சி-160-183.)

எனக் களிறு காத்தவாறும், புனலுள் எடுத்தவாறுங் காண்க.

" புலிபுலி யென்னும் பூச றோன்ற
* * * சிற்றந் தோனே" (அகம்-48.) ‡

இது புலிகாத்தற்கு வந்தானென இட்டுரைத்தது.

" அன்னாய் வாழிவேண் டன்னை யென்னை
$ தானு மலைந்தா னெமக்குந் தழையாயின
பொன்வீ மணியரும் பினவே
யென்ன மரங்கொலவர் சார லவ்வே." (ஐங்குறு-201.)

இது தோழி தழைதந்தானென அறத்தொடுநின்றது.

---

* 'யாவதும்' என்பதும் பாடம்.
† 'நுகர்கென' என்பதும் பாடம்.
‡ இச் செய்யுளை 563-ஆம் பக்கத்திற் காண்க.
$ 'தரினுமலைந்தான்' என்பதும் பாடம்.

" சுள்ளி சுனைநீலஞ் சோபா லிகைசெயலை
யள்ளி யளகத்தின் மேலாய்ந்து—தெள்ளி
யிதணாற் கடியொடுங்கா வீர்ங்கடா யானை
யுதணாற் சடிந்தா னுளன்." (திணை, 150-2.)

இதனுள் அளகத்தின் மேலாய்ந்தெனவே பூத்தந்தமை கூறினாள்.

" பிறிதொன் றின்மை யறியக் கூறிக்
கொடுஞ்சுழி * * * னினக்கே."

இது தலைப்பாடு.

" நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மண மயர்கஞ் சின்னாட்
கலங்க லோம்புமி னிலங்கிழை யீரென
வீர நன்மொழி தீரக் கூறித்
துணைபுண ரேற்றி னெம்மொடு வந்து
துஞ்சா முழவின் மூதூர் வாயி
லுண்டுறை நிறுத்துப் பெயர்ந்தன னதற்கொண்
டன்றை யன்ன விருப்போ டென்று
மிரவரன் மாலைய னேவரு தோறுங்
காவலர் கடுகினுங் கதனாய் குரைப்பினு
நீதுயி லெழினு நிலவுவெளிப் படினும்
வேய்புரை மென்றோ ளின்றுயி லென்றும்
பெறாஅன் பெயரினு முனிய லுறாஅ
னிளமையி னிகந்தன்று மிலனே."
(பத்து-குறிஞ்சி-231-244.)

எனவும்,

" வளமையிற் றன்னிலை திரிந்தன்று மிலனே"
(பத்து-குறிஞ்சி-245.)

எனவும்,

“* கன்மழை பொழிந்த வகன்க ணருவி
யாடுகழை யடுக்கத் திழிதரு நாடன்
பெருவரை யன்ன திருவிறல் வியன்மார்பு
முயங்காது கழிந்த நாளிவண்
மயங்கிதழ் மழைக்கண் கலுழு மன்னாய்.” (ஐங்குறு-220.)

எனவும் வருவன உண்மைசெப்பல்.

“காமர் கடும்புனல்” (கலி-39) என்பதனுள் இரண்டு வந்தன, பிறவு மன்ன. (கா)

208. உற்றுழி யல்லது சொல்ல லின்மையி
னப்பொருள் வேட்கைக் கிழவியி னுணர்ப.

இது மேலதற்கோர் புறனடை.

இதன்பொருள்: உற்றுழி அல்லது சொல்லல் இன்மையின்—தலைவியர்க்கு ஏதமுற்ற இடத்தன்றித் †தோழி அவ்வாறு மறைபுலப்படுத்துக் † கூறுளாதலின்; அப்பொருள் வேட்கைக்கிழவியின் உணர்ப—அம்மறை புலப்படுத்துதல் விருப்பத்தைத் தலைவியர் காரணத்தால் தோழியர் உணர்வர், என்றவாறு.

‘உணர்வ’ரென்று உயர்திணைப்பன்மையாற் கூறவே தலைவியருந் தோழியரும் பலரென்றார். கிழவியென்றாரேனும் “ஒருபாற் கிளவி” (தொல்-பொருளியல்-28) யென்பதனாற்

---

* ‘அலங்குமழை’ என்பதும் பாடம்.

† ‘தோழியர்’ ‘கூறார்’ என்பவும் பாடம்

யன்மையாகக் கொள்க. உயிரினுஞ் சிறந்த நாணுடையாள் இது புலப்படுத்தற்கு உடம்படுதலின் வழுவாயமைந்தது.

"மற்று * * * இன்னுயிர்
கழிவ தாயினின் மகளா தீமே"

என்றாற்போல்வனவே இலக்கணமென்பது மேலிற்சூத்திரத்தாற் கூறுப. (கச)

209. செறிவு நிறைவுஞ் செம்மையுஞ் செப்பு
மறிவு மருமையும் பெண்பா லான.

இது மறைபுலப்படாமல் ஒழுகுதல் இலக்கணமென்றற்கும் மறைபுலப்படுத்துதல் வழுவென்றற்குங் கூறுகின்றது.

இதன்பொருள்: செறிவும்—அடக்கமும்; நிறைவும்—மறைபுலப்படாமல் நிறுத்தும் உள்ளமும்; செம்மையும்—மனக்கோட்டமின்மையும்; செப்பும்—களவின்கட் செய்யத்தகுவன கூறலும்; அறிவும்—நன்மைபயப்பனவுந் தீமைபயப்பனவும் அறிவித்தலும்; அருமையும்—உள்ளக்கருத்தறிதலருமையும்; பெண்பாலான—இவையெல்லாம் பெண்பாற்குக் காரணங்கள், என்றவாறு.

இவையுடையளெனவே மறைபுலப்படுத்தற்கு உரியளல்லளென்பதூஉம் அதனைப்புலப்படுத்தலின் முற்கூறியன வழுவமைத்தனவுமாயிற்று. இவை வருஞ்சூத்திரத்திற்கும் ஒத்தலிற் சிங்கநோக்கு. (கரு)

210. பொழுது மாறுங் காப்புமென் றிவற்றின்
வழுவி னாகிய குற்றங் காட்டலுந்
தன்னை யழிதலு மவணா றஞ்சலு

மிரவினும் பகலினு *நீவர லென்றலுங்
கிழவோன் றன்னை வார லென்றலு
நன்மையுந் தீமையும் பிறிதினைக் கூறலும்
புரைபட வந்த வன்னவை பிறவும்
வரைதல் வேட்கைப் பொருள வென்ப.

இதுவுந் தோழிக்குந் தலைவிக்கும் உரியனவாகிய வழூஉ வமைக்கின்றது.

இதன்பொருள்: பொழுதும் ஆறும் காப்பும் என்றிவற்றின் வழூஉவின் ஆகிய குற்றங் காட்டலும்—இராப்பொழுதும் அக்காலத்துவழியுங் கண்ணுறும் இடத்துள்ள காவலுமென்று கூறப்பட்டவை மூன்றினது பழையமுறையிற் பிறழுதலால் தலைவர்க்குளதாகிய குற்றத்தையுணர்த்தலும்;

இவை தலைவற்கு அச்சம் உளவாகக் கருதுதலும் அவனால் நிகழும் இன்பத்தைத் துன்பமாகக் கருதுதலும் உடையனவாயிற்றேனும் அன்புபற்றிக்கூறலின் அமைந்தது. அப்பொழுதிற் றலைவனது செலவுவரவு நிகழ்ந்துழியே இக்குற்றங் காட்டுவதென்றுகொள்க.

"மன்றுபா டவிந்து* *" (அகம்-128.)†

என்பது பொழுதுவழூஉதலிற் குற்றங்காட்டியது.

"ஈர்ந்தணுடையை * * * வலரே." (கலி-52.)

---

* 'நீவர' எனப் பாடம் ஓதுவார்க்கு அது 'வாரல்' என்பதனோடு ஒத்துவராமையும், அங்ஙனம் ஒரு வியங்கோளின்மையும் உணர்க. 'நீவரல்' என்பதே திருத்தமான பாடமாம் என்க. 'நீவா' என்று பாடங்கூறலும் பொருந்தும்.

† இச்செய்யுளை 470 ஆம் பக்கத்திற் காண்க.

இது காப்பினுன் வழூவுணர்த்தியது.

தன்னை அழிதலும்—அவன் அக்காலத்தவ்வழியில் தனியே வருதற்கு யான் ஏதுவாயினேன் எனத் தன்னை அழிவுபடுத்துரைத்தலும்.

"நீதவ றுடையையு மல்லை நின்
*　*　*　யேனே"

அவன் வரவினை உவவாது துன்பங்கூர்தல் வழூவாயி னும் அதுவும் அவன்கண் அன்பாதலின் அமைத்தார்.

அவன் ஊறு அஞ்சலும்—அவ்வழியிடத்துத் தலை வற்கு வரும் ஏதமஞ்சுதலும் :

" அஞ்சுவல் வாழி யைய வாரிருட்
கொங்கிய ரீன்ற மைந்தின்
வெஞ்சின வுழுவை திரிதருங் காடே"

இஃது அவனைப் புலிநலியுமென் றஞ்சியது.

" ஒருநாள் விழும் முறினும் வழிநாள்
வாழ்குவ ளல்லளென் றோழி" (அகம்-18.)

என்பதும் அது.

ஆறின்னுமையாவது விலங்குமுதலியவற்ருன் வர விற்கு இடையீடு நிகழுமென் றஞ்சுதல். ஏத்தல் எளித்தலின் வேறுயிற்று. இது நன்குமதியாமையின் வழூவாயினும் அன்புமிகுதியான் அமைத்தார்.

இரவினும் பகலினும் நீ வரல் என்றலும்—இராப் பொழுதின்கண்ணும் பகற்பொழுதின்கண்ணுந் தலைவனைக் குறியிடத்து வருகவெனத் தோழி கூறலும் :

" வல்வி லிளையரொ டெல்லிச் செல்லாது
* * * சேய நாட்டே" (அகம்-119.)

எனவும்,

" பூவே புன்னையந் தண்பொழில்
வாவே தெய்ய மணந்தனை செலற்கே"

எனவும் வரும்.

களவு அறிவுறுமென்று அஞ்சாது வருகவென்றலின் வழூவேனுந் தலைவி வருத்தம் பற்றிக் கூறலின் அமைத்தார்.

கிழவோன்றன்னை வாரல் என்றலும்—தோழியுந் தலைவியுந் தலைமை செய்துகொண்டு தலைவனை வாரற்க என்று கூறுதலும் :

தலைமை வழூவேனும் அன்பான் அமைத்தார்.

" இரவு வாரலையே * * * யென் றோளே"

இஃது இரவுவாரலென்றது.

" பகல்வரிற் கவ்வை யஞ்சுதும்"

என்றது பகல்வாரலென்றது.

" நல்வரை நாட நீவரின்
மெல்லிய லொருநாள் வாழலளே" (அகம்-112.)

இஃது இரவும் பகலும் வாரலென்றது.

நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும்—பிறிதோர் பொருண்மேல் வைத்து நன்மையுந் தீமையுந் தலைவற்கேற்பக் கூறலும் :

"கழியாத காதல ராயினுஞ் சான்றோர்
பழியொடு வரூஉ மின்பம் வெஃகார்" (அகம்-111.)

எனப் பிறர்மேல் வைத்துத் தலைவனை அறிவுகொளுத் தினமையின் வழுவாயமைந்தது.

"பழியொடு வரூஉ மின்பம் வெஃகார்"

எனவே புகழொடு வரூஉம் இன்பம் வெஃகுவரெனக் கொள்ளவைத்தலின் நன்மையுந் தீமையும் பிறிதின்மேல் வைத்துக் கூறிற்றும்.

புரைபட வந்த அன்னவை பிறவும்—வழுப்படவந்த இவைபோல்வன பிறவும் :

அவை ஊடற்கணின்றியுந் தலைவனைக் கொடியனென்றலும் நொதுமலர் வரைகின்றாரென்றலும் அன்னை வெறியெடுக்கின்றாளென்றலும் பிறவுமாம்.

"பகையினேய் செய்தான்" (கலி-40.)

என்பது ஊடற்கணின்றிக் கொடியனென்றது.

"தினையுண் கேழலிரிய" என்னும் (119) நற்றிணையுள்,

"யாவது முயங்கல் பெறுகுவ னல்லன்
புலவி கொளீஇயர்தன் மலையினும் பெரிதே."

இது நொதுமலர்வரைவு சிறைப்புறமாகக் கூறியது.

"கடம்புக் களிறும் பாடித் தொடங்குபு
தோடுந் தொடலையுங் கைக்கொண் டல்கலு
மாடிப் பாடினு ளாக நன்றே" (அகம்-137.)

என்பது தலைவர்க்கு வெறியாட்டுணர்த்தியது.

வரைதல் வேட்கைப் பொருள என்ப—தலைவன் வரைந்து கோடற்கண் நிகழும் விருப்பத்தைத் தமக்குப் பொருளாகவுடைய, என்றவாறு.

என்றது வழுப்படக்கூறினும் வரைவுகாரணத்தாற் கூறலின் அமைக்க வென்றவாறும். (கசு)

**211. வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தல்
மரீஇய மருங்கி னுரித்தென மொழிப.**

இது நடுவணைந்திணையல்லாத கைக்கிளை பெருந்திணைக் கட் படுவதோர் வழுவமைக்கின்றது.

இதன் பொருள் : வேட்கை மறுத்து—தம்மனத்து வேட்கையை மாற்றி ; ஆங்குக் கிளந்து உரைத்தல்—இருவரும் எதிர்ப்பட்டவிடத்துத் தாம் ஆற்றின தன்மையைப் புலப்படக்கூறி ஒருவர் ஒருவர்க்கு அறிவித்தல் ; மரீஇய மருங்கின் உரித்தென மொழிப—புலனெறிவழக்கஞ்செய்து மருவிப்போந்த கைக்கிளை பெருந்திணைக்கண் உரித்தென்று கூறுவர் ஆசிரியர், என்றவாறு.

'கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்' (தொல்-அகத்-1) என அவை இருமருங்கும் நிற்றலின் ஈண்டு மருங் கென்றார்.

"தமக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னா
செய்வது நன்றாமோ மற்று." (கலி-62.)

இஃது அடியோர் தலைவராயவழித் தலைவி வேட்கை மறுத்துணர்த்தியது.

"எறித்த படைபோன் முடங்கி மடங்கி
நெறித்துவிட் டன்ன நிறையோரா லென்னைப்
பொறுக்கல்லா நோய்செய்தாய் போறீ நிறுக்கல்லேன்
நீநல்கி னுண்டென் னுயிர்." (கலி-94.)

"உழுந்தினுந் துவ்வாக் குறுவட்டா நின்னின்
இழிந்ததோ கூனின் பிறப்பு." (கலி-94.)

இவை அடியோர் தலைவராக வேட்கை மறுத்துணர்த்தியது. பெருந்திணை.

ஏனை வினைவலபாங்கினோர்க்கு வந்துழிக் காண்க. இவை கைகோளிரண்டன் கண்ணும் வழங்குதல் சிறுபான்மையுரித்தென்று அகத்திணைக்கட் கூறலின் வழுவமைத்தார். 'ஒன்றென முடித்த'லான் மரீஇயவாறு ஏனையவற்றிற்குங் கொள்க.

"புள்ளிக் களவன் புனல்சேர் பொதுக்கம்போல்
வள்ளுகிர் போழ்ந்தனவும் வாளெயி றுற்றனவு
மொள்ளிதழ் சோர்ந்தநின் கண்ணியு நல்லார்
சிரறுபு சீறச் சிவந்தநின் மார்புந்
தவறுதல் சாலாவோ கூறு" (கலி-88.)

எனவும்,

"குதிரையோ வீறியது" (கலி-96.)

எனவும் வருவனவும் பிறவும் இழிந்தோர் கூற்றை உயர்ந்தோர் கூறுவனவும் அமைத்துக்கொள்க. (கஎ)

212. தேரும் யானையுங் குதிரையும் பிறவு
மூர்ந்தன ரியங்கலு முரிய ரென்ப.

இது களவொழுக்கத்துக்கு மறுதலையாயதோர் வழூ வமைக்கின்றது.

இதன் பொருள்: தேர்முதலியவற்றையும் பிறவூர்தி களையும் ஏறிச்சென்று கூடுதலையும் உரியர் தலைவரென்று கூறுவர் புலவர், என்றவாறு.

'பிற'வாவன கோவேறுகழுதையுஞ் சிவிகையும் முதலி யனவாம். இது செல்வக் குறைபாடின்மை கூறுதலான் அமைந்தது.

" குறியின்றிப் பன்னாளின் கடுந்திண்டேர் வருபதங்கண்
டெறிதிரை யிமிழ்கான லெதிர்கொண்டா ளென்பதோ
வறிவஞ ருழந்தேங்கி யாய்நலம் வறிதாகச்
செறிவளை தோளூர விவளைநீ துறந்ததை "(கலி-127.)

" நிலவுமணற் கொட்குமோர் தேருண் டெனவே."

எனவும்,

" கடுமான் பரிசதழ் * * * கடைஇ நடுநாள் வரும் "

எனவும்,

" கழிச்சுறா வெறிந்த புட்டா ளத்திரி
நெடுநீ ரிருங்கரிப் பரிமெலிந் தசைஇ " (அகம்-120.)

எனவும் வரும்.

ஏனைய வந்துழிக் காண்க.

உம்மையான் இளையரோடுவந்து தனித்துக் கூடுதலுங் கொள்க.

"வல்வி லிளையரோ டெல்லிச் செல்லாது
சேர்ந்தனை செலினே சிதைகுவ துண்டே" (அகம்-119.)

என்றாற் போல்வன கொள்க.

இதனானே உடன்போக்கிலும்,

"கடுங்கட் காளையொடு நெடுந்தே ரேறி
கோள்வல் *வேங்கை மலைபிறக் கொழிய
†வேறுபல் லருஞ்சுர மிறந்தன ளவளெனக்
கூறுமின் வாழியோ வாறுசென் மாக்கள்
நற்றோ ணயந்துபா ராட்டி
யெற்கெடுத் திருந்த வறனில் யாய்க்கே" (ஐங்குறு-385.)

எனத் தேர் முதலிய ஏறிப்போதலுங் கொள்க. (கஅ)

213. உண்டற் குரிய வல்லாப் பொருளை
யுண்டன போலக் கூறலு மரபே.

இது சொல்வேறுபட்டுப் பொருளுணர்த்தும் வழு வமைக்கின்றது.

இதன் பொருள்: உண்டற்கு உரிய அல்லாப்பொருளை—உண்டற்றொழிலை நிகழ்த்துதற்குரிய வல்லாத பொருளை; உண்டன போலக் கூறலும் மரபே—அத்தொழிலை நிகழ்த்தினவாகப் புலனெறிவழக்குஞ் செய்தலும் மரபு, என்றவாறு.

அது,

"பசலையா லுணப்பட்டுப் பண்டைநீ ரொழிந்தக்கால்"
(கலி-15.)

என வரும்.

---

* 'வேங்கையமலை' என்பதும் பாடம்.

† 'வேரன் மலருஞ் சுரமிறந் தனளென' என்பதும் பாடம்.

இதன்கட் சொல்வழுவன்றிச் செய்யா மரபிற் றொழிற் படுத்து அடக்கலும் அமைத்தார். இன்னும் உய்த்துக்கொண் டுணர்த லென்பதனுன் உண்ணப்படுதற்குரிய வல்லாத பொருளதனைப் பிறர் உண்ணப்பட்டதுபோலக் கூறலும் மரபாமென்பது பொருளாகக் கொள்க. அவை,

"தோணல முண்டு துறக்கப் பட்டோர்
வேணீ ருண்ட குடையோ ரன்னர்
நல்குநர் புரிந்து நலனுணப் பட்டோர்
அல்குநர் போகிய வூரோ ரன்னர்
கூடினர் புரிந்து குணனுணப் பட்டோர்
சூடுந ரிட்ட பூவோ ரன்னர்." (கலி-23.)

என வரும். பிறவுங் கொள்க.

உம்மையாற் பிறதொழில் பற்றி வருவனவுங்கொள்க.

"கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே *யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று" (குறள்-125-4.)

"புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு" (குறள்-119-7.)

"வருந்தின வான்றோய் வற்றே காமம்"

என்றாற் போல்வனவுங் கொள்க. (கக)

214. பொருளெனமொழிதலும்வரை நிலையின்றே
காப்புக் கைம்மிகுத லுண்மை யான.

இது களவின்கட் டோழிக் குரியதோர் வழுவமைக் கின்றது.

---

* 'இவையெம்மை' என்பதும் பாடம்.

இதன் பொருள் : பொருள் என மொழிதலும் வரைநிலை இன்றே—எமர் வரைவு நேராமைக்குக் காரணம் பொருள் வேண்டியெனத் தோழி கூறலும் நீக்குநிலைமையின்று ; காப்புக் கைம்மிகுதல் உண்மையான—காவன் மிகுதியால் தலைவிக்கு வருத்தங் கைகடத்தலுண்டாகையால், என்றவாறு.

உம்மையாற் பொருளேயன்றி ஊருங் நாடும் மலையும் முதலியன வேண்டுவரென்றலுங் கொள்க.

> " சான்றோர் வருந்திய வருத்தமு நுமது
> வான்றோய் வன்ன குடிமையு நோக்கித்
> திருமணி வரன்றுங் குன்றங் கொண்டிவள்
> வருமுலை யாகம் வழங்கி னன்றே
> யஃதான்,
> றடைபொருள் கருதுவி ராயிற் குடையொடு
> கழுமலந் தந்த நற்றேர்ச் செம்பியன்
> பங்குனி விழவின் வஞ்சியோ
> டுள்ளி விழவி னுறந்தையுஞ் சிறிதே "

இதனுட் பொருள் விரும்பியவாறுங் குன்றம் விரும்பியவாறுங் காண்க. அடைபொருள், இவன் நும்பால் அடைதற்குக் காரணமாகிய பொருளென்க. (உ0)

215. அன்பே யறனே யின்ப நாணொடு
துறந்த வொழுக்கம் பழித்தன் றாகலி
னொன்றும் வேண்டா காப்பி னுள்ளே.

இது தோழி பொருளென மொழிதற்குத் தலைவியும் உடன்பட்டு நிற்றற்குரிய ளென்றலின் மேலதற்கோர் புறனடை.

இதன் பொருள்: காப்பினுள்—காவன் மிகுதியால் தலைவிக்கு வருத்தம் நிகழ்ந்தவிடத்து; அன்பே அறனே இன்பம் நாணொடு துறந்த ஒழுக்கம்—தலைவன்கண் நிகழும் அன்புங் குடிப்பிறந்தோர் ஒழுகும் அறனுந் தமக்கின்றி யமையா இன்பமும் நாணும் அகன்ற ஒழுகலாறு; பழித் தன்று ஆகலின் ஒன்றும்—பழியுடைத்தன்று ஆகையினாலே புலனெறிவழக்கிற்குப் பொருந்தும்; வேண்டா—அவற்றை வழுவாமென்று களையல் வேண்டா, என்றவாறு.

எனவே பொருளென மொழிதல் தலைவிக்கும் உடன் பாடென்று அமைத்தாராயிற்று. (உக)

216. சுரமென மொழிதலும் வரைநிலை யின்றே.

இது தோழிக்குந் தலைவிக்கு முரியதோர் வழுவமைக் கின்றது.

இதன் பொருள்: தலைவன் பிரியக் கருதியவழித் தோழியுந் தலைவியும் நீ போகின்றவிடம் எல்லாவாற்றானும் போதற்கரிய நிலமெனக்கூறி விலக்குதலும் நீக்குநிலைமை யின்று, என்றவாறு.

உதாரணம்:

“ இடுமு ணெடுவேலி போலக் கொலைவர்
கொடுமரந் தேய்த்தார் பதுக்கை நிரைத்த
கடுநவை யாராற் றறுசுனை முற்றி
யுடங்குநீர் வேட்ட வுடம்புயங் கியானை
கடுந்நாம் பதிபாங்குக் கைதெறப் பட்டு
வெறிநிரை *வேறாகச் சாரச் சாரலோடி

* ‘வேறுகி’ என்பதும் பாடம்.

நெறிமயக் குற்ற விரம்பா நீடத்தஞ்
சிறுநனி நீதுஞ்சி யேற்பினு மஞ்சு
நறுநுத னீத்துப் பொருள்வயிற் செல்வோ
யுரனுடை யுள்ளத்தை * *" (கலி-12.)

எனச் சுரமெனக் கூறினள்.

தலைவியுந் தோழியாற் கூற்றுநிகழ்த்தும். சூத்திரம் பொதுப்படக் கிடத்தலின் தலைவி உடன்போகக் கருதிய வழித் தலைவனுஞ் சுரமெனக்கூறுதல் கொள்க.

"எல்வளை யெம்மொடு நீவரின் யாழநின்
மெல்லியன் மேவந்த சீறடித் தாமரை
யல்லிசே ராயித ழரக்குத்தோய்ந் தவைபோலக்
கல்லுறி னவ்வடி கறுக்குந வல்லவோ" (கலி-13.)

என வரும். (உஉ)

217. உயர்ந்தோர் கிளவியும்வழக்கொடுபுணர்தலின்
வழக்குவழிப் படுத்தல் செய்யுட்குக் கடனே.

இது முன்னர் உலகியல் வழக்கென்றது செய்யுட்காமென்று அமைக்கின்றது.

இதன் பொருள்: உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின்—உயர்ந்தமக்கள் கூறுங்கூற்றும் வேதநெறியோடு கூடுதலின்; வழக்கு வழிப் படுத்தல் செய்யுட்குக் கடனே—அவ்வழக்கினது நெறியிலே நடத்தல் செய்யுட்கு முறைமை, என்றவாறு.

'வழக்கெனப் படுவது' (தொல்-மர-92) என்னும் மரபியற் சூத்திரத்தான் வழக்கு உயர்ந்தோர் கண்ணதாயிற்று.

அவர் அகத்தியன் முதலியோரென்பது பாயிரத்துட் கூறினும். அவை சான்றோர் செய்யுளுட் காண்க. இதனை *மேலைச் சூத்திரத்திற்கும் எய்துவிக்க. (உ௬)

218. அறக்கழி வுடையன†பொருட்பயம் படவரின்
வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப.

இஃது உலகியல் வழக்கன்றிப் பொருள் கூறினும் அமைகவென்றது.

இதன் பொருள்: அறக்கழிவு உடையன—உலகவழக்கத்திற்குப் பொருத்தமில்லாத கூற்றுக்கள்; பொருட்பயம் படவரின்—அகப்பொருட்குப் பயமுடைத்தாக வருமாயின்; வழக்கென வழங்கலும்—அவற்றை வழக்கென்றே புலனெறி வழக்கஞ் செய்தலும்; பழித்தன்று என்ப—பழியுடைத்தன்றென்று கூறுவாராசிரியர், என்றவாறு.

தலைவன் குறையுற்று நிற்கின்றவாற்றைத் தோழி தலைவிக்குக் கூறுங்கால் தன்னை அவன் ‡நயந்தான்போலத் தலைவிக்குக் கூறுவனவும், "பொய்யாக வீழ்ந்தே னவன்மார்பின்" (கலி-37) எனப் படைத்து மொழிவனவுந், தலைவி 'காமக் கிழவ னுள்வழிப்படுதலும்' 'தாவினன்மொழி கிளத்தலும்' (தொல்-கள-22) போல்வன பிறவும் அறக்கழிவுடையனவாம். தலைவி தனக்கு மறை புலப்படுத்தாது வருந்துகின்ற காலத்து அதனைத் தனக்குப் புலப்படுவித்துக் கொண்டே அவளை ஆற்றுவித்தற்பொருட்டு அறக்கழிவுடையன கூறலின் அவை பொருட்குப் பயன்றந்தனவாம்.

* 'மேலிற்சூத்திரம்' என்பதும் பாடம்.
† 'பொருட்பயம் வரினே' என்பதும் பாடம்.
‡ 'துறந்தான்' என்பதும் பாடம்.

*"நெருந லெல்லை யேனற் றோன்றி" (அகம்-32) என்பதனுட்,

"சிறுபுறங் கவையின னாக வதற்கொண்
டிகுபெயன் மண்ணின் ஞெகிழ்பஞ ருற்றவென்
னுள்ளவ னறித லஞ்சி யுள்ளில்
கடிய கூறிக் கைபிணி விடாஅ"

எனத் தலைவன் தன்னை நயந்தானென இவள் கொண்டாள் கொல்லெனத் தலைவி கருதுமாற்றால் தோழி கூறவே தலைவி மறை புலப்படுத்துவளென்பது பயனாயிற்று.

"கயமலருண்கண்ணாய் * * * னின்க ணுடைய னவன்" (கலி-37) என்பதனுள் "மெய்யறியா தேன்போற் கிடந்தேன்" என்புழி †முன்னர் மெய்யறி வழிநிலை பிழைபாமனின்று பின்னர்ப் பொய்யாக வழிநிலை பிழைத்துக் கூறியது வழுவேனும் இவளுந் தலைவனும் இவ்வாறே செறிந்தமை யுணர்த்தலின் மறைபுலப்படுத்துங் கருத்தினளாந் தலைவியென்பது பயனும்.

"‡மள்ளர் குழீஇய விழவினானும்" (குறுந்-31) "§அருங்கடியன்னை" (நற்றிணை-365.) "பாம்புமதனழியும்" (அகம்-8) "பானகுளே" என்பனவற்றுள் தலைவி தேடிச்சென்றதுஞ் செல்வாமென்றதுஞ் சிறைப் புறமாக வரைவுகடாயது. அறப்பயன் றருதலின் அறக்கழிவுடையவேனும் அமைந்தன.

---

* 'இச்செய்யுளை 497 ஆம் பக்கத்திற்காண்க.

† 'முன்னமெய்கூறி' என்பதும் பாடம்.

‡ இச்செய்யுளை 486 ஆம் பக்கத்திலும், § இச் செய்யுளை 487 ஆம் பக்கத்திலும் காண்க.

இது 'பல்வேறு கவர்பொரு ணூட்டத்தான்' (தொல்-களவு-23) அறக்கழிவுடையனவுங் கூறப்பெறுமென்றமைப் பது பெரும்பான்மை. இஃது அதிகாரத்தாற் றோழிக்குந் தலைவிக்குங்கொள்க. (உச)

219. மிக்க பொருளினுட் பொருள்வகை புணர்க்க
நாணுத் தலைப்பிரியா நல்வழிப் படுத்தே.

இது மேல் அறக்கழிவுடைத்தாயினும் அது பொருட் பயம்படு மென்றார், அப்பொருளினை இது வென்றலின் மேலை தற்கோர் புறனடை.

இதன்பொருள் : மிக்க பொருளினுள்—முன்னர் அகப் பொருட்குப் பயம்படவரினென்று வழுவமைத்த பொரு ளின் கண்ணே ; நாணுத்தலைப் பிரியா நல்வழிப் பொருள் வகை படுத்துப் புணர்க்க—தலைவியது நாண் அவளிடத்து நின்று நீங்காமைக்குக் காரணமாகிய நன்னெறியாகிய பொ ருட்கூறுபாடுகளை உள்ளடக்கிப் *படுத்துக்கூறுக, என்ற வாறு.

"† நெருநலெல்லை" (அகம்-32) என்பதனுள், நெரு நல் யான் காக்கின்ற புனத்துவந்து ஒரு தலைவன் தன் பெரு மைக்கேலாச் சிறு சொற்சொல்லித் தன்னை யான் வருத்தி னேனாகக் கூறி என்னை முயங்கினன், யான் அதற்கு முன் னேநெகிழ்ந்தேத மனநெகிழ்ச்சி அவனறியாமன் மறைத்து வன் சொற்சொல்லி நீங்கினேன், அவ்வழி என் வன்கண்மையாற் பிறிதொன்று கூறவல்லனாயிற்றிலன், அவ்வாறு போனவன்

* 'படைத்துக்கூறுக' என்பதும் பாடம்.

† 'இச்செய்யுளை 497 ஆம் பக்கத்திற் காண்க.

இன்று நமக்குத் தோலாத் தன்மை யின்மையினின்றும் இனி வந்தொழுகுவன், தனக்கே நந்தோள் உரியவாகலும் அறி யாளுய் என்னைப் *பிறநிலைமுயலுங் கண்ணோட்டமு முடைய வனை நின் ஆயமும் யானும் நீயுங்கண்டு நகுவோமாக, நீ அவன் வருமிடத்தே செல்வாயாக, எனக் கூறியவழி; எம் பெருமானை இவள் புறத்தாற்றிற் கொண்டாள் கொல்லோ வெனவும், அவன் தனக்கு இனியசெய்தனவெல்லாம் என் பொருட்டென்று கொள்ளாது பிறழக்கொண்டாள் கொல் லோவெனவுந் தலைவி கருதுமாற்ருனே கூறினுளெனினும் அதனுள்ளே இவளெனக்குச் சிறந்தாளென்பதுணர்தலின் என் வருத்தந் தீர்க்கின்றில்லை யென்ருன் எனவும், அதற்கு முகமனுக இவளைத் தழீஇக்கொண்டதன்றி இவள் பிறழக் கொண்டதன்மை அவன்கணுளதாயின் இவளைக் குறிப்பறி யாது புல்லானெனவும், இவ்வொழுகலாறு சிறிதுணர்தலில் இக்குறைமுடித்தற்கு மனநெகிழ்ந்தாளெனவும், அவனை என்னோடு கூட்டுதற்கு என்னை வேறு நிறுத்தித் தானும் ஆயமும் வேறுநின்று நகுவேமெனக் கூறினுளெனவுந், தலைவி நாண் நீங்காமைக்குக் காரணமாகிய பொருளை உள் ளடக்கிப் புணர்த்துக் கூறியவாறுகாண்க. இதனுள் அறக் கழிவான பொருள் புலப்படவும் ஏனைப்பொருள் புலப்படா மலுங் கூருக்கால் தலைவியது மறையை வெளிப்படுத்தினுளா மாதலின் அதனை 'மிக்கபொரு'ளென்ருர். ஏனையவற்றிற் கும் உட்பொருள் புணர்த்தவாறுணர்ந்து பொருளுரைத் துக்கொள்க. (உரு)

---

* 'பிறநிலையுயலும்' என்பதும் பாடம்.

220. முறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொ
[துச்சொ
னிலைக்குரி மரபி னிருவீற்று முரித்தே.

இது கிழவன் கிழத்தி பாங்கன் பாங்கியென்னு முறைப் பெயராகிய சொற்பற்றிப் பிறந்ததோர் வழுவமைக்கின்றது.

இதன்பொருள் : முறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச்சொல்— முறைப்பெயரிடத்து இருபாற்கும் பொருந்தின தகுதியையுடைய எல்லா வென்னுஞ் சொல் ; நிலைக்கு உரி மரபின் இருவீற்றும் உரித்தே—புலனெறிவழக்கிற் குரிய முறைமையினானே வழுவாகாது ஆண்பாற்கும்பெண் பாற்கும் ஒப்ப உரியதாய் வழங்கும், என்றவாறு.

'கெழுதகை' யென்றதனானே தலைவியுந் தோழியும் தலைவனைக் கூறியதே பெரும்பான்மையென்றுந் தலைவன் தலைவியையும் பாங்கனையுங் கூறுதல் சிறுபான்மை வழுவமைதி யென்றுங் கொள்க.

உதாரணம் :

"அதிர்வில் படிறெருக்கி * * * நீசெல் ;
இனி யெல்லா" (கலி-81.)

எனத் தலைவியைத் தலைவன் *இழித்துக்கூறலின் வழுவாயமைந்தது.

"எல்லாநீ,
முன்னர்த்தா னென்று குறித்தாய்போற் காட்டினை
பின்னின் விடாஅ நிழற்போ றிரிதருவா
யென்னீ பெறாத திதென்" (கலி-61.)

* 'விளித்துக்கூறலின்' என்பதும் பாடம்.

எனத் தோழி தலைவனை விளித்துக்கூறலின் வழுவாயமைந் தது.

"எல்லாவிஃதொத்தன்" (கலி-61) என்பது பெண் பால்மேல் வந்தது. ஏனைய வந்துழிக்காண்க. பொதுச் சொல்லென்றதனானே எல்லா எலா எல்ல எலுவ எனவுங் கொள்க.

"* எலுவ சிறாஅர்" (குறுந்-129) என வந்தது. "† யாரை யெலுவ யாமே" (நற்றிணை-395) எனத் தலைவனைத் தோழி கூறினாள்.

எலுவியென்பது பாலுணர்த்தலின் ஆராயப்படா. (உகூ)

221. தாயத்தி னடையா வீயச் செல்லா
வினைவயிற் றங்கா வீற்றுக் கொளப்படா
வெம்மென வருஉங் கிழமைத் தோற்ற
மல்லா வாயினும் புல்லுவ வுளவே.

இது தோழி தலைவியுறுப்பினைத் தன்னுறுப்பாகக் கூறப்பெறுமென வழுவமைக்கின்றது.

இதன் பொருள்: தாயத்தின் அடையா—தந்தையுடைய பொருள்களாய்மக்களெய்துதற்குரிய பொருள்களிற் சேராதனவுமாய்; ஈயச் செல்லா—அறமும் புகழுங் கருதிக் கொடுப்பப் பிறர்பாற் செல்லாதனவுமாய்; வினைவயின் தங்கா—மைந்தரில்லாதார்க்கு மைந்தர்செய்வன செய்து பெறும்

* இச்செய்யுளை 384 ஆம் பக்கத்திலும், † இச்செய்யுளை 691 ஆம் பக்கத்திலும் காண்க.

பொருளில் தங்காதனவுமாய்; வீற்றுக் கொளப்படா—வேறு பட்டாரொருவன் * வலிந்துகொள்ளப் படாதனவுமாய்; எம்மென வரூஉங் கிழமைத் தோற்றம்—எம்முடையன வென்று தோழிகூறப் புலனெறிவழக்கிற்குப் பொருந்திவரும் உரிமையையுடைய உறுப்புக்கள்; அல்லாவாயினும் புல்லுவ உளவே—வழுவாயினும் பொருந்துவனவுள, என்றவாறு.

உறுப்புக் கட்புலனாதலின் தோற்றமென்றார். எனவே, உறுப்பொழிய இந்நான்கும் எம்மெனக் கூறலாகாவென்றார்.

"ஒருநாளெந்தோ ணெகிழ்புற்ற துயராற் றுனிதந்து"

எனவும்,

"என்றோ ளெழுதிய தொய்யிலும்" (கலி-18.)

எனவும் †தலைவிதோளினை என்தோள் என்றாள்.

"என்கா லரியமை சிலம்பு கழீஇ
* * *
யென்றோள் தோழி"

"செய்த லிதழுண்க,
ணின்கண்ணா தென்கண் மன" (கலி-39.)

என்பவும் இதன்கணடங்கும். 'உள' வென்றதனாற் சிறுபான்மை தலைவி கூறுவனவுங்கொள்க. அவை,

"என்னொடு நின்னொடுஞ் சூழாது"

எனவும்,

---

* 'வலித்து' என்பதும் பாடம்.

† 'எந்தோளிணை' என்பதும் பாடம்.

"நின்கண்ணாற் காண்பென்மன்யான்" (கலி-39.)

எனவும் வரும். (உஎ)

222. ஒருபாற் கிளவி யெனைப்பாற் கண்ணும்
வருவகை தானே வழக்கென மொழிப.

இஃது 'ஒன்றேவேறே' (தொல்-கள-2) என்னுஞ் சூத்திரத்து 'ஒத்த கிழவனுங் கிழத்தியும்' என்ற ஒருமை பன்மைப் பாலாய் உணர்த்துகவென வழுவமைத்தது.

இதன் பொருள்: ஒருபாற் கிளவி—'ஒத்தகிழவனுங் கிழத்தியும்' என்றவழி ஆணொருமையும் பெண்ணொருமையும் உணர்த்திநின்ற சொற்களை ஆசிரியரும் அவ்வாறு ஆண்டாரேனும் அவ்வொருமைச் சொற்கள்; எனைப்பாற்கண்ணும் வருவகை தானே—நால்வகைக்குலத்துத் தலைவரையுந் தலைவியரையும் உணர்த்தும் பன்மைச்சொற்கண்ணேநின்று பன்மைப்பொருள் உணர்த்திவருங் கூறுபாடுதானே; வழக்கென மொழிப—உலகவழக்கென்று சொல்லுவர் ஆசிரியர், என்றவாறு.

இதனாற் பயன் உலகத்து ஓரூர்க்கண்ணும் ஓரோவொரு குலத்தின்கண்ணுந் தலைவருந் தலைவியரும் பலரேனும் அவர்களையெல்லாங் கூறுங்காற் கிழவனுங்கிழத்தியுமென்று ஒருமையாற் கூறுவதனறி வேறோர்வழக்கின்றென்பதுபற்றி முதனூலாசிரியர் அங்ஙனஞ் சூத்திரஞ் செய்தலின், யானும் அவ்வாறே சூத்திரஞ்செய்தேனாயினும், அச்சொற் பலரையும் உணர்த்துமென வழுவமைத்தாராயிற்று. ஒருவனோடு பலர்கூட்டமுங்கோடற்கு எனைப்பாலென்று ஒருமையாற் கூறாது 'எனைப்பா'லெனப் பன்மையாற்கூறினார்.

இது சொல்வழுவும் பொருள்வழுவும் அமைத்தார். 'ஒத்த கிழவனுங் கிழத்தியும்' என்ற ஒருமையேகொள்ளின் அன்னோரிருவர் இவ்வுலகத்துள்ளாரன்றி வேறாக நாட்டிக்கொள்ளப் பட்டாரென்பதுபட்டு இந்நூல் உலகவழக்கல்லாதனைதார் நூலுமாய் 'வழக்குஞ்செய்யுளும்' (தொல்-பாயிரம்) என்பதனோடு மாறுகோடலேயன்றிப் 'பரத்தை வாயி னால்வர்க்கு முரித்தே' (தொல்-பொரு-30) என்றாற் போல்வன பிறசூத்திரங்களும் வேண்டாவாமென்றுணர்க. (உ அ)

223. எல்லா வுயிர்க்கு மின்ப மென்பது
தானமர்ந்து வரூஉ மேவற் றாகும்.

இது மேலதற்கோர் புறனடை.

இதன்பொருள்: இன்பம் என்பது தான்—அறனும் பொருளும் ஒழிய இன்பமென்று கூறப்படுவதுதான்; எல்லா உயிர்க்கும் அமர்ந்து வரூஉம்—மக்களுந் தேவரும் நரகரும் மாவும் புள்ளும் முதலிய எல்லாவுயிர்களுக்கும் மனத்தின் கண்ணே பொருந்தித் தொழிற்பட வருமாயினும்; ஏவற்றாகும் — ஆணும்பெண்ணுமென அடுக்கிக்கூறலுடைத்தாய் நுகர்ச்சிநிகழும், என்றவாறு.

'ஏவற்றாகு' மென்றார்; என்பது ஆணும்பெண்ணுமாய்ப் போகநுகர்ந்துவருதலின் ஒருவனும் ஒருத்தியுமே இன்ப நுகர்ந்தாரெனப்படாது அவ்வின்பம் எல்லாவுயிர்க்கும் பொதுவென்பதூஉம் அவை இருபாலாய்ப் *புணர்ச்சி நிகழ்த்துமென்பதூஉங் கூறியதாயிற்று. அறனும் பொருளும் எல்லாஉயிர்க்கும் நிகழா, மக்கட்கே சிறந்துவருமென்றாராயிற்று.

---

* 'புணர்ச்சிநிகழும்' என்பதும் பாடம்.

224. பரத்தை வாயி னால்வர்க்கு முரித்தே
நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர்.

இது தலைவர்க்குரிய தலைவியர்பலருந் தலைவன் பரத்தைமை காரணமாக ஊடற்குரியரென்பதூஉம் அவரிடத்து வாயில்சேறற்குரியரென்பதூஉங் கூறி வழுவமைக்கின்றது.

இதன்பொருள்: பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்து *தலைவன் பரத்தைமையால் தலைவிக்குத் தோன்றிய ஊடல் தீர்த்தற்குரியவாயிலை அவர்பாற்செலுத்தல் நான்கு வருணத்தாருக்கும் உரித்து ; அஃது நிலத்திரிபு இன்று என்மனார் புலவர்—அவ்வொழுக்கம் பெரும்பான்மை மருதநிலத்தினின்றுந் திரிந்துவருதல் இன்றென்று கூறுவர் புலவர், என்றவாறு.

'பரத்தைவாயி'லென்றது குதிரைத்தேர்போல நின்றது. இதனாற் பயன் அந்தணர்க்கு நால்வரும் அரசர்க்கு மூவரும் வணிகர்க்கு இருவருமாகிய தலைவியர் ஊடற்குரியரென்பதூஉம், அவர்பால் தத்தந் தலைவர் ஊடறீர்த்தற்குரிய வாயில் விடுவரென்பதூஉம், அவர் வாயின்மறுத்தலும் நேர்தலும் உடையரென்பதூஉம், ஏனைப்பரத்தையர்க்கு வாயில்விடுதல் இன்றென்பதூஉங் கூறியவாறாயிற்று. 'ஒருபாற் கிளவி' (தொல்-பொருளியல்-28) என்பதனால் ஒரோவோர்குலத்துத் தலைவருந்தலைவியரும் அடங்குமாறுணர்க. உதாரணம் முற்காட்டியவற்றுட் காண்க. ஒருவனும் ஒருத்தியுமாகி இன்பநுகர்ந்து இல்லறநிகழ்த்துதலே சிறந்ததென்றற்கு இங்ஙனம்பலராதல் வழுவென்று அதனை அமைத்தார். (கூ௦)

* 'தலைவர் பரத்தைமையால் தலைவியர்க்கு' என்பதும் பாடம்.

225. ஒருதலை யுரிமை வேண்டிய மகடூஉப்
பிரித லச்ச முண்மை யானு
மம்பலு மலருங் களவுவெளிப் படுக்குமென்
றஞ்ச வந்த வாங்கிரு வகையினு
நோக்கொடு வந்த விடையூறு பொருளினும்
போக்கும் வரைவு மனைவிக்கட் டோன்றும்.

இது களவின்கட் டலைவியின்கண் நிகழ்வதோர் வழூ வமைக்கின்றது.

இதன்பொருள்: உரிமை ஒருதலை வேண்டியும்—இடைவிடாது இன்பநுகர்தலோடு இல்லறநிகழ்த்தும் உரிமையை *உறுதியாகப்பெறுதலை விரும்புதலானும்; பிரிதல் அச்சம் மகடூஉ உண்மையானும்—ஆள்வினைக்குறிப்புடைமையின் ஆண்மக்கள் பிரிவரென்று அஞ்சும் அச்சம் மகளிர்க்குண்டாகையினானும்; ஆங்கு அம்பலும் அலரும் களவு வெளிப்படுக்கும் என்று அஞ்ச வந்த இருவகையினும்—அக்களவொழுக்கத்திடத்தே அம்பலும் அலரும் இக்களவைப்புலப்படுக்குமென்று அஞ்சும்படி தோன்றிய இருவகைக் குறிப்பானும்; நோக்கொடு வந்த இடையூறு பொருளினும்—பிறர் தன்னை அயிர்த்துநோக்கும் நோக்கங்காரணமாக வந்த கூட்டம் இடையூறுற்ற காரியத்தினானும்; மனைவிக்கட் போக்கும் வரைவும் தோன்றும்—தலைவியிடத்தே உடன் போக்கும் வரையக்கருதுதலுந் தோன்றும், என்றவாறு.

"பழைய மலரடுக்கத்து" என்பதனுண் "முன்னது கொண்டடக்குவம்" என இடைவிடாது இன்பநுகர விரும்

* 'அறுதி' என்பதும் பாடம்.

பியவாறும் உள்ளுறையான் இல்லறநிகழ்த்த விரும்பியவாறுங் காண்க.

"உள்ளங் கொள்கையொடு" என்பது அம்பலும் அலரும் அஞ்சிப் போக்குடன்பட்டது.

"ஆறு தலைக்கு மறனி லன்னை
தானே *யிருக்கத் தன்மகன் யானே" (குறுந்-262.)†

இஃது இடையூறுபொருளின்கட் போக்குடன்பட்டது.

ஏனைய முன்னர்க் காட்டியவற்றுட் காண்க. 'ஒன்றித் தோன்றுந் தோழி மேன' (தொல்-அகத்-39) என்பதனால் தோழிக்கும் இவையுரியவென்றுகொள்க. உடன்போக்குக் கருதுதலுந் தலைவன் தான் வரையாமல் தலைவி விரும்புதலும் வழுவாயின. (௩க)

226. வருத்த மிகுதி சுட்டுங் காலை
யுரித்தென மொழிப வாழ்க்கையு ளிரக்கம்.

இது கற்புக்காலத்துத் தோழிக்கும் அறிவர்க்கும் உரியதோர் வழுவமைக்கின்றது.

இதன்பொருள்: வருத்தமிகுதி சுட்டுங்காலை—தோழியும் அறிவரும் பரத்தையிற்பிரிவால் தலைவர்க்குந் தலைவியர்க்குந் தோன்றிய வருத்தமிகுதியைத் தீர்க்கக்கருதிக் கூற்று நிகழ்த்துங்காலத்து; வாழ்க்கையுள் இரக்கம் உரித்தென மொழிப—அவரது இல்வாழ்க்கைநிகழ்ச்சிக்கண்ணே தமக்கு வருத்தந்தோன்றிற்றாகக் கூறுதலும் உரித்தென்று கூறுவராசிரியர், என்றவாறு.

---

* 'இருக்க தன்மனை' என்பதும் பாடம்.

† இச்செய்யுள் முழுவதையும் 96-ஆம் பக்கத்திற் காண்க.

"நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கு
மார்ந்தோர் வாயிற் றேனும் புளிக்குந்
தணந்தனை யாயினெம் மில்லுய்த்துக் கொடுமோ
வந்தண் பொய்கை யெந்தை யெம்மூர்க்
கடும்பாம்பு வழங்குந் தெருவி
னடுங்களு ரெவ்வங் களைந்த வெம்மே." (குறுந்-354.)

இதனுள் இல்லறத்தினை நீ துறந்தாயாயின் எம்மை எம்மூர்க்கண்ணே விடுகவெனத் தனக்கு வருத்தந்தோன்றிற் றாகத் தோழி கூறியவாறு காண்க.

"உடுத்துந் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயுந்
தழையணிப் பொலிந்த வாயமொடு துவன்றி
விழவொடு வின்றாய் நீயே யிஃதோ
வோரா வல்சிச் சீரில் வாழ்க்கைப்
பெருநலக் குறுமகள் வந்தென
வினிவிழ வாயிற் றென்னுமிவ் வூரே" (குறுந்-295.)

இதனுள் ஓராவல்சியொடு முன்னர்நிகழ்த்திய வாழ்க்கை இவன் வந்தானாகப் புறத்து விளையாடும் விழவுளதாயிற் றென்று இவ்வூர் கூறுநிற்குஞ் செல்வம் இவளைஞெகிழ்ந்தாற் பழையதன்மையாமென்று அறிவர் இரங்கிக் கூறியவாறு காண்க.

"துறைமீன் வழங்கும்" (அகம்-315) என்பதனுள்,

"அதுபுலந் துறைதல் வல்லியோ ரெமரே"

எனப் புலவியால் நின் இல்வாழ்க்கை குறைபடுமெனத் தோழி கூறியவாறு காண்க.

இன்னும் உய்த்துக்கொண்டுணர்தலென்பதனால் ஏனைப் பிரிவான் நிகழும் வருத்தமிகுதியைக் குறித்தவிடத்து உயிர்

வாழ்க்கையின் இரக்கமுரித்தென மொழிப என்றும் பொருள் கூறிச்,

"செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை" (குறள்-116-1.)

எனவும்,

"அன்பற மாறியா முள்ளத் துறந்தவள்
பண்பு மறிதிரோ வென்று வருவாரை
யென்றிறம் யாதும் வினவல் வினவிற்
பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை முற்றும லாண்டோ
ரவலம் படுதலு முண்டு" (கலி-19.)

எனவும் வருவன பிறவுங் கொள்க. (கூஉ)

227. மனைவி யுயர்வுங் கிழவோன் பணிவு
நினையுங் காலைப் புலவியு ளுரிய.

இது கற்பினுள் தலைவற்குந் தலைவிக்கும் எய்தியதோர் வழுவமைக்கின்றது.

இதன்பொருள்: புலவியுள் மனைவி உயர்வும்—புலவிக் காலத்துத் தலைவன்பணிந்துழி உட்கும் நாணுமின்றித் தலைவி அதனை ஏற்றுக்கோடலும்; கிழவோன் பணிவும்—தலைவன் தலைமைக்கு மாறாகத் தலைவியைப் பணிதலும்; நினையுங் காலை உரிய—ஆராயுங்காலை இருவர்க்குமுரிய, என்றவாறு.

உதாரணம்:

"வலையுறு மயிலின் வருந்தினை பெரிதெனத்
தலையுற முன்னடிப் பணிவான் போலவும்

கோதை கோலா விறைஞ்சி நின்ற
ஊதையஞ் சேர்ப்பனை யலைப்பேன் போலவும்" (கலி-128.)

இது முன்னே தலைவிமனத்து நிகழ்தலுண்மையிற் கனவிலுங் கண்டாரென்றுணர்க.

"தம்மி னென்றடி சேர்தலுமுண்டு"

என்பதும் அது.

'வினையுங்காலை' யென்றதனால் தோழியுயர்வுங் கிழவோன் பணிமொழிபயிற்றலுங் கொள்க.

"ஒன்று, இரப்பான்போ லெளிவந்துஞ் சொல்லு முலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்
வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போ
னல்லார்கட் டோன்று மடக்கமு முடைய
னில்லோர் புன்க ணீகையிற் றணிக்க
வல்லான் போல்வதோர் வண்மையு முடைய
னன்னா னொருவன்றன் னாண்டகை விட்டென்னைச்
சொல்லுஞ்சொற் கேட்டீ சுடரிழாய் பன்மாணும்." (கலி-47)

இதனுள் தலைவன் இரந்துரைத்தவாறுந் தான் அதனை ஏற்றுக்கொண்டவாறுங் காண்க. இச்சூத்திரம் புலவிக்கே கூறினார். ஊடற்குந் துனிக்குங் 'காமக்கடப்பின்' (தொல்-கற்-19) என்பதனுட் கூறினாரெனவுணர்க. (உஉ)

228. நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற்
புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே.

இது கற்புக்காலத்துத் தலைவற்குந் தலைவிக்கும் உரியதோர் வழுவமைக்கின்றது.

இதன்பொருள்: கற்பினுள்—கற்புக்காலத்து; தகைநிகழ் மருங்கின்—ஒருவர்க்கொருவர் மனத்து நிகழுமிடத்து; வேட்கை மிகுதியிற் புகழ் தகை வரையார்—வேட்கைமிகுதியாலே அதனைப் புகழ்ந்துரைக்குந் தகைமையினை ஆசிரியர் இருவருக்கும் நீக்கார் கொள்வர், என்றவாறு.

"ஆக வனமுலை யரும்பிய சுணங்கின்
மாசில் கற்பிற் புதல்வன் றாயென
மாயப் பொய்மொழி சாயினை பயிற்றி"

இது புலவிக்கண் தலைவன்புகழ்ந்தது.

"அணைமரு ளின்றுயி லம்பணைத் தடமென்றோட்
டுணைமல *ரெழினீலத் தேந்தெழின் மலருண்கண்
மணமௌவன் முகையன்ன மாவீழ்†வா ணிரைவெண்பன்
மணநாறு நறுநுதன் மாரிவீ ழிருங்கூந்த
லலர்முலை யாகத் தகன்ற வல்குல்
சிலஃதிரை வால்வளைச் செய்யா யோவெனப்
பலபல கட்டுரை பண்டையிற் பாராட்டி
யினிய சொல்லி யின்னாங்குப் பெயர்ப்ப
தினியறிந் தேனது துனியா குதலே" (கலி-14.)

இது போக்கின்கண் தலைவன் புகழ்ந்தது.

"அரிபெய் சிலம்பின் * * *" (அகம்-6.)‡

என்பதனுள் "ஏந்தெழின் மார்பிற் பூந்தார் குழைய" என்பது தலைவி புலவிக்கட் புகழ்ந்தது.

---

* 'எழுநீலம்' என்பதும் பாடம்.

† 'வார் நிரைவெண்பல்' என்பதும் பாடம்.

‡ இச்செய்யுளை 23-ஆம் பக்கத்திற் காண்க.

"விரைதார் மார்ப நெருந லொருத்தியொடு" (அகம்-66.)
என்பதும் அது.

'தகை' எனப் பொதுவாகக் கூறலிற் குணத்தைக் க...
லுங் கொள்க.

*"நாலாறுமாறாய்" (நாலடி-39-3) எனவும், "நி...
சொல்லா" எனவும் வரும்.

குற்றேவனிலையளாகிய தலைவியைத் தலைவன்புகழ்த...
னும் பெருநாணினளாகிய தலைவி கணவனைப் பிறரொ...
புகழ்தலானும் வழுவாயிற்று. (௩...)

229. இறைச்சி தானே பொருட்புறத் ததுவே.

இது தலைவிக்குந் தோழிக்குமுரியதோர் வழுவமை...
கின்றது. இறைச்சியாவது உள்ளபொருள் ஒன்றனுள்ளே...
கொள்வதோர் பொருளாகலானுஞ் செவ்வன் கூறப்படா...
யானுந் தலைவன் கொடுமைகூறும்வழிப் பெரும்பான்...
பிறத்தலானும் வழுவாயிற்று.

இதன்பொருள்: இறைச்சிதானே — கருப்பொருட்...
நேயந்தான்; பொருட் புறத்ததுவே—கூறவேண்டுவதே...
பொருளின்புறத்தே புலப்பட்டு அதற்கு உபகாரப்ப...
பொருட்டன்மையுடையதாம், என்றவாறு.

"இலங்கு மருவித் திலங்கு மருவித்து
வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை." (கலி-41.)

---

* இச்செய்யுளை 722 ஆம் பக்கத்திற் காண்க.

சூளைப்பொய்த்தானென்பதே கூறவேண்டும்பொருள். தன்புறத்தே இங்ஙனம் பொய்த்தான்மலையகத்து நீர்திகழ் ரனென இறைச்சிப்பொருள் தோன்றியவாறு காண்க. றவுமன்ன. (௩௫)

230. இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியன் மருங்கிற் றெரியு மோர்க்கே.

இஃது எய்தியது இகந்துபடாமற் காத்தது.

இதன்பொருள்: இறைச்சியிற் பிறக்கும் பொருளுமார் ளவே—கருப்பொருள் பிறிதோர் பொருட்கு உபகாரம் டும் பொருட்டாதலேயன்றி அக்கருப்பொருடன்னுள்ளே தான்றும் பொருளும் உள; திறத்து இயல் மருங்கில்— ஃது உள்ளுறையுவமத்தின் கூற்றிலே அடங்குமாறுபோல க்குமிடத்து; தெரியுமோர்க்கே—அவ்வுள்ளுறையுவம ன்று இஃது இறைச்சியென்று ஆராய்ந்துணரும் நல்லறி டையோர்க்கு, என்றவாறு.

"கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத் துவந்த வுதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்தனை யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவ
ளொலிமென் கூந்த லுரியவா கினக்கே." (குறுந்-225.)

இதனுள் தான் கெட்டவிடத்து உதவின உதவியை ரசவுரிமையெய்தியமன்னன் மறந்தாற்போல நீ இரந்து பருற்றகாலத்து யான் தலைவியை நின்னொடுகூட்டிய செய்ந்

நன்றியை மறவாது இன்று நீ வரைந்துகொள்வையாயின் இவள் கூந்தல் நினக்குரியவென்றவழி உவமையும் பொருளும் ஒத்து *முடிந்தமையின் முன்னின்றநாடவென்பது உள்ளுறையுவமமன்றாய் இறைச்சியாம். என்னை ? தன்கன்றிற்குப் பயன்பட்டுப் பிறர்க்கு உயிரைக்கொடுக்கின்ற தினையைத் தான் உண்டு அழிவுசெய்கின்றாற்போல, நீ நின்கருமஞ் சிதையாமற் பார்த்து எமக்குயிராகிய இவளைத் துயருறுத்தி எம்மை இறந்துபடுவித்தல் ஆகாதென்று உவமையெய்திற்றேனும், பின்னர் நின்ற பொருளோடியையாது இவ்வுவமம் உள்ளுறையுற்றுப் பொருள்பயவாது இறைச்சியாகிய நாடனென்பதனுள்ளே வேறோர் பொருள் தோற்றுவித்து நின்றதேயாமாதலின். முலைமாந்த என்றது தன்கருமஞ் சிதையாமற் பார்த்தென்னுந் துணையன்றி உள்ளுறையுவமப்பொருளைமுற்ற உணர்த்தாமையுணர்க.

> "வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்
> தேந்து மருப்பி னினவண் டிமிர்பூதுஞ்
> சாந்த மரத்தி னியன்ற வுலக்கையா
> லைவன வெண்ணெ லறையுரலுட் பெய்திருவா
> மையனை யேத்துவாம் போல வணிபெற்ற
> மைபடு சென்னிப் பயமலை நாடனைத்
> தையலாய் பாடுவா நாம்" (கலி-43.)

இதனுட் புலவுநாறியும் பூநாறியுந் தீதும் நன்றுமாகிய இறைச்சியாகிய உலக்கைகளால் தலைவனைப்பாடும் பாட்டோடே கலந்து கூறத்தகாத தெய்வத்தையும் பாடுவாமென்னும் பொருள்பயப்பச்செய்த இறைச்சியிற்பொருளே பயந்தவாறும் இரண்டுலக்கையானும் பயன்கொண்டாற்போல்

---

* 'முடிந்தபின்' என்பதும் பாடம்.

அவை அன்பே பாடுதலாற் பயன்கொள்ளாமையின் உள்ளு றையுவமமன்மையுங் காண்க. உள்ளுறையுவமமாயின்,

"தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலையொடு
வெண்பூம் பொய்கைத் தவனூரென்ப." (ஐங்குறு-41.)

என்றாற்போலத் தலைவன்கொடுமையுந் தலைவிபேதைமை யும் உடனுவமங்கொள்ளநிற்கும். இதுபற்றித் 'தெரியு மோர்க்கே' யென்றார். உம்மை இறந்தது தழீஇயிற்று. (௩௬)

231. அன்புறு தகுந விறைச்சியுட் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே.

இஃது இறைச்சி முற்கூறியவற்றின் வேறுபட வரு மென்கின்றது.

இதன்பொருள்: வருந்திய பொழுதே—பிரிவாற்றாத காலத்து; இறைச்சியுள் அன்புறு தகுந சுட்டலும்—தோழி கருப்பொருள்களுள் தலைவன் அன்பு செய்தற்குத் தகுவன வற்றைக் கருதிக் கூறலும்; வன்புறை ஆகும்—வன்புறுத்த லாகும், என்றவாறு.

"நசைபெரி துடையர் நல்கலு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழ
மென்சினை யாஅம் பிளக்கு
மன்பின் றோழியவர் சென்றவாறே." (குறுந்-37.)

இதனுண் முன்பே நெஞ்சகத்தன்புடையார் அதன் மேலே களிறு தன்பிடியின் பெரும்பசிகளைதற்கு மென்றோ லையுடைய ஆச்சாவைப்பிளந்து அந்நாரைப் பொளித்தூட் டும் அன்பினையுடைய அவர்சென்ற ஆறதனைக் காண்பர் காண் என்று அன்புறுதகுந கூறிப் பிரிவாற்றுதவளை வற்

புறத்தவாறுகாண்க. நம்மேல் இயற்கையாக அன்பிலனென்று ஆற்றுளாவளென்று கருதாது இவளை ஆற்றுவித்தற்பொருட்டு இவ்வாறு கூறலின் வழுவாயமைந்தது.

"அரிதாயவறன்" (கலி-11) என்பது தோழிகூற்றன்மை உணர்க. (நூஎ)

232. செய்பொரு ளச்சமும் வினைவயிற் பிரிவு
மெய்பெற வுணர்த்துங் கிழவி பாராட்டே.

இது தலைவன் தலைவியைப் பாராட்டியவழி வருவதோர் வழுவமைக்கின்றது.

இதன்பொருள்: கிழவி பாராட்டே—தலைவன் தலைவியைப் பாராட்டிய பாராட்டு; செய்பொருள் அச்சமும்—யாஞ் செய்யக்கருதியபொருட்கு இவள் இடையூறுவள்கொலென்று தலைவன் அஞ்சிய அச்சத்தையும்; வினைவயிற் பிரிவும்—தான் பொருள்செய்தற்குப் பிரிகின்றதனையும்; மெய்பெற உணர்த்தும்—ஒருதலையாகத் தலைவிக்கு உணர்த்தும், என்றவாறு.

அப்பாராட்டுக் கிழவியதாகலிற் கிழவிபாராட்டென்றார்.

"நுண்ணெழின் மாமை" (கலி-4) என்பதனுட் கழிபெருநல்கலால் தலைவன் செய்பொருட்கஞ்சியவாறும் அவன் பிரியக்கருதியதூஉந் தலைவியுணர்ந்தாள் அப்பாராட்டினுலென்றுணர்க.

அன்பானன்றிப் பொருள்காரணத்தாற் பாராட்டினமையானும் அதனைச் செவ்வனங்கொள்ளாது பிறழக்கோடலானும் இருவர்க்கும் வழுவாமென்றமைத்தார் (நூஅ)

233. கற்புவழிப் பட்டவள் பரத்தை யேத்தினு முள்ளத் தூட லுண்டென மொழிப.

இது தலைவிக்கட் டோன்றியதோர் வழுவமைக்கின்றது.

இதன்பொருள்: கற்புவழிப் பட்டவள்—கற்பின்வழி நின்ற தலைவி; பரத்தை ஏத்தினும்—பரத்தையைப் புகழ்ந்து கூறினாளாயினும்; உள்ளத்து ஊடல் உண்டென மொழிப—உள்ளத்துள்ளே ஊடினதன்மை உண்டென்று கூறுவர் புலவர், என்றவாறு.

பரத்தையை ஏத்தவே தலைவன்கட் காதலின்மைகாட்டி வழுவாயிற்றேனும் உள்ளத்தூடலுண்மையின் அமைக்க வென்றார்.

"நாணி நின்றோ ணிலைகண் டியானும்
பேணினெ னல்லனோ மகிழ்ந வானத்
தணங்கருங் கடவுளன் னோளின்
மகன்றா யாதல் புரைவதா லெனவே" (அகம்-16.)*

என வரும்.

'ஏத்தினும்' என்ற உம்மையால் ஏத்தாமற் கூறும்பொழு தெல்லாம் மாறுபடக்கூறலுளதென்பது பெற்றாம்.

"என்னொடு புரையுந ளல்ல
டன்னொடு புரையுநர்த் தானறி யுநளே."

என வரும். (௩௰௩)

234. கிழவோள் பிறள்குண மிவையெனக் கூறிக் கிழவோன் குறிப்பினை யுணர்தற்கு முரியள்.

* இச்செய்யுள் முழுவதையும் 650-ஆம் பக்கத்திற் காண்க.

இஃது எய்தியது ஒருமருங்கு மறுக்கின்றது; உள்ளத் தூடலின்றியும் பிறளொருத்தியைத் தலைவி புகழுமென்ற லின்.

இதன்பொருள்: கிழவோள் பிறள் குணம் இவையெனக் கூறி—தலைவி வேறொரு தலைவியுடைய குணங்கள் இத் தன்மையவென்று தலைவற்குக்கூறி; கிழவோன் குறிப்பினை அறிதற்கும் உரியள்—அவள்மாட்டு இவன் எத்தன்மையனா யிருக்கின்றானென்று தலைவன்குறிப்பினை உணர்தற்குமுரியள், என்றவாறு.

பரத்தையென்னாது 'பிறள்' என்றதனால் தலைவியேயா யிற்று: அன்றிப் பரத்தையாயின் ஊடலின்மை அறனன்றாக லின் உள்ளத்தூடல் நிகழ்பவை வேண்டும். தோழிகூறுங் கால் தலைவியரைக் கூறப்பெறாளென்பதூஉம் பரத்தையரைக் கூறின் அவர்க்கு முதுக்குறைமைகூறிக் கூறுவளென்ப தூஉங் கொள்க.

> "கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
> யொள்ளிழை யுயர்மணல் வீழ்ந்தென
> வெள்ளாங் குருகை வினவு வோளே" (ஐங்குறு-122.)

இது தலைவன் வரையக்கருதினாளோர் தலைவியை இனைய ளெனக்கூறி அவள்மாட்டு இவன் எத்தன்மையனென்று *விதுப்புற்றுக் கூறியது. இது தலைவன்கூற உணராது தான் வேறொன்றுகூறி அவன்குறிப்பு அறியக் கருதுதலின் வழு

---

* 'விதுப்பு' என்னுஞ் சொல் வேட்கை மிகுதியான் விரைதல் என்னும் பொருளைத்தரும். இது 'புணர்ச்சி விதும்பல்' என்னுஞ் சொற்றொடர்க்குப் பரிமேலழகியார் கூறு முறையானும் உணர்க.

வாயமைந்தது. இது கைக்கிளைப்பொருட்கண் வழுவமைக்கின்றது. (௪0)

235. தம்முறு விழுமம் பரத்தையர் கூறினு
மெய்ம்மை யாக வவர்வயி னுணர்ந்து
தலைத்தாட் கழறறம் மெதிர்ப்பொழு தின்றே
மலிதலு மூடலு மவையலங் கடையே.

இது பரத்தையர்க்குந் தலைவிக்குந் தலைவற்கும் படுவதோர் வழுவமைக்கின்றது.

இதன்பொருள்: தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்—தலைவனால் தாம் உற்ற வருத்தத்தைத் தலைவிக்குப் பரத்தையர் கூறினும் ஏனைத் தலைவியர் கூறினும்; அவர்வயின் மெய்ம்மையாக உணர்ந்து—அவர் கூறியவாற்றானே அவ்வருத்தத்தை அவரிடத்து உண்மையாக உணர்ந்து; தலைத்தாட் கழறல்—தலைவன்முன் நின்று *கழறுங் கழற்றுரை; தம் எதிர்ப்பொழுது இன்று—தம்மைப் பரத்தையர் எதிர்ப்பட்ட பொழுதின்கண் இல்லை; மலிதலும்—அவர் துயருறநின்றுழிக் கவலாது நீங்கினானென மகிழ்தலும்; ஊடலும்—அவன்பிரிவிற்கு இவர் இரங்கினாரென்ற காரணத்தான் ஊடுதலும்; அவை அலங்கடை—அவ்விரண்டும் நிகழாவிடத்து, என்றவாறு.

என்பது வெறுத்த உள்ளத்தளாமென்பது கருத்து. எனவே, மலிதலும் ஊடலும் நிகழுமிடத்தாயின் தலைத்தாட் கழறுமென்பது பெறுதும். தலைத்தாள், தகுதிபற்றியவழக்கு,

* 'கூறுங் கூற்றுரை' என்பதும் பாடம்.

"பொன்னெனப் பசந்தகண் போதெழி னலஞ்செலத்
தொன்னல மிழந்தகண் துயில்பெறல் வேண்டேன்மன்
னின்னணங் குற்றவர் நீசெய்யுங் கொடுமைக
ளென்னுழை வந்துநொந் * துரையாமை பெறுகற்பின்"
(கலி-77.)

இது பரத்தையர் முன்னரன்மையின் மலிதலும் ஊடலும் நிகழ்ந்து தலைத்தாட்கழறியது.

கழறாது கூறியது வந்துழிக் காண்க. தம்முறுவிழுமத்தைப் பரத்தை தலைவிக்குக்கூறுதலாற் பரத்தைக்கும், அவர் கூறத் தான் எளிவந்தமையின் தலைவிக்கும், இவரிங்ஙன மொழிகலின் தலைவற்கும் வழுவமைந்தது. உம்மை இறந்தது தழீஇயிற்று. (௬௧

236. பொழுது தலைவைத்த கையறு காலை
யிறந்த போலக் கிளக்குங் கிளவி
மடனே வருத்த மருட்கை மிகுதியோ
டவைநாற் பொருட்க ணிகழு மென்ப.

இது 'பின்னர்நான்கும் பெருந்திணைபெறுமே.' (தொல்-களவு-14) என்ற சிறப்புடைப்பெருந்திணையன்றிப் பெருந்திணைக்குறிப்பாய்க் கந்தருவத்துட்பட்டு வழூஉவரும் 'ஏறிய மடற்றிறம்' (தொல்-அகத்-51) முதலிய நான்கினுள் ஒன்றாய் முன்னர்நிகழ்ந்த கந்தருவம் பின்னர் வழீஇவந்த 'தேறுத லொழிந்த காமத்து மிகுதிறம்' (தொல்-அகத்-51) ஆகிய பெருந்திணை வழுவமைக்கின்றது. ஓதலுந்தூதும் ஒழிந்த

* 'உரையாமல்' என்பதும் பாடம்.

பகைவயிற் பிரிவாகிய வாளாணெதிரும் பிரிவும் முடியுடை வேந்தர்க்கும் அவரேவலிற் பிரியும் அரசர்க்கும் இன்றிய மையாமையின், அப்பிரிவிற் பிரிகின்றான் 'வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும்' (தொல்-கற்-44) என்பதனாற் கற்புப்போல நீ இவ்வாறொழுகி யான் வருந்துணையும் ஆற்றியிருவென ஆற்றுவித்துப்பிரிதல் இலக்கணமன்மையின் வாளாபிரியு மன்றே: அங்ஙனம் பிரிந்துழி அவன் கூறியகூற்றினையே கொண்டு ஆற்றுவிக்குந் தோழிக்கும் ஆற்றுவித்தலரிதாக லின், அவட்கு அன்பின்றி நீங்கினானென்று ஆற்றாமைமிக்கு ஆண்டுப் பெருந்திணைப்பகுதி நிகழுமென்றுணர்க.

இதன்பொருள்: பொழுது—அந்திக்காலத்தே; கையறு காலை—'புறஞ்செயச்சிதைத்தல்' (தொல்-மெய்ப்-18) என் னுஞ் சூத்திரத்தில் அதனினாங்கின்று எனக் கூறிய 'கையற வுரைத்த' லென்னும் மெய்ப்பாடெய்தியகாலத்தே; தலை வைத்த—அந்தவாற்றாமையின் இகந்தவாக முடிவிலேவைக் கப்பட்ட மெய்ப்பாடுகள்; மிகுதியோடு மடனே வருத்தம் மருட்கை நாற்பொருட்கண் நிகழும்—தன்வனப்புமிகுதியுட னே மடப்பமும் ஆற்றாமையும் வியப்புமாகிய நான்குபொ ருட் கண்ணே நடக்கும்; அவை இறந்தபோலக் கிளக்குங் கிளவி என்ப—அங்ஙனம் அவைநடக்கின்ற நான்குபொரு ளுங் கூற்றுநிகழுங்கால் தன்னைக் கைகடந்தனபோலக்கூறுங் கூற்றாய் நிகழுமென்று கூறுவர்புலவர், என்றவாறு.

தலைவைத்த மெய்ப்பாடாவன ஆறுமவதியினும் ஒப்பத் தோன்றுதற்குரிய மெய்ப்பாடுகளாகி மன்றத்திருந்த சான் றோரறியத் தன்றுணைவன் பெயரும் பெற்றியும் அவனோடு புணர்ந்தமையுந் தோன்றக்கூறியும் அழுதும் ஆற்றியும்

பொழுதொடு புலம்பியும் ஞாயிறுமுதலியவற்றோடு கூறத்தகாதனகூறலும் பிறவுமாம்.

உதாரணம்:

"புரிவுண்ட புணர்ச்சியுட் புல்லாரா மாத்திரை
யருகுவித் தொருவரை யகற்றலிற் றெரிவார்கட்
செயனின்ற பண்ணினுட் செவிசுவை கொள்ளாது
நயனின்ற பொருள்கெடப் புரியறு நரம்பினும்
பயனின்று மன்றம்ம காம மிவண்மன்னு
மொண்ணுத லாயத்தா ரோராங்குத் திளைப்பினு
முண்ணுனை தோன்றாமை முறுவல்கொண் டடக்கித்தன்
கண்ணினு முகத்தினு நகுபவள் பெண்ணின்றி
யாவருந் தண்குரல் கேட்ப நிரைவெண்பன்
மீயுயர் தோன்ற நகாஅ நக்காங்கே
பூவுயிர்த் தன்ன புகழ்சா லெழிலுண்க
ணாயிதழ் மல்க வழூம்;
ஓ ஒ, அழிதகப் பாராதே யல்லல் குறுகினங்
காண்பாங் கனங்குழை பண்பு;
என்று, எல்லீரு மென்செய்தி ரென்னை நகுதிரோ
நல்ல நகாஅலிர் மற்கொலோ யானுற்ற
வல்ல லுறீஇயான் மாய மலர்மார்பு
புல்லிப் புணரப் பெறின்;
எல்லாநீ, யுற்ற தெவனோமற் றென்றிரே லெற்சிதை
செய்தா னிவனென வுற்ற திதுவென
வெய்த வுரைக்கு முரனசத் துண்டாயிற்
பைதல வாகிப் பசக்குவ மன்னோவென்
னெய்தன் மலரன்ன கண்;
கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிதொன்று
நாடுவேன் கண்டனென் சிற்றிலுட் கண்டாங்கே
யாடையான் மூஉ யகப்படுப்பேன் சூடிய

காணான் றிரிதருங் கொல்லோ மணிமிடற்று
மாண்மலர்க் கொன்றை யவன் ;
தெள்ளியே மென்றுரைத்துத் தேரா தொருவிலேயே
வள்ளியை யாகென நெஞ்சை வலியுறீஇ
யுள்ளி வருகுவர் கொல்லோ *வளைந்தியா
னெள்ளி யிருக்குவென் மற்கொலோ †நல்லிருண்
மாந்தர் கடிகொண்ட கங்குற் கனவினாற்
றோன்றின னாகத் தொடுத்தேன்மன் யான்றனை இப்
பையெனக் காண்கு விழிப்பயான் பற்றிய
கையுளே மாய்ந்தான் கரந்து ;
கதிர்பகா ஞாயிறே கல்சேர்தி யாயி
னவரை நினைத்து நிறுத்தென்கை நீட்டித்
தருகுவை யாயிற் றவிருமென் னெஞ்சத்
துயிர்திரியா மாட்டிய தீ ;
மையில் சுடரே மலைசேர்தி யாயிற்
பௌவநீர்த் தோன்றிப் பகல்செய்யு மாத்திரை
கைவிளக் காகக் கதிர்சில தாராயென்
றொய்யில் சிதைத்தானைத் தேர்கு ;
சிதைத்தானைச் செய்வ தெவன்கொலோ வெம்மை
நயந்து நலஞ்சிதைத் தான் ;
மன்றப் பனைமேன் மலைமாந் தளிரேநீ
தொன்றிவ் வுலகத்துக் கேட்டு மறிதியோ
மென்றோ ணெகிழ்த்தான் றகையல்லா லியான்காணே
னன்றுதீ தென்று பிற;
நோயெரி யாகச் சுடினுஞ் சுழற்றியென்
னாயித ழுள்ளே கரப்பன் கரந்தாங்கே
நோயுறு வெந்நீர் தெளிப்பிற் றலைக்கொண்டு
வேவ தளித்திவ் வுலகு;

---

* 'வளைந்தியான்' என்பதும் பாடம்.

† 'கள்ளிருள்' என்பதும் பாடம்.

மெலியப் பொறுத்தென் களைந்தீமின் சான்றீர்
நலிதருங் காமமுங் கௌவையு மென்றிவ்
வலிதி லுயிர்காவாத் தூங்கியாங் கென்னை
நலியும் விழும மிரண்டு ;
எனப்பாடி,
இனைந்துநொந் தழுதன ணினைந்துநீ டுயிர்த்தன
ளெல்லையு மிரவுங் கழிந்தனவென் றெண்ணி
யெல்லிரா, நல்கிய கேள்வ னிவன்மன்ற மெல்ல
மணியுட் பரந்தநீர் போலத் துணிபாங்,
கலஞ்சிதை யில்லத்துக் காழ்கொண்டு தேற்றக்
கலங்கிய நீர்போற் றெளிந்து நலம்பெற்றா
ணல்லெழின் மார்பனைச் சார்ந்து." (கலி-142.)

இதனுள் அந்திக்காலத்தே கையறவெய்திப் பின்னர் சான்றோரைநோக்கிக் கூறுகின்றவள் புல்லார் மாத்திரை யென அவனோடு புணர்ச்சிநிகழ்ந்தமையும் யாவருங் கேட்ப நக்கழுது அல்லலுறீஇயானெனப் பெயரும்பெற்றியுங் கூறிப், புல்லிப் புணரப்பெறின் ஈதிகழ்ச்சியன்றாமெனக் கூறத்தகாதன கூறலான் மடன் தன்னை இறந்தவாறுந், தெள்ளியே மென்றதனானும் எள்ளி யிருக்குவனென்றதனானும் வருத்த மிறந்தவாறுங், "கோடுவாய்கூடா" என்பது முதலாகக் "கொன்றையவன்" என்னுந் துணையுந் தான்செய்ததனை யியவாமையின் மருட்கையிறந்தவாறும், நெய்தன் மலரன்ன கண்ணெனத் தன்வனப்புமிகுதிகூறலின் மிகுதியிறந்தவாறுங் காண்க. எல்லிரா நல்கிய கேள்வனிவனெனவே கந்தருவத்தின் வழுவிப் பெருந்திணை நிகழ்ந்தவாறும் பின்னர் வரைவு நிகழ்ந்தவாறுங் காண்க. இதற்குப் பொருளுரைக்குங்காற்,

கேட்பீராக இவள் நக்கு, நக்க அப்பொழுதேயழும், இங்ஙனம் அழுமாறு காமத்தை *ஊழானது அகற்றலின் அஃதறுதியாக நரம்பினும் பயனின்றாயிருந்தது. ஓஒ, இதனையுற்ற இவள் அல்லற்பண்பைப் பாராதே அழிதகயாங் குறுகினேம், †குறுகி யாம் இதனை முடிவுபோகக் காண்பேமென்றுவந்து எல்லீரும் என் செய்தீர்? என்னையிகழ்கின்றீரோ? இவ்வருத்தத்தை எனக்குறுத்தினவனது மாயஞ்செய்த மலர்ந்த மார்பை யான் முயங்கிக் கூடினும் இகழ்ச்சியன்றாம் என்றற்றொடக்கமாய் வரும். (சஉ)

237. இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி
நிரம்ப நீக்கி நிறுத்த லன்றியும்
வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலு
நல்வகை யுடைய நயத்திற் கூறியும்
பல்வகை யானும் படைக்கவும் பெறுமே.

இது தோழி தலைவனைக் கூறுவனவற்றுள் வழுவமைவன கூறுகின்றது.

இதன் பொருள்: இரந்து குறையுற்றகிழவனை—இரந்து கொண்டு தன்காரியத்தினைக் கூறுதலுற்ற தலைவனை; தோழி நிரம்ப நீக்கி நிறுத்தலன்றியும்—தோழி அகற்றுற வத்து முறைமையில் தாழ்வின்றாக அகற்றி நிறுத்தலேயன்றியும்; வாய்மைகூறலும்—நுமது கூட்டத்தினை யான் முன்னே அறிவலென மெய்யாகக்கூறலையும்; பொய்தலைப்பெய்தலும்—அப்புணர்ச்சியில்லையென்று பொய்த்ததனைத் தலைவன்மேற்

---

* 'உயிரானது' என்பதும் பாடம்.

† 'குறுகிய' என்பதும் பாடம்.

பொய்யுரைபெய்துரைத்தலையும் அவன் வரைந்துகோடற் பொருட்டுச் சிலபொய்களைக் கூறவேண்டுமிடங்களிலே பெய்துரைத்தலையும்; நல்வகையுடைய நலத்திற் கூறியும்—நல்ல கூறுபாடுடைய சொற்களை அசதியாடிக் கூறியும்; பல்வகையானும் படைக்கவும் பெறுமே—இக்கூறியவாறன்றி வேறுபடப் புனைந்துரைக்கவும் பெறும், என்றவாறு.

தோழி நீக்கலன்றியுங் கூறலையுந் தலைப்பெய்தலையும் படைக்கவும்பெறும், பல்வகையானும் படைக்கவும் பெறுமென வினைமுடிக்க. தோழி தலைவனோடு நயங்கருதுமாற்றால் அவனை நீக்குதல் ஏனையவற்றோடெண்ணாது அன்றியுமெனப் பகுத்துரைத்தார். ஏனைக்குறை முடித்தற்கு இடையூறின்மை கூறியனவும் வரைவுகடாய்க் கூறியனவுமாம்.

* "நெருநலு முன்னா ளெல்லையு * * *
* * * மகளோ"

இது சேட்படுத்தது.

"எமக்கிவை யுரையன் மாதோ நுமக்கியான்
யாரா கியரோ பெரும வாருயி
ரொருவி ரொருவிர்க் காகி முன்னா
ளிருவீர் மன்னு மிசைந்தனி ரதனா
லயலே னாகிய யான்
முயலேன் போல்வனீ மொழிபொருட் டிறத்தே."

இது வாய்மைகூறியது. யாந்தன்னை மறைத்தலிற் போலும் இவள் குறைமுடியாளாயதென அவன் கருதக்கூறினாள்.

---

* இச் செய்யுளை 501-ஆம் பக்கத்திற் காண்க.

"அறியே மல்லே மறிந்தன மாதோ
பொறிவரிச் சிறைய வண்டின மொய்ப்பச்
சாந்த நாறு நறியோன்
கூந்த லுறுவின் மார்பே தெய்யோ." (ஐங்குறு-240.)

இதுவும் அது.

"நீயே, பொய்வன்மையிற் செய்பொருண் மறைத்து
வந்துவழிப் படுகுவை யதனு
லெம்மை யெமக்கே வில்வலனே
தகாது சொல்லப் பலவும் பற்றி
யொருநீ வருத லுடொறு முள்ளுடைந்
தீரமா மழைக்கண் கலுழ்க மதனு
னல்லோர் கண்ணு மஃதல்ல
தில்லை போலுமிவ் வுலகத் தானே."

இது பொய்தலைப் பெய்தது.

"திருந்திழை கேளாய்" (கலி-65) என்னுங் குறிஞ்சிக் கலியுள் வரைந்து கோடற்குப் பொய்யுரை படைத்தது.

"அன்னையு மறிந்தன ளலரு மாயின்று
நன்மனை நெடுநகர் புலம்புகொள வுறுதரு
மின்னு வாடையு மலையு
நும்மூர்ச் செல்க *மெழுமோ தெய்யோ" (ஐங்குறு-236.)

இது நல்வகையுடைய நயத்திற் கூறியது.

"வீகமழ் சிலம்பின் வேட்டம் போந்து
நீயே கூறினு மமையுநின் குறையே"

இதுவும் அது.

---

* 'எழுகமோ' என்பதும் பாடம்.

அஃதன்றியும் நீயேசென்று கூறென்றலும் அறியாள் போறலுங் குறியாள் கூறலுங் குறிப்புவேறுகூறலும் பிறவும் நயத்திற்கூறும் பகுதியாற் படைத்தது பலவகையாற்படைத்துத் துறைவகையாம். இன்னும் வேறுபட வருவனவெல்லாம் இதனானமைக்க. இவை நாடகவழக்காகவும் உலகியல் வழக்காகவும் புணர்ந்துரைத்தமையானுந் தோழி தலைவற்குக் கூறத்தகாதன கூறலானும் வழுவமைந்தது. (சரு)

238. உயர்மொழிக் குரிய வுறழுங் கிளவி
ஐயக் கிளவி யாடூஉவிற் குரித்தே.

இது தோழிக்குந் தலைவிக்குமுரியதோர் வழுவமைக்கின்றது.

இதன் பொருள் : உயர்மொழிக்கு உறழுங் கிளவியும் உரிய—இன்பம் உயர்தற்குக்காரணமான கூற்றுநிகழுமிடத்திற்கு எதிர்மொழியாக மாறுபடக்கூறுங் கிளவி நிகழ்தலுமுரிய; ஐயக்கிளவி ஆடூஉவிற்கு உரித்தே—கூறுவேமோ கூறேமோ என்று ஐயமுற்றுக் கூறுஞ் சொல் தலைவற்குரித்து, என்றவாறு.

உறழுங்கிளவியைப் பொதுப்படக் கூறினார், தோழி உயர்மொழி கூறியவழித் தலைவி உறழ்ந்து கூறலுந், தலைவன் உயர்மொழிகூறியவழித் தோழி உறழ்ந்துகூறலுந், தலைவன் உயர்மொழிகூறியவழித் தலைவி உறழ்ந்துகூறலுந், தலைவி உயர்மொழிகூறியவழித் தோழி உறழ்ந்துகூறலுங் கோடற்கு.

"சுணங்கணி வனமுலை" (கலி-60) என்னுங் குறிஞ்சிக் கலியுள்,

"என்செய்தான் கொல்லோ விஃதொத்தன் றன்கட்
பொருகளி றன்ன தகைசாம்பி யுள்ளு
ளுருகுவான் போலு முடைந்து"

எனத் தோழி கூறியவழித்,

"தெருவின்கட், காரணமின்றிக் கலங்குவார்க் கண்டு"

எனவும்,

"அலர்முலை யாயிழை நல்லாய் கதுமெனப்
பேரம ருண்கணென் றோழி யுறீஇய
வாரஞ ரெவ்வ முயிர்வாங்கு
மற்றிந்நோய் தீரு மருந்தருளா யொண்டொடீ;
நின்முகங் காணு மருந்தினே னென்னுமா
னின்முகந் தான்பெறி னல்லது கொன்னே
மருந்து பிறிதியா துமில்லேற் றிருந்திழாய்
என்செய்வாங் கொல்லினி நாம்;
பொன்செய்வாம்," (கலி-60.)

எனவுந் தலைவி உறழ்ந்து கூறியவாறு காண்க.

இது தலைவன்வருத்தங்கூற அதனை ஏற்றுக்கொள்ளாது உறழ்தலின் வழுவாய் நாண்மிகுதியாற் கடிதின் உடம்படாமையின் அமைந்தது.

"எல்லாவிஃதொத்தன்" (கலி-61) என்னுங் குறிஞ்சிக் கலியுள்,

"ஈத லிரந்தார்க்கொன் றாற்றாது வாழ்தலிற்
சாதலுங் கூடுமா மற்று;" (கலி-61).

எனத் தலைவன் கூறியவழி,

"இவடந்தை, காதலின் யார்க்குங் கொடுக்கும் விழுப்பொருள்
யாதுநீ வேண்டி யது ;" (கலி-61.)

எனவும்,

"மண்டம ரட்ட களிறன்னான் றன்னையொரு
பெண்டி ரருளக் கிடந்த தெவன்கொலோ" (கலி-61).

எனவுந் தோழி யுறழ்ந்து கூறியவாறு காண்க.

இதுவும் அவன் வருத்தத்திற்கு எதிர்கூறத்தகாதன கூறலின் வழுவாய்த் தலைவிகருத்தறிந்து உடம்பட வேண்டுமென்று கருதுதலின் அமைந்தது.

"அணிமுக மதியேய்ப்ப வம்மதியை நனியேய்க்கு
மணிமுக மாமழையின் பின்னொப்பப் பின்னின்கண்
விரிநுண் ணூல் சுற்றிய வீரித ழலரி
யரவுக்கண் ணணியுற ழாரன்மீன் றகையொப்ப
வரும்படர் கண்டாரைச் செய்தாங் கியலும்
விரிந்தொலி *கூந்தலாய் கண்டை யெமக்குப்
பெரும்பொன் படுகுவை பண்டு ;
ஏஎ ! எல்லா,
மொழிவது கண்டை யிஃதொத்தன் றொய்யி
லெழுதி யிறுத்த பெரும்பொன் படுக
முழுவ துடையமோ யாம் ;
உழுதாய்,
சுரும்பிமிர் பூங்கோதை யந்நல்லா யானின்
திருந்திழை மென்றோ ளிழைத்தமற் றிஃதோ
கரும்பெல்லா நின்னுழ வன்றோ வொருங்கே
துகளறு வாண்முக மொப்ப மலர்ந்த
குவளையு நின்னுழ வன்றோ விகலி

* 'கூந்தால்' என்பதும் பாடம்.

முகைமாறு கொள்ளு மெயிற்று யிவையல்ல
வென்னுழுவாய் நீமற் றினி ;
எல்லா,
நற்றோ ளிழைத்த கரும்புக்கு நீகூறு
முற்றெழி னீல மலரென வுற்ற
விரும்பீர் வடியன்ன வுண்கட்குமெல்லாம்
பெரும்பொன்னுண் டென்பா யினி ;
நல்லா யிகுளை கேள்,
ஈங்கே தலைப்படுவ னுண்டான் றலைப்பெயின்
வேந்துகொண் டன்ன பல ;
ஆங்காக வத்திற மல்லாக்கால் வேங்கைவீ
முற்றெழில் கொண்ட சுணங்கணி பூணுகம்
பொய்த்தொருகா லெம்மை முயங்கினை சென்றீமோ
முத்தேர் முறுவலாய் நீபடும் பொன்னெல்லா
முத்தி யெறிந்து விடற்கு." (கலி-64.)

இது தலைவன் உயர்மொழிக்குத் தலைவி உறழ்ந்துகூறியது. இது நகையாடிக் கூட்டத்தைவிரும்பிக் கூறிய மொழிக்கு உறழ்ந்துகூறலின் வழுவாய் அவளும் நகையாடிக்கூறலின் அமைந்தது.

"மறங்கொளிரும்புலி" (கலி-42) என்னுங் குறிஞ்சிக் கலியுள்,

" ஆர்வுற்றார் நெஞ்ச மழிய விடுவானோ
ஓர்வுற் றொருதிற மொல்காத நேர்கோ
லறம்புரி நெஞ்சத் தவன்" (கலி-42).

எனத் தலைவிகூறலுந்,

" தண்ணறுங் கோங்க மலர்ந்த வரையெல்லாம்
பொன்னணி யானைபோற் றோன்றுமே நம்மருளாக்
கொன்னுளா னாட்டு மலை." (கலி-42.)

எனத் தோழி உறழ்ந்துகூறியவாறு காண்க. இதுவுந் தலைவி கூற்றிற்கு மாறுதலின் வழுவாய்ச் சிறைப்புறமாகக் கேட்டு வரைதல் பயனுதலின் அமைந்தது.

"சொல்லின் மறுதீவாண் மன்னோ விவள்" (கலி-61.)

எனவுங்,

* "கூறுவங் கொல்லோ கூறலங் கொல்லெனக்
கரந்த காமங் கைவிறக் கல்லாது" (அகம்-197.)

எனவும் ஐயக்கிளவி தலைவற்குரியவாய் வந்தன.

இனி ஐயப்பாடு தலைவிக்குமுரித்தென்றுற் 'சிறந்துழி யையம்' (தொல்-கள-3) என்பதற்கு மாறும்.

"அவன்மறை தேஎ நோக்கி மற்றிவன்
மகனே தோழி யென்றனள்"

என்பதனை ஐயத்துக்கண் தெய்வமென்று துணிந்தாளெனின் அதனைப் பேராசிரியர் தாமே மறுத்தவாறுகாண்க.

239. உறுகண் ணோம்ப றன்னியல் பாகலி
னுரிய தாகுந் தோழிகண் ணுரனே.

இது தோழி அறிவுடையளாகக் கூறலும் அமைக வென்கின்றது.

இதன் பொருள் : உறுகண் ஓம்பல் தன் இயல்பு ஆகலின்—தலைவிக்கு வந்த வருத்தத்தைப் † பரிகரித்தல் தனக்குக் கடனுதலின் ; தோழிகண் உரன் உரியதாகும்—தோழி

* இச் செய்யுள் முழுவதையும் 41-ஆம் பக்கத்திற் காண்க.
† 'பாதுகாத்தல்' என்பதும் பாடம்.

மாட்டு *அறிவுடையளாகக் கூறல் உரித்தாகும், என்றவாறு.

உதாரணம் :

"பான்மருண் மருப்பின்" (கலி-21) என்னும் பாலைக் கலியுட்,

"பொருடான்
பழவினை மருங்கிற் பெயர்பு பெயர்புறையு
மன்ன பொருள்வயிற் பிரிவோய்" (கலி-21.)

எனத் தோழி அறிவுடையாளாகக் கூறியவாறு காண்க.

"பிண்ட நெல்லி னள்ளூரன்ன * * * யாரோ"

என்பது உறுகண் காத்தற்பொருட்டாகத் தலைவி வருந்தினும் நீ செல்லென்றாள் தலைவன் செல்லாமை அறிதலின்.

ஒன்றெனமுடித்தலான் தலைவி உரனுடையளெனக் கூறலுங் கொள்க. (சரு)

240. உயர்மொழிக் கிளவியு முரியவா லவட்கே.

இதுவுந் தோழிக்குரியதோர் வேறுபாடு கூறுகின்றது.

இதன்பொருள்: அவட்கு—தோழிக்கு; உயர்மொழிக் கிளவியும் உரிய—தலைவியையுந் தலைவனையும் உயர்த்துக் கூறுங் கூற்றுமுரியவாம் ஒரோவோரிடத்து, என்றவாறு.

"மகிழ்மிகச் சிறப்ப மயங்கினள் கொல்லோ
யாண ரூரநின் மாணிழை யரிவை
காவிரி மலிர்நிறை யன்னநின்
மார்புநனி விலக்க லொடங்கி யோளே." (ஐங்குறு-42.)

*'அறிவுளதாக' என்பதும் பாடம்.

இதனுட் காவிரிப் பெருக்குப்போலத் தலைவியை நோக்கி வருகின்ற மார்பினைத் தான் விலக்குமாறென்னை யெனத் தலைவியை உயர்த்துக்கூறியவாறு காண்க.

"*காலையெழுந்து" (குறுந்-45) என்பதும் அது.

"உலகம் புரப்பான் போல்வதோர் மதுகையுமுடையன்" (கலி-47.)

எனவும்,

"தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉ
மணங்கென வஞ்சுவர் சிறுகுடி யோரே." (கலி-52.)

எனவுந் தலைவனை உயர்த்துக் கூறியவாறு காண்க. (சகூ)

**241. வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்த
லாவின் றுரிய தத்தங் கூற்றே.**

இது தலைவியுந் தோழியும் வாயிலாகச் சென்றாருடன் கூறுவனவற்றுட் படுவதோர் வழுவமைக்கின்றது.

இதன் பொருள் : தத்தங் கூற்றே—தோழிக்குந் தலைவிக்கு முரிய கூற்றின்கண் ; வாயிற்கிளவி—வாயிலாய்வந்தார்க்கு மறுத்துத் தலைவனது பழிகளைக் கூறுங் கிளவிகளை ; வெளிப்படக் கிளத்தல்—மறையாது †வெளியாம்படி கூறுதல்; தாவின்று உரிய—இங்ஙனங் கூறுகின்றேமே என்னும் வருத்தம் மனத்து நிகழ்தலின்றியே உரியவாம், என்றவாறு.

---

* இச்செய்யுளை 695-ஆம் பக்கத்திற் காண்க.

† 'வெளியாக' என்பதும் பாடம்.

அவை தலைவிக்குந் தோழிக்குமுரியனவும் தோழிக்கே யுரியனவுந் தலைவிக்கே யுரியனவுமாம். வாயில்களாவார் ஆற்றுமையுந் தோழிமுதலியோருமாம்.

"நெஞ்சத்த பிறவாக நிறையில ளிவளென
வஞ்சத்தான் *வந்தீண்டு வலிதொலைத் தீவாயோ." (கலி-69.)

இஃது ஆற்றுமைவாயிலாகத் தலைவன்வந்துழித் தலைவி வெளிப்படக் கூறியது, இது தோழிக்கும் உரித்து.

"எரியகைந் தன்ன தாமரை யிடையிடை
* * * யார்ப்பினும் பெரிதே" (அகம்-115.)

இதனுள் "நாணிலைமன்ற" எனத் தோழிகூறி அலரா கின்றுலென வெளிப்படக்கிளத்தலின் வழூவாயமைந்தது.

"அகலநீ துறத்தலி னழுதோவா வுண்கணெம்
புதல்வனை மெய்தீண்டப் பொருந்துத லியைபவா
னினக்கொத்த நல்லாரை நெடுநகர்த் தந்துநின்
றமர்பாடுந் துணங்கையு ளரவம்வந் தெடுப்புமே." (கலி-70.)

இது தலைவிகூற்று.

'உரிய' வென்றதனுல் தோழிவாயிலாகச் சென்றுழித் தலைவி வெளிப்படக் கூறுதலுங் கொள்க. அஃது "இம்மை யுலகு" என்னும் (66) அகப்பாட்டினுட் காண்க.

இவை இங்ஙனம் வெளிப்படக்கிளத்தலின் வழூவாய் அமைந்தன. (சஎ)

242. உடனுறை யுவமஞ் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே.

---

* 'வந்தீங்கு வலியலைத் தீவாயோ' என்பதும் பாடம்.

இது மேல் வெளிப்படக் கிளப்பனகூறிப் பின் வெளிப்படாமற் கிளக்கும் உள்ளுறை இனைத்தென்கின்றது.

இதன்பொருள்: உடனுறை—நான்கு நிலத்தும் உளவாய் அந்நிலத்துடனுறையுங் கருப்பொருளாற் பிறிதொன்றுபயப்ப மறைத்துக்கூறும் இறைச்சியும்; உவமம்—*அக்கருவாற் கொள்ளும் உள்ளுறையுவமமும் ஏனையுவமமும்; சுட்டு—உடனுறையுவமமும் அன்றி நகையுஞ்சிறப்பும் பற்றாது வாளாது ஒன்று நினைந்து ஒன்று சொல்வனவும் அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டிவருவனவும்; நகை—நகையாடி ஒன்று நினைத்து ஒன்றுகூறுதலும்; சிறப்பென—ஏனையுவமம் நின்று உள்ளுறையுவமத்தைத் தத்தங் கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து நிற்றலும் என்று; கெடலரும் மரபின் உள்ளுறை ஐந்தே—கெடுதலரிதாகிய முறைமையினையுடைய உள்ளுறை ஐந்துவகைப்படும், என்றவாறு.

ஒன்றனை உள்ளுறுத்து அதனை வெளிப்படாமற் கூறலின் அவற்றை உள்ளுறையாமென்றார்.

'இறைச்சிதானே' (தொல்-பொரு-35) 'இறைச்சியிற் பிறக்கும்' (தொல்-பொரு-36) என்பனவற்றுள் இறைச்சிக்குக் காரணங் காட்டினும். உவமம் உவமவியலுட் காட்டுதும்.

"பெருங்கடன் முகந்த பல்கிளைக் கொண்மூ
விருண்டுயர் விசும்பின் வலனேர்பு வளைஇப்
பொற்புறு முரசி னிரங்கி முறைபுரிந்
தறநெறி பிழையாத் திறனறி மன்ன

* 'அக்கருக்களினால்' என்பதும் பாடம்.

ரருஞ்சமத் தெதிர்ந்த *பெருஞ்செய் யாடவர்
கழித்தெறி வாளி னழிப்பன விளங்கு
மின்னுடைக் கருவியை யாகி நாளுங்
கொன்னே செய்தியோ வரவம் பொன்னென
மலர்ந்த வேங்கை மலிதோ டடைச்சிப்
பொலிந்த வாயமொடு †கண்டக வியலித்
தழலை வாங்கியுந் தட்டை யோப்பியு
மழலேர் செயலை ‡யந்தளிர் தழையுங்
குறமகள் காக்கு மேனற்
புறமுந் தருதியோ வாழிய மழையே" (அகம்-187.)

இதனுட் கொன்னே செய்தியோ அரவ மென்பதனாற் பயனின்றி அலர்விளைத்தியோவெனவுங் கூறி ஏனற்புறமுந் தருதியோ என்பதனால் வரைந்துகொள்வையோ வெனவுங் கூறித் தலைவனை மழைமேல் வைத்துக்கூறலிற் சுட்டாயிற்று. கொன்னே செய்தியோ என்றதனால் வழுவாயினும் வரைதல் வேட்கையாற் கூறினமையின் அமைந்தது.

'அன்புறுதகுந' (தொல்-பொரு-37) என்பதனுள் ஏனையதற்குக் காரணங்காட்டினும்.

§ "விளையா டாயமொடு * * * " (நற்றிணை-172.)

இதனுட் புன்னையை அன்னை நுவ்வையாகுமென்றதனான் இவளெதிர் நும்மை நகையாடுத லஞ்சுதுமென நகையாடிப் பகற்குறி யெதிரேகொள்ளாமைக் குறிப்பினான்

* 'பெருஞ்செய லாடவர்' என்பதும் பாடம்.

† 'தொண்டக மியலி' என்பதும் பாடம்.

‡ 'அந்தழை யகையும்' என்பதும் பாடம்.

§ இச்செய்யுளை 441-ஆம் பக்கத்திற் காண்க.

மறைத்துக்கூறி மறுத்தவாறுகாண்க. இதனைச் செவ்வணங் கூறாமையின் அமைத்தார்.

'உள்ளுறை யுவம மேனை யுவமம்' (தொல்-அகத்-46) என்னுஞ் சூத்திரத்து "விரிகதிர்மண்டிலம்" (கலி-71) என்னும் மருதக்கலியுட் சிறப்புக் கொடுத்து நின்றது காட்டினும்.

அறத்தொடுநிலையும் பொழுதும் ஆறும் முதலியன வுஞ் செவ்வணங்கூறப்படுதலின் இவை கரந்தேகூறப்படுத லிற் 'கெடலரு மரபின்' என்றார். இவை தோழிக்குந் தலை விக்கும் உரியவாறு செய்யுட்களை நோக்கி யுணர்க. (சஅ)

243. அந்தமில் சிறப்பி னாக்கிய வின்பந்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே.

இது முற்கூறிய உள்ளுறை பற்றித் தலைவற்கு வருவ தோர் வழுவமைக்கின்றது.

இதன்பொருள்: ஆக்கிய அந்தமில் சிறப்பின் இன்ப மும்—முற்கூறிய உள்ளுறை ஐந்தானும் அவர்களுண்டாக் கிய முடிவிலாத சிறப்பினையுடைய இன்பம்; தன்வயின் வரு தலும் வகுத்த பண்பு—தலைவன் கண்ணும் நிகழ்ந்து இன் பஞ்செய்தலுங் காமத்துக்கு முதலாசிரியன் வகுத்த இலக் கணம், என்றவாறு.

தலைவன்தன்மை என்ப தொன்றின்றி நந்தன்மை யெனக் கருதுதலின் யாம் ஒன்றை நினைந்து ஒன்றுகூறினும் அவன் முனியாது இன்பமெனக் கொள்வனெனக் கூறிய வற்றை அவன் இவை இன்பந் தருமென்றேகோடலின் *வழு வமையப்பட்டன. உதாரணம் முற்காட்டியவற்றுட் காண்க.

---

* 'வழுவாயமைந்தன' என்பதும் பாடம்.

244. மங்கல மொழியும் வைஇய மொழியு
மாறி லாண்மையிற் சொல்லிய மொழியுங்
கூறியன் மருங்கிற் கொள்ளு மென்ப.

இது மேன் மூன்றுபொருளும் வழுவாயமைக என்றலின் எய்தாத தெய்துவித்தது.

இதன்பொருள்: மங்கலமொழியும்—தலைவற்குத் தீங்கு வருமென் றுட்கொண்டு தோழியுந் தலைவியும் அதற்கஞ்சி அவனை வழுத்துதலும்; வைஇயமொழியும்—தலைவன் தம்மை வஞ்சித்தானாகத் தலைவியுந் தோழியுங் கூறலும்; வைஇயமொழி, தீங்கைவைத்த மொழியுமாம்: மாறில் ஆண்மையிற் சொல்லிய மொழியும்—மாறுபாடில்லாத ஆளுந் தன்மையிடத்தே பழிபடக்கூறிய மொழியும்; கூறியன் மருங்கிற் கொள்ளும் என்ப—வழுவமைதியாகக் கூறிய இலக்கணத்திடத்தே கொள்ளுமொழியென்று கூறுவர் ஆசிரியர், என்றவாறு.

"நோயிலராக நங்காதலர்" (அகம்-114) எனவுங் "காந்தளுஞ் செய்வினை முடிக்கத் தோழி" எனவுங் கூறுவன நம்மை அறனன்றித் துறத்தலின் தீங்குவருமென்றஞ்சி வாழ்த்தியது. நம்பொருட்டுத் தீங்கு வருமென நினைத்தலின் வழுவா யமைந்தது.

"வையினர் நலனுண்டார் வாராமை நினைத்தலின்" (கலி-134.)

என்பது வஞ்சித்தமை கூறிற்று.

"இதுவுமோ-ரூராண்மைக் கொத்த படிறுடைத்து" (கலி-89.)

என்பது ஆண்மையிலே பழியுண்டு என்றது. இதுவும் வழீஇ அமைந்தன. (௬0)

245. சினனே பேதைமை நிம்பிரி நல்குர
வினைநால் வகையுஞ் சிறப்பொடு வருமே.

இது மெய்ப்பாட்டியலுள் ஆகாதென்பவற்றுட் சில அமைகவென வழுவமைக்கின்றது. இது பொதுவாகக் கூற லின் தலைவிக்குந் தோழிக்குங்கொள்க.

இதன்பொருள்: சினனே—கோபம் நீட்டித்தலும்; பேதைமை—ஏழைமையும்; நிம்பிரி—பொறாமைதோன்றுங் குறிப்பும்; நல்குரவு—செல்வமின்மையும்; அனைநால்வகை யும்—என்ற அத்தன்மையனவாகிய நாற்கூறும்; சிறப்பொடு வருமே—ஒருபொருளைச் சிறப்பித்துக் கூறுதல் காரணத் தான் வரும், என்றவாறு.

சினத்தை ஆண்டுக் கொடுமையினடக்கினர்.

"நாணு மிறையு நயப்பில பிறப்பிலி" (கலி-60.)

எனவும்,

"தொடிய வெமக்குநீ யாரை" (கலி-88.)

எனவுஞ் சினம்பற்றிவரினும் அவை தன்காதலைச் சிறப்பித்த லின் அமைந்தன.

"செவ்விய தீவிய சொல்லி யவற்றொடு
பைய முயங்கிய வஞ்ஞான் றவையெல்லாம்
பொய்யாதல் யான்யாங் கறிகோமற் றைய
வகனகர் கொள்ளா வலர்தலைத் தந்து
பகன்முனி வெஞ்சுர முள்ள லறிந்தேன்
மகனல்லை மன்ற வினி" (கலி-19.)

எனக் கழிபெருங் காதலான் நின்னை உள்ளவாறறிந்திலே னெனத் தன் பேதைமையைக் காதலாற் சிறப்பித்தலின் அமைந்தது.

"உறலியா மொளிவாட வுயர்ந்தவன் விழவினுள்
விறலிழை யவரொடு விளையாடு வான்மன்னோ
பெறலரும் பொழுதொடு பிறங்கிணர்த் துருத்திசூழ்ந்
தறல்வாரும் வையையென் றறையுந ருளராயின்; (கலி-30.)

இது நிம்பிரி; அவரோடும் விளையாடுவானெனப் பொருமைகூறியும் அவன் ஈண்டையானாகவேண்டுமெனக் காதலைச் சிறப்பித்தலின் அமைந்தது.

"பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத் தொருகை யேந்திப்
*புடைப்புறச் சுற்றும் பூந்தலைச் சிறுகோ
லுண்ணென் றோக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம் பொலிப்பத் தத்துற்
றரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரீஇ மெலிந்தொழியப் பந்த ரோடி
யேவன் மறுக்குஞ் சிறுவிளை யாட்டி
யறிவு மொழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவற னுற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோ றுள்ளா
ளொழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுதுமறுத் துண்ணுஞ் சிறுமது கையளே."
(நற்றிணை-110.)

இது குடிவறனுற்றென நல்குரவு கூறியுங் காதலைச்சிறப்பித்தலின் அமைந்தது.

---

* 'புடைப்பிற் சுற்றும்' என்பதும் பாடம்.

இது மெய்ப்பாட்டியலுள் * விளக்காமையின் அதனைச் சார ஈற்றிலே வைத்தார். (ருக)

246. அன்னை யென்னை யென்றலு முளவே
தொன்னெறி முறைமை சொல்லினுமெழுத் [தினுந்
தோன்றா மரபின வென்மனார் புலவர்.

இது முறைப்பெயர்பற்றி வருவதோர் வழுவமைக் கின்றது.

இதன்பொருள்: சொல்லினும் எழுத்தினுந் தோன்றா மரபின—சொல்லோத்தினும் எழுத்தோத்தினுஞ் சொல்லப் படாத இலக்கணத்தனவாய; தொல் நெறி முறைமை—புல னெறிவழக்கிற்குப் பொருந்திய பழைய நெறிமுறைமை யானே; அன்னை என்னை என்றலும் உள என்மனார் புலவர்— தோழி தலைவியை அன்னையென்றலும் தலைவி தோழியை அன்னையென்றலும் இருவருந் தலைவனை என்னையென்றலும் உளவென்று கூறுவர் புலவர் என்றவாறு.

"அன்னா யிவனோ ரிளமாணாக்கன்" (குறுந்-33.)

"புல்லின் மாய்வ தெவன்கொ லன்னாய்." (குறுந்-150.)

இவை தோழியைத் தலைவி அன்னாயென்றன.

"அன்னாய் வாழிவேண் டன்னை நம்மூர்ப்
பார்ப்பனக் குறுமகப் போலத் தாமுங்
குடுமித் தலைய மன்ற
நெடுமலை நாட னூர்ந்த மாவே." (ஐங்குறு-202.)

---

* 'விலக்காமையின்' என்பதும் பாடம்.

"அன்னாய் வாழிவேண் டன்னை யுவக்காண்
மாரிக் குன்றத்துக் காப்பா ளன்ன
தூவலி னனைந்த தொடலை யொள்வாட்
பாசி *சூழ்ந்த பெருங்கழற்
றண்பனி வைகிய வரிக்கச் சினனே" (ஐங்குறு-206.)

இவை தோழி தலைவியை அன்னையென்றன.

"எனக்கு மாகா தென்னைக்கு முதவாது." (குறுந்-27.)

"ஒரீஇயின னொழுகு மென்னைக்குப்
பரியன் மன்யான் பண்டொரு காலே"

இவை தலைவி தலைவனை என்னையென்றன.

தோழிகூறியது வந்துழிக் காண்க. தலைவன் தலைவியை அன்னையெனக் கூறலும் உளதென்பாருமுளர். எழுத்தினுஞ் சொல்லினுமென்றாத முறையன்றிக் கூற்றானே புறத்திற்கும் இவைகொள்க.

"என்னை மார்பிற் புண்ணுக்கு"

"என்னைக் கூரிஃ தன்மை யானு
மென்னைக்கு நாடிஃ தன்மை யானும்" (புறம்-85.)

"என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்" (குறள்-78-1.)

"என்னை மார்பிற் புண்ணும் வெய்ய" (புறம்-280.)

என்பன கொள்க.

ஏனைய வந்துழிக்காண்க.

இனி உம்மையாற் பிறவுமுளவென்பது பெறுதலின்,

---

* 'தூர்ந்த' என்பதும் பாடம்.

"எந்தைதன் னுள்ளங் குறைபடா மாறும்"

என்றாற்போல் வருவன பிறவுங் கொள்க.

247. ஒப்பு முருவும் வெறுப்பு மென்றா
கற்பு மேரு மெழிலு மென்றா
சாயலு நாணு மடனு மென்றா
நோயும் வேட்கையு நுகர்வு மென்றாங்
காவயின் வரூஉங் கிளவி யெல்லா
நாட்டிய மரபி னெஞ்சுகொளி னல்லது
காட்ட லாகாப் பொருள வென்ப.

இது கட்புலனாகக் காணப்படாத பொருண்மேலும் கட்புலனாகக் காணப்பட்டாற்போலப் பொருள்கோடல் வழூ வமைக்கின்றது.

இதன்பொருள்: ஒப்பாவது, ஒத்தகிழவனுங் கிழத்தியு மென்றவழி அவரொப்புமை மெய்வேறுபாடுபற்றி மன னுணர்வானுணர்வதன்றிப் பொறியானுணரலாகாதென்றது; தந்தையரொப்பர் மக்களென்பதும் அது: உருவாவது, உட்கு; அதுவும் பொறிநுதல் வியர்த்தல் போல்வனவற்றா னன்றிப் பிழம்புபற்றி உணரலாகாது: வெறுப்பாவது, செறிவு; அதுவும் மக்கட்குணமாய் இசையாததோர் மன நிகழ்ச்சியாதலிற்பொறியான் உணரலாகாது; கற்பாவது, தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதோர் மேற்கோள்: ஏரா வது, எழுச்சி; அது எழுகின்ற நிலைமையென நிகழ்காலமே குறித்துநிற்கும். எழிலாவது, அங்ஙனம் வளர்ந்தமைந்த பரு வத்தும் இது வளர்ந்துமாறியதன்றி இன்னும் வளருமென் பதுபோன்றுகாட்டுதல்; சாயலாவது, ஐம்பொறியால் நுக

ரும்மென்மை; நாணுவது, செயத்தகாதனவற்றின்கண் உள்ள மொடுங்குதல்; மடனுவது, கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை; நோயாவது, நோதல்; வேட்கையாவது, பொருள்கண்மேல் தோன்றும் பற்றுள்ளம்; 'செய்யுண்மருங் கின்வேட்கை' (தொல்-எழுத்-உயிர்மயங்-86) என்புழி அவா விற்கு வேறுபாடு கூறினும்; நுகர்வாவது, இன்பத்துன்பங் களை நுகருநுகர்ச்சி; 'என்று'வென்பன எண்ணிடைச்சொல்: என்று வருங் கிளவி—ஒப்புமுதல் நுகர்வு ஈறுகப் பன்னிரண் டென்று அகப்பொருட்கண் வருங் கிளவிகளும்; ஆவயின் வருங் கிளவி—அப்பன்னிரண்டின்கண்ணே புறப்பொருட் குரியவாய் அவ்வாசகத்தான் வருங்கிளவிகளும்; ஆங்கு— ஈண்டு உவமவுருபு, அவைபோல்வன கிளவி என்பதாம்; எல் லாம் நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது—வனைய வும் நாடகவழக்கத்தாற் புலனெறிவழக்கஞ்செய்த முறைமை யானே நெஞ்சு உணர்ந்துகொள்ளினன்றி; காட்டலாகாப் பொருள என்ப—உலகியல்வழக்கான் ஒருவர்க்கொருவர் கட் புலனுகக் காட்டப்படாத பொருளைப் பொருளாகவுடைய என்று கூறுவர் புலவர், என்றவாறு.

இவை மேல்வரும் மெய்ப்பாடுபற்றி உணர்தலிற் கட் புலனுகாவோவெனின், மெய்ப்பாடாவது மனக்குறிப்பா தலின் அதன் குறிப்பிற்குப் பற்றுக்கோடாகிய * பொரு ளினவை யென்றுணர்க.

இனி இவை புறப்பொருட்கண் வருமாறு:

“வரைபுரையுமழகளிற்றின்மிசை” (புறம்-38) என வும் “உருகெழு முரசம்” (புறம்-50) எனவும், “வெறுத்த

* 'பொருளின்மை' என்பதும் பாடம்.

கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" (புறம்-53) எனவும், "நிலை கிளர் கூட னீளெரி யூட்டிய பலர்புகழ் பத்தினி" (சிலப்பதி காரம்-பதிகம்) எனவும் வரும். இவ்வாறே ஏனையவற்றிற்கும் ஒட்டிக்கொள்க.

இனி எல்லாமாவன, ஒளியும் அளியுங் காய்தலும் அன்பும் அழுக்காறும் பொறையும் நிறையும் அறிவும் முதலியனவும் பிறவுமாம். ஒளியாவது வெள்ளமையின்மை; அளியாவது அன்பு காரணத்தால் தோன்றும் அருள்; காய்தலாவது வெகுளி; அன்பாவது மனைவியர் கண்ணுந் தாய்தந்தை புதல்வர் முதலிய சுற்றத்தின்கண்ணும் மனமகிழ்ச்சிநெகிழ்த்திப் பிணிப்பித்துநிற்கும் நேயம்; அழுக்காறுவது பிறர்செல்வ முதலியவற்றைப் பொறாமை; பொறையாவது பிறர்செய்த தீங்கைப் பொறுத்தல்; நிறையாவது மறைபிறரறியாமல் ஒழுகுதல்; அறிவாவது நல்லதனலனுந் தீயதன்றீமையும் உள்ளவாறுணர்தல். இவைகண்டிலமென்று கடியப்படா கொள்ளும் பொருளென்றார். இவை ஆசிரியனுணையன் றென்பது மேற் சூத்திரத்தாற் கூறுகின்றான். (ருஎ)

248. இமையோர்தேஎத்துமெறிகடல் வரைப்பினு மவையில் கால மின்மை யான.

இஃது இவையுங் காட்டலாகாப் பொருள்கள் ஆசிரியனுணையாற்கொண்டன அல்லவற்றைப் பொருளெனக் கொள்க என்கின்றது.

இதன்பொருள்: இமையோர் தேஎத்தும் எறி கடல் வரைப்பினும்—தேவருலகத்தின்கண்ணுந் திரையெறியுங் கடல்சூழ்ந்த நிலத்தின்கண்ணும்; அவை இல் காலம் இன்மை

யான—அறம்பொருளின்பங்களின் நுகர்வு இல்லாததோர் காலம் இன்ருகையால் அவற்றைப் பொருளென்றே கொள்க, என்றவாறு.

தமிழ்நடக்கும் எல்லைகூருது தேவருலகையும் மண்ணு லகையுங் கூறினமையின் இவை யாண்டும் ஒப்ப முடிந்தன வெனவும் அவை உள்ள அளவும் இவை நிகழ்வனவெனவுங் கூறலின் வழுவமைதியாயிற்று. இமையாக் கண்ணரா கலின் இமையோர் என்ருன். இடையூறில்லா இன்பச் சிறப்பான் இமையோரை முற்கூறினன். (நுச)

ஐந்தாவது பொருளியற்கு
ஆசிரியர் பாரத்துவாசி நச்சிஞர்க்கினியார்
செய்த காண்டிகை யுரை
முடிந்தது.